பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# மஸ்தான் சாகிபு


வித்வான் ஆ. அப்பன் செட்டியார் அவர்கள்

மா. வடிவேலு முதலியாரால் எழுதின



மௌ. அ. ஷாகுல் ஹமீது லெப்பை

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திரசாலையில்

1928.

இதன் விலை] [ரூபா. 3/12



Registered Copy-Right

பிஸ்மில்லாஹி.

# நூலினுட்பிரிவு.


| | பதிகம். | பக்கம். |
|---|---|---|
| 1. | குருவணக்கம் | 70 |
| 2. | முகியித்தீன்சதகம் | 81 |
| 3. | முகியித்தீனாண்டவர் | 192 |
| 4. | அகத்தீசன்சதகம் | 193 |
| 5. | குருவருணிலை | 194 |
| 6. | தவநிலை | 203 |
| 7. | துறவினிலை | 212 |
| 8. | நியமநிலை | 221 |
| 9. | வளிநிலை | 229 |
| 10. | தொகைநிலை | [illegible] |
| 11. | பொறைநிலை | 247 |
| 12. | காட்சிநிலை | 257 |
| 13. | தியானநிலை | 265 |
| 14. | சமாதிநிலை | 274 |
| 15. | மகுமூதுநபி | 284 |
| 16. | தவமேபெறவேண்டுமெனல் | 290 |
| 17. | குறையிரங்கியுரைத்தல் | 294 |
| 18. | நாகூர்மீறான்சாகிபு | 296 |
| 19. | ஆனந்தக்களிப்பு | 297 |
| 20. | நிராயமயக்கண்ணி | 305 |
| 21. | பராபரக்கண்ணி | 345 |
| 22. | றகுமான்கண்ணி | 359 |
| 23. | எக்காலக்கண்ணி | 372 |
| 24. | கண்மணிமாலைக்கண்ணி | 374 |
| 25. | மனோன்மணிக்கண்ணி | 386 |
| 26. | நந்தீஸ்வரக்கண்ணி | 400 |
| 27. | கீர்த்தனைகள் | 407 |
| 28. | ஆனந்தகளிப்பு | 463 |

## சீறதுல் குப்ரா

என்னும்

# கதீஜா நாயகி (றலி) ஜீவிய சரித்திரம்.

இச்சரித்திரமானது, எவரும். எஜமானியாக ஏற்று பின் பற்றத் தக்க நாயகியான மஹா சங்கை பொருந்திய ஓர் பெருமாட்டியின் ஜீவ விருத்தாந்தமாகும். இம்மங்கையர் தமது வடிவாம் சங்களில் உலகப் பெண்கள் எல்லாரினும் மிக்குற்றவர்; அன்றியும், நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய நம்பிராட்டிகள் எல்லாரினும், பிரதம பிராட்டியார் என்ற பெருமை அவருக்கு வாய்த்திருந்தது. அவரது வாழ்க்கை சம்பந்தமான சரித்திரமோ அனைவரும் கண்டு அனுஷ்டிக்கத் தக்கதாயிருக்கிறது.

இதில் கதீஜா நாயகியின் வமிச பரம்பரையும், முதற் கலியாணங்களும் அவர்களின் வர்த்தகச் செல்வமும், றசூல் நாயகம் ஷாம்மிஸர் தேசங்களுக்கு யாத்திரை போய் வந்ததும், கதீஜா பெருமாட்டிக்கும் நபிகள் பெருமானார்க்கும் திருக்கலியாணம் முடிந்ததும், கதீஜா பெருமாட்டி தமது உரிமையை கணவருக் கர்ப்பணஞ் செய்தல், நபி பெருமானார்க்கு வகி இறங்குதல், நபிபட்டந் தரித்தல், நபிகள் பெருமானார்க்கு கதீஜா பெருமாட்டியின் உதவி, கதீஜா பெருமாட்டியின் மௌத், முதலியன அடங்கியிருக்கின்றன. இச்சரிதையால் நம் திருக்கனதி[illegible] சகோதரிகளுக்கு அளவற்ற போதனைகள் நிறை[illegible] [illegible] வணை. 0—12—0

## ஹஸரத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம அவர்களின் அருமைப் புதல்வியாகிய

# பாத்திமா நாயகி (றலி) ஜீவிய சரித்திரம்.

இச்சரித்திரத்தில் ஹஸரத் பாத்திமா நாயகி அவர்களின் மாதாவாகிய உம்முல் முஃமினீன் கதீஜா நாயகி அவர்களின் வமிச பரம்பரையும் அவர்களின் பிறப்பும், பாத்திமா நாயகியின் பிறப்பும், சிறுபாலிய அறிவும், பரஸ்பர அன்பும், நாயகியின் திருக்கலியாணமும், அவர்கள் தன் வீட்டில் குடித்தனம் நடத்திவரும் ஒழுங்கும், தனது பர்த்தாவாகிய அலியாருக்கு ஒத்து நடக்கும் அழகும், அவர்களின் தயாள சிந்தனையும் உழைப்பும், ஆண்டவனின் மீது பக்தியும் வணக்கமும், கபூலாக்கப்பட்ட துஆவும், றசூலுல்லாவுக்கு பாத்திமா நாயகியின்பால் இருந்து வந்த அன்பும், நாயகிக்கு தம் தந்தையின் பால் இருந்து வந்த பிரியமும், அவர்களின் நாணம், அடக்கம், அச்சம் முதலிய ஒழுக்கங்களும், இமாம் ஹஸன் ஹுஸன் றலியல்லாஹு அன்ஹுமா அவர்களின் மேம்பாடும், நாயகியின் வபாத்தும், இந்நாயகியின் ஜீவிய சரித்திரத்தால் நம் சகோதர சகோதரிகளுக்கு அரிய போதனைகளும், அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு முஸ்லிமும் இச்சரிதையை வாசித்துணரவேண்டியது மிக்க அவசியமாகும்.

இதன் விலை ரூ. 1—0—0

பெற்றுக்கொள்ளுமிடம்:—

**எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,**
**ஹமீதிய்யா பில்டிங்க்ஸ், நெ. 20, ஹைரோட்,**
**திருவல்லிக்கேணி, மதறாஸ்.**

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில், இம்மகிமை பொருந்திய குணங்குடி மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா அவர்கள் திருப்பாடலுக்கு சென்னை மா. வடிவேலு முதலியார் அவர்களைக்கொண்டு பொழிப்புரை எழுதிவித்து சென்னை புரசை, பெருமாப்பேட்டை சுந்திரவிலாஸ அச்சுக்கூடத் தலைவராகிய சு. துளசிங்க முதலியார் அண்டு சன்ஸ், அவர்களால் சகல சுதந்திரத்துடன் அச்சிட்டு விற்றுக்கொண்டிருந்த இப்பொழிப்புரை புத்தகத்தை ரிஜிஸ்டர் காபிரைட்டன் மேற்படி பூ. சு. துளசிங்க முதலியார் குமாராகிய பூ. து. மாசிலாமணி முதலியாரிடம் 25—8—27ல் கிரயம் கொடுத்து வாங்கி என்னுடைய சொந்தப் பொருளினால் அச்சிட்டு என் பேருக்கு ரிஜிஸ்டர் செய்துக்கொண்டு என் அனுபோகத்திலிருக்கும் இப்புத்தகத்தை என் அனுமதியின்றி ஒருவரும் அச்சிடக்கூடாதென்று இதனால் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

**எம். எ. ஷாஹுல் ஹமீது லெப்பை.**

திருவல்லிக்கேணி, மதராஸ்.

# முகவுரை.

இந்த நூல் பாடியருளியவரான குணங்குடி மஸ்தான் சாகிபு ஒலியுல்லா அவர்கள் நபிநாயகமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளின சகலமான ஒசியத்துகளையும் பொன்னரியா மாலையென்று சொல்லப்படுகின்றதுடன் தமிழ்ச்செய்யுளாயருளிச்செய்த வித்துவாநந்த சிரோமணி மின்னூறுத்தீன் புலவர்வர்களின் மரபிலுள்ளவர்களென்று சொல்லுகிறார்கள். தந்தையின் நாமம் நெயினுமுகம்மது என்றும் இவர்கள் அவதரித்த நகரம்பாண்டி மண்டிலத்திலுள்ள காயற்பட்டினம் என்றும் சொல்லப்பட்டுவருகின்றன. இவர்கள் பாலியபருவத்தே கீழக்கரையில் இவர்கள் மதத்துக்கேற்ற அறபாகமங்களிற் றேர்ச்சி யடைந்த மகானாகிய ஷெய்கு அப்துல் காதிறு லெப்பை ஆலிம் சாகிபு அவர்களிடம் சுயமார்க்கவித்தியாதிகளெல்லாம் ஐயந்திரிபறக்கற்று ஹிஜ்ஜிரி 1228ம்௵ திரிசிரபுரத்தைசேர்ந்து அவ்விடத்தில் தினந்தோறும் திருஷ்டாந்தகாரணங்கள் அநேகங்காட்டின கலாத்துஷாம் சாகிபு அவர்களிடம் முறீதென்னும் உபதேசத்தைப்பெற்று இவ்வுலக மாயையை விட்டொழித்து காயசித்தியடைந்து மௌனியான சிலவருஷத்திற்குப்பின்னரே, சென்னை இராயபுரத்தில் வந்து அங்கே பாவாலெப்பை அவர்களது தோட்டத்தின் கண்ணே கட்டிய ஞானசமாதி கட்டடத்தில் வெளிவாராமல் முன்னர் மூன்று வருஷமும் பின்னர் பன்னிரண்டு வருஷமும் உணவு முதலியன ஒன்றுமில்லாதிருந்து அநேக அற்புதங்களைச் செய்து நாற்பத்தேழாவது வயதில் இவ்வுலக வாழ்க்கையைவிட்டும் நிரியாணதிசை யடைந்தார்கள். பின்னர் அவர்களினது சீஷர்களெல்லாங்கூடிச் சமாதிசெய்துவிட்டார்கள் அவ்விடமே இன்னும் குணங்குடி மஸ்தான் சாகிபு தறுக்காவென்று வழங்கப்பட்டு வருஷா வருஷம் உறூஸ்முதலியன நடந்து வருகின்றன. இதுவே அவருடைய சரித்திரமாக அறபாகமங்களில் தேர்ந்த சிலர் சொல்லிக் கொள்ளுகிறார்கள். நாம் கேட்ட வண்ணம் எழுதலாயிற்று.

இப்படிக்கு,

மா. வடிவேலு முதலியார்,

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

குணங்குடி

# மஸ்தான் சாஹிபு அவர்கள்பாடல்

# மூலமும்-உரையும்.

குணங்குடி

## மஸ்தான் சாஹிபு அவர்கள்பேரில்

மகாவித்வான் திருத்தணிகை

சரவணப்பெருமாளைய ரவர்கள்பாடிய

## நான்மணிமாலை.

காப்பு.

நேரிசை வெண்பா.

எண்சீர்க் குணங்குடியா னென்னுங் குருமணிமேல்
வண்சீர்த் தமிழ்நான் மணிமாலை-பண்சீர்கொள்
கற்பனைசேர் பொற்பினவில் கைக்குப் பலவகையாங்
கற்பனைதீர் சிற்பரன்றாள் காப்பு.

(பொழிப்புரை.) யாவராலும் விரும்பி நினைக்கத்தக்க குணங்குடி
ன்னுந் திருப்பதியில் அவதரித்தமையால் குணங்குடியான் என்னுந்
ப்பெயரைக் கொண்டிருக்கிற மஸ்தான் சாகிபாகிய என்னுடைய
ியன்மேல் வளப்பம்பொருந்திய சிறந்த தமிழாலாகிய நான்மணி
என்னும் பிரபந்தத்தை, யாப்பிலக்கணக் கிரமப்படியே கற்பித்து
ாகப் பாடுதற்கு பலவகையாகிய உலக கற்பனையை நீக்குகின்ற
ளுகிய விக்ந விநாயகனுடைய திருவடிகள் காப்பாகும். (எ-று)
சரவணப்பெருமாளையர் மகா வித்துவானாக யாவராலும் மதிக்
ருந்தவர். அப்படிப்பட்டவரால் ஆசிரியராகக் கொள்ளப்பட்டதி
ன் சாகிபின் மகிமை நன்றாய்த் தொனிக்கின்றது.

பினுடைய காலத்தில் அவரைப் பலரும் உள்ளபடி
ாக ளென்பார், 'எண்சீர்' எனவும், குணங்குடிஎன்னுங்
வர்பிறந்த ஊரென்பார், 'குணங்குடியான்' எனவும், யா
வண க்கூடியஆசிரியராக விருந்தவரென்பார், 'குருமணிமேல்'
ம், தமிழ்க்கல்வியானது வண்மைமிக்க தென்பார், 'வண்சீர்த்
' எனவும், இங்ஙனம் அவருக்கணிவது நாற்பது செய்யுட்களா
ப மாலையென்பார், 'நான்மணிமாலை' எனவும், அது யாப்பிலக்

கணவிதி தவருமல் பாடவேண்டுமென்பார், 'பண்சீர்கொள் கற் சேர் பொற்பினவில்லைக்கு' எனவும், உலக மாய்கைகளையெல் விநாயகனே நீக்கி யருள்வானென்பார், 'பலவகையாங் கற்பனை தீர் பரன்' எனவும், அவனுடைய திருவடிகளே இந்நூலைக்காத்து ரக் மென்பார், 'தான்காப்பு' எனவுங் கூறினர்.

அன்றி, எண்சீர் என்றது, எட்டுவகையாகிய குணங்கள் என் சொல்லினும் பொருந்தும்.

குணங்குடியான் என்றது, குணங்குடி என்னும் ஊரைச்சொல் மல் குணத்தையே தான் குடியிருக்கத்தக்க பதியாகக்கொண்டவெ ன்றாலும் இழுக்காது.

ஸ்ரீவிநாயகப் பெருமானுடைய திருவடிகள் உயிர்களுக்குண் கின்ற மாயையின் கற்பனைகளை ஒழிக்கவல்லவை யென்பார், வகையாங் கற்பனை தீர் சிற்பரன்தாள்' எனக்கூறினர்.

நூல்

நேரிசை வெண்பா.

பொன்னாதி யாம்பொய்ப் பொருளினூறு புன்சுகத்தை
மின்னுமென் றெள்ளா விரகிலிகே- ளின்னே
குணங்குடியா னஞ்செய் குறிவாளி நல்க
வணங்குடியா னஞ்செய் வழுத்து.

(பொ-ரை) பொன்முதலாகச் சொல்லப்பட்ட பொய்யாகிய பெ ருள்களாலுண்டாகின்ற மிகுந்த சுகத்தை மின்னலைப்போல் அழிவ குமென்றுணர்ந்து அதை இகழாதமோட்ச சாம்ராஜ்ஜியத்தில் முய யில்லாதவனே! நான் சொல்லுவதை நீ கேட்பாயாக. இப்பொழு குணங்குடியான் என்னுந் திருப்பெயரினையுடைய மஸ்தான்சாகிப கள் உனக்கு அழகிய செம்மையையுடைய சிதாகாசக் குறியென்னு வாளாயுதத்தைக்கொடுக்க அவருடைய திருவடிகளை வணங்கு, மன தால் தியானஞ்செய், வாயால் துதிசெய். (எ - று)

பொன், பெண், மண், என்று பொருள்மூவகைப்படுதலின், 'பெ ன்னாதி' எனவும் இவை பொய்ப்பொருள்களே யாமென்பார், 'பொய் பொருளின்' எனவும் அவைகளால் விளையுஞ் சுகம் வெகுவாகச் சி கிக்கக்கூடியதாகவே காணப்படுமென்பார், 'ஊறுபுன்சுகத்தை' என அந்தச்சுகமானது மின்னலைப்போல்தோன்றி மறைவதென்பார், 'மி னுமென்று' எனவும் இதை பக்குவ ஆன்மாக்கள் ஒருபொருளாக யாமல் இகழ்ந்து விடுவீர்களென்பார், 'எள்ளாவிறகிலிகேள்' என ஞானிகளாகவுள்ளவர்கள் பரிபாகிகளுக்கே உபதேசஞ் செய்வா ளென்பார், 'இன்னே குணங்குடியானஞ்செய் குறிவாளிகள் நல்க-வ ங்கு உள்தியானஞ்செய்வழுத்து' எனவுங்கூறினர்.

ஞானிகளை வணங்கினால் ஈஸ்வரனை வணங்கும் பலனிலும் அதிக மாக அடையலாமாகையால் அபக்குவிக்கு கட்டளையிட்டவாறாயிற்று. பொன்னாதிகளை விரும்பாமல் ஈஸ்வரனை விரும்பவேண்டும் என்றதை;

"பொன்னை மாதரை பூமியைநாடிடேன்
என்னைநாடிய வென்னுயிர்நாதனே
உன்னைநாடுவ னுன்னருட்டுவெளி
தன்னைநாடுவன் றன்னந்தனியனே" என்பதினாலறிக. (1)

கட்டளைக் கலித்துறை.

வழுத்துந் தொழும்புடை யன்பமைந் தோர்தமை மாநிலருள்
பழுத்துங் குணங்குடி யான்கரை காண்டரு பண்புடைத்தாய்
முழுத்தும் பவக்கட லைக்கடப் பித்திசை முற்றுறவே
யழுத்தும் கரைபெற வில்லாத வானந்த மாங்கடலே

(பொ-ரை) யாவராலுந் துதிசெய்யப்படுகின்ற திருத்தொண்டினை யுடைய அன்புள்ளவர்களை இவ்வுலகத்தில் மனம்பழுக்கச் செய்விக் கின்ற குணங்குடியான் என்னுந் திருப்பெயரையுடைய மஸ்தான்சாகிபு கரைகாணத்தக்க குணத்தை யுடைத்தாய் யாவரையுந் தலையெடுக்க வொட்டாதபடிமுழுத்துகின்றஜென்மமென்னுங் கடலைக்கடப்பித்து கீர்த்தி நிறையும் வண்ணம் இதுதான் அளவென்று சொல்லப்படாத பேரின்ப மென்கிற பெரிய கடலிலே அழுந்தச்செய்வர். (எ - று.)

மஸ்தான் சாகிபானவர் அன்பர்களை நல்வழிக் காளாக்குவா ரென் பார், 'குணங்குடியான் கரைகாண்டகு பண்புடைத்தாய்-முழுத்தும் பவக்கடலைக் கடப்பித் திசைமுற்றுறவே - யழுத்துங்கரைபெற வில் லாத வாநந்தமாங் கடலே' எனவுங்கூறினார்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கடல்சூழ் புவியி லுளத்திருளைக்
கருணை யொளியி னுற்களைந்து
விடல்சூழ் பவரிற் குணங்குடியான்
மிக்கோ னெனற்கோர் தடையுளதோ
மிடல்சூழ் புறத்தின் விழிமறைத்து
மேவு மிருளை விரிகதிரா
லடல்சூழ் பொருள்கள் பலவுறினு
மலரி யுயர்வாய்த் தோன்றுறுமே.

(பொ-ரை) வெற்றிபொருந்திய வெளியிடத்தின்கண்ணே பார்ப்ப வர்களுடைய கண்களது பார்வையைமறைத்து மிகவும் நெருங்கிக் கலந்திருக்கின்ற இருட்டைவிரிந்த கிரணங்களால் நீக்குகின்ற வலி வமைந்த பொருள்கள் பல விருந்தாலும் அவைகளுக்கெல்லாம் சூரிய னே உயர்வாகக் காணப்படுவான். (அதுபோல) சமுத்திரத்தாற்சூழப் பட்ட இவ்வுலகத்திலுள்ள மானிடர்களுடைய மனத்திலுள்ள அஞ்

ஞானவிருட்டை கிருபையென்கிற தேஜஸினாற் களைந்தொழிக்க நினைப்பவர்களில் குணங்குடியான் என்னுந் திருப்பெயரையுடைய மஸ்தான்சாகிபே உயர்ந்தவர் என்று சொல்லுவதற்கு என்ன தடையிருக்கின்றது? ஒன்றுமில்லை. (எ - று.)

இந்த கடல் சகரரால் தோண்டப்பட்டதென்பதை நோக்கியும், இதற்குக் கடலுக்குப்பின் எல்லையில்லை என்பதை நோக்கியும், 'கடல் சூழ்புவியில்' எனவும், உலகத்தார் அஞ்ஞானத்தால் மறைப்புண்டவர்களே யாவார்களென்பார், 'உளத்திருளை' எனவும், அதை ஞானவொளியே நீக்குமென்பார் 'கருணையொளியினால் களைந்து' எனவும், ஞானோபதேசஞ்செய்து அஞ்ஞான விருளைநீக்க மஸ்தான்சாகிபைப்போல் ஒருவருமில்லையென்பார், 'கடல்சூழ்புவியிற் குணங்குடியான் - மிக்கோனெனற்கோர் தடையுளதோ' எனவும், இவர் சூரியனைப்போன்றவரென்பார், 'கடல்சூழ்புறத்தின் விழிமறைத்து மேவுமிருளைவிரிகதிரா-லடல்சூழ் பொருள்கள் பலவுறினுமலரியுயர்வாய்த்தோன்றுறுமே' எனவுங்கூறினார்.

ஆகையால் இவர் ஞானசூரியரென்றாயிற்று. (3)

நேரிசை யாசிரிப்பா.

தோன்றுபல் பாதகத் தொகுதியா மைந்தரை
யீன்று வளர்க்குமா வென்னுமிக் கலிதனிற்
காட்சியிற் புலப்படாக் கடவுளுண் டெனவு
மாட்சியி னவ்வையா மருவலுண் டெனவு
முடலமீ தன்றிவே றுயிருள தெனவுந்
துயிலுண வொழித்துத் தொடர்புல னடக்கிப்
பயிலு மனோலயம் பண்ணலுண் டெனவுங்
கண்டவர் யாரிவை கட்டுரை யாமெனக்
கொண்டரு நூலையுங் குருவையும் பழித்துத்
தவத்தொழில சிறிதுந் தழுவாது கைவிட்
டவத்தொழின் முழுவது மஞ்சாது புரியுங்
கொடியவர் கெட்டுளங் குலைந்துடல் விதிர்ப்ப
வொடிவரு பத்தியி னுற்றவர் தமக்கெலாங்
கடவுளை யவனடி காண்டகு திறத்தினைச்
சடமுறு முயிரவன் றன்னின்வே றன்மையை
வியத்தகு மைம்புலன் வென்றுமன் னடக்குறு
நயத்தகு மியோகமெய்ஞ் ஞானநல் வியல்பினை
யையந் திரிபற வருளினு லுள்ளங்
கையுறு நெல்லிக் கனியென வுணர்த்து
மிணங்குமெய்ப் புகழொடு மிசைந்தான்
குணங்குடி யானெனக் குலவுமா தவனே.

(பொ-ரை) உண்டாகின்ற பலவகைப்பட்ட பாதகக் கூட்டங்களாகிய பிள்ளைகளைப்பெற்று வளர்க்கின்ற பசுவென்று சொல்லுகின்ற இந்தக் கலியுகத்தில் திருஷ்டி மாத்திரத்திற் தெரியப்படாத கடவுள் உண்டு என்று சொல்லுவதும், பெருமையுடன் அவனை நாம் சேரவேண்டியது என்னலும், சரீரத்திலிருப்பதேயல்லாமல் உயிரானது வேறாகவுமிருக்குமென்று சொல்லுவதும், நித்திரை, ஆகாரம் இவைகளை நீக்கி தொடர்கின்ற ஐம்புலன்களை யடக்கி, பழகுகின்ற மனத்தைலயஞ் செய்வது உண்டு என்று சொல்வதும் ஆகிய இவைகளைப் பார்த்தவர் யாவர்? ஒருவருமில்லை. ஆகையால் இவைகளெல்லாங் கட்டுக்கதையாமென்றெண்ணி அருமையாகிய நூற்களையும், ஞானாசிரியர்களையும்பழித்து தவக்கிரியைகளைச் சிறிதும் அநுசரியாமல் கைவிட்டு வீண்காரியங்கள் எல்லாவற்றையும் பயமின்றி செய்யும் கொடியவர்கள் கெட்டு மனங்குலைந்து சரீரமானது விதிர் விதிக்கும்படி என்றுமழியாத பத்தியிலிருந்தவர்களுக்கு கடவுளையும், அவனுடைய திருவடிகளை தரிசிக்கும் விதத்தையும், சரீரத்திலிருக்கின்ற உயிரானது கடவுளுக்கு வேறுகாமையையும், யாவராலும் மதிக்கத்தக்க ஐம்புலன்களையும் ஜெயித்து மனத்தை ஒடுக்குகின்ற நன்மைமிகுந்த யோகத்தையும் உண்மைஞானமாகிய நல்ல இலட்சணத்தையும், ஐயந், திரிபு, இல்லாமல் திருவருளினால் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறிவித்த இணங்கிய உண்மையாகிய கீர்த்தியோடு குணங்குடியான் என்னுந் திருப்பெயரையுடைய மகத்தாந் தவசிரேஷ்டரான மஸ்தான் சாகிபவர்கள் பொருந்தியிருந்தார். (எ - று.)

இந்தக் கலியுகத்தில் உண்டா யிருப்பவர்களில் பெரும்பாலோர் பாவிகளே யாவார்களென்பார், 'தோன்றுபல் பாதகத்தொகுதியா மைந்தரை யீன்று வளர்க்குமாவென்னு மிக்கலிதனில்' எனவும், காட்சிப் பிரமாணம் முதலியவற்றைப் பொய்யன்போர் ஞானிகளைக்கண்டால் நடுங்குவார்க ளென்பார், 'காட்சியிற் புலப்படாக் கடவுளுண்டெனலு மாட்சியினவனையா மருவலுண்டெனலு முடலமீதன்றிவேறுயிருளதெனலும் துயிலுணவொழித்துந் தொடர்புலனடக்கி பயிலுமனோலயம் பண்ணலுண்டெனலும் கண்டவர் யாரிவை கட்டுரையாமெனக் கொண்டருநூலையுங் குருவையும்பழித்து தவத்தொழில் சிறிதுந் தழுவாதவைவிட் டவத்தொழில்புரிவது மஞ்சாது புரியவும் கொடியவர் கெட்டுளக் குலைந்துடல் விதிர்ப்ப' எனவும், அன்பர்களுக்கு ஞானோபதேசஞ் செய்வதில் இவர்மிகவும் நல்லவராயிருப்பவரென்பார், 'ஒடிவருபத்தியினுற்றவர் தமக்கெலாங் கடவுளையவனடி காண்டகு திறத்தினைச் சடமுறுமுயிரவன் றன்னின்வேறன்மையை வியந்தகு மைம்புலன் வென்றுமனனடக்குறு நயத்தகுமியோக மெய்ஞ்ஞான நல்லியல்பினை யையந்திரிபறவருளினுலுள்ளங்கையுறு நெல்லிக்கனியெனவுணர்த்து மிணங்குமெய்ப்புகழொடு மிசைந்தான்குணங்குடி யானெனக்குலவுமாதவனே' எனவுங்கூறினர். (4)

நேரிசை வெண்பா.

**மாதவஞ்சேர் மேலோர் வழுத்துங் குணங்குடியான்**
**நீதவஞ்சேர் நம்மழிவித்தை தீர்க்குமெனக் - காதல்**

விரைந்துபுகழ்ந் தோரிகழ்ந்தோர் மேவுவர்மெய்ப் போதம்
வரைந்து பிழைக்கும் வழி.

(பொ-ரை) மகத்தாகிய தவத்தைச் செய்த பெரியோர்களால் துதிசெய்யப்படுகின்ற குணங்குடியான் என்னுந் திருப்பெயரினை யுடைய மஸ்தான் சாகிபு அவர்கள் தீமையையுடைய வீண்செய்கைகள் சேர்ந்திருக்கின்ற நம்முடைய அஞ்ஞானத்தைத் தீர்த்தருள் செய்வா ரென்று அவரிடத்தில் மிகுந்த அன்பைவைத்து அவரைப்புகழும்உண் மையன்பர்களால் இகழப்படுவோர்களும் உண்மைஞான போதத்தை யும், பிழைக்கும் வழியையும் அடைவார்கள். (எ-று.)

மஸ்தான்சாகிபின் மகிமை அதிகப்பட்டிருந்ததினாலேயே அவர் பெரியோர்களால் துதிக்கப்பட்டவரானா ரென்பார், 'மாதவஞ்சேர் மேலோர்வழுத்துங்குடியான்'எனவும்,அஞ்ஞானத்தைநீக்குவதில்ஞான சூரியனுவானென்பார், 'தீதவஞ்சேர் நம்மவித்தைதீர்க்கும்' எனவும், அவரைப் புகழ்ந்தோரால் இகழப்படுவோர்களும் அவர்களுடையவாக் கின் விசேஷத்தால் நற்பயனையே அடைவார்களென்பார், 'காதல் விரைந்து புகழ்ந்தோ ரிகழ்ந்தோர் மேவுவர் மெய்ப்போதம் வரைந்து பிழைக்கும்வழி, எனவுங்கூறினார். (5)

கட்டளைக் கலித்துறை.

வழிசேர் குணங்குடி யானெனு மாரியன் மல்கருள்கூர்
விழிசேர் திருமுகத் திங்கள்கண் டார்க்கன்றி மேவலுண்டோ
பழிசேர் மனவிந்து காந்த முருகுறும் பண்பினொடு
மொழிசேரஞ் ஞான மெனுமிரு ணீங்கு முறைமையுமே.

(பொ-ரை) பழித்தலைச் சேர்ந்திருக்கின்ற மனமாகிய சந்திர காந் தமானது உருகுங்குணத்தையும், சொல்லிக் கொள்ளுகின்ற அஞ்ஞான மென்கிற இருளும் நீங்குகின்ற கிரமமானது, நல்வழியிற் செல்லுங் குணங்குடியான் என்னும் ஞானசிரியருடைய மிக்கதிருவருளுள்ளகண் கள் பொருந்தி யிருக்கின்ற திருமுகமாகிய சந்திரனைப் பார்த்தவர்களு க்கே யல்லாமல் மற்றவர்களுக்கு உண்டாகாது. (எ-று)

குணங்குடியான் என்னும் மஸ்தான்சாகிபானவர் தீயவழியிற்செல் லவில்லை யென்பார், 'வழிசேர் குணங்குடியான்' எனவும், இவரே அக் காலத்தாருக்கும், இக்காலத்தாருக்கும் ஞானசிரியராவா ரென்பார், 'ஆரியன்' எனவும், இவருடைய திருமுகத்தில் திருவருள் விளங்குவ தால் அது சந்திர கிரணங்களை வீசுவதாகுமென்பார், 'மல்கருள்கூர் விழிசேர் திருமுகத் திங்கள் கண்டார்க்கன்றி மேவலுண்டோ' என வும், சந்திரனைக்கண்டு சந்திரகாந்தக்கல் இளகுவதுபோல் இவரது முகத்தைக்கண்டு அன்பர்களுடைய மனங்கள் கரையுமென்பார், 'பழி சேர் மனவிந்து காந்தமுருகுறும் பண்பினொடு' எனவும் அன்னார்க்கு அஞ்ஞானமும்விலகுமென்பார், 'மொழிசேரஞ்ஞான மெனுமிருணீங்கு முறைமையுமே' எனவுங்கூறினார். (6)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

முறைமுறைவந் தரசரெல்லாம் வணங்கச் சீர்சான்
   முடிபுனைந்து புடவிமுழு தாளும் பேறு
மறைதருமோர் வீட்டினுக்கே யவாவுண் மேவி
   யரைக்கருங்கோ சிகமொழித்துக் கந்தை சூழ்ந்து
பொறையுறுநின் றிருவருள்பெற் றைய மேற்றுண்
   புண்ணியரா லொருபொருளென் றெண்ணற் காமோ
குறைவறுநற் புகழ்பரம யோகி யென்னுங்
   குணங்குடியா னேவிளங்கக் கூறுவாயே.

(பொ-ரை) எந்த விஷயத்திலும் குறைவென்பதில்லாத உயர்ந்த கீர்த்தியையுடைய பரமயோகி என்கிற இவரைப் பெற்றிருக்கிற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் வந்தவனே! அரசர்களெல்லாம் ஒருவர் பின் ஒருவராகவந்து வணங்கும்படி சிறப்பு மிகுந்த கிரீடந்தாங்கி உலகமுழுமையும் அரசாட்சி செய்கின்ற பேறும், பெரியோர்களாலும் வேதங்களாலும் சொல்லப்பட்டு வருகின்ற ஒப்பற்ற மோட்சவீட்டைத் தங்களுடைய சுவாதீனமாக்கிக்கொள்ள மனத்தின்கண் ஆசைகொண்டு அரையில் நல்ல வஸ்திரங்களை உடுத்தாமலொழித்து கந்தைகளைச்சுற்றி பொறுமையோடுகூடிய உன்னுடைய திருவருளைப்பெற்று பிச்சையெடுத் துண்ணுகின்ற புண்ணியவான்களால் ஒருபொருளாக எண்ணுதற்காகுமோ? ஆகையால் இதை தேவரீரே! திருவருள் செய்யவேண்டும். (எ-று)

சக்ரவர்த்தியை குறுநிலமன்னர்களெல்லாம் வந்து வணங்குவது சுபாவமென்பார், 'முறைமுறைவந் தரசரெல்லாம் வணங்கச் சீர்சால் முடிபுனைந்து' எனவும், இவர்கள் வாழ்வை பிச்சையேற்றுண்ணும் செய்கையுடையவரானாலும்புண்ணியவான்கள் மதிக்கமாட்டார்களென்பார், 'புடவிமுழு தாளும்பேறு மறைதருமோர் விட்டினுக்கே யவாவுண் மேவியரைக் கருங்கோசிக மொழித்துக் கந்தைசூழ்ந்து பொறையுறுநின் றிருவருள்பெற்றைய மேற்றுண் புண்ணியரா லொருபொருளென் றெண்ணர்காமோ' எனவும், இதன் மர்மம்மகான்களே அறிவார்களென்பார், 'குறைவறு நற்புகழ் பரமயோகியென்னுங் குணங்குடியானே விளங்கக் கூறுவாயே' எனவுங்கூறினர்.

அரசர்கள் செல்வம் நிலையல்லவென்பதை:

"மத்தயானை யேறிமன்னர் சூழவருவீர்காள்
செத்தபோதிலாருமில்லை சிந்தையுள் வைம்மின்கள்
வைத்தவுள்ளமாற்றவேணீ ரவமின் மனத்தீரே
அத்தர்கோயி லெதிர்கொள்பாடி யென்பதடைவோமே" எனவும்,

"மலைமிசைத்தோன்று மதியம்போல் யானைத்
தலைமிசைக்கொண்ட குடையர்—நிலமிசைத்
துஞ்சினரென்றெடுத்துத் தூற்றப்பட்டா ரல்லா
லெஞ்சினா ரிவ்வுலகத்தில்" எனவுங் கூறியவற்றானறிக. (7)

### நேரிசை யாசிரியப்பா.

வாயினாற் பலநூல் வகைதெரிந் துரைத்துங்
காயமேல் வெண்பொடி கவினுறப் பூசியுஞ்
செய்யகல் லாடையைத் திகழ்ந்திட வுடுத்துந்
துய்ய சடைமுடி துதைதர முடித்துந்
தண்டுக மண்டலஞ் சால்புறத் தாங்கியு
மண்டல மிசையிரி மான்றோலி னிருந்தும்
படர்புலச் சூறையிற் படுசிறு துரும்பென
விடர்கெழு மனத்தரா யிருக்கின் றனர்பலர்
நெளிதிரைக் கடல்சூழ் நெடும்பெரும் புவிமிசை
யளிவளர் குணங்குடி யானெனு மமல
சாற்றுமச் சாதனந் தானொன் றிலாமலும்
போற்று முனதருள் பொருந்திய வொருசில
ரொருதன தியல்புணர்ந் திருவினை யகற்றி
மூவா சைத்திற மேவாது விடுத்து
நாற்கதி நணுகுறு மேற்கதி விரும்பி
யைம்பொறிச் செகிர்வற வெம்புல னடக்கி
யறுசம யங்களி னெறிநிலை தேறி
யெழுபிறப் பிறந்ததென் விழுமிய செருக்கிற்
பத்தியாற் படரெலா மொருவி
நித்தியா நந்த நிலையரா யினரே.

(பொ-ரை) அலைகள் நெரிந்து கோஷிக்கின்ற சமுத்திரஞ்சூழ்ந்த இந்தப்பெரிய உலகத்தில் பலபேர்கள் பலநூல்களைப் பிறர்க்கு வாயினாற் சொல்லியும், சரீரத்தின்மேல் அழகாகத் திருநீற்றைப்பூசியும், விளங்கும்படி காவி வஸ்திரத்தை உடுத்தியும், சடாமுடியைப் பரிசுத்தமாக முடித்தும், தண்டாயுதத்தையும், கமண்டலத்தையும் அழகாகத் தாங்கியும், நிலத்தில் மான்தோலாசனத்தின்மேல் எழுந்தருளியும், படருகின்ற சுழல்காற்றிற்பட்ட துரும்பைப்போல் கலங்கியமனமுடையவர்களா யிருக்கின்றார்கள். கருணையே சதா வளர்ந்துகொண்டிருக்கின்ற குணங்குடியான் என்று சொல்லப்படும் பரிசுத்தனே! மேலே சொல்லப்பட்ட அந்தச் சாதனங்கள் ஒன்றுமில்லாமலும் யாவராலுந் துதிசெய்யப்படுகின்ற உன்னுடைய திருவருளைப் பெற்றிருக்கின்ற சிலர் ஒப்பற்ற தங்களுடைய லட்சணங்களை உணர்ந்து, நல்வினை, தீவினை, யென்னும் இருவினைகளையும் நீக்கிப் பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசை என்னும் மூவாசைகளையும் விட்டு, நற்கதிகளையும் அடையாமல் அவைகட்கு மேற்பட்ட கதியை விரும்பி, ஐந்துபொறிகளையும் ஐந்து புலன்களையுமடக்கி, ஆறு சமயங்களிலுமுள்ள நெறிகளில் நன்றாய்த்தேர்ந்து எழுபிறப்புகளைங் கடந்தது என்கிறபெருத்த செருக்கி

ஞாலுண்டானபந்தியினால் தங்களை வந்துபடர்ந்துள்ள பாசங்களையெல்லாம் நீங்கி சதானந்த நிலையுடையவர்களானார்கள். (எ-று)

உலகத்தில் பெரும்பாலோர் வேஷதாரிகளாகவே யிருக்கின்றார்களே யொழிய மனமொடுங்கினவர்களாகக் காணப்படவில்லை யென்பார், 'வாயினாற் பலநூல் வகைதெரிந்துரைத்துங் - காயமேல்வெண்பொடி கவினுறப் பூசியும் - செய்யகல்லாடையைத் திகழ்ந்திடவுடுத்தும் - துய்யசடைமுடி துதைதரமுடித்தும் - தண்டுகமண்டலஞ் சால்புறத்தாங்கியும் - மண்டல மிசைவிரி மான்றோலினிருந்தும் - படர்புலச்சூறையிற் படுசிறுதுரும்பென விடர்கெழுமனத்தரா யிருக்கின்றனர் பலர் - நெளிதிரைக்கடல்சூழ் நெடும்பெரும்புவியிசை' எனவும், மஸ்தான்சாகிபு அவர்களுக்கு அடிமைசெய்து அவரால் உபதேசஞ் செய்துகொள்ளப் பெற்றவர்கள் எந்த வேஷமு மில்லாமலே நித்தியானந்தத்தை யடைவார்களென்பார், 'சாற்றுமச்சாதனந் தானொன்றிலாமலும் - போற்றுமுனதருள் பொருந்தியவொருசிலர் - ஒருதமதியல் புணர்ந் திருவினையகற்றி - மூவாசைத்திறமே வாதுவிடுத்து - நாற்கதி நணுகுறு மேற்கதிவிரும்பி-யைம்பொறிக்கெதிர்வற வெம்புலனடக்கி-யறுசமயங்களினெறிநிலைதேறி-யெழுபிறப் பிறந்ததென் விழுமிவ செருக்கிற் - பத்தியாற் படரெலாமொருவி - நித்தியானந்த நிலையராயினரே' எனவுங்கூறினார். (8)

### நேரிசை வெண்பா.

ஆயுங்கா லன்பி னழியாத் துணையாகுங்
காயுங்கா லன்படர்ந்து காதவுடன்-மாயுங்கா
னீதிக்கும் போதயனை நேராங் குணங்குடியான்
போதிக்கும் போதப் பொருள்.

(பொ-ரை) குணங்குடியான் என்னுந் திருப் பெயரினையுடைய மஸ்தான்சாகிபு அவர்கள் அன்பர்களுக்கு உபதேசஞ்செய்யும் ஞானோபதேசமானது, உள்ளபடியே ஆராய்ந்து பார்த்தால் அன்புக்கு அழியாத துணையாகும், அன்றி, காய்கின்ற எமனானவன் மோதச்சரீரமானது இறந்துபடுந் தருணத்தில் பிரமனையும் ஒப்பாகும். (எ-று)

ஆசிரியர்கள் செய்யும் உபதேசமானது வீடுபேற்றிற்குரிய சாதனங்களுக்குத் துணையாயமைவது சகசமென்பார், 'ஆயுங்காலன்பினழியாத் துணையாகுங் - காயுங்காலன்படர்ந்து காதவுடன் - மாயுங்கால்-நீதிக்கும்போதயனை நேராங்குணங்குடியான் போதிக்கும்போதப்பொருள்' எனக்கூறினார். (9)

### கட்டளைக் கலித்துறை.

பொருட்செல்வம் புல்லிய தென்றே விடுத்திந்தப் பூதலத்தி
னருட்செல்வ மெய்துங் குணங்குடி யானருளாதரித்தோர்
தெருட்செல்வ நன்கெய்தி யைம்புலன் மாளச் செகுத்தினியா
மிருட்செல்வ மல்ல மென்வே மகிழ்வுற் றிருப்பார்களே

(பொ-ரை) பொருட்செல்வமானது அற்பமானதென்று அதைத் தேடுவதைவிட்டு இந்த உலகத்தில் திருவருட் செல்வத்தை அடைந் திருக்கின்ற குணங்குடியானுடைய திருவருளை விரும்புவோர்கள் ஞானச்செல்வத்தை மிகுதியுமடைந்து ஐம்புலன்களைக்கொன்று இனிநாங்கள் அஞ்ஞானிகளாக மாட்டோமென்று மகிழ்ச்சி யடைந்திருப்பார்கள். (எ-று.)

குணங்குடியான் என்னும் திருநாமத்தையுடைய மஸ்தான்சாகிபு ஆனவர் அருட்செல்வத்தையே நாடியவரென்பார், 'பொருட்செல்வம் புல்லியதென்றே விடுத்திந்தப் பூதலத்தி - னருட்செல்வ மெய்துங் குணங்குடியான்' எனவும், அவனை அடைந்தவர்களும் அப்படியே யாவார்களென்பார், 'அருளாதரித்தோ - தெருட்செல்வநன்கெய்தி யைம்புலன்மாளச் செகுத்தினியா - மிருட்செல்வமல்ல மெனவே மகிழ்வுற் றிருப்பர்களே' எனவுங்கூறினர்.

பொருட்செல்வம் அற்பம் என்றதை;

"செல்வத்துட்செல்வ மருட்செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணுமுள" என்பதினாலறிக. (10)

எண்சீர்க்கழி நெடி லடி யாசிரிய விருத்தம்.

கள்ளுண்டுங் கொலைபுரிந்துங் கபடஞ் செய்துங்
கணிகையர்தம் புணர்ப்பினுறு காம நோயா
லெள்ளுண்டுந் திருக்கொடும் பாதகத்தோர் தாமு
மிணையில்குணங் குடியானே யிறைவா வுன்றன்
விள்ளுண்ட கமலவடி படிந்தா ளொன்று
மேற்படப்பெற் றிடினவர்வெவ் வினைக ளெல்லாந்
தள்ளுண்டு சிறுசிலையொன் றெடுத்து வீசத்
தருநிறைபு குழாமெனவே பறந்துபோமே.

(பொ-ரை) ஒப்புசொல்லப்படாத குணங்குடியானே! எமக்குத் தலைவனே! உலகத்தில் கள்ளைக் குடித்தும், கொலை செய்தும், கபடஞ் செய்தும், வேசியர்கள்மேல் மோகங்கொண்டு அதனால் இகழப்பட்டும், அலைந்து திரிகின்ற கொடிய பாதகத்தை யுடையவர்கள்; உம்முடைய விகசித்த திருவடித் தாமரைகளில் உண்டாகிய ஒருதூசை தங்களுடைய சரீரத்தின்மேல் படப்பெற்றால் அவர்களுடைய கொடிய வினைகளெல்லாம் ஒரு சிறிய கல்லையெடுத்து வீசத்தருவில் நிறைந்த பட்சிக் கூட்டங்கள் சிதறுண் டோடுவதுபோல் பறந்து ஓடிப்போகும். (எ-று)

கொலை முதலியவை செய்யும் பாதகர்களும் ஞானிகளுடைய திருவடித்துகளைப் படப்பெற்றால் தங்களுடைய வினைகளை ஒழித்தவர்களே யாவார்களென்பார், இங்ஙனங் கூறினர். (11)

**நேரிசை யாசிரியப்பா.**

மேதகு நிலேயினை மேவிவாழ் வித்தக
வோதக விருடனை யொழிக்கு மாமணியே
யன்பினர் மகிழ்கொள வருள்பொழி முகிலே
யின்பநன் குதவுறு மினியதெள் ளமுதே
துகளற வோங்கிய துறவினர்க் கரசே
திகழறந் தாங்குபு சேர்குணங் குடியாய்
நின்னை வணங்கினோர் நெஞ்சா லயந்தொறு
முன்னை யிருத்திவே றுறைகின் றனையா
லொருவனோ பலரோ வொருநீ
தெரிதரப் புகல்கநின் றிருவுள மகிழ்ந்தே.

(பொ - ரை) மேன்மைபொருந்திய உண்மை நிலையைப் பொருந்தி வாழ்கின்ற பரிசுத்தனே! சொல்லப்படுகின்ற அஞ்ஞானத்தை யொழிக்கின்ற மகத்தான மாணிக்கமே! அன்பர்கள் சந்தோஷிக்கும்வண்ணம் திருவருள் மழையைப்பொழிந்த ஞானமேகமே! பேரின்பத்தை நன்றாய்க் கொடுத்த இனிமையான தெளிந்த அமிர்தமே! யாதொரு குற்றமுமில்லாமல் ஓங்கிய துறவிகளுக்குத் தலைவனே! உன்னை அன்பினுல் வணங்கினவர்களுடைய மனமாகிய கோயில்களிலெல்லாம் உன்னையிருக்கச்செய்து நீ வேருகவும் வசிக்கின்றாய் ஆகையால் நீ ஒருவனோ? அன்றி, பலரோ? அதை நீ மனமகிழ்ந்து தெரியச்சொல்லவேண்டும். (எ - று)

குணங்குடியான் என்னும் மஸ்தான்சாகிபானவர் ஞானநிலையை உணர்ந்து,

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்கவதற்குத் தக"

என்கிற வள்ளுவர்வாக்கின்படி அதிலேயே நின்று நிர்மலத்தை யடைந்தவரென்பார், 'மேதகு நிலையினை மேவிவாள்வித்தக' எனவும், அஞ்ஞானிகளுடைய மனத்தை விகசிக்கச் செய்வாரென்பார், 'ஓதகவிருடனை யொழிக்கு மாமணியே' எனவும், தம்மையடுத்த அன்புள்ளார்க்கு திருவருள் உபதேசஞ் செய்வோனென்பார், 'அன்பினர்மகிழ்கொளவருள்பொழி முகிலே' எனவும், பேரின்பத்தை யருள்வதில் அமிர்தம்போன்றவ ரென்பார், 'இன்பநன்குத வுறுமினியதெள்ளமுதே' எனவும், பெரியோர்க்குப் பெரியவரென்பார், 'துகளறவோங்கிய துறவினர்க்கரசே' எனவும், துறவரதருமங்களைப் பெரிதும் வளர்ப்பவனென்பார், 'திகழறந்தாங்குபுசேர் குணங்குடியாய்' எனவும், இவர்தம்மிடத்து மிக்க மகிமையுடைமையால் யாவரும் விரும்பும் இயல்புடையவராவா ரென்பார், 'நின்னை வணங்கினோர் நெஞ்சாலயந்தொறும் - உன்னையிருத்தி வேறுறைகின்றனையா - லொருவரோ பல்ரோவொருநீ - தெறிதரப்புகல்கநின் திருவுளமகிழ்ந்தே' எனவுங் கூறினர். (12)

### நேரிசை வெண்பா.

தேவருக்கு மெய்தரிய சிற்சுகத்தைத் தற்புகழ்ந்தோர்
யாவருக்கும் பாரினொழி யாதெளிதி-னீவனயந்
தொப்பில் பெருந்தவத்தி னோங்கு குணங்குடியான்
செப்பும் வினையனைத்துந் தீர்த்து.

(பொ - ரை) ஒப்புசொல்லப்படா மிக்கதவத்தினால் ஓங்குகின்ற குணங்குடியானானவன் சொல்லிக்கொள்ளுகின்ற வினைகளையெல்லா மொழித்து தேவர்களுக்குங் கிடைப்பதற் கருமையான ஞானசுகத்தை தன்னைப்புகழ்ந்தவர்கள் யாவருக்கும் உலகத்தில் ஒழியாது திருவருள் செய்வான். (எ - று)

தேவர்கள் பிறவியிலுயர்ந்தவரேயன்றி ஞானிகளாக மாட்டார்களென்பார், 'தேவருக்கு மெய்தரிய சிற்சுகத்தை' எனவும், தம்மைப் புகழ்ந்தவர்க்கு வினைகளை யொழித்துத் திருவருள்செய்வானென்பார், 'தற்புகழ்ந்தோர்யாவருக்கும் பாரினொழியா தெளிதினீவனயந் - தொப்பில் பெருந்தவத்தினோங்கு குணங்குடியான் - செப்பும் வினையனைத் துந்தீர்த்து' எனவுங் கூறினார். ()

### கட்டளைக் கலித்துறை.

துதியும் பழியு மமுதமும் புற்கையுந் துப்புமப்பு
நிதியுஞ் சிலையுங் கலவையுஞ் சேரு நிகருறவே
வதியுந் திறத்திற் குணங்குடி யானரு ளவாய்த்தவன்பாற்
பதியுங் கருத்துடையார்கள் கருத்துடைப் பார்கண்மெய்யே.

(பொ - ரை) துதிப்பதையும், பழிப்பதையும், அமிர்தத்தையும், புல்லையும், உணவையும், சலத்தையும், நிதியையும், கல்லையும், கலவை சந்தனத்தையும், சேற்றையும் ஒன்றாகக்கொண்டு வசிக்குந்திறத்தினையுடைய குணங்குடியானுடைய திருவருளைப்பெற்று அவனிடத்தில் அழுந்தியசிந்தை யுடையவர்கள் உண்மையாகப் பிறவியை ஒழிப்பவராவார்கள். (எ - று)

ஞானிகளுக்கு துதிபழி முதலிய யாவும் ஒன்றேயா மென்பார், 'துதியும் பழியுமமுதமும் புற்கையுந் துப்புமப்பு - நிதியுஞ்சிலையுங்கலவையுஞ் சேருநிகருறவே - வதியுந்திறத்திற் குணங்குடியான்' எனவும் அவனை உள்ளபடியே வணங்கப்பெற்றோர் ஜென்மவேரறுக்க வல்லவராவார் என்பார், 'அருள்வாய்த்தவன்பாற்பதியுங் கருத்துடையார்கள் கருத்துடைப்பார்கள் மெய்யே' எனவுங் கூறினார். (14)

### அறுசீர்க்கழி நெடி லடி யாசிரிய விருத்தம்.

பெய்யுறுசீர்க் குணங்குடியா னெனும்பவனே பாரினிவ்
விரிநீர் வைப்பி
னையுறுபித் தொடுவாத மல்விகிலைய மேலிடினு
நாடி நோக்கி

யுய்யுறுநன் னிலைபெறவோர் மாத்திரைதன் னுளமிரங்கி
யுரைத்தால் செய்யும்
பொய்யுறுமிப் பவநோயை யொழித்திணையி லாதசுகம்
பொருத்து மாறே.

(பொ-ரை) உண்மையாகிய சிறப்புப்பொருந்திய குணங்குடியான் என்றுசொல்லப்படுகின்ற மஸ்தான்சாகிபாகிய பவனனவன்இந்தகடல் சூழ்ந்த உலகத்தில் ரோகஸ்தர்கள் சிலேஷ்மம், பித்தம், வாதம் இவைகள் மேலிட்ட திரிதோஷத்தால் ஐயமானது அதிகரித்தால் அப்பொழுது நாடிப்பார்த்து (நாடியைப்பார்த்து) பிழைக்கத்தக்க உண்மை நிலையை யடைய ஒரு மாத்திரைப்போதும் தன்னுடைய மனமானது இரங்கிச்சொல்லும் பொய் மிகுந்த இந்தச் ஜெந்மநோயையொழித்து ஒப்பற்ற சுகத்தைக் கொடுக்கும். ()

குணங்குடியான் தன்னை நாடினவர்களைக் காப்பாற்றி இனிப்பிறவா நெறியை யளிப்பா னென்பார். (15)

### நேரிசை யாசிரியப்பா.

மாறுகொண் டென்மன மாகிய பரியை
வீறுகொண் டவாவெனும் வீரனிங் கொருவ
னழுக்கா றெனுங்கல் லணைமிசை யார்த்தாங்
கிழுக்கா றுடைசின மெனுங்கலி னஞ்சேர்த்
தளியறு செருக்குமிக் காகமே லிவர்ந்து
வளியெனும் வாதுவன் வாய்ந்துடன் றொடர்தரப்
பொறியெனுங் கொடுவழி புகுந்திடச் செய்தலு
நெறிபிறழ்ந் தப்பரி நீள்புலக் கான்புகுந்
தரிவையர் முயக்கெனு மளற்றினுள் வீழ்ந்துந்
தெரிபொன் னெனும்வனத் தீயிடைத் தழுங்கியும்
பகர்மண் ணெனுங்கொடும் பாறைதாக் குற்று
மிகுபெருந் துன்பொடு மெலிந்துழல் கின்றதா
லின் குணங்குடியா னெனுந்தவர்க்கரசே
நன்குமற் றதனைநீ நல்வழி திருப்பியே
யருளெனும் வாளினவ் வீரனைத் துமித்துக்
கருதுமக் கல்லணை யாதிகள் களைந்தொழித்
தென்வச மாக்குவை யெனின்யா
னின்வச மாகுவ னினதியல் புகழ்ந்தே.

(பொ-ரை) என்னுடைய மனமாகிய குதிரையை விரோதித்து வெற்றியுடனே ஆசையென்கிற ஒரு வீரனனவன் பொறாமை என்கிற கல்லின்மேல் ஆர்த்து கோபமாகிய ஜீனியைப்பிணைத்து கர்வம் அதி

கப்பட்டு மேலேயேறி வாயுவென்கிற சண்டைக்காரன் பின்னே தொடர, ஐம்பொறிகளாகிய கொடிய வழியில்போகும்படி செய்தலுப் அக்குதிரையானது வழிதப்பி நீண்ட காட்டில்புகுந்து பெண்கள் மாய்கையென்கிற சேற்றில் விழுந்தும், பொன் என்னுங்காட்டில் நீமை மிதித்து வருத்தப்பட்டும், மண் என்கிற கொடிய பாறையானது தாக்கி மிகுந்த துன்பத்துடன் மெலிந்து திரிகின்றதாகையால் குணங்குடியான் என்னுந் திருப்பெயரை யுடைய தவராசனே! அப்படிப்பட்ட அந்தக்குதிரையை நல்லவழியில் திருப்பி திருவருளென்னும் வாளாயுதத்தினால் அந்த வீரனை அதஞ்செய்து அந்தக் கல்லனை முதலியவைகளைக் களைந்து நீக்கி அதை என்னுடைய வசப்படுத்துவையானால் நானும் உன்னுடைய இலட்சணத்தைப் புகழ்ந்து உன்வசமாவேன். (எ-று)

ஈண்டு, மனமானது ஆசையின்வழியே சிக்கி அடையும் துன்பஞ் சொல்லப்பட்டதென்க.

## நேரிசை வெண்பா.

புகழ்ந்து குணங்குடியான் பொங்கிசையை நெஞ்சந்
திகழ்ந்துபுலவீர்பாடல் செய்மி - னிகழ்ந்து
மலத்திருக்கை மாற்றினிலை மாறாவின் பெய்தி
ரலத்திருக்கை நல்கு நயந்து.

(பொ-ரை) ஓ புலவர்களே! நீங்கள் குணங்குடியான் என்னும்மஸ்தான்சாகிபினுடைய மிகுந்த கீர்த்தியை புகழ்ந்து மனந்தெளிந்து பாடுங்கள். நீங்கள் அங்ஙனம் பாடுவீரானால் அவர் உங்களுடைய மாயாமலத்தையிகழ்ந்து அதை யொழித்து உண்மைநிலைகெடாத சுகத்தை யடைந்து நன்மையாக விருக்குமிடத்தைவிரும்பிக்கொடுக்கும். (எ-று)

புலவர்களே! நீங்கள் குணங்குடியானை உள்ளன்புடன் பாடினால் அவர் சுகானந்தநிலையை அருளிச்செய்வார் என்பது கருத்து. (17)

## கட்டளைக் கலித்துறை.

நயமேவு கஞ்ச முகமுங் கருணை நயனமுஞ்சீர்ப்
பயமேவு செம்போ னுறழ்மேனி யும்மெழிற் பாதுகைசேர்
சயமேவு தாளுந் தலைவிரி கோலமுஞ் சார்ந்தன்றி
தயமேவு மென் றுங் குணங்குடி யானெனுஞ் சற்குருவே.

(பொ - ரை) குணங்குடியான் என்னும் ஞானாசிரியனானவன் நன்மை மிகுந்த தாமரைபோலும் முகமும், கருணைபொழியும் கண்களும், சிறப்புப் பொருந்திய பொன்போன்ற திருமேனியும், பாதக் குறட்டைத் தரித்த வெற்றி பொருந்திய திருவடிகளும், விரிந்த தலைக்கோலத்தையும் பெற்று எக்காலத்திலும் அடியார்களுடைய இருதயத்தில் குடியிருப்பான். (எ-று)

ஞானுசிரியனுன மஸ்தான்சாகிபு ஆனவன் அன்பர்களுள்ளத்தில் சதா அமர்ந்திருப்பா னென்பார் இங்ஙனங்கூறினர். (18)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

குருவா யடுத்தோர்க் கருள்சுரக்குங்
கோதில் குணஞ்சேர் குணங்குடியா
னுருவா யருவா யுபயமுமா
யொன்ருய்ப் பலவா யறிஞர்விழை
திருவாய் விளங்கும் பாநிலையைத்
தெரிக்கு மெனின்மற் றவன்பெருமை
யொருவா யுடையே னும்புகழ்வே
னோரா யிரம்வா யுறினெருங்கே.

(பொ - ரை) தம்மை வந்தவர்களுக்கு ஞானுசிரியனுக விருந்து திருவருள்செய்யுங் குணத்தையுடைய குணங்குடியான் என்னுந் திருப்பெயரையுடைய மஸ்தான்சாகிபானவர், உருவமாகியும், அருவமாகியும், உபயமாகியும், ஒன்ருகியும், பலவாகியும், அறிவுள்ளவர்களால் விரும்பப்படும் ஞானமாகியும் விளங்குகின்றமேலான நிலையை உபதேசிப்பாஞனுல் அவனுடைய பெருமையை ஒரு ஆயிரம்வா யிருந்தால் எல்லாவற்றையும் ஒருங்கே எடுத்து ஒருவாயுடையேனுகிய நானும்புகழ்ந்துரைப்பேன் (எ - று)

குணங்குடியான் என்னும் மஸ்தான் சாகிபானவர் தம்மை யடுத்தவர்களுக்கு உண்மை வஸ்துவை யுணரும் மார்க்கத்தை யுபதேசஞ்செய்து நல்வழிப்படுத்து பவராகையால் அவருடைய பெருமையை என்னுலெடுத்துச்சொல்ல இயலாதென்பார் இங்ஙனங்கூறினர். (19)

நேரிசை யாசிரியப்பா.

ஒருங்கிய மனத்தொடு மொருகாசு மிலனுய்க்
கருங்கடற் புவியிசைக் காதன்மீ தூர
வழுத்தி யன்புடை னிரக்கின்றவ
னெழிற்குணங் குடியா னெனுமருட் செல்வ
தன்னையு மிழப்பதல்லா
லென்னை யவன்பெற வியம்பருள் சுரந்தே.

(பொ-ரை) அழகிய குணங்குடியான் என்னுந் திருநாமத்தையுடைய திருவருட்செல்வனே! உலகத்தின்கண் ஒருங்கிய மனத்தையுடையவனுய் கையில் ஒருகாசும் இல்லாதவனுய் இங்கு ஆசை அதிகரிக்க வழுத்தி அன்புடன்வந்து இரக்கின்றவர்கள் தன்னையும் இழப்பதல்லாது என்னையும் அவன் அடையத் திருவருள்சுரந்து சொல்லுக (எ - று) (20)

### நேரிசை வெண்பா.

சுரக்குமணற் கேணியினீற் றோண்டுந் தொறுமைந்
தாக்குங் குணங்குடியா னன்பர்க்-கிரக்கமொடு
மானந்தத் தேறல் வரப்புகல்வ தால்தோறு
மானந்தத் தேறல்சுரப் பாம்.

(பொ - ரை) மணற்கேணியின்கண் தோண்டத்தோண்ட நீர்சுரக்கும் அதுபோல குணங்குடியான் அன்பர்களுக்கு இரக்கத்துடன் ஆநந்தத்தில் ஏறும் வழியைச்சொல்லுவதால்அது சொல்லுந்தோறும் ஆநந்தத்தேனைது சுரப்பாகும். (எ - று) (21)

### கட்டளைக் கலித்துறை.

ஆந்துணை நாடிற் குணங்குடியானென் றறிந்தவன்பாற்
போந்துணை யோடன்பு செய்தவர் செய்தவர் பூதலத்திற்
சாந்துணை யுங்கை வடிச்செவ் வாய்ச்சியர் தாட்கமலப்
பூந்துணை யூட லொழித்தாங்கு புல்வினர் புல்வினரே.

(பொ - ரை) பொருந்திய துணையாவது எதுவென்று நாடிப்பார்த்தால் குணங்குடியானே யாவானென்று உணர்ந்து அவனிடத்தில் போகின்ற துணையுடனே அன்புசெய்தவர் தவஞ்செய்தவர்களே யாவார்களாகிய பெண்களாகிய பெண்களது திருவடிக்கமலங்களின் ஊடலை யொழித்ததைப் போலப்பற்றினவர்களே யாவார்கள். (எ-று) (22)

### அறுசீர்க்கழி நெடி லடி யாசிரிய விருத்தம்.

புல்லியு மல்லி சேர்ந்து பொலிவுறு மணத்த தாகுந்
தொல்லியல் வழுவா வண்மை தொடர்குணங் குடியானென
நல்லியன் ஞானமூர்த்தி நாமமுற் றிடுத லாலே
சொல்லிய வெனது சொல்லுந் தோன்றுறுஞ் சிறப்பினுற்றே

(பொ-ரை) புறவிதழும் அகவிதழுடன்சேர்ந்து விளங்குகின்ற மணமுடையதாகும், அதுபோல பழைய இலட்சணங்களை வழுவாத வளப்பத்தை தொடர்கின்ற குணங்குடியான் என்கிற உயர்ந்த இலட்சணத்தையுடைய ஞானமூர்த்தியின் நாமம் விளங்குவதனால் சொல்லப் பட்ட என்னுடைய சொல்லும் சிறப்பாகவிளங்கும். (23)

### நேரிசை யாசிரியப்பா.

உற்றிளங் கொழுமிய நற்றிற வன்பொடுங்
குணங்குடி யானருட் கிணங்கினோ ரியார்க்கும்
பகைமையுங் கேண்மையும் புகலினில்லை யெனலென்
னெடுங்கா லத்தமை நீங்காது பழகிய
கொடுங்கோன் மாயையைக் கொல்பெறும் பகைவராய்க்
கறுவிய கேண்மையிற் கலப்பர்
புதிதென வெய்தியபோதந் தனக்கே

(பொ - ரை) பொருந்திவிளங்கிய இளமையையுடைய உயர்ந்த வன்மையையுடைய அன்போடும் குணங்குடியானுடைய திருவருளுக்கு இணங்கினவர்கள் யாவருக்கும் பகையும், சிநேகமும், இல்லையென்று சொல்லுதல் தங்களைநெடுங்காலம் வரைக்கும் நீங்காது பழகியிருந்த கொடிய சிநேகமாகிய மாயையைக் கொல்லுகின்ற மிக்க பகைவராய்க் கலந்த சிநேகத்தில் புதிதாக வுண்டான போதத்துடன் கலப்பார்கள். (எ- று) (24)

## நேரிசை வெண்பா.

தனக்குத்தா னேநிகரா நந்தத் துவனு
மினக்குத்தா னன்றியெவர்க் குண்டு - நினைக்குங்காற்
கூறு மளிசேர் குணங்குடியா னேவிமலா
தேறுதவ யோகமுயல் சீர்.

(பொ-ரை) சொல்லப்படுகின்ற கிருபைசேர்ந்த குணங்குடியானே! பரிசுத்தனே! நினைத்துப் பார்த்தோமானால் தனக்குத்தானே ஒப்பாகின்ற தத்துவத்தனுயிருக்கின்ற உனக்கேயல்லாமல் தேறுகின்ற தவத்தையும், யோகத்தையும் செய்கின்ற சீரானது வேறு எவருக்கு உண்டு()

தவம் முதலியவை செய்யும் திறமையில் உனக்கு ஒப்பானவர் ஒருவருமில்லை என்பது கருத்து. (25)

## கட்டளைக் கலித்துறை.

சீரை விரும்பினர்க் கின்றுமுலோபமெய் சேருநசை
போரை விரும்பினர்க் கின்று மனநிலை பூவையர்தம்
மோரை விரும்பினர்க் கின்றுங் குணங்குடி யானிடஞ்செய்
நாரை விரும்பினர்க் கின்று முலகர் நவிலவரே.

(பொ-ரை) சிறப்பைவிரும்பினவர்களுக்கு உலோபம் இல்லையாம், உயுத்தத்தை விரும்பினவர்களுக்கு சரீரத்தில் விருப்பமில்லையாம், பெண்களை விரும்பினவர்களுக்கு மனநிலை இல்லையாம், குணங்குடியானிடஞ்செய்கின்ற அன்பை விரும்பினவர்களுக்கு உலகத்தார்களில்லையாம். (எ - று)

உலகத்தில் லோபஞ்செய்வோன் சிறப்பினை யடையமாட்டானென்பார், 'சீரைவிரும்பினர்க் கின்றுமுலோபம்' எனவும், யுத்தவீரனுக்கு சரீரத்தில் விருப்பமில்லை யென்பார், 'மெய்சேருநசைபோரை விரும்பினர்க்கின்றும்' எனவும், ஸ்ரீலோலர்களுக்கு மனவுறுதியில்லை யென்பார், 'மனநிலை பூவையர் தம்மோரை விரும்பினர்க்கின்றும்' எனவும், குணங்குடியானை விரும்பினவர்கள் உலகர்களை நாடாரென்பார், 'குணங்குடியானிடஞ் செய்நாரை விரும்பினர்க்கின்றுமுலகர் நவிலவரே' எனவுங்கூறினார். (26)

### அறுசீர்க்கழி நெடி லடி யாசிரிய விருத்தம்.

நவிலுமிள மையுமதனை யுறுமுடலு மதனையுள
நயந்து காக்கக்
குவிபொருளும் புனற்குமிழி போலநிலை யல்லவெனுங்
குணத்தை யோர்ந்து
புவிபுகழு மெய்ஞ்ஞானக் குணங்குடியான் றிருவருளைப்
பொருந்தற் கெண்ணார்
தவலறுசீ ரகண்டபரி பூரணமாஞ் சிற்பான்றாள்
சார்த லுண்டே.

(பொ-ரை) சொல்லப்படுகின்ற இளமைப்பருவமும், அதைத்தாங்கி யிருக்கின்ற சரீரமும், அந்தச்சரீரத்தை மனமானது விரும்பிக் காப்பதற்கு திரண்ட பொருளும், ஆகிய இவைகளெல்லாம் நீரிற் குமிழி போல் நிலையில்லாதனவாகும் என்கிற குணத்தை உணர்ந்தும் உலகத்தவர்களால் புகழப்படுகின்ற உண்மைஞானத்தை யடைந்த குணங்குடியானுடைய திருவருளை அடைவதற்கு நினையாதவர்கள் குற்றமற்ற சிறப்பினையுடைய அகண்ட பரிபூரணனாகிய சிற்பரனுடைய திருவடிகளை யடைவதுண்டோ? இல்லை. (எ - று)

உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் நிலையில்லாதன வென்றுணர்ந்தும் அவற்றையே மதித்து குணங்குடியானை மறந்தவர்கள் சிவபெருமானுடைய திருவடிகளை யடையமாட்டார்கள் என்பது கருத்து. (27)

### நேரிசை யாசிரியப்பா.

உண்டு முடுத்து முறுபொரு ளீட்டியு
மெண்டகு வாழ்நா ளியாவையுங் கழித்தே
யணங்குசெய் வினைமுய லசடருக் கறிவருங்
குணங்குடி யானருட் குரிசி லிசையிசை
நாவாய் நாவா யாகு
மோவாப் பவக்கட லொழிந்து கரைபெறற்கே.

(பொ-ரை) உண்டும், உடுத்தியும், மிக்க திரவியத்தைத் தேடியும், எண்ணத்தக்க வாழ்நாள் யாவையுங் கழித்து துன்பத்தைச் செய்கின்ற காரியங்களிற் பிரவேசிக்கின்ற அசடர்களுக்கு அறிதற் கருமையான குணங்குடியானாகிய திருவருட் குரிசிலானவன் சொல்லுகின்ற இசையானது ஜெந்மமென்னுங் கடலை யொழித்து கரையேறுவதற்குரிய மரக்கலமாகும். (எ - று) (28)

### நேரிசை வெண்பா.

பெறற்கரும்பே றொன்றுளதோ பேருலகில் யார்க்குந்
தெறற்கருமா யைக்கழிவு செய்யும் - விறற்கிசைந்த
மன்னருளங் கொண்டு மதிக்குங் குணங்குடியான்
றன்னருளிற் குற்றார் தமக்கு.

(பொ-ரை) உலகத்திலுள்ள யாவராலும் வெல்லுவதற்கு அரிய மாயையை கெடுக்கும் வெற்றியையுடைய அரசர்களால் மதிக்கத்தக்க குணங்குடியானுடைய திருவருளை யடைந்தவர்களுக்கு பெறுதற் கருமையான பேருமிருக்கின்றதா? இல்லை. (எ - று)

மஸ்தான்சாகிபின் திருவருளை யடைந்தவர்கள் எல்லாப்பேற்றையும் அடைந்தவர்க ளாவார்கள் என்பது கருத்து. (29)

## கட்டளைக் கலித்துறை.

குவலைய மெங்கு மொருசாண் வயிற்றின் குழிநிறைப்பக்
கவலை யடைந்திரைக் கேயுழல் வீர்பயன் கண்டதுண்டோ
நுவலைய நீக்குங் குணங்குடி யானரு ளோக்கிவிழித்
திவலைய றுவன்பிற் சேரினுண் டாங்கடை தீர்சிறப்பே.

(பொ-ரை) உலகமெல்லாம் ஒருசாண்வயிறாகிய குழியை நிறைக்க துன்பையடைந்து தீனிக்காகவே திரிகின்றவர்களே! நீங்கள் அதனால் ஏதாவது பிரயோசனத்தைக் கண்டதுண்டோ? ஆகையால் சொல்லப் பட்ட சந்தேகத்தை நீக்குங் குணங்குடியானுடைய திருவருட் பார்வை யால்பார்த்து அந்தக் கண்ணின் திவலையொழியாத அன்பினிடஞ் சேர்ந் தால் நீங்கள் சிறப்பை யடைவீர்கள். (எ-று)

உலகத்தார்கள் வயிறு வளர்க்கும் நிமித்தம் கஷ்டப்படுவார்களே யன்றி குணங்குடியானுடைய திருவருளை நாடார்களென்பார், 'குவலைய மெங்குமொரு சாண்வயிற்றின் குழிநிறைப்பக் கவலையடைந்திரைக்கே யுழல்வீர் பயன்கண்டதுண்டோ' எனவும், அவனுடைய திருவருளோக் கத்தை யடைந்தால் சிறப்பினை யடைவார்களென்டார், 'நுவலையநீக்குங் குணங்குடியான் னருளோக்கிவிழித் - திவலையறுவன்பிற்சேரினுண் டாங் கடைதீர்சிறப்பே' எனவுங் கூறினர். (30

## அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சிறக்கும் புகழு மதித்தோங்குஞ் செறிதீ வினைகளெலாம்விடுத்துப்
பறக்கும் வித்தை யிருணீங்கும் பக்தி யுளத்தின் மேன்மேலும்
பிறக்கு மதிதப் பெருவாழ்வு பெருகு முலகிற் பேதகிலை [கே.
துறக்கு முறவோன் குணங்குடியான் சொல்லுநெறியைத் துன்னினர்க்

(பொ - ரை) யாவர்க்கும் உறவினனாகிய குணங்குடியான் சொல்லு கின்ற நெறியை யடைந்தவர்களுக்கு புகழுண்டாகும், தீவினைகளெல் லாம் விட்டோடும், அஞ்ஞானமானது தூர அகலும், பக்தியானது மனத்தில் மேன்மேலும் வளரும், சுகாதீதப் பெருவாழ்வுகிடைக்கும், உலகத்திலுள்ள பேதகிலையானது விட்டொழியும். (எ-று-)

ஞானிகள் உபதேசங் கொண்டவர்க்கு சகலதீவினையுங்கெட்டு நன் மைகளுண்டாகும் என்பது கருத்து. (31)

### நேரிசை யாசிரியப்பா.

தன்னூறு திரைக்கடல் சூழ்பெரும் புவிமிசை
பன்னூறு நிலைகெழு பலசம யங்களு
ளெச்சம யத்தவ ரெவ்வா றகருதினு
மச்சம யத்தவர்க் கவ்வா றிருந்தருள்
பலவடி வங்களும் பலநா மங்களு
நலமுற மருவிய நாயக ளுகியு
முருவும் பெயருமொன் றுறு துவே றுகிச்
செருவளர் சமயா தீதமுற் றொளிருஞ்
சிற்பரம் பொருளினத் தெரிக்கு
நற்குணங் குடியானெனுநா யகனே.

(பொ-ரை) மிகுந்த அலைகளையுடைய கடலாற் சூழப்பட்ட இந்தப் பெரிய உலகத்தில் சொல்லப்படுகின்ற நிலைத்த பலசமயங்களுள் எந்தச் சமயத்தார்கள் எந்தவிதமாக நினைத்தாலும், அந்தச் சமயத்தார்க்கு அந்தந்த விதமே இருந்தருள்கின்ற பலரூபங்களும், பலநாமங்களும், நன்மையோடு சேரப்பெற்ற தலைவனுகியும், ரூபத்தையும், பெயரையும், ஒன்றாகப்பெறாது வேறுவேறாகப்பெற்று போர்மிகுந்த சமயாதீதத்தைப்பொருந்தி விளங்குகின்ற ஞானபரம்பொருளின் இனத்தில் ஒளிசெய்கின்ற நல்ல குணங்குடியான் என்னுந் தலைவனே! (எ-று) (32)

### நேரிசை வெண்பா.

நாயகனார் நல்வரவை நாடுங் குலமகள்போற்
றூயகமாந் தற்பரனைத் தாங்காண - நேயமுளங்
கொண்டோர்க் கலது குணங்குடியான் கண்ணருட்டே
றுண்டோவிப் பூதலத்தி னுள்.

(பொ-ரை) கணவருடைய வரவை எதிர்பார்க்கும் பதிவிரதாசிரோன்மணியைப்போல் தாயகமாகிய தற்பரனைக்காண, நல்ல திருவுள்ளங்கொண்டவர்களுக்கல்லாமல் இப்பூவுலகத்தில் குணங்குடியானுடைய கடாட்ச வீட்சண்ணியம் உண்டாகுமோ? உண்டாகாது. (எ-று) (33)

### கட்டளைக் கலித்துறை.

உள்ளினுங் கண்மு னெழுதினுங் காதி னொருவர்சொலக்
கொள்ளினு நாவினிற் கூறினு மின்பங் கொழிக்குமுன்போர்
கள்ளினு நெஞ்சை யழிக்கின்ற காமக் கரிசினைத்
தள்ளினுஞ் சூழுங் குணங்குடி யானெனுந் தற்பரனே.

(பொ-ரை) குணங்குடியான் என்னும் ஞானுசிரியன் நினைத்தாலும், கண்ணுக்குநேராக எழுதினாலும், ஒருவர் சொல்லக் காதாற்கேட்டாலும், நாக்கினுற் சொன்னாலும், இன்பங்கொழிக்கின்ற உன்னுடைய போனந்து கள்ளைப்பார்க்கிலும் நெஞ்சைக்கெடுக்கின்ற காமமுள்ளவர் களை தள்ளினாலுஞ் சூழும். (எ - று)

குணங்குடியான் என்னும் ஞானாசிரியனுடைய திருநாமமானது தள்ளினாலும் தள்ளப்படாமல் திருவருள் செய்யும் என்பதுகருத்து (34)

**'கலி விருத்தம்.**

பரம யோகியைப் பற்றென் றி லான்றனைக்
கரவி லாத கருணைக் கடலினைக்
குரவ னாகுங் குணங்குடி யான்றனைப்
பரவி னார்க்குப் பவப்பிணி யில்லையே.

(பொ-ரை) பரமயோகியும், எதிலும் பற்றில்லாதவனும், வஞ்சகமில்லாத கருணைக்கடலும், ஞானாசிரியனுமாகிய குணங்குடியானை துதிசெய்கிறவர்களுக்கு ஜென்மமென்பது இல்லையாகும். (எ-று) (35)

**நிலமண்டில வாசிரியப்பா.**

இல்லையோ வுளதோ விடையென மருண்டு
முல்லையி னரும்பே முறுவலென் றுரைத்துங்
கொங்கையைச் செம்பொனிற் குடமென வியந்துஞ்
செங்கையைக் காந்தட் செழுமல ரென்றும்
விழியைக் கூர்நெடு வேற்படை யென்று
மொழியை நறுஞ்சுவை முதிரமிழ் தென்று
மிதழினைக் கொவ்வையி னெழிற்கனி யென்று
நுதலினைப் பிள்ளைப் பிறையென நுவன்றும்
வனிதையர் முயக்கிடை மயங்கிவீழ்ந் தழுதுந்
துனியுறு வோர்மனச் சோர்வினை யொழித்திட
மறைபுகன் ஞான வளமினி தருளுங்
குறைவரு நற்குணங் குடிகொண் டிருத்தலா
லுன்பெயர்க் காரணத் துறுபொரு ளுணர்ந்தனங்
கொன்பெறு புகழ்வளர் குணங்குடி யானே.

(பொ-ரை) இடையானது இல்லையோ? உண்டோ? என்று மருண்டும் பற்களை முல்லை அரும்பென்று சொல்லியும், கொங்கையை பொற்குடமென்று புகழ்ந்தும், செவந்த கைகளைக் காந்தள் மலரென்று சொல்லியும், கண்களை வேலாயுதமென்றும், சொற்களை தேவாமிர்தமென்றும், வாயிதழை கொவ்வைக்கனியென்றும், நெற்றியை மூன்றாம் பிறையென்றும், பெண்களுடைய மயக்கத்தில்வீழ்ந்து மயங்கி அழுந்துகின்ற வருந்துவோர்களுடைய மனச் சோம்பலை நீக்குதற் பொருட்டு, வேதங்களாற் சொல்லப்படுகின்ற ஞானவளப்பத்தை இனிமையாக அருள்செய்கின்ற குறைவற்ற நல்ல குணமானது குடிகொண்டிருப்பதால் உன்னுடைய பெயரின் காரணத்தாலுண்டான பொருளை உணர்ந்தோம், அச்சம் பொருந்திய புகழ்ச்சியானது வளர்கின்ற குணங்குடியானே! (எ-று) (36)

### நேரிசை வெண்பா.

யானென தென்னுஞ் செருக்கற் றியாவுமொரு
தானெனவே கொள்ளுந் தகையாகு - நானிலத்திற்
கூரும் கருணைக் குணங்குடியான் சந்நிதியி
னேருங் கருத்தோர் நிலை.

(பொ-ரை) இந்த உலகத்தில் மிகுந்த கருணையையுடைய குணங்குடியான் சந்நிதியில் சேருங் கருத்தையுடையவர்களுடைய நிலையானது, நான் எனது என்னுங் கர்வங்களற்று யாவும் ஒரு பொருளென்றே கொள்ளுந்தன்மையாகும். (எ - று) (37)

### கட்டளைக் கலித்துறை.

நிலையுறு சத்துச்சித் தாநந்த மாக நிறைபொருளைக்
கலையுறு மாட்சியிற் றுனுற்றி யாரையுங் காட்டவல்லோன்
புலையுறு மியாக்கை வருந்துற நோக்கும் புனிதர்புகழ்
தலையுறு சீர்கொள் குணங்குடி யானெனுஞ் சற்குணனே.

(பொ-ரை) அழியாதசத்து, சித்து ஆநந்தமாய் நிறைந்தபொருளை, தன்னுடைய மாட்சிமையினுற் கலந்து அந்தப் பொருளை, யாவருக்குங் காட்ட வல்லமையுடையவனும், புலால் நாற்றத்தையுடைய சரீரமானது வருத்தத்தை யடையப்பார்க்கின்ற புனிதர்களுடைய முதன்மையாகிய சிறப்பைப் பெற்ற குணங்குடியான் என்னும் ஞானகுருவே!() ()

### கலி விருத்தம்.

குணங்குடி யானருள் கூடி னலத்தி
னிணங்கிய சிந்தைய ரேத மகற்றி
யணங்கறு மின்பி னமர்ந்துல கத்தோர்
வணங்கிய வழுத்துறு மாண்பொடு வாழ்வார்.

(பொ-ரை) குணங்குடியானுடைய திருவருளைக் கூடினுல் நன்மையிற் சேர்ந்த குணமுடையவர்கள் குற்றங்களை நீக்கி வருந்துதலில்லாத இன்பத்திலமர்ந்து உலகத்தார்கள் வணங்கித் துதிசெய்கின்றபெருமையுடன் வாழ்வார்கள். (எ - று) (39)

### நிலமண்டில வாசிரியப்பா.

வார்தருங் கூந்தலார் வரிவிழிக் கணையு
மோர்தரு மதனவே ளெறிமலர்க் கணையு
முறு செயப்பெறு தொளிர்திரு மேனியோய்
கூறுபல் புகழ்வளர் குணங்குடி யானே
இயலுறு மன்புகொண் டெய்தினே சியார்க்கும்
யாவரு மதிநிலை யருள்செய நின்று

மண்ணுல கந்தனில் வழங்குகின் றனைநீ
விண்ணுல கந்தனில் விளங்குபொன் னெனவே.

(பொ-ரை) நீண்ட கூந்தலையுடைய பெண்களுடைய கண்களாகிய பாணமும், மன்மதன் எறிகின்ற புஷ்பபாணமும், கெடுதியை விளைவிப்பதற்காகாத திருமேனியை யுடையவனே! சொல்லுகின்ற பலகீர்த்தி வளர்கின்ற குணங்குடியானே! இலட்சணம் பொருந்திய அன்புடனே அடைந்தவர்கள் யாவருக்கும், சந்திரமண்டல நிலையை திருவருள் செய்ய விருந்து இவ்வுலகத்தில், தேவலோகத்தில் விளங்குகின்ற பிரகஸ்பதியைப்போல வழங்குகின்றனை. (எ-று)

பெண்களுடைய மாய்கையிற் சிக்காமல் பிரகஸ்பதி பகவானைப்போல் இவ்வுலகத்தாற்கு உபதேசஞ்செய்பவன் நீயேயாவாய் என்பது கருத்து.

நான் மணிமாலை - முற்றிற்று.

# ஐயாசாமி முதலியா ரவர்கள்பாடிய

## தோத்திரப்பா.

### எழுசீர்க்கழி நெடி லடி யாசிரிய விருத்தம்.

தண்ணுந கத்தின குணமழ லவிக்குந்
 தன்மையா யிருந்துமோர் கடத்தி
னண்ணிய போத வழலினுற் கொதித்து
 நலிவுறு நியாயம்போ லுடலில்
பண்ணிய வான்மா பொருந்தி யிந்தியத்தாற்
 பன்மையாய் விளங்குவ தல்லா
லெண்ணிய பந்த மாதிய வுளவோ
 வியம்பிடாய் குணங்குடி வாழ்வே.

(பொ-ரை) குணங்குடியில் வாழ்கின்ற மஸ்தான்சாகிபு அவர்களே! குளிர்ந்த ஜலத்தின் குணமானது நெருப்பை யவிப்பதாகவிருந்தும், அது ஒரு குடத்தில் சேர்ந்தபோது நெருப்பினுல் கொதித்து வருந்தும் நியாயத்தைப்போல், சரீரத்திலிருக்கின்ற ஆன்மா இந்திரியங்களாற் பன்மையாய் விளங்குவதல்லாமல் அதற்குப் பந்த முதலியவை உண்டோ? சொல்லாய். (எ-று)

ஜலமானது நெருப்பை யவிக்குங்குணத்தை தனி நிலையிலுடைய தேனும் ஒன்றில் லயப்படும்போது மாறுகுணத்தை யடைவதுபோல ஆன்மாவானது இந்திரியங்களால் வருந்துவதே யொழிய வேறல்ல என்பது கருத்து. (1)

மதிதன துருவிற் களங்கமில்லாமல்
 வான்மிசை யயக்குறப் புவியின்

விதமுறு சாயை யாற்களங் குளதாய்
விளங்குறுந் தகைமைபோ லான்மா
சதிசெயு மனதால் விகற்பசங் கற்பத்
தன்மைகொண் டியங்குவ தல்லா
லிதமகி தத்துட் சார்வன வுளவோ
வியம்பிடாய் குணங்குடி வாழ்வே.

(பொ-ரை) சந்திரனானவன் தன்னுடைய ரூபத்தில் களங்கமில்லாமல் ஆகாயத்தில் சஞ்சரித்தாலும், பூமியின் சாயையினால் களங்கமுள்ளதாகக் காணப்படுவதைப்போல, ஆன்மாவானது சதிசெய்கின்ற மனத்தினால் விகற்ப சங்கற்பங்களைக்கொண்டு விளங்குவதல்லாமல் இதமகிதத்தாற் சார்வனவுளவோ? இதை குணங்குடிவாழ்வே! நீயே சொல்லவேண்டும். (எ-று) (2)

மன்னிய படிக நிட்களங் கமதாய்
வயங்கினுஞ் சகசமாய்த் தோன்றுந்
தன்னிழற் சாயை யாற்கறுப் புளதாய்த்
தயங்குறுந் தன்மைபோ லான்மா
துன்னுமா ணவத்தி னாலபி மானச்
சுழலினின் றியங்குவ தல்லா
லின்னல்செய் துவித பேதம துளவோ
வியம்பிடாய் குணங்குடி வாழ்வே.

(பொ-ரை) நிலைபெற்ற படிகமானது நிஷ்களங்கமாய் விளங்கினாலும் சகஜமாகக் காணப்படுகின்ற தன்னுடைய நிழலின் சாயையால் அதினிடத்தில் கறுப்புள்ள தாகக் காணப்படுவதுபோல, ஆன்மாவானது நெருங்கிய ஆணவமலத்தினால் அபிமானமென்கிற காற்றில் சுழல்வதல்லாமல் அந்த ஆன்மாவுக்கு துன்பத்தைச் செய்கின்ற துவிதபேதமுண்டோ? இதை குணங்குடியில் வாழும் மஸ்தான்சாகிபே நீயே சொல்லவேண்டும். (எ-று) (3)

மாசிலா தொளிரும் பெருவெளி யாய
வானிடை நீனிற மதுதா
னேசுறு மித்தியா ரோபமாய்த் தோன்றி
யிலகுறு முறைமைபோ லான்மா
வாசுறு மவித்தியா மலசகி தத்தா
லவத்தையிற் றியங்குவ தல்லா
லீசனாஞ் சிவ னாகிநின் றுளவோ
வியம்பிடாய் குணங்குடி வாழ்வே.

(பொ-ரை) குற்றமற்று விளங்கும் பரிசுத்தத்தை யுடைய பெருவெளியாகிய ஆகாயத்தில் நீலநிறமானது மித்தியாரோபமாய்க் காணப்பட்டு விளங்குவதுபோல் ஆன்மாவானது அஞ்ஞான மல சகிதத்தால்

அவத்தையில் வருந்துவதல்லாமல் ஈசனென்றும், சீவனென்றும் இரண்டு பொருள் உண்டோ? அதை குணங்குடிவாழ்வே! நீயே திருவருள் செய்யவேண்டும். (எ - று) (4)

வானிடை யொளியைப் பரப்புமே பரிதி
மன்னிய சலத்தினுட் டோற்றி
லானதி னுருவ மச்சல மசைவி
னசைவுறுஞ் செய்கைபோ லான்மா
கானலை நிகர்த்த புனலிடை யந்தக்
கரணமோ டிலங்குவ தல்லா
லீனமாந் தனுவா தியபல வுளவோ
வியம்பிடாய் குணங்குடி வாழ்வே.

(பொ - ரை) சூரியனானவன் ஆகாசத்திலொளியை சலத்தினுட் பரப்பித் தானும் அதில் காணப்பட்டு, அந்தச் சலமானதசைய தானும் அதனுள் அசையுந் தன்மைபோல, ஆன்மாவானது கானலையொத்த புனலில் அந்தக் கரணமோடு விளங்குவதல்லாமல் அதற்கு இழிவாகிய சரீரம் முதலியவைகள் உளவோ? இதைக் குணங்குடிவாழ்வே! நீரே சொல்லவேண்டும். (எ - று) (5)

பகாரும் புனறன் னிறம்வெளுப் புடைய
பான்மையோ டிருக்கினும் பார்க்கிற்
சகசமாய்க் கரிய நிறமுற விளங்குந்
தன்மைபோ னித்திய வான்மா
தகையுறு மாயா மயக்கொடு தியங்கித்
தனைமறந் துறங்குவ தல்லா
லிகலுறு மமதை யகந்தைக ளுளவோ
வியம்பிடாய் குணங்குடி வாழ்வே.

(பொ - ரை) குணங்குடிவாழ்வே! சொல்லுதற்கரிய ஜலமானது தன்னுடைய நிறம் வெள்ளையாக விருந்தாலும், அது பார்க்கும்போது கறுப்பு நிறமாக விளங்குகின்ற தன்மையைப்போல, நித்தியமாக விருக்கின்ற ஆன்மாவானது மாயாமயக்கத்தோ டிருந்து தன்னை மறந்துறங்குவதே யல்லாமல் அதற்கு மமதையும் அகந்தையுமுண்டோ? அதை நீயே சொல்லவேண்டும். (எ - று) (6)

அழிவுறும் பிருதி வேகமா யிருந்து
மசலமே முதலிய பலநல்
லெழிலுறு முருக்க டோன்றிநின் றிலங்கு
மியற்கைபோ னித்திய வான்மா
வொழிவுறு நாம விதமுற நாம
ரூபமோ டுறைகுவ தல்லா

விழிவுறுஞ் சிருட்டி யாதிய வுளவோ
வியம்பிடாய் குணங்குடி வாழ்வே.

(பொ-ரை) அழியத்தக்க பிருதிவிபூதமானது ஒன்றுயிருந்தும் மலைமுதலிய பல வுருக்களாக நின்று விளங்குவதுபோல, நித்திய ஆன்மாவானது நானாவிதமான நாம ரூப விகற்பங்களை அடைவதல்லாமல் சிருஷ்டி முதலியவைக ளுண்டோ? ஆகையால் குணங்குடியில் வாழ்பவ ராகிய மஸ்தான் சாகிபே! நீங்களே சொல்லவேண்டும். (எ-று) (7)

வெள்ளைவா கனத்தின் விளங்குவெண் மதிதன்
மேற்பறந் தோடுதன் முகிலென்
றுள்ளுறத் தெளியா தொளிர்மதி யோடு
தெனச்சொலு முவமைபோ லான்மா
கள்ளவஞ் ஞான மாதிய வவத்தை
களுக்குள்ளாய்க் கலங்குவ தல்லா
லெள்ளுறுங் கொடிய சஞ்சல முளவோ
வியம்பிடாய் குணங்குடி வாழ்வே.

(பொ-ரை) ஆகாயத்தில் விளங்குகின்ற வெள்ளிய சந்திரனுக்கு மேல் மேகம் ஓடுவதை அறிந்துகொள்ளாமல் சந்திரனே ஓடுவதாகச் சொல்லுவதுபோல் ஆன்மாவானது கள்ளத் தன்மையுடைய அஞ்ஞானம் முதலிய அவஸ்தைகளுக் குள்ளாகக் கலங்குவதே யல்லாமல் குணங்குடி வாழ்வே! இகழத்தக்க கொடிய சஞ்சலமுண்டோ? இதைச் சொல்லவேண்டும். (எ-று) (8)

எங்கணு மாகா யம்புவி யாகி
யிருந்துமண் ணாதிய பலவின்
சங்கமாய் மறைபட்டதினதி னுருவாய்த்
தடித்தொளிர் தன்மைபோ லான்மா
பொங்கிய தாதான் மியத்திரை யதனுட்
பொருந்திநின் றிலங்குவ தல்லா
லிங்குள தங்கே யிலையென லாமோ
வியம்பிடாய் குணங்குடி வாழ்வே.

(பொ-ரை) ஆகாயமானது எங்குங் கலந்திருந்து மண் முதலிய பல ரூபத்தில் கலந்து மறைந்து அதினதின் ரூபமாகத் தடித் தொளிர்வது போல, ஆன்மாவானது பொங்கிய தாதான்மிய மென்னும் திரையிலிருந்து விளங்குவதல்லாமல், இங்கிருக்கிறது, அங்கேயில்லையென்று சொல்லலாமோ? இதைக் குணங்குடிவாழ்வே! நீயே திருவாய் மலர வேண்டும். (எ-று) (9)

சுடரில கியசெந் தீப்புகை யின்றிச்
சொல்லும்பிர காசமோ டிருந்து

மடருறும் விறகாற் புகையுள தாகி
யவிர்தரும் பான்மைபோ லான்மா
மடமையஞ் ஞான விருத்திபே தத்தான்
மாசடைந் திலங்குவ தல்லா
லிடர்பகை யுறவா தியதுய ருளவோ
வியம்பிடாய் குணங்குடி வாழ்வே.

(பொ-ரை) நெருப்பானது புகையின்றிப் பிரகாசமுடனிருப்பதாக விருந்தும், விறகினுற் புகையுண்டாவதுபோல் ஆன்மாவானது மடைமை, அஞ்ஞானம் முதலியவைகளின் விருத்தி பேதத்தால் மாசடைந்து விளங்குவதல்லாமல் இடர், பகை, உறவு முதலிய துன்பங்களுண்டோ? குணங்குடிவாழ்வே! நீயே சொல்லவேண்டும். (எ-று) (10)

நிந்தைசெய் மாயை யெனுங்கரு வியினு
னிகழ்தரும் ப்ரபஞ்சதே காதி
நந்தறு நானு விதமுறு ரூப
நண்ணிய நாமமா திகளை
மூந்துறக் கான னீரெனச் சிருட்டி
முதலிய தொழிற்பரப் பியது
னிந்திர சால மல்லவோ வுளவோ
வியம்பிடாய் குணங்குடி வாழ்வே.

(பொ-ரை) யாவராலும் நிந்திக்கப்படுகின்ற மாயை என்னுங் கருவியினுல் விளங்குகின்ற பிரபஞ்ச தேகாதிகள் நானுவிதமான நாமரூபங்களை கானற்சலம்போலப் பரப்பியது இந்திரசாலமோ? அன்றி, உண்மையாக உள்ளவோ? குணங்குடி வாழ்வே! இதை நீரே சொல்ல வேண்டும். (எ-று) (11)

என்னகத் திருக்கு மெனக்குணீ யுனக்கு
ளிருந்தநும் யானென்னை மறந்தே
யென்னகத் திருக்கு மெனையன்றித் தேடி
யெங்கெங்கு மோடியா னிளைத்தே
னென்னகத் திருக்கு மெனையன்றி யாவு
மிலையிலை யிலையென வறிந்தே
னென்னகத் திருந்து மெனக்கொளித் ததுவென்
னியம்பிடாய் குணங்குடி வாழ்வே.

(பொ-ரை) என்னுடைய மனத்தின்கண் ணிருக்கும் நீயும், உனக்குள் நானும் இருந்தோம். ஆனுல் நான் என்னை மறந்து எங்கெங்குமோடி யிளைத்தேன். ஆகையால் என்னுடைய மனத்தின்கண் ணிருக்கும் என்னையல்லாமல் யாவுமில்லை என்றுணர்ந்து இருப்பேன். அப்படிப்பட்ட

என்னுடைய மனத்தின்கண் இருந்தும் எனக்கு ஒளித்தது ஏன்? குணங்குடிவாழ்வே! நீயே திருவருள் செய்யவேண்டும். (எ-று) (12)

மாசிலா மணியே முனிவர்க ளிறையே
வள்ளலாய் வந்தகண் மணியே
தேசிக ளுகத் திரண்டுரு வெடுத்த
சித்தனே யொளிர்சிந்தா மணியே
ஈசனே தேசோ மயந்தந்தாட் கொண்ட
வென்னுயிர்க் குயிரதாந் துணையே
போசனே வாழி குணங்குடி வாழும்
பூரண மௌனதே சிகனே.

(பொ-ரை) மாசில்லாதமணியே! முனிவர்களுக்குத்தலைவனே! வள்ளலாக வந்த கண்மணியே! ஆசிரியனாகத் திரண்டு உருவெடுத்த சித்தனே! ஒளிர்கின்ற சிந்தாமணியே! ஈசனே! தேஜோமயத்தைக் கொடுத்து அடிமைகொண்ட என்னுயிர்க் குயிராகிய துணைவனே! போசனே குணங்குடிவாழும் பூரணத்தை யருளும் மௌனாசிரியனே! நீ வாழக்கடவை. (எ-று) (13)

இகபர மிரண்டி னுயிரினுக் குயிரா
யியங்கிய வாசியா மலரை
முகர்ந்தக மகிழ்ந்து நாதகீ தங்கண்
முழங்கிய பேரின்ப வீட்டிற்
சுகமுறச் சும்மா விருக்கவா வெனவென்
றுயர்பவக் கடல்கடப் பித்தாய்
புகழ்பிர காசக் குணங்குடிவாழும்
பூரண மௌனதே சிகனே.

(பொ-ரை) யாவராலும் புகழப்படுகின்ற தேஜோமயத்தையுடைய குணங்குடியில் வாழ்கின்ற பூரணத்தை யருளும் மௌனாசிரியனே! இம்மை, மறுமை, என்னும் இரண்டினுள்ளும் உயிர்க்குயிராய் விளங்கிய வாசி என்கிற மலரை முகர்ந்து மனஞ் சந்தோஷித்து நாத கீதங்கள் முழங்கிய பேரின்ப வீட்டின்கண் சுகத்தையடைய சும்மாவிருக்க, வாவென்று என்னையழைத்து உயர்ந்த ஜென்மமென்னுங் கடலைக் கடப்பித்தவனே! (எ-று) (14)

பெருகுமட் டாங்க யோகமெய்ஞ் ஞானப்
பேரின்பக் கடலமு தூட்டிக்
குருமணி யணிந்த மார்பினி லணைத்துக்
கொண்டுபின் முத்திதந் தவப்பாய்
மருவியென் றனக்கு ளிருந்தெனக் களித்த
வு ரசியாய் வந்திரு கலையின்

புரிமயச் சுடராங் குணங்குடி வாழும்
பூரண மௌனதேசிகனே.

(பொ-ரை) உயர்கின்ற அஷ்டாங்க யோகத்தையும், உண்மை ஞானப் பேரின் பக்கடலையும் எனக்குக் கொடுத்து நிறத்தோடுகூடிய ரத்தினத்தைத் தரித்திருக்கின்ற மார்பில் அணைத்துக்கொண்டு பின்னர் முத்தங்கொடுத்து சந்தோஷிப்பாய் எனக்குள் சேர்ந்திருந்து எனக்குக் கொடுத்த வாசியாய் வந்து இருகலைகளிற் செய்த சுடராகிய குணங்குடியில் வாழ்கின்ற பூரணத்தை யருளும் மௌனகுருவே! (எ-று) (15)

மூலத்து ளெழுந்த நாடிமூன் றுடனே
முயங்கிய நாதவா யுவினுட்
சீலமா முக்கண் குவித்தகக் கண்ணைத்
திறந்தொளிர் வாசியை நோக்கி
மேலுமே னடனச் சிலம்பொலி காண
விளக்கியெற் கின்னமு தளித்தாய்
போலுறு தடருங் குணங்குடி வாழும்
பூரண மௌனதே சிகனே.

(பொ-ரை) வெற்றிபெற்று விளங்குகின்ற குணங்குடியில் வாழ்கின்ற பூரணத்தையருளும் மௌனகுருவே! மூலாதாரத்தி லுண்டான மூன்று நாடிகளுடனே கலந்திருந்த நாதமாகிய வாயுவினுள் பரிசுத்தமாகிய முகத்திலுள்ள கண்களை மூடி மனக்கண்ணைத் திறந்து விளங்குகின்ற வாசியைத் தெரிசித்து மேலும் நடனஞ்செய்யுஞ் சிலம்பினது ஒளியைக்காண விளக்கி எனக்கு இனிமையான அமிர்தத்தைத் திருவருள் செய்தாய். (எ-று) (16)

கதிரில கியதூண் டாமணி விளக்கின்
கதிர்தரு மண்டப மதனுட்
டுதியுற விருத்தி யின்னமு தளித்துத்
துன்னுமேழ் பவத்தொடர் பகற்றித்
ததும்பறு தென்னைத் தயவுதந் தாண்டாய்
சச்சிதா நந்தநற் பரமாம்
பொதுமையா மின்பக் குணங்குடி வாழும்
பூரண மௌனதே சிகனே.

(பொ-ரை) கிரணங்கள் விளங்குகின்ற தூண்டாவிளக்கின் பிரகாசம் பொருந்திய மண்டபத்துள் யாவருந் துதிக்கும்படி என்னை யிருத்தி இனிமையாகிய அமிர்தத்தைக்கொடுத்து சத்த சாகரமென்னும் பிறவியையொழித்து என்னைமிகவும் பக்குவமாய் ஆண்டருள்செய்தாய், சச்சிதாநந்த தற்பரமாகிய பொதுமையான இன்பத்தைத் தருகின்ற குணங்குடிவாழும் பூரணமௌனதேசிகனே. (17)

குறிகுண தீத வகண்டிதா காரங்
　　கொண்டுளங் கனிந்தமு தொழுகிச்
செறிமணி நாத விளக்கினல் விளக்குந்
　　திகழ்சுழி முனையெனு மனைநின்
னெறிநிலை நிறுத்தி யென்னையாட் கொண்டாய்
　　நித்தனே நின்மலா னந்தப்
பொறிபொறித் துயருங் குணங்குடி வாழும்
　　பூரண மௌனதே சிகனே.

(பொ-ரை) குறிகுணதீத அகண்டிதாகாரத்தைக்கொண்டு மனமானது கரைந்து அமிர்தமொழுகி நாதமென்னும் விளக்கினல் விளக்குகின்றசுழிமுனை என்னும்வீட்டில் உன்னுடைய ஞானமார்க்கத்தை நிலைநிறுத்தி அடியேனை அடிமைகொண்டனை அழிவில்லாதவனே! நிர்மலானந்த மென்னும் பொறியைப் பொறித்து உயர்கின்ற குணங்குடியில் வாழும் பூரணமௌன சிரியனே! (எ-று) (18)

நண்ணிய சுவாச மெனும்பொரு ளதனை
　　நாளுக்கு நாட்குறைந் திடவென்
றெண்ணியே கொள்ளைக் களவுசெய் கள்வ
　　ரென்னுநால் வரையுமேபிடித்துத்
திண்ணுறும் வாசி நூல்விலங் களித்துச்
　　சிக்கெனச் சிறையினி லடைத்தாய்
புண்ணிய னென்னுங் குணங்குடி வாழும்
　　பூரண மௌனதே சிகனே.

(பொ-ரை) பொருந்திய வாசியென்னும் பொருளை நாளுக்கு நாள் குறையவென்று நினைத்து கொள்ளை களவு செய்கின்ற கள்வராகிய அந்தக் கரணங்களாகிய நால்வரையும் பிடித்து பலம்பொருந்திய வாசி நூலென்னும் விலங் கைப்போட்டு சிறையி லடைத்தாய் புண்ணியனென்று சொல்லப்படுகின்ற குணங்குடியில்வாழும் பூரண மௌனசிரியனே! (எ-று) (19)

உடலுயிர்க் குயிரா யுறைந்ததே பொருளென்
　　றுரையுவ மையுமிலா திறையைத்
திடமுறக் காத லாமல கம்போற்
　　றெளிவறத் தெளிந்தெனுட் காட்டிச்
சடமநித் தியம்பொய் பொய்யெனத் தேறுங்
　　காமளித் தாயிரு வினையைப்
பொடிபொடி யாக்குங் குணங்குடி வாழும்
　　பூரண மௌனதே சிகனே.

(பொ-ரை) சரீரத்தில் உயிர்க்குயிரா யிருந்ததே பொருளென்று சொல்லுகின்ற ஒப்பில்லாத தலைவனை, திடமுற கையில் நெல்லிக்கனி போல் தெளிவித்துக் காட்டி சரீரமானது அநித்தியம் ஆகையால் அது பொய் என்று தேர்ந்திருக்கும் திறமையை யளித்து ஆண்டாய் இருவினைகளையும் பொடிப்பொடியாய்ச் செய்யும் குணங்குடியில் வாழ்கின்ற பூரண மௌனதேசிகனே! (எ-று) (20)

சுத்தவட் டாங்க யோகமே காட்டிச்
சுடரினைத் துலங்கிடக் கூட்டிச்
சித்தசாஞ் சல்ய மின்றியுண் ணாட்டித்
திகழ்தரத் தெளித்தரு ளூட்டி
வத்துதா னென்னு நிலையினிற் பூட்டி
வருமம தைகளற வோட்டும்
புத்திதந் தாண்டாய் குணங்குடி வாழும்
பூரண மௌனதேசிகனே.

(பொ-ரை) சுத்தமாகிய அஷ்டாங்க யோகத்தைக் காட்டி தேஜோமயத்தை விளங்கக்கூட்டி மனவிகற்பமின்றி மனத்தில் நாட்டி திகழும்படி தெளிவித்து திருவருளை உண்பித்து உண்மைவஸ்து என்கிற நிலையைப்பூட்டி வருகின்ற மமதைகளை அறவே யொழிக்கின்ற திருவருளைக் கொடுத்த புத்தியைக்கொடுத்து ஆண்டருள் செய்தாய். குணங்குடியில் வாழ்கின்ற பூரணமௌனதேசிகனே! (21)

எந்தனு லறியப் படும்பொரு ளியாவு
மெனக்கநித் தியமென விசைத்து
மந்திர வைம்பத் தோரெழுத் ததனின்
மருவியா னினைவையு மறக்கத்
தந்திர மாக வோர்மொழி மொழிந்தாய்
தற்பரா னந்தமெய் யோகம்
புந்தியி னொளிருங் குணங்குடி வாழும்
பூரண மௌன தேசிகனே.

(பொ-ரை) எம்மால் அறியப்படும் பொருள்கள் யாவும் எனக்கு அநித்தியமென்று உபதேசித்து மந்திரமாகிய ஐம்பத்தோ ரெழுத்திற் கலந்து என்னுடைய நினைப்பை மறக்க தந்திரமாக ஒரு மொழியாகிய உபதேசத்தை மொழிந்தாய். தற்பராநந்த உண்மையோகமானது புத்தியில் விளங்குகின்ற குணங்குடிவாழ்கின்ற பூரண மௌன தேசிகனே! (எ-று)

உலகத்தில் தோன்றப்படும் பொருள்கள் யாவும் அநித்தியமென்பார், 'எந்தனுலறியப்படும் பொருளியாவுமெனக் கநித்தியமென விசைத்து' எனக்கூறினார். (22)

பிறிவிலா முகந்தாப் பணத்திரு மையினைப்
பெற்றுமோர் முகமெனு மதுபோற்
குறியிலாப் பரமே சீவுறைய் விளங்கும்
கொள்கையீ திரண்டல வெனவென்
னறிவினை விளக்கி யகண்டமாய் விளங்கு
மந்நெறி நெறியென நிறுத்தாய்
பொறுமைசே ரின்பக் குணங்குடி வாழும்
பூரண மௌனதே சிகனே.

(பொ-ரை) தன்னுடைய சரீரத்தை விட்டுப் பிரியா முகமானது கண்ணாடியில் இரண்டுருவைப்பெற் றிருந்தாலும் ஒரே முகமென்று சொல்லுவதுபோல குறிகுணமில்லாத பரவஸ்துவே வேறாய் விளங்குவதாகும். இது இரண்டல்ல என்று சொல்லி என்னுடைய அறிவை விளக்கி அகண்டமாய் விளங்குகின்ற அந்த மார்க்கத்தை ஒரு உயர்ந்த மார்க்கமாய் நிறுத்தவேண்டும். பொறுமையைப்பெற்றிருக்கின்ற இன்பத்தையுடைய குணங்குடியில்வாழும் பூரண மௌன தேசிகனே!
(எ - று) (23)

சணங்குடி நேய தந்தைதன் தாயார்
தன்மக்க ளொடுமனை வியினாற்
பணங்கொடு தேடும் பவக்கட னீந்திப்
பரவெளி யெனுமுப்பாழ் கடந்து
பிணங்கிடா திணங்கும் பின்னொடு முன்னிற்
பேரின்ப வீட்டினைக் காட்டும்
குணங்குடி வாழு மௌனதே சிகவெங்
குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம்.

(பொ-ரை) சமுசாரத்தில் விருப்பம், தந்தை, தாய், மக்கள், மனைவி இவைகளால் பணத்தைத் தேடுகின்ற சம்மக்கடல் நீங்கி பரவெளி யென்கிற முப்பாழைக் கடந்து பின்னும் முன்னும் பிணங்குகின்ற பேரின்பவீட்டைக் கூட்டுகின்ற குணங்குடியில் வாழும் மௌனாசிரியனும் எம்முடைய குருவுமாகிய மஸ்தான்சாகிபினுடைய திருவடிகளை எம்முடைய தலையின்கண் வைத்துக்கொள்வோம். (எ-று) (24)

# கீர்த்தனம்.

இராகம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

## பல்லவி.

அவனன்றி யோரணுவு மசையாதென்ப
தறியாயோ நெஞ்சமே.

(பொ-ரை) மனமே! அவன் என்னும் இறையவனலன்றி ஒரு அணுவும் அசையாதென்று முன்னோர்கள் சொல்லுவார்கள். இதை நீ அறியாயோ?

## அநுபல்லவி.

தவனின் றொளிருமறந் தாங்கி வளருமோன
தற்பர நித்யசிற் போதன் - மகி
ழற்புத மானவி நோதன் - என்று
செப்பு குணங்குடி நாதன் (அவனன்றி)

(பொ-ரை) தவமான திருந்து விளங்குகின்ற தருமத்தைப் பெற்று வளர்கின்ற மௌன தற்பர நித்திய ஞானபோதனும், மகிழ்கின்ற அற்புதமான விநோதனும், ஆகுமென்று சொல்லுங் குணங்குடி நாதனுமாவான். (எ-று)

## சரணங்கள்.

ஈயெறும் பாதி தொடாமலெந் நேரமு
மேதுக்கில் வாக்கையை நாடி - யதில்
நேய மதாகவே நீ யபி மானித்து
நின்றனை யேநிதந் தேடி - சுடுந்
தீயஞ்சும் வெஞ்சொல் லெனும்பொய் யுரைத்துத்
தியக்குறும் புண்ணிதக் கோடி - சற்றுந்
தூயதொன் றின்றிப் புவியிசை நின்றமூ
வாசையற் றோய்ந்துமெய் வாடி - யுழல்
மாயமொழிந்திடக் கூடி - யரு
ளீயுங் குணங்குடி நாதன். (அவனன்றி)

(பொ-ரை) ஈ, எறும்பு முதலியவைகள் தீண்டாதபடி எந்நேரமும் சரீரத்தை நாடி அதில் விருப்பம்வைத்து நிதமும் அதைக் காப்பாற்று நிமித்தம் அற்பமாய் நினைக்கக்கூடிய செல்வத்தைத் தேடி கொஞ்சமும் பரிசுத்தத்தை யடையாமல் உலகத்தி லிருக்கிறீர். ஆகையால், மூவாசைகளையும் விட்டு சரீரம் வாடி உழலுகின்ற மாய்கையானது ஒழியும்படி சேர்ந்து குணங்குடி நாதனவன் திருவருளைக் கொடுப்பான். ()

நன்மைவந் துற்றாலுந் தீமைவந் துற்றாலு
நானென்று நின்றுகொள் ளாமல் - நாளும்
புன்மை நிறைந்திடும் வாரியில் மூழ்கிப்
புதைந்தனை யேழைகள் ளாமல் - புகல்
இம்மை மறுமை யிரண்டற வொன்றா
தென்றதை யின்றேசொல் லாமல் - இகழ்
மன்னுந் தொழிற்செய நேர்ந்தனையோ கெடு
வாழ்விதென் றெண்ணியெள் ளாமல் - அகந்
தன்னைக் கடிந்துகிள் ளாமல் - நின்ற
தென்னே குணங்குடி நாதன். (அவனன்றி)

(பொ-ரை) நன்மை வந்தாலும், தீமை வந்தாலும், நானென்று வெளிப்படாமல், புன்மை யென்னும் சமுத்திரத்தில் மூழ்கி புதைந்தாய். இது ஏனோ? சொல்லுகின்ற இம்மை மறுமைகள் இரண்டற ஒன்றே யுண்டென்றதை இன்றேசொல்லாமல், இகழ்ச்சியை யடைகின்ற தொழிலைச் செய்ய விரும்பினை. அன்றி அது கெட்ட வாழ்வென்றெண்ணி அதை இகழாமல் அகத்தைக் கோபித்துக் கிள்ளாமலிருந்தது என்னகாரணமோ? குணங்குடிநாதனாகிய தலைவன். (எ-று) (24)

பொறியும் புலனுங்கு பூதமுங் கரணமும்
புகல்கா ணக்கடந் தோனே - மலைந்
செறிபுஞ்சஞ் சலமென்னும் பொருளும் வினையிரண்டுஞ்
செய்யுந் தொழிலுமிடந் தோனே - நல்ல
நெறியும் பலசமயக் குறிய நாதாந்தத்துண்
ணினையு நனவும்படர்ந் தோனே - யோகத்
தறியுங் குறியுந்துண் ணிறையும் பரவெளியி
நடருங் கடலில்நடந் தோனே - விட்டுப்
பிறியாத வருள்தொடர்ந் தோனே - எனக்
கறிவாங் குணங்குடி நாதன். (அவனன்றி)

(பொ-ரை) ஐம்பொறிகளும், ஐம்புலன்களும், பஞ்சபூத பேதங்களும் கரணங்களுமாகிய இவைகளைக் கடந்தவனே! மாய்கையாகிய சஞ்சலப்பொருளும், இருவினைகளுஞ் செய்யுந் தொழிலும் விட்டவனே! நல்லநெறியும் பல சமயங்களுடைய குறியும், நாதாந்தத்துள்ளே நினைவும், உள்ளவனே! யோக மார்க்கத்தி லுணருங் குறிகளையும் பரவெளியே உண்மையானதென்று அந்தக் கடலில் நடந்தவனே! விட்டு நீங்காத திருவருளைத் தொடர்ந்தவனே! எனக்கு அறிவாயுள்ள குணங்குடிநாதனே யாவான். (எ-று) (25)

## வேங்கடராயபிள்ளைக் கவிராயரவர்கள் பாடிய

# தோத்திரப்பா.

### அறுசீர்க்கழி நெடி லடி யாசிரிய விருத்தம்.

எல்லா மறிந்து மனமிலையோ
விரக்க மிலையோ வுன்னெஞ்சங்
கல்லாவுரைக்க வாயிலையோ
காண வருத்தங் கண்ணிலையோ
பொல்லா ரெனினு மடிமையென்று
புகுந்த வடியார் தமைக்காக்க
வல்லா யலவோ குணங்குடியாய்
வாழு மமுதே மகதேவே.

(பொ-ரை) கொடியவர்களாக விருந்தாலும் அடிமை யாவோமென்று அடைக்கலம் புகுந்த அடியார்களைக் காக்க நீ வல்லமையுடையவனல்லவோ? குணங்குடியில் வாழ்கின்றஅமிர்தமே! மகாதேவனே! நான் படும்பாடு எல்லாவற்றையும் நீ உணர்ந்தும் உனக்கு மனமில்லையோ? இரக்கமில்லையோ? உன்னுடைய மனசு கல்லா? சொல்ல வாயில்லையோ,என்னுடைய வருத்தத்தைக்காண கண் இல்லையோ?(எ-று)

மாவே தனையி லடியார்கள்
வருந்தப் பார்த்து மனமிரங்காக்
கோவே நினக்கு மெவர்கள்குணங்
குடியா னெனவும் பெயர்கொடுத்தார்
பூவே மணமே யுன்னமம்
பொருந்தும் வகைநீ புரியாயே
னீவே றெனவு முலகமெலா
நிந்தை கூறு மிதுநிசமே.

(பொ-ரை) அடியார்கள் படுந் துன்பத்தைப் பார்த்தும் மனமிரங்காக்கோவே! அப்படிப்பட்ட உனக்கு குணங்குடியானென்று பெயரிட்டவர்கள் யார்? பூவே! அதின் மணமே! உன்னுடைய திருநாமத்திற்குத் தகுந்த செய்கை நீ செய்யாவிட்டால் உலகத்தார்களெல்லாம் நீ வேறென்று உன்னை நிந்திப்பார்கள். (எ-று) (2)

வேத னிலையோ வரியிலையோ
வேணி யானு மிலையோ வோர்
நாத னிலையோ பலகோடி
நாமம் படைத்த தேவர்களும்

போத விலேயோ முறையிடிற்கேட்
போரு மிலேயோ பொருளிலேயோ
நீத மிலேயோ குணங்குடியாய்
நீயு மிலேயோ புகலாயே.

(பொ-ரை) பிரமன் இல்லேயோ? விஷ்ணு வில்லேயோ? சடைமுடியைத் தாங்கிய ருத்திரன் இல்லேயோ? வேறோர் தலேவன் இல்லேயோ? அநேககோடி திருநாமங்களே வைத்துக் கொண்டிருக்கின்ற தேவர்கள் இல்லேயோ? முறையிட்டுக்கொண்டால் கேட்பவர்கள் இல்லேயோ? பொருள்இல்லேயோ? நியாயம் இல்லேயோ? இவர்களெல்லாம் இல்லேயானுலும் நீயும் இல்லே ஆயினுயோ? குணங்குடியாய்! இதை நீயே சொல்லவேண்டும். (எ-று) (3)

தருண மறிந்துங் காவாய்நீ
தாணிமிசைநின் னடியார்க்குக்
கருணே புரியுங் குணங்குடியாங்
கடவு ளென்ப தழகேயோ
பெருகு மிலவு காததகிளி
பெறும்பே றதைன் பயன்கொளுவா
ரருமை யொடுநின் பதம்பாவி
யழுது கனியுந் தொண்டர்களே.

(பொ-ரை) அருமையாக உன்னுடைய திருவடிகளே வணங்கி அழுது மனங்கனிந்த தொண்டர்கள், பெருத்த இலவுகாத்த கிளியடையும் பேற்றை யல்லாது வேறெதைப் பெறுவார், ஆகையால் நீ சமயமறிந்துங் காவாய், என்றல், கருணேசெய்யுங் குணங்குடியானே! நீ கடவுளென்பது அழகாமோ? (4)

ஏச மனமும் வாவிலேயே
யீயார் புகழ்பே சாதுன்புகழ்
பேச மனமும வாவிலேயே
பெருகு பசிக்கு மோய்விலேயே
வாச மிலகு குணங்குடியாய்
வருத்து மிவையெல் லாமறக்கப்
பாச நமனும் வாவிலேயே
பாவி யடியேன் படுவதென்னே.

(பொ-ரை) வாசனேபொருந்திய குணங்குடியானே! உன்னே ஏச மனம் வரவில்லேயே; ஈயாத லோபிகளுடைய புகழைப் பேசாமல் உன்னுடைய புகழைப்பேசவும் மனம் வரவில்லேயே; வளர்ந்துகொண்டே யிருக்கிற பசிக்கும் ஒழிவில்லேயே; ஆகையால் இங்ஙனம் வருத்துகின்ற இவைகளே யெல்லாம் மறந்திருக்கப் பாசக்கயிற்ருற் கட்டிக் கொண்டு போகும் எமனும்வரவில்லேயே; ஆகையால் பாவியாகிய நான் படுந்துன்பம் என்னே! (எ-று) (5)

கல்லா ருறவும் பெரும்பசியுங்
 கழிந்து போகும் வகையுரைத்து
நல்லா ருறவு நின்பதமு
 நாயே னடையும் படிபுரிவா
யெல்லா ராலு மறியவொண்ணு
 விறைவா விந்த வேழையொடு
மல்லா டுவதென் குணங்குடியாய்
 வாழு மமுதே மகதேவே.

(பொ-ரை) யாவராலும் அறிதற்குக் கூடாத தலைவனே! குணங்குடியானே! அமிர்தம்போல்வானே! மகாதேவனே! கற்காதவருடைய உறவினையும், மிக்கபசியையும், கழிந்துபோகும் விதத்தை எனக்குச் சொல்லி நல்லவர்களுடைய உறவையும், உன்னுடைய திருவடிகளையும், நாயேன் அடையும்படி திருவருள்செய்வாய். (எ-று) (6)

அடியே னிந்நா ளுரைத்தவண்ண
 மாக விதையு மெண்ணியிருந்
திடிலார் கதிசொல் குணங்குடியா
 யெல்லாங் கடவு ளறியாதோ
கொடியா ரிடத்திற் சென்றுமனங்
 கூசிக் கைகா லலைந்தலைந்து
மடியாப் பிணம்போன் மடிவதற்கோ
 வகுத்தா னென்னைநான் முகத்தானே.

(பொ-ரை) குணங்குடியானே! அடியவனுகிய நான் இதுவரைக்குஞ் சொன்னதுபோல் இதையும் நினைத்துச் சும்மாவிருந்துவிட்டால் வேறு எனக்குக் கதியாவார் யார்சொல்? கடவுளுக்குத் தெரியாத தொன்றுண்டோ? அன்றி, என்னை கொடியவர்களிடத்திற் சென்று மனங்கூசிக் கை கால்கள் அலைந்தலைந்து மடியாத பிணத்தைப்போல் சாவதற்காகவோ பிரமதேவன் சிருஷ்டித்தான்? (எ-று) (7)

செய்யும் வகையுந் தெரியவில்லை
 தேவர் மனமுந் தெரியவில்லை
யையு மடையார் தமையடுத்துத்
 வாழ்த்தித் துதித்துப் பற்காட்டிக்
கையு மேற்க மனமுமில்லை
 கருத்து நிலையா நிற்கவில்லை
பெய்யுங் கருணைக் குணங்குடியாய்
 பேதை யேற்கோர் வழியருளே.

(பொ-ரை) கருணையைப்பொழிகின்ற குணங்குடியானே! எனக்கு செய்யும் விதமுந் தெரியவில்லை, தேவரீருடைய மனோபாவமுந் தெரிய வில்லை, வைகின்ற மடையர்களைச் சேர்ந்து வாழ்த்தித் துதி செய்து பற்களைக் காட்டி கை யாலெற்க மனமுமில்லை, மனமும் ஒருவிதமாக நிற்கவில்லை. ஆகையால் பேதையாகிய எனக்கு ஒருவழியை திருவருள் செய்யவேண்டும். (எ-று) (8)

சொந்த மிலையோ பன்னாளுந்
தொழுத திலையோ வடிமையெனும்
பந்த மிலையோ பிள்ளைகளைப்
படைத்த திலையோ வருந்துமவர்
சிந்தை யறியுஞ் செயலிலையோ
தேவா வாழுங் குணங்குடியாய்
மூந்த வினைகளைத்தடுக்க
முதல்வா வேண்டுந் தருணமிதே.

(பொ-ரை) தெய்வமாக வாழ்கின்ற குணங்டிகுயானே! சொந்தமி ல்லையோ? பலநாட்களாக வணங்கின தில்லையோ? நான் உனக்கு அடி மை என்னும் பந்தம் என்னிடத்தி வில்லையோ? பிள்ளைகளைப்பெற்ற தில்லையோ? வருத்தப் படுகின்றவர்களுடைய மனத்தையுணரும் செய் கையில்லையோ? இவைகளெல்லாம் உனக்கு இருக்குமாகையால் பூர்வ வினைகளைத் தடுக்க தலைவனே! இதுவே தருணமாகும் ஆகையால் இவைகளைத் தீர்த்தருளவேண்டும்.

பெரியோ ரெவரும் புகழ்ந்தேத்தும்
பெரிய வுனைப் பேதையனுந்
தெரியா வறிவு னேதேதோ
திகைத்துக் கவியாற் சொன்னவெலாஞ்
சரியா வுரைக்குந் துதியெனவே
தங்குமுனது மனங்கொண்டு
பரிவா யருளக் குணங்குடியாய்
பல்கா லுன்னைப் பணிவேனே.

(பொ-ரை) குணங்குடியானே! பல பெரியவர்கள் புகழ்ந்து துதி செய்கின்ற பெரியவனாகிய உன்னை, இந்த பேதையனாகிய அறிவில் லாத நான் ஏதேதோ மருண்டு பாடல் ரூபமாகச் சொன்ன எல்லாவற் றையுந் துதியாகவேகொண்டு பரிவுடன் எனக்குத் திருவருள் செய்ய நான் உன்னை பலதரமும் வணங்குவேன். (எ-று)

நீயே யீன்ற தாய்தந்தை
நீயே குருவி னெடுதெய்வ
நீயே யடியார்க் குதவுபொரு
ணீயே சமய மறியும்வஸ்து

நீயே ஞான நெறிவிளக்க
  நீயே விளக்குங் குணக்குன்ற
நீயே யெங்கு குணங்குடியாய்
  நிறைந்திவ் வடியைக் காப்பதுவே.

(பொ-ரை) குணங்குடியானே! நீயே என்னைப் பெற்றெடுத்த தாய்தந்தையரும், நீயே குருவுந்தெய்வமும், நீயே அடியவர்களுக்கு உதவுகின்றபொருளும், நீயே பல சமயத்தார்களாலும் அறியப்படும் வஸ்துவும், நீயே ஞானமார்க்கத்தின் விளக்கமுமாக விளங்கும் குணக் குன்றுமாக விளங்குவாய் ஆகையால் நீயே என்னுடைய உள்ளத்தில் நிறைந்து காப்பவனுமாவாய். ()

சபாபதி முதலியா ரவர்கள் பாடிய

# பஞ்சரத்தினம்.

அறுசீர்க்கழி நெடி லடி யாசிரிய விருத்தம்.

ஏர் பூத்த நயமுகமு மருள் பூத்த விருவிழியு
  மெழிற்செவ் வாயும்
தார்பூத்த மணிமார்பு மடியாரைப் பரிந்தணைத்துத்
  தாங்குங் கையு
நீர்பூத்த மலர்த்தாளுங் கண்டெளியேன் தொழுவதென்றோ
  நிகழ்த்தல் வேண்டுஞ்
சீர்பூத்த சென்னையில்வாழ் குணங்குடியே மெய்ஞ்ஞான
  தேவ தேவே

(பொ-ரை) சிறப்புப் பொருந்திய சென்னையின்கண் வாழ்கின்ற குணங்குடியானே! மெய்ஞ்ஞானத்தையுடைய தேவர்களுக்குத் தேவனே! உன்னுடைய அழகுபொருந்திய நயமுகமும், திருவருள்பூத்த இருகண்களும், அழகிய செவந்த வாயும், மாலையைத் தரித்த மார்பும், அடியவர்களை விரும்பி அணைத்துத் தாங்குங் கைகளும், நீரில் பூத்திருக்கின்ற தாமரைமலர்போலுந் திருவடிகளும், ஆகிய இவைகளை ஏழையாகிய நான்கண்டு தொழுவது என்றைக்கோ? அதை தேவரீரே! திருவருள் செய்யவேண்டும். (எ-று) (1)

வையமதி லெனக்கெனவந் திடும்பாழாங் கொடியவிருண்
  மாயை நீங்கத்
துய்யவினை தருமேணுக்கே விளக்கெனவந் தடுத்தினியுன்
  றுணைத்தா ளல்காய்
மெய்யடியா ருளத்தின்முளைத் திடுகரும்பே மதுரமெல்லாம்
  விளைந்த தேனே
செய்யமணிச் செழுஞ்சுடரே குணங்குடியே மெய்ஞ்ஞான
  தேவதேவே.

(பொ-ரை) உண்மையடியார்களுடைய உள்ளத்தின்கண்முளைத்த கரும்பே! சர்வமதாரங்களும் விளைக்கிருக்கின்றதேனே! செவந்த மணிபோலுஞ் செழுஞ்சுடரே! குணங்குடியானே! மெய்ஞ்ஞானத்தை யுடைய தேவர்களுக்குத் தேவனே! இவ்வுலகத்தின்கண் எனக்கென்று வந்திருக்கின்ற கொடிய பாழாகிய அஞ்ஞான மாயையானது நீங்க பரிசுத்தமாகிய உன்னுடைய திருவருள்நோக்கத்தையே விளக்காகக் கொண்டுவந் தடைந்தேன். ஆகையால் இனி உன்னுடைய திருவடிகளைத் திருவருள்செய்யவேண்டும். (எ-று) (2)

பாவநெறிக் குடன்படுத்து மடமாதர் மயக்கில்விழும்
  பாதகனேனை
வாவெனநின் றிருநோக்கா லழைத்திடுத லெந்நாளோ
  வழுத்தல் வேண்டு
மாவலுறும் பழவடியா ருன்னுகின்ற பொருளனைத்து
  மளிக்க நாளுந்
தேவதரு வாய்விளங்குங் குணங்குடியே மெய்ஞ்ஞான
  தேவ தேவே.

(பொ-ரை) ஆசைகொள்ளுகின்ற பழவடியார்கள் நினைக்கின்ற சர்வ பொருள்களையும் கொடுக்க தினமுந் தேவதாருவாய் விளங்குங் குணங்குடியானே! மெய்ஞ்ஞானத்தையுடைய தேவர்களுக்குத் தேவனே! பாவத்தில் செலுத்துகின்ற பெண்கள் மாய்கையில் வீழ்கின்ற பாதகனாகிய என்னை, வாவென்று உன்னுடைய திருவருட் கண்பார்வையினால் அழைப்பது எந்த நாளோ? அதைத் திருவருள் செய்யவேண்டும். (எ-று) (3)

பருதிதேர்ப் பாகனைவந் திருளணுகு மோநினது
  பதுமத் தாளைக்
கருதுமடி யவர்கள்சூழாத் திருக்குமெனை யஞ்ஞானங்
  கலபப துண்டோ
சுருதிகளு முணர்வரிய பரம்பொருளே யேழுவகைத்
  தோற்றத்திற்குந்
திருதியாய் நின்றளிக்குங் குணங்குடியே மெய்ஞ்ஞான
  தேவ தேவே.

(பொ-ரை) வேதங்களாலும் உணர்வதற் கருமையான பரம்பொருளே! எழுவகைத் தோற்றத்திற்குந் திருதியாயிருந்து திருவருள்செய்யுங் குணங்குடியானே! மெய்ஞ்ஞானத்தையுடையதேவர்களுக்குத் தேவனே! சூரியனுடைய தேர்ப்பாகனை இருளானது வந்து சேருமோ? சேராது. அதுபோல, உன்னுடைய திருவடிகளை நினைக்கின்ற அடியார்களுடைய கூட்டத்திலிருக்கும் என்னை அஞ்ஞானமானது சேர்வது உண்டோ? (எ-று) (4)

தொல்வினையாந் திரையெறியும் பவக்கடலிற் சுழலுகின்ற
  துரும்ப னேற்குக்

கல்வியினைத்தந்தரிய ஞானவழி காட்டலுன்றன்
கடமை யையா
பல்வளஞ்சேர் சென்னைநக ருறைவாழ்வே பேரின்பப்
பரமா நந்தச்
செல்வமே தவப்பேறே குணங்குடியே மெய்ஞ்ஞான
தேவ தேவே.

(பொ-ரை) பலவளப்பங்களும் நிறைந்திருக்கின்ற சென்னை நகரத்தின்கண் வாசஞ் செய்கின்றவாழ்வே! பேரின்பத்தையுடைய பரமாநந்த செல்வமே! தவப்பேறே! குணங்குடியானே! மெய்ஞ்ஞானத்தையுடைய தேவர்களுக்குத் தேவனே! பூர்வவினையாகிய அலைகளை வீசுகின்ற ஜெந்மசமுத்திரத்தில் சுழல்கின்ற தமியனேனுக்கு கல்வியைய கொடுத்து அருமையாகிய ஞானவழியைக்காட்டுவது உன்னுடைய கடைமையாகும். (எ-று) (5)

—(*)—

செய்கப்துல்காதிர்நயினர் லப்பை அவர்கள்பாடிய

## ஒருபாவொருபஃது.

### பதினன்குசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அருவுருவ முருவுருவ மிருவுருவ முடனமையு
மடனுலவை யெரிய முனுமேல்
அறைபுனலும் விரிமணலு மறைவெளியு மெனவிவைகள்
அணுவினணு வினுமளவிலா
மருவுருவ மலைகடலு மெழும்புடவி படர்ககனு
மதியினொடு கதிரவியும்
மணியினிதி யுலகுமெரி நாகுமவண் முயலமார்
வகையுமிவை நனிபல னுமுறஉம்
ஒருவுருவ மனுவுமெதிர் பகையுறவு கணமும்மை
ஒருவனருள் பெருகு நபிகள்
உரையொழுகி வருமுதிய வரிஞரிலு முயர்பதவி
யொலிகளென நிலைமை புரிவீர்
வொருவுருவ முளமுடைய நமதடியர் துயரகல
விழிகருணை யாளுக் கியே
வேதா குணங்குடியி றுதா வருந்தவ
விநோதா புரந்த ருள்கவே.

(பொ-ரை) அரூபம், ரூபம் ரூபாரூபமாகிய இவைகளுடன் பொருந்திய காற்று, எரிகின்ற தீ, சொல்லப்படுகின்ற ஜலம், விரிந்தமணல் சொல்லப்படுகின்றவெளியும் ஆகியஇவைகளினுடையஅணுவின் அணுவிலும்

அளவில்லாத உருவத்தையுடைய மலைகளிலும், கடலிலும், பலம் பொருந்திய உலகத்திலும், எங்கும் பரவியிருக்கின்ற ஆகாயத்திலும், சந்திர சூரிய மண்டலங்களிலும், குபேரலோகத்திலும், அக்கினிலோகத்திலும், நரகத்திலும், அவ்விடங்களில் வாழ்கின்ற தேவர்களும், ஆகிய இவைகள் மிகுந்த பலனையடையும் ஒப்பற்ற உருவத்தையும், மறுக்களை எதிர்பொருது முருவத்தையும், க்ஷணத்தில் நிருமிக்கும் ஆற்றலுள்ள ஒருவனுடைய திருவருளானது மிகுதியும் பெற்றிருக்கின்ற நபிமார், சொற்களால் துதிசெய்துவருகின்ற மிக்கதரித்திரர்களானாலும் செல்வவான்களாக செய்விப்பீர். ஆகையால் வேதாவென்னுந் திருநாமத்தையுடைய பிரமனே! குணங்குடி என்னுந் திவ்வியக்ஷேத்திரத்தில் வாழ்கின்ற தலைவனே! அருமையாகிய தவத்தைச் செய்கின்ற தவவிநோதனே! நீர் பயந்து வருந்துகின்ற மனத்தையுடைய உம்முடைய அடியார்களுடைய துன்பங்களொழிய திருக்கருணைக் கண்ணால் பார்த்து கப்பாற்றி யருளவேண்டும். (எ-று) (1)

காணாத நீர்கான லாணுகு மாறுய
 காலோக மாமா யையும்
காயாது பூவாது தானேக மாயோடு
 காலேற'வாவா னதும்
நாணாது கோணாது நானேய லாதேதெ
 ணுவாணு வாகா ரமும்
நாடாத பாலோடி யூடாடு தீவேக
 நாயோடு பேயா னதும்
தோணாது பாழாக மேலேகு மான்மாக
 ரூபாகி சாலோ கமெய்
சூழாத சாமீப சாரூப மாய்வாழி
 தூய்தான மேல்வாழ் குவீர்
வீணான வீணாள ராகாம னோராக
 விழிகருணை யாணேக் கியே
வேதா குணங்குடியி னுதா வருந்தவ
 விநோதா புரந்த ருள்கவே.

(பொ-ரை) கண்களுக்கு நீர்போல் காணப்படும் கானலைப்போன்ற உலகமாயையும், காயாமலும், பூவாமலும், தான் ஒன்றேயாய், பிராணவாயுவோடு ஆசையுங்கலந்து, யாதொருநாணமும், அதனாற் கோணுதலுமில்லாமல், நானேயல்லாமல் வேறுபொருள் இல்லையென்கிற ஆணவமானது தொடர, பல விடங்களிலுஞ் சென்று ஊடாடும் ஆன்மாவானதிருந்து வாழ்தற்குரிய கூடாகிய சரீரமானது நாய்க்கும், பேய்க்கும் இரையாக வெளிப்பட்டுச் சென்ற ஆன்மாவானது சொரூபத்தை யடைந்து சாலோகம், சாமீபம், சாரூபம், என்னும் பதவிகளிற் சுகமாக வாழக்கடவதென்று பரிசுத்தமுள்ள மேலிடத்தில் வாழ்

வீர்கள். ஆகையால் வேதாஎன்னுந் திருநாமத்தையுடைய பிரமனே! குணங்குடி என்னூர் திவ்வியக்ஷேத்திரத்தில் வாழ்கின்ற தலைவனே! அருமையாகிய தவத்தைச்செய்கின்ற தவ விநோதனே! நாங்கள் வீணர்களாய் விடாமல் நேராக திருக்கருணைக் கண்ணால் பார்த்துக் காப்பாற்றி யருளவேண்டும். (எ-று) (2)

துதிமொழிக ளோயாது மனவுறுதி சாயாது
தொழுகைநிலை மாயா துசிர்
தொடர்நியம மாடாது விரதமுறை கோடாது
சுருதிநயம் வாடா துமேல்
குதிகொள்வினை காணாது கசடுபல பூணாது
கொடுமைவலி வேணா துவீண்
குலவுநடை பாவாது பலபொருளின் மேவாது
கொலைகளவு தாவா துநேர்
அதிகருண மாயோக தவமுயலு மேலோர்க
ளருமையொடு மாறா துநும்
அடியிணைக ளேசூடி யினியபல பேறுன
தணிபவர்க ளேகோ டியே
விதிமறையி னாலாளு மொருவனரு டானை
விழிகருணை யானோக் கியே
வேதா குணங்குடியி னாதா வருந்தவ
விநோதா புரந்த ருள்கவே.

(பொ-ரை) சதா துதிக்கின்ற சொற்கள் ஓயாமலும், மனவுறுதி கெடாமலும், தொழுகைநிலை அழியாமலும், நியமங்கள் தவறாமலும், விரதமுறை பிசகாமலும், வேதநெறி தவறாமலும், வினைகளைச் செய்யாமலும், கசடுகளை மேற்கொள்ளாமலும், கொடுமைகளை வலிந்து கொள்ளாமலும், வீண்காரியங்களிற் பிரவேசியாமலும், பல பொருள்களிலும் ஆசை செல்லாமலும், கொலை, களவுகளைச் செய்யாமலும், மிக்க நற்குணத்துடன் மகாயோகத்தையுந் தவத்தையுஞ் செய்கின்ற பெரியோர்கள் இடைவிடாமல் உம்முடைய திருவடிகளையே சூடி பல உயர்பதவிகளைப் பெற்றவர்கள் அநேக கோடிபேர்களாவார்கள். ஆகையால், வேதா என்னுந் திருநாமத்தையுடைய பிரமனே! குணங்குடி என்னுந் திவ்வியக்ஷேத்திரத்தில் வாழ்கின்ற தலைவனே! அருமையாகியதவத்தைச் செய்கின்ற தவ விநோதனே! விதித்திருக்கின்ற வேதங்களால் ஆண்டருள் செய்கின்ற கடவுளுடைய திருவருளைப் பெற்ற திருக் கருணைக் கண்ணால் பார்த்து காப்பாற்றி யருள வேண்டும். (எ-று) (3)

மனுநீதி யுணராத பெருமூடர் முதியோர்கள்
மரியாதை தெரியா தவர்

மதிவேறு மொழிவேறு பொருள்வேறு படுவார்கள்
மலிகோர நிறைநா வினர்
சினமூறு மனமாய மறியார்கள் குறியாத
சிறியோர்கள் வெறியாள் பவர்
திருமாது பகையாளர் மலர்மாது வசையாளர்
திறமாது மறமாள் பவர்
துனிசேரு நடையாளர் பெரியோர்க ளடையாளர்
துயர்வாழு மிடையாளர்கள்
தொழுதாலு மகலாத கெடுபாவ முடியார்கள்
சுகமேது பெறுவார் களோ
வினவாத வினையாவு மொருபோது மணுகாமல்
விழிகருணை யாளுக் கியே
வேதா குணங்குடியி னுதா வருந்தவ
விநோதா புரந்தருள்கவே.

(பொ-ரை) மநுதர்ம சாஸ்திரங்களை யுணராத பெரிய மூடர்களும், பெரியோர்களும், மரியாதை தெரியாதவர்களும், புத்திவேறு, பொருள்வேறு, சொல்வேறுபடுபவர்களும், மிகுந்த கோர நிறைந்த நாவையுடையவர்களும், கோபமானது சுரக்கின்ற மனத்தின் மாயத்தை யறியாதவர்களும், சிறியோர்களும், வெறியாளர்களும், லட்சுமி தேவிக்கு விரோதிகளும்; சரஸ்வதியைப் பழிக்கின்றவர்களும், வீரலட்சுமியின் வெற்றியை ஆள்பவர்களும், துர்நடவடிக்கைகளை யுடையவர்களும், பெரியோர்களை யடையாதவர்களும், துன்பமே குடிகொண்டவர்களும், வணங்கினாலும் நீங்காதகொடிய பாவமுடையவர்களுமாகிய இவர்கள் என்ன சுகத்தைப்பெறுவார்கள்? ஆகையால் வேதா என்னுந் திருநாமத்தையுடைய பிரமனே! குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் வாழ்கின்ற தலைவனே! அருமையாகிய தவத்தைச்செய்கின்ற தவவிநோதனே! நீர் காப்பாற்றி யருளவேண்டும் (எ-று) (4)

போாத வன்புடைய தாய்தந்தை தந்துணைவர்
போராசை தந்தமனையார்
பேருன மைந்தர்புடை சூழ்சால் பெருங்கிளைஞர்
போரா நிறைந்த வுறவார்
ஆரா யிருந்திடினு மாராரு வந்திடினும்
ஆதார மொன்று மிலையால்
ஆகாத வன்செயலி னாலே யெதிர்ந்தவினை
யாடாத கன்றொழியமேற்
சாராதுவெம்பவ மெலாமோடே வெங்கணிலை
தாழாதி கம்ப ரமுநீர்

தாமாக நின்றருளி னுள்வீர்க ளென்றுமது
சார்பாயடைந்த வெளியேம்
வேராதி கொண்டமணமார்பா விரிந்தமலர்
விழிகருணை யானோக்கியே
வேதாகு ணங்குடியி னுதாவருந்தவ
விநோதா புரந்த ருள்கவே.

(பொ-ரை) நீங்காத அன்புடைய தாய் தந்தையர்களும், தம்முடைய சிநேகர்களும், மிக்க ஆசையைக்கொடுத்த மனைவியும், பெருகிய பிள்ளைகளும், சூழ்ந்திருக்கின்ற பெருஞ் சுற்றத்தார்களும், ஆகிய இவர்களில் யாரிருந்தாலும், யார் சந்தோஷித்தாலும், யாதொரு ஆதாரமில்லையாகும். ஆகையால் செய்யக்கூடாத கொடிய செய்கைகளினுல் எதிர்த்து வந்த வினையானது யாதொரு துன்பத்தையும் விளைவிக்காமல் ஒழியவும், கொடிய பாவங்களெல்லாம் விட்டோடவும், எங்களுடைய நிலையானது கீழ்ப்படாமல் இம்மையிலும், மறுமையிலும், நீரேயிருந்து ஆண்டருள் செய்வீர்களென்று உம்முடைய சால்பாக அடைந்திருக்கின்ற ஏழையோங்களை வாசனை பொருந்திய வேர் மாலையையணிந்த மார்பையுடையவனே! வேதா என்னுந் திருநாமத்தை யுடைய பிரமனே! குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் வாழ்கின்ற தலைவனே! அருமையாகிய தவத்தைச் செய்கின்ற தவ விநோதனே! திருவருட்பார்வையாற் பார்த்துக் காப்பாற்றி யருளவேண்டும். (எ-று)

சுற்றிப் பிடித்தகொடி யொத்துப் பெருத்தபல
சுற்றத்தார் மற்று ளர்களும்
துக்கச் சுகித்துடை யுடுக்கத் தரிக்கநகை
சுட்டுத் தடுத்தி டுதலால்
பற்றித்தொடத் தொடுமு னெய்த்துப் பசப்புமெழில்
பச்சைக் கிளிக்கு தலையார்
பட்சத் திடத்துயிர்த்தி கைப்பச் செறுத்தறிவு
பட்டுப் புறப்படுதலால்
எற்றித்தவத்தினைமு றித்துக் கருத்தினை
யெடுத்துக் குலப்ப கையைமேல்
எட்டிப் பிடிக்கமதி யற்றுப் பவத்தொழி
விழைத்துப் பிழைத்து ழல்வரோ
வெற்றிக் குணக்குரிசி லெத்திக்கு மெய்ப்பதிறை
விழிகருணை யானோக் கியே
வேதாகு ணங்குடியி னுதா வருந்தவ
விநோதா புரந்த ருள்கவே.

(பொ-ரை) சுற்றிப் பிடித்திருக்கின்ற கொடியைப்போல மிகுந்திருக்கின்ற பல சுற்றத்தார்களும், மற்றுமுள்ளவர்களுஞ் சூழ்ந்திருக்க

வும், துக்கத்துடனும், சுகத்துடனும் ஆடை யுடுக்கவும், நகை தரிக்க வுங்கண்டு மாய்கையானது தடுப்பதால் பிடித்துத் தொடு முன்னே இளைத்துப், பசப்பும் அழகையுடைய பச்சைக்கிளியை யொத்துப் பேசுங் குதலைச்சொல்லையுடைய பெண்களுடைய பக்கத்தில் சென்று உயிரானது திகைப்ப அறிவானது கெட்டுப் புறப்படுவதால் தவசினைக் கெடுத்துக் கருத்தினை யழித்து உயர்ந்தபகையை மேலுக்குமேல் அதிகப்படுத்தி மதிகெட்டு பாவமாகிய காரியத்தைச் செய்து பிழைத்துப் பெரும்பாலார் திரிகின்றார்களே; ஆகையால் ஜெயம்பொருந்திய குணத்தையுடைய தலைவனே! வேதா வென்னுந் திருநாமத்தையுடைய பிரமனே! குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் வாழ்கின்ற தலைவனே! அருமையாகிய தவத்தைச் செய்கின்ற தவவிநோதனே! என்னைக்காப்பாற்றி யருளவேண்டும். (எ-று) (6)

முன்பொன்றி நின்று றுதி யின் சிந்தை விந்தையின்
மொழிந்தண்டு கின்ற முதியோர்
மூங்கும் பெருந்துறைபி ருந்தங் கெழும்புகழ்
முகந்திங் கிதம்பொ ழியவே
அன்பொன்று கின்றபல னன்றன் றுவந்துமகிழ்
வங்கம் பெறுந்த கையுளார்
அந்தந்த மன்பதைக ளும்பந்த முங்குளிர்
அகங்கொண்டு வந்து தொழவே
என்பொன்று மின்பநிலை கண்கண் டிழிந்தகுண
மெங்குங் கடிந்த ரசர்கள்
எம்பந்த மெம்பொருள்கள் நுந்தஞ்ச மென்றடியி
னென்றுஞ் சரண்பு குதவே
மின்பொன் றுலங்குகுண நன்கின் றருங்குரிசில்
விழிகருணை யானோக் கியே
வேதா குணங்குடியி னுதா வருந்தவ
விநோதா புரந்த ருள்கவே.

(பொ-ரை) முன்னதாகச் சேர்ந்து இருந்து உறுதியான மனத்தின் விளைகின்ற விந்தையினைச் சொல்லி அடைகின்ற பெரியோர்கள் நிறைந்து வாழும் பெருந்துறையிலிருந்து அங்கு உண்டாகின்ற கீர்த்தியைப் பெற்று நன்மையானது மேன்மேலும் விளங்க அன்பு கலக்கின்ற பலனானது நன்மையை யுடையதென்று மகிழ்கின்ற பெருந் தன்மையை யுள்ளவர்கள் அந்தந்த உயிர்களும் தங்கள் தங்களுடைய பந்தங்கள் ஒழியும்படி நல்லுள்ளத்தால் வந்து வணங்க, எலும்போடுகூடச் சம்பந்தப்பட்ட இன்பத்தால் இழிந்த குணங்களை அறவே யொழித்து இராஜாக்களெல்லாம் இது எம்முடைய பந்தம், இவை எம்முடைய பொருள்கள், உங்களுடைய தஞ்சமென்று உமது திருவடிகளில் சரண

த்தையடைய மின்போலும் விளங்குகின்ற நற்குணத்தை கொடுக்கி ன்ற அருமையாகிய குரிசிலே! திருவிழிக் கருணையால் பார்த்து வேதா என்னுந் திருநாமத்தையுடைய பிரமனே! குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் வாழ்கின்ற தலைவனே! அருமையாகிய தவத்தைச்செ ய்கின்ற தவவிநோதனே! நீ காப்பாற்றி யருளவேண்டும். (எ-று) (7)

பாற்றேட்டைத் தேத்திரளை மாச்சோற்றைச தீக்கனிகள்
பாற்சோற்றைத் தேட்டமதுபோல்
பார்த்தூட்டற் கேய்ப்பவறி வாற்றேக்கித் தேற்றநெறி
பாற்சேர்த்துக் காத்தி டுதலால்
காற்றேட்டக் கேத்திரமெய் மேற்போக்குக் கீழ்க்கழிவு
காற்பச்சற் பூட்டி நடுவிற்
காப்பாக்கக் கோட்டைவெளி கூத்தாட்டுக் கோட்பைநனி
காப்பாற்றிக் காட்டு தலினால்
தோற்றாட்கிக் காக்கியது பார்ப்போர்க்குப் பார்க்கரிய
தோப்பாய்க்கத் தாத்த தாய்த்
தூர்த்தாங்கிற் பூத்தநனி காய்த்தாக்கத் தாற்குலவு
சூழ்ப்பேட்டைப் போக்கி டுதலால்
வேற்றேட்டத் தோற்றாவு கூத்தோட்டிப் போற்றிசெய
விழிகருணை யாலேக் கியே
வேதாகு ணங்குடியி னுதா வருந்தவ
விநோதா புரந்த ருள்கவே.

(பொ-ரை) பால் தேட்டையும், தேத்திரளையும், மாச்சோற்றை யும், மதுரமிக்க கனிகளையும், பாற்சோற்றையும் தேடிவைத்த பொரு ளைப்போலப் பார்த்து ஊட்டுதற்கு ஒப்பாக, அறிவினால் தேக்கி தெளி வாகிய மார்க்கத்திற் சேர்த்துக் காப்பாற்றுவதால், காற்றோட்ட கேத் திரமாகிய சரீரத்தின் மேல் மேற்போக்கு கீழ்க்கழிவு காற்பாய்ச்சல் இவைகளைப்பூட்டி, நடுவே காப்பாக கோட்டை வெளியிலே கூத்தாட் டுக் கோட்டையை மிகவுங் காப்பாற்றிக் காட்டுதலினால், பார்ப்போர் களுக்கு நற்றகைமையை யுடையதாய் ஆக்கத்தா லுண்டாகும் சூழ்கி ன்ற பேட்டை போக்குவதால் நீர் திருக் கிருபைக் கண்ணாற் பார்த்து வேதா என்னுந் திருநாமத்தை யுடைய பிரமனே! குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் வாழ்கின்ற தலைவனே! அருமையாகிய தவத்தைச் செய்கின்ற தவவிநோதனே! நீ காப்பாற்றி யருளவேண் டும். (எ-று) (8)

வையமொரு கையினுற மெய்யில்கள் பொய்யினுற
மையல்வலை பெய்யு மடவார்
வள்ளியிடை கிள்ளுமுலை வெள்ளைவிழி துள்ளவரு
வள்ளமுறு கள்ளை விடலால்

பையமதி தொய்யவறி வுய்யவுணர் வையவெறி
  பையிலிடு கைய தனினுல்
பள்ளமிகு வெள்ளமிசை தள்ளவிழு முள்ளழிகொள்
  பள்ளையர்த முள்ள நிலையாத்
துய்யமகள் செய்யமகள் மெய்யின்மகள் கையின்மகள்
  தொய்யிலணி வைய மகளும்
துள்ளிமல ரள்ளியெதிர் கொள்ளுமதுபள்ளியிடை
  துள்ளிவிசை தெள்ளி யுறலால்
வெய்யவினை நையவருள் செய்யுமன தையநிறை
  விழிகருணை யானேக் கியே
வேதாகு ணங்குடியி ஞதா வருந்தவ
  விஞேதா புரந்த ருள்கவே.

(பொ-ரை) பதினுன்கு லோகங்களும் ஒரு கையிலிருக்கவும், சரீர லட்சணங்கள் பொய்யாகவும், மாய்கை என்னும் வலையை வீசுகின்ற பெண்கள் மாய்கையிற் சிக்கி வருந்துவதால், இனி, மேற்படி பெண்களுடைய மாய்கையிற் சிக்காமல் என்னுடைய கொடிய வினையானது நைய, திருவருள்செய்கின்ற என்னுடைய தலைவனே! நிறைந்த கிருபைக் கண்ணுற் பார்த்து வேதா என்னுந் திருநாமத்தையுடைய பிரமனே! குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் வசிக்கின்ற தலைவனே! அருமையாகிய தவத்தைச்செய்கின்ற தவவிநோதனே! நீ காத்து ரட்சிக்கவேண்டும் (எ-று) (9)

கண்ணுமதி யுண்ணிணைவி னண்ணுமன வெண்ணமது
  கண்ணுமயி லொண்ணு பொழுதும்
கன்னன்மொழியன்னநடை மின்னினிடை பொன்னனையர்
  கன்னிநல மன்னு பொழுதும்
ஒண்ணிதிக முண்ணிதொழில் பண்ணபொழு தன்னமுத
  வுண்ணலொடு தின்னு பொழுதும்
உம்மையல திம்மையுள தெம்முறையும் வெம்மையற
  வும்மருவல் பல்மு பொழுதும்
தன்மையொடு மெண்மையொடு பெண்மையொடு மொண்மை
  தன்மையொடு திண்மை கொளலால் [யழி
தன்மகிமை யின்மைபெற வன்மையற நின்மையொடு
  தன்மைபுரி சொன்மை யருள்வீர்
விண்ணுலகு மண்ணுலகு மெண்ணவரு மண்ணல்நிறை
  விழிகருணை யானேக் கியே
வேதா குணங்குடியி ஞதா வருந்தவ
  விஞேதா புரந்த ருள்கவே.

(பொ-ரை) நினைக்கின்ற புத்தியானது கண்ணானது நித்திரைசெய்யும்பொழுதும், பெண்கள் மயக்கத்தில் பரிதவிக்கும்பொழுதும், பொருந்திய காரியங்களைச் செய்யும்பொழுதும், போஜனஞ் செய்யும் பொழுதும், வேருகாரியங்களி லிருக்கும்பொழுதும்,வலிமையடைந்திருந்ததால், தேவரீர் ஒருசொல்லின் உண்மையை யருள்செய்வீர்கள். தெய்வலோகத்தாரும், பூலோகத்தாரும் தினமுந் துதிசெய்ய வருகின்ற பெருமை யுடையவனே! நீர் கிருபைக்கண்ணாற் பார்த்து வேதா என்னுந் திருநாமத்தையுடைய பிரமனே! குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் வசிக்கின்ற தலைவனே! அருமையாகிய தவத்தைச் செய்கின்ற தவவிநோதனே! நீர் காப்பாற்றி யருளவேண்டும். (எ-று) (10)

வண்டனைச் சண்டனை கொடியனைக் கடியனை
வாதாடு மொழிகேடனை
வஞ்சனைப் புஞ்சனைக் கோபியைப் பாபியை
மாபாத கத்தொழிலனை
மிண்டனைக் கண்டனைக் கதியனைக் கொதியனை
வீணனை வீணனை
வெஞ்சனைக் கொஞ்சனைக் கொலையனைப் புலையனை
வேகா வருங்கண்ணனை
அண்டனைக் கண்டனைத் தண்டனைத் தொண்டனை
யாகாத புன்செயலனை
ஆதியி னிடத்திரங் தன்பினொடு மென்பிழை
யகன்றொழிய வருள்புரிகுவீர்
விண்டலமு மண்டலமு மெண்டிசையு மண்டுபுகழ்
விழிகருணை யானோக்கியே
வேதாகு ணங்குடியி னுதாவருந்தவ
விநோதா புரந்தருள்கவே.

(பொ-ரை) வண்டனும், சண்டனும், கொடியனும், கடியனும், வாதாடுகின்ற மொழிகேடனும், வஞ்சனும், புஞ்சனும், கோபியும், பாவியும், மகத்தாகிய பாவத்தொழில் செய்பவனும், மிண்டனும், கண்டனும், கதியனும், கொதியனும், வீணனும் வெஞ்சனும், கொஞ்சனும், கொலையனும், புலையனும், கொடுங்கண்ணனும், அண்டனும், கண்டனும், தண்டனும், தொண்டனும், செய்யக்கூடாத அற்பவிஷயங்களைச் செய்பவனும், ஆகிய என்னை சர்வேஸ்வரனிடத்திலிருந்து இரந்து அன்பாக என்னுடைய பிழைகள் நீங்கிப்போகத் திருவருள் செய்வீர்; வேதா என்னுந் திருநாமத்தையுடைய பிரமனே! குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் வசிக்கின்ற தலைவனே! அருமையாகிய தவத்தைச் செய்கின்ற தவ விநோதனே! தேவர்களும், உலகத்தார்களும், அஷ்ட திசையிலுள்ளவர்களும் மிகுதியாகப் புகழ்கின்ற கிருபைக்கண்ணாற் பார்த்துக் காப்பாற்றவேண்டும். (எ-று) (11)

## இதுவும் அப்புலவர் பாடிய

# தோத்திரப்பா.

ஆதியொரு வன்கருணை யக்கட லிடைப்படிந்
  தாவியுட லின்செய லெலா
மமையுமுறை போனிறீஇ யெழுவகைத் தோற்றத்தி
  னுடுமெழு பண்பி னியல்பே
நீதியொடு மொருமைப் படக்கண்டு முருவங்க
  ணிலைபேறு தலைமா றிடா
நீடொளியி னுதயநில-மென்றுகொண் டும்பொருளை
  நிச்சயித் தொன்று படவே
சோதியுள நினைவினா லைம்பூத வியல்பையுஞ்
  சோரவிட் டும்பொரு குணந்
தோன்றலான் முழுமையு மாய்ந்துசுய வஸ்துவாய்த்
  தூய்மைபெற நின்ற வொலியே
போதிய குணங்குடிக் குரிமை பூண் டுயர்சென்னை
  புரமீ தமர்ந்து கொண்டீர்
போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
  புகழுமஸ் தான்சா கிபே

(பொ-ரை) துதிசெய்கின்ற ஏழைகளுக்கு உதவிசெய்த இறையவனுடைய குணங்களைப் புகழ்கின்ற மஸ்தான்சாகிபே! ஆதியாகிய ஒருவனுடைய கருணைக்கடலிற் படிந்து உயிர் உடல்களின் செய்கைகளையெல்லாம் பொருந்தும் இறைபோல நிறுத்தி எழுவகைப் பிறப்பின் உண்டாகின்ற எழுவிதமான குணங்களின் இயல்பையே நியாயத்துடன் ஒருமைப் படக்கண்டு ரூபங்களெல்லாம் நிலைமாறாமல் மிக்க ஒளிவினையுடைய உதயநிலமென்று கொண்டு பொருளை நிச்சயம்பண்ணி யாவும் ஒன்றுபட அநாதியாகவே தேஜோமயத்துட னிருக்கின்ற மனத்தின் நினைப்பால் பஞ்சபூதங்களின் இலட்சணங்களையும், சோரவிட்டு, உயர்ந்தகுணம் விளங்குவதால் முழுமையும் ஆராய்ந்து பார்த்து சுய வஸ்துவாய்ச் சுத்தமாகநின்ற நாதமேபோந்த குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்திற்கு உரிமைபூண்டு உயர்ச்சியையுடைய சென்னப்பட்டணத்தின்கண் எழுந்தருளியிருந்தீர். (எ-று) (1)

குவியுமுய ரறிவினாற் பலவாக நினைவினைக்
  கும்பித்து வாயு வுடனே
குறிபெற நிறுத்தியுள் ளெழுநாத விசையினிற்
  கூர்ந்துடலி னியல்பொ ழித்துச்
செவியொலி யொதுக்கிவிழி தெரியா தடக்கிவரு
  தேகபரி சந்த கைத்துத்

தேற்றுது வாசனைக ளோர் சுவைபு மேற்றுது
சிந்தையா நந்த முறவே
கனிஇரவு பகலற்று நிற்குநிலை நின்றுயர்
கலந்திடத் தபசு செய்தீர்
காளையம் பருவத்தி லுலகந் துறந்துவெகு
காரணம் விளைத்த வொளியே
புவிபுகழு நற்குணங் குடிகொண்ட பின்சென்னை
புரமீ தமர்ந்து கொண்டீர்
போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்சா கிபே.

(பொ-ரை) துதிசெய்கின்ற ஏழைகளுக்கு உதவிசெய்த இறையவனுடைய குணங்களைப் புகழ்கின்ற மஸ்தான்சாகிபே! குவிந்த உயர்ந்த அறிவினால் பலவகையாக எண்ணத்தை வாயுவினுடனே கும்பித்து நற்குறியைப் பெறநிறுத்தி உள்ளே எழுகின்ற நாதவிசையினிற் கூர்ந்து சரீரத்தின் இலட்சணத்தை யொழித்து காதின் சத்தத்தைநீக்கி கண் தெரியாது அடக்கி உண்டாகின்ற சரீரத்தினது பரிசத்தை யொழித்து, வாசனைகளறிய வொட்டாமலும், ருசியை உணர வொட்டாமலுஞ் செய்து மனமானது ஆநந்தத்தை யடைய இராப் பகல்க ளற்று நிற்கு நிலையை உயிரானது கலக்க தவஞ்செய்தீர். சிறு பருவத்திலேயே உலகத்தைத் துறந்து மிக்ககாரணங்களை யெல்லாஞ் செய்த ஒலியே! உலகத்தாரால் புகழப்படுகின்ற நல்ல குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்திற் குடிகொண்டபின் சென்னப்பட்டணத்தில் எழுந்தருளியிருந்தீர். ()

கருதரிய வஸ்துவாய் நின்றவொரு வன்கருணை
கனிதர வெழுந்த கடலிற்
கதிர்பல விரித்தமுத் தாகிவரு நபிநாதர்
கதிபெற வளித்த நெறியிற்
பெரிதுதவு முறைமையெலாங் கண்டுகண் டுலகநனி
பிரிசத்தி நிற்க வகையாய்ப்
பிரிவிலா தறிவொடு புகட்டுவித் திருமையது
பேற்றினை யெடுத் தருள்செயு
மரியமன நிறையன்பு மாதரவு மோர்மைபுமெய்
யணியுமுறு தித்த குதியு
மவாவர்க டஞ்சிந்தை தன்னிலே தோற்றவெளி
யாதுநடை கொண்ட முகிலே
பொருவரிய நற்குணங் குடிகொண் டருஞ்சென்னை
புரமீ தமர்ந்து கொண்டீர்
போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்சா கிபே.

(பொ-ரை) துதிசெய்கின்ற ஏழைகளுக்கு உதவிசெய்த இறைய வனுடைய குணங்களைப் புகழ்கின்ற மஸ்தான்சாகிபே! நினைப்பதற்கருமையான பொருளாயிருந்த வொருவன் கருணையானது கனிய எழுந்த கடலில் கிரணங்களைப் பலவாக விரித்த முத்தாகி வருகின்ற நபிநாதர்கள் மோட்சத்தையடைய திருவருள்செய்த வழியில் மிகவும் உதவுகின்ற முறைகளை யெல்லாங் கண்டு உலகமானது மிகவும் பிரிந்த சத்திகள்சிறக்க வகையாய் பிரியாமல் அறிவுடன் புகட்டி இருமைப்பேற்றினை யெடுத்துத் திருவருள்செய்யும் அருமையாகிய மனத்தின்கண் நிறைந்திருக்கின்ற அன்பும், ஆதரவும், ஓர்மையும், சரீரத்திலணியும் உறுதித் தன்மையும், அவரவர்களுடைய மனத்திலே மனத்தில் காணப்பட வெளிபட்ட நடையைக் கொண்ட முகிலே! பொருதற் கருமையான நல்லகுணங்குடி என்னுந் திவ்வியக்ஷேத்திரத்தில் வாசஞ்செய்து பின் அருமையாகிய சென்னப்பட்டணத்தில் எழுந்தருளியிருந்தீர். (எ-று) ()

வன்மைதரு மொழிவிட்டு மனவாஞ்சை மதிவிட்டும்
வார்மையொடு சீர்மை விட்டு
மருவுசுவை யினைவிட்டு நல்லுடைக டொடர்விட்டு
மணமோங்கு பொருள்கள் விட்டும்
பன்மைதரு தொழில்விட்டு நன்மைகொளு முறைவிட்டும்
படருரிமை பாசம் விட்டும்
பற்றுடைய வினைவிட்டும் வித்தைகொளு முறைவிட்டும்
பண்ணிசைபரி விளைவும் விட்டு
மின்மைபடு குணம்விட்டு மன்னெறிகண் மதம்விட்டு
மிருமைதரு வகைகள் விட்டு
மேற்குமுட லினைவிட்டு நோக்குவன பலவிட்டு
மேகநிலை விட்டிடாமற்
புன்மையடர் நற்குணங் குடிவிட்டிடாச் சென்னை
புரமீ தமர்ந்து கொண்டீர்
போற்றிமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்சா கிபே.

(பொ-ரை) துதிசெய்கின்ற ஏழைகளுக்கு உதவிசெய்த இறையவனுடைய குணங்களைப் புகழ்கின்ற மஸ்தான் சாகிபே! கடுஞ்சொற்களையும், மனோவாஞ்சையையும், நற்புத்தியையும், வார்மையையும், சீர்மையையும், பொருந்திய அறுசுவைகளையும், நல்லவஸ்திரங்களையும், தொடர்ச்சியையும், வாசனைத் திரவியங்களையும், சகல தொழில்களையும், நல்ல வரிசைகளையும், உரிமையையும், பாசங்களையும், வினைகளையும், வித்தைகற்கு முறைமையையும், மண்ணின் கிரமங்களையும், நற்குணங்களையும், மதங்களையும், இம்மை மறுமைப்பயன்களையும், சரீரத்தையும், பார்க்கின்ற பலபொருள்களையும், அறவேயொழித்தும், ஏக

நிலையாகிய ஐக்கியத்தை விட்டுவிடாமல், புன்மைகள் நிறைந்திருக்கின்ற நல்ல குணங்குடி என்னுந் திவ்வியக்ஷேத்திரத்தில் விட்டுவிடாமல் சென்னப்பட்டணத்தில் எழுந்தருளியிருந்தீர். (எ-று) (4)

எங்கினு மிருந்துவரு வார்மனமு மேத்துத
லெடுத்துவரு வார்க டொழிலு
மிகவுள மதித்துவரு வார்குணமு நன்மையி
னியைந்துவரு வார்க ணெறியு
மங்கமணி கோலமிக வேய்ந்துவரு வார் நிலையு
மண்டிவரு வார்க ணடையு
மறிவின்முறை கொண்டுவரு வார்திறமு மற்றுலகு
மகலவரு வார்கள் விதமு
மிங்கித முடன்றெரிந் தந்தந்த நிலைகளுக்
கிசைகின்ற துறைகணோக்கி
யின்பத்தி னார்வமொடு கண்டித்து மேமேலறி
யியல்போடு நிற்கு மறிவே
புங்கநிலை பொங்குநற் குடிகுணங் கொடுசென்னை
புரமீ தமர்ந்து கொண்டீர்
போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்சா கிபே.

(பொ-ரை) துதிசெய்கின்ற ஏழைகளுக்கு உதவிசெய்த இறையவனுடைய குணங்களைப் புகழ்கின்ற மஸ்தான்சாகிபே! சர்வ இடங்களிலு மிருந்து வருவார், மனத்தால் நினைந்து துதிசெய்து வருவார், சர்வ காரியங்களையும் நினைந்து வருவார்கள், நற்குணங்களையும் பெற்று வருவார்கள், பலபல விதமாக வேஷம்பூண்டு வருவார்கள், நல்ல நிலைகளையும் பொருந்தி வருவார்கள், முறையோடு கூடிய நல்லறிவைக்கொண்டு வருவார்கள், உலகத்தை ஒழிய வருவார்கள், அந்தந்தக் காரியங்களுக் கிசைந்த மார்க்கங்களை நோக்கி இன்பத்தில் விருப்பத்துடன் கண்டித்து மேலே யேறி இலட்சணத்துடனே யிருக்கின்ற உண்மை அறிவே! பரிசுத்தமாகிய நிலையானது பொங்குகின்ற நல்ல குணங்குடியில் வாழ்ந்து பின்னர் சென்னப்பட்டணத்தில் எழுந்தருளியிருந்தீர். (எ-று) (5)

சொல்லினு லறிவுமுது பொருளினு னயமுமதி
தொடர்பினு லுயர்ஞா னமுந்
துதியினு லொருமையெழு நினைவினு லுறுதியுந்
துறவினு னனிவாழ்க் கையு
மல்லினுற் றனிமையும் பகலினுற் கவலலும்
மருளினு லிகப ரமுமே
யன்பினுற் பேறுமடு துன்பினுற் சுகமுமற்
றுவியால் யோக நிலையு

மல்லினாற் கொண்டோங்கு மாதவர்க் கொருமா
 மணிச்சுட ரெனத்தி கழ்வே
மகிமையொடு செய்தவப் புஞ்சமேயஞ்சுமன
 மருளற்ற தெளிவ ருளுவீர்
புல்லினாற் பெருகுசுக நற்குணங் குடிசென்னை
 புரமீத மர்ந்து கொண்டீர்
போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
 புகழுமஸ் தான்சா கிபே.

(பொ-ரை) சொல்லினால் அறிவையும், முதிர்பொருளினால் நயத்தையும், புத்தியின் தொடர்பினால் உயர்ந்த ஞானத்தையும், துதியினால் ஒருமையையும், எழுகின்ற நினைவினால் உறுதியையும், துறவினால் வாழ்க்கையையும், அல்லினால் தனிமையையும், பகலினால் கவறுதலையும், அருளினால் இகபரங்களையும், அன்பினால் பேற்றையும், துன்பத்தினால் சுகத்தையும், ஆவியால் யோகநிலையையும், மல்லினாற்கொண்டு ஓங்குகின்ற மகத்தாகிய தவசிரேஷ்டர்களுக்கு மாணிக்கச் சுடரைப்போல் விளங்கவே மகிமையுடன் செய்கின்ற தவப்புஞ்சமே! அஞ்சுகின்ற மனத்தின் மாய்கையானது ஒழிந்த தெளிவினைத் திருவருள்செய்வீர். புல்லால் விளங்குகின்ற சுகத்தையுடைய நல்ல குணங்குடியில் வாழ்ந்து பின்னர் சென்னபட்டணத்தில் எழுந்தருளி யிருந்தீர். (எ-று) (6)

கோவைதரு சொற்றொடரி னாற்கவிதை யுஞ்சீர்மை
 கொண்டிடுபு னைஜாத் துநாட்
கொளுவார மோதிடுது வாவுமிறை யோனருள்
 குலாவுதிக் றும்ப லபலத்
தேவுக ளொடுங்கிவந் தடிதொழச் செயுமறைத்
 திருவாக்கியத்தி சுமுமே
சேருமடி யார்க்காக வறபினாற் செய்துமித்
 தேசத்தா ருந்த மிழினாற்
பாவகை யனந்தமு மியற்றிவளர் நல்வரு
 பயிற்றிமுறை யாலு லகெலாம்
படர்கீர்த்தி யறிவினொடு துறவுமா யொன்றுபோற்
 பரிவுற் றெழுந்த வொலியே
பூவுலகி லுயர்குணங் குடிபெற்ற பின்சென்னை
 புரமீ தமர்ந்து கொண்டீர்
போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
 புகழுமஸ் தான்சா கிபே.

(பொ-ரை) துதிசெய்கின்ற ஏழைகளுக்கு உதவிசெய்த இறையவனுடைய குணங்களைப் புகழ்கின்ற மஸ்தான்சாகிபே! கோவையாகிய சொற்களால் நால்வகையான கவிகளையும் பாடி அழகைக்கொண்டு

முன்னர் ஆஜாத்து நாளிலே துவாவும், இறையவனுடைய திருவருள் விளங்குகின்ற திக்றும், பலபல தேவர்களும் ஒடுங்கிவந்து திருவடிகளை வணங்க மறைத் திருவாக்கையுடைய இசுமும், தன்னைச்சேரும் அடியவர்களுக்காக அன்புடனே செய்து இந்த உலகத்தில் அருமையாகிய தமிழ்ப் பாஷையினுல் அநேக வகையான பாடல்களைப் பாடி ஞானவழியைப் பழக்குவித்து வரிசைக் கிரமப்படி உலகமெல்லாவற்றையும் படர்ந்து எழுந்த ஒலியே! இவ்வுலகத்தில் உயர்ந்த குணங்குடியில் வாழ்ந்து பின்னர் சென்னப்பட்டணத்தில் எழுந்தருளினீரே. (7)

எங்தெந்தத் திசைதோறு முறுஞான யோகிக
ளிசைந்தடி பணிந்து நெறியி
னியல்புநடை யொழுகுமதன் வகையுமிக விவரமா
யெப்போது முற்ற றிந்து
சந்தந்த ருஞ்சிந்தை யானந்த வாரியிற்
ருழ்ந்துவந் தினிது போற்றுந்
தக்கவர் செறிந்தவனு மந்தக்கு டிக்குள்வளர்
தருசெய்கு சாகிப் போர
தந்தந்த சமயமுற் றினுமுள்ள சூட்சிக
ளனைத்துமொரு மதிம திக்க
வறிவா ளொதுக்கிவிட் டொருசார முப்பற்றி
யடாது கண்டித் துமேற்
பொங்கென்று நற்குணங் குடிகொண்ட பின்சென்னை
புரமீ தமர்ந்து கொண்டீர்
போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்சா கிபே.

(பொ-ரை) துதிசெய்கின்ற எழைகளுக்கு உதவிசெய்த இறையவனுடைய குணங்களைப் புகழ்கின்ற மஸ்தான்சாகிபே! சர்வ திசைகளிலு மிருக்கின்ற ஞானிகளும் யோகிகளும் மனமிசைந்து திருவடிகளைப் பணிந்து நன்மார்க்கங்களில் நடக்கின்ற அதன் வகையும், எப்பொழுது முணர்ந்து மனமானது ஆநந்தக் கடலிற்பணிந்து இனிமையாகத் துதிசெய்கின்ற பெரியோர்கள் நெருங்கி வாழ்கின்ற அநுமந்தக் குடிக்குள் வளர்ந்த செய்குசாகிபு என்கிற பேராகவந்து அந்தச் சமயம் முற்றிலு மிருக்கின்ற சூட்சங்க ளெல்லாவற்றையும் ஒருமதியால் மதிக்க அறிவாகிய வாளாயுதத்தைவீசி ஒருசாரத்தைப் பற்றி யடாமல் கண்டித்து நல்ல குணங்குடியில் வாழ்ந்தபின் சென்னப் பட்டணத்தில் எழுந்தருளினர். (8)

மகிழோங்க வுள்ளமறி வுகளோங்க நன்னிலையின்
வழிபோங்க மொழியு மோங்க
மறைபோங்க வுண்மையது அறைபோங்க மாதவமெய்
வகையோங்க மிசையு மோங்க

மிகழோங்கு தீவினையி னிகழோங்கு முலகநடை
 யெதிரோங்கி டாம லுடலி
னியல்போங்கு மைம்பொறிக ளயர்போங்கவிட்டுறுதி
 யிகமோங்க மகமோங் குவீர்
அகமோங்கு பாவிமன முகிழோங்கு பன்னினைவி
 னடலோங்க விடாமா றினின்
றகமோங்க வெந்துயரி னகையோங்கி டக்குழறி
 யழுதோங்கன் முறையா குமோ
புகழோங்கு நற்குணங் குடியோங்க வுஞ்சென்னை
 புரமீ தமர்ந்து கொண்டீர்
போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
 புகழுமஸ் தான்சா கிபே.

(பொ-ரை) துதிசெய்கின்ற ஏழைகளுக்கு உதவிசெய்த இறையவனுடைய குணங்களைப் புகழ்கின்ற மஸ்தான்சாகிபே! மகிழ்ச்சி, அறிவுகள், நன்மார்க்கத்தின்வழி, வசனங்கள், வேதங்கள், உண்மைத்துறை, மகத்தாகிய தவம், உண்மை, கீர்த்தி, தீவினை, ஆகிய இவைகளோங்கவும், உலகநடையானது எதிராக ஓங்காமலும், சரீரத்தின் லட்சணம் விர்த்தியாகின்ற ஐம்பொறிகளானவை அயர்ந்து ஓங்க, இகமோங்க மகமோங்குவீர், பாவமானது ஓங்குகின்ற பாவிமனமானது முகிழ்த்து ஓங்கும் பல நினைவின் பலமானது ஓங்க, இடமாறி நின்று மனமானது ஓங்கக், கொடிய துன்பத்தின் நகையானது ஓங்க, குழவியாகிய நான் அழுது வருந்துவது முறையாகுமோ? கீர்த்திமிகுந்த நல்ல குணங்குடியானது ஓங்கச் சென்னப்பட்டணத்தில் எழுந்தருளி யிருந்தீர். (9)

நலனூர்ந்த முகுலினிறை கடலினும் காட்டினுயிர்
 நனிதுன்று கிரிக டமினும்
நாள்செய்கதிர் மதியினுந் தாரகை கணத்தினும்
 நகுமணிகொள் பொற்பதியினும்
வலனூர்ந்த மற்றுள்ள செல்வத்தி னும்பேற்றின்
 வகையினும் பலபே தமாய்
வழிகின்ற வோரொளியை வெளிகின்ற வறிவது
 வரம்பினுற் றடைப டுத்திப்
பலனூர்ந்த செய்குசுல்த் தானப்துல் காதிர்லெப்
 பையாலீ மென்ற புகழைப்
பல்லோர்க ளும்பித்தன் மஸ்தா னெனப்புவி
 பயிற்றிகொளு மாநா தரோ
புலனூர்ந்த நற்குணங் குடிகொண் டருஞ்சென்னை
 புரமீ தமர்ந்து கொண்டீர்

போற் றுமெளி யோர்க்குதவி யாற் றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்சா கிபே.

(பொ-ரை) துதிசெய்கின்ற ஏழைகளுக்கு உதவிசெய்த இறையவனுடைய குணங்களைப் புகழ்கின்ற மஸ்தான்சாகிபே! நன்மையுள்ள மேகங்களிலும், நிறைந்த கடலிலும், காட்டிலும், உயிர்கள் நெருங்கிய மலைகளிலும், சூரிய சந்திரர்களிலும், நட்சத்திரக் கூட்டங்களிலும், நாகலோகத்திலும், மற்றுமுள்ள செல்வத்திலும், பலவேறுகளிலும், பலவகையாக வழிகின்ற ஒரு ஒளியை அறிவினால் தடைப்படுத்தி செய்கு சுல்த்தான் அப்துல் காதிர் லெப்பை யாலீம் என்ற கீர்த்தியைப் பலபேர்களும் மஸ்தான் பித்தனென்று சொல்லும் மாநாதரே! புலனொந்த நல்ல குணங்குடியை வாழ்க்கை யிடமாகக் கொண்டு பின் சென்னப்பட்டணத்தில் எழுந்தருளி யிருந்தீர். (10)

—O—

## ஷை புலவரவர்பாடிய

## வாயுறைவாழ்த்து.

நேரிசை யாசிரியப்பா.

கார்நனி விசும்புங் கதிரு மதியு
நீர்நனி கடலு நிலனு மலையு
மைம்பெரும் பூதமு முயிர்க ளைந்துந்
தம்பெருங் குணமுந் தழுவுஞ்சர மாமுந்
சென்ற வாணையிற் சிதையா நிலையிலு
நின்ற முறையே நிகழ்தலி னானு
மேறுமா றாக வேறுவே றாக
மாறுகூ றாகா மன்னுரை யானுஞ்
சாதியுந் தொழிலுந் தக்கன பண்பும்
பேதியா தியங்கும் பெறுமுறை யானுங்
கோன்மையிற் பாகங் கொள்ளுங் கூட்டின்
பான்மையொன் றில்லா வல்லபத் தாலே
யொன்றே யனைத்தையு முடையவுண் மைப்பொரு
ளொன்றே மறைவிலா தியங்கு கின்றதை
விதிபடு திரைகளால் விளங்கா தாய்ந்துங்
கதிபடு மனத்தாற் கலங்கு மக்கா
ணோர்வழி முயல்வா னிலைத்த சிந்தையி
னோர்வழி முயல்வா னுணரு மக்காள்
பதையா திருக்கும் பண்புடைச் சான்றி

ரிதையா சனஞ்சீத் திலங்கிய சான்றீர்
நற்கருத் துடையீர் நனியறி வுடையீ
ரெற்கருத் தியம்புவ னினிதிற் கேண்மின்
பதியிற் சிறந்த பதியா மதுரைப்
பதியிற் பிரபல மநேகம் படைத்தவ
ருருங்கலைக் கடலை யதமெனுங் கலத்தா
லொருங்களந் தறியா வயர்கரை கண்டவ
ராலயக் கபாடத் தலைதா டிறக்க
மேலவர் துதிதரப் பாடிய வென்றிய
ரலைவா யுடமருண் டரித்தவ ரியிலை
யுலைவாய்ப் பொய்யா தொருபுறம் பெய்யுந்
தங்கையைக் கண்டு தகாதென யாமொடு
சங்கித முயற்சியைத் தகர்த்துவிட் டெறிந்தவ
ருயர்நபி நபினா ரோதிய வொசிய்யத்
தியறா வெவர்க்கு மியற்றமிழ் செய்தவர்
நுவலரு மின்னா றாறுத் தீனென்
றெவரு மேத்து மிருந்தவ மேலவர்
பயனார் பாரிற் பலன்கொள வந்த
நயினார் முகம்மது சாகிபி நாத
ரருளிய சுல்தான் அகுமது சாகிபு
தருசேய் செய்கு மீரான் சாகிபு
செய்யுந் தவமு நேர்மையுந் திரண்டு
வையம் விளங்க வருமொரு மாதவ
ரில்லறந் துறவற மிருவகை யொழுங்கு
நல்லற மாக நடக்கு நடக்கையர்
மலையும் மனமு மறைபடு தலமும்
நிலைய முணர்வா னிட்டை யோகம்
வணக்கங் காட்சி வகைபல கொண்டு
முணக்கு முடனோ டொருமுகந் தொடர்ந்து
மிருபத் தைந்தாண் டிதுசஞ் சாரந்
தருபத் தியினார் தந்நிலை விளங்குங்
காரண வொலியாய்க் கமலகொண் டானிற்
பூரண : டைந்த புண்ணிய மூர்த்தி
நன்றிசால் செய்கு நயினார் முகம்மது
வென்றிசா லரும்பயன் விளங்க வந்த

நற்குணங் குடிகொ ணபினோர் மூகம்மது
இக்குணங் குடியி லிருந்தவக் குன்றாய்
நலம்பெற வுதித்த நன்மக வானோர்
தவம்பெறு முறைமையைச் சாற்றக் கேண்மின்
சிறுபரு வத்தே தெளிதரு வேதத்
துறுபய னெல்லா மோதி யுணர்ந்து
மரபி னிலக்கணத் தாவன வெவையு
மறுவறத் தேறு மதியின ராகி
யொப்பில் குணத்தி னோங்கிய சுல்த்தான்
அப்துல் காதிரி லெப்பை யாலீம்
எனப்பெயர் விளக்க மெழுந்து வருகையில்
வனப்புறாஉம் வாலை வயதுபதி னேழிற்
றந்தைதா டொழுது தருங்கரம் பற்றி
மூந்த வுபதேச மொழிநலம் பெற்றுத்
தன்னிலை திரியாத் தவத்திய லெடுத்து
மன்னிலை கொள்ளு மனத்தி னானே
தவத்தின தியல்புந் தாபத ரியல்பு
நலத்துறை யுணர்த்து நன்னூற் பலவுங்
கைதருங் கீழக் கரைதனில் வாழுஞ்
செய்கப்துல் காதிரி லெப்பை
யாலீ மிடத்தி லருளினோ டோதிச்
சாலவுந் தேறித் தாபத முறைகொண்
டருணபி கூறத் தாயிரத் திருநூற்
றிருபதோ டிருநாள் காண்டினி லுலக
முற்றுந் துறந்து முறைபல கடிந்து
பற்றற் றெவையும் பயன்பட வொழுகித்
தேங்கமழ் சோலைத் திரிசிர புரத்தி
லோங்கிய வறிவா னுயர்ந்த ஆலீம்
தன்னிலை யுணருந் தன்மையுங் குணமு
முன்னிலை யியல்பு முழுதும் பதிந்து
பூமியி லெவர்க்கும் பொருளா மௌலடி
சாம் சாகிபு தம்மைத் தொடர்ந்து
மாட்சிமை தருநெறி வகைநலந் துலங்கத்
தீட்சை பெற்றுச் சிறந்தன பெற்றுத்
தனிநிலை யொருமையைத் தாங்கி யிருவினைத்

துனிபினை யொருவி மும்மலந் தொலைத்து
நாற்குணந் தெரிவுற் றைம்புல னடக்கி
யேற்கு மூட்பகை யாறையு மெறிந்து
பாதக மேழையும் பசையறப் பறித்து
மேதகு தவத்துறப் பெட்டையு மேவி
யிரத மொன்பதி னெடுப்பன வெடுத்து
விரதம் பத்தென விளங்கிய துறவே
பொருளாக் கொண்டு பொருந்தி வருகையில்
இருளாப் பகலா விதுவே நோக்கமாய்ப்
பகலெலா நோன்பு மிரவெலாந் தொழுகையு
மகலா நன்முறை யாகவுஞ் சிலநா
ளீர்நசை யூணசை நீங்கியு மாக்கைக்
கோர்நசை யுங்கொடா தோர்ப்புந் தாங்கி
வாய்வா ளாமையா வருநாட் கிடையினிற்
போயொதுக் கொருங்கு புகுந்தொழிந் திருப்பச்
சிந்தையிற் றுணிந்து சிக்கந்த ரடங்கிய
மந்திர மருகின் மண்பல மொன்று
மறந்தாங்கி யூர்ப்புறத் தடுக்கல கத்துந்
திறந்தாங்கி யோரா றிங்களுந் தொண்டியின்
மாதுல ரடங்கிய வாழைத் தோப்பினு
மேகபொன் றனுகா நீரிரு திங்களும்
மரைக்கா ளுழியி னமிழ்தா னென்பா
யுரைசகாது கல்வத்தி யோகத் திருந்தன
ருள்ளிருந் தொருங்கு காணுங் காட்சியும்
வெள்ளிடை விரிந்து பரந்த காட்சியும்
தள்ளா தேகமாந் தன்னை யமிழ்த்தலின்
விள்ளா துணர்வினு மெய்ப்மை விநோதமே
காணுங் கருத்தரா மௌனகண் டிதரா
நாணும் பித்தர்போற் றன்னடை கொண்டு
கிளர்ந்தெழு சதுர கிரியினும் புறக்கி
வளர்ந்த மலையினு நாக மலையினும்
யானை மலையினு மிருங்குகை செறிந்த
வேனை மலையினு மிருளடை வனத்தும்
பல்விலங் காடிய பனமரப் பொதும்பு
நல்விலங் காடிய பொழினதிக் கரையினு

மறிமட மசுதா பாகத் திருந்துஞ்
செறிமட யோகியர் சேகர நீத்துஞ்
சருகுங் கிழங்குந் தழையுங் குழையுங்
கருகுங் கனியுங் காயும் புசித்து
மாசன விகற்பத் தாகிய யோகமும்
போசன மறியாப் பொழுதொடு நேமமு
மேலாங் காலுங் கீழாந் தலையும்
பாலா முடலுமாப் பலபட வணங்கியு
மொருபக லன்றிப் பல்பகல் விரதமும்
பலவிர வன்றி யோரிரா வொழிபு
முடையா னுடையதோர் சம்மதத் துணர்வி
னடையா னன்றித் தன்னடை யின்றியு
மறையாக் கருத்துங் குறையா வறிவி
னிறையான் மாய்ந்த காயநிலையைக்
குணங்குடி மஸ்தா னெனக்குறி யிட்டும்
பிணங்கா திணங்கா தொருபெயர் தரித்து
மிப்பெய ராற்பல புதுமை யியற்றியு
மப்பெய ரான்மனத் தெருணிலை யமைத்து
மளவிலாக் காரண மவரவர் காணக்
களவிலா மெய்ந்நிலைப் பயனது கனிந்து
மிவ்வண மேழாண் டாகவித் திசைதிரிந்
தவ்வண நிலையான் வடதிசைக் கடைந்து
கண்டா ரெவருங் களிகூர்ந் துள்ளந்
தொண்டாய்த் தொழுதிடத் தோற்றுமா தவராய்ப்
பன்னா டவரும் பலன்பெறத் தரிசனந்
தன்னா லுயர்தவந் தாங்குரு வினயராய்
மன்னுணர் வினுஞ்சில வதியுணர் வினுஞ்சில
தன்னுணர் வினுஞ்சில நடைபயில் கையராய்
நேர்மையி னுள்ள நேர்ந்தவ ரெவர்க்கு
மோர்மை புரியு முயர்தே சிகராய்ப்
பொன்னைமா நிதியைப் போற்றலிற் போற்றுஞ்
சென்னைமா நகருஞ் சிறப்பொடு புகுந்தார்
முன்னைய நினைவினும் புறவுணர் முனைத்துந்
தன்னைய முறைபோற் றடைபடா துலவியுஞ்
சிலபகல் வெளிப்படத் திருந்து மறைபடச்

சிலபக லடங்கியு மௌனமாய்த் திருந்துஞ்
சுட்டிக் காட்டியு மெண்ணிற் றெருகுத்து
மெட்டிக் காட்டியு மெழிதிக் காட்டியு
மியல்பின் வேண்டுவ வெவையும் விளக்கியும்
பயிலுஞ் சிலநாள் பலன்பெற யாருமே
பாவா லெப்பை யெனும்பிர பலவான்
காவாங் தோட்டத்திற் கதிநலம் பெறுவான்
மக்க ளுவந்து மனப்பொருத் தங்கொண்
டெக்காலும் புகழ்பெற வினிதி னல்கிய
தலத்தினைத் தைக்கா வாகத் தகைத்து
நலத்தொடு கல்வத்து நாடிப் புகுந்தா
ரயன மொருமூன்று மதனுட் டனித்துப்
பயனுறு மியோகப் பண்பி னிருந்தா
ராவ முதலா வூர்வன வடைப்பட்
டுரைக ளுணரா துணர்வினி னின்ற
நிலையே புதுமை நிரம்ப விளக்கக்
கலையே கலையாக் கண்ணொடு வெளிவந்
தூங்குமு ரீதி னுயர்வழி யவாது
தாங்குங் காதி ரிய்யாத் தன்னை
யாக்கிய முகியித்தீ னண்டவர் பேர்க்கொரு
தேக்கரும் பாத்திகாச் சிறப்பிற் செய்தார்
காடின பேர்க்கரு ணயன நோட்டங்
கூடின பேர்க்குளக் கருணை நல்கியு
நினைத்த காரியம் நிறைவேறப் படுத்தியுந்
தனைத்தொடர் பவர்க்கா வனமுறை தொகுத்துஞ்
சிலபக லியாருந் தெரிய விருந்துஞ்
சிலபக லெறிந்துந் தெரியா திருந்தும்
பின்னர் தம்மிடம் பிடித்தநோன் புடனே
நன்னர் பயப்ப நயந்தடைந் தனராற்
கண்டகண் டிதமாய் நாளினைக் கணித்துங்
கொண்டகண் டிதமெய் யோகங் கொண்டுந்
துண்டிடு கண்டுந் தூய்பாற் சிறிதுங்
கொண்ட பொழுதுங் கொள்ளாது மிருதியு
மொருவர்க்குங் காணு வொதுக்கமும் பதுக்கமு
மிருதுவர்க்கே காணு மேகமு மாகத்

தூங்காது தூங்கிச் சுகத்தொடு தன்னிலை
நீங்கா திருந்த நிலைமையென் சொல்வேன்
பதையா திம்முறை பன்னிரண் டாண்டுஞ்
சிதையா திருந்த செய்கையென் சொல்வே
னரிதரி தம்ம வகமொரு நிலைபட
வரிதரி தம்ம வருமையென் சொல்வேன்
பேரின்ப வெள்ளப் பெருக்கி லழுந்தியு
மாரின்ப மீரிய தான்றென் றாதியிற்
றொடருயிர் காந்தத் தொடரய மென்னப்
படர்தரு மாசைப் பற்றங் கிழுப்பத்
தழல்படு கரிய தழலா யினும்பெர்
சழல்பட விலையாற் கழன்றா லன்றி
யொன்றா காவென் றுரைக்கு முறைபோல
வென்றாள் கடத்தை விடுத்து நீங்கி
யிருவகை யிறப்பு மிறந்துப்பு மப்பு
மொருவகை சுடரு மொளியும் போலக்
காரண மெவையுங் கலவா தகன்ற
பூரணத் தொடுபரி பூரண மடைந்தா
ரேற்படு குறைமுடி வெய்த மாவயது
நாற்பது மேழு நிறைப நடந்ததே
யித்தகை வத்தி னேரிய தாபதர்
பத்தியிற் பயின்று பல்பல முயற்சி
கொண்டு வருநாட் டன்னிற் குமிழி
மண்டுமா நந்த வெள்ள நல்கிப்
பொங்கி வழிந்து புறம்பொழி வதுபோ
லிங்கித நாவி னெழுந்ததில் கவிக
ணயன்பெறு மவற்றை நால்வரு முணர்ந்து
பயன்பெற வச்சிற் பதிப்பிக்க நாடிக்
கண்ணோட்ட மிட்டரு டருகெனக் கனிந்து
வெண்ணோட்ட நன்மையே யியைந்த கருத்தின
ரவர்களுக் குரிய வன்புறு பத்தரி
லெவர்களு மதிப்ப விளங்கு நேர்மைய
ரிருபோது மவர்பெய ரேத்தி யேத்தி
யொருபோது மறவா வுறுதிச் சிந்தையர்
மருவளர் பூவன மல்க மல்கிய
திருவளர் செழுந்தடச் சியமங்கலப்

பதிவளர் செல்வப் பதியரு ளுைசல
முதலியா ரினிய முயன்று கேட்ப
வுலக முற்றுந் துறந்த வுள்ளமு
முலச மணுவுந் துறவுவா வுள்ளமு
மொருவகை யானு மொன்றாத துபோ
லிருவகைப் பட்ட விதய னாயினும்
வரத்தின ரருணலம் வருவழி யென்றே
திரத்தினி னோர்ந்து ளுவந்து துணிந்தனன்
சொல்லு மதுவே பொருளு மதுவே
புல்லுந் தொகையும் புணர்ப்பு மதுவே
யன்றி யொன்று மமைத்தே னல்ல
னன்றி யொன்று நடைகொ டுபி
னின்ற திடரினைப் பெயர்த்தலு நிரைப்படச்
சென்ற வெழுத்தினைச் சேர்த்தாலும் வழுவா
வழிபோன் மாறி நிறுத்தலும் வழக்க
மொழிபோற் பதித்தலு முற்றப் படுத்தலுங்
குறிப்பிற் றுறையுங் கோத்த வதிகாரமும்
பெறப்படச் செய்தலும் பின்முன் கவிகளை
மாலை புணர்க்க மாட்டலுங் குறைந்த
காலை நிலைக்கக் கட்டலும் வெறுத
பாலும் பழமுந் தேனும் பருகுதல்
போலுஞ் சோப் பொருந்தந் திருத்தலும்
பார்ப்போர் பார்க்கப் பயன்படு முறையுஞ்
சேர்ப்போ ருள்ளஞ் சிறக்கு முறையுங்
கொண்டொழு கினுறற் களிகூர்ந் துயர்ந்தோர்
கண்டொழு குவதே கடனு மன்னே
குணங்குடி யார்சொற் குணங்குடித் திடுமின்
மணங்குடி திருமனை வாழிவாழ்ந் திடுக
வரந்தாங்கி யார்சொ லறந்தாங் கிடுமுன்
சிறந்தாங் குயர்பதம் வழிசேர்ந் திடுக
வொருமை படுத்த லுண்டா முண்டா
மிருமைப் படுத்த லின்று மின்றம்
பொய்மைத் தொடர்வினை போகும் போகு
மெய்மைத் தொடர்வினை மேவும் மேவும்
புறத்தும் வையாளி போடும் போடு

மறத்திரை யுள்ளு மாடும் மாடும்
விண்ணு மண்ணும் விரியும் விரியுஞ்
செண்ணங் திண்ணங் திரியுங் திரியுந்
துவித மலவத் துவித மென்றே
யெவிதத் தானு மிதயங் தெளிமே
தொட்டுந் தொடாதுஞ் சொற்றவை யுணர்ந்தாற்
கிட்டு மொருமை கிருமையி னறிக
வென்னிய லுணர்வா னிதய முளாதே
லங்கிலே யுரைப்ப னருளீர் கேண்மி
னரும்பதி காய லறிவா ளரினுயர்
பெரும்பதி மானுப் பிள்ளையி லப்பை
யாலீ முதவிய வருண்மணி பலகலை
நாவி னணிமுறை நோற்றனு பவித்த
வேதாந் தக்கடன் மெய்ஞ்ஞா னப்பொரு
ளுதாந் தச்சுடர் நலமிகப் பொதிந்த
சித்த ராகு மன்றியுஞ் சீவன்
முத்தர் கரியு முகம்மதி லப்பை
செய்தவத் துதித்த செல்வன் குணங்குடி
மெய்தவத் தினர்க்கு வித்தையிற் றேமன்
பயன்பெறு புராணமும் பலபிர பந்தமு
நயன்பெறப் புனையு நாவல னெவர்க்கு
முண்மைப் பொருள்வழி யோம்புந் தேசிகன்
வண்மைக் கரத்துடை வள்ள லிறசூல்
செப்பிய வழிபுனை செய்கு
அப்துல் காதிரி லெப்பையா லீமே.

(பொ-ரை) கறுத்த மேகங்கள் சஞ்சரிக்கின்ற ஆகாசமும், சூரிய சந்திரர்களும், சமுத்திரமும், பூமியும், மலையும், ஐந்து பூதங்களும், அவற்றினால் வளர்கின்ற குணங்களும், அதைத்தழுவுகின்ற சரமும், அசரமும், ஆணையைப்போல முறையே நடப்பதினாலும், அவைகள் வேறுமாறாக மாட்டா; வேறு வேறாக கூறாகமாட்டா; நிலைபெற்ற சொற்களாலும், ஜாதியும், தொழிலும், தகுந்த குணமும், வித்தியாசப்படாமல் நடக்கின்ற மிகுந்த முறையாலும், அரசாட்சியிலும், கூட்டுறவிலும் பகுதியில்லா வல்லமையினாலே ஒன்றே சகல வஸ்துக்களையு முள்ளவன்மைப்படைத்த உண்மைப் பொருளென்று மறைவில்லாமல் விளங்குகின்றதை விதியினாலுண்டாகின்ற மாய்கைகளால் விளங்காமல் ஆராய்ந்தும் கதிக்கின்ற மனத்தினாற் கலங்குகின்ற மக்களே! நேர்வழியில்

நடக்க நிலைபெற்ற மனத்தால் ஒருவழியை நடக்க முயல்கின்ற மக்களே! பதையாம விருக்குங் குணத்தையுடைய சான்றீரே! இருதயாசனத்தை திருத்தி அதில் விளங்குஞ் சான்றீரே! நல்லெண்ண முள்ளவர்களே! நல்லறிவுள்ளவர்களே! என்னுடைய கருத்தை வெளிவிடுகின்றேன், நீங்கள் அதை நன்குய்க்கேளுங்கள். பதிகளிற் சிறந்ததாகிய மதுரைப் பதியில் அநேக பிரபலம் படைத்தவர், அருமையாகிய சாஸ்திரக் கடலைக் கடைந்தவர், ஆலயத்தின் தாழ்ப்பாளைத்திறக்க உயர்ந்தவர், துதிக்கப்பாடிய வெற்றியையுடையவர், அலைவாயுடமருண்டு அரித்த வரியினை உலையில் பெய்யாமல்ஒருபுறமாகப்பெய்யும் தங்கையைக்கண்டு தகாதென்று யாழும், சங்கிதமும் ஆகிய முயற்சியைவிட்டு எறிந்தவர், உயர்ந்த நபி நயினார் சொல்லிய ஒசியத்தின் இலட்சணத்தைக் கொடுக்க யாவருக்கும் இயல்தமிழையருளிச் செய்தவர், சொல்லுதற் கருமை யான நூறுதீன் எவரும் துதிசெய்யும் மிக்க தவத்தையுடையமேலவர் பயனார் மரபில் பிரயோசனத்தை யடையவந்த நயினாராகியமுகம்மது சாகிபு நாதர் திருவாய்மலர்ந்த சுல்தான் அகமது சாகிபு தந்த புத்திர ளுகிய செய்கு மீறான் சாகிபு செய்யுந் தவமும் நேர்மையுந் திரண்டு உலகம் விளங்கவருகின்ற ஒப்பற்ற மகத்தாகிய தவத்தையுடையவர், இல்லறம், துறவறம், ஆகிய இரண்டு விதமான ஒழுங்குகளும், நல்லற மாகவே நடக்கும் நடவடிக்கையை யுடையவர், மலையும், காடும், உலகமும், நிட்டையும், யோகமும், வணக்கமும், காட்சியும், ஆகிய பல வகைகொண்டு சரீரத்தை ஒருமுகத்தில் தொடர்ந்து இரு பத்தைந்து வருஷம் வரைக்கும் சஞ்சாரம் தரும் பக்தியினார், தன் னுடைய நிலையானது விளங்கும் காரணவொலியாய்க் கமலங்கொண் டானில் பூரணத்தை யடைந்த புண்ணியமேலிட்ட மூர்த்தி! நன்மை மிகுந்த செய்கு நயினார் முகம்மது வெற்றிபொருந்திய அரும்பயனு னது விளங்கவந்த நல்ல குணங்குடியைக் குடிகொண்ட நயினார் முகம் மது இக்குணங்குடியில் பெரிய தவமலையாய் நன்மையை யடையப் பிறந்த நல்ல மகவாக ஆனவர் தவத்தையடைந்த முறைமையைச் சொல்லக் கேளுங்கள். தனக்குச்சிறிய பிராயத்தில் வேதங்களையெல் லா முணர்ந்துஇலக்கண இலக்கியங்களில் வல்லுனராகி, ஒப்பில்லாத குணத்திஞல் ஓங்கிய சுல்தான் அப்துல்காதர் லப்பை ஆலீம் எனப் பெயரிஞேடு விளக்கமாக எழுந்து வருகையில் நன்குன பதினேழு வயதில் தகப்பனுருடைய திருவடிகளைத் தொழுது திருக்கரத்தைப் பற்றி உபதேசம்பெற்று தன்னுடைய உண்மை நிலையானது கெடாத தவத்தின் இலட்சணத்தை யெடுத்து நிலைபெற்ற நிலையைக்கொள்ளு மனத்தினையுடையவனே! தவத்தின் இலட்சணத்தையும், தாபதர் இலட்சணத்தையும், கீழக்கரையில் வாழ்கின்ற செய்கப்துல்காதிரி லப்பை ஆலீம் இடத்தில் அருளினுடன் சொல்லி மிகுதியாகத்தேறி பெரியவர்களுடைய முறைமையைக்கொண்டு திருவருளையுடைய நபி ஹிஸ்ராத்து ஆயிரத்திருநூற்றி ருபத்தெட்டாவது வருஷத்தில் உலக

வியவகாரங்களைத் துறந்து உறவின் முறையிற்கொண்டாடக்கூடிய பல கிரமங்களையும் வெறுத்து சர்வ பொருள்களிடத்திலும் வைத்திருந்த ஆசையைவிட்டு, சகலமும் தமக்குப் பயன் பட நடந்து தேனுனது கமழ்கின்ற சோலையையுடைய திரிசிரபுரத்தில் அறிவிலுயர்ந்த ஆலீம் தன்னை உணரும் குணத்தையும், பூர்வஜனன லட்சண முழுமையும் பதிந்து உலகத்தில் எவருக்கும் பொருளாகிய மௌலடி சாம்சாகிபு என்பவரைத்தொடர்ந்து மாண்புதரும் மார்க்கத்தின் வகை விளங்க, தீட்சையை ஆசிரியர்பால் பெற்று ஒருமை நிலையையடைந்து நல்வினை தீவினைகளையொழித்து ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களையும் ஒழித்து, மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் குணத்தின் வயப்பட்ட அந்தக்கரணங்கள் நான்கையுந் தெரிக்கச் செய்து சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் ஐம்புலன்களையும் தத்தமதொழில்களிற் செல்லவிடாமல் அடக்கி, பொருந்திய காமம், மோகம், லோபம், குரோதம், மதம், மாற்சரியம் என்னும் அறுவகை உட்பகைகளையும் ஒழித்து, எழுபாதகத்தையும் நீக்கி, தவத்தின் இலட்சணங்கள் எட்டையும் பொருந்தி, ஒன்பது ரசங்களில் எடுப்பவைகளை யெடுத்து, பத்து விரதங்களும் விளங்கிய துறவையே பொருளாகக் கொண்டு பொருந்தி நிற்கையில் இருளும் பகலும் இந்தச் சிந்தையாகவே யிருந்து பகலெல்லாம் விரதமும் இரவி லெல்லாம் தொழுகையும் ஆகச்சிலநாள் நீர், ஊண் முதலியவற்றை விட்டும், சரீரத்திற்கு ஒரு விருப்பத்தையுங் கொடாமல், வருகின்ற நாட்களில் இடையில் ஓரிடத்தில்புகுந்து அடங்கி யிருக்கத் துணிந்து சிக்கந்தர் என்பவர், அடங்கிய மந்திரத்திற்குச் சமீபத்தில் மண்டலமொன்று ஊருக்குப்புறத்தே கண்டு அதில் ஆறுமாதங்களும் வாழைத்தோப்பில் நான்குமாதங்களும், யோகத்திலிருந்தார். உள்ளேயிருந்து ஒருங்கே காணுங் காட்சியும், வெளியில் பரந்தகாட்சியும், தன்னை ஏகமாக அமிழ்த்துவதினுல் உண்மை விநோதமே காணுங் கருத்தராம், மௌனகண்டிதராம் பித்தர்களைப்போல் தன்னடையைக் கொண்டு சதுரகிரியிலும், புருக்கிவளர்ந்த மலையிலும், நாகமலையிலும், யானைமலையிலும், பெரிய குகைகளடர்ந்த பெரியமலைகளிலும் இருள் சூழ்ந்தகாட்டிலும், பலவிலங்குகள் சஞ்சரிக்கின்ற பனைமரங்களடர்ந்த விடங்களிலும், நதிக்கரைகளிலும், மவுசூதின் பாகங்களிலும், இருந்தும், நிறைந்த யோகிகளுடைய செகரத்தை நீங்கியும், சருகுமுதலியவற்றைப் புசித்தும், விகற்பமாகிய ஆசனங்களுடன் யோகஞ்செய்தும், நியமாதிகள் தவறுதிருந்தும், தலை கீழும், கால்மேலுமாகப் பலவிதங்களால் வணங்கியும், பலநாள் அகோரமான விரதமிருந்தும், குணங்குடி மஸ்தான் என்கிற குறிப்பை வெளிப்படுத்தியும், இந்தப் பெயரால் பல அதிசயங்களை நடத்தியும், மனத்தில் தெளிவை யுண்டாக்கி அளவு சொல்லப்படாத காரணங்களை அவரவர்காண உண்மை நிலைப்பயனைக் கனிந்துரைத்து இவ்விதமாக ஏழுவருஷம் திசைகளிலெல்லாந்திரிந்து

பிறகு வடதிசையிற்போய்ச் சேர்ந்து பார்த்தவர்களெல்லாஞ் சந்தோஷித்துத் தொண்டு புரியத்தக்க மாதவராய் பல நாட்டிலுள்ளவர்களும் பலனை யடையத் தரிசனங்கொடுத்து குருவாகி நன்னடை யுடையவராய் தன்னை யடைந்தவர்கள் யாவர்க்கும் திருவருள்செய்த தேசிகராய் பொன்னை மிகவும் போற்றுகின்ற சென்னப் பட்டணத்திற்கு வந்தார். அப்போது முன்னைய நிலையைப்பார்க்கிலும் புறவுணர்ச்சி உண்டாகி யாதொரு காரியத்திலுந் தடையின்றி உலாவியும், சிலநாள் வெளியாகவிருந்தும், சில நாள் மறைந்தும், சிலநாள் மௌனமாயிருந்தும் சட்டிக்காட்டியும், எண்ணித்தொகுத்தும், எட்டிக்காட்டியும், எழுதிக் காட்டியும் சுபாவமாகவே அவரவர்கள் வேண்டிய வற்றை விளக்கியும், யாவரும் பலனையடைய சிலநாள் வசித்தும், பின்னர் பாவாலப்பை என்னும் பிரபலவான் தன்னுடைய குடும்பத்தாருய்ய வேண்டிக் கொண்டதின்மேல் அவருடைய தோட்டத்தில் தைக்காவாக நாடி ஒன்றரை வருஷமிருந்தும், அநேக திருவிளையாடல் களைச் செய்து தம்மை விரும் பினவர்களுக்கு திருவருள் நயனபார்வையால் ரட்சித்தும், அவரவர்கள் நினைத்த காரியங்களை நிறைவேற்றியும், தன்னைத் தொடர்ந்து வருபவர்களுக்காக சோலைகளை முறையேதொடுத்தும், சிலநாள் யாவரும் பார்க்க விருந்தும், சிலநாள் மறைந்திருந்தும், பின்னர் தாங்கொண்ட நோன் பைக் கடைப் பிடித்து தன்னுசிரியன் உபதே சித்தவண்ணம் அகண்டாகார நிலையிலிருந்து பால்மாத்திரம் குடிப்பதும், குடியாததுமாகவிருந்து தூங்காமல் தூங்கிச் சுகத்துடன் தன்னிலையில் நீங்காதிருந்த நிலைமையை நான் என்ன வென்று எடுத்துச்சொல்லுவேன். இவ்வண்ணம் பன்னிரண்டு வருஷம் வரைக்கும் கெடாமலிருந்த செய்கையை என்னவென்றுசொல்லுவேன். இது மிகவும் அருமையான காரியமாகும், இதன் அருமையை நான்என்னவென்று எடுத்துச் சொல்வேன், பேரின்பமென்னும் பெரியவெள்ளத்தில் அழுந்தியும், காந்தந்தொடர்ந்த அயத்தைப்போல ஆசையாகிய பந்தத்தையிழுக்க கழல்படு கரிய தழலானுலும் அது ஒழிந்தாலன்றிபெயர் நீங்கா தாகையால் ஒன்ருக மாட்டாதென்று சொல்லுந்தன்மையைப்போல ஜெயித்தாளுகின்ற சரீரத்தைவிட்டு நீங்கி இருவகையான சிறப்பு மிறந்து உப்பும், அப்பும், சுடரும் ஒளியும்போலக் காரணமெவையுங் கலவாமல் அகன்ற பூரணத்துடன் பரிபூரண திசையை யடைந்தார் அப்பொழுது அவருக்கு நாற்பத்தேழுவயது நிறைய நடந்தது. இவர் இங்ஙனம் இருக்கின்ற காலத்தில் ஆநந்தமானதுபொங்கி சிலகவிகள் வெளியேவந்தன அந்தக்கவிகளை நான்கு கவிகளையுடைய நால்வரும் யாவருக்கும் பயன்படும்படி அச்சிற் பதிப்பிக்க விரும்பி அவைகளை பார்த்துக் கொடுங்களென்று அவரிடத்தில் மிக்கதிருத்தொண்டு செய்து கொண்டிருந்த சீயமங்கலத்து அருணசலமுதலியாரிடம் முறையிட அவரும் அவ்வாரேயாகுக என்றுசொல்லிச்சுவாமிகளுக்கு முறையிட்டனர். அவ்வாறே யவருர்

திருத்தித்தந்தனர். இங்ஙனம் கிடைக்கப்பட்ட நூலை வரிசைக் கிரமந்தவறாது ஒழுங்கு படுத்தி குணங்குடியானை உள்ளத்தின்கண் வைத்து வாழ்த்தி பெரியோர்களெல்லாங்கண்டு ஒழுகுவதே கடைமையாகும். ஆகையால் உலகத்தார்களே! நீங்கள் குணங்குடியார் சொல்லையும் அவைகளிலுள்ள குணங்களையுங் குடித்திடுங்கள்; அவருடையவீடானது வாழக்கடவது; அறந்தாங்கியார்சொல்லு; அரத்தை யாதரியுங்கள்; அவர்களுடைய திருவடிகளில் சேர்ந்துவாழுங்கள்; அதனால் ஒருமையடைதலுண்டாகும்; இருமையாவதில்லை; பொய்யாகியதொடர்பினையானது நீங்கும்; உண்மைவினைவந்து கைகூடும்; வெளியில்வையாதிபோகும்; உள்ளேதருமதேவதை நடிக்கும்; விண்ணும், மண்ணும்விரியும்; சொர்ன்னமானது திண்ணமாகமாறும்; உண்மைதுவிதமல்ல அத்துவிதமேயாகும் என்றே மனந்தெளியும், தொட்டுத்தொடாமலும் சொன்னவிஷயங்களை உணர்ந்தால் ஒருமை நிலையானது கிட்டுமென்று கிருபையினால் அறியவேண்டும்; என்னுடைய இயல்பாகிய உணர்ச்சியினால் இருதய மிருக்குமானால் அந்தநிலைமையைச் சொல்லுவேன். திவருளையுடையவர்களே! நீங்கள் கேளுங்கள். அருமையாகிய காயற்பட்டணத்தில் அறிவினுயர்ந்தவர்களில் ஆனைப்பிள்ளை லப்பை ஆலீம் என்பவர்கொடுத்த திருவருள் மணியாகிய பலகலைகளையும் முறைப்படி அநுபவித்த வேதாந்தக் கடலையும் உண்மை ஞானப்பொருளையும், நாதாந்தச்சுடரையும் நகுமுடன்பொதிந்த சித்தராகும், அன்றியும் சீவன்முத்தரான கபீருமுகம்மது லப்பைசெய்த தவத்தினாலுத்த செல்வனும் குணங்குடியாராகிய உண்மைத்தவமுடைய மஸ்தான்சாகிபு அவர்களுக்கு வித்தையில்தோழனும், சர்வபயன்களையும் அடையத்தக்க புராணங்களும் பலபிரபந்தங்களும் நன்மையை யடையப்புனையும், நாவலனும், யாவருக்கும் உண்மைவழியை யுணர்த்தும் தேசிகனும், வண்மையாகிய கைகளையுடைய வள்ளலும், இறகுலும், செப்பியவழியே செய்கின்ற அப்துல் காதர்லப்பை ஆலீம் என்பவர். (எ-று) (1)

சிறப்புப்பாயிரம்

முற்றிற்று.

பிசுமில்லாகி வொபிகி நஸ்த்தயீன்.

---

குணங்குடி

# மஸ்தான் சாகிபு

## அவர்கள் பாடல்

மூலமும் - உரையும்.

---

### குருவணக்கம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

இணங்குமெய்ஞ் ஞானப் பேரின்பக் கடலின்
இன்னமு தெடுத்தெமக் களிப்போன்
பிணங்கிய கோச பாசமா மாயைப்
பின்னலைப் பேர்த்தெறிந் திடுவோன்
வணங்கிய தவத்தி னோர்க்கருள் புரிய
வள்ளலாய் வந்தமா தவத்தோன்
குணங்குடிவாழு முகியித்தீ னெமென்
குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம்.

(பொ-ரை) பொருந்திய மெய்ஞ்ஞானத்தாலுண்டாவதாகிய பேரின்ப சமுத்திரத்தின் இனிமையாகிய அமிர்தத்தை எடுத்து எமக்கு அளிப்போன், விரோதங்கொண்ட கோசம் (அன்னமய கோசம், ஆனந்தமய கோசம், பிராணமய கோசம், விக்ஞானமய கோசம், மனோமயகோசம் என்னும் ஐவகை கோசமாம்) பாச மாகிய மாய வலையை பேர்த்தெறிந்திடுவோன், தம்மை வணங்கிய தவசிகளுக்குத் திருவருள் செய்ய வள்ளலாய் எழுந்தருளிவந்த மகத்தாகிய பெருந் தவத்தையுடையோன், குணங்குடி என்னுந் திவ்வியக்ஷேத்திரத்தில் வாழ்கின்ற முகியித்தீனாகிய எம்முடைய ஆசிரியருடைய திருவடிகளை எம்முடைய தலையின்கண் வைத்துக்கொள்வோம். (எ-று)

எனக்குப் பலவிதங்களாலும் உபகாரஞ்செய்த ஞானாசிரியனுடைய திருவடிகளை வணங்குவோம் என்பது கருத்து.

### வஸ்துதயத்திறுநந்தம்.

ஆசிரிய விருத்தம்.

மஹ்றலியத்தான தாத்துல் கிப்ரியாவில்
மறைந்த கன்சுல் மக்பியாம்
பஸ்கூத்து அன்ஹறூல் கதீமுல் அமாவான
மவுஜூதெனும் சிருபுலே
அஹறியத் துஹறதாகி வாஹிதிய்யத்தான
ஆலம் அற்வாஹானதில்

ஆலம்பி ஸ்லாகி ஆலம்அஞ் சாமான
ஆலம்இன் சானா னபின்
பகுலியத் தில்லா ஜலாலொடு ஜமா லும்
பதீஉல்க மானு மாகி
பகுதுகபு லற்றலா கூக்துஜப றாத்தில்
பகாவான குரியத் தினால்
நஹ்றசியத் தற்றமுன் றுனிநிழல் பெற்றடிமை
நானினைவு மற்றாய் வினை
நற்குணக் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
நாதன் முகியித் தீனை.

(பொ-ரை) உயர்ந்த குணத்தில் வாசஞ்செய்திருந்த பாதுஷா வாகிய குருநாதனான முஹியித்தீனே! கலப்பற்ற பாலைப்போல் தெளிவான தத்சொரூப வல்லபத்தின்கண் மறைவாகிய புதைபொருளாம். அதைத் தொட்டும் வாய்மூடி பூர்வீகமென்னும் இருளாகி நின்றவைக்கும் உடைத்தான வஸ்துவிலே குறிப்பற்ற ஒருமையாகி, ஒன்றாம் குறிப்பாகி இரண்டாம் குறிப்பான ஒருமை யினின்றும் ஆத்துமலோகமாகி, பின் பலகோலங்களைக்கொண்ட மாதிரிலோகமாகி, சடலோகமாகி, பிறவியைக் கொண்ட மானிடலோகத்தளவில் வந்தபின் மட்டில்லாத உஷ்ணத்தோடு குளிரும்சேர்ந்து வினோதமாகி பரிபூரணமாகி முன் பின்னில்லாத லாஹூத்து, ஜபரூத்தென்னும் மகாம்களிலும் தரிபாடான உண்மைப் பெயரினால் கேடளவில் சாருதலில்லாது உனது திருவடிகளின் நிழலைப் பெற்றுக் கொண்ட அடிமையாகிய நான் உன் நினைப்பைவிட்டால் ஈடேறுவதெங்ஙனம்?

## வஸ்துதய நிலத்தினா நந்தம்.

பருதானி யத்திலோ சுப்ஹானியத்தெனப்
பகர்பரா பரம தனிலோ
பற்பல விதங்கொண்ட அஇயானி யத்திலோ
பரிபூர ணந்தன் னிலோ
அரிதான தாத்திலோ அலிபெனுஞ் சுகவாரி
யாகும்நுக் தாவ தனிலோ
அம்லல் உலாவான ஆலமலக் கூத்திலோ
ஆலம் அஸ்பல் தன்னிலோ
குறிகுணா தீதவட் டாங்கயோ கத்திலோ
கோடானு கோடி மறையாற்
கூறரிய சிவராஜ யோகத்தி லோவருட்
குறையாப் பெருக்க டலிலோ

நாலிங்க ருளாள னேநீ யிருப்பதிக்
காயினேற் கருள் செய்குவாய்
நற்குணம் குடிகொண்ட பாதுஷாவானகுரு
நாதன் முஹியித்தீனே.

(பொ-ரை) உயர்ந்தகுணத்தோடு வாசஞ் செய்திருந்த பாதுஷாவாகிய குருநாதனுனமுஹியித்தீனே! தனிக்குமிடத்தோ, தூய்மையென்று சொல்லும் பராபரவஸ்து வினிடத்தோ, பலபல விதங்கொண்ட பூதத்து வாரங்களிடத்தோ, எங்கும் நிறைந்து நிற்கும் பரிபூரணத்தினிடத்தோ, சொல்வதற்கரிதான தத்ஸொரூபத்தினிடத்தோ, அகாரமெனும் முத்திப்பொருளாகிய புள்ளியினிடத்தோ, உயர்வுக்கெல்லாம் உயர்வான தேவலோகத்தினிடத்தோ, தாழ்வான பாதாள லோகத்தினிடத்தோ, குறி குணங்கடந்த அட்டாங்க யோகமெனும் இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதியென்னும் எட்டு அங்க யோகத்தினிடத்தோ, கோடானு கோடி வேதங்களாலும் சொல்வதற்கரிதான சிவராஜ யோகத்தினிடத்தோ, அருள் குறையாத பெரிய கடலினிடத்தோ, அருளின் கடலைப்போல் உதவும்படியானவனே! நீ இருக்கும் தலம் இந்த நாயாகிறவனுக்குத் தெரியச்செய்குவாயாக.

விளையாட்டி ஞுநந்தம்.

அண்டகோ டிகளுமோர் பந்தெனக் கைக்குள்
ளடக்கி விளை யாட வல்லீர்
அகிலமோ ரேழினையு மாடுங் கறங்குபோ
லாட்டி விளை யாட வல்லீர்
மண்டலத் தண்டரை யழைத்தரு கிருத்தியே
வைத்துவிளை யாட வல்லீர்
மண்ணகமும் விண்ணகமு மனுவைத் தொலைத்துநின்
மாட்டிவிளை யாட வல்லீர்
கண்டித்த கடுகிலெழு கடலைப் புகட்டிக்
கலக்கி விளை யாட வல்லீர்
கருதரிய சித்தெலாம் வல்லநீ ரடிமையென்
கண்முன்வரு சித்தில் லையோ
நண்டளந் திடுநாழி யாவனே தேவரீர்
நல்லடிக் காளா கியும்
நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
நாதன் முகியித் தீனே.

(பொ-ரை) உயர்ந்த குணத்திற் கிருப்பிடமாயிருந்த பாத்துஷாவாகிய குருநாதன் என்று யாவருங் கொண்டாடத் தக்க முஹியித்தீனே! நீர் சர்வகோடி அண்டங்களையும் ஒரே பந்தைப்போல் கைக்

குள்ளே யடக்கி விளையாட வல்லீர்! எழுலகங்களையும் ஆடுகின்ற காற்ருடியைப்போல் ஆட்டித் திருவிளையாடல் செய்ய வல்லமை யுடையீர்! தேவலோகத்தி லிருக்குந் தேவர்களை யெல்லாம் சமீபத்தில் அழைத்து இருத்தி வைத்து விளையாட வல்லீர்! அணுவைத் தாளித்து அதில் பூலோகத்தையும், தெய்வ லோகத்தையும் வைத்து விளையாட வல்லீர்! பிளந்த கடுகின்கண் சத்த சாகரங்களையும் அழைத்துக் கலக்கி விளையாட வல்லீர்! இங்ஙனமாய நினைத்தற் கருமையான சித்துக்களிலெல்லாம் வல்லமையுடைய நீங்கள் அடியேனாகிய என்னுடைய கண்ணுக்கு முன் வந்து தரிசனங் கொடுக்குஞ் சித்தினையடையீரல்லீரோ? அங்ஙனம் இல்லையாயின், நான் தேவரீருடைய திருவடிகளுக்கு ஆட்பட்டும் வீணாக நண்டளக்கப்பட்ட நாழியாவேனோ? (எ-று

இறைவனை உள்ளபடியே யடைந்தவர்கள் சகல சித்திகளையும் உடையவர்க ளாவார்க ளென்பார், 'அண்டகோடிகளு மோர்பந்தெனக் கைக்குள்ளடக்கி விளையாடவல்லீர், அகிலமோரேழினையு மாடுங்கறங்கு போலாட்டி விளையாடவல்லீர், மண்டலத்தண்டரை யழைத்தருகிருத்தியே வைத்துவிளையாடவல்லீர், மண்ணகமும் விண்ணகமுமணுவைத்தொளைத்தகின் மாட்டிவிளையாடவல்லீர், கண்டித்தகடுகிலேழு கடலைப்புகட்டிக் கலக்கிவிளையாடவல்லீர், கருதரிய சித்தெலாம்வல்ல நீரடிமையென்கண்முன் வருசித்தில்லையோ' எனவும், நண்டை அளக்கும்படியானது வெறும்படியாவதுபோல் நானும் வீணாவேனோ, என்பார், 'நண்டளந்திடு நாழியாவேனோ தேவரீர் நல்லடிக்காளாகியும்' எனவுங்கூறினார். (3)

## தன்னியலினுநந்தம்.

ஐயோ வெனைப்போலு மாப்பெரும் பாவியிவ்
வகிலத்தி லெங்கு மிலையே
அநியாய மநியாய மென்பெரும் பாதகம
தார்பா லெடுத்தோ துவேன்
மையான கண்ணியர் வலைக்குள் ளாகப்பட்ட
மாபாவி தீபா வியான்
மருளுபுகு சூதுகாளி யானவுமை நாடாத
மடமைகுடி கொண்ட பாவி
பொய்யான வாழ்வதனை மெய்யாக நம்பியுன்
பொன்னடி மறந்த பாவி
பொல்லார்க ளோசமே யல்லாது நல்லோர்
புறக்கணித் திட்ட பாவி

கையுமோர் பொய்யுலக ளுகியே யுமதடிமை
நாயினுங் கடையா வனே
நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
நாதன் முகியித் தீனே.

(பொ-ரை) உயர்ந்த குணத்தில் வாசஞ்செய்திருந்த பாத்துஷா வாகிய குருநாதன் என்று யாவருங்கொண்டாடத் தக்க முகியித்தீனே! அந்தோ! என்னைப்போல கொடியபாவி இந்தவுலகத்தில் எங்குமில்லை யே, அநியாயமாயுள்ள என்னுடைய கொடும்பாவத்தை யாரிடத்தில் எடுத்துச சொல்லுவேன் மைதீட்டிய கண்களையுடைய பெண்களது மாய்கையாகிய வலைக்குள் அகப்பட்டுத் தவிக்கின்ற கொடும்பாவியாகி யவனும், மகுபூபு சுபுகானியாகிய உம்மை விரும்பாத அஞ்ஞானங் குடி கொண்ட பாவியும், பொய்யாகிய வாழ்க்கையை உண்மையாக நம்பி உன்னுடைய பொன்போலுந் திருவடிகளை மறந்த பாவியும், தீயோர் களுடைய சிநேகத்தையே கொள்ளுவதே யல்லாமல் நல்லோர்களு டைய சிநேகத்தைக் கொள்ளாத பாவியும், வருந்துகின்ற ஒப்பற்ற பொய்யுலகளுகிய உம்முடைய அடிமையாகிய நான் நாயைப்பார்க்கி லுங் கடையாவேனே? (எ-று) (4)

மகிமையினுநந்தம்.

மாதவர்க் கரசான மன்னர்க்கு மன்னுக
வந்தமக ராஜ னீயே
மண்டிசையும் விண்டிசையு மெண்டிசையு நின்றசையும்
வாசனும் போஜ னீயே
ஆதிநீ மகுருக்கு மகுமாலு நீயெனக்
கானமகு பூவு நீயே
அக்கா னியத்திலே சொக்குமிறு சாதுதந்
தருள்செய்ய வந்த நீயே
வேதநீ வேதவே தாந்தநீ யெனையாளும்
வித்தகன் ருனு நீயே
மெய்ஞ்ஞான வீடுநீ வீட்டின் விளக்குநீ
விரிகதிர்ச் சுடரு நீயே
நாதனீ நவநாத சித்தனீ முத்தனீ
நாதாந்த மூர்த்தி நீயே
நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
நாதன் முகியித் தீனே.

(பொ - ரை) உயர்ந்த குணத்தில் வாசஞ்செய்திருந்த யாத்துகநா வாகிய குருநாதன் என்று யாவருங் கொண்டாடத்தக்க முகியித்தீனே! மகத்தாகிய தவசிரேஷ்டர்களுக்கு தலைவராய் விளங்கும் தலைவர்களுக்கு தலைவனாய் வந்த மகாராஜன் நீயே யாவாய், பூமியிலும், ஆகாயத்திலும் அஷ்டதிக்குகளிலும் இருந்து அசைகின்ற வாசனாகிய போஜன் நீயே யாவாய், ஆதிப்பொருளும், மருக்கு றருமானும் நீயேயாவாய், எனக்கான மருபூவு நீயே யாவாய், அக்காணியத்தில் சொக்குகின்ற மிருசாதுதந்து திருவருள் செய்யவந்தவனும் நீயே யாவாய், வேதமும், வேதாந்தமும், நீயே யாவாய், என்னை ஆண்டடிமைகொள்ளுகின்ற வித்தகனும் நீயே யாவாய், உண்மையாகிய மோட்சவீடும் அந்த வீட்டின் விளக்கும் நீயேயாவாய், விரிகின்ற சூரியனுடைய சுடரும் நீயே யாவாய், நாதனும், நவநாதசித்தனும், முத்தனும், நாதாந்த மூர்த்தியும் நீயே யாவாய், ஆகையால் என்னை ஆண்டருள் செய்யவேண்டும். (எ-று)

முகியித்தீனென்பவர் சர்வ தவசிரேஷ்டர்களென்பார், 'மாதவர்க்கரசான மன்னர்க்கு மன்னாக வந்த மகராஜனீயே' எனவும், இந்தச்சிறப்பு எங்கும் உண்டென்பார், 'மண்டிசையும் விண்டிசையு மெண்டிசையும்நின்றசையும் வாசனும்போஜனீயே' எனவும், ஆதிமுதலிய சர்வ பொருள்களும் அவனே யாகின்றானென்பார்,'ஆதி நீ மருக்கு றருமானு நீ யெனக்கான மருபூவுநீயே' எனவும், மற்றயாவும் நீயே என்பார், 'அக்காணியத்திலே சொக்கு மிருசாது தந்தருள்செய்யவந்த நீயே' எனவும், வேதமுதலியவற்றின் கூறப்படும் பயனாயுள்ளவனும் இவனேயென்பார், 'வேதநீ வேதவேதவாந்தநீ யென்னையாளும் வித்தகன்றானுநீயே' எனவும், ஞானசாதனத்திற்குரிய சர்வபொருள் களும் இவனேயாவானென்பார், 'மெய்ஞ்ஞானவீடுநீ வீட்டின் விளக்குநீ விரிகதிர்ச்சுடருநீயே' எனவும், யாவருக்குந் தலைவனா யிருத்தல் முதலிய மூர்த்தியாயுள்ளவன் நீயே யென்பார், 'நாதனீ நவநாத சித்தனீ முத்தனீ நாதாந்த மூர்த்தி நீயே' எனவுங் கூறினார். (5)

வலிமையினுநந்தம்.

மன்னிய தவத்தினர்க் கருடந்த குருவுநீ
மாதா பிதாவு நீயே
மட்டறு பவக்கட றெலைக்குமொரு கவிழா
மரக்கலமு நீயல் லவோ
அந்நியம தானபிர பஞ்சமாம் பெருநெருப்
படக்கும் பெரும்பா லமா
யன்புட னெனைப்பெற்ற வப்பனே யருடந்த
வாண்டவனு நீயல் லவோ
என்னையுனை யன்றியினி யாள்வரெவ ரையனை
யெந்தையே யெம்பி ரானே

இகபா ரிரண்டினுஞ் சுகதுக்க மற்றியா
னீடேற வருள்பு ரியவே
கன்னிலைய மாகவென் முன்னிலையில் வந்துமெந்
நாளுமரட் சித்த ருள்வையே
நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
நாதன் முகியித் தீனே.

(பொ-ரை) நல்ல குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற பாத்துஷாவாகிய ஞானசிரியனை முகியித் தீனே! நிலைபெற்ற தவசிரேஷ்டர்களுக்குத் திருவருள்செய்த குருவும், மாதாபிதாக்களும், அளவுசொல்லப்படாத பாவமென்னுங் கடலைக் கடத்தற்குரிய மரக்கலமும், அந்நியமாயுள்ள பிரபஞ்சமாகிய பெரு நெருப்பை அடக்குகின்ற பெரிய பாலமாய் என்னை அன்பினால் பெற்ற அப்பனும், எனக்கு திருவருள்செய்த ஆண்டவனும் நீயே யல்லவா? ஆகையால், இனி என்னை ஆள்பவர் உன்னையல்லாமல் யாவரிருக் கின்றனர்? எம்முடைய தந்தையே! எம்முடைய பெருமானே! நீர் இம்மை மறுமை இரண்டிடத்திலுமுள்ள சுக துக்கங்கள் நீங்கி ஈடேற த்திருவருள் செய்தற்பொருட்டு நன்மையான நிலயத்துடன் எனக்கு முன்பாகவந்து எக்காலத்திலுங் காப்பாற்றித் திருவருள் செய்யவேண்டும்.

உலகத்திலுள்ள தவசிரேஷ்டர்களுக்குந் திருவருள் செய்பவன் இவனே யென்பார், 'மன்னிய தவத்தினர்க்கருடந்தகுருவும்' எனவும், சர்வ ஆன்மகோடிகளுக்கும் இறைவனே தாயுந்தகப்பனு மாவானெனன் பார், 'மாதாபிதாவுநீயே' எனவும், ஆணவ மாய்கைகளை யொழிக்க இவனையன்றி வேறில்லை யென்பார், 'மட்டறுபவக்கடல்தொலைக்கு மொருகவிழாமரக்கலமுநீ யல்லவோ' எனவும், உலக வியவகாரமாகிய ஒரு நெருப்பை அவிழ்க்க இறைவன் ஒரு பாலமாவானென்பார் 'அந்நியம தானபிர பஞ்சமாம் பெருநெருப்படக்கும் பெரும்பாலமா மாய்' எனவும், என்னை ஆண்டருளத் திருவருள் செய்யவேண்டு மென்பார், 'அன்புட னெனைப்பெற்ற அப்பனே யருடந்தவாண்டவனு நீ யல்லவோ' எனவுங்கூறினர். (6)

### இரக்கத்தினுநந்தும்.

கல்லு மொருபோதிற் கரைந்துருகு மென்மனக்
கற்கரைவ தில்லை யனே
கலைகளை யிவளவென் றென்னுணை யென்றாற்
கணித்துமுடி கூடு திலையே
அல்லும் பக லாகவென் னவகீர்த்தி யவகீர்த்தி
யாம்மாம வென்சொல் லுமேகன்
ஆறுனு மாக்காக வடிமைகொண் டாயிந்த
வடியனை னுய்யும் வண்ணஞ்

சொல்லு மெய்ஞ்ஞானச் சுகக்கடலை யுண்டியான்
சும்மா விருக்க வருள்வாய்
சுத்தபரிபூரணச் சுகவாரி தன்னிலோர்
சொட்டாகி னுந்தொட் டபேர்
நல்லவர்க ணல்லவர்க ணல்லவர்க ளென்றைக்கு
நானுநல் லவனு வனோ
நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
நாதன் முகியித் தீனே.

(பொ-ரை) உயர்ந்த குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருந்த பாத்துஷாவாகிய ஞானாசிரியனான முகியித்தீனே! கல்லாவது ஒருகாலத்தில் கரைந்து உருகும், என்னுடைய மனமாகிய கல்லானது கரைவதில்லையே, என்னுடைய கவலைகளை இவ்வள வென்று எடுத்துச்சொல்லவும் ஆகிறதில்லை. இராப்பகலாக என் னுடைய அபகீர்த்தியை என்னவென்று எடுத்துச் சொல்லுவேன், இப்படி யிருந்தாலும் நீ யார்க்காக அடிமை கொண்டாய், ஆகையால் அடியேனாகிய நான் பிழைக்கும்படியும், உண்மை ஞானமென்னுஞ் சுகக்கடலை யுண்டு சும்மாவிருக்க திருவருள்செய்வாய், சுத்த மாகிய நிறைந்த சுகக்கடலில் ஒரு சொட்டாவது தொட்டபேர்கள் நல்லவர்கள் ஆகையால் நான் என்றைக்கு நல்லவனாவனோ? (எ-று)

கல்லினும் வலிது நெஞ்சமென்பார், 'கல்லு மொருபோதிற் கரைந்துருகுமென் மனக்கற் கரைவதிலை யையனே' எனவும், அதனால் நான் படுந்துன்பங்களுக்கு அளவில்லை யென்பார், 'கவலை களை யிவளவென் றென்னாலே யென்னாற் கணித்து முடிகூடுதிலையே' எனவும், என்னுடைய அவகீர்த்தியானது என்னை இரவும் பகலும் வருத்துகின்றதென்பார், 'அல்லு பகலாக வென்னவகீர்த்தி யம்மம்ம வென்சொல்லுகேன்' எனவும், இவ்வளவு மிருக்க என் அடிமைகொண் டா யென்பார், 'ஆனாலுமார்க்காகவடிமை கொண்டாயிந்த வடியனே னுய்யும்வண்ணம்' எனவும், இறைவன் அடிமை கொண்டுவிட்டால் அதற்குறிய வழிகளை யெல்லாந் தேடவேண்டு மென்பார், 'சொல்லு மெய்ஞ்ஞான சுகக்கடலை யுண்டியான் சும்மாவிருக்க வருள்வாய்' எனவும், அங்ஙனம் இறைவனுடைய திருவருளை யடைந்தவர்கள் மிகவும் நல்லவராவார்கள் என்பார், 'சுத்தபரிபூரணச் சுகவாரி தன்னி லே சொட்டாகினுந் தொட்டபேர் நல்லவர்க ணல்லவர்க ணல்லவர் கள்' எனவும், இக்குணங்களொன்று மில்லாதவர்கள் எப்படி உஜ்ஜீ விப்பார்க ளென்பார், 'என்றைக்கு நானு நல்லவனாவனோ' எனவுங் கூறினார். (7)

பெருமையினுநந்தம்

சொல்லான் முழக்கமிட் டோலமிடு வேதமுஞ்
சொன்னது டனின்ன மின்னஞ்

சுருதிமுத லாகம புராணகலை யோதிய
 சுலோகங்க ளென்சொல்லுகேன்
பல்லா யிரங்கோடி யண்டபகி ரண்டமுன்
 பாதபங் கயமல் லவோ
பரிபூர ணனந்த மேயுனது முடியெனப்
 பகர்வதும் பொய்யா குமோ
வல்லா னெனும்பெய ருனக்குள்ள தல்லாது
 மற்றவர் தமக்கு முளதோ
வானவர் தினந்தினம் வந்துன் பதம்பணியு
 மகிமைசொல வாயு முண்டோ
நல்லோர் தமக்கலா தெல்லார் தமக்குமுனை
 நவிலுதற் கெளிதா குமோ
நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
 நாதன் முகியித் தீனே;

(பொ-ரை) உயர்ந்த குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருந்த பாதுஷாவாகிய ஞானாசிரியனான முகியித்தீனே! சொல்லுகளால் கோஷித்துச சப்திக்கின்ற சதுர்வேதங்களும், சொன்ன விஷயங்களுடனே இன்னுமின்னமும் சுருதிமுதலிய ஆகமங்கள், புராணங்கள், சாஸ்திரங்கள், சொல்லப்பட்ட சுலோகஙகள் ஆகிய இவைகளை என்னவென்று எடுத்துச்சொல்வேன்? ஏனெனில் அளவுசொல்லப்படாதஆயிரங்கோடி உள்ளண்டங்களும் வெளியண்டங்களும் அவற்றில் வாழ்கின்றவர்களும் உன்னுடைய திருவடித்தாமரைகளல்லவோ? உலகர்களும், சாஸ்திரங்களும், எங்கும்நிறைந்திருப்பதே உன்னுடைய திருமுடியென்று சொல்லுவதும் பொய்யாகுமா?சர்வ பொருள்களிலும் அவற்றின் காரியங்களிலும் வல்லவன் என்கிற பெயரானது உனக்கிருக்கின்றதே யல்லாமல் வேறு யார்க்கிருக்கின்றது? ஒருவருக்குமில்லை தேவர்களெல்லாம் தினமும் வந்து உன்னுடைய திருவடிகளை வணஙகுகின்ற மகிமைகளைச் சொல்லுதற்கு வாயுமிருக்கின்றதா? நல்லவர்களுக்கே யல்லாமல் மற்றவர்களுக்கு எல்லாம் உன்னுடைய புகழைச் சொல்லுவதற்கு இலேசாகுமோ? ஆகாது. (எ-று)

வேதமுதலியவைகள் யாவும் இறைவனுடைய திருப்புகழை யுணராதென்பார், 'சொல்லான் முழக்கமிட் டோலமிடு வேதமுஞ் சொன்னதுடனின்னமின்னஞ்-சுருதிமுத லாகம புராண கலையோதிய சுலோகங்களென்சொல்லுகேன்' எனவும், உலகத்தில் அண்டபகிரண்டங்களிலெல்லாம் இறைவனுடைய திருவடிகளே வியாபகமென்பார், 'பல்லாயிரஙகோடி யண்டபகிரண்டமுன்பாத பஙகயமல்லவோ' எனவும்; இவை யாவும் யாவராலுஞ்சொல்லமுடியா வென்பார்,

'நல்லோர் தமக்கலா தெல்லார் தமக்குமுனை நவிலுதற் கெளிதாகுமோ' எனவுங் கூறினர். (8)

**தன்னிலையினுநந்தம்.**

நித்திரை தனிற்செத்த பொய்யான மெய்யுடலை
 நிலையையென் றிடுவ தல்லால்
நிலையாத காயமென் றெண்ணுவோர் கனவினு
 நிசமாக யான றிகிலேன்
எத்தனை விதங்கடான் கற்கினுங் கேட்கினு
 மென்மனந் திணங்கு நிலையே
எதென் றெடுத்துரைப் பேமெனக் கிறைவனை
 யெங்கோ னெனும்பி ரானே
மற்றவர்க ளெத்தனை யிருக்கினு மென்கொடிய
 வல்வினை யகற்ற வசமோ
மலையிலக் கெனநம்பி னேனைப்பி னேனென்று
 வந்தெனுட் குடிகொள் வையே
நற்றவமு முத்தியுஞ் சித்தம்வைத் தருள்செய
 நாட்செல்லு மோவ றிகிலேன்
நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
 நாதன் முகியித் தீனே.

(பொ-ரை) நல்ல குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தி லெழுந்தருளியிருந்த பாத்துஷா வென்னும் பேரையுடைய குருநாதனாகிய முகியித்தீனே! நித்திரையில் செத்த பிணம்போல் கிடைக்கின்ற பொய்யாகிய சரீரத்தை அழியாதிருப்பதென்று சொல்லுவதல்லாமல் இது நிலையில்லாத சரீரமென்று நினைக்க ஒரு கனவிலும் உண்மையாக நான் அறியவில்லை. எத்தனை வகைகளான விஷயங்களையாகிலுங் கற்றுக்கொண்டாலுங் கேட்டாலும் என்னுடைய மனமானது ஒடுங்கவில்லையே, எதென்றெடுத்துச் சொல்லுவேன்? எங்களுக்குத் தலைவனே! எம்முடைய கோனென்னும் பெருமானே! மற்றவர்கள் எத்தனை பேரிருந்தாலும் என்னுடைய கொடிய தீவினையை யொழிக்க வசமாமோ? ஆனாலும் உன்னையே நான் மலையிலக்கென்று நம்பினேன், ஆகையால் நீ என்றைக்கு வந்து என்னுடைய மனத்தில் குடிகொள்ளுவீரோ? உயர்ந்த தவமும் முத்தியும் ஆகிய இவைகளை மனம் வைத்துத் திருவருள் செய்ய நாள்செல்லுமோ அதை நான் அறியமாட்டேன். (எ-று)

சரீரமானது அழிவுள்ளதென்பார், 'நித்திரைகளிற் செத்த பொய்யான மெய்யுடலை நிலயமென்றிடுவதல்லால் நிலையாத காயமென் றெண்ணுவோர் கனவினு நிசமாக யானறிகிலேன்' எனவும், மனமானது எந்த விடத்தும் ஒடுங்குவதில்லை யென்பார், 'எத்தனை

விதங்கடான் கற்கினுங் கேட்கினு மென்மன திணங்குதிலையே' எனவும், எத்தனை பேரானவர்களிருந்தாலும் இறைவனைப்போல் காப்பாற்றக் கூடியவர் ஒருவருமிரார் என்பார், 'மற்றவர்களெத்தனை யிருக்கினுமென்கொடிய வல்வினை யகற்ற வசமோ' எனவும், இறைவனையே யாவரும் நம்பவேண்டுமென்பார், 'மலையிலக்கென நம்பினேனம்பினே னென்றுவந்தே னுட்குடிகொள்வையே' எனவுங் கூறினர். (9)

காரணத்திருநந்தர்.

கடலிற் கவிழ்ந்ததோர் கப்பலா லாத்துடன்
கடுகிவர வேயழைத்தீர்
கம்பமுட னோடியே வந்ததோர் கப்பலைக்
கடிபூனை யாக்கி வைத்தீர்
குடிகொண்டு கர்ப்பவறை யுள்ளிருக் கையிலுமைக்
கொலைசெய்ய வந்த முனியைக்
குதிகொண்டு வெளிசென்று மிருதுண்டு கண்டுபின்
கூர்கர்ப்ப வறைபுகுந்தீர்
பிடியிற் பிடித்துண்ட பிள்ளைசந் நியாசிகுடர்
பீறிவர வேயழைத்தீர்
பிரியம்வைத் தென்னையாள வென்னிடத் திந்தவிரு
பேரையுந் தூது விட்டீர்
நடனமிடு பாதார விந்தமென் சென்னியுற
நாட்செல்லு மோசொல் லுமே
நற்குணங் குடிகொண்ட பாததுஷா வானகுரு
நாதன் முகியித் தீனே.

(பொ-ரை) நல்ல குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்திலெழுந்தருளியிருந்த பாத்துஷா என்னும் பெயரையுடைய குருநாதனாகிய முகியித்தீனே! சமுத்திரத்தினிடத்தில் கவிழ்ந்த ஒரு கப்பலை சீக்கிரமாக ஆலாத்துடன் வரவழைத்தீர், கொடிக் கம்பத்துடன் ஓடிவந்த ஒரு கப்பலைக் கடியதொரு பூனையாக்கி வைத்தீர், நீர் கர்ப்பவறையிற் குடிகொண்டிருக்கும்போது உம்மை அவ்விடத்திற் கொல்லவந்த முனியை வெளியேவந்து இருதுண்டாகச் செய்து பின் கர்ப்பவறைக்குள் புகுந்தீர், ஒரு பிடியாகப் பிடித்துண்ட பிள்ளையைச் சந்நியாசியினுடைய குடரைப்பீறி வெளியில் வரவழைத்தீர், எம்மிடத்திற் பிரியம் வைத்து என்னையாளுதற்கு இந்த இருவரையுந் தூதுவிட்டீர், இங்ஙனஞ் செய்த நீர் நடனஞ்செய்கின்ற உம்முடைய பாதபங்கயங்களை என்னுடைய சிரசின்மேல்வைக்க நாட்செல்லுமோ அதைச் சொல்லும்

அநேக காரியங்களைச் செய்தருளின உமக்கு உம்முடைய திருவடிகளை எமக்குக் கொடுக்க நாள்செல்லுமோ? என்பது கருத்து. (10)

ஆநந்தமாகிய பேரின்ப வனுபோக நிலையாற்கூறிய இப்பத்துக் கவியும் குருபரனை யொருபாநுகக்கொண்டாடித் தோத்திரஞ்செய்தது.

முற்றுப் பெற்றது.

# முகியித்தீன் சதகம்.

ஏகவறிவாகிய வள்ளலிறசூலைத் தொடர்ந் தவாருட்பெறு வான் பொருட்டாக முன்னிலைக் குருவாகிய முகி யித்தீன் ஆண்டகையைத் தோத்திரஞ்செய்து குறையிரந்துவந்து பாடிய சதகம்.

## குருவணக்கம்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

உணர்ந்துதற் பரமா யுரைக்ககோ சரமா
  யுயிர்க்குயி ரானசா கரமாய்
இணங்குசிற் பரமா யணுக்கடா பரமா
  யேகமா கியபரா பரமாய்
வணங்கிக பரமாய்க் கிளைத்தநூ றுமுகம்
  மதுகிளை விளக்கொளி கொழிக்குங்
குணங்குடி வாழ முகியித்தீ னாமென்
  குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம்.

(பொ-ரை) தற்பரமா யுணர்ந்து சொல்லுதற்கு முடியாததாய், 'உயிருக்குயிரான கடலாய், பொருந்தின ஞானபரமாய், அணுக்களாய், தாபரமாய், ஒன்றாகிய பராபரமாய், வணங்குகின்ற இகபரமாய்க், கிளைத்த நூறு முகம்மது கிளைவிளக்கொளியானது கொழிக்கின்ற குணங்குடியென்னும் திவ்வியக்ஷேத்திரத்தி லெழுந்தருளி யிருக்கின்ற முகியித்தீனாகிய எம்முடைய ஆசாரியருடைய திருவடிகளை எம்முடைய சிரத்தின்மேல் வைத்துக்கொள்வோம்.

இறைவன் ஞானசொரூபனென்று உணரவேண்டுமென்பார், உணர்ந்து தற்பரமாய்' எனவும், அவன் இப்படிப்பட்டவ னென்று வாயாற் சொல்லமுடியாதென்பார், 'உரைக்க கோசரமாய்' எனவும், எல்லா உயிர்க்களிலுங் கலந்தவனென்பார், 'உயிர்க்குயிரான சாகர மாய்' எனவும், சிதாகாயப் பொருளென்பார், 'இணங்கு சிற்பரமாய், எனவும், கண்ணுக்குத் தெரியாமலிருப்பதனால், 'அணுக்கள்' எனவும், கண்ணுக் கடங்காமையால், 'தாபரமாய்' எனவும், அத்துவித வஸ்து வென்பார், 'ஏகமாகிய' எனவும், பரவஸ்து வாகவும், அபரவஸ்து வாகவும் விளங்குவோன் இறைவனே யென்பார், 'பராபரமாய்' எனவும், இம்மை மறுமைப் பயன்களை யடைவிப்பவன் இவனே யென் பார், 'வணங்கிகபரமாய்க் கிளைத்த நூறுமுகம்மது கிளைவிளக் கொளி கொழிக்கும்' எனவும், அவனையே நாம் வணங்கவேண்டு மென்பார்' 'குணங்குடி வாழு முகியித்தீனாமென் குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம்' எனவுங்கூறினார். (1)

வணங்குவார்க் கிணங்கு பெரியபே ரின்ப
வாரியிற் படிந்துவாய் மடுத்தே
உணர்ந்துணும் பொருட்டா வலியவந் தெனையாண்
டுவந்துளங் களித்தக மகிழ்ந்தே
அணைந்தணைந் தெடுக்குங் கருணைகொப் பளிக்கு
மலகிலா வருளடை கிடைக்குங்
குணங்குடி வாழு முகியித்தீ னுமென்
குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம்.

(பொ-ரை) (உள்ளன்போடு) வணங்குபவர்களுக்கு இணங்கி திருவருள் செய்கின்ற பெரிய பேரானந்த மென்னுஞ் சமுத்திரத்தில் மூழ்கி அதில் வாய் வைத்து உணர்ந்து அதை யுண்ணும் பொருட்டாக வலிய வந்து என்னை அடிமை கொண்டுமனங்களித்து திருவுள்ளஞ் சந்தோஷத்தை யடைந்து அணைந்தணைந்து எடுக்கின்றகிருபையானது கொப்பளிக்கின்ற அளவில்லாத திருவருளானது அடைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற முகியித்தீனாகிய எம்முடைய ஆசாரியருடைய திருவடிகளை எம்முடைய சிரத்தின்மேல் வைத்துக் கொள்வோம். (எ-று)

இறைவன் உள்ளபடியே அன்புடன் வணங்குவோர்களுக்கு இரங்கி யருள்செய்கின்றவ னென்பார், 'வணங்குவார்க் கிணங்கு' எனவும், இறைவனை உணர்ந்தவர்கள் சதா இன்பசாகரத்தி லழுந்தவா ரென்பார். 'பெரிய பேரின்பவாரியிற்படிந்து' எனவும், அதை யனுபவிக்க வேண்டுமென்பார், 'வாய்மடுத்தே உணர்ந்துணும் பொருட்டாய்' எனவும், அங்ஙனம் நடத்துவோர்க்கு இறையவன் வலியவந்து ஆட் கொள்ளுவா னென்பார், 'வலியவந் தெனையாண்டுவந்து' எனவும், அதனால் இறைவனுடைய திருவுள்ளஞ் சந்தோஷத்தையடையுமென் பார், 'உளங்களித் தகமகிழ்ந்தே அணைந்தணைந் தெடுக்குங் கருணை கொப்பளிக்கும்' எனவும், திருவருளானது அளவில்லாம லிருக்குமென் பார் 'அலகிலா அருளடை கிடைக்கும்' எனவும், இப்படிப்பட்ட இறையவனுடைய திருவடிகளை வணங்கவேண்டு மென்பார், 'குணங் குடி வாழு முகியித்தீ னுமென் குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம்' எனவுங்கூறினர். (2)

அணைந்துயிர்க்குயிரா யலர்மட லவிழ்ந்த
வகண்டிதா காரமா மலரின்
மணங்கமழ் நபினூர் மூகம்மத மென்னு
மௌனதே சிகருட னெனையுந்
துணிந்துமா மாயைத் துணியெலாங் கிழித்துத்
துறவறந் தாக்கியா ராக்குங்

குணங்குடி வாழு முகியித்தீ னுமென்
குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம்.

(பொ-ரை) உயிருக் குயிராகச் சேர்ந்து திருவருள் மலரின் மடலானது அவிழ்ந்த அகண்டிதாகாரமாகிய புஷ்பத்தினுடைய வாசனையானது வீசுகின்ற நயினூர் முகம்மதர் என்கிற மௌனுசிரியனுடன் அடியேனையும் மனமானது துணிந்து மகத்தாகிய மாயை யென்னுந் திரைச்சீலை யெல்லாவற்றையுங் கிழித்து துறவறத்தை மேற்கொண்டவராகச் செய்யும் குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தி லெழுந்தருளி யிருந்த முஹியித்தீனுகிய என்னுடைய ஞானுசிரியனுடைய திருவடிகளை எம்முடைய சிரத்தின்மேல் வைத்துக்கொள்ளுவோம். (எ-று)

இறைவன் சர்வ பிராணிகளுக்கும் உள்ளறிவாய் விளங்குவோனென்பார், 'அணைந்துயிர்க் குயிராய்' எனவும், அகண்டாகாரத்தின் மேல் இறைவனுடைய வியாபகம் மேம்பட்டிருக்கு மென்பார், 'அலர் மடலவிழ்ந்த வகண்டிதாகாரமா மலரின் மணங்கமழ்' எனவும், இப்படிப்பட்ட கீர்த்தியை யடைந்தவர்கள் நயினூர் முகம்மதர்களென்பார், 'நெயினூர் முகம்மதரென்னும்' எனவும், அதனுல் அவர்கள் மௌனஞானிக ளானுர்க ளென்பார், 'மௌனதேசி கருடன்' எனவும் அவர்களுடன் என்னையுஞ் சேர்க்க வேண்டு மென்பார், 'எனையும் துணிந்து, எனவும், உள்ளன்பர்களுடைய மாய்கையைநீக்கித் துறவறமளிப்பவன் இவனே யென்பார், 'மாமாயைத் துணியெலாங் கிழித்துத் துறவறந்தாங்கியாராக்கும்' எனவும், இவ்வளவும் செய்பவன் குணங்குடி வாழும் இறையவ னென்பார், 'குணங்குடிவாழு முகியித்தீனுமென் குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம்' எனவுங்கூறினுர். (3)

## நூன்முகம்.

மாயா விநோத மெல்லாமறைந்து
தூயாதி யுண்மைச் சுயம்பிர காசிக்கக்
காரணக் குருவின் கருணையந் தொடர்பால்
ஆரணக் குருவே யருள்கவென் றிரத்தல்.

(பொ-ரை) இப்பதிகமானது மகாமாய்கையின் விசித்திரமாகிய யாவும் மறைந்து பரிசுத்தம் முதலாகிய உண்மையானது இயற்கையாகவே விளங்க காரணகுருவினுடைய கிருபையாகிய தொடர்ச்சியினுல் ஆரணகுருவேயென்று நீர் திருவருள் செய்யவேண்டு மென்று குறையிரத் தலாகும். (எ-று)

## ஆசிரிய விருத்தம்.

ஆதிமுன் னிற்கவே யகதுகது வாகிநிய்
யத்தெனது முன்னிற் கவே

யத்துவித வஸ்துமுன் னிற்கவே யறிவகண்
டாகார முன்னிற் கவே
போதமுன் னிற்கவே போதமனு காதபரி
பூரணம் முன்னிற் கவே
பொங்குசிவ ஞானமுன் னிற்கவே வானுதி
பூதலய முன்னிற் கவே
நாதமுன் னிற்கவே நாதவொளி பெற்றநபி
நாயகம் முன்னிற் கவே
நானுமுன் னிற்கவடி யேனுமுமை நம்பினே
னன்மைதந் தாளு தற்கே
மாதா வினுங்கருணை யுள்ள நீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தி லெழுந்தருளியிருந்த என்னுடைய இரண்டுகண்களின் மணிபோன்றவனே! முகியித்தீனே! முதன்மைப்பொருளே! நீ முன்னிற்கக்கடவாய்; அகதுகதுவாகி தியத்தமான பொருளானது என்னுடைய முன்னிற்கக்கடவது; அத்துவிதப்பொருளானது என்னுடைய முன்னிலையில் நிற்கக்கடவது: அறியும் அகண்டாகார வஸ்துவும் எனக்குமுன்னிற்கக்கடவது; ஞானமானது முன்னிற்கக்கடவது; அந்தஞானத்தைச் சேராத பரிபூரண வஸ்துவானது எனக்கு முன்னிற்கக்கடவது; விளங்குகின்ற சிவஞானமானது எனக்கு முன் நிற்கக்கடவது; ஆகாயம் முதலாகிய பூதங்களின் லயமானது எனக்கு முன் நிற்கக்கடவது; நாதமானது எனக்கு முன் நிற்கக்கடவது; இறைவனுடைய தேஜோமயத்தை யடைந்த நபிநாயகமானது முன் நிற்கக்கடவது; நானும் எல்லாரும் முன்னே நிற்கக்கடவேன், ஆகையால் அடியேனுகிய நானும் எனக்கு நன்மையைத்தந்து திருவருள் செய்வாயென்று உம்மை மிகுதியும் நம்பினேன். ஆகையால் தாயைப்பார்க்கிலு மிகுந்த கிருபையுள்ள நீர் நாங்கள் பின்தொடர வள்ளலாகவும் இறசூலாகவும் வரக்கடவர். (எ-று)

இறைவன் முதற்பொருளென்பார், 'ஆதி' எனவும், குரான் பெரியவரென்பார், 'அகதுகதுவாகிதியத்து' எனவும், இறைவன் இரண்டற்றவனென்பார், 'அத்துவித வஸ்து' எனவும், அகண்டாகாரமும் இறைவனுக்கே உரியதென்பார், 'அறிவகண்டாகாரம்' எனவும், ஞானசொரூபன் இறைவனே யென்பார், 'போதம்' எனவும், சர்வ வியாபகம் பொருளென்பார், 'போதமனுகாத பரிபூரணம்'

எனவும், சிவஞானமே பெரியவர்களுக்குத் ததும்புவதென்பார், 'பொங்குசிவஞானம்' எனவும், ஐம்பூதங்களுடைய தோற்றவொடுக்கங்களும் அவனேயாவானென்பார், 'வாளுதிபூதலயம்' எனவும், இறைவன் நாததத்துவனு மாவானென்பார், 'நாதம்' எனவும், நாதத்திற்குண்டாகின்ற ஞானதேஜஸாம் இறைவனே யாவானென்பார், 'நாதஞெளிபெற்ற நபிநாயகம்' எனவும், நாங்களெல்லாம் இறைவனுக்கு அடியவர்களாவோமென்பார், 'அடியேனு முமைநம்பினேன்' எனவும், இறைவன் அடியார்களுக்கு திருவருள் செய்பவனென்பார், 'நன்மைதந்தாளுதற்கே' எனவும், இறைவன் தாயைவிடக் கருணையுள்ளவனென்பார், 'மாதாவினுக் கருணையுள்ள நீர்' எனவும்; இறைவன் அன்பர்களுடைய செய்கைகளைச் செய்யுநிமித்தம் பின்னே திரியவேண்டுமென்பார், 'பின்தொடர வள்ளலிறசூல் வருகவே' எனவும், இறைவன் கண்மணி போன்றவனென்பார், 'வளருமரு ணிறை குணங்குடிவாழுமென்னிரு கண்மணியே முகியித்தீனே' எனவுங்கூறினர். (1)

நீக்கமற வெங்கெங்கு நின்றுநிறை கின்றபொரு
ணேரிலென் முன்னிற் கவே
நிர்விஷய சுத்தமா சற்றபர வெளியான
நிர்க்குணமென் முன்னிற் கவே
தாக்கிமா கோடிமறை வாக்கியம் பறையுமா
தத்வமென் முன்னிற் கவே
தத்துவா திகளற்ற முத்திக்கு வித்தான
சற்குருவென் முன்னிற் கவே
போக்குவர வற்றபரி பூரண னந்தமெய்ப்
போதமென் முன்னிற் கவே
புன்மைகுடி யானவடி யேனுமுமை நம்பினேன்
பொய்ம்மைநீர்த் தாளு தற்கே
வாக்குமா ருதநாக் குள்ளநீர் பின்தொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி யென்னுந் திவ்விய க்ஷேத்திரத்தி லெழுந்தருளி யிருந்த என்னுடைய இரண்டு கண்களின் மணிபோன்றவனே! முகியித்தீனே! இடைவிடாமல் எவ்விடத்திலும்வியாபித்து நிறைகின்ற பொருளானது நேராகவந்து என் கண் முன்னர் நிற்கக்கடவது; யாதொரு விஷயமுமில்லாத பரிசுத்தமான குற்றமற்ற மேலான வெளியான நிர்க்குணமானது எனக்குமுன்நிற்கக்கடவது; கோடி என்னும் எண்ணுள்ள வேதங்க

ளெல்லாந் தங்கள் தங்கள் விஷயங்களை வெளிப்படையாகத் தாக்கி அநேக மர்மமான வாக்கியங்களை பறையடித்தாற்போலும் பண்ணுகின்ற மகத்தாகிய தத்துவமானது எனக்கு முன்னே வந்து நிற்கக்கடவது; தொண்ணூற்றாறு தத்துவங்களையுங் கடந்து மோட்சத்துக்கு முக்கியாதாரமானஞானாசிரியரானவர் எனக்குமுன்னே நிற்கக்கடவர்; இறப்புப் பிறப்பற்ற பரிபூரணானந்தமானது எந்தக்காலத்திலும் எனக்கு முன் நிற்கக்கடவது; அற்பத் தன்மையானது குடிகொண்டிருக்கிற அடியேனும் நீர் எம்முடைய பொய்ம்மைக் குணங்களை யறவே யொழித்துக் கிருபை செய்வீரென்று உம்மை நம்பினேன்; வசனம் என்றைக்கும் பிறழுதலில்லாமல் ஒரே தன்மையா யிருக்கின்ற நீர், நாங்கள் பின்றொடரும்படி வள்ளலாகவும், இறசூலாகவும் முன்னதாக வர வேண்டும். (எ-று)

சர்வேஸ்வரன், இவர்கள் துஷ்டர்களென்றும்,இவர்கள் நல்லவர்களென்றும், இது நல்ல இடமென்றும், இது கெட்ட இடமென்றும் நினைக்கக்கூடிய மாறுபாடில்லாமல் எங்கும் நிறைந்திருக்கின்றானென்பார், 'நீக்கமற வெங்கெங்கும் நின்றுநிறைகின்றபொருள்' எனவும், அது எந்தவிஷயத்திலுந் தலையிட்டுக்கொள்ளாததென்பார். 'நிர்விஷய சுத்தமாய்' எனவும், பேராகாயசொரூபமுடையதென்பார், 'பரவெளியான' எனவும்; குணாதீதப்பட்டதென்பார், 'நிர்க்குணம்' எனவும்; சதுர்வேதங்களாலும் பலகாலும் முறையிடப்படுவதென்பார், 'தாக்கிமாகோடி மறைவாக்கியம் பறையுமாதத்துவம்' எனவும், இறைவன் மோட்சத்துக்குக் காரணபூதனா யுள்ளவனென்பார், 'முத்திக்கு வித்தான' எனவும்; ஞானமே சொரூபமாக வுள்ளவனென்பார், 'சற்குரு' எனவும்; அவனுக்கு ஜெநமமும் ஜெநமம் அறுதலு மில்லையென்பார், 'போக்கு வரவற்ற' எனவும், எங்கும் நிறைந்தவனென்பார், 'பரிபூரணானந்தம்' எனவும், இவன் எந்தக்காலத்திலும் என்முன் தரிசனங் கொடுக்க வேண்டுமென்பார், 'எப்போதுமென் முன்னிற்கவே' எனவும்; நானோ யாவரினும் அறிவினிற் கடைப்பட்டவனென்பார், 'புன்மைகுடியான வடியேன்' எனவும், யாவரும் கடவுளை நம்பவேண்டுமென்பார்' 'உமை நம்பினேன்' எனவும்; இறைவனுக்கு ஆன்மாக்களுடைய துர்க்குணங்களை நீக்கியாளவேண்டியது கடைமையாதலால், 'பொய்ம்மை தீர்த்தாளுதற்கே' எனவும்; இறைவன் ஒருமொழி யுள்ளவனென்பார் , 'வாக்கு மாறாத நாக்குள்ள நீர்' எனவும், இறைவன்யாவருக்கும் முன்வந்து தரிசனங்கொடுக்வேண்டுமென்பார், 'பின்றொடரவள்ள லிறசூல்வருகவே' எனவும், திருவருள் நிறைந்ததென்பார், 'வளருமருணிறை' எனவும்; குணத்தில் குடிகொண்டவனென்பார், 'குணங்குடி வாழும் என்னிரு கண்மணியே முகியித்தீனே' எனவுங்கூறினார். (2)

இகபர மிரண்டொன்று வகையுண்டு வெளிகண்ட
விசனென் முன்னிற் கவே

ஏகமா கியபரா பரமெனது முன்னிற்க
வெப்பொருளு முன்னிற் கவே
வகைதொகுத் தோலமிடு மறைகண்முர சறைகின்ற
வள்ளலென் முன்னிற் கவே
வானாதி பூதமுந் தானாகி நின்றபெரு
மானெனது முன்னிற் கவே
அகமகிழ வந்தகுடி கொண்டகுரு நாதனடி
யாருமென் முன்னிற் கவே
அன்றுமின் றென்றுமடி யேனுமுனை நம்பினே
னண்டிவந் தானு தற்கே
மகிழ்துன்னு புன்னகைப் புள்ள நீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே

(பொ-ரை) வளர்கின்ற திருவருளானது நிறைகின்ற குணங்குடி என்னுந் திவ்வியக்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்ணின் மணிகளைப் போன்றவனே! முகியித்தீனே! இம்மை மறுமை என்னும் இரண்டு, ஒன்று என்கிற விகற்பங்களை யுண்டு வெளியேவந்த சர்வேஸ்வரனானவன் எனக்கு முன்னர் நிற்கக்கடவான், அத்துவிதமாகிய பராபரவஸ்துவானது எனக்கு முன்னே நிற்கக்கடவது, சகல விதங்களையுந் தொகைசெய்து சப்திக்கின்ற நான்கு வேதங்களும் வாத்தியமாகத் திருப்புகழைமொலிக்கின்ற வள்ளலாயுள்ள வஸ்துவானது எனக்கு முன்னிற்கக்கடவது; ஆகாய முதலாகிய பஞ்சபூதங்களும் தானேயாய் விளங்குகின்ற பெருமானானவன் எனக்கு முன் நிற்கக்கடவன், திருவுள்ளமானது மகிழ்ச்சியடைய எழுந்தருளிவந்து குடிகொண்ட ஞானாசிரியருடைய அடியார்களும் எனக்கு முன்னே நிற்கக்கடவர்; ஆகையால் அன்றுமுதல் இன்றுவரைக்கும் அடியேனாகிய நானும் நீ யாளுவாயென்று உன்னை நம்பிவந் தடைந்தேன். ஆகையால் மகிழ்ச்சியானது மிகுந்த புன்னகைப்புள்ள நீர் நான் பின்தொடரும்படி வள்ளலாகவும், இறசூலாகவும் வரவேண்டும். (எ-று)

இகபர மிரண்டும் இறைவனுக் கில்லையென்பார், 'இகபர மிரண்டொன்றுவகையுண்டு' எனவும்; இறைவன் சிதாகாசத்தி லிருப்பவனென்பார், 'வெளிகண்டவினை' எனவும்; இறைவன் ஒருவனை யென்பார், 'ஏகமாகிய' எனவும்; ஞானம் அஞ்ஞானமென்னும் இரண்டிற்கும் பொதுவா யிருப்பவனென்பார், 'பராபரம்' எனவும்: சர்வ பொருள்களா யிருப்பவனும் இறைவனே யென்பார், 'எப்பொருளும்' எனவும்; வேதங்கள் நான்கும் இறைவனுடைய திருப்புகழை ஓலமிடுமென்பார், 'வகைதொகுத் தோலமிடுமறைகள் முரசறைகின்ற வள்ளல்' எனவும்

பஞ்சபூத சொரூபனென்பார், 'வானாதிபூதமுந்தானாகி' எனவும்; சர்வ ஆன்மகோடிகளுள்ளும் இறைவன் கலந்திருக்கின்றானென்பார், 'அகமகிழவந்த குடிகொண்டகுருநாதன்' எனவும்; கூறினார்.

நோக்குநோக் கொண்ணாத நோக்குநோக் காநின்ற
நோக்கெனது முன்னிற் கவே
நோக்கிப் புராதனப் பொருளான நுண்ணறிவி
னுட்பமென் முன்னிற் கவே
நீக்கமற வங்கிங் கெனாதுவெங் கெங்குமொரு
நிறைவெனது மின்னிற் கவே
நேசித்த நெஞ்சமே குடி கொண்ட வான்கருணை
நேயமென் முன்னிற் கவே
போக்கொடு வரத்தொடு விகாரமது வாய்நின்ற
புநிதமென் முன்னிற் கவே
புல்லறிவு னாவடி யேனுமுமை நம்பினேன்
போதுமென வாரு தற்கே
வாக்குமன மொத்தமா புள்ள நீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருள் நிறைந்த குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தி லெழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்ணின் மணி போன்றவனே! முகியித்தீனே! பார்வையும் பார்க்க வொண்ணாத பார்வையும், பார்க்காதிருக்கின்ற பார்வையும் ஆகியபொருளானது எனக்கு முன்னிற்கக்கடவது; பார்த்துப்பழமையான பொருளான நுட்பமாகிய அறிவின் நுட்பமானது என் கண்முன் நிற்கக் கடவது; அவ்விடத்தில் தான் உள்ளது இவ்விடத்தில்தான்உள்ளது என்று சொல்லாதபடி எவ்விடத்திலும் நிறைந்திருக்கின்ற சர்வவியாபகப் பொருளானது எனக்கு முன் நிற்கக்கடவது; விரும்பின மனதிலேயே குடிகொண்டிருக்கின்ற மிக்க கிருபாசமுத்திரமானது எனக்குமுன் நிற்கக்கடவது; போக்கும் வரவும் விகாரமும் இல்லாததாயிருக்கின்ற பரிசுத்த வஸ்துவானது எனக்கு முன் நிற்கக்கடவது; அற்ப அறிவினனாகிய நான் நீ இங்கே வாவென்று ஆளுவதற்பொருட்டு தேவரீரை நம்பினேன்; ஆகையால் வாக்கும் மனமும் சமரசமாயிருக்கின்ற மாபினையுடைய நீர்பின்றொடரும் படி வள்ளலாகவும், இறசூலாகவும், எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

இறைவன் சர்வவுயிர்களுக்கும் பார்வையாயிருக்கின்றானென்பார், 'நோக்குநோக் கொண்ணாத நோக்குநோக்கா நின்றநோக்கு' எனவும்,

இறைவன் அநாதிகாலந்தொடங்கி வாழையடி வாழையாய் வருகின்றவ னென்பார், 'நோக்கிப் புராதனப் பொருளான' எனவும் நுண்ணறிவு டையவர்களா லறியப்படுபவனென்பார், 'நுண்ணறிவினுட்பம்', எனவும், எவ்விடங்களிலும்வியாபகமாயுள்ளவ னென்பார், 'நீக்கமற வங்கிங் கெனுதெ வெங்கெங்கு மொருநிறைவு' எனவும், இறைவனை உள்ளபடி யே விரும்புகின்றவர்களுடைய மனத்தில் எழுந்தருளுவோ மென்பார், 'நேசித்தநெஞ்சமே குடிகொண்ட வான்கருணை நேயம்' எனவும்; இறை வன்பிறப்பிறப்பற்றவனும் விகாரமில்லாதவனு மாவானென்பார், 'போக்கொடு வரத்தொடு விகாரமிலதாய் நின்ற பூரணம்' எனவும்; இறைவ னே என்னையாளவேண்டுமென்பார், 'புல்லறிஞனை வடியேனுமுனை நம்பினேன் போதுகென வாளுதற்கே' எனவும்; உண்மையாய் வருந்து வோருக்கு இறைவன் வெளிப்பட்டருள வேண்டு மென்பார், 'வாக்கு மன மொத்தமா யுள்ளநீர் பின்றொடர வள்ளலிறசூல்வருகவே' என வுங் கூறினார். (4)

எற்றாத மாயைதனை யெற்றுவோ ரெற்றுபே
ரின்பமென் முன்னிற் கவே
எகமா யொருகால மழியாத வொளியான
வெம்பிரான் முன்னிற் கவே
புத்திக்கு மெட்டாத வட்டாங்க யோகமறை
பொழிவதென் முன்னிற் கவே
பூதமுத லாதமுட னேதுமது வானவான்
பொருளெனது முன்னிற் கவே
குற்றமின் னற்குணங் குடியா னெனுங்குணக்
குன்றெனது முன்னிற் கவே
கொடுமைகுடி கொண்டவடி யேனுமுனை நம்பினேன்
குறைவுதீர்த் தாளு தற்கே
வற்றா வருட்செல்வ முள்ளநீர் பின்றொடர
வள்ள லிறசூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங் குடி என்னுந் திவ்வியக்ஷேத்திரத்திலெழுந்தருளியிருக்கின்ற என்னு டைய இரண்டு கண்களின் மணியைப் போன்றவனே! முகியித்தீனே! கெடுக்கக்கூடாத மாய்கையை கெடுக்கின்றவர்களுடைய பேரின்ப மானது எனக்கு முன்னே நிற்கக்கடவது; அத்துவித வஸ்துவாய் எந்தக் காலத்திலு மழியாத தேஜோரூபமான எம்முடைய பெருமானானவன் எனக்கு முன்னே நிற்கக்கடவன்; ஒவ்வொருவருடைய புத்திகளுக்கு

மெட்டாத அட்டாங்கயோக மென்கிற மழையைப்பொழியும் பொருளானது எனக்கு முன் நிற்கக்கடவது; பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதமுதல் நாததத்துவங்களும் வேறு பொருள்களுமான பொருளானது எனக்கு முன் நிற்கக்கடவது; குற்றமற்ற நல்ல குணங்குடியான் என்னும் குணமலையானது எனக்கு முன்னே நிற்கக்கடவது; என்னுடைய குறைவு யாவற்றையும் தீர்த்து ஆளுவதற்கு கொடுமைகளே குடிகொண்டிருக்கின்ற அடியேனும் உம்மை நம்பினேன். ஆகையால் என்றைக்குங் குறைவுபடாத திருவருட் செல்வமுள்ள நீர் பின்தொடரும்படி வள்ளலாகவும், இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

மாயையானது எவ்விடத்தும் எந்தவழியிலும் ஒழிக்கப்படாததென்பார், 'எற்றாதமாயைதனே' எனவும்; அதை யொழிக்க முயற்சி செய்வோ ரடையும் பயனே சொரூபமாகக் கொண்டவன் இறைவனென்பார், 'எற்றுபேறெற்று பேரின்பம்' எனவும்; எக்காலத்திலு மழியாதவன் இறைவன் ஒருவனே யென்பார், 'ஒருகாலமழியாத' எனவும் தேஜோமயனென்பார், 'ஒளியான வெம்பிரான்' எனவும்; சாமானியமானவர்களால் அறியப்படாதவ னென்பார், 'புத்திக்குமெட்டாத' எனவும், 'அட்டாங்கயோகிகளுக்கே' முன்னிற்பவனென்பார்; 'அட்டாங்கயோக மழைபொழிவது' எனவும் சர்வபூத தத்துவங்களேயுங் கடந்தவனென்வார், 'பூதமுத றாதமுடனேது மதுவான வான்பொருள்' எனவும்; இறைவன் யாதொரு குற்றங்களேயும் பெறாதவ னென்பர், 'குற்றமில் நற்குணங்குடியான்' எனவும்; நல்லவர்கள் இருக்கின்ற மலை போன்றவனென்பார், 'குணக்குன்று' எனவும்; இப்படிப்பட்ட உன்னை நான் நம்பினேனென்பார், 'கொடுமைகுடிகொண்ட வடியேனு முமைநம்பினேன் குறைவுதீர்த் தாளுதற்கே' எனவும், திருவருளானது விளங்கப்பெற்றவன் இறையவ னென்பார், 'வற்ரு வருட்செல்வ முள்ள நீர் பின்றொடர வள்ளலிறசூல்வருகவே' எனவுங் கூறினர். (5)

ஊற்று நாமரூ பத்துடன் பற்றற்
றுயர்ந்ததென் முன்னிற் கவே
ஒன்றற் றிரண்டற்று வாக்கற்று மனமற்
றுதித்ததென் முன்னிற் கவே
கூறுகுண மற்றுமொளி யுற்றும்வெளி தத்திக்
குதித்ததென் முன்னிற் கவே
குறியற்று மறிவற்று நிறைவுகுறை வற்றுங்
குலாவியதென் முன்னிற் கவே
ஈறுமுத லற்றுமின் றற்றுநாளையுமற்
றிருப்பதென் முன்னிற் கவே

ஏதுமுன் னிற்கவடி யேனுமுமை நம்பினே
னின்பமுற் றாளு தற்கே
மாறிலா நற்கருணை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைகின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணிபோன்றவனே! முகியித்தீனே! ஊர், நாமம், ரூபம், பற்று இவைகளை யற்றிருக்கின்ற உயர்ந்த வஸ்துவானது எனக்கு முன்னே நிற்கக்கடவது; ஒன்று என்னும் எண்ணும், இரண்டு என்னும் எண்ணும், வாக்கும், மனமும் அற்று இயற்கையாயுள்ள வஸ்துவானது எனக்கு முன்னே நிற்கக்கடவது; சொல்லப்படுகின்ற குணங்களும், செயற்கையொளியும் அற்று இயற்கை யொளியைப்பெற்று தத்திக் குதித்த பொருளானது எனக்கு முன்னே நிற்கக்கடவது; குறிகுணங்களும், அறிவும், நிறைவும், குறையும் நீங்கி விளங்குகின்ற பொருள் எனக்குமுன் நிற்கக்கடவது; அந்தமும் ஆதியுமற்று இன்றும் நாளையும் அற்றிருக்கும் வஸ்துவானது எனக்கு முன்பாக நிற்கக்கடவது; எதுமுன் நின்றாலும் நான் என்னவோ அடியவன் ஆகையால் நான் உம்மையே நம்பியிருக்கின்றேன். ஏனெனில் நீ மனஞ் சந்தோஷித் தாளுவாயென்று. ஆகையால் குணக்கேடில்லாத மிக்க கிருபையுள்ள நீர் பின்றொடர்ந்துவரும்படி வள்ளலாகவும் இறசூலாகவும் எனக்கு முன் எழுந்தருளி வர வேண்டும்.

சர்வேஸ்வரன் ஊர்முதலியவற்றை யிழந்தவனென்பார், 'ஊரற்று நாமரூபத்துடன் பற்றற்றுயர்ந்தது' எனவும், ஏகமிரண்டென்று சொல்லப்படாதவனென்பார், 'ஒன்றற்றிரண்டற்று' எனவும்; வாக்குமன மிறந்ததென்பார், 'வாக்கற்று மனமற்றுதித்தது' எனவும் தேஜோமயத்தையுடையதென்பார், 'கூறுகுண மற்றுமொளி யுற்றும்வெளி தத்திக்குதித்தது' எனவும், குறிகுண முதலியவைகள் இல்லாதவனென்பார், 'குறியற்று' எனவும், செயற்கையறி வில்லையென்பார், 'அறிவற்று' எனவும், குறையென்பதும் நிறைவென்பதும் இல்லாதவனென்பார், 'நிறைவுகுறைவற்றுங் குலாவியது' எனவும், ஆதியந்தமில்லை யென்பார், 'ஈறுமுதலற்று' எனவும், காலாதீதனென்பார், 'இன்றற்ற நாளையு மற்றிருப்பது' எனவும், இப்படிப்பட்ட இறைவனை உலகத்திலுள்ள யாவரும் வணங்கவேண்டுமென்பார், 'ஏதுமுன்னிற்க வடியேனுமுமை நம்பினே னின்பமுற்றாளுதற்கே' எனவும், திருவருள் செய்து ரட்சிக்கவேண்டியவன் இறைவனேயாவானென்பார், 'மாறிலா நற்கருணை யுள்ளநீர் பின்றொடர வள்ளலிறசூல் வருகவே' எனவும், இவையனைத்துஞ் செய்யற்குரியான் இறைவனே யாவானென்பார்,

'வளரு மருணிறை குணங்குடி வாழுமென்னிரு கண்மணியே முகியித் தீனே' எனவுங்கூறினார்.

தேடியே வந்தரு டந்தடிமை கொண்டவென்
 றேசிகன் முன்னிற் கவே
சிற்பர வெளிக்கொளி கொழிக்குமா கர்ப்பூர
 தீபமென் முன்னிற் கவே
நாடரிய செஞ்சுடர் பரப்புகுரு நாதனெந்
 நாளுமென் முன்னிற் கவே
நானு விதங்கொண்ட வாசாம கோசர
 நந் தமென் முன்னிற் கவே
ஈடுசோ டற்றசிற் சத்தியா மெம்பிரா
 னென்னெதிரின் முன்னிற் கவே
ஏற்கைமுன் னிற்கவடி யேனுமுமை நம்பினே
 னிங்குவந் தாளு தற்கே
வாடாத சமநிலைய முள்ளநீர் பின்றொடர
 வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைகின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணிபோன்றவனே! முகியித்தீனே! அன்பர்களைத் தேடிக்கொண்டுவந்து திருவருள் செய்து அடிமைப் படுத்திக்கொண்ட என்னுடைய ஞானாசிரியனானவன் எனக்கு முன்னர் வந்து நிற்கக்கடவன்; ஞானபர வெளிக்குத் தேஜோமயத்தை யுண்டாக்கும் மகத்தாகிய கர்ப்பூர தீபவொளிபோன்ற பொருள் எனக்கு முன்னர் நிற்கக்கடவது; எவர்களாலும் நாடுதற் கருமையான செஞ்சுடரானது பரப்புகின்ற குருநாதனானவன் எந்நாளு மெனக்கு முன்னே நிற்கக்கடவன்; அநேக வகையான வாசாமகோசரமானது எனக்கு முன்னே நிற்கக்கடவது; இணையில்லாத ஞானசத்தியாகிய எம்பெருமானானவன் எனக்கு எதிரே வந்து முன்னிற்கக்கடவன்; ஏற்கையானது முன்னே நிற்க அடியேனாகிய நான் உம்மைநம்பினேன். நீ இவ்விடத்தில்வந்து என்னை யாளுதற்பொருட்டு ஆகையால் வாடுதலில்லாத சமநிலையமுள்ள நீர் பின் தொடரும்படி வள்ளலாகவும் இறசூலாகவும் வந்தருளவேண்டும். (எ-று)

இறையவன் பரிபாகம் வாய்ந்தவரைத் தேடிவந்து திருவருள் செய்யவேண்டுமென்பார், 'தேடியேவந்தருள்' எனவும்; அப்படிப்பட்ட இறைவன் எனக்குத் திருவருள் செய்யவேண்டியவனென்பார், 'அடிமை கொண்டவென்றேசிகன் முன்னிற்கவே' எனவும்; ஞானமாகிய ஆகாய

த்திற்கு தேஜஸை விளைவிப்ப தென்பார், 'சிற்பரவெளிக்கொளி கொழிக்குமா கர்ப்பூர தீபமுன்னிற்கவே' எனவும்; ஞானசிரியனானவன் ஞானதேஜஸை விளைவிப்பா னென்பார்; 'நாடரிய செஞ்சுடர் பரப்பு குருநாதன் எந்நாளுமென் முன்னிற்க வே' எனவும்; வாசாமகோசரப் பொருளேயா யிருப்பவன் இறைவனே யாவானென்பார், 'நானாவிதங் கொண்ட வாசாமகோசர நந்தமென் முன்னிற்கவே' எனவும்; இறைவனுக்கு எந்தப்பொருளும் சமமாகாதென்பார், 'ஈடு சோடற்றசிற் சத்தியாமெம்பிரா னென்னெதிரின் முன்னிற்கவே' எனவும்; இவனையே யாவரும் வணங்கவேண்டு மென்பார், 'எற்கைமுன்னிற்கவடியேனுமுமை நம்பினேன் இங்குவந்தாளுதற்கே' எனவுங் கூறினார். (7)

அருளகண் டாகார வானந்த பூர்த்திமெயனு
மாதார முன்னிற் கவே
அதிசொற்ப்ர காசவரு டேசோம யந்தந்த
வாதிக்க முன்னிற் கவே
குருநாத னுகமெய்ப் பிரணவ சொரூபக்
கொழுந்தென [illegible] முன்னிற் கவே
கூறரிய சாலம்ப ரகிதமா கியதில்ய
குணசார்ந்த முன்னிற் கவே
நிருவிகா ரத்துடன் றளதளென நின்றொளிர்
நிராமயம் முன்னிற் கவே
நிலையமுன் னிற்கவடி யேனுமுமை நம்பினே
னேயம்மைத் தாளு தற்கே
மருமலர் மணக்கோல முள்ள நீர் பின்றொடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே,

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைகின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணிபோன்றவனே! முகியித்தீனே! திருவருளையுடைய நிறைந்த சொரூபாநந்த பூர்த்தியென்கிற ஆதாரப் பொருளானது எனக்கு முன்னே நிற்கக்கடவது; யாவராலுஞ் சொல்லப்படுகின்ற திருவருட்பிரகாச தேஜோமயத்தைத் திருவருள்செய்த அதிகாரவஸ்துவானது எனக்கு முன்னே நிற்கக்கடவது; ஞானசிரியனாக வருகின்ற உண்மைப் பிரணவரூபத்தையுடைய கொழுந்தானது எனக்கு முன்னே நிற்கக்கடவது; சொல்லுதற் கருமை யான பற்றுக்கோடற்ற திவ்விய ஞான குணசாந்தப்பொருளானது எனக்கு முன்னே நிற்கக்கடவது; யாதொரு விகாரமு மில்லாமல் தளதளவென் றிருந்து ஒளிசெய்கின்ற

கிராமயப் பொருளானது எனக்கு முன்னே நிற்கக்கடவது; உண்மை வஸ்துவானது எனக்கு முன்னே நிற்கக்கடவது, ஆகையால், என்மீது திருவருள் செய்து ஆள்வதற்பொருட்டு அடியேனாகிய நானும் உம்மை நம்பினேன். வாசனைபொருந்திய மலர்மாலை யணிந்த மணக்கோலத்தையுள்ள நீர் பின்தொடரும்படி வள்ளலாகவும், இறசூலாகவும் வர வேண்டும். (எ; று)

சர்வேஸ்வரன் சர்வவியாபக னென்பார், 'அருளகண்டாகார வாநந்த பூர்த்தியெனுமாதாரம்' எனவும்; தேஜோமய னென்பார், 'அதிசொற்பிரகாச வருடே சோமயந்தந்த வாதிக்கம்' எனவும்; இறைவன் பரிபாகிகளுக்கு ஞானகுரியனாய் வருவானென்பார், 'குருநாதனாக மெய்ப் பிரணவசொரூபக் கொழுந்தெனது முன்னிற்கவே' எனவும்; இறைவனுக்குப் பற்றுக்கோடு வேண்டியதில்லை யென்பார், 'கூறரிய சாலம்ப ரகிதமாகி' எனவும்; குணவிசேஷ முடையவ ரென்பார், 'திவ்வியகுணசாந்த முன்னிற்கவே' எனவும்; பரஞானவஸ்துவாவான் இறைவனே யாவானென்பார், 'நிருவிகாரத்துடன் றளதனென நின்றொளிர் கிராமயம் முன்னிற்கவே' எனவும்; இறைவனை யாவரும் வணங்கவேண்டுமென்பார், 'நிலயமுன்னிற்க வடியேனுமுமை நம்பினேனேயம்மைவைத்தாளுதற்கே' எனவும்; புஷ்பமாலையானது வளர்கின்ற நீர் பின்தொடரும்படி திருவருள் செய்யவேண்டுமென்பார், 'மருமலர் மணக்கோல முள்ள நீர் பின்றொடர வள்ளலிறசூல்வருகவே' எனவும்; சர்வேஸ்வரன் கண்மணி போன்றவ னென்பார், 'வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிரு கண்மணியே முகியித்தீனே' எனவுங் கூறினார்.

பலவுமா யொன்றுமா யென்றுமாய் நின்றதற்
 பரமெனது முன்னிற் கவே
பரமான தெப்பொருளு மதுவாய் முளைத்துவிளை
 பயிரொனது முன்னிற் கவே
நிலைசரமோ டிகபரமு முயிரினுக் குயிராகி
 நின்றறிதன் முன்னிற்கவே
நேரிட்ட ஞானசூ ரியனு யுதித்தநன்
 னெறியெனது முன்னிற் கவே
அலையுலகு கானலின் னீரெனத் தோன்றுமெய்
 யறிவெனது முன்னிற் கவே
அய்யனே யஞ்சியடி யேனுமுமை நம்பினே
 னுதரித் தாளு தற்கே
மலையிலக் கானகுறி யுள்ளநீர் பின்றொடர
 வள்ளலிற சூல்வ ருகவே

வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகிழித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைகின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணிபோன்றவனே! பலவாகியும் ஒன்றாகியும் என்றைக்கும் அழியாததாயும் இருந்த தற்பரமானது எனக்குமுன் நிற்கக்கடவது; மேலான எந்தப்பொருளும் அதுவாய் முளைத்து விளைகின்ற பயிர்போன்ற பொருளானது எனக்கு முன்னே நிற்கக்கடவது; நிலைத்திருக்கின்ற சரப்பொருள்களோடு இம்மையிலும், மறுமையிலும் உயிர்க்குயிராகி நின்றபொருளானது எனக்கு முன்னே நிற்கக்கடவது; பொருந்தின ஞானசூரியனுயுண்டான நன்மையாகிய மார்க்கமானது எனக்கு முன்னே நிற்கக்கடவது; சமுத்திரத்தால் சூழப்பட்ட இவ்வுலகமானது கானற்சலமாகக் காணப்படும் உண்மையறிவானது எனக்கு முன்னர் நிற்கக்கடவது; ஐயனே! தேவரீர் எம்மை யாளுதற்பொருட்டும் பயந்து அடியேனாகிய நானும் உம்மை நம்பினேன். ஆகையால் மலையிலக்கான நீர் பின்தொடரும்படி வள்ளலாகவும், இறசூலாகவும் வரவேண்டும். (எ-று)

இறைவன் ஒன்றாகவும் பலவாகவு மிருப்பானென்பார், 'பலவுமா யொன்றுமா யென்றுமாய் நின்ற தற்பரமெனது முன்னிற்கவே' எனவும்; சர்வேஸ்வரன் ஞானசொரூபி யென்பார், 'பரமானது' எனவும்; எந்தப் பொருளை எவ்விடத்துக் காண்கிறோமோ அந்தப்பொருள் இறைவனே யாகுமென்பார் 'எப்பொருளு மதுவாய் முளைத்து விளை பயிரெனது முன்னிற்கவே' எனவும்; சராசரமுதலாகிய எந்தப் பிராணிகளுக்கும் இறைவனே தலைவனென்பார், 'நிலைசரமொடிகபரமுமுயிரினுக்குயிராகி நின்றதென் முன்னிற்கவே' எனவும், இறைவன், வெளிச்சூரியன் போலல்லாமல் ஆன்மாக்களுடைய இருதயஇருப்பை நீக்க உள்ளொளி கொடுப்பவ னென்பார், 'நேரிட்ட ஞானசூரியனுயுதித்த நன்னெறி யெனது முன்னிற்கவே' எனவும், உலகமானது எப்படி பார்த்தாலும் நிலையில்லாததே யென்பார், 'அலையுலகு கானலின் நீரெனத்தோன்று மெய்யறிவெனது முன்னிற்கவே' எனவும்; இறைவனிடத்தில் விஸ்வாசமும் உலகவிஷயத்தில் வெறுப்புமுண்டாகவேண்டும் மென்பார், 'அய்யனே யஞ்சியடி யேனுமுமை நம்பினே னாதரித்தாளுதற்கே' எனவும், இறைவனே இதுவிஷயத்தில் நீரே திருவருள் செய்யவேண்டு மென்பார், 'மலையிலக்கானகுறி யுள்ள நீர் பின்றொடர வள்ளலிறசூல் வருகவே' எனவும், 'வளருமருணிறை குணங்குடிவாழு மென்னிரு கண்மணியே முகிழித்தீனே' எனவுங் கூறினார். (9)

உடல்பொருளோ டாவியுங் கைப்பற்றியெனையாளு
முத்தமன் முன்னிற் கவே

ஊனாகி யுயிராகி யூனுயிர்க் குயிரான
வுண்மையென் முன்னிற்கவே
திடமாயைதொடாத தடர்ந்தேறு மெய்ஞ்ஞான
தீரமென் முன்னிற் கவே
திவ்யகரு ணாகர முகம்மத ரெனுமருட்
செல்வமென் முன்னிற் கவே
கொடியோடுகொழு கொம்ப தாகநீர் வந்துகுதி
கொண்டெனது முன்னிற் கவே
கொத்தடிமை யானவடி யேனுமுனை நம்பினேன்
கொண்டனைத் தாளுந் தயவே
வடிவிலகு நடனவடி வுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் வாழ்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! உடல், பொருள், ஆவி, இம்மூன்றையும் கைக்கொண்டு அடியேனை அடிமை கொண்ட உத்தமனானவன் எவனோ அவன் எனக்கு முன்னே நிற்கக் கடவன், ஊனாகியும், உயிராகியும், ஊனிலுள்ள உயிருக்கு உயிராகியு மிருக்கின்ற உண்மைவஸ்து எதுவோ அது எனக்கு முன்னே நிற்கக் கடவது, வலியுள்ள மாயையானது தொடாதபடி எக்காலத்திலும் கனக்க ஏறுகின்ற உண்மைஞானத்தை விளைவிக்கின்ற தீரமுள்ள வஸ்து எதுவோ அது எனக்கு முன்னே நிற்கக்கடவது, உயர்ந்த கிருபையே ஆதாரமாகிய முகம்மதர் என்கிற திருவருள் செல்வம் எதுவோ அதுவே எனக்குமுன்னே நிற்கக்கடவது, கொடியானது படர்தற்குக் காரணமாக வைக்கின்ற கொழுகொம்பாக நீர் எழுந்தருளி வந்து எனக்கு முன்னே நிற்கவேண்டும், அடியேனைத் தேவரீர்பெற்றனைத் தாளுதற்பொருட்டு வாழையடிவாழையாக அடிமைப் பட்டுக் கொண்டு வருகின்ற அடியேனாகிய நானும் உம்மை நம்பியிருக்கின்றேன். ஆகையால் சௌந்தரிய ரூபமானது விளங்குகின்ற நடனஞ் செய்கின்ற ரூபத்தையுள்ள நீர் பின்தொடரும்படி வள்ளலாகவும் இறசூலாகவும் அடியேனுக்கு முன்னர் எழுந்தருளி வரவேண்டும்.

ஞானாசிரியனுக்கு உடல், பொருள், ஆவிகளாகிய மூன்று பொருள்களையுந் தத்தஞ்செய்யவேண்டியது சர்வ சுதந்தர இயற்கைக் குணமென்பார், 'உடல்பொருளொ டாவியுங் கைப்பற்றி யெனையாளு முத்தமன் முன்னிற்கவே' எனவும்; இறைவன் சர்வ தேசங்களிலுஞ்

கலந்துள்ளவ னென்பார், 'ஊனாகி யுயிராகி யூனுயிர்க்குயிரான வுண்மையென் முன்னிற்கவே' எனவும், உண்மை ஞானமானது சர்வ தேசங்களிலு மிருக்கின்ற அஞ்ஞானத்தையொழிக்குங் குணமுடைய தென்பார், 'திடமாயை தொடராதடர்ந்தேறு மெய்ஞ்ஞான தீரமென் முன்னிற்கவே' எனவும், முகம்மதர் என்னும் வஸ்துவையே செல்வ மாகக் கொண்ட ரென்பார், 'திவ்விய கருணாகர முகம்மதரெனுமருட் செல்வமென் முன்னிற்கவே' எனவும், இறைவன் உள்ளன்பர்களுக்கு இடையூறுவந்த காலத்தில் கொழுகொம்பாக முன்னிற்பவ னென்பார், 'கொடியோடு கொழுகொம்பதாகநீர் வந்து குதிகொண்டெனது முன் னிற்கவே' எனவும், இறைவனே நீர் என்னை ஆண்டடிமை கொள்ள வேண்டு மென்பார், 'கொத்தடிமையான வடியேனுமுமை நம்பினேன் கொண்டனைத் தாளுதற்கே' எனவும், 'வடிவிலகு நடனவடி புள்ளநீர் பின்றொடர வள்ளலிறசூல்வருகவே' எனவும், 'வளருமரு ணிறைகுண ங்குடிவாழு மென்னிரு கண்மணியே முகியித்தீனே' எனவுங் கூறினர். (10)

அப்பொருடானே யெப்பொருட் குணமு
மொப்பியு மொப்பா தாகிய வுண்மைப்
பிரியாது தெரிசிக்கப் பிரியமா யெனக்குங்
கருணைகூர்ந் தருள்கெனக் கனிந்துநின் றிரத்தல்.

(பொ-ரை) அந்தப் பொருளே எந்தப்பொருளினுடைய குணமும், ஒப்பியும், ஒப்பாததுமாகிய உண்மைப்பொருளை பிரியாமல் தரிசிப்ப தற்குப் பிரியமாக அடியேனுக்குக் கிருபைகொண்டு திருவருள்செய்க என்று மனங்கரைந்து நின்று யாசித்தலாகும்.

## ஆசிரிய விருத்தம்.

நித்தமாய் நன்னிருவி கற்பநிட் டாபர்க
 ணெற்றினே ரிட்டபொருளே
நிச்சய வகோசரத் தாதார பேதநிலை
 நின்றுநிறை கின்றபொருளே
முத்திக்கு வித்தாய் முளைத்துவிளை பொருளையண்
 மொய்த்தசுட ருற்ற பொருளே
மும்மண்ட லங்களுங் கொண்டமூ லாதார
 மோனவடி வான பொருளே
புத்திக்கு மெட்டாது புத்திக்கு ணின்றிலகு
 போக்குவர வற்ற பொருளே
போதவருள் புரியவடி யேனுமுமை நம்பினேன்
 புனிதமுட னாளு தற்கே
மத்தமத யானைநிக ருள்ளநீர் பின்றொடர
 வள்ளலிற சூல்வ ருகவே

வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற எனக்கு இரண்டு கண்களின் மணிபோன்றவனே! முகியித்தீனே! நித்தியமாயும், நல்ல நிர்விகற்ப நிட்டாபரர்களுடைய சுழிமுனை ஸ்தானத்தி லடைக்கப்பட்ட தாகவுமுள்ள உண்மைப்பொருளை நிச்சயமான அகோசரத்தின் ஆதாரபேத நிலையிலிருந்து நிறைந்திருக்கின்ற பொருளை, மோட்சத்துக்குக் காரணமாக முளைத்து விளைகின்ற பொருளை, திருவருளானது நெருங்கின தேஜோமயம் பொருந்தின பொருளை; சோம, சூரிய, அக்கினியென்னும் மூன்று மண்டலங்களும் கொண்ட மூலாதாரம் என்னுமிடத்தில் மௌனவடிவமா யமர்ந்த பொருளை; எப்படிப்பட்ட புத்திக்குமெட்டாதபடி அந்தப்புத்திக்குள்ளாகவே யிருந்து விளங்குகின்ற இறப்புப்பிறப்பற்றபொருளை; ஞானமாகிய திருவருளைச் செய்ய அடியேனாகிய உம்மை நம்பினேன் ஏனென்றால் பரிசுத்தமுடன் என்னையாண்டடிமை செய்வதற்கே யாகும். மதம்பிடித்த யானையைப் போன்ற நீர் பின்றொடர வள்ளலாகவும், இறகுலாகவும் வந்தருளவேண்டும். (எ-று)

இறைவன் என்றைக்கும் அழியாதவனென்பார், 'நித்தமாய்' எனவும்; நிஷ்டை சாதிப்பவர்களுக்கு சுழிமுனையில் வெளிப்படுவோனிறைவனே யென்பார், 'நன்னிரு விகற்ப நிட்டாபரர்கள் நெற்றிநேரிட்ட பொருளை' எனவும்; உண்மைப்பொருளும் அவனே யென்பார், 'நிச்சயம்' எனவும்: கோசரிக்காதபொருள் இதுவேயா மென்பார், 'அகோசரம்' எனவும்; சர்வ ஆதாரமா யிருப்பவனுமவனே யென்பார், 'ஆதார பேதநிலை நின்றுநிறை கின்றபொருளை' எனவும்; இறைவன் மோட்சபூமிக்குத் தலைவனென்பார், 'முத்திக்கு வித்தாய் முளைத்து' எனவும்; தேஜோமயப்பொருள் இறைவனே யென்பார், 'விளைபொருளை யருள்மொய்த்த சுடருற்ற பொருளை' எனவும்; மூலாதாரத்தில் விளைகின்றவனும் இவனே யென்பார், 'மும்மண்டலங்களுங் கொண்ட மூலாதார மோனவடிவான பொருளை' எனவும்; இறைவன் எங்கும் நிறைந்தவனாக விருந்தாலும் அவரவர்களுடைய புத்திகளுக்கு எட்டாமலே யிருப்பானென்பார், 'புத்திக்கு மெட்டாது புத்திக்கு ணின்றிலகு' எனவும்; இறைவன் பிறப்பிறப்பற்றவ னென்பார், 'போக்கு வரவற்ற பொருளை' எனவும்;ஞானாசிரியனாகவந்து திருவருள் செய்பவனுமவனே யாவானென்பார், 'போதவருள் புரியவடியேனு முனைநம்பினேன் புநிதமுட னாளுதற்கே' என்வும்;வலிவுள்ளவன் இறைவன் ஒருவனே யென்பார், 'மத்தமதயானை நிகருள்ளநீர் பின்றொடர வள்ளலிற சூல் வருகவே' எனவும், 'வளருமரு ணிறைகுணங் குடி வாழு மென்னிரு கண்மணியே முகியித்தீனே! எனவுங் கூறினார். (1)

பெந்தமொடு முத்தியு மகிழ்ச்சியு மிகழ்ச்சியும்
 பின்னுமுன் னுங்கெட் டதைப்
பெரிதுசிறி தருவுருவொ டதுவிதென் பதுவும்
 பிறப்பிறப் புங்கெட் டதை
நிந்தித்த லோடுவந் தித்தலும் பொய்மையொடு
 நிசமென்ப துங்கெட் டதை
நீநானெ னலுமொன் றிரண்டெனலு நீதமொட
 நீதமென லுங்கெட் டதை
அந்தபகல் போக்குடன் வரவுமன வாக்கொடிங்
 கங்கென்ப துங்கெட் டதை
அறியாம லறியவடி யேனுமுமை நம்பினே
 னறிவுதந் தாளுதற்கே
வந்தடிமை கொள்ளமன முள்ளநீர் பின்றொடா
 வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முகியித்தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைகின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணிபோன்றவனே! முகியித்தீனே! பெத்தமும், முத்தியும், மகிழ்ச்சியும், இகழ்ச்சியும்பின்னும், முன்னும் ஆகிய இவைகளில்லாத வஸ்துவை! பெரிதென்பதும், சிறிதென்பதும், அரூபமும், ரூபமும், அதுவும், இதுவும் என்றுசொல்லுபவைகளும், பிறப்பும், இறப்பும் ஆகிய இவைகளெல்லா மில்லாத பொருளை, நிந்தனைசெய்தல், வந்தனைசெய்தல், பொய்ம்மை, நிசம்என்னும் இவைகளில்லாத பொருளை; நீயென்பதும், நான்என்பதும், ஒன்று என்பதும், இரண்டு என்பதும், நீதியும் அநீதியுமில்லாத பொருளை; இரவு என்பதும், பகல் என்பதும் இறப்பு என்பதும், பிறப்பு என்பதும் மனமும், வசனமும், இங்கு என்பதும் அங்கு என்பதும் இல்லாத வஸ்துவை; அறியா வண்ணமே யறிய அடியேனாகிய நானும் உம்மை எனக்கு நல்ல அறிவைப்புகட்டி யாளுதற்பொருட்டு வணங்கினேன் அடியார்களைத் தாமே வலியவந்து அடிமைகொள்ள திருவுள்ளங் கொண்டிருக்கின்ற நீர் பின்றொடா வள்ளலாகவும், இறசூலாகவும் எனக்குமுன்னர் வந்தருளவேண்டும். (எ-று)

இறைவன் இயற்கை யறிவினை யுடையவ னென்பார், 'பெந்தமொடு' எனவும்: அவனைவிட வலிவுள்ளவர் மோட்சத் தலைவராக எவருமில்லை யென்பார், 'முத்தியும்' எனவும், எக்காலத்திலும் ஒரே தன்மையா யிருப்பவனென்பார், மகிழ்ச்சியும் 'பின்னுமுன்னுங் கெட்டதை' எனவும், அணுவென்பதும் மலையென்பதும் அவனுக்கில்லை யென்பார்,

'பெரிது சிறிது' எனவும்; இறைவன் சங்கற்ப ரூபமுள்ளவ னென்பார் 'அருவுருவொடு' எனவும் அவனை தூரப்பொருளென்றுஞ் சமீப பொருளென்றுஞ் சொல்ல முடியா தென்பார், 'அதுவி தென்பதுவும்' எனவும்; பிறப்பிறப்பற்றவனென்பார், 'பிறப் பிறப்புங் கெட்டதை' எனவும், அவனுக்கு நிந்தனையே வந்தனை யாகவும் வந்தனையே நிந்தனையாயுங் கூடுமென்பார், 'நிந்தித்த லோடு வந்தித்தலும்' எனவும், பொய்மெய் யில்லை யென்பார், 'பொய்மையொடு நிசமுங் கெட்டதை' எனவும்; இருவகுப்பற்ற தென் பார், 'நீநானெனலு மொன்றிரண் டெனலு நீதமொட நீதமெனலுங் கெட்டதை' எனவும், அகோராத்திரமும் அந்தப் பொருளுக்கு ஒன்றே யாமென்பார்,'அந்திபகல் போக்குடன் வரவு மனவாக்கொடுங்கங்கென் பதுங் கெட்டதை' எனவும்; இப்படிப்பட்ட இறைவனையே உள்ளன் பொடு என்று மொருபடித்தாய் இறைஞ்ச வேண்டுமென்பார், 'அறியாம லறிய வடியேனு முமை, நம்பினேன் அறிவுதந் தாளுதற்கே' எனவும் 'வந்தடிமை கொள்ளமன முள்ளநீர் பின்றொடர வள்ளலிற சூல் வருகவே' எனவும், 'வளருமரு ணிறைகுணங்குடிவாழு மென்னிரு கண் மணியே முகியித்தீனே' எனவுங் கூறினர். (2)

முத்தைநவ மணியையொளி பத்திபா யும்மணியை
மோனமணி ஞான மணியை
மொய்த்தகதிர் மாசிலா மணியைவா னுதியா
மூவுலகு மான மணியைச்
சித்திமணி யைச்சித்தி தருமுத்தி மணியையென்
சிந்தைகுடி கொண்ட மணியைத்
திவ்யகுரு மணியா விழைத்தசிங் காசனச்
சிகரத்தி னுச்சி மணியைப்
பத்தர்கட் கெய்துகு டாமணியை நிறைபார்த்த
பரமார்த்த மான மணியைப்
பணிபூண்டு பார்க்கவடி யேனுமுமை நம்பினேன்
பணிபூட்டி யாளு தற்கே
வைத்ததீ பத்திளிக நுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குண ங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தி லெழுந்தருளி யிருக்கின்ற என் னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! முத்தும், ஒன்பது ரத்தினங்களும் ஆகிய இவைகள் சேர்ந்து சேர்ந்த ஒளியானது பாய்கின்ற மணியை, மௌனமென்னுஞ் சாதனத்தையு

டைய ரத்தினத்தை, ஞானரத்தினத்தை, நிறைந்த கிரணங்களையுடைய மாசிலாமணியை, சொர்க்கம், மத்தியம், பாதாளம் ஆகிய மூன்று உலகங்களும் பரவியிருக்கின்ற ரத்தினத்தை, எல்லாக்காரியங்களிலும் வல்லமையுள்ள ரத்தினத்தை, அப்படிப்பட்ட வல்லமையை மற்ற யாவருக்குங் கொடுக்கின்ற ரத்தினதத்தை, அடியேனுடைய மனத்தின்கண் குடிகொண்டிருக்கின்ற எல்லாம் வல்ல ரத்தினத்தை, உயர்ந்த நிறம் பொருந்திய ரத்தினங்களால் இழைக்கப்பட்ட சிம்மாசனச் சிகரத்தில் வாழ்கின்ற ரத்தினத்தை, அன்பர்களுக்குப் பொருந்தின சூடாமணி என்னும் ரத்தினத்தை, அளந்து கண்டுகொண்ட உயர்வாகிய ரத்தினத்தை, தொண்டுபூண்டு பார்ப்பதற்கு அடியேனாகிய நான் உம்மை நம்பினேன் என்னைப் பணிபூட்டி யாள்வதற்கே, யாவரும் வைத்திருக்கின்ற தீபத்தினுக்கு ஒப்பாகிய நீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் வரவேண்டும். (எ-று)

இறைவன் முத்தைப்போல் ஒளிசெய்பவ னென்பார், 'முத்தை' எனவும்; மாணிக்கத்திற் கொப்பானவ னென்பார், 'நவமணியை யொளிபத்தி பாயும் மணியை' எனவும், மௌன ஞானத்திற்குத் தலைவன் இவனேயென்பார், 'மோனமணி ஞானமணியை' எனவும், திரிலோகங்களிலும் வியாபித்திருப்பவன் இவனே யென்பார், 'வானுதியா மூவுலகு மானமணியை' எனவும்; இறைவன் தன்னை வணங்குவோர்களுக்கு எல்லாச் சித்திகளையுந் திருவருள் செய்பவ னென்பார், 'சித்திமணியைச் சித்திதரு முத்திமணியையென் சிந்தை குடிகொண்டமணியை' எனவும் சுழிமுனை யென்னுஞ் சிம்மாசனத்தில் விளங்குவோன் இறைவனே யாவா னென்பார், 'திவ்விய குருமணியா லிழைத்த சிங்காசனச் சிகரத்தி னுச்சிமணியை' எனவும், இறைவன் தன்னை நாடிய பக்தர்களுக்குத் திருவருள் செய்பவ னென்பார், 'பத்தர்கட்கெய்து சூடாமணியை' எனவும், பாரமார்த்திகத்தை யடைந்தவர்களுக்கே வெளிப்படுபவ னென்பார், 'பரமார்த்தமானமணியை' எனவும், யாவரும் இறைவனுக்கு அன்புபூண்டு பணிவிடை செய்யவேண்டு மென்பார், 'பணிபூண்டு பார்க்க' எனவும், யாவர் இறைவனிடத்தில் அன்புள்ளவர்க ளாகின்றார்களோ அவர்களை இறையவனும் பணிபூட்டவேண்டு மென்பார், 'அடியேனு முமை நமபினேன் 'பணிபூட்டி யாளுதற்கே' எனவும், இறைவன் தீபவொளிபோ லொளிப்பவனென்பார், 'வைத்ததீபத்தினிகருள்ளநீர் பின்றொடர வள்ள லிறசூல் வருகவே' எனவும், வளருமருணிறை குணங்குடிவாழு மென்னிருகண்மணியே முகியித்தீனே' எனவுங் கூறினார். (3)

காரா றெனப்பே ருருட்கடலி னிருண்டு
 கவிகின்ற கருணை முகிலைக்
ககனவட் டப்பெரு வெளிக்குமப் பானின்று
 காலூன்று கின்ற முகிலைத்

தாராத வருடந்த குருமௌன முகிலையென்
றாயிற் சிறந்த முகிலைச்
சண்டமா ருதமென்ன வருள்பொழியு முகிலைச்
சராசரங் கொண்ட முகிலைப்
பாராதி பஞ்சவன் னப்பகுதி யாகப்
பரந்துவரு டித்த முகிலைப்
பாவிவரு டிக்கவடி யேனுமுமை நம்பினேன்
பருவமவந் தாளு தற்கே
வாரா நெறிக்கருணை யுள்ளநீர் பின்ருடா
வள்ளலிற ரூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைகின்ற உயர்ந்த குணங்குடிஎன்னுந்திவ்வியக்ஷேத்திரத்தி லெழுந்தருளியிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணிபோன்றவனே! முகியித்தீனே! மேகங்களானவை ஆற்றைப்போல பெரிய திருவருட் கடலினிடத்திலுண்டான நீரையுண்டு மூடுகின்ற மிக்க கிருபையுள்ள மேகத்தை; ஆகாயமான வட்டமாகிய பேராகாயத்திற்கும் அப்புறமிருந்து காலால் ஊன்கின்ற மேகத்தை; கொடுக்கக்கூடாத திருவருளைக் கொடுத்த குருவாகிய மௌனமேகத்தை; என்னுடைய தாயைப் பார்க்கிலு முயர்ந்த மேகத்தை; சண்டமாருதத்தைப் போலும் திருவருள் பொழிகின்ற முகிலை; சரம் அசரம் என்னும் பொருள்களை மேற்கொண்ட மேகத்தை, பிருதிவி முதலாகிய ஐந்து விதமான பகுதியாகப் பரந்து வருஷித்த மேகத்தை; திருவருளைப்பொழிய அடிஞேகிய நானும் உம்மை நம்பினேன் நீ என்னுடைய பருவம் பார்த்து அடிமைகொள்வதற்காகவே எவராலும் வாராத மார்க்கத்தையுடைய கிருபையுள்ள நீர் பின்ருடா வள்ளலாகவும் இறசூலாகும் வந்தருளவேண்டும். (எ-று)

இறைவன் கார்மேகம்போல் திருவருள்மழை பொழியுமென்பார், 'காராரெனப்பெருங் கடலினீருண்டுகவின்ற கருணைமுகிலை' எனவும், சிதாகாயத்தில் வருகின்றவ னென்பார், 'ககனவட்டப்பெறு வெளிக்குமப்பானின்று காலூன்றுகின்றமுகிலை' எனவும், மௌனுசிரியன் இறைவனே யென்பார், 'தாராதவருடந்த குருமௌனமுகிலை யென்தாயிற் சிறந்த முகிலை' எனவும், திருவருளானது சண்டமாருதம்போல் பொழியுமென்பார், 'சண்டமாருத மென்னவருள் பொழியுமுகிலைச் சராசரங் கொண்டமுகிலை' எனவும், பஞ்ச வர்ணமாகப் பூமியில் இறைவன் வருஷிப்பானென்பார், 'பாராதி பஞ்சவன்னப் பகுதியாகப் பரந்து வருஷித்தமுகிலை' எனவும், இறைவனையாவரும் வணங்கவேண்டுமென்பார், 'பாவிவருடிக்க வடியேனுமுமை நம்பினேன் பருவம் வந்தாளுதற்கே' எனவும், 'வாராநெறிக்கருணை யுள்ளநீர் பின்ருடா வள்ளலிற

சூல் வருகவே' எனவும், வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிரு கண்மணியே முகியித்தீனே' எனவுங் கூறினார். (4)

தத்தியே கங்கறப் பெருகிவரு மானந்த
சமரசப் பெருவா ரியைச்
சார்ந்தன்ப ரிதயங் களிக்கவே பொங்கிவரு
சந்ததச் சுகவா ரியைச்
சுற்றிக் கவிந்துகொண் டெங்குமொரு மிக்கவே
சூழ்கருணை நிறைவா ரியைச்
சொற்பிரகா சந்தரு சுயஞ்சோதி யாய்நின்ற
சோமசுகந் தரவா ரியை
எத்தனை விதங்கொண்டு சொல்லினுஞ் சொல்லொணு
வினியபூ ரணவா ரியை
எப்பமிட வூட்டவடி யேனுமுமை நம்பினே
னெட்டிவந் தாளு தற்கே
மத்திபத் தீபநடு வுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தி லெழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய கண்களின் மணியைப் போன்றவனே! முகியித்தீனே! மோதி மோதிக் கரையில்லாமல் பெருகிவருகின்ற ஆநந்தமாகிய யாவருக்கும் ஒப்பாகிய பெரிய சமுத்திரத்தை; அடியார்களெல்லாஞ் சேர்ந்து வர, அவர்களுடைய இருதயமானது களிப்பை யடையும் வண்ணம் பொங்கி வருகின்ற என்றைக்கு மழியாத சுகக்கடலை; எவ்விடத்திலும் சுற்றிச் சுற்றிக் கவிந்துகொண்டு எவ்விடத்தும் ஒருமிக்கச்சூழ்கின்ற கிருபையானது நிறைந்திருக்கின்ற கடலை; சொல்லப்படுகின்ற ஒளியைக் கொடுக்கின்ற சுயஞ்சோதியாய் நின்றகுளிர்ந்த சுந்தரக்கடலை; எத்தனை வகையாகச் சொன்னாலும் சொல்லுதற்குக் கூடாத இனிமையான பரிபூரணக்கடலை; எப்பமிட்டு ஊட்டுதற்கு அடியேனாகிய நானும் உம்மை நம்பினேன் என்னை எட்டிவந்து ஆண்டருள் செய்வதற்கே, மத்திபமாகவுள்ள இருதய தீபத்தின் நடுவேயுள்ள நீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் வந்தருளவேண்டும். (எ-று)

இறைவன் உள்ளபடியே அநுபவிப்பவர்களுக்கு ஆநந்த வெள்ளமானது பெருகுமென்பார், 'தத்தியேகங்கறப் பெருகிவரு மாநந்த சமரசப் பெருவாரியை' எனவும், அடியார்கள் உண்மையானவர்களாக விருந்தால் அவர்களுக்குத்தானே வெளிவருகின்ற இன்பமுண்டென்

பார், 'சார்ந்தன்பரிதயங்களிக்கவே பொங்கிவரு சந்ததச் சுகவாரியை' எனவும், தம்மை உள்ளபடியே நாடுபவர்களுக்கு எங்கும் நிறைந்த வியாபகப் பொருளாய் விளங்குவா னென்பார், 'சுற்றிக் கவிந்து கொண் டெங்கு மொருமிக்கவே சூழ்கருணை நிறைவாரியை' எனவும், இறையவன் சோமசுந்தரம்போல் ஒளிப்பவன் ஆகையால் அவனுக்கு மிஞ்சின அழகுள்ளவர்கள் வேறெவரு மில்லை யென்பார், 'சொற்பிர காசந்தரு சுயஞ்சோதியாய் நின்ற சோமசுந்தரவாரியை' எனவும், இறைவனுடைய திருவருளானது எங்கும் நிறைந்த தென்பார், 'எத் தனைவிதங்கொண்டு சொல்லினுஞ் சொல்லொணு வினிய பூரணவா ரியை' எனவும், இப்படிப்பட்ட இன்பத்தை அடியேனுக்கு உண்பிக்க வேண்டு மென்பார், 'எப்பமிட ஆட்டவடி யேனுமுமை நம்பினே னெட்டிவந் தாளுதற்கே' எனவும், இறைவன் ஒவ்வொருவ ருடைய ஆன்மாக்களின் இருதயத்திலும் விளங்குவோ னென்பார், 'மத்திபத் தீபநடுவுள்ளநீர் பின்ருேடா வள்ளலிறசூல்வருகவே' எனவும், வளரு மரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்மணியே முகியித்தீனே எனவுங்கூறிஞர். (5)

அன்புப் பெருக்கை நல்லறிவுப்பெருக்கை மெய்ஞ்
ஞானுயிர் தப்பெ ருக்கை
அணையற்ற பேராசை வெள்ளப் பெருக்கையறி
வாகார வான்பெ ருக்கை
இன்பப் பெருக்கையருள் பொங்கும் பெருக்கவெளி
யெங்கெங்கு மொளிபெ ருக்கை
ஏகப் பெருக்கையனு போகப் பெருக்கைநல்
லினியசெந் தேன்பெ ருக்கைத்
தென்புப் பெருக்கைவெகு டம்பப் பெருக்கைமா
திவ்யமது ரப்பெ ருக்கைச்
சேரப் புகட்டவடி யேனுமுமை நம்பினேன்
சித்தம்வைத் தாளு தற்கே
வன்புப் பெருக்கைவடி வுள்ளநீர் பின்ருேடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைகின்ற உயர்ந்த குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தி லெழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணிபோன்றவனே! முகியித்தீனே! அன்பின் வெள்ளத்தை, அறிவாகிய வெள்ளத்தை; உண்மை ஞானு மிர்தமாகிய வெள்ளத்தை; அறிவு மயமா யிருக்கின்ற பெருவெள்ளத்

த்தை, சுகமாகிய வெள்ளத்தை, திருவருளானது விளங்குகின்ற வெள்ளத்தை, சகல லோகங்களிலும் தேஜோமயம் வீசுகின்ற வெள்ளத்தை, ஏரேவஸ்துவாகிய வெள்ளத்தை, அநுபவமாகிய வெள்ளத்தை, இனிமையாகிய செவந்த தேனினுடைய வெள்ளத்தை, இஷ்டமான வெள்ளத்தை, மிகுந்த டம்பமான வெள்ளத்தை, திவ்வியமான இன்ப வெள்ளத்தை, ஆகிய இவைகளை யெல்லாம் அடியேனுக்குச் சேரும்படியாக காட்டியாளுதற்கு அடியேனாகிய நானும் உம்மை நம்பினேன் தேவரீர் என்பேரில் திருவுள்ளமடைந்து ஆளுதற்பொருட்டே வன்பு வெள்ளத்தின் ரூபமுள்ள நீர் பின்றொடர வள்ளலாகவும், இறகுலாகம் வர வேண்டும், (எ-று)

கடவுள் அன்புள்ளவர்களிடத்திலேயே எழுந்தருளி யிருப்பவனென்பார், 'அன்புப்பெருக்கை' எனவும், ஆன்மாவினிடத்திலேயே இறைவன் கலந்திருக்கின்றா னென்பார், 'நல்லறிவுப்பெருக்கை' எனவும், ஞானமுள்ளவர்களுக்கே திருவருள் செய்பவனென்பார், 'ஞானாமிர்தப் பெருக்கை' எனவும், ஆசையானது எவருக்கும் உண்டாவதாயினும் அவ்வாசையை ஆளவேண்டிய முறைப்படி ஆளுவோரிடத்திலே திருவருளைக் காட்டுவோன் இறைவனே யென்பார், 'அணையற்றபேராசை வெள்ளப்பெருக்கை' எனவும், இறைவனுக்கு அறிவே ரூபமென்பார், 'அறிவாகாரவான்பெருக்கை' எனவும், மகிழ்ச்சியடைந்திருப்பவர்களுக்கே திருவருள் செய்பவனென்பார், 'இன்பப் பெருக்கை' எனவும், அருளானது இறைவனிடத்தில் அளவில்லாம லிருக்குமென்பார், 'அருள்பொங்கும் பெருக்கை' எனவும் சர்வ வுலகங்களிலும் தேஜோமயத்தை வீசுகின்றவன் இறையவனே யென்பார், 'எங்கெங்கு மொளி பெருக்கை' எனவும், இறைவனைப்போல வேறோர் தெய்வங் காணப்படுவதில்லையென்பார், 'ஏகப்பெருக்கை' எனவும், அநுபவம் அதிகமாக வுள்ளவனென்பார், 'அநுபோகப் பெருக்கை' எனவும், தென்புமுதலியவற்றால் வெளிப்படுபவன் இவனே யென்பார், 'தென்புப்பெருக்கை வெகு டம்பப்பெருக்கை மாதிவ்வியப்பெருக்கை - சேரப்புகட்ட அடியேனுமுமை நம்பினேன் சித்தம்வைத் தாளுதற்கே' எனவும், 'வன்புப் பெருக்கை வடிவுள்ள நீர் பின்றொடர வள்ளலிற குல்வருகவே' எனவும், 'வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிரு கண்மணியே முகியித்தீனே' எனவுங்கூறினர். (6)

கண்டபொரு ளத்தனையு மாகிநின் றவைகளுங்
  காணாத கார ணத்தைக்
கருதரிய சித்தாய் விசித்திரமாய் நின்றிலங்
  கா நின்ற காரணத்தை
அண்டகோ டிகளையுந் தன்னுள்வைத் தணுவினுக்
  கணுவான கார ணத்தை

அறியாம லென்றெய்வ மென்றெய்வ மென்பார்க்கு
மவ்வகைக் கார ணத்தை
யெண்டிசை விளக்கின்ற வித்தா யிருந்துமோ
ரிடமற்ற கார ணத்தை
எய்திக் களிக்கவடி யேனுமுமை நம்பினே
னெதிர்காட்டி யாளு தற்கே
மண்டலமும் விண்டலமு முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைகின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப் போன்றவனே! முகியித்தீனே! உலகத்தினிடத்தில் திருஷ்டிமாத்திரமாகக் காணப்படுகின்ற பொருள்கள் யாவுமாய் நின்று அவைகளாலுங் காணப்படாத காரணவஸ்துவை, நினைத்தற்கருமையான சித்தாகவும் விசித்திரமாகவு மிருந்து விளங்குகின்ற காரணவஸ்துவை, சகல அண்டங்களையும் தனக்குள்ளே வைத்து அணுப் பொருளுக்கும் அணுவான காரணவஸ்துவை, உள்மர்மங்களையெல்லாம் உணராமல் இது என்னுடைய தெய்வம், இது உன்னுடைய தெய்வமென்று சொல்லுவோர்களுக்கும் அவ்வவ்விதமாகவே நிற்குங் காரணவஸ்துவை, அஷ்டதிசைகளையும் உண்டாக்குகின்ற விதையாயிருந்தும் ஒரு இடப் பொருளாயில்லாத காரண வஸ்துவைப் பொருந்திச் சந்தோஷிக்கும்படி அடியேனாகிய நானும் உம்மை நம்பினேன் எமக்கு உம்முடைய தரிசனத்தை எதிரேகாட்டி யாளுவதற்கேயாம். ஆகையால் இவ்வுலகமும், இந்திரலோகமும் உள்ள நீர் பின்தொடர வள்ளலாகவும் இறசூலாகவும் வரவேண்டும், (எ-று)

உலகத்தில் காணப்படுகின்ற பொருள்களெல்லாம் இறைவனுடைய சொரூபமேயென்பார், 'கண்டபொரு ளத்தனையு மாகி நின்றவைகளுங் காணாத காரணத்தை' எனவும், இறைவனுடைய சங்கற்பமானது உயிர்களின்மேல் செல்லுங்கால் மிகவும் விசித்திரமாய்க் காணப்படுமென்பார், 'கருதரிய சித்தாய் விசித்திரமாய்நின்றிலங்கா நின்றகாரணத்தை' எனவும், இறைவன் கண்ணுக்குப் புலப்படா னென்பார், 'அண்டகோடிகளையுந் தன்னுள் வைத்தணுவினுக் கணுவான காரணத்தை' எனவும், உலகத்தில் ஜனங்கள் இறைவனை அவ்வவர்களுடைய மதங்களுக்குத் தகுந்த வண்ணம் இவன் என்னுடைய தெய்வம் இவன் என்னுடைய தெய்வமென்று சண்டையிடுவார்க ளென்பார்; 'அறியாம லென்றெய்வ முன்றெய்வ மென்பார்க்கு மவ்வகைக் காரணத்தை' என்வும், இறைவனுக்கு ஓரிடமென்றதில்லை யென்பார், 'எண்டிசை விளக்கின்ற வித்தா

யிருந்து மோரிடமற்ற காரணத்தை' எனவும், ஒவ்வொரு ஆன்மாக்க ளும் இறைவனை நம்பவேண்டிய தென்பார், 'எய்திக்களிக்க அடியேனு முமை நம்பினே னெதிர்காட்டி யாளுதற்கே' எனவும், 'மண்டலமும் விண்டலமுமுள்ள நீர் பின்றொடர வள்ளலிற சூல்வருகவே வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிரு கண்மணியே முகியித்தீனே' எனவுங் கூறினர். (7)

நிலையமுட னெங்கணுங் கோத்தநிலை குலையாது
நின்றதே சோம யத்தை
நெற்றிவிழி யூடுநிலை நின்றோ ருளந்தனி
னொளித்ததே சோமயத்தை
தொலையா திலங்குதுரி யாதீத மானவத்
துவிதமே சோம யத்தைத்
தொந்தங் கடிந்தவர்க ளுந்திக்குள் வண்டாய்த்
துவண்டதே சோம யத்தைச்
சலியாத வயிராக்ய தீரனை யலுப்பறச்
சார்ந்ததே சோம யத்தைச்
சாமுனெற் கருளவடி யேனுமுமை நம்பினேன்
சலுதிவர் தாளு தற்கே
மலிகருணை மிக்கவலு வுள்ளநீர் பின்றொடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகிபித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற உயர்ந்த குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! உறுதியுடனே ஈரேழு பதினான்கு லோகங்களிலும் ஒன்றுகச்சேர்ந்திருக்கிற நிலையானது கெடாமல் எழுந்த தேஜோமயத்தை, நெற்றிக்கண்ணினிடத்தில் நிலைத்து நின்றவர்களுடைய மனத்தின்கண் பதுங்கி வெளிப்பட்ட தேஜோமயத்தை, ஒழியாமல் பிரகாசிக்கின்ற துரியாதீதமாகிய அத்துவிதமார்க்க மாயமெந்திருக்கின்ற தேஜோமயத்தை, பந்தங்களை யறவே யொழித்திருப்பவர்களுடைய திருவுந்தியாகிய மூலாதாரத்திற்குள் வண்டைப்போல் துவண்டிருக்கின்ற தேஜோமயத்தை, என்றைக்கும் மனமானது சலியாம லிருக்கின்ற வயிராக்கியத்தையுடைய தீரனை இளைப்பில்லாத வண்ணம் பொருந்தியிருக்கின்ற தேஜோமயத்தை, சாவித்தையை முன்னதாக அருந்துவீரென்றுஞ் சடுதியில் எழுந்தருளிவந்து ஆண்டருள் செய்வீரொன்றும் அடியேனாகிய நானும் உம்மை நம்பினேன் ஆகையால் மிகுந்த கிருபையையுடைய

வலிவுள்ளவராகிய நீர் பின்றொடரா வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளிவரவேண்டும்.

இறைவன் எங்கும் நிலைத்தவனென்பார், 'நிலையமுடன்' எனவும், சர்வ வியாபகனென்பார், 'எங்கனுங் கோத்தநிலை குலையாது நின்ற தேஜோமயத்தை' எனவும், சுழிமுனையில் வெளிவருகின்ற கடவுளென்பார், 'நெற்றிவிழியூடுநிலை நின்றோருளந்தனி னெளித்த தேஜோமயத்தை' எனவும், அத்துவித வஸ்துவானது துரியாதீதமானதென்பார், 'தொலையாதிலங்கு துரியாதீதமான வத்துவித தேஜோமயத்தை' எனவும், மூலாதாரத்தில் விளங்குகின்றவனென்பார், 'தொாந்தங் கடிந்தவர்களுந்திக்குள் வண்டாய்த்துவண்டதேஜோமயத்தை' எனவும், வயிராக்கிய முள்ளவர்களுக்கு வெளிப்படுபவனென்பார், 'சலியாத வயிராக்கிய தீரனை யலுப்பறச் சார்ந்த தேஜோமயத்தை' எனவும், இறைவனை யாவரும் வணங்கவேண்டியது அவரவர்களுடைய கடமையென்பார், 'சரமுனெற்கருள வடியேனுமுமை நம்பினேன் சலுதிவந் தாளுதற்கே' எனவும், 'மலிகருணைமிக்க வலுவுள்ளநீர்பின்றொடரா வள்ளலிறசூல் வருகவே' எனவும், 'வளருமருணிறை குணங்குடிவாழு மென்னிருகண் மணியே முகியித்தீனே' எனவுங் கூறினர். (8)

எல்லைநிலை சொல்லரிய வல்லமையொ டெங்கணு
மிருந்தஞா னோதயத்தை
எப்பொருளு மெப்பொழுது மெவ்விடமு மவ்வடி
விலங்குஞா னோதயத்தை
அல்லினும் பகலினு மன்பர்மன வில்லினி
லடைந்தஞா னோதயத்தை
அழியாப் பதிக்குவந் தாள்குணங் குடியா
ரணைந்தஞா னோதயத்தைத்
தொல்லையறு நல்லறிஞர் செல்லும்வழி செல்லின்வெளி
தோற்றஞா னோதயத்தைத
தொழு தெழாப் பாவியடி யேனுமுமை நம்பினேன்
றெண்டுகொண் டாளு தற்கே
வல்லபஞ் சொல்லவந் துள்ளநீர் பின்றொடரா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தி லெழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப் போன்றவனே! முகியித்தீனே! எல்லையினுடைய அளவைச் சொல்லுதற்கரிய வல்லமையுடன்

எவ்விடத்திலும் வியாபித்திருந்த ஞானேதயமாகும் வஸ்துவை; எந்தக் காலத்திலும் எந்தப் பொருளிலும் எவ்விடத்திலும் அவ்வடிவான து விளங்குகின்ற ஞானேதய வஸ்துவை, இரவிலும் பகலிலும் அடியார் களுடைய மனமாகிய வீட்டினில் எழுந்தருளியிருக்கின்ற ஞானேதயப் பொருளை; என்றைக்கும் அறிதலில்லாத பதியின்கண் வந்து என்னை ஆண்டுகொள்ளுகின்ற குணங்குடியார் அணைந்த ஞானேதய வஸ்துவை, துன்பங்களொழிந்த உயர்ந்த ஞானிகள் போகின்ற வழியில் சென்றால் தேஜோமயமானது காணப்படுகின்ற ஞானேதய வஸ்துவை, வணங்கி எழுந்திருக்காத பாவியாகிய அடியேனாகிய நானும் உம்மை நம்பினேன். நீ என்னைத் தொண்டுகொண்டு ஆண்டடிமை கொள்ளுவாயென்றே ஆகையால் வல்லபமாகிய சாமர்த்தியத்தைச் சொல்ல வந்திருக்கின்ற நீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண் டும். (எ-று)

இறைவனுடைய அன்பைச் சொல்லுதற் களவில்லை யென்பார், ‘எல்லை நிலை சொல்லரிய வல்லமையொ டெங்கணு மிருந்த ஞானே நயத்தை’ எனவும்; அகோராத்திரம் இறைவனுடைய ஞானம் விளங் குவதென்பார், ‘எப்பொருளு மெப்பொழுது மெவ்விடமு மவ்வடி வில ங்கு ஞானேதயத்தை’ எனவும்; அடியார்களுடைய இருதயத்தில் வாசஞ் செய்பவனென்பார், ‘அல்லினும் பகலினு மன்பர்மன வில்லினி லடைந்த ஞானேதயத்தை’ எனவும், இறைவனுடைய இருப்பிடம் என்றும் அழியாத தென்பார், ‘அழியாப்பதிக்கு வந்தாள் குணங்குடியா ரணைந்த ஞானேதயத்தை’ எனவும், ஞானிகளின் வழியே மற்றவர்கள் செல்லவேண்டு மென்பார், ‘தொல்லையறு நல்லறிஞர் செல்லும்வழி செல்லின்வெளி தோற்று ஞானேதயத்தை’ எனவும், அன்பர்கள் தங்களைப் பாவிகளாகக்கொண்டு வணங்கவேண்டுமென்பார், ‘தொழு தெழாப் பாவியடி யேனுமுமை நம்பினேன் றொண்டுகொண் டாளு தற்கே’ எனவும், ‘வல்லபஞ் சொல்லவந் துள்ளநீர் பின்றொடர வள்ளலிறசூல் வருகவே’ எனவும், ‘வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிரு கண்மணியே முகியித்தீனே’ எனவுங் கூறினர். (9)

தொலையாத வான்கருணை குடிகொண் டிருந்ததே
சோமயா நந்த குருவைச்
சொந்தமுட னென்றனையும் வந்தடிமை கொண்டே
சுகந்தந்த மௌன குருவை
நிலையாத மாயைநிலை குலையநிலை குலையாத
நெறிதந்த ஞான குருவை
நித்தியா நந்தசுக முற்றுமரு மூமெதென்ற
நிட்டைநே ரிட்ட குருவைச்
சலியா தணைத்துமுத் தந்தா வெனைப்பெற்ற
தந்தையாய் வந்த குருவைத்

தழுவவறி யாதவடி யேனுமுமை நம்பினேன்
றயைபுரிந்த தாளு தற்கே
மலைகள்பொடி படுநடையு முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைகின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தி லெழுந்தருளியிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப் போன்றவனே! முகியித்தீனே! என்னைக்கும் நீங்காத பெரிய கிருபையானது குடிகொண்டிருந்த தேஜோமயத்தையுடைய ஆநந்த குருவை; சொந்தமுடனே என்னையும் வந்து அடிமையாகக்கொண்டு சுகத்தைக் கொடுத்த மௌனகுருவை; நிலைத்திராத மாயையின் நிலையானது குலைய நிலைகெடாத வழியில் கொடுத்த ஞானாசிரியனை; அழியாத ஆநந்தத்தை யுடைய இன்பத்தை யடைந்து மகுழ்வது என்கிற நிட்டையானது நேரிட்ட ஞானாசிரியனை; மனஞ்சலியாமல் அனைத்து முத்தத்தைக்கொடுக்க என்னை யீன்ற தகப்பனாக வந்த ஞானாசிரியனை; தழுவுதற்கு உணராத அடியேனாகிய நான் உம்மை நம்பினேன்; நீர் தயவுசெய்து ஆளுவதற்கே, மலைகளெல்லாம் பொடிபடுகின்ற நடையையுள்ள நீர் பின்தொடர வள்ளலாகவும் இறசூலாகவும் வரவேண்டும். (எ-று)

இறைவன் கருணையைவிட்டு நீங்காதவனென்பார், 'தொலையாதவான் கருணை குடிகொண்டிருந்த தேஜோமயாநந்தகுருவை' எனவும்; அன்பர்களைத் தாமே வலியவந்து ஆண்டடிமை கொள்ளுபவனென்பார், 'சொந்தமுடனென்றனையும் வந்தடிமைகொண்டே சுகந்தந்த மௌனகுருவை' எனவும்; மாயையினை நீக்க வல்லவன் இறைவனேயென்பார், 'நிலையாத மாயைநிலை குலையநிலை குலையாத நெறிதந்த ஞானகுருவை' எனவும்; நிட்டாநுபவரா யிருந்தால் சுகத்தையடையலாமென்பார், 'நித்தியாநந்த சுகமுற்று மகுழ்வதென்ற நிட்டை நேரிட்ட குருவை' எனவும்; இறைவன் யாவருக்கும் தந்தையொப்பானென்பார், 'சரியாதணைத்து முத்தந்தரவெனைப்பெற்ற தந்தையாய் வந்தகுருவை, எனவும்; அடியார்கள் இறைவனையே நம்பவேண்டு மென்பார், 'தழுவவறியாதவடி யேனுமுமை நம்பினேன் தயைபுரிந்தாளுதற்கே' எனவும் இறைவனுடைய நடையின் அதிர்ச்சியானது மலைகளும் பொடி படுவ்தாமென்பார், 'மலைகள் பொடிபடு நடையுமுள்ளநீர் பின்றொடர வள்ளலிறசூல்வருகவே' எனவும்; 'வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிரு கண்மணியே முகியித்தீனே' எனவுங் கூறினார். (10)

பன்மையாய் விரிந்த பல்பொரு ளெலாமதன்
றன்மையா யிருந்த தகுதியை விளக்கும்

அருளொளி விளக்கினை யருள்கவென் குரசான்
றெருளொளி பதமலர் சிந்தைசெய் திரத்தல்.

(பொ-ரை) பல வகையாக விரிந்த பலபொருள்களெல்லாம் அதனுடைய குணமாயிருந்த தகுதியை விளக்கும் திருவருளின் ஒளியின் விளக்கினை யருள்செய்ய வேண்டுமென்று ஞானசிரியன் தெளிந்த ஒளியையுடைய திருவடியாகிய மலரை மனதிற்கொண்டு இரத்தலாகும்.

### ஆசிரிய விருத்தம்.

எங்குமருள் விரிவாகி யங்கிங் கெனதாகி
யென்றனம்பி ரானு மாகி
எண்ணரிய வண்டபகி ரண்டங்க ளாகிநின்
றிகபர மிரண்டு மாகிப்
பொங்கிவழி கொண்டுபல் கடமெலாம் பெருகுபரி
பூரண னந்த மாகிப்
புனிதமெய்ஞ் ஞானவா னந்தமழை மாரியைப்
பொழிகருணை முகிலு மாகிக்
கங்குல்பக லில்ரவி மதியாகி யெங்குமொருப்
கங்கற்ற கங்கை யாகிக்
களியுமொளி புரியவடி யேனுமுனை நம்பினேன்
கருணைவைத் தாளு தற்கே
மங்காத திங்களொளி யுள்ளநீர் பின்றொடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைகின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப் போன்றவனே! முகியித்தீனே! எவ்விடங்களிலும் திருவருள் விரிவாகியும், அவ்விடத்தில்தான் உள்ளது இவ்விடத்தில் தான் உள்ளது என்று சொல்லப்படாதததாகியும், என்னுடைய பெருமானுகியும், எண்ணுதற் கருமையான உள்ளண்டவெளியண்டங்களாகி நின்று இம்மை, மறுமைப் பொருளாகியும், ததும்பி வழிதலைக்கொண்டு பலவகைப்பட்ட கடங்களெல்லாம் பெருகின்ற பரிபூரணானந்தமாகியும், பரிசுத்தமான உண்மை ஞானமாகிய ஆநந்த மழையைப்பொழிகின்ற கிருபாமேகமாகியும், இரவில் சந்திரனுகவும், பகலில் சூரியனுகவும் எவ்விடத்திலும் கரையில்லாத கங்கையாகியும், படிகின்ற தேஜோமயத்தை யுண்டாக்க அடியேனுகிய நானும் நீர் கருணைவைத் தாளுவீரென்று உம்மை நம்பினேன் ஆகையால் கெடாத சந்திரனது ஒளியையுள்ள நீர் பின்தொடா வள்ளலாகவும்' இறசூலாகவும் வரவேண்டும். (எ-று)

இறைவனுடைய திருவருளானது அருள்கொண்டவ ரிடத்தில் எங்கும் பரந்து காணப்படு மென்பார், 'எங்குமருள் விரிவாகி' எனவும்; இறைவன் அகண்டப் பொருளென்பார், 'அங்கிங்கெனு தாகி' எனவும், யாவருக்குந் தலைவனென்பார் 'என்றன் பிரானுமாகி' எனவும்; சர்வ அண்டங்களும் இறைவனே யென்பார்; 'எண்ணரிய வண்டபகிரண்டங்களாகி நின்று' எனவும்; இம்மை மறுமை இரண்டிற்குந் தலைவனென்பார், 'இகபர மிரண்டுமாகி' எனவும்; சர்வசரீரங்களிலும் இறைவன் கலந்திருப்பா னென்பார், 'பொங்குவழி கொண்டுபல் கடமெலாம் பெருகுபரி பூரணானந்தமாகி' எனவும், அன்பர்களுக்கு ஞானமழையைப் பொழிபவனென்பார், 'புனித மெய்ஞ்ஞான வாநந்த மழைமாரியைப் பொழிகருணை முகிலுமாகி' எனவும்; சூரிய சந்திரர்களும் அவனே யென்பார், 'கங்குல்பக லில்லிரவி மதியாகி யெங்குமொரு கங்கற்ற கங்கையாகி' எனவும்; அடியார்களுக்கெல்லாந் திருவருள் செய்பவன் அவனே யென்பார், 'கவியுமொளி புரியவடியே னுமுமை நம்பினேன் கருணைவைத் தாளுதற்கே' எனவும்; இறைவனுடைய தேஜஸானது திங்களொளிபோன்ற தென்பார், 'மங்காத திங்களொளி யுள்ளநீர் பின்றொடர வள்ளலிற சூல்வருகவே' எனவும், 'வளருமருணிறை குணங்குடிவாழு மென்னிரு கண்மணியே முகியித்தீனே' எனவுங்கூறினார். (1)

ஊனாகி யூனினுயி ராகியெவ் வுலகுமா
  யொன்று மிரண்டு மாகி
உள்ளாகி வெளியாகி யொளியாகி யிருளாகி
  யூருடன் பேரு மாகிக்
கானாகி மலையாகி வளைகடலு மாகிமலை
  கானக விலங்கு மாகிக்
கங்குல்பக லாகிமதி யாகிரவி யாகிவெளி
  கண்டபொரு ளவையு மாகி
நானாகி நீயாகி யவனாகி யவளாகி
  நாதமொடு பூத மாகி
நாடுமொளி புரியவடி யேனுமிமை நம்பினே
  னன்மைசெய் தாளு தற்கே
வானோரு மடிபணித லுள்ளநீர் பின்றொடர
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருகின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டுகண்களின் மணியைப் போன்றவனே! முகியித்தீனே!

ஊனாகியும் அந்த வூனிலுள்ள உயிராகியும், அத்துவிதமாகியும், துவித
மாகியும், அகப்பொருளாகியும், புறப்பொருளாகியும், ஒளியாகியும்,
இருளாகியும், ஊராகியும், பேராகியும், காடாகியும், மலையாகியும்,
வளைகின்ற கடலாகியும், மலையிலும், காட்டிலும் வாழ்கின்ற மிருகங்
களாகியும், இரவும் பகலுமாகியும், சந்திரனாகியுஞ் சூரியனாகியும்,
வெளிகளில் காணப்பட்ட பொருள்களாகியும், நானாகியும், நீயாகியும்,
அவளாகியும், நாதமாகியும், பூதமாகியும், எவர்களாலும் விரும்பப்படு
கின்ற தேஜோமயத்தைக் கொடுப்பதற்காகவும், அடியேனுக்கு நன்மை
யைச் செய்து ஆளுதற்கும் உம்மை நம்பினேன். ஆகையால் தேவர்
களும் திருவடிகளை வணங்கி வருகின்ற நீர் பின்றொடர வள்ளலாகவும்
இறசூலாகவும் வரவேண்டும்.(எ-று)

இறைவன் சர்வ பிராணிகளாக விருக்கின்றா னென்பார், 'ஊனாகி'
எனவும்; அவ்வச்சரீரியாயுள்ளவனும்இறைவனேயென்பார்,'ஊனிலுயி
ராகி' எனவும்; இறைவனைவிட வேறோர் அத்துவித வஸ்துவும் துவித
வஸ்துவு மில்லை யென்பார், 'எவ்வுலகுமா யொன்றா யிரண்டு
மாகி' எனவும்; உள்ளும் புறம்பும் இறைவனுடைய வியாபகமே யிருக்
கின்றதென்பார், 'உள்ளாகி வெளியாகி' எனவும்; தேஜோமயமும்,
மாயையுமாகிய இவைகளை விளைவிப்பவனும் இறைவனே யென்பார்,
'ஒளியாகி யிருளாகி' எனவும்; யாவருக்கும் ஊர் பேர் அமைவிப்பவ
னும் இறைவனே யென்பார், 'ஊருடன் பேருமாகி' எனவும், மலை
முதலிய வற்றிலும் இறைவனுடைய வியாபகமுண் டென்பார், 'கானாகி
மலையாகி வளைகடலுமாகி மலைகானக விலங்குமாகி' எனவும்; உலகத்தி
லுள்ளசர்வபொருள்களும் இறைவனே யென்பார், 'கங்குல்பகலாகிமதி
யாகிரவி யாகிவெளி கண்டபொரு ளெவையுமாகி' எனவும்; உலகத்திலு
ள்ள ஆன்மகோடிகளெல்லாமாய் நிற்பவன் இறைவனே யென்பார்,
'நானாகி நீயாகி யவனாகி யவளாகி நாதமொடு பூதமாகி' எனவும்;ஆன்மா
க்கள் இறைவனை உள்ளபடியே வணங்கவேண்டுமென்பார்,'நாடுமொழி
புரியவடியேனு முமைநம்பினேன் நன்மைசெய்தாளுதற்கே' எனவும்;
இறைவனைத் தேவர்களும் வணங்கவேண்டு மென்பார், 'வானோரு
மடிபணிதலுள்ளநீர் பின்றொடர வள்ளலிற சூல்வருகவே' எனவும்;
'வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிரு கண்மணியே முகியித்
தீனே' எனவுங்கூறினார். (2)

அந்தமுதன் முன்பினொடு பக்கநடு வாகிநின்
றவைகளற் றதுவு மாகி
அருவாகி யுருவாகி யருவுருவ மற்றவறி
வாகார மோன மாகி
தந்தைதா யாகியரு டந்தகுரு வாகியென்
றன்னுயிர்க் குயிரு மாகித்

தாயிற் சிறந்தவந் நேயச் சிறப்பாய்ச்
  சதானந்த ஞான மாகிச்
சிந்தைசெய வந்ததிற மாகியெனை யாட்கொண்ட
  தேசிகன் றானு மாகித்
தெளியுமொளிபுரியவடி யேனுமுமை நம்பினேன்
  சித்திதந் தாளு தற்கே
வந்திருந் தருளுதயை யுள்ளநீர் பின்றொடர
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப் போன்றவனே! முகியித் தீனே! ஈறு, முதல், முன், பின், பக்கம், நடு என்னும் இவைகளாகியும் இவைகளல்லாததாகியும், அருவாகியும், உருவாகியும், அருவுருவமாகியும், மற்ற அறிவுவடிவமாகியும், மௌனமாகியும், தந்தையாகியும், தாயாகியும், திருவருளானது கொடுத்த குருவாகியும், என்னுடைய உயிருக் குயிராகியும் தாயைப்பார்க்கிலுஞ் சிறந்தவனான அந்த சிநேகத்தையுடைய சிறப்பாய் எப்பொழுதும் ஆநந்தத்தை விளைவிக்கின்ற ஞானமாகியும், யாவராலுஞ் சிந்தித்தற்கிடமாக வந்தவல்லமையாகியும் என்னையடிமை கொண்ட ஞானாசிரியனாகியும் தெளிகின்ற தேஜஸைச்செய்ய அடியனேனும் எனக்குச் சித்திகொடுத்து ஆள்வதற்கு உம்மை நம்பினேன் ஆகையால் எழுந்திருந்து வந்திருந்து அருளுகின்ற தயையுள்ளநீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் வரவேண்டும்.(எ-று)

இறைவன் ஆதியந்த முதலியவைக ளில்லாதவ னென்பார், 'அந்த முதன் முன்பினொடு பக்கநடு வாகிநின் றவைகளற் றதுவுமாகி' எனவும்; ரூபமற்றவனென்பார் 'அருவாகி' எனவும்: இறைவனுக்குச் சங்கற்பரூபமுண்டென்பார், 'உருவாகி' எனவும், ரூபம் அரூபம்என்கிற இரண்டுமுண்டென்பார். 'அருவுருவம்' எனவும்; இவைகளல்லாதவனுமாவானென்பார், 'மற்ற' எனவும்; அறிவே இறைவனுக்குத் திருமேனியென்பார், 'அறிவாகார மோன மாகி' எனவும்; இறைவன் சகல உயிர்களுக்குந் தந்தையையுந் தாயையும் ஒப்பாவானென்பார், 'தந்தை தாயாகி' எனவும்; குருவாக வந்து திருவருள் செய்வா னென்பார், 'அருள்தந்த குருவாகி' எனவும், சகல ஆன்மகோடிகளுக்கும் பரமான்மாக்களவானென்பார், 'என்றன்னுயிர்க் குயிருமாகி' எனவும்; இறைவன் தாயைக் காட்டிலும் மேலாகக் காப்பாற்றுவா னென்பார், 'தாயிற் சிறந்தவந் நேயச் சிறப்பாய்ச் சதாநந்த ஞானமாகி' எனவும்; யாவரா

லுந் துதிக்கப்படுபவனென்பார், 'சிந்தைசெயவந்ததிறமாகி' எனவும்; ஞானசிரியனும் இறைவனே யாமென்பார், 'எனையாட் கொண்ட தேசி கன் றானுமாகி' எனவும்; அன்பர்களெல்லாம் அவர்களை ஆட்கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொள்வது சகசமென்பார், 'தெளியுமொளி புரியவடியேனு முமை நம்பினேன் சித்திதந் தாளுதற்கே' எனவும்; 'வந்திருந் தருளுதயை யுள்ள நீர் பின்றொடர வள்ளலிற சூல்வருகவே' எனவும்; 'வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிரு கண்மணியே முகியித்தீனே' எனவுங் கூறினர். (3)

பாராகி யெப்பொருளு மாகியப் பார்தனிற்
 பஞ்சவன் னங்க ளாகிப்
பற்பல விதங்கொண்ட விந்துநா தத்துட்
 பதிந்துமுளை பருவ மாகி
வேரோடி யோக பூமிக்குள் வளர்ந்தருள்
 விளைந்தொழுகு தருவு மாகி
விண்ணாகி மண்ணாகி யெண்ணாகி வெகுவாகி
 விரிவாகி மறைவு மாகி
தூராதி தூரத்தி னுந்தூர மாகியதி
 சூழ்ச்சிச் சமீப மாகித்
தோற்றுமொளி புரியவடி யேனுமுமை நம்பினேன்
 றுரிதமுட னாளு தற்கே
வாராரு மருண்மாரி யுள்ளநீர் பின்றொடர
 வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தி லெழுந்தருளியிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப் போன்றவனே! முகியித் தீனே! பூவுலமாகியும், அவ்வுலகத்திலுண்டாகின்ற சர்வபொருளாகி யும் அந்த வுலகத்திலிருக்கின்ற ஐந்துவித வர்ணங்களாகி பதிந்து முளைக்கின்ற பருவமாகியும்;ஆதியுடன்யோகபூமிக்குள்ளே வளருகின்ற திருவருளானது விளைந்து ஒழுகுகின்ற தருவாகியும்; ஆகாயமாகியும், பூவுலகமாகியும், பொன்னும் பொருளாகியும், வெகுவாகியும், விரிந்த பொருளாகியும், மறைவுப் பொருளாகியும், தூராதிதூரத்தின் கண்ணுந் தூரமாய் அதிக சூழ்ச்சியுள்ள சமீபமாகியும், காணப்படுகின்ற தேஜோ மயத்தை யுண்டாக்கவும் சீக்கிரத்தில் என்னை ஆண்டடிமை கொள்ளு வதற்கும் அடியேனாகிய நானும் உம்மை நம்பினேன், ஆகையால் நீண்ட கிருபை மிகுந்த திருவருள் மழையை அன்பர்களுக்குப் பொழிகின்ற நீர் பின்தொடர வள்ளலாகவும், இறசூலாகவும் வரவேண்டும்.(எ-று)

இறைவனுடைய சொரூபம் சர்வ பூதங்களுமாவன வென்பார், 'பாராதி' எனவும் ;அதிலுள்ள சராசரப்பொருள்களும் அவனே யென்பார், 'எப்பொருளுமாகி' எனவும்; பூதங்களுடைய ஐந்து நிறங்களும் அவனுடையனவே யென்பார், 'பார்தனிற் பஞ்ச வன்னங்களாகி' எனவும்; விந்துநாதங்களின் கலப்பா லுண்டாகின்ற கருக்களிலுங் கலந்தவன் இறைவனே யென் பார், 'பற்பல விதங்கொண்ட விந்து நாதத்துட் பதிந்து முளைபருவ மாகி' எனவும்; யோகிகள் செய்யுங் கிரியைகளில் கலந்தவனென்பார், 'வேரோடியோக பூமிக்குள் வளர்ந்தருள் விளைந்தொழுகு தருவுமாகி' எனவும், இறைவன் சர்வ பூதங்களுமாவா னென்பார், 'விண்ணாகி மண்ணாகி' எனவும்; யாவரும் எண்ணுங்கடவுளா யிருப்பவ னென்பார், 'எண்ணாகி' எனவும், விரிவுமறைவுகளா யிருப்பவனும் இறைவனே யாமென்பார், 'வெகுவாகி விரிவாகி மறைவுமாகி' எனவும், எந்தப் பொருளை நினைக்கின்றோமே அவ்வப் பொருள்களின் தூரமாகவே காணப்படு மென்பார், 'தூராதி தூரத்தினுந் தூரமாகி யதிசூழ்ச்சிச் சமீபமாகி' எனவும்; அன்பர்கள் யாவரும் இறைவனுடைய தேஜோமயத்தை யடையவே வணங்குகின்றார்க ளென்பார், 'தோற்றுமொளி புரியவடியேனு முமைநம்பினேன் துரிதமுட னாளுதற்கே' எனவும், 'வாராருமருண்மாரி யுள்ளநீர் பின்றொடர வள்ளலிற சூல்வருகவே' எனவும்; 'வளருமரு ணிறைகுணங்குடிவாழு மென்னிரு கண்மணியே முகியித்தீனே' எனவுங் கூறினார். (4)

பார்த்ததிக் கெங்குமொரு வெளியாகி யென்பரா
பரப்பிரம வெளியு மாகிப்
பற்றுமன வெளியாகி மனவெளி கடந்தமுப்
பாழான வெளியு மாகிக்
கூர்த்தவறி வத்தனையு மேற்படி கொள்ளையே
கொண்ட கடுவெளியு மாகிக்
கோடானு கோடிபல வண்டபகி ரண்டமுங்
கொண்டபெரு வெளியு மாகிச்
சேர்த்தநிலை குலையுண்டு போகாது நிலையுண்ட
சிற்சத்தி வெளியு மாகிச்
செறியுமொளி புரியவடி யேனுமுமை நம்பினேன்
றெளிவுதந் தாளு தற்கே
வார்த்தைதப் பாதநாவுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமருணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற
குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தி லெழுந்தருளி யிருக்கின்ற
என்னுடைய இரண்டு கண்களின் மணியைப் போன்றவனே! முகியித்
தீனே! பார்க்கின்ற எந்தத் திசைகளிலும் ஒரு வெளியாகியும், என்னு
டைய பராபரமான பிரம வெளியாகியும் பிடிக்கின்ற மனோ வெளி
யாகியும் அந்த மனவெளியைத் தாண்டின முப்பாழாகிய வெளியாகியும்;
கூர்மையான அறிவுகள் யாவையும் தகுந்தபடியே கொள்ளைகொண்ட
கடுவெளியான பரவெளியாகவும்; அநேக கோடி அண்டபகி ரண்டங்
களையும் தன்னுள் அடக்கிக்கொண்ட பெரு வெளியாகியும்; சேர்த்து
வைத்த உண்மை நிலையானது கெட்டுப் போகாதபடி நிலைத்திருக்கின்ற
ஞானசத்தியின் வெளியாகியும்; நிறைந்திருக்கின்ற திருவருளின் ஒளி
யானது புரியவும் தெளிவைக்கொடுத்து ஆளுதற்பொருட்டும் அடியே
னாகிய நானும் உம்மை நம்பினேன், ஆகையால் வார்த்தையானது
தப்பாத நாவையுள்ள நீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும்
வரவேண்டும். (எ-று)

இறைவன் தன்னைத்தான் உள்ளபடியே யுணர்ந்தவர்களுக்கு
எங்குங் காணப்படுவா னென்பார், ‘பார்த்ததிக்கெங்குமொரு வெளி
யாகி’ எனவும்; பரப்பிரமமென்று சொல்லப்படுபவனும் இறைவனே
யென்பார், ‘என்பராபரப்பிரமவெளியுமாகி’ எனவும்; அன்பர்களுடைய
மனமே இறைவனுக்குச் சொரூபமென்பார், ‘பற்றுமனவெளியாகி’
எனவும்; அவ்வெளிகளைக் கடந்த இடத்திலு மிருப்பானென்பார், ‘மன
வெளிகடந்த முப்பாழான வெளியுமாகி’ எனவும், அன்பர்களுடைய
அறிவின்கண் குடிகொள்பவர் இறைவனே யென்பார், ‘கூர்த்தவறி வத்
தனையு மேற்றபடி கொள்ளையே கொண்டகடு வெளியுமாகி’ எனவும்,
உள்ளண்டங்களும் வெளியண்டங்களும் இறைவனுடைய மயமாகவே
காணப்படு மென்பார், ‘கோடானுகோடி பலவண்ட பகிரண்டமும்
கொண்டபெரு வெளியுமாகி’ எனவும்; நிலைபெற்ற உண்மை நிலையா
னது கெட்டுப்போகாமல் காப்பவன் இறைவனே யாவானென்பார்,
‘சேர்த்தநிலை குலையுண்டு போகாது நிலையுண்ட சிற்சத்தி வெளியு
மாகி’ எனவும்; அவனுடைய திருவருளானது யாவருக்கும் வந்து கை
கூடவேண்டியது சுபாவமென்பார், ‘செறியுமொளி புரியவடி யேனு
முமை நம்பினேன் தெளிவுதங் தாளுதற்கே’ எனவும், இறைவன உண்
மையுள்ளவ னென்பார், ‘வார்த்தை தப்பாத நாவுள்ளநீர் பின்றொடர
வள்ளலிறசூல்வருகவே’ எனவும், வளருமரு ணிறைகுணங் குடிவாழு
மென்னிரு கண்மணியே முகியித்தீனே’ எனவுங் கூறினார். (5)

நடையுடன் கிடையாகி நண்ணுமிரு வினையாகி
நடைபடிக டானு மாகி
நடுவே முளைத்தநீ நானெனலு மாகிவ
நாட்டங்க டானு மாகித்

தடையாகி வைத்ததடை யற்றவிடை யாகிநற்
றாரணைக டானு மாகித்
தலைமையொடு நிலைமையும் வலுமைகளு மாகியெச்
சங்கதைக டானு மாகி
இடையாகி நடுவாகி நன்மைதீ மையுமாகி
யேகமுத லெவையு மாகி
இலகுமொளி புரியவடி யேனுமுமை நம்பினே
னிதமிரைத் தாளு தற்கே
மடமடென வடிநடன முள்ள நீர் பின்றொடா
வள்ளலிற ருல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்வியக்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! நடைப்பொருளாகியும், கிடைப்பொருளாகியும், பொருந்திய நல்வினை, தீவினைகளாகியும், நடைபடிகளாகியும், நடுவே உண்டான நீ எனலும், நான் என்னலும் ஆகியும், வருகின்ற நாட்டங்களாகியும், தடையாயிருக்கின்ற பொருளாகியும், தடையற்ற இடையாகியும், நல்ல தாரணைப் பொருள்களாகியும், தலைமைப் பொருள்களாகியும், என்றும் நிலைத்த பொருள்களாகியும், வல்லமைக ளுள்ளவைகளாகியும், எச்சமாகிய கதைகளாகியும், நடுவாகியும், நன்மையாகியும்; தீமையாகியும், ஒன்று முதலாகச் சொல்லப்பட்ட எந்தப் பொருளுமாகியும், விளங்குகின்ற தேஜஸை உண்டாக்கவும், நன்மையான வார்த்தைகளைச்சொல்லி ஆள்வதற் பொருட்டும் உம்மை நம்பினேன் ஆகையால் மடமடவென் கிற சத்தத்துடன் திருவடிகளின் நடனஞ் செய்கின்ற நீர் பின்றொடா வள்ளலாகவும் இறசூலாகவும் வரவேண்டும். (எ-று)

இறைவன் சகல நடைகளையு முள்ளவனென்பார், 'நடையுடன் கிடையாகி' எனவும்; நல்வினை தீவினைகளையும் உயிர்களுக்கு உண்பிப்பவன் இறைவனே யென்பார், 'நண்ணுமிரு வினையாகி' எனவும், நான் என்னும்பொருள் முதலிய சர்வமும் இவனே யென்பார், 'நடைபடிக டானுமாகி நடுவே முளைத்தநீ நானெனுமாகிவரு நாட்டங்கடானுமாகி' எனவும்; இறைவனுக்கு எந்தப் பொருள்களுந் தடையற்றனவேயாய் விளங்குவன வென்பார், 'தடையாகி வைத்த விடையற்ற விடையாகி நற்றாரணைகடானுமாகி' எனவும், தலைமை முதலிய குணங்களையுடையவனென்பார், 'தலைமையொடு நிலைமையும் வலுமைகளு மாகியெச் சங்கதைக டானுமாகி' எனவும், இடை முதலிய எல்லா விடங்களிலும் விளங்குபவனும் அவனேயென்பார், 'இடையாகி நடுவாகி நன்மை

தீமையுமாகி யேகமுத லெவையுமாகி' எனவும், அன்பர்களெல்லாம் இறைவனை வணங்கவேண்டிய அவசியமுண் டென்பார், 'இலகுமொளி புரியவடி யேனுமுமை நம்பினே னிதமுரைத் தாளுதற்கே' எனவும்; 'மடமடென வடிநடன முள்ளநீர் பின்றொடர வள்ளலிற சூல்வருகவே' எனவும்; 'வளருமரு ணிறை குணங்குடிவாழு மென்னிரு கண்மணியே முகியித்தீனே' எனவுங்கூறினார். (6)

மாயைமுத லாகியுயி ராகியற் புதமான
மன்னுயிர்க் குயிரு மாகி
வாருமிரு வினையாகி வினைதனக் கீடாகி
வாழ்பா ழுடம்பு மாகித்
தூயறிவு கலையாகி நிலையாகி நிலையாத
தொந்தங்க டாமு மாகித்
துறவாகி மூவாசை யுறவாகி மறைவாகிச்
சோதிப்பிர காச மாகி
ஆயுமறை முடிவாகி யடியாகி நடுவாகி
ஆச்சரிய கூத்து மாகி
ஆடுமொளி புரியவடி யேனுமுமை நம்பினே
னன்புகூர்ந் தாளு தற்கே
வாயூறு தேனின்மொழி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! மாயை முதலாகிய பொருள்களாகியும், ஆன்மாக்களாகியும், ஆச்சரியத்தை விளைவிக்கின்ற நிலைபெற்ற உயிர்க்குயிராகியும், வளர்கின்ற நல்வினை தீவினைகளாகியும் அந்த இருவினைகளுக் கீடாகியும், வாழ்கின்ற பாழ்பட்ட சரீரமாகியும், பரிசுத்தமான அறிவினா லுணரப் படும் காலமாகியும், உண்மை நிலையாகியும், எவ்விடத்தும் நிலைத்திராத தொந்தப் பொருள்களாகியும், துறவாகியும், மூன்று ஆசைகளுக்கும் உறவாகியும் மறைவுபட்ட பொருளாகியும், யாவருக்கும் உணரக்கூடா மல் உள்ளன்பர்களுக்கு மாத்திரம் உணரக்கூடிய தேஜோமயப் பொருளாகியும், யாவராலும் ஆராயப்படுகின்ற வேதங்களின் முடிவாகியும், அடியாகியும், நடுவாகியும், அற்புதத்தை விளைவிக்கின்ற கூத்தாகியும், நடிக்கின்ற தேஜோவொளியை எனக்குத் திருவருள் செய்யவும் அன்புமிருந்து என்னை ஆளவும் நான் உம்மைநம்பினேன், ஆகையால் வாயின்

கண் சுரக்கின்ற திருவாய்மொழியையுள்ள நீர் பின்ருெடா வள்ளலாக வும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

மாயை முதலிய சர்வ ரூபங்களும் இறையவனே யாவான் என்பது கருத்து. (7)

கண்ணுன கண்ணேயெ னன்னமேயென்றழுவர்
கண்டகண் காட்சி யாகிக்
கவலேகுடி கொண்டுதட் டழியார்க ணன்மனக்
கண்ணுட்டி தானு மாகி
மண்ணுன வஞ்சநெஞ் சத்தினர்க் கேற்ருது
மறைவுதரு புதைய லாகி
மதபேத மோதிமதி கெட்டவர்க் கெட்டாத
வான்கருணை வெள்ள மாகி
எண்ணுத வெண்ணமெண் ணுரெடுத் துண்ணுமே
ரின்பப் பெருக்கு மாகி
எய்துமொளி புரியவடி யேனுமுமை நம்பினே
னின்புதந் தாளு தற்கே
வண்ணத் திருக்கருணே யுள்ளநீர் பின்ருெடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித்தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! என்னுடைய கண்ணைப்போன்ற கண்ணே! என்னுடைய அன்னமே! என்று விரும்பினவர்களெல்லாங் கண்ட கண்ணினது காட்சியாக அழுவார்கள். துன்பமானது குடிகொண்டு தட்டழிந்து கெடாதவர்களுடைய உயர்ந்த மனத்தின் கண்ணுட்டியாகியும்; மண்ணுவதற்கேதுவான வஞ்சகத்தை யுடைய மனத்தினர்க்கு ஏற்ருமல் மறைவு கொடுக்கின்ற புதையலாகியும், மதவித்தியாசங்களைச் சொல்லி புத்தி கெட்ட ஆன்மாக்களுக்கு எட்டாத பெரிய கிருபா பிரகாச மாகியும், எண்ணத்தகாத எண்ணத்தை எண்ணுதவர்களெல்லாம் எடுத்தெடுத்து உண்ணுகின்ற பேரின்ப வெள்ளமாகியும், பொருந்தின தேஜோமயத்தைச் செய்யவும் பேரின்பத்தைக் கொடுத்து ஆட்கொள்ளுவதற்கும் அடியேனுகிய நான் உம்மை நம்பினேன், ஆகையால் வடிவுபொருந்திய திருவருளையுள்ள நீர் பின்ருெடா வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

உலகத்தில் ஆன்மாக்கள் தங்கள் தங்கள் பரிபாகங்களுக்குத் தகுந்த வண்ணம் எந்த எந்த விதமாக நினைக்கின்ருர்களோ அவ்வவ்வண்

ணம் வந்து திருவருள் செய்வானென்பார், 'கண்ணனகண்ணே' என்பது முதலாகச் சொன்னர் இதுவே இச்செய்யுளின் கருத்துமாகுமென்றுணரக்கடவர். (8)

வேதவே தாந்தமேல் வீடாகி நட்டநடு
  வீட்டின் விளக்கு மாகி
வித்தக னிருக்குநவ மணிமாட மாகியொளி
  விரிகதிர்ச் சுடரு மாகி
நாதகீ தம்பல முழக்கமிட் டோலமிடு
  நாதநா தாந்த மாகி
நற்குணங் குடியா னெனப்பே ரெனக்கருளு
  ஞானதிரு நாம மாகி
ஆதிமுத லந்தமுந் தானகி விரிவா
  யகண்டிதா கார மாகி
அவிருமொளி புரியவடி யேனுமுமை நம்பினே
  னறிவுதந் தாளு தற்கே
மாதூய பாதமல ருள்ளநீர் பின்ருேடா
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்வியக்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப் போன்றவனே! முகியித்தீனே! வேதங்களும், வேதாந்தங்களும், மேல்வீடுகளாகியும், அப்படி நட்ட நடுவாயுள்ள வீட்டின் விளக்குமாகியும், பரிசுத்தமானவன் எழுந்தருளியிருக்கின்ற ஒன்பது ரத்தினங்க ளிழைத்த மயமாகியும், தேஜஸை விரிக்கின்ற கிரணங்களையுடைய சுடராகியும், நாதத்தையுடைய கீதங்களைப் பலவாகப்பாடி அதனல் முழக்கமிட்டு ஓலஞ்செய்கின்ற நாதநாதாந்தப் பொருளாகியும், நல்ல குணங்குடியானென்கிற பேரை எனக்குத் திருவருள் செய்யும் ஞானத்திருநாமமுடையதாகியும்; ஆதிவஸ்துவும், இடைவஸ்துவும், அந்தமாய்க் காணப்படும் வஸ்துவும் தானேயாகியும், சர்வ விடங்களிலும் விரிந்திருக்கின்ற வஸ்துவாகியும், அகண்டிதாகாரப் பொருளாகியும், பிரகாசிக்கின்ற தேஜோமயத்தைக் கொடுக்கவும் உண்மை ஞானத்தைக்கொடுத்து ஆளுதற்காகவும் அடியேனும் உம்மை உண்மையாக நம்பினேன் ஆகையால் மகத்தான பரிசுத்தமுள்ள திருவடி மலர்களையுள்ள நீர் பின்ருேடா வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளிவரவேண்டும். (எ-று)

இறைவன் வேதமுதலிய வற்றிலும் அவைகளுக்கப்பாலும் விளங்குபவனும், பலமுழக்கமிட்டுத் திரிபவனுமாவானென்பார் இவ்வண்ணங் கூறினர். இதற்காகவே பெரியோர்களும் வேதங்கடந்தவனென்றுசொல்லுகின்றார்கள் என்றுணரவேண்டும். (9)

கங்குல்பக லற்றவரு டங்குமெங் கெங்குநிறை
காரணக் கடவு ளாகி
கங்கறப் பொங்குகரு ணைக்கடலு மாகியெங்
காதலா கமல மாகி
சிங்கத்தை யொத்துவினை தன்னைச் செயங்கொண்ட
தேசிகன் றானு மாகித்
தேறுதீ ரங்குணங் குடிவாழ்க்கை யெற்குதவ
திவ்யகுணமேரு வாகி
எங்கே யிருக்கினு மங்குவந் துதவிதரு
மெங்கண்மகு மூது மாகி
இயையுமொளி புரியவடி யேனுமுமை நம்பினே
னெளிதில்வந் தாளு தற்கே
மங்கள சவுந்தரிய முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற ருல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித்தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! இரவு பகல் என்னும் இரண்டு காலங்களையும் நீங்கின திருவருளானது தங்குகின்ற சர்வ இடங்களிலும், நிறைந்திருக்கின்ற காரணக் கடவுளாகியும், கரையிலிதானென்று அளவிடக் கூடாதபடி பொங்குகின்ற கிருபா சமுத்திரமாகியும், என்னுடைய உள்ளங்கை நெல்லிக்கனியாகியும், சிங்கத்தைப்போன்ற இருவினைகளையும் ஜெயித்த ஞானாசிரியனாகியும் தேர்ச்சியையடைந்த வல்லமைபொருந்திய குணங்குடி என்னும் க்ஷேத்திரத்தில் வாழும் அதிகாரத்தை எனக்குதவ திவ்விய குண மேருமலை போன்றதாகியும், நான் எந்தவிடத்தி லிருந்தாலும் அந்தவிடத்தில் வந்து திருவருளைக் கொடுக்கின்ற எங்களுடைய மகமதுவாகியும்; பொருந்திய திருவருளொளியைச் செய்ய எற்கவும் இலேசாக வந்து ஆளுதற்பொருட்டும் அடியேனாகிய யானும் உம்மை உண்மையாக நம்பினேன். ஆகையால் மங்களமான அழகினையுடைத்தாயிருக்கின்ற நீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

இறைவனுக்கு இரவும் பகலும் மற்றெந்த கண்டிதமுமில்லை யென்பார் இவ்வண்ணம் விவரித்துக் கூறினாரென்று இதன்கருத்தை உள்ளபடியே யுணரக்கடவர். (10)

அருள்கூர்ந்த காட்சியாகிய வுண்மையும்
பொருள்கூர்ந்து காண்போன் வேறெனப் பொருந்தா
தொன்றுமுறைமை யோதுக விவ்விடை
யின்றாக வருள்கவென் றிரங்கி யிரத்தல்

(பொ-ரை) திருவருள் மிகுந்த தோற்றமாகிய உண்மையும் உண்மைப் பொருளைக்கூர்ந்து காண்பவன் வேறென்று பொருந்தாமலும், சேராமலும், இருக்கின்ற முறைமையைச் சொல்லுக, அன்றி அப்போது இவைகளெல்லாம் இல்லையாக அருளக்கடவர் என்று மனமிரங்கி இறத்தலாகும்.

பாரீரோ வென்னையென் னன்னையே யென்முகம்
பார்த்தருள் பழுத்தி டீரோ
பாவிகன் னெஞ்சவஞ் சஞ்சிந்த வந்துமது
பாதத் தழுத்தி டீரோ
வாரீரோ வென்னெதிரில் வந்தெனக் கொருமுத்தம்
வாய்கொண் டளித்தி டீரோ
மகிழீரோ புகழீரோ கருணைகூர்ந் தென்னையாள
வாவென் றழைத்தி டீரோ
சேரீரோ வென்னையுஞ் சேர்ந்தோர்க்கு மமதருட்
டேறற் றெளித்தி டீரோ
சிந்தைநொந் திடையுமடி யேனுமுமை நம்பினேன்
சித்தம்வைத் தாளு தற்கே
வாரோ மெனச்சொன்ன துள்ளநீர் பின்றொடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ளிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னும் திவ்வியக்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டுகண்களின் மணியைப் போன்றவனே! முகியித்தீனே! என்னுடைய தாயே! என்னைக்கண்டு என்னுடைய முகத்தைப்பாரீரோ? அவ்வண்ணம் பார்த்து திருவருள் பழுத்திடீரோ? எனக்கு எதிரே வரமாட்டீரோ? அவ்வண்ணம் வந்து எனக்கு ஒரு முத்தத்தை உம்முடைய திருவாயைக்கொண்டு கொடுக்க மாட்டீரோ? எம்மைப்பற்றி மனச் சந்தோஷத்தை யடையமாட்டீரோ? புகழ

மாட்டீரோ? கிருபைமிகுந்து அடியேனை யாளுதற்பொருட்டு என்னை வாவென்று அழைக்கமாட்டீர்களோ? என்னுடன் சேரமாட்டீரோ? அவ்வண்ணஞ் சேர்ந்தவர்களுக்கும் உம்முடைய திருவருளினுடைய தேனைத் தெளிக்கமாட்டீரோ? மனம் நொந்து வாடுகின்ற அடியேனும் நீ சித்தம்வைத்தாண்டருள் செய்வாயென்று உம்மை நம்பினேன்; ஆகையால்வருகின்றே மென்றுசொல்லி யுள்ளநீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும்.(எ-று)

இறைவனை அன்னையைப்போல் கருணையுள்ளவனென்று சொல்ல வேண்டிய தென்பார், 'பாரீரோ வென்னையென் னன்னையே யென் முகம் பார்த்தருள் பழுத்திடீரோ' எனவும்; ஆன்மாக்களுடைய வலிய நெஞ்சத்தை விளக்குவிப்பவன் இறைவனே யாவா னென்பார், 'பாவி கன்னெஞ்சவஞ் சஞ்சிந்த வந்துமது பாதத்தழுத்திடீரோ' எனவும்; இறைவனுடைய முத்தத்தை வேண்டினால் திருவருள் கிடைக்கு மென்மார், 'வாரீரோ வென்னெதிரில் வந்தெனக் கொருமுத்தம் வாய் கொண்டளித்திடீரோ' எனவும்; இறைவனுக்கு அன்பர்களிடத்தில் பிரியமிருந்தாலே அவர்கள் சுகத்தை யடையலா மென்பார், 'மகிழீரோ புகழீரோ கருணைகூர்ந்தெனை யாளவாவென் றழைத்திடீரோ'எனவும்; இறைவன் அன்பர்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டு மென்பார், 'சேரீரோ' எனவும்; என்னை சேர்த்து வைத்திருக்கின்ற அடியார் கூட்டத்திற்கும் என்மீது வைத்திருக்கின்ற கிருபையைக் காட்டவேண்டு மென்பார், 'என்னையுஞ் சேர்ந்தோர்க்கு மும தருட்டேறற் றெளித்திடீரோ' எனவும்; அன்பர்களெல்லாம் இறைவனை உள்ளபடியே வணங்க வேண்டு மென்பார், 'சிந்தைநொந்திடையு மடியேனு முமைநம்பினேன் சித்தம்வைத் தாளுதற்கே' எனவும்: 'வாரோமெனச்சொன்ன துள்ள நீர் பின்றொடர வள்ளலிறசூல்வருகவே' எனவும், 'வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிரு கண்மணியே முகியித்தீனே' எனவுங் கூறினார். (1)

எங்கட் குடிக்கரச ரேயுமது பாதமெற்
கெய்தாத தென்ன குறையோ
என்றெய்வ முன்றெய்வ மென்றகுறை யோவல்ல
திடசாப மான குறையோ
பங்குகூ றிட்டகுறையோபாவி வாழ்மனது
பக்தியில் லாத குறையோ
பகலேயிரு ளென்றகுறை யோவீண் படர்ந்தறப்
படுநீல மான குறையோ
அங்குமிங்குங்கெட் டலைந்தகுறை யோதேடி
யலையா திருந்த குறையோ
அறியாம லிடையுமடி யேனுமுமை நம்பினே
னணைவுதந் தாளுதற்கே

வங்கமா யன்பாழிவுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருகின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தி லெழுந்தருளியிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! எங்களுடைய குடிக்கு அரசரே! உம்முடைய பாதங்கள் எனக்குக் கிடைக்காதது என்ன குறையோ? என்னுடைய தெய்வம், உன்னுடைய தெய்வம் என்று சொல்லிக்கொண்டிருந்தகுறையோ? அல்லாமல் யாவருடைய சாபத்தினாலாவது உண்டான குறையோ? பங்குசெய்த குறையோ? பாவியின் வாழ்கின்ற மனமானது பக்தியில்லாத குறையோ? பகற்காலத்தை இருட்டுக்காலமென்று சொன்னகுறையோ? வீண்காரியமானது படர்ந்து முழுமையும் கெடு நீலமான குறையோ? எந்தவிடத்திலுங் கெட்டலைந்த குறையோ? தேடித்தேடி யலையாமலிருந்த குறையோ? யாதொன்றையும் உணர்ந்து கொள்ளாதபடி பின்னிடைகின்ற அடியேனாகிய நானும் என்னை யணைத்தாளுதற்பொருட்டு உம்மை நம்பினேன். ஆகையால் கப்பலாக அன்பென்னுங் கடலிலிருக்கின்ற நீர் பின்தொடர வள்ளலாகவும் இறசூலாகவும் வரவேண்டும். (எ-று)

எல்லாக் குடும்பங்களுக்குந் தலைவன் இறைவனே யென்பார், 'எங்கட் குடிக்கரசரே' எனவும்; இறைவனுடைய திருவடிகள் பாவிகளுக்கே கிட்டாதென்பார், 'உமதுபாதமெற் கெய்தாத தென்னகுறையோ' எனவும்; உலகத்தில் எவர்களும் தங்கள் தங்களுடைய மதச்சார்பை யொட்டி ஒரு தெய்வத்தை இது உங்கள்தெய்வம், இது எங்கள் தெய்வமென்று பேசிக்கொள்வது சகசமாயிருக்கிற தென்பார், 'என்றெய்வ முன்றெய்வ மென்றகுறையோ' எனவும், ஒருவர் எந்தக் காரியத்திலாவது பிரவேசித்தால் அவருக்கு அநேகர் சாபமிடும் வழக்கமுண்டென்பார், 'அல்லதிடிசாபமான குறையோ' எனவும்; பகுப்பைப் பாராட்டுவோர்க்கு இறைவன் அகப்படான் என்னும் விதியுண்டெனபார்,'பங்கு கூறிட்டகுறையோ' எனவும் மனத்தில் உண்மையன்பில்லாதவருக்கு இறைவன் அகப்படானென்பது உண்மை யென்பார், 'பாவிவாழ் மனது பக்தியில்லாதகுறையோ' எனவும்; சந்தேக ஞானமிருந்தால் ஏதும் பயனில்லை யென்பார், 'பகலை யிருளென்ற குறையோ' எனவும்; வீண்காரியங்களில் பிரவேசித்தால் பலனில்லை யென்பார், 'வீண்படர்ந்தறப்படு நீலமான குறையோ' எனவும்; ஒரு வழியாக வுறுதியுடன் நிற்கவேண்டு மென்பார், 'அங்குமிங்குங் கெட்டலைந்த குறையோ' எனவும்; இறைவன் தன்னை யாராயார்க்கு எங்ஙனம் வெளிப்படுவா னென்பார், 'தேடி யலையா திருந்த குறையோ' எனவும்; எவற்றையு மறியாமல் இறைவனையே நம்பினால் மட்டும்

பயனுண்டோவென்பார், 'அறியாமலிவையு மடியேனு முமை நம்பினே னணைவுதந் தாளுதற்கே' எனவும்; இறைவன் யாவர்க்கும் மரக்கலம் போல்வானென்பார், 'வங்கமா யன்பாழி யுள்ளநீர் பின்றொடர வள்ள லிறகூல் வருகவே' எனவும்; 'வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிரு கண்மணியே முகியித்தீனே' எனவுங் கூறினர். (2)

கல்லிலோ மண்ணிலோ விண்ணிலோ வடிமையிரு
கண்ணிலோ கண்ணீ ரிலோ
கரையிலோ கடலிலோ வுடலிமேலா வுயரிலோ
கதியான பூமி தனிலோ
அல்லிலோ பகலிலோ நல்லபத வில்லிலோ
அறிவிலோ வுருமீ திலோ
அறிவிலோ வறியொணு மறையிலோ மறைகெண்முத
லாகம புராணத் திலோ
செல்வமிகு துரைராச ரேதேவ ரீர்க்குநிலை
திவ்விய குணங்கு டியிலோ
தெரியாம லிடையுமடி யேனுமுமை நம்பினேன்
சேர்ந்தணைத் தாளு தற்கே
மல்லிகை மலர்க்கந்த முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமருணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டுகண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! கல்லினுடத்திலோ? மண்ணினிடத்திலோ? ஆகாயத்தினிடத்திலோ? அடியேனுடைய இரண்டு கண்களினிடத்திலோ? அக்கண்களிலிருந்து விளங்குகின்ற கண்ணினிடத்திலோ? கரைகளினிடத்திலோ? கடலினிடத்திலோ சரீரத்தினிடத்திலோ? உயிரினிடத்திலோ? மோட்சபூமியினிடத்திலோ? இராத்திரியிலோ? பகலிலோ? நல்ல பதவியைக் கொடுக்கின்ற வீட்டிலோ? அறிவினிடத்திலோ? யாவராலு முணரப்படாத வேதத்திலோ? அந்தவேதமுதல் ஆகமம், புராணம் என்னும் இவைகளிலோ? செல்வத்தில் மிகுந்த துரைராஜரே! தேவரீர்க்கும்நிலைக்களமாயுள்ளது! அன்றி மிகவுந்திவ்வியமான குணங்குடி என்னும் க்ஷேத்திரத்திலோ? யாதுந் தெரியாமல் வருந்துகின்ற அடியேனாகிய நானும் சேர்ந்து அணைத்தாளுதற்பொருட்டு உம்மை நம்பினேன் ஆகையால் மல்லிகைப் புஷ்பத்தின் மணமுள்ள நீர் பின்றொடர வள்ளலாகவும் இறகூலாகவும் எழுந்தருளிவர வேண்டும்.(எ-று)

இறைவனுடைய உண்மை நிலையானது இதுவென்றுணராமல் வருந்துகின்றேன் என்பது கருத்து. (3)

ஓயாதோ வென்கவலை யுள்ளுருகி யானந்த
முள்ளூறே பாய்ந்திடாதோ
ஒழியாதோ விழிமாயை யழியாதோ பாழாசை
யூழ்வினைக ளோய்ந்தி டாதோ
தீயாதோ வன்கருவி காயாதோ காணங்க
டீவினைக டீர்ந்தி டாதோ
தேறாதோ பாழ்மனது சாராதோ பேரறிவு
திவ்யகுணம் வாய்ந்தி டாதோ
பெயாதோ வருண்மாரி வாயாதோ வான்கருணை
பேரின்ப னேர்ந்தி டாதோ
பெருகநின் றிடையுமடி யேனுமை நம்பினேன்
பிரியமுட னாளு தற்கே
வாயிற் சிறந்தமொழி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற லாகவருக வே
வளருமருணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகிபித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப் போன்றவனே! முகியித் தீனே! என்னுடைய கவலையானது ஒழியாதோ? மனத்தின்கண் ஆநந்த வெள்ளமானது உருவிப்பா யாதோ? கண்களால் பார்க்கக்கூடிய பொருள்களெல்லாம் என்னை மயக்குகின்ற மாயையானது ஒழியாதோ? பாழாகிய ஆசையானது அழியமாட்டாதோ? பழைய நல்வினை தீவினைகளெல்லாம் ஒழியமாட்டாவோ? வலிமைபொருந்திய கருவிகளெல்லாம் தீய்ந்து விடாவோ? காணங்கள் எவையும்காய்ந்து விடாவோ? தீவினைகளெல்லாம் தீர்ந்துவிடாவோ? பாழ்பட்ட என்னுடைய மனமானது தேர்ச்சியை யடையாதோ? பேரறிவானது எனக்கு வந்தணுகாதோ? நல்ல குணமானது கிட்டாதோ? திருவருள் மழையானது பெய்யாதோ? பெரிய கிருபையானது வாய்க்கமாட்டாதோ ? பேரின்பமானது உண்டாகமாட்டாதோ? இவைகளெல்லாம் மென்மேலும் உண்டாகும்படி நின்று வருந்துகின்ற அடியேனும் என்னைப் பிரியமுடன் ஆளுதற் பொருட்டு உம்மை நம்பினேன், ஆகையால் சிறப்பினையுடைய சொற்களைப் பெற்று விளங்குகின்ற நீர் பின்தொடர வள்ளலாகவும் இறலாகவும் எழுந்தருளி வரவேண்டும்.

ஈஸ்வரனே! எனக்குச் சர்வவிஷயங்களும் கைகூடாததற்குக் காரணம் என்னவோ தெரியவில்லை என்பது கருத்து. (4)

நாடுமோ முத்திவழி கூடுமோ்நெற்றிவிழி
நல்லறிவு பந்தா டுமோ
நற்குணங் குடிமீது வீடுதா வென்றனையு
நாதனரு ளுந்தே டுமோ
ஆடுமோ வட்டமா சித்தியும் புத்தியு
மந்தவழியைச்சா டுமோ
ஆரபா ரத்தையும் போடுமோ சித்தமா
நந்தநட னம்மா டுமோ
மாடகூடங்களொனு மனையாட்டி தருமாசை
மாட்டனென விட்டோ டுமோ
மனமறிந் திடையுமவி யேனுமுமை நம்பினேன்
வந்தணைந் தாளு தற்கே
வாடா மலர்க்குநிக ருள்ளநீர் பின்றொடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித்தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்வியக்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! முத்திவழியானது நாடக்கூடியதோ? முதற்கண் பார்வையானது கூடுமோ? உயர்ந்த ஞானவழியானதுபந்தாடுமோ? உயர்ந்தகுணங்குடி என்னும் க்ஷேத்திரத்தின் மேல்வீடுகொடுஎன்று என்னை நாதனுடைய திருவருளுந்தேடுமோ? அட்டமாசித்திகள் ஆடுமோ! புத்தியானது மந்தவழியைக்கொல்லுமோ? சூரமாகியபாரத்தைப்போடுமோ? சித்தமானது ஆநந்தத் திருநடனத்தைச் செய்யுமோ? மாடகூடங்கள் என்னும் மனைவியால் கொடுக்கப்படுகின்ற ஆசையானது நான்மாட்டேன், நான் மாட்டேன் என்று என்னைவிட்டு ஓடுமோ? மனமானதுமுறிந்து வருந்துகின்ற அடியேனாகிய நானும் உம்மை நம்பினேன் நீர் என்னைவந்து அணைத்து ஆளுவீரென்று, ஆகையால் வாடாத புஷ்பத்திற்குச் சமானமாயுள்ள நீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

சர்வ காரியங்களிலும் என்னுடைய மனமானது செல்லாமல் என்னைக் காத்தருளவேண்டும் என்பதுகருத்து. (5)

ஆசாப சாசவலை யுள்ளகப் படுவேனோ
வல்லது வெளிப்ப டுவேனோ
அகிலவாழ் வென்றிடு மாற்றில்வீழ்ந் திடுவேனோ
வப்புற நடந்தி டுவேனோ

காசாசை கொண்டுகதி கெட்டுநின் றிடுவேனோ
  கதியாசை கொண்டிடுவேனோ
கரையற்ற கப்பலென் னக்கலங் கிடுவேனோ ௯
  கரையேறி நின்றிடுவேனோ
ஈசனடி செல்லா திருந்துசென் றிடுவேனோ
  வீசனடி சென்றிடுவேனோ
வங்கிமிக விடையுமடி யேனுமுமை நம்பினே
  னேக்கமற வாழு தற்கே
மாசிலா மணிமாலை யுள்ளநீர் பின்றொடர
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவா ழ மென்னிருகண்
  மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப் போன்றவனே! முகியித்தீனே! ஆசையென்கிற பசாசமாகிய வலைக்குள் நான் அகப்படுவேனோ? அல்லது வெளிப்படுவேனோ? உலகவாழ்க்கையென்று சொல்லுகின்ற ஆற்றினிடத்தில் விழுந்திடுவேனோ? அதைத்தாண்டியும் நடந்திடுவேனோ! பணவாசையைக் கொண்டு கதிகெட்டு நிற்பேனோ? மோட்சவாசை கொள்ளுவேனோ? கரைதப்பிய கப்பலைப்போலக் கலங்குவேனோ? கரையை யொதுங்கி நிற்பேனோ? சிவபெருமானுடைய திருவடிகளிற் செல்லாமலிருப்பேனோ? அல்லது ஈசனடியிற்செல்லுவேனோ? தள்ளாடிமிகவும் வருந்துகின்ற அடியேனும் ஏக்கமில்லாமல் வாழ்வதற்பொருட்டு உம்மை நம்பினேன். ஆகையால் குற்றமற்ற மாணிக்கமாலையைத்தரித்த நீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

ஆசைமுதலிய கெட்டசெய்கைகளால் வருந்துதற்கு அடியேன் பட்டபாடு ஒன்றல்லவா யிருக்கிறபடியால் என்னை ஆதரிக்கவேண்டும் என்பது கருத்து. (6)

புதல்வரொடு முதலைகள் பிடித்துக் கடித்துப்
  புசிக்கக் கொடுத்து ழல்வேனோ
பொல்லாத காமக் கடற்புலா லென்னுமோர்
  பூவைகைப் பட்டு ழல்வேனோ
கதகதென்றெரியும் பணத்தீ மிதித்தெனது
  கால்கொப்ப ளித்து ழல்வேனோ
கட்டுபட் டாடைக ளெனுநமன் கைவலைக்
  கட்டுண்டு நின்று ழல்வேனோ

சதசதென் றழுகுதுர்க் கந்தசாக் கடையான
சமுசார மதிலு ழல்வனோ
தத்தளித் திடையுமடி யேனுமுமை நம்பினேன்
சற்றுவந் தாளு தற்கே
மதலைபோற் கொஞ்சுகுண முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப் போன்றவனே! முகியித்தீனே! பிள்ளைகளென்று சொல்லப்படுகின்ற முதலைகளான வைகள் என்னைப் பிடித்துக் கடித்துத்தின்ன நானும் அதற்கு என்னைக் கொடுத்து வருந்து வேனோ? பொல்லாங்கே விளைவிக்கின்ற காமமாகிய கடல் நாற்றமென்று சொல்லப்படுகின்ற ஒரு பூவையாகிய பெண்ணின் கையிற் சிக்கி வருத்தப்படுவேனோ? கதகதவென்று எரிகின்ற பணமென்கிற தீயை மிதித்து என்னுடைய காலானது கொப்பளித்து வருந்துவேனோ? கட்டுகின்ற பட்டு வஸ்திரங்களென்கிற எமனுடைய கையின் வலையில் கட்டுப் பட்டிருந்து வருந்துவேனோ? சதசதவென்று அழுந்துகின்ற துர் நாற்றத்தையுடைய சாக்கடையாகிய சமுசாரத்திலிருந்து வருந்துவேனோ? தத்தளித்து வருந்துகின்ற அடியேனும் சிறிது எழுந்தருளி வந்து ஆளுவதற்கு உம்மை நம்பினேன். ஆகையால் சிறுபிள்ளையைப் போல் கொஞ்சுகின்ற குணத்தையுள்ள நீர் பின்தொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும் (எ-று)

சர்வ ஆசைகளால் நான் வருந்துகின்ற வருத்தத்தினின்றும் என்னைக் காக்கவேண்டும் என்பதுகருத்து. (7)

வண்டாய்ப் பறந்தெழுந் திடுவனோ சிற்றின்ப
வாரியில் விழுந்திடுவனோ
மண்ணுன காமக் குரோதமுண் டிடுவனோ
மாயைதனை வென்றி டுவனோ
பெண்டாசை யென்றபேய் கொண்டுசெத் திடுவனோ
பேரின்ப முற்றி டுவனோ
பிறற் றருத்தியிற் பிரியமுற் றிடுவனோ
பிரியங்க ளற்றி டுவனோ
நண்டளந் திடுநாழி யாவனோ குறைவினிறை
நாழிதா னு வனோ

நாளெலா மிடையுமடி யேனுமுமை நம்பினே
னன்மைகூர்ந் தாளு தற்கே
மண்டுபே ரின்பவொளி யுள்ளநீர் பின்ருெடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! நானோ வண்டாகப்பறந்து எழுந்திடுவேனோ? சிற்றின்ப சாகரத்தில் விழுந்திடுவேனோ? மண்ணாகிய காமம், குரோதமென்னும் உண்டிகளை உண்டிடுவேனோ? மாயைகளை ஜெயித்திடுவேனோ? பெண்ணாசையென்கிற பசாசம்பிடித்து அதனால் இறந்துப்பட்டு விடுவேனோ? அல்லாமல் பேரின்பத்தை யடைவேனோ? துவாரம் பொருந்திய துருத்தியாகிய இந்தச் சரீரத்தில்பிரியம்வைத்திடுவேனோ? அன்றி பிரியங்களை ஒழித்து விடுவேனோ? நண்டை அளக்கின்றபடி யாவேனோ! குறைவில்லாமல் நிறைந்திருக்கின்றபடி யாவேனோ? இவ்விதமாகவே ஒவ்வொரு நாளும் வருந்துகின்ற அடியேனாகிய நானும் நன்மைமிகுந்து ஆண்டருள செய்தற்பொருட்டு உம்மை நம்பினேன். ஆகையால் மிகுந்த பேரின்ப தேஜஸையுள்ள நீர் பின்ருெடா வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

இவ்விதமாக வருத்தபட்டுக்கொண்டு தவிக்கின்ற என்னை ஆண்டருள் செய்யவேண்டும் என்பது கருத்து. (8)

என்னக மிருக்கநா னென்வசப் படுவனோ
யென்னமோ சப்ப டுவனோ
இரவுபக லற்றவனு பூதிதனி லுறைவனோ
விதமகித மதிலு றைவனோ
தன்னைமதி யாதுமதி கேடுகெட்டிடுவனோ
தன்னையு மதித்திடுவனோ
தாராள மாக வரு ணையமுண் டிடுவனோ
தட்டுமருள் கொண்டி டுவனோ
என்னதான் செய்வதினி யென்றுமேங் கிடுவனோ
வேகாந்த மோங்கி டுவனோ
இப்படிக் கிடையுமடி யேனுமுமை நம்பினே
னிஷ்டம்வைத் தாளு தற்கே
மன்னுதவ முத்திகிலை யுள்ளநீர் பின்ருெடா
வள்ளலிற சூல்வ ருகவே

வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித் தீனே! என்னுடைய மனமிருக்க நான் என்னுடைய வசத்தை யடைவேனோ? அல்லாமல் என்ன மோசப்படுவேனோ? இராப்பகலற்ற சிவானுபூதியினிடத்தில் வாசஞ்செய்வேனோ? இதத்திலும் அகிதத்திலும் வாசஞ்செய்வேனோ? தன்னைத்தான் மதிக்காமல் புத்திகெட்டுப்போவேனோ? தன்னையும் மதித்திடுவேனோ? தாராளமாகத் திருவருளின் விருப்பத்தை யடைவேனோ? இடையூறு விளைவிக்கின்ற மயக்கத்தைக் கொண்டிவேனோ? இனியென்ன செய்வதென்று ஏக்கங் கொண்டிடுவேனோ? ஏகாந்தநிலையில் ஒங்கிவிடுவேனோ? இந்த விதமாக வருந்துகின்ற அடியேனும் இஷ்டம்வைத்துத் திருவருள் செய்வதற்கு உம்மை நம்பினேன். ஆகையால் நிலைபெற்ற தவத்தையுடைய மோட்ச நிலையையுள்ள நீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும்.

இறைவன் சர்வ காரியங்களிலும் நிலையில்லாமல் பரிதபிக்கின்ற அடியேனைக் காப்பாற்றி அருளவேண்டும் என்பது கருத்து. (9)

கோலுமன் னாசர்கைக்கோலாவ னோபாவி
குருடர்கைக் கோலாவனோ
கூலாபிலாகஇல் லல்லாகு வென்பனோ
குடிகெட்ட நிலையுண் பனோ
வேலையது வாய்முகம் மதுர்றசூ லென்பனோ
வேலையிது தாமென் பனோ
வேதவே தாந்தமெய்ஞ் ஞானவீ டடைவனோ
வெறுவெளியினின்றி டுவனோ
ஆலா விருக்ஷமெனமேலாவ னோவுதி
ரதன்சருகு போலா வனோ
ஆறலு மிடையுமடி யேனு முமை நம்பினேன்
னாதரித் தாளு தற்கே
மாலார்க்கு வாலாய முள்ளநீர் பின்றொடரா
வள்ளலிறசூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருகின்ற குணங் குடிஎன்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னு

டைய இரண்டு கண்களின் மணியைப் போன்றவனே! முகியித்தீனே! கோலுகின்ற நிலைபெற்ற அரசருடைய கையில் பிடித்திருக்கின்ற செங்கோலாவேனே? பாவிகளாகிய குருடர்களுடைய கைக்கோலாவேனே? கூலாயிலாத இல்லல்லாகு வென்று சொல்லுவேனே? குடிகெட்ட நிலையை உண்பேனே? அதுவே வேலையாய் முகம்ம தூர்றசூலென்று சொல்லுவேனே, இதுவே வேலையென்று சொல்லுவேனே? வேத வேதாந்தமாகிய உண்மைஞானவீட்டை யடைவேனே? வெறுவெளியில் நின்றுகொண்டிருப்பேனே? ஆலமரத்தைப்போல மேற்பட்டவனாவேனே? அன்றி அம்மரத்திலிருந்தும் உதிர்கின்ற சருகைப்போலாவேனே? ஆனாலும் வருந்துகின்ற அடியேனாகிய நானும் ஆதரித்தாளுதற்பொருட்டு உம்மை நம்பினேன். ஆகையால் உம்மை யடைய இஷ்டங்கொண்டார்க்கு வாலாயமாக வுள்ளநீர் பின்றொடரவள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

இறைவன் இவ்வண்ணம் ஒன்றின்மீதும் நிலையாயிராத என்னைக் காப்பாற்றி யருளவேண்டும் என்பது கருத்து. (10)

ஒன்றுஞ் சமாதி யோகமிம் முறையா
மென்றருள் பிரானே யிவற்றியல் பெல்லா
மெவற்றுனு மசையா திசையப் படுத்தித்
தவத்தகை யருள்கெனச் சரண்புகுந் திரத்தல்

(பொ-ரை) ஒன்றாகிய சமாதியோகமானது இந்தவகையாயுள்ளதென்று திருவருள்செய்கின்ற பெருமானே! நீ இவைகளுடைய இலட்சணங்களை யெல்லாம் எவ்வகைக் காரணங்களாலும் அசையாமல் பொருந்தப் பண்ணித் தவத்தினுடைய குணத்தை திருவருள் செய்ய வேண்டுமென்று அவனுடைய திருவடிகளில் புகுந்து கேட்டுக்கொள்ளுதல் இப்பத்து ஆசிரிய விருத்தங்களுமாம். (எ-று)

## ஆசிரிய விருத்தம்.

பாயுமீ ராறுகலை பாயாது பக்குவம்
பண்ணிவைப் பதுசமாதி
பழவினை யிறக்கவுஞ் சுழிமுனை திறக்கவும்
பழகிவரு வதுசமாதி
ஓயாத கருவிகா ணுதியோய்ந் தொழியவிழி
யொளிகொழிப் பதுசமாதி
ஒன்றிரண் டென்றுமன முற்றுமுள றுதலைவிட்
டொன்றுபடு வதுசமாதி
ஈயெறும் பாதிக டமக்குடல் குழைந்துமு
னின்புருகு வதுசமாதி

என்றருள்பிரானே யடியேனு முமைநம்பினே
னிதுவேளை யாளு தற்கே
வாயுவினு மதிவேகமுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித்தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்வியக்ஷேத்திரத்தி லெழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! மூலத்திலிருந்து பாய்கின்ற பன்னிரண்டு கலைகளும் பாயாமல் பக்குவஞ்செய்து வைப்பது சமாதியாகும்; பூர்வ வினைகள் நசித்துப் போகவும், சுழிமுனையானது திறக்கவும் பழகிக்கொண்டு வருவதே சமாதியாகும்; ஒழியாத கருவிகளும், கரணங்களும் ஓய்ந்து ஒழியவிழியிலிருந்து முண்டாகின்ற ஒளியை வியாபிக்கச் செய்வது சமாதியாகும்; ஒன்றென்றும் இரண்டென்றும் மனமுழுமையும் உளறுவதை விட்டு ஒன்றுபட்டுக் கலப்பதுவே சமாதியாகும்; ஈ, எறும்பு முதலிய ஜெந்துக்களுக்கும் சரீரமானது இளகி முன்னிட்டு இன்பத்தை யடைவது சமாதியாகும்; என்று அடியேனுக்குத் திருவருள் செய்த பெருமானே! அதையுணர்ந்த அடியேனாகிய நானும் இந்தவேளையில் நீ வந்து ஆண்டருள் செய்வாயென்று உம்மை நம்பினேன். ஆகையால் வாயுவைக்காட்டிலும் அதிகமான வேகமுள்ள நீர் பின்தொடர வள்ளலாக இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

இவ்விவைகளே சமாதியென்று திருவருள்செய்த நீர் என்னை ஆண்டருள் செய்வீரென்று உம்மை உண்மையாக நம்பினேன் என்பது கருத்து. (1)

நாவினுனி தனைமடித் தந்நாள மேோட்டிநிலை
நாட்டிவைப் பதுசமாதி
நாலிரண் டெட்டுமென் டெட்டாகி யழியுமுன்
னுலாக்கு வதுசமாதி
ஓவியம் போலிருந் துள்ளுருகு நல்லமிர்த
மொழுகவுண் பதுசமாதி
உச்சிவெளி சென்றுமொளி கண்டுமிரு விழியையு
முட்குவிப் பதுசமாதி
ஏவலொடு விலகலெனு மிருவினைப் பற்றுசை
விலாதிருப் பதுசமாதி
என்றருள் பிரானே யடியேனு முமைநம்பினே
னிதுவேளை யாளு தற்கே

மாவேக மனவேக முள்ளநீர் பின்றொடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித்தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருகின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! நாக்கினுடைய முனையை மடித்து அவ்விடத்திலுள்ள நாளத்தின்கண் அதையோட்டி நிலை நாட்டிவைப்பதே சாமதியாகும்; நாலிரண்டென்னும் எட்டும் எட்டெட்டா யழிகின்ற முன்னுலாக்குவதேசமாதியாகும்; சித்திரம்போல விருந்து உள்ளே உருகுகின்ற நல்ல அமிர்தமானது ஒழுக அதை உண்பதே சமாதியாகும்; உச்சியாகிய வெளியிற்சென்று அங்குஉண்டாகின்ற ஒளியைக்கண்டும் இரண்டு கண்களையும் உள்ளே குவிப்பதே சமாதியாகும்; எவனுடனே விலகவென்று சொல்லுகின்ற நல்வினை தீவினைகளாகிய இருவினைகளும் அசைவில்லாதிருப்பதே சமாதியாகும் என்று திருவருள்செய்கின்ற பெருமானே! அடியேனாகிய நானும் இந்த வேளை யானுவீரென்று உம்மை நம்பினேன். ஆகையால் மாவேகத்தையும் மனவேகத்தையும் பெற்றிருக்கின்ற நீர் பின்றொடா வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும்(எ-று)

இவ்வண்ணம் செய்துவருங் கிரியைகளெல்லாம் சமாதியை யடையச் செய்யவேண்டுமென்பார் இவ்வண்ணங் கூறினார். (2)

இதயங் களித்து வருவதையுங் கொளுந்திவெளி
யேறிவிடு வதுசமாதி
எட்டியெட் டாப்பொருளை யெட்டிப் பிடிக்கவடி
யெட்டிவைப் பதுச மாதி
பதியுனதி பதியைவைத் ததிகதுதி யோதிப்
பதம்பணிகு வதுசமாதி
பரிபூர ணந்தனில் வருகார ணந்தனைப்
பார்த்துமகிழ் வதுசமாதி
எதுவந்து நேரினும் மாறினு மிரண்டு மொன்
றென்றிருப் பதுச மாதி
என்றருள் பிரானே யடியேனு முமைநம்பினே
னிதுவேளை யானு தற்கே
மதயானை போற்றீர முள்ளநீர் பின்றொடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித்தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! மனமானது சந்தோஷித்து வருவதையுங் கொளுத்தி வெளியிடத்தில் எறிவிடுவது சமாதியாகும்; அவ்விடத்தில் எட்டியும் எட்டாமலுமிருக்கின்ற பொருளை எட்டிப்பிடிப்பதற்கு அடியை யெட்டிவைப்பதே சமாதியாகும்; ஒரு இடத்தில் நமக்குத் தலைவனை நிறுத்தி அதிகமான ஸ்துதிகளைச் செய்து திருவடிகளை வணங்குவதே சமாதியாகும்; சர்வ பரிபூரணம் என்னுமிடத்தில் வருகின்ற பரிபூரணவஸ்துவை பார்த்துப்பார்த்து மகிழ்ச்சியடைவதே சமாதியாகும்; எதுவந்து சேர்ந்தாலும் கெட்டுப்போனாலும் இரண்டும் ஒன்றென்றிருப்பது சமாதியாகும்; என்று திருவருள்செய்த பெருமானே! அடியேனாகிய நானும் இந்த வேளையில் ஆண்டருள்செய்வீரென்று உம்மை நம்பினேன் ஆகையால் மதம் பிடித்த யானையைப்போல் தைரியமுள்ள நீர் பின்றொடரவள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும்(எ-று)

சமாதிகளின் விகற்பங்களையெல்லாம் அருளிச்செய்த வண்ணமே அடியேனையும் ஆண்டருள்செய்யவேண்டும் என்பது கருத்து (3)

வேரற்ற சுத்தபரி பூரணப் பேரின்ப
வீடுபுகு வதுசமாதி
விரிகருணை தந்தகுரு நாதனடி யார்களென
வேடமணி வதுசமாதி
போராடு மையற் குதக்கைக் கடந்தப்
புறத்தினிற் பதுசமாதி
புகன் மறைப் பொருளைமற வாக்கடனமக் கென்று
புந்திமகிழ் வதுசமாதி
ஈராறு கால்களையுமெட்டுக் கயிற்று
லிறுக்கியறி வதுசமாதி
என்றருள்பிரானே யடியேனு முமைநம்பினே
னிதுவேளை யாளுதற்கே
மார்பணியு முத்தார முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித்தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! வேரற்ற சுத்தமாகிய நிறைந்த பரிபூரணமான பேரின்பமாகிய வீட்டைச்சேர்வதே சமாதியாகும்; விரிந்த கிருபையைக்கொடுத்த

குருநாதனுடைய அடியார்களென்று வேஷந் தரித்திருப்பதுவே சமாதியாகும்; போராடுகின்ற இறைவனுக்கு சுழிமுனையின் அந்தப் புறத்தினில் நிற்பதுவே சமாதியாகும்; சொல்லுகின்ற வேதங்களின் பொருளை மறவாதிருக்கும் கடமை நமக்குரியதென்று மனஞ்சந்தோஷித்திருப்பதே சமாதியாகும்; பன்னிரண்டு சரங்களையும் எட்டுக் கயிற்றினால் இறுக்கி உணர்வதே சமாதியாகும்; என்று திருவருள்செய்த பெருமானே அடியேனாகிய நானும் இந்தச்சமயத்தில் ஆண்டருள் செய்வீரென்று உம்மை நம்பினேன். ஆகையால் மார்பின்கண் தரிக்கின்ற முத்துமாலையையுள்ள நீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் வரவேண்டும்.

சமாதி வகைகள் இவைகளென்று உணர்வித்த இறைவனே! நீயே முன்னின்று அவைகளை அநுபவிக்கச் செய்யவேண்டும் என்பது கருத்து. (4)

சாதிபே தத்தையும் மாதர்போ கத்தையுந்
  தள்ளிநிற் பதுசமாதி
சந்ததமு மொளிருமருண் ஞானவரு டேசிகன்
  றன்னையறி வதுசமாதி
நீதிலருள் கொண்டதே சோமயத் துண்மனஞ்
  சேர்ந்திருப்பதுசமாதி
செத்தசவ மதுபோ லிருந்துசெப தபமுஞ்
  செயத்தனிப் பதுசமாதி
ஏதுமது வானகுரு நாதனிரு பாதமதி
  லிச்சைவைப் பதுசமாதி
என்றருள் பிரானே யடியேனு முமை நம்பினே
  னிதுவேளை யாளு தற்கே
மாதவர் களுக்குதவி யுள்ளநீர் பின்றொடர
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்வியக்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! சாதிவித்தியாசத்தையும்; பெண்களுடைய போகத்தையும், நீங்கியிருப்பதே சமாதியாகும்;எக்காலத்திலும் விளங்குகின்ற திருவருளையுடைய ஆசாரிய மூர்த்தியையறிவதே சமாதியாகும்; குற்றமற்ற திருவருளைக் கொண்ட தேஜோமயத்திற் குள்மனஞ் சேர்ந்திருப்பதே சமாதியாகும்; செத்தபிணம் போலிருந்து செபத்தையும் தவத்தையும் செய்து தனி

யாயிருப்பதே சமாதியாகும்; எந்தப்பொருளும் அதுவேயாயிருக்கின்ற ஆசாரிய நாதனுடைய இரண்டு திருவடிகளிலும் இஷ்டம்வைப்பதுவே சமாதியாகும்; என்று திருவருள் செய்கின்ற பெருமானே! அடியேனாகிய நானும் இந்தவேளை என்னை ஆண்டருளுதற்பொருட்டு உம்மை நம்பினேன். ஆகையால் மகத்தான தவசிரேஷ்டர்களுக்கு உதவிசெய்கின்ற நீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும்.(எ-று)

சமாதியை விரும்புகின்ற ஒவ்வொருவரும் சாதிபேத முதலியவை கொள்ளக்கூடாவென்பார், 'சாதிபேதத்தையும்' எனவும்; ஸ்ரீபோகம் அதினுக்கு நேர்விரோதமென்பார், 'மாதர்போகத்தையும்' எனவும்; இறைவனுடைய சர்வவியாபக வொளியில் மனமானது கலந்திருக்கவேண்டுமென்பார், 'சந்ததமு மொளிருமருணு ஞானவருடேசிகன் தன்னையறிவது சமாதி' எனவும்; மௌனமா யிருக்கவேண்டு மென்பார், 'செத்தசவமதுபோலிருந்து செபதப முஞ்செயத்தனிப்பது சமாதி' எனவும்,இறைவன் சர்வபொருள்களுமானவ னென்பார்,'ஏதுமதுவான குருநாதனிருபாதம திலிச்சைவைப்பது சமாதி' எனவும்; இவ்வண்ணம் ஆன்மாக்கள் மாயையில் கட்டுப்பட்டிருப்பதால் அவைகளையறியாமல் இறைவனுல் தெரிந்றுகொள்ள வேண்டியதென்பார், 'என்றருள்பிரானே யடியேனுமுமைநம்பினே னிதுவேளையாளுதற்கே' எனவும்; 'மாதவர்களுக்கு தயையுள்ள நீர் பின்றொடர வள்ள லிறசூல் வருகவே' எனவும்; 'வளருமருணிறை குணங்குடிவாழு மென்னிரு கண்மணியே முகியித்தீனே' எனவுங்கூறினுர். (5)

நிதியாசை யற்றுதுற வதிமாசை யுற்றுநன்
  னிட்டைபுரி வதுச மாதி
நிலையாது காயமென் றெண்ணமொன் றென்றென்று
  நிச்சயிப் பதுச மாதி
வதியுஞ்சவ் வாதுசந் தனமுமொன் றென்றுமனம்
  வைத்துநிகழ் வதுச மாதி
வாராது வாராது வருவனவும் வருமென்று
  வாட்டமொழி வதுச மாதி
இதமகித மற்றமதிபெற்றிதய முத்திநிலை
  யேற்றுநிற் பதுச மாதி
என்றருள் பிரானே யடியேனு முமைநம்பினே
  னிதுவேளை யாளு தற்கே
மதுரவின் பப்பெருக் குள்ளநீர் பின்றொடர
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்வியக்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! செல்வத்தினுடைய ஆசையையற்று, துறவினிடத்து ஆசையைவைத்து நல்ல நிஷ்டை செய்வது சமாதியாகும்; பொருந்துகின்ற சவ்வாதும், சந்தனமும், ஒன்றேயாமென்று மனத்தின்கண் வைத்து வசிப்பதுவே சமாதியாகும்: வாராதபொருள்கள் என்னகஷ்டப்பட்டாலும் வாராது, வருகின்ற பொருள்கள் தாமே வரும்என்று நினைந்து மனோவாட்டத்தினின்றும் நீங்குவதே சமாதியாகும்; நன்மை தீமைகள் ஒழிந்த புத்தியைப்பெற்று இருதயமானது மோட்சநிலையையடைந்து நிற்பதுவே சமாதியாகும்; என்று அருளிச்செய்த பெருமானே! அடியேனாகிய நானும் இந்தவேளை யாளுதற் பொருட்டு உம்மைநம்பினேன். ஆகையால் மதுரமாகிய சுகவெள்ளமுள்ளநீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும்.(எ-று)

சமாதிநிலை இப்படிப்பட்டதென்று திருவருள்செய்த தேவரீரே அடியேனைத் திருவருள்செய்து ரட்சிக்கவேண்டும் என்பது கருத்து. (6)

எல்லையு மறந்துபல தொல்லையு மிறந்ததோ
ரிடத்திருப் பதுசமாதி
எனதியானென்பதை யுடம்பொருளோ டேவன்முத
லீடழிப் பதுசமாதி
அல்லுபக லாகவெல் லும்மளவு நல்லறிஞ
ரடிபணிகு வதுசமாதி
ஆகமத் தின்படிச் சாதிக்க முதலெவையு
மற்றிருப் பதுசமாதி
இல்லாளு மைந்தருஞ் சுற்றமுஞ் சுற்றமா
யில்லையென் பதுசமாதி
என்றருள் பிரானே யடியேனு முமைநம்பினே
னிதுவேளை யாளுதற்கே
மல்லாடி னும்பொறுமை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வருகவே
வளருமரு ணிறைதுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! ஒரு அளவையும் மறந்து பல தொல்லைகளும் இறந்ததாகிய ஒரு இடத்திலிருப்பதே சமாதியாகும்; எனது என்பதையும் யான் என்

பதையும் யான் என்பதையும் இடம், பொருள், ஏவல் முதலியவை களையும் ஈடழிப்பதுவே சமாதி யாகும்; இரவும் பகலுமாக வெல்லு கின்ற அளவும் நல்ல அறிவுடையோ ராகியவர்களுடைய திருவடிகளைப் பணிவதே சமாதியாகும்; இருபத்தெட்டாகமங்களிற் சொல்லுவதுபோல சாதிக்க முதலெலவையுமற்றிருப்பதுவே சமாதியாகும்; மனைவியும், மைந்தரும், சுற்றத்தார்களும், சுற்றமா யில்லையென்பதே சமாதியாகும்; என்று திருவருள் செய்கின்ற பெருமானே! அடியேனுகிய நானும் இந்தவேளை யாண்டருள் செய்வதற்கு உம்மை நம்பினேன். ஆகையால் யாவர் மல்லாடினுலும் பொறுமையினின்றுந் தவருத பொறுமையுள்ள நீர் பின்ருெடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வர வேண்டும். (எ-று)

சகல வழிகளாயுள்ள சமாதிமார்க்கங்களை யறிவித்த இறைவனே மற்று முள்ளவற்றையு முணர்த்தி இரட்சிக்கவேண்டும் என்பது கருத்து. (7)

சலனசஞ் சலமது தொலைத்தருண் மலைப்புடையில்
சார்ந்திருப் பதுசமாதி
சர்வபரி பூரண வகண்டிதாகாரமே
சாட்சிவென் பதுசமாதி
நிலையம்விட் டலையாது நீவாத தீபமென
நிலையினிற் பதுசமாதி
நெற்றிவிழி ரண்டையு மொத்துநடு கொண்டொளியி
னேரில்வைப் பதுசமாதி
இலகுஞ் சதாகால நிட்டைபல் குந்துறவி
லெய்திநிற் பதுசமாதி
என்றருள் பிரானே யடியேனுமுமை நம்பினே
னிதுவேளை யாளு தற்கே
மலைபோற் பெரும்பெருமை யுள்ளநீர் பின்ருெடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டுகண்களின் மணியைப்போன்றவனே! முகியித் தீனே! இறக்கின்ற துக்கமானது தொலைத்து திருவருள்செய்கின்ற மலைப்புடையில் சேர்ந்திருப்பதே சமாதியாகும்; சகல இடத்திலும் நிறைந்திருக்கின்ற அகண்டிதாகாரமே சாட்சிபூதமா யுள்ளதென்பதுவே சமாதியாகும்; இடம்விட்டிடம் அலையாமல் தூண்டாத தீபத்தைப்

போல் நிலைத்திருப்பதுவே சமாதியாகும்; நெற்றியிலுள்ள இரண்டு கண்களையும் ஒத்து நடுவேகொண்டு ஒளியினுடைய நேரில்வைப்பதே சமாதியாகும்; விளங்குகின்ற எக்காலத்திலும் நிட்டையில் பழகுகின்ற துறவாச்சிரமத்தில் பொருந்தியிருப்பதே சமாதியாகும்; என்று திருவருள்செய்த பெருமானே! அடியேனாகிய நானும் இந்தவேளையில் ஆண்டருள்வதற்பொருட்டு உம்மை நம்பினேன். ஆகையால் மலையைப் போல் பெரிய பெருமையையுள்ள நீர் பின்றொடர வள்ளலாகவும் இற சூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

இவற்றை யருளிச்செய்த இறைவன் இன்னும் உள்ள மர்மங்களை யும் அருளிச்செய்வான் என்பதுகருத்து. (8)

ஆருநின் றென்னவார் போயென்ன வென்று மன
மற்றிருப் பதுச மாதி
ஆராலு மறியாத சூதான வெளிசென்
றடைந்துபோ வதுச மாதி
வீரசூ ரங்கள்முத லதிகப்பிர சங்கமு
மெலியமெலி வதுச மாதி
வேதவே தாந்தமும் விட்டுநா தாந்தநடு
வீடுசெல் வதுச மாதி
ஏருறு மயிர்ப்பால மேறுமன மேயேறு
மேறுமென் பதுச மாதி
என்றருள் பிரானே யடியேனுமு மைநம்பினே
னிதுவேளை யாளு தற்கே
வாரிபோல் வான்கருணை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித் தீனே! எனக்கு யார் இருந்தாலென்ன? யார் போனாலென்ன என்று மனத்தில் யாதொரு களங்கமுமில்லாம லிருப்பதே சமாதியாகும்; யாவராலும் அறியப்படாத சூதாகிய வெளியிலேபோய் மௌனமா யடைந்து போவதே சமாதியாகும்; வீரத்தன்மையும், சூரத்தனமும் முதலான அதிகப்பிரசங்கமும் மெலிய மெலிய மனமும் மெலிந்துவரு வதே சமாதியாகும்; வேதங்களையும் வேதாந்தங்களையும் விட்டு நாத தத்துவத்தின் அந்தத்தின் நடுவீடுசெல்வதே சமாதியாகும்; அழகு பொருந்திய மயிர்ப்பாலத்தைத்தாண்டி யேறுகின்ற மனமே யேறு

கின்ற நிலைமையே சமாதியாகும்; என்று திருவருள்செய்த பெருமா
னே! அடியேனுகிய நானும் இந்தச் சமயத்தில் ஆண்டருள் செய்வதற்கு
உம்மை நம்பினேன், ஆகையால் சூத்திரத்தைப்போல் மிக்க கிருபை
யுள்ள நீர் பின்ருெடா வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வர
வேண்டும். (எ-று)

இவ்வண்ணந் திருவாய்மலர்ந்த இறைவன் எமனுக்கு இன்னும்
வேண்டு வனவற்றையுந் திருவருள் செய்வான் என்பது கருத்து. (9)

ஆழியென வருள்பொங்கு மாசையுற் றழுதழு
தகங்களிப் பதுச மாதி
அதிசுகம் பெருவரி யமிர்தமுண் டுண்டுதகை
யாறிநிற் பதுச மாதி
பாழினிலை யற்றமுப் பாழினிலை பெற்றுப்
பதைப்பொழிப் பதுச மாதி
பல்கோடி யண்டபகி ரண்டந் தன்னுளே
பார்த்திருப் பதுச மாதி
ஏழுபுவ னத்தையுஞ் சுற்றியுஞ் சுற்று
திருப்பிருப் பதுச மாதி
என்றருள் பிரானே யடியேனு முமைநம்பினே
னிதுவேளை யாளு தற்கே
வாழுமகு மூதினருளுள்ள நீர்பின்ருெடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற
குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்திலெழுந்தருளி யிருக்கின்ற
என்னுடைய இரண்டு கண்களின் மணியைப் போன்றவனே! முகியித்
தீனே! சமுத்திரத்தைப்போலத் திருவருளானது பொங்குகின்ற
ஆசையைப்பொருந்தி அழுது அழுது மனங்களிப்பதே சமாதியாகும்;
மிகுந்த இன்பத்தையுடைய பெரியசமுத்திரத்திலுண்டாகின்ற அமிர்
தத்தை யுண்டுண்டு தன்மையாறி யிருப்பதே சமாதியாகும்; முப்பாழி
னுடைய உண்மைநிலையானது ஒழிந்து அதின் உண்மை நிலையை
யடைந்து பதைப்பொழிவதே சமாதியாகும்; வெளியிலுள்ள சர்வ
அண்டங்களையும் தனக்குள்ளாகப் பார்த்திருப்பதே சமாதியாகும்;
என்று திருவருள்செய்த பெருமானே! இந்தவேளையில் ஆளுதற்பொரு
ட்டு உம்மை நம்பினேன். ஆகையால் வாழ்த்துதல்செய்கின்ற மகுமூதி
னுடைய திருவருளைப் பெற்றிருக்கின்ற நீர் வள்ளலாகவும் இறசூலாக
வும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

சமாதியின் நிலையைப் பலவகையாக உபதேசஞ்செய்த இறைவனே என்னை ஆண்டருள் செய்யவேண்டும் என்பதுகருத்து. (10)

காந்தமு மயமுங் கலந்தெனக் கலந்து
மாய்ந்த வுளத்தை மாயா தாகப்
போந்திடை முளைக்கும் புதுமைக ளெல்லாந்
தேய்ந்தற வருள்கெனச் சிந்தித் திரத்தல்.

(பொ-ரை) காந்தமும் இரும்புங் கலந்ததைப்போல்கலந்து மாய்ந்திருக்கின்ற மனத்தை மாயாக்குணமுடையதாகவும் வந்து மத்தியில் முளைக்கின்ற புதுமைகளெல்லாம் குறைந்து ஒழியத் திருவருள் செய்ய வேண்டுமென்று எண்ணி வணங்கிக் கேட்டுக்கொள்ளுதலாம். (எ-று)

## ஆசிரிய விருத்தம்

குவலயக் கவலைதரு மிடுமடையர் கைகளைக்
கோத்துத் திரிந்த வம்பன்
கோட்டியுங் கேட்டையுஞ் சேட்டையுங் கூட்டியொரு
கோட்டையாய்க் கட்டு வம்பன்
தவிராத காயகற் பங்கொள்கி றேனினிச்
சாவனோ வென்ற வம்பன்
சந்யாசமென்ற பொய்வேடந் தரித்தவர்க
டம்மைநிகர் சொன்ன வம்பன்
செபமாலை கைகொண்டு வாய்முணு முணுத்தவுப
தேசிநா னென்ற வம்பன்
தீதெலாந் தீரவடி யேனுமுமை நம்பினேன்
றீரவந் தாளு தற்கே
மௌனமெனு மோனவடி வுள்ளநீர் பின்றொடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகிழித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருகின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே உலகத்தில் துன்பத்தைக் கொடுக்கின்ற மடையர்களுடைய கைகளைக் கோத்துத் திரிந்து கொண்டிருந்த வம்பன்; கோஷ்டியையும், கேட்டையும், சேட்டையும், சேர்த்து ஒரு கோட்டையாய்க் கட்டிவைத்த வம்பன்; நீங்காத சரீரத்தை நிறுத்தகற்பம்கொண்டு வருகின்றேன் ஆகையால் நான் இனிமேல் சாகமாட்டேன் என்று சொன்ன வம்பன்; சந்நியாசமென்கிற பொய்வேஷந்தாங்கி வந்தவர்களை ஒப்

பானவனென்று சொன்ன வம்பன்; செபமாலையைக்கையிற் கொண்( வாயானது முணுமுணு வென்று சொன்ன உபதேசிநானே யாவேல என்றுசொன்னவம்பன்; கொடுமைகளெல்லாம்தீர அடியேனுகிய நானு ம் தீரத்துடன் வந்தானுவீரென்று உம்மை நம்பினேன் ஆகையால் மௌன மென்கிற மோனவடிவுள்ளநீர் பின்ருேடா வள்ளலாகவு இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும்(எ-று)

சர்வ உண்மைச் செய்கைகளுக்கு நிகரானவை என்னுடைய செய் கை களென்றும் பெரியவர்களுக்கு இணையானவன் நானென்று சொல்லிக்கொண்டு வருகின்றமையால் இறைவனே அடியேனை அங்ந னம் சொல்லவொட்டாமல் அடக்கியாண்டு ரட்சிக்கவேண்டியவன் நீயேயாவாய் என்பது கருத்து. (1)

நெறியற்ற வம்பனல் லறிவற்ற வம்பனெதிர்
நிகரற்ற கொடிய வம்பன்
நிரையற்ற வம்பன்வரன் முறையற்ற வம்பனவ
னெஞ்சனஞ் சாதவம்பன்
குறியற்ற வம்பனொரு சரியற்ற வம்பன்
குணக்கேட னை வம்பன்
கொடியரிற் சகசண்டி யானவம்பன்கெட்ட
கொலைபாவி யான வம்பன்
உறவற்ற வம்வன்மிகு வெறிபெற்ற வம்பனே
ருர்க்குமாகாத வம்பன்
உமதுபத மறியவடி யேனுமுமை நம்பினே
னுளமகிழ்ந் தாரு தற்கே
மறுகவலை யுறினுமுற வுள்ளநீர் பின்ருேடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித் தீனே! நன்மார்க்கங்களை விட்டு நீங்கின வம்பன்; உயர்ந்த அறிவில்லாத வம்பன்; எதிர்பொரவில்லாத ஒப்பற்ற வம்பன்; வரிசையில்லாத வம்பன்; வரன்முறையில்லாத வம்பன்; கொடிய வஞ்சகத்தையுடைய எவற்றிற்கும் பயப்படாத வம்பன்; யாதொரு பொருளிலும் குறியில் லாத வம்பன்; எந்தவழியிலும் சரிப்பட்டு வாராத வம்பன்; குணங்கெ ட்ட வம்பன்; கொடியோர்களில் மகா சண்டியான வன்பன்; கொலையை அதிகமாகச் செய்கின்ற பாவியான வம்பன்; சாதியாரில்லாத வம்பன்;

மிருந்த வெறியைக் கொண்டிருக்கின்ற வம்பன்; ஒருவருக்கும் ஆகாத வம்பன்; உம்முடைய திருவடிகளை உணரும்படியும் நீ என்னை மகிழ்ச்சியினால் ஆண்டருள் செய்வதற்கும் உம்மை நம்பினேன் ஆகையால் வேறு துக்கங்கள் வந்தாலும் உறவாக வுள்ள நீர் பின்றொடர வள்ளலாகவும் இறகுலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

இப்படிப்பட்ட வம்பனை தேவரீரே இரட்சிக்கவேண்டு மென்பது கருத்து. (2)

கல்லாத வம்பனறி வில்லாத வம்பனொரு
காசும் பெறாத வம்பன்
கடுவாயி னுங்கொடிய வம்பன் வெருட்டிக்
கடிக்குநா யான வம்பன்
பொல்லாத வம்பனுற வில்லாத வம்பன்
பொறுமையே கொண்ட வம்பன்
புன்மைகுடி கொண்டகெச போக்கிலிகள் சறுதாறு
போலுமுன் னேறு வம்பன்
மல்லாடு வம்பனதை பல்லாடு வம்பனிடு
மடையர்நடை யுடைய வம்பன்
வம்பெலா மகலவடி யேனுமுமை நம்பினேன்
மாபுதந் தாளு தற்கே
வல்லாண்மை யில்லாமை யுள்ள நீர் பின்றொடர
வள்ளலிற குல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித் தீனே! கற்காத வம்பன்; யாதொரு அறிவுமில்லாத வம்பன்; ஒருகாசாயினும் பெறாத வம்பன்; விஷவாயைப்பார்க்கிலுங் கொடிய வம்பன்; பயப்படுத்திக் கடிக்கின்ற நாயாகிய வம்பன்; கொடுமையான வம்பன்; சுற்றத்தாரில்லாத வம்பன்; எப்பொழுதும் பொறுமையே குடிகொண்ட வம்பன்; அறிவீனமானது குடிகொண்டகெசபோக்கிரிகள் சறுதாறு போல முன்னே செல்லுகின்ற வம்பன்; மல்ல யுத்தஞ்செய்கின்ற வம்பன்; அவ்யுத்தத்தை பலகாலும் ஆடுகின்ற வம்பன்; பொருந்திய மடையருடைய நடையுடைகளையுடைய வம்பன்; ஆகையால் இங்ஙனஞ் சொல்லிக்கொண்டு வந்த வம்புகளெல்லா மொழியவும் உயர்ந்த மரபைக் கொடுத்தாளுதற் பொருட்டும் அடியேனாகிய நானும் உம்மை நம்பினேன்; ஆகையால் வலிமை பொருந்திய ஆண்தன்மையை யில்லாமையாக வுள்ள நீர்பின்றொடர வள்ளலாகவும் இறகுலாகவும் எழுந்தருளிவரவேண்டும்.

இப்படிப்பட்ட அற்பகுண முள்ளவனாகிய என்னை தேவரீரே இரட்சித்தாண்டருள் செய்யவேண்டும் என்பது கருத்து. (3)

அதிகப்பிர சங்கமே குடிகொண்ட வம்பனன்
பணுவுமில் லாத வம்பன்
அச்சமில் லாதவம் பன்றிட்டு நிட்டூர
வநியாயக் கார வம்பன்
கெதிகெட் டுருட்டுவம் பன்றிருட் டெருமைக்
கிடாவினு முரட்டு வம்பன்
கெண்டர்க்கு வண்டர்க்குமிண்டவம்பன்சண்டைக்
கெக்கரிக் கொட்டு வம்பன்
விதிகெட்ட வம்பனிலை பகிவிட் டலைந்ததலை
விரிகோல மான வம்பன்
விடமெலா மொழியவடி யேனுமுமை நம்பினேன்
விரைவில் வந் தாளு தற்கே
வதலாள் விடாமலென்னை யுள்ளநீர் பின்ரெடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித்தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! நானோ அதிகப்பிரசங்கஞ்செய்கின்ற வம்பன்; அன்பானது அணுவளவுமில்லாத வம்பன்; யாதொருவிஷயத்திலும் அச்சமில்லாத வம்பன்; திட்டுகின்ற நிஷ்டூரத்தையுடைய அநியாயக்காரனனவம்பன்; நடைகெட்டுருட்டுகின்றவம்பன்; திருட்டுத்தனத்தையுடைய எருமைக்கடாவைப்பார்க்கிலும் முரட்டுத் தனமுடைய வம்பன்; முரடர்களுக்கும், வண்டர்களுக்கும் மிக்க வலிமையையுடைய வம்பன்; சண்டைக்கு வேண்டியகெக்கரிகொட்டு கின்ற வம்பன்: விதிக்கேட்டையடைந்த வம்பன்; நிலைத்திருக்கின்ற இடத்தைவிட்டு அலைந்த தலைவிரி கோலமானவம்பன்; இப்படிப்பட்ட விஷயங்களெல்லாம் ஒழியவும், சீக்கிரத்தில்வந்து ஆண்டருள்செய் வதற்கும் அடியேனாகிய நானும் உம்மை நம்பினேன். ஆகையால் என்னைக் கைவிடாமல் இதுவரைக்குங் காப்பாற்றி யுள்ள நீர் பின்ரெடா வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

இப்படிப்பட்ட கொடிய வம்புக்காரனை இறைவனே! நீ ஆண்டருள் செய்யவேண்டும் என்பது கருத்து. (4)

சதியா யிரஞ்செய்த வம்பனல் லிதமகித
சகசமறியாத வம்பன்
றந்தைதாய் தன்மனதை நோவித்த வம்பன்
றராதரங் கெட்ட வம்பன்
பதிஞாயி ரந்தாஞ் சொல்லினுஞ் செவியுட்
படாதபிடி வாத வம்பன்

பார்வான் முதலான பேருமென்
 பகரப் பயந்த வம்பன்
நிதிதேடு சீவச் சவங்கள்பட் சங்களே
 நேசித்த தோஷி வம்பன்
நெரடெலாம் வெருளவடி யேனுமுமை நம்பினே
 னேயம்வைத் தாளு தற்கே
மதிதனினு மதிகவொளி யுள்ள நீர் பின்றொடர
 வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தி லெழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப் போன்றவனே! முகியித்தீனே! நானோ ஆயிரமென்றும் அளவற்ற தீங்கினையுண்டாக்கின வம்பன்; நல்ல நன்மை தீமைகளைச் சகசமாக அறியாத வம்பன்; தாய் தந்தையர்களுடைய மனதை நோவப் பண்ணின வம்பன்; தராதரமறியாத வம்பன்; பதினாயிர முறைசொன்னாலும் செவிகொடுத்துக் கேளாத வம்பன்; பெருமை பொருந்திய ஆகாயமுதலான பேரைச் சொல்லுகின்றவர்களையும் சொல்லும்படி யுண்டான வம்பன்; செல்வத்தைத் தேடுகின்ற இறந்துபட விருக்கின்ற சீவர்களுடைய பட்சங்களிலேயே சிநேகஞ்செய்து வந்த தோஷியாகிய வம்பன்; முரட்டு மார்க்கங்களெல்லாம் பயப்படவும் என்மீது கிருபைவைத்து ஆளுதற்கும் அடியேனாகிய நானும் உம்மை நம்பினேன்; ஆகையால் சந்திரனைப்பார்க்கிலும் மிகுந்த தேஜசுள்ள நீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

இப்படிப்பட்ட வம்பனை ஆண்டருள் செய்யவேண்டிய, அக்கரையில்லையென்று கைவிட்டுவிடுவாயானால் நான் உஜ்ஜீவிப்பதில்லை என்பதுகருத்து. (5)

எண்சாணுடம்புமொரு போதுமழி யாதென்று
 வெண்ணமொழி யாத வம்பன்
ஏதுவந் தாலுமோ ரணுவிற்கு நிகரொன்
 றிடும்பைகள் பேசு வம்பன்
கண்சாடை கண்டுவில காதவம் பண்காசு
 காசுகா சென்ற வம்பன்
கல்லுமொரு போதேனு முருகுமுரு காக்கருங்
 கன்னெஞ்ச னான வம்பன்
பெண்சாதி பெண்சாதி பெண்சாதி யென்றே
 பிதற்றுபேய் கொண்ட வம்பன்

பேயாட் டொழிக்கவடி யேனுமுமை நம்பினேன்
  பிரியமுட னருளு தற்சே
வண்சீரு மெண்சீரு முள்ளநீர் பின்றொடர
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித் தீனே! எட்டுச்சாண் அளவுள்ள இந்த உடம்பானது என்றைக்கும் அழியாது என்ற எண்ணங்கொண்டிருந்த வம்பன்; எதுவந்தபோதிலும் ஒரு அணுவிற்கு ஒப்பாகின்ற இடும்பைகள் பேசுகின்ற வம்பன்; கண்ணால் காட்டப்படுகின்ற கண்சாடையைக் கண்டு நீங்காத வம்பன்; எப்பொழுதும் பணமேயென்று நினைத்துக்கொண்டிருக்கிற வம்பன்; கல்லாவது ஒருகாலத்தி லில்லாவிட்டாலும் ஒரு காலத்திலுருகும் அவ்விதம் உருகாத கருங்கல்லை நிகர்த்த மன முடையவனை வம்பன்; எக்காலத்திலும் பெண்ஜாதி பெண்ஜாதி என்று பிதற்றுகின்ற பேய்க் கோட்பட்ட வம்பன்; அப்படிப்பட்ட என்னுடைய பேயாட்டை நீக்கிக் கொள்ளவும், என்னை நீ இன்பமுடன் ஆண்டருள் செய்வதற்கும் உம்மை நம்பினேன். ஆகையால் வளப்பம்பொருந்திய கீர்த்தியையும், யாவராலும் எண்ணத்தக்க கீர்த்தியையும் உள்ளநீர் பின்றொடரவள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

இப்படிப்பட்ட வம்புக்காரனை உலகத்தில் யாவருங் காக்கமாட்டார்கள் ஆகையால் இறைவனே! அடியேனை தேவரீரே காத்தருள் செய்யவேண்டும் என்பது கருத்து. (6)

அஞ்சாத வத்தொழி றணைப்புரியும் வம்பன்மா
  வதிகாரி யான வம்பன்
ஆதரிக் காநின்ற பேர்களைத் தானே
  யடுத்துக் கெடுத்த வம்பன்
பஞ்சமா பாதகம் முதலான தீதகம்
  பயமறச் செய்த வம்பன்
பட்சம்வைத் தோர்தமக் கிச்சைமிக வோதிப்
  பணம்பறிக்கின்ற வம்பன்
நஞ்செலா மொன்றாய்த் திரண்டுரு வெடுத்தகெடு
  நாசச் சரீர வம்பன்
நாயினுங் கொடியவடி யேனுமுமை நம்பினே
  னட்டம்வைத் தாளு தற்கே

வஞ்சகம னுக்குநஞ் சுள்ள நீர்பின்றொடர
வள்ளலிற ஞூல்வ ருகவே
வளருமருணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகிபித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டுகண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! யாவருக்கும் எதற்கும் பயப்படாமல் வீண்செய்கைகளையேசெய்யும்வம்பன்; மகத்தான அதிகாரியானவம்பன்; யார் என்னை ஆதரிக்கின்றார்களோ அவர்களையே சேர்ந்து அவர்களை ஒன்றுக்கும் உதவாதபடி கெடுத்த வம்பன்; பஞ்சபாதக முதலான தீவினைகளை பயமில்லாமற் செய்தவம்பன்; பட்சம் வைத்தவர்களுக்கு இச்சையை மிகவுஞ் சொல்லி பணத்தைப்பறிக்கின்ற வம்பன்; விஷங்களெல்லாம் ஒன்றாய்த் திரண்டு உருவெடுத்து கெடுநாசச் சரீரத்தையுடையவனான வம்பன்; இப்படிப்பட்ட நாயைப்பார்க்கிலுங் கொடியவனான அடியேனும் என்னை நாட்டம் வைத்தாளுதற்கு உம்மை நம்பினேன்; ஆகையால் வஞ்சகத்தையுடைய எமனுக்கு விஷமாக வுள்ள நீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

சர்வ காரியங்களிலும் வம்புசெய்கின்றவனாகிய என்னை இறைவனே முன்னின்று காக்கவேண்டும் என்பது கருத்து. (7)

தையலர்க ளாசையெனு மையலில் விடாய்கொண்டு
தாகித் தலைந்த வம்பன்
சாகா வரம்பெற்ற தேகத்த னென்று
தலைகெட்டு நின்ற வம்பன்
மெய்யாக வையகத் தாரெனக் கிடென்று
வீண்மதம் பேசும் வம்பன்
வெறிகொண்ட நாய்போலும் வள்ளுவள் ளென்றியார்
மேலும்விழு கின்ற வம்பன்
செய்யாத செய்கையே செய்தவம் பன்பொய்த்த
சிற்றின்ப முற்ற வம்பன்
தீயும் பயந்தவடி யேனு முமை நம்பினேன்
சித்தம்வைத் தாளு தற்கே
வையமுழு துக்குமணை வுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற ஞூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற

என்னுடைய இரண்டுகண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! பெண்கள் ஆசை யென்னும் மயக்கத்தில் ஆசைகொண்டு அதனால் மிகவும் விடாய்ப்பட்டு அலைந்த வம்பன்; சாவாத வரத்தைப் பெற்றிருந்த சரீரத்தையுடையவன் நானே யென்று தடுமாறியிருந்த வம்பன்; உண்மையாக இவ்வுலகத்து ஜனங்களெல்லாரும் எனக்குச் சமானமானவர்களென்று வீணாக மதம்பிடித்தவார்த்தை யாடுகின்ற வம்பன்; பயித்தியம்பிடித்த நாயைப்போலும் வள்ளுவள்ளுஎன்று எவர் மேலும் விழுகின்ற வம்பன்; செய்யக்கூடாத செய்கைகளையே செய்து கொண்டுவந்த வம்பன்; பொய்யாகிய சிற்றின்பத்தில் முழுகினவம்பன் அக்கினியும் பயப்படக்கூடிய அடியேனாகிய நானும் மனம்வைத்து ஆளுதற் பொருட்டு உம்மை நம்பினேன் ஆகையால் உலக முழுமைக்கும் அங்குள்ள பிராணிகளுக்கும் ஆதரவாக வுள்ள நீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

பெண்ணாசை முதலியவற்றில் வருந்துகின்ற வம்பனை நீரே காத்துரட்சிக்கவேண்டும் என்பது கருத்து- (8)

கேடெலாங் கூடித் திரண்டுருக் கொண்டுகுடி
 கேடுட லெடுத்த வம்பன்
கெட்டபேர் கண்டபேர் காதுகண் ணோவெடுக்
 கின்றவடி யுண்ட வம்பன்
நாடெலாமிவனையு நாடலா மோவென்று
 நகையாட லுண்ட வம்பன்
நாடோறு மாடுபோ லோடியோ டித்தின்று
 நாவுருசி கண்ட வம்பன்
மேடு முட்டத்துருத் திக்குட் பருக்கைமிக
 வெட்டியே வீசு வம்பன்
மெத்தவம் புற்றவடி யேனுமுமை நம்பினேன்
 மேன்மைதந் தாளு தற்கே
மாடம்ப ஜம்பநடை யுள்ள நீர் பின்றொடர
 வள்ளலிற சூல்வ ருகவே
வளருமருணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டுகண்களின் மணியைப் போன்றவனே! முகியித்தீனே! சகல கெடுதிகளும் ஒன்றாகச்சேர்ந்து ஒரு ரூபங்கொண்டு ஒரு வடிவாக வந்தவம்பன்; கேட்டவர்கள், பார்த்தவர்கள் ஆகிய இவர்களுடைய காதுகளும், கண்களும்நோவெடுக்கின்ற அடிகொண்ட வம்பன்;

உலகத்தாரேல்லாரும் இவனை நாடலாமோவென்று சிரிக்கவுடலெடுத்த வம்பன்; தினந்தோறும் ஆட்டைப்போல யோடியோடித் தின்று நாவினிடத்தில் ருசியைக்கண்ட வம்பன்; மேடானது முட்டும்வண்ணம் இந்தச்சரீரமாகிய துருத்திக்குள்ளே பருக்கைகளை மிகவும் வெட்டி வீசுகின்ற வம்பன்; அதிகமான கடோர வம்புகள் பொருந்திய அடியேனாகிய நானும் எனக்கு மேன்மைதந்தாளுதற்பொருட்டு உம்மை நம்பினேன். ஆகையால் மகத்தாகிய டம்பத்தையும் ஜம்பத்தையுங் கொண்ட நடையையுடைய நீர் பின்றொடரும்படி வள்ளலாகவும் இறைவனாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

இப்படிப்பட்ட வம்புகளை யெல்லாம் உடையவனானவன் இதுவரைக்கும் வாழ்ந்து வந்ததுபோலில்லாமல் இன்றைக்கும் எனக்குத் திருவருள் செய்யவேண்டும் என்பது கருத்து. (9)

தாயாதி முதலன்னை சுற்றங்க டம்மையுஞ்
 சாரா தடித்த வம்பன்
தானதரு மங்களுக் கினைதரு மங்களே
 சாட்டிக் கொடுத்த வம்பன்
பேயாய்ப் பிடித்துவெறி நாயாய் கடித்துப்
 பிடாரிபோ லலையும் வம்பன்
பிருநா னென்னு முபதேசங்கள் கூறிவிலை
 பேசித் திரிந்த வம்பன்
தூயமரு மூதுநபி பாதமல ரைச்சென்னி
 சூட்டறிவின் மோட்டு வம்பன்
துறவெய்த லெய்தவடி யேனுமுமை நம்பினேன்
 சொன்னபடி யாளு தற்கே
மாயோக சித்திநெறி யுள்ளநீர் பின்றொடர
 வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! பங்காளி முதல் தாய்மார்கள், சுற்றத்தார்கள் ஆகிய இவர்களெல்லோரையும் சேராதபடி அடித்துத் துரத்தின வம்பன்; தானதருமங்களுக்குப் பதிலாக கெடுதியான அதருமங்களையே பெரும்பாலுஞ் செய்த வம்பன்; பேயைப் போலப் படித்து வெறிபிடித்த நாயைப்போலக் கடித்து காளியைப் போல அலைகின்ற வம்பன்; நானே ஆசிரியனுவேனென்று உபதேசங்களைச் சொல்லி விலைபேசித் திரிந்து

கொண்டிருந்த வம்பன்; பரிசுத்தமாகிய மகுமூது என்னும் நபியினுடைய திருவடிமலரைச் சிரசின்மேல் வைத்து அறிவினால வம்பு செய்கின்ற வம்பன்; தூரவின் ஆச்சிரமங்களை யடைய அடியேனாகிய நானும் சொன்ன வண்ணம் ஆண்டடிமை செய்வதற்கு உம்மை நம்பினேன். ஆகையால் மகத்தாகிய யோகமார்க்கத்தின் சித்திநெறியை யுள்ள நீர் பின்றொடா வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

சாதாரணமான இப்படிப்பட்ட செய்கைகளையுடைய என்னை தேவரீரே காப்பாற்றி யருளவேண்டும் என்பது கருத்து. (10)

பொருளிற்கு வேறாப் போந்தநா னென்னு
மருளேயுளத்தை மறைக்கும் பவத்தி
னியங்கா துலவா தெங்குநில் லாது
வயங்காதகற்றுக வள்ளலென் றிரத்தல்.

(பொ-ரை) உண்மைப் பொருளிற்கு வேறாக வந்த நான் என்னும் மயக்கமே உள்ளத்தை மறைக்கின்ற பாவத்தில்சஞ்சரிக்காமல் உலவாமலும் எங்கும் நில்லாமலும் விளங்காது ஒழிக்கவேண்டும் வள்ளலே என்று இரத்தல்.

ஆசிரியவிருத்தம்.

வேதாந்த சாரமே சாரமென் றறியாது
 வீணா டொலைத்த பாவி
மேன்மேலு மெய்ஞ்ஞான வின்பமறு காதபாழ்
 மெய்யைமெய் யென்ற பாவி
சோதிப்பிர காசச் சுயஞ்சோதி யனாகத்
 தொழிந்துறைக ளற்ற பாவி
சுகநிட்டை பாராத விழியெனு முகத்திலிரு
 தொள்ளையொ டிருந்த பாவி
கோதிலும தடிபணிகி லாதசிர சென்றகற்
 குன்றைச் சுமந்த பாவி
கொடியமா பாவியடி யேனு முமைநம்பினேன்
 குடியிருந் தாளு தற்கே
மாதவ வபேதநிலை யிள்ளநீர் பின்றொடா
 வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முகியித்தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! வேதாந்தத்தின் சாரமே உண்மையென் றுணராமல் வீணாக

நாளைக்கழித்தபாவி; அதிக மாக உண்மை ஞானமான இன்பமுண்டா காத பாழாகிய சரீரத்தை மெய்யென்றபாவி; தேஜோமயமான சுயஞ் சோதியானது சேர்வதற்கு வணங்கும் படியான மார்க்கங்களை விட்ட பாவி; உண்மையான இன்ப நிஷ்டையைப் பார்க்காத விழியென்கிற முகத்தின்கண் இரண்டு துவாரத்துடனே யிருந்த பாவி; குற்றமற்ற உம்முடைய திருவடிகளை வணங்காத சிரசு என்கிறகல்மலையைச் சுமந் திருந்தபாவி; கொடுமைகளையுடைய பெரியபாவி; இப்படிப்பட்ட பாவியாகிய அடியேனும் நீர் குடியிருந்தானதற் பொருட்டு உம்மை நம்பினேன்; ஆகையால் மகத்தாகிய தவத்தையுடைய அபேத நிலையை யுடைத்தாயிருக்கின்ற நீர் பின்றொடா வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும்.(எ-று)

பாவிகள் செய்யுந் தொழில்களையே செய்ய விரும்புகின்றேனாகை யால் என்னை அச்செய்கைகளிலிருந்தும் நீக்கியாண்டருள் செய்ய வேண்டும் என்பது கருத்து. (1)

மட்டிகளி னுங்கெட்ட சுட்டிவால் வெட்டிபேய்
மட்டைரட் டித்த பாவி
வஞ்சகம னுக்குவாரிக் கொடுத் திடவுடலை
வளமாய் வளர்த்த பாவி
சட்டிவைத் துச்சட்டி வாங்கும் பெருந்தொப்பை
சற்றும்வடி யாத பாவி
சண்டாள ருக்குமா சண்டாள ருக்குமா
சண்டாள னை பாவி
பொட்டைபிபு லீசுகைக் குட்பட்ட பாவியொரு
போக்குநீக் கற்ற பாவி
போதாத பாவியடி யேனுமுமை நம்பினேன்
பொய்மைதீர்த் தாளு தற்கே
வட்டமதி வெட்குமுக முள்ளநீர் பின்றொடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித்தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித் தீனே! மட்டிப்பையல்களைப்பார்க்கிலும் சுட்டியும் வால்வெட்டியும் பேய்மட்டையுமான இரட்டித்தபாவி; வஞ்சகத்தையுடைய எமனுக்கு வாரிக்கொடுக்கும்படி இந்தச் சரீரத்தை வளப்பமாகவளர்த்தபாவி; சட்டியைவைத்து சட்டிவாங்குகின்ற பெரியதொப்பையானது கொஞ்

இப்படிப்பட்ட செய்கைகளை யுள்ளவனுன என்னை தேவரீரே காத்துரட்சிக்கவேண்டும். என்பது கருத்து. (4)

தேகாதி யகிலப்பிர பஞ்சமது பொய்யென்று
  தேர்ந்தறிவி லாத பாவி
தீபாவி தீபாவி தீபாவி தீபாவி
  திவ்வியகுண மற்ற பாவி
மாகவலை குடிகொண்ட பாவிவம் பாகவே
  வாதாடு கின்ற பாவி
மாயப் பசாசு கொண் டலைபாவி வீணுக
  வாழ்நாளழித்த பாவி
ஆகாத பாவியா ருகாத பாவியா
  ருர்க்குமா காத பாவி
அளவற்ற பாவியடி யேனுமுனை நம்பினே
  னுண்டெனைத் தாளு தற்கே
வாகுவழி யேகவொளி யுள்ளநீர் பின்றெடர
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டுகண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! தேகமுதலாகிய சகலஅகிலபிரபஞ்சங்களைப்பொய்யென்றுதேர்ந்த அறிவில்லாதபாவி; தீபாவி தீபாவி தீபாவி தீபாவி உயர்ந்த குணமானது கொஞ்சமும் என்னிடத்திலில்லாத பாவி; மகத்தாகிய துன்பமானது அதிகமாகக் குடிகொண்டிருக்கின்ற பாவி; வீணுகப் பலவகைப்பட்ட வம்புசொற்களைப் பேசுகின்ற பாவி; மாயமாகிய பிசாசினுல் பிடிக்கப்பட்டு அதினுல் அலைகின்றபாவி; வீணுக வாழ்நாளை கெடுத்துக்கொண்ட பாவி; உலகத்தின்கண் யாருக்கு மாகாத பாவி; அளவு சொல்லப்படாத பாவி; இப்படியிருக்கின்ற பாவியாகிய அடியேனும் என்னை ஆட்கொண் டெனத்தாளுதற்பொருட்டு உம்மை நம்பினேன். ஆகையால் வெற்றிபொருந்திய நீவழியானது போக தேஜோமயத்தை யுள்ள நீர் பின்றெடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வர வேண்டும்.

இப்படிப்பட்ட என்னை இறைவனே! தேவரீரே காப்பாற்றி யருள வேண்டும் என்பது கருத்து. (5)

மெய்யான பொய்யுடலை மெய்யென்று மெய்யான
  மெய்யறிவு கெட்ட பாவி

மெய்யான மெய்யேது மறியாத பொய்யான
மெய்யைப் படைத்த பாவி
பொய்யான தையலரை தையலரை யையோ வணைக்கசுக
போகமோ கித்த பாவி
பொய்யான புலையான கொலையான மலையான
பொய்த்தமொழி கற்ற பாவி
வையாத வையாசை யானதீ யானமா
மாயைகுடி கொண்ட பாவி
மாகொடும் பாவியடி யேனுமுமை நம்பினேன்
வந்திருந் தாளு தற்கே
வையவிழி மையவொளி யுள்ளநீர் பின்ருடா
வள்ளலிற கூலவ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மெனிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! பொய் மெய் என்னும்பேரை வுடைத்தாயிருக்கின்ற பொய்யாகிய சரீரத்தை உண்மையா யுள்ளதென்று நினைத்துக்கொண்டு உண்மையான அறிவின்கேட்டை யடைந்திருக்கின்ற பாவி; உண்மைவிஷயங்களைச்சிறிதுமுணராத பொய்யை மெய்யாகக்கொண்டிருக்கின்ற பாவி, பொய்யாகிய வேஷதாரிகளாகிய பெண்களை அந்தோ! அணைத்தற்குரிய சுகபோகத்தை விரும்பி யிருக்கின்ற பாவி; பொய்யும், புலையும்; கொலையும், மலையுமான பொய்மொழிகளைக் கற்றுக்கொண்டிருக்கிற பாவி; வைக்கக் கூடாதவையான ஆசையென்கிற மாயையானது குடிகொண்டிருக்கின்றபாவி; மகத்தாகியகொடும்பாவி ஆகிய இவைகள் சேர்ந்த அடியேனுகிய நானும் நீர் என்னை வந்திருந் தாளுதற்பொருட்டு உம்மை நம்பினேன். ஆகையால் உலகத்தில் இருகண்களின் மத்தியில் தேஜோமயத்தையுள்ள நீர் பின்ருடா வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும்.(எ-று)

இவ்வாருய் பலவகையான பாவங்களையே செய்து கொண்டிருக்கிற அடியேனுகிய நான் உன்னடிகளை நம்பியுள்ளவனுகையால் நீயே என்னைக் காப்பாற்றியருளல் வேண்டும் என்பது கருத்து. (6)

பசுபாச வாசவினை யென்றவெறி கொண்டலை
பசாசாடு கின்ற பாவி
பால்பழங் கற்கண்டு சர்க்கரைகண் மொக்கியும்
பட்டமர மான பாவி

விசனமொடு துக்கமே குடிகொண்ட பாவிபொய்
வேடந் தரித்த பாவி
வித்தகன் றிருவடி தனைத்தொழுது தொழுதழுது
மெய்யரு ளுறாத பாவி
நிசமாக வசைபேசு வார்கள்வாய் தன்னிலே
நீதமா யிருந்த பாவி
நிலையற்ற பாவியடி யேனுமுமை நம்பினே
னேயம்மைத் தாளு தற்கே
வசியமன வாசிவச முள்ளநீர் பின்றொடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித்தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! பசுவென்றும், பாசமென்றும், சொல்லுகின்ற வினைகளைக் கொண்டு வெறிபிடித்துத்திரிக்கின்ற பசாசைப் போன்ற பாவி; பால், பழம், கற்கண்டு, சர்க்கரை முதலியவற்றைத்தின்றும் பட்டமரம் போன்றபாவி; விசனமும், துக்கமுஞ் சதா குடிகொண்டிருக்கின்ற பாவி; பரிசுத்தானுகிய இறைவனுடைய திருவடிகளை வணங்கி அழுது உண்மையாகிய திருவருளையடையாத பாவி; உண்மையாக வசையைப் பேசுகின்றவர்களுடைய வாயினிடத்தில் நிச்சயமாயிருந்தபாவி; நிலையில்லாதபாவி; இப்படிப்பட்டவனுன அடியேனும் நீர் என்னை இஷ்டமாக ஆண்டருள் செய்வீரென்று உம்மை நம்பினேன்; ஆயையால் வசியத்தையடைந்த மனோவாசியை வசப்படுத்தியுள்ள நீர் பின்றொடா வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

பாவிகளை இறைவன் உண்மையாகவே ஆதரிக்காம லிருந்தபோதிலும் என்னை மாத்திரம் ஆதரிக்கவேண்டியது அவனுடைய கடமையாகும் என்பது கருத்து. (7)

இதமகித மென்றவினை யுங்கொண்டலைந்துசிற்
றின்பவேம் புண்ட பாவி
எண்சா ணுடம்பும்வெறு நஞ்சான பாவியோ
ரின்பமணை யாத பாவி
பதமற்ற பாவிபக் கீறுதறு தலைமட்டை
பரதேசி யான பாவி
பாவிப் பிணங்களைப் பாடித் துதித்துப்
பணம்பறிக் கின்ற பாவி

சதிகெடும் பாழாக்கு மதிகொடும் பாவிபொய்ச்
சத்தியஞ் செய்த பாவி
சர்ப்பநிகர் பாவியேனு முமை நம்பினேன்
சாரிவந் தாளு தற்கே
மதினமுத லும்வாச முள்ளநீர் பின்றொடா
வள்ளலிற கூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! நன்மை தீமை என்கிற இருவினைகளையுங்கொண்டு அலைந்தலைந்து சிற்றின்பமென்கிற வேம்பினைத்தின்ற பாவி; எட்டுச்சாண் அளவுள்ள இந்தச்சரீரம் முழுமையும் விஷமுள்ளவனான பாவி; ஒருநாளும் சுகத்தை நாடாதபாவி; யாதொருபதவியுமில்லாதபாவி; பக்கீறுவின் தலையானது மட்டையாகக்கொண்டிருக்கின்ற பரதேசியானபாவி; பாவிகளாகிய நடைப்பிணங்களைப் பாடித்துதித்து பணத்தைப்பறிக்கின்ற பாவி; சதிகெடுக்கின்ற பாழாக்குகின்ற மதியையுடைய கொடும்பாவி; பொய்சத்தியபண்ணுகின்ற பாவி; பாம்பினையொப்பான விஷமுள்ளபாவி; இப்படிப்பட்டவனான அடியேனும் என்னைச்சேர்ந்து வந்தாளுதற்கு உம்மை நம்பினேன் ஆகையால் மதினமுதலும் வாசமுள்ள நீர் பின்றொடா வள்ளலாகவும்இறகுலாகவும் எழுந்தருளிவரவேண்டும். (எ-று)

உலகத்திலுள்ள இப்படிப்பட்ட பாவிகளையெல்லாம் இறைவன் கண்ணோக்கா திருந்தாலும் என்னைமட்டுங் காக்கவேண்டிய கடமை அவருக்குண்டு என்பது கருத்து. (8)

கைக்குள்வெண் ணெயைவைத்து நெய்க்கழுத பாவிவலை
கற்றுமறி வற்ற பாவி
கற்பக விருக்ஷத்தி னடியிலே காஞ்சிரங்
காய்தேடி நின்ற பாவி
கொக்குப் பிடிக்கநாய்க் குத்தெரியு மோவென்ற
கொள்கைகுடி கொண்ட பாவி
குருடர்களி யானையைக் கண்டகதை போலசற்
குருவையறி யாத பாவி
சர்க்கரை கரும்புகற் கண்டமு திருக்கக்
கசங்குடிக் கின்ற பாவி
தலைகெட்ட பாவியடி யேனுமுமை நம்பினேன்
றயையை வைத் தாளு தற்கே

மக்கநக ருக்குமணை முள்ளநீர் பின்றொடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித் தீனே! கைக்குள்ளே வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுத பாவி; சாஸ்திரங்களை யெல்லாங் கற்றும் அறிவில்லாத பாவி; கற்பகவிருட்சத்தின் அடியிலிருந்தும் எட்டிக் காயைத்தேடின பாவி; கொக்கைப்பிடிக்க நாய்க்குத் தெரியுமோ வென்கிற கொள்கையானது குடிகொண்டிருக்கின்ற பாவி; குருடர்களெல்லாங் கூடி யானையைக் கண்ட கதையைப்போல் ஞானாசிரியனை யறிந்துகொள்ளாத பாவி; சர்க்கரை, கரும்பு, கற்கண்டு,பால் இவைகளிருக்கக் கசங்குடிக்கின்ற பாவி; இப்படிப்பட்ட பாவியாகிய அடியேனும் தயவுவைத்து ஆள்வதற் பொருட்டு உம்மை நம்பினேன். ஆகையால் மக்கா நகருக்கு மணமுள்ள நீர் ,பின்றொடா வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும்.(எ-று)

பாவியைக் காக்கவேண்டும் என்பது கருத்து. (9)

குறைஷிக் குலக்கொழுந் தானமகு மூதுநபி
கொள்கையறி யாத பாவி
கொறடா தனைக்கொண்டு மாட்டினு மறிஞர்பின்
கூடிநட வாத பாவி
அரிசிவிலை யுலையறியு மோவென்ற கதைபோல
வகலிற் படைத்த பாவி
ஆருக்கு வைத்தகூ ழாயினுஞ் சரிகாணி
லள்ளியடை கின்ற பாவி
விரிதருந் தொப்பையை விருப்பொடு வளர்க்கமேன்
மேலுமலை கின்ற பாவி
விதியற்ற பாவியடி யேனுமுமை நம்பினேன்
வேளையீ தாளு தற்கே
வரிசைநபி வரிசைமிக வுள்ளநீர் பின்றொடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்வியக்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித் தீனே! குறைஷிக்குலத்திற்குக் கொழுந்தாகிய மகம்மது நபியின்

குணத்தை உணராத பாவி; கொறடாவைக்கொண்டு மாட்டினாலும் அறிவாளர்களுடன் கூடி நடக்காத பாவி, அரிசியின்விலையை உலையறியுமோவென்கிற கதையைப்போல அகவிற்படைத்தபாவி; ஆருக்கு ஆக்கிவைத்த கூழாக விருந்தாலும் சரியே அதைப்பார்த்தால் அள்ளி அள்ளித் தின்கின்ற பாவி; விரிகின்ற தொப்பையை ஆசையுடனே வளர்த்தற்கு மேன்மேலுமலைகின்றபாவி; விதியற்றபாவி; இவைகளெல்லாம் கூடிய பாவியாகிய அடியேனும் இந்த வேளையில் என்னை யாளுதற்பொருட்டு உம்மைநம்பினேன். ஆகையால் நபிவாசைகளைப் பெற்றுள்ள நீர் பின்றொடரா வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

இப்படிப்பட்ட பாவியைக் காக்கவேண்டியவன் நீயே என்பது கருத்து. (10)

இதற்குமுன் சொன்ன விடையூ றிரண்டினாற்
பதைப்பற் றிராத பாவிபுள் ளத்தினுக்
கென்செய்வ னென்றிடைந் திடைந் தழுவதை
யின்செய்கை யாலொழித்திடுகவென் றிரத்தல்.

(பொரை) இதற்குமுன்னே சொன்ன இடையூறுகள் இரண்டினால் பதைப்பற்றிராத பாவியினுடைய மனத்திலும் நான் என்ன செய்வேன் என்று பின்னிடைந்து பின்னிடைந்து அழுவதை இனிமையான நற்செய்கையால் ஒழிக்கவேண்டுமென்று இரத்தலாகும். (எ-று)

கனமாயை வினையென்ற சனியன் பிடித்துக்
  கலங்கித் தவித்த ழுவனே
காலூன்றி மழைபொழிய வுங்கருணை முகிலினங்
  கவியவிலை யென்ற ழுவனே
அனியாய மனியாய மனியாய மென்கொடுமை
  யனியாய மென்ற ழுவனே
ஆனாலுமென் போலு மொருபாவியகிலமதி
  லாருளா ரென்ற ழுவனே
இனியாள்வ ரெவரைய னேயைய னேயென்ன
  வேங்கித் துடித்த ழுவனே
இங்கென்ன செய்வனடி யேனுமுமை நம்பினே
  னிஷ்டம்வைத் தாளு தற்கே
மனமாயை யற்றமன முள்ளநீர் பின்றொடரா
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந்திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! கனத்தமாயா வினைஎன்கிற சநியனானவன் பிடித்து அதினால் மனங்கலங்கித்தவித்தழுவேனோ? காலூன்றி மழையானது பொழியவும் கருணை மேகமானது கவியவில்லை என்று அழுவேனோ? அநியாயம்; அநியாயம் என்னுடைய கொடுமையானது அநியாயமாகும் என்று அழுவேனோ? ஆனாலும் என்னைப்போல ஒரு பாவியானவன் இவ்வுலகத்தில் ஆரிருக்கின்றார்கள் என்று அழுவேனோ? இனி என்னை ஆண்டருள் செய்பவர் எவர்? ஐயனே! ஐயனே! என்று எக்கங்கொண்டு துடிதுடித்து அழுவேனோ? இவ்விடத்தில் நான் என்னசெய்வேன்? அடியேனாகிய நானும் என்னை நீர் இஷ்டமுடன் ஆளுவீரென்று உம்மை நம்பினேன். ஆகையால் மனத்தினுடைய மாயையானது ஒழிந்த மனமுள்ள நீர் பின்தொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

உலகத்தில் ஒவ்வொரு மனிதரையும் மாயையானது பிடித்துக்கொள்ளுகிற சுபாவமுடையதென்பார், 'கனமாயை வினையென்ற சநியன் பிடித்துக் கலங்கித் தவித்தழுவேனோ' எனவும்; கிருபை வெள்ளமானது கவிவது மிகவுங் கஷ்டமென்பார் 'காலூன்றி மழைபொழியவுங் கருணைமுகி லினங்கவியவில்லை யென்றழுவேனோ' எனவும்; இப்படிப்பட்ட விஷயம் மிகவுங் கொடுமையானதென்பார், 'அநியாய மநியாய மென் கொடுமை யநியாய மென் றழுவேனோ' எனவும்; இப்படி யிருப்பதனால் என்னைப் போன்ற ஒரு பாவியுமில்லை யென்பார், 'ஆனாலு மென்போலு மொரு பாவி யகிலமதிலாருளா ரென்றழுவேனோ' எனவும்; இப்படிப்பட்ட என்னை இறைவனே யாதரிக்கவேண்டு மென்பார், 'இனியாள்வரெவரையனே யையனே யென்ன வேங்கித் துடித்தழுவேனோ' எனவும்; நீர் ஆண்டருளாவிட்டால் நான் இவ்விடத்தில் என்ன செய்யக்கூடுமென்பார், 'இங்கென்னசெய்வ னடியேனு முமை நம்பினே னிஷ்டம் வைத்தாளுதற்கே' எனவும்; இறைவனே நீரே முன்னின்று காக்கவேண்டும் மென்பார், 'மனமாயை யற்றமன முள்ளநீர் பின்றொடர வள்ளலிறசூல்வருகவே' எனவுங் கூறினார். (1)

தந்தைதாய் முதலான பந்தங்க ளென்றனைச்
  சதிசெய்த தற் கழுவேனோ
சாதிவரை தள்ளியே சஞ்சரிக் காமெய்த்
  தவக்குறை தனக்க ழுவேனோ
புந்திமகி ழுண்டுண் டுடுத்துசிற் றின்பவனு
  போகந் தனக்கழுவேனோ
புனிதனா னேதயப் பெருவெள்ள மென்றுதான்
  பொங்குமோ வென்ற ழுவேனோ

எந்தவித மாயினு மிணங்கவிலை யென்மன
  மிணங்கவிலை யென்ற ழுவனோ
என்செய்வ னேழையடி யேனுமுமை நம்பினே
  னிதுவேளை யாளு தற்கே
வந்துகுதி கொள்ளு நடையுள்ள நீர் பின்றொடர
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைதுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித் தீனே! தகப்பன் தாய் முதலியவர்களுடைய பந்தங்கள் என்னைச் சதி செய்ததற்கு அழுவேனோ? சாதிவரைக்கும் தள்ளி சஞ்சரிக்காத உண்மையான தவத்தின் குறைக்கழுவேனோ? மனஞ்சந்தோஷித்து உண்டுண்டுடுத்து சிற்றின்பவநுபோகமுள்ளதற்கு அழுவேனோ? பரிசுத்தமாகிய ஞானேதயப் பெருவெள்ளமானது என்றைக்குப்பொங்கி வருமோவென்று அழுவேனோ? எந்தவகையிற்பார்த்தாலும் என்னுடைய மனமானது இணங்கவில்லை இணங்கவில்லை என்று அழுவேனோ? என்னசெய்வேன் ஏழையாகிய அடியேனாகிய நானும் இந்த வேளையில் ஆண்டருள் செய்வதற்பொருட்டு உம்மைநம்பினேன்; ஆகையால் வந்து எழுகின்ற நடையுள்ளநீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

இப்படிப்பட்ட நான் எதற்காக அழுவேனெனலுந் தெரியவில்லை ஆகையால் நீரே ஆண்டருள் செய்யவேண்டும் என்பது கருத்து. (2)

மாயாத வோயாவி காரத்தி னலெனது
  மனதுநொந் தேய ழுவனோ
வஞ்சப்பிர பஞ்சத்தைநெஞ்சத் திருத்தியே
  மதிகெட்டு நின்ற ழுவனோ
தீயனிவ னென்றேசு கின்றவர் நகைக்கின்ற
  தீவினை தனக்க ழுவனோ
சீநாயே யோடென் றடித்துத் துரத்துஞ்
  சிரிப்பினைப் பட்ட ழுவனோ
நாயினுங்கடைகெட்ட நாயினுங் கடைகெட்ட
  நாய்போ லலைந்த ழுவனோ
நானென்ன செய்வனடி யேனுமுமை நம்பினே
  னன்மைகூர்ந் தாளு தற்கே

வாயாத மாயைசா வுள்ளநீர் பின்றொடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! கெடாததும் இடைவிடாது வருத்துவதுமான விகாரத்தினால் எனது மனமானது நொந்தழுவேனோ? வஞ்சகத்தையுடைய உலகமாயையை மனத்தில் வைத்து புத்தி கெட்டிருந்து அழுவேனோ? இவன் தீமையை யுடையவனென்று பழிக்கப்படுகின்றவர்கள் நகைக்கின்ற தீவினைக்கழுவேனோ? சீ நாயே ஓடுயென்று சொல்லி யடித்துத் துரத்துகின்ற சிரிப்படைந் தழுவேனோ? நாயைப்பார்க்கிலுங் கடைகெட்ட நாயைப்போல் திரிந்தழுவேனோ? நானென்ன செய்வேன்? அடியேனும் நீர் எம்மை நன்மையாலாண்டருள் செய்வீரென்று உம்மை நம்பினேன்; ஆகையால் வராதமாயையைக் கொன்றுள்ளநீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும்.(எ-று)

சர்வ விஷயங்களிலும் நிலையில்லாம லழுகின்ற அடியேனாகிய என்னை ஆண்டருள் செய்யவேண்டும் என்பது கருத்து (3)

பாசக் கயிற்று வலை வீசிப் பிடிக்கின்ற
பாவையர்க் கேய ழுவனோ
பத்தியொடு தந்தைதா தந்துயோ சஞ்செய்த
பல்வினை தனக்க ழுவனோ
ஆசைப் பெருக்கைப் பெருக்கப் பெருக்கழும்
பாளருக் கேய ழுவனோ
அம்மம்ம வென்சொல்லு கேனகில வாழ் வென்னு
மக்கினிகள் சுட்ட ழுவனோ
பிசேரு பிறற் றருத்திசத மென்றதைப்
பேணுதற் கேய ழுவனோ
பேயனென் செய்வனடி யேனுமுமை நம்பினேன்
பிழைபொறுத் தாளு தற்கே
மாசிலுப தேச நிலையுள்ளநீர் பின்றொடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற

என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! பாசக்கயிற்று வலையை வீசிப்பிடிக்கின்ற பெண்களுக்காக அழுவனோ? பக்தியுடனே தந்தைதாய்தந்து மோசஞ்செய்தபலவகைப் பட்ட வினைகளின் பொருட்டு அழுவனோ? ஆசையாகிய வெள்ளத்தை பெருக்கப் பெருக்க அழுகின்ற அழும்புக்காரர்களின் பொருட்டே யழுவனோ? அம்மம்மா நானென்ன சொல்லுவேன்? உலகவாழ்க்கை எறிகிற அக்கினிகள் சுட அழுவனோ? பீயானது அன்றுடந்தவருது சேர்கின்ற துவாரங்களையுடைய துருத்தியானது சதமென்று அதைக் காப்பாற்று தற்கே யழுவனோ? பேயனாகிய நான் என்ன செய்வேன்? என்னுடைய குற்றங்களைப் பொறுத்தாளுவதற்கு அடியேனாகிய நானும் உம்மை நம்பினேன்? என்றைக்கும் ஒழியா மத மாயையை யொழித்துள்ள நீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வர வேண்டும். (எ-று)

இப்படி இதற்காக வருந்துவ தென்று தெரியாதவனாகிய நான் உம்மை நம்பி யிருப்பதால் எம்மைக் கைவிடாமல் காத்தருள வேண்டும் என்பது கருத்து. (4)

எமனைபழித்தமட வாரல்கு லென்றபா
  ழிடிகிணறு வீழ்ந்த ழுவனோ
இருகொங்கை யென்றதேள் கொட்டிமண் டைக்கேறி
  யெரியுதே யென்ற ழுவனோ
நிமையா விழிக்கணை தொடுத் துளைக்கவென்
  னெஞ்சந் துடித்தழு வனோ
நெகிழும் குழன் மயிர்க் கண்ணியிற் சிக்கியதை
  நீக்கமுடி யாத ழுவனோ
தமியனா னென் செய்வ னென்செய்வ னென்றுபிர
  லாபித்து நின்ற ழுவனோ
தந்தையே சொந்தவடி யேனுமுமை நம்பினேன்
  சமயமீ தாளு தற்கே
மமதயில்லாச்சுகுண முள்ளநீர் பின்றொடா
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்பேன்றவனே! முகியித்தீனே! எமனை நீ என்ன அவ்வளவு சமர்த்தனோ? என்று சொல்லிப் பழித்த பெண்களுடைய அல்குல் என்கிற பாழாகிய இடி கிணற்றில்.

விழுந்து அழுவனோ? இரண்டு ஸ்தனங்கள் என்கிற தேளானது கொட்டி அந்த விஷமானது மண்டைக்கேறி எரிகின்றதே என்று அழுவனோ? இமைக்காத கண்களாகிய பாணங்களைத் தொடுத்து அவைகள் வந்து துளைக்க என்னுடைய மனமானது பதைத்து அழுவனோ? நெகிள்கின்ற கூந்தலையுடைய மயிர் வலையினிடத்தி லகப்பட்டு அதை நீக்க முடியாமல் அழுவனோ? தமியேனாகிய நான் என்ன செய்வேன், என்ன செய்வே னென்று பிரலாபித்து நின்று அழுவனோ? என்னுடைய தந்தையே! சொந்தமான அடியேனாகிய நானும் உம்மை நம்பினேன் இது சமயம் ஆண்டருள் செய்வீரென்று ஆசையால் மமதையில்லாத நற்குணமுள்ளநீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும்.(எ-று)

இப்படிப்பட்ட நான் யாவருக்கும் பேதையாக ஏற்படுவதால்அடியேனைக் காத்தருள வேண்டும் என்பது கருத்து. (5)

ஆநந்த மானபர மானந்த மானந்த மாகா
தவத்தையை நினைந்த் ழுவனோ
அகிலமுத லானபா ழாசைமா ளாதவநி
யாயந் தனக்க ழுவனோ
ஈனப் பெருங்காய மென்னதென் பதிலரு
வேக்கந் தனக்க ழுவனோ
எனதாவி யுட்பொருளை வந்துகைக் கொள்வதினி
யென்றெண்ணி நின்ற ழுவனோ
கானலை நிகர்த்தபெய்யென்ற பொய்தனைக்
கருதுவெறி கொண்ட ழுவனோ
கன்மியென் செய்வடி யேனுமை நம்பினேன்
கரையேற்றி யாளு தற்கே
வானதி பூதமதி லுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ளிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்றகுணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தி லெழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப் போன்றவனே! முகியித்தீனே! ஆநந்தமாகிய பரமாநந்தமாகாமல் அவத்தைகளை நினைந்து நினைந்து அழுவனோ? உலகமுதலாகிய கொடிய ஆசையானது ஒழியாதிருக்கின்ற அநியாயத்திற்கு அழுவேனோ? இழிவாகிய பெரியகாயம் என்னுடையது என்று சொல்வதிலிருக்கின்ற ஏக்கத்திற்கு அழுவேனோ? என்னுடைய ஆவியையும் உட்பொருளையும் வந்து கைக்கொள்

வது இனி என்றைக்கு என்று அழுவேனோ? கானற்சலத்தை யொப்பானசரீரமென்கிற பொய்யை உள்ளபடியே நினைக்கின்ற வெறிகொண்டு அழுவேனோ? கர்மியாகிய நான் என்ன செய்வேன் என்னைக் கரையேற்றி ஆளுதற்பொருட்டு உம்மை நம்பினேன். ஆகாயமுதலாகிய பூதங்களில் கலந்துள்ளநீர் பின்றொடர வள்ளலாகவும் இறைவனாகவும் எழுந்தருளி வரவேண்டும்.(எ-று)

இறைவனே! என்னை ஆண்டருள்வது உன்னுடைய பாரமேயாகும் என்பது கருத்து.(எ-று) (6)

கட்டிப் பிடிக்கினுங் கைக்கடங் கா மனங்
 கவிலதில் லையென் றழுவேனோ
கருவிகர ணம்பாய்கு வதுகண்டு கண்கலக்
 கங்கொண்டு நின்றழுவேனோ
வெட்டவெளி தன்னிலே விட்டகங் காரமென்னை
 மேலிட்ட தற்க ழுவேனோ
மெய்யாக நானென நா னென்னக்குளறும்
 வெட்கந் தனக்க ழுவேனோ
எட்டிரண் டறியா மூடனு மிருவினைக்
 கீடாகி நின்ற ழுவேனோ
*என்னதான் செய்வனடி யேனுமுமை நம்பினே
 னிஷ்டமுவைத் தாளு தற்கே
மட்டுறு நிஷ்டைநடு யுள்ளநீர் பின்றொடர
 வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! எவ்வளவு சாமார்த்தியமாகக் கட்டிக் கட்டிப் பிடித்தாலுங்கைக்கு அடங்காத மனமானது எனக்கு அடங்கவில்லையே யென்று அழுவனோ; கருவிகளும், கரணங்களும் ஒரு இடத்திலிருந்து ஒரு இடத்திற்குப் பாய்வதைக் கண்டு கண்கள் கலங்கிய ழுவனோ; வெட்ட வெளியாகிய ஆகாயத்திலே என்னைவிட்டு அகங்காரமானது என்னை மேலிட்டுக் கவிவதற்கு அழுவனோ; உண்மையாக நான் என்று சொல்வதும் நான் நான் என்று குளறுகின்றவெட்கத்துக்கு அழுவனோ; எட்டு என்பதையும் இரண்டு என்பதையும் உணராத மூடனுகவிருந்து நல்வினை தீவினைகளுக்கு ஒப்பாகி நின்று அவைகள் செய்யும் கொடுமைகளைப் பொறுக்காமல் அழுவனோ; இன்னும் என்னதான் செய்வேன் அடியேனுகிய

நானும் என்னை நீர் ஆசைவைத்து ஆண்டருள் செய்வீரென்று உம்மை நம்பினேன் ஆகையால் அளவுக்கடங்காத நிஷ்டையை நடுவாக வைத்திருக்கின்ற நீர் பின்ஜெடா வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும்.(எ-று)

மனமானது எவ்வகை விஷயத்திலும் ஒன்றுபடாமல் எங்குஞ் செல்லுகிற குணமுடையதென்பார், 'கட்டிப் பிடிக்கினுங் கைக்கடங் காமனங் கவிவதில்லை யென்றழுவனே' எனவும்; அகக்கருவி, புறக்கருவிகள் ஆகிய இரண்டும், அந்தக் கரணங்கள் நான்கும் அடங்குவதில்லையென்பார், 'கருவி கரணம் பாய்குவது கண்டு கண்கலக் கங்கொண்டு நின்றழுவனே' எனவும்; ஆங்காரமானது சிற்றம்பலத்திற் சென்றவர்களையும் கெடுக்கின்றதென்பார், 'வெட்டவெளி தன்னிலே விட்டகங்காரமென்னை மேலிட்டதற்கழுவனே' எனவும்; எப்பொழுதும் இறைவன் ஒருவனிருக்க அதையுணராமல் நானே யாவற்றிற்கும் முதல்வன் என்று சொல்லுகிற வழக்கமே முன்னிடுதலால், 'மெய்யாக நானென னலு நானெனக்குளறும் வெட்கந் தனக்கழுவனே' எனவும்; அஷ்டாட்சரத்தையும் அகார உகாரங்களையும் நான் இதுவரைக்கும் உணர்ந்ததில்லை யென்பார், 'எட்டிரண்டறியாத மூடனுயிருவினைக் கீடாகி நின்றழுவனே' எனவும், இப்படியிருப்பதால் செய்வது இன்னதென்று தெரியவில்லை யென்பார், 'என்ன தான் செய்வனடியேனுமுமை நம்பினேனிஷ்டம் வைத்தாளுதற்கே' எனவும்; இறைவன் சதா நிஷ்டை செய்பவர்களுள்ளத்தில் நிலைத்திருப்பவனென்பார், 'மட்டுறு நிஷ்டைநடு வுள்ளநீர் பின்ஜெடா வள்ளலிற சூல்வருகவே' எனவும்; 'வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண் மணியே முகியித் தீனே' எனவுங்கூறினர். (7)

நீராழ மாகவென் னெஞ்சுருகி நன்னிலைபி
னிற்கவிலை யென்ற ழுவனே
நிஷ்டைக்கு மெட்டாத பேரொளி தியானத்தி
னேர்படவி லென்ற ழுவனே
காராவ நந்தங்கள் போலருள்க விந்திடக்
காண்கிலே னென்ற ழுவனே
கடவுளைத் தேடியிரு கண்ணீர் ததும்பிக்
காஞ்செனி வைத்த ழுவனே
மாரிபோற் பேரின்ப மழைபொழிய விலையென்று
வாய்விட் டிரைந்த ழுவனே
மனதைக் திடைந்தவடி யேனுமுமை நம்பினேன்
வாழ்வுதந் தாளு தற்கே
வாராதி ராதவா முள்ளநீர் பின்ஜெடா
வள்ளலிற சூல்வ ருகவே

வளருமரு ளிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித் தீனே! நீரின் ஆழமாக என்னுடைய மனமானது உருகி உயர்ந்தபதவியில் நிற்கவில்லையே யென்று அழுவனே; எப்படிப்பட்ட நிஷ்டைக்கும் எட்டாத தேஜோமயப் பொருளானது தியானிப்பதின் நேராக நிற்கப் படவில்லையே யென்று அழுவனே, காராத வநந்தங்களைப் போல திருவருளானது கவியப் பார்க்கவில்லையே யென்று அழுவனே; தெய்வத்தைத்தேடி யிரண்டுகண்களிலும் நீர் பெருகக் கைகளைச் சிரசில் வைத்து அழுவனே; மழையைப்போல பேரின்ப மழையானது பொழியவில்லையே யென்று வாய் விட்டுக்கத றிக் கதறி யழுவனே; மனமானது வருந்திப் பின் னடைகின்ற அடி யேனாகிய நானும் எனக்கு வாழ்வைத்துதந்து ஆண்டருள் செய்வீரென்று உம்மை நம்பினேன் ஆகையால் வருதலில்லை யென்கிற வரத்தை யுள்ளநீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வர வேண்டும். (எ-று)

மனமானது ஒருநிலையில் நிற்பது கஷ்டமான தென்பார், 'நீராழ மாக வென்னெஞ்சுருகி நன்னிலையி னிற்கவிலை யென்றழுவனே' எனவும்; இறைவன் நிஷ்டாமரர்களுக்கும் அரியவனென்பார். 'நிஷ்டைக்கு மெட்டாத பேரொளி தியானத்தி னேர்படவி லென்றழுவனே' எனவும்; திருவருளை இன்னுங் காணவில்லை யென்பார், 'காராவநந்தங்கள் போலருள்கவிந்திட காண்கிலே னென்றழுவனே' எனவும்; இறைவனைத் தேடி ஆநந்தபாஷ்பஞ்சொரியவேண்டு மென்பார், கடவுளைத் தேடி யிருகண்ணீர் ததும்பிக் கரஞ்சென்னிவைத்தழுவனே' எனவும்; பேரின்பமானது மழையைப்போற் பொழியவேண்டு மென்பார்,'மாரி போற்பேரின்ப மழைபொழிய விலையென்று வாய்விட்டிரைந்தழுவனே' எனவும்; இறைவன் காணப்படாமையால் அவனை விரும்புகிற வர்களெல்லாம் மனம் வருந்துவார்க ளென்பார், 'மனம்நைந்திடைந்த' எனவும்; ஆகையால் நான் உன்னை அடைக்கலமடைந்தே னென்பார், 'அடியேனு முமை நம்பினேன் வாழ்வுதந் தாளுதற்கே' எனவும்; இறைவன் வரந்தந் தருளக் கடைமைப்பட்டிருக்கிறவ னென்பார், 'வாராதிராத வரமுள்ள நீர் பின்றொடர வள்ள லிறசூல்வருகவே' எனவும்; 'வளருமரு ளிறைகுணங்குடிவாழு மென்னிரு கண்மணியே முகியித்தீனே' எனவுங்கூறினர். (8)

கட்டழகி தன்னையென் கண்ணிலுங் காண்கிலேன்
காண்கிலே னென்ற ழுவனே

கண்மாரி விண்மாரி போற்பொழிய வழுவனே
கைதலையில் வைத்த ழுவனே
கொட்டாவி விட்டுவிட் டேங்கி யேங்கிக் கொண்டு
குந்தியுட் கார்ந்த ழுவனே
குட்டிச் சுவர்க்களிற் போயிருந் தையையோ
வோவென் றிரைந்த ழுவனே
எட்டாத கொம்பினி லிருக்கின்ற தேனே
யிறங்கிடா யென்ற ழுவனே
வதென்று சொல்வனடி யேனுமுனை நம்பினே
னிச்சையுட னாளு தற்கே
வட்டமிடு முகில்கவிகை யுள்ளநீர் பின்றொடா
வள்ளலிற ருல்வ ருகவே
வளருமருணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! கட்டழகியாகிய என்னுடைய தலைவியைக் கண்களாலும் பார்க்க வில்லையே யென்று அழுவேனே; கண்களி னின்றும் பொழிகின்ற ஆனந்த பாஷ்பமானது மழையைப் போல் பெய்யவில்லையே யென்று அழுவேனே; நான்குந்திக்கொண்டிருந்து கொட்டாவிவிட்டு ஏக்கங் கொண்டிருந்து அழுவேனே; குட்டிச்சுவர்களிடம் போய் அங்கிருந்து ஐயையோ! ஐயையோ! என்றுஅழுவேனே; எட்டுதற்குக் கூடாத கொம்புத்தேனே! நீ இறங்கி வரக்கடவாயென்று சொல்லி அழுவேனே; நான் என்னவென்று சொல்லுவேன், நீ என்னை ஆசையோடு ஆள்வதற்பொருட்டு உம்மைநம்பினேன். ஆகையால் வட்டமிட் டுலாவுகின்ற மேகக்கவிகைகளை யுள்ளநீர் பின்றொடர வள்ளலாகவும் இறருலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

ஆன்மாக்களிடத்தில் சத்தியே காருண்ணிய முள்ளவளென்பார், 'கட்டழகிதன்னையென் கண்ணிலுங்காண்கிலேன்' எனவும்; திருவருளை மழை போற் பொழியவேண்டுமென்பார், 'கண்மாரி விண்மாரி போற்பொழிய வழுவனே' எனவும், ஈஸ்வரனுடைய திருவருள் கிடைக்காமையால் கையைத் தலையின்மேல் வைத்துக்கொண்டழ நேரிடுமென்பார், 'கை தலையில்வைத் தழுவனே' எனவும்; இறைவனைப்பற்றி மனோசங்கடத்தால் ஏங்கி யிருக்கவேண்டுமென்பார், 'கொட்டாவி விட்டுவிட் டேங்கி யேங்கிக்கொண்டு குந்தி யுட்கார்ந்தழுவனே' எனவும்; அப்படியே எங்குசென்றாலும் நினைத்து நினைந்தழநேரிடுமென்பார், 'குட்டிச்

சுவர்க்களிற் போயிருந் தையையோ கோவென்றிசைந்தழுவனே' எனவும்; கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவதைப்போ லானே னென் பார், 'எட்டாத கொம்பினிலிருக்கின்ற தேனே யிறங்கிடாயென்றழுவ னே' எனவும், எவர்களும் இறைவனை நம்பவேண்டியது அவசியமென் பார், 'ஏதென்று சொல்வ னடியேனு முமைநம்பினேன் இச்சையுட ளூதற்கே' எனவும்; இறைவனுடைய தன்மைக்கு மேகக்கூட்டங் களே குடையாயிருக்கு மென்பார், 'வட்டமிடு முகில்கவிகை யுள்ளநீர் பின்றெடர வள்ளலிற சூல்வருகவே' எனவும்; 'வளருமரு ணிறை குணங் குடிவாழு மென்னிருகண்மணியே முகியித்தீனே' எனவுங் கூறினர். (9)

என்னசெய் யப்போ கிறேனென்று பாவிநா
ணிரவுபக லாய ழுவனே
ஏமசாமம்மென்றி லாதுதேம் பித்தேம்பி
யெறிமூச் செறிந்த ழுவனே
கன்னலமு தேசீனி கற்கண்டு சர்க்கரைக்
கட்டியே யென்ற ழுவனே
கண்ணூட்டி யானவென் கண்மணியை யென்றுதான்
காண்பனோ வென்ற ழுவனே
நன்னேய ராயமகு மூதுபத நம்பியு
நாளுமிக நொந்த ழுவனே
நைந்தழுது நொந்தவடி யேனுமுமை நம்பினே
னன்புகொண் டாளு தற்கே
மன்னுமதி தனினுமொளி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப் போன்றவனே! முகியித் தீனே! பாவியாகிய நான் என்ன செய்யப் போகிறேனென்று இராத் திரியும் பகலும் அழுவேனே; ஏமமென்றும் சாமமென்று மில்லாமல் எப்பொழுதும் தேம்பித் தேம்பிப் பெருமூச்சு விட்டுக்கொண்டு அழு வேனே; கரும்பின் அமிர்தமே! சீனியே! கற்கண்டே! சர்க்கரைக்கட்டி யே! என்று சொல்லி அழுவேனே; கண்களின் பார்வைக்கு ஒப்பானவ னையென்னுடைய கண்மணியையென்றைக்கு நான் பார்ப்பேனோவென்று அழுவேனே; நல்லஎண்ணமுடையவர்களான மகுமூது என்பவருடைய திருவடிகளை நம்பியும் நாள்தோறும் மிகவும் மனநொந்து அழுவேனே; இவ்விதமாக மனம்வருந்தி அழுதழுதுநொந்த அடியேனாகிய நானும்

என்னைச் சிநேகித்து ஆண்டருள் செய்வாயென்று உம்மை நம்பினேன். ஆகையால் நிலைபெற்ற சந்திரனைப் பார்க்கிலும் மிக்க ஒளியுள்ளநீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

இப்படியெல்லாம் வருத்தப்படுகின்ற அடியேனைத் தேவரீரே காப்பாற்றி யருளவேண்டும் என்பது கருத்து. (10)

இறந்தொழி தற்கேயியங்கிய துண்மையின்
மறைந்தொழி யாது மாறா யிருப்ப
தொன்றுவ தென்றோ வொன்றநேறன் றும
னின்றிடற் கருள் கென நின்றழு திரத்தல்.

(பொ-ரை) இறந்து படுதற்கே விளங்கினது உண்மையா யிருத்தலின் யாவும் மறைவுபட்டு ஒழியாமல் மாறுபட்டிருக்க எல்லாவற்றிலும் பொருந்துவது என்றோ? பொருந்துதல் காணப்படாம லிருப்பதற்குத் திருவருள் செய்யக்கடவீரென்று இருந்து அழுது வேண்டிக் கொள்ளுதலாம் (எ-று)

ஆசிரிய விருத்தம்.

ஞானகுரு நாதனற் பதநிதற் றொழுதழுது
நாடுவது மெக்கா லமோ
நான்மறை தனக்குமெட் டாதநா லாம்படியி
ஞேனற லெக்கா லமோ
ஊனோ டிருந்தவுற வற்றுமுற வுற்றுவீ
டுட்புகுவ தெக்கா லமோ
ஒப்புவமை செப்பரிய கர்ப்பூர தீபமென
வொன்றுவ தெக்கா லமோ
தானேயெனைப்பெற்ற மானே வருந்தியரு
டருவதினி யெக்கா லமோ
சாவப்பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாளு தற்கே
வானமெல் லாமகிமை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழ மென்னிருகண்
மணியே முகியித் தீனே

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப் போன்றவனே! முகியித்தீனே! ஞானாசிரியனுடைய உயர்ந்த திருவடிகளை அநுதினமும் வணங்கி அழுது அவைகளை விரும்பி யடைவது எந்தக் காலத்திலோ;

இருக்கு, யஸஸு, சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களுக்கு மெட்டாத துரிய மென்னும்படியில் நான் ஏறிச் செல்வது எந்தக் காலத்திலோ; சரீரத்துட னிருந்து உறவு ஒழிந்து மோட்ச வுறவைப் பற்றி அம் மோட்சத்திற்குட் செல்வது எந்தக் காலத்திலோ; ஒப்புவமை சொல்லுதற்கரிய கற்பூர தீபத்தைப் போல யாவும் ஒன்றுவது எந்தக் காலதிலோ; தானே என்னைப் பெற்றெடுத்த மானே! நீ என்னைப்பற்றி யிரங்கித் திருவருள் செய்வது எந்தக்காலத்திலோ; என்றைக்காவது ஒருநாளைக்குச் சாதற்கென்றே பிறந்திருக்கின்ற அடியேனாகிய நானும் இந்தச்சமயம் ஆண்டருள் செய்வாயென்று உம்மை நம்பினேன். ஆகையால் ஆகாயம் வரைக்கும் வியாபித்திருக்கின்ற மகிமையுள்ள நீர் பின்ளுேடா வள்ளலாகவும் இறகுலாகவும் எழுந்தருளிவர வேண்டும் (எ-று)

உலகத்தில் பிறந்திருக்கின்ற ஒவ்வொருவரும் ஞானாசிரியனையே வணங்கவேண்டுமென்பார், 'ஞானகுரு நாதனற்பதகிதந் தொழுதழுது நாடுவது மெக்காலமோ' எனவும்; துரியப்பதமானது வேதங்களுக்கெல்லாம் எட்டாததென்பார், 'நான்மறைதனக்கு மெட்டாத நாலாம் படியினுேனேற லெக்காலமோ' எனவும்; யாவரும் சரீரப்பற்றை ஒழிக்க வேண்டு மென்பார், 'ஊனேடிருந்த வுறவற்று முறவுற்று வீடுட்புகுவதெக்காலமோ' எனவும்; இறைவனுடன் கலத்தல் கர்ப்பூரதீபம் போன்றதென்பார், 'ஒப்புவமை செப்பரிய கர்ப்பூரதீபமென வொன்றுவதெக்காலமோ' எனவும், தெய்வம் எப்பொழுது திருவருள் செய்யுமென்பார், 'தானே யெனைப்பெற்ற மானே வருந்தி யருடருவதினியெக்காலமோ'. எனவும்; சாவதற்கே பிறந்ததேயொழிய வீடடையுங் காரியம் ஒன்றுஞ் செய்யவில்லை யென்பார், 'சாவப் பிறந்தவடியேனு முமை நம்பினேன் சமயமீ தாகுதற்கே' எனவுங்கூறினர். (1)

வேடிக்கை யும்பகட் டும்பிலுக் குஞ்சொகுசும்
விட்டொழிவ தெக்காலமோ
வீணாக் கங்களு மூனுறக் கங்களும்
வேரறுவ தெக்கா லமோ
தாடிமீ சைகணரைத் துந்தவ மிலாருறவு
சையென்ப தெக்கா லமோ
சண்டைநின் றிடுவதும் மண்டைபிண் டைடைவதுஞ்
சள்ளென்ப தெக்கா லமோ
சாடாது சமநிலையி னின்றுசம ரசமீது
சாமூர்வ தெக்காலமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாகு தற்கே

வாடிக்கை யாய்க்கருணை யுள்ளநீர் பின்றொடா
வள்ளலிற ருல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித்தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! நான் செய்து வந்து கொண்டிருக்கிற வேடிக்கையும், பகட்டும், பிலுக்கும், சொகுசும் ஆகிய இவைகளை யெல்லாம் விட்டு நீங்குவது எந்தக்காலத்திலோ; வீணை இரக்கங்களும் ஊணும் உறக்கமும் வேறொடு அறுபடுவது எந்தக் காலத்திலோ; தாடி, மீசை இவைகள் நரைத்தும் தவமில்லாதவருடைய உறவைவை என்று விரும்புவது எந்தக்காலத்திலோ; சண்டைபிடிக்க நிற்பதும் அதனால் மண்டையானது பிளவுபட்டு உடைவது ஆகிய இவைகளைச் சள்ளென்று வெறுப்பது எந்தக் காலத்திலோ; யாதொன்றையும் வெறுக்காமல் சமத்துவ நிலையென்று சமரசத்தின் மீது சாடீர்வது எந்தக் காலத்திலோ; சாதற்கென்றே பிறந்துவந்த அடியேனாகிய நானும் இந்தச் சமயம் ஆண்டருள் செய்வீரென்று உம்மை நம்பினேன். ஆகையால் யாவருக்கும் வழக்கமாகக் கிருபை செய்வதற்குள்ளநீர் பின்றொடா வள்ளலாகவும் இறசுலாகவும் எழுந்தருளிவரவேண்டும்.(எ-று)

உலகத்தில் ஒவ்வொருவரும் சொகுசு முதலியவற்றை விட்டொழிவது கஷ்டமென்பார், 'வேடிக்கையும் பகட்டும் பிலுக்குஞ் சொகுசும் விட்டொழிவதெக்காலமோ' எனவும்; உறக்கமும் இரக்கமும் வீணை காரியமே யென்பார், 'வீணிரக்கங்களு மூணுறக்கங்களும் வேராறுவதெக்காலமோ' எனவும்; பெரியோர்களைச் சிநேகிப்பதில்லை யென்பார், 'தாடி மீசைக ணரைத்துந் தவமிலாருறவுசையென்பதெக்காலமோ' எனவும்; சண்டை முதலியவற்றில் ஈடு கொடுப்பவர்கள் வெகுபேரென்பார், 'சண்டை நின்றிடுவதும் மண்டை பிண்டுடைவதுஞ் சள்ளென்பதெக்காலமோ' எனவும் மற்றப்படி சாவதற்குப் பிறந்தவர்களே யல்லாமல் மோட்ச மடைந்தவர்களைக் காணேமென்பார், 'சாடாது சமநிலையி னின்று சமரசமீது சாடீர்வதெக்காலமோ' எனவும்; 'சாவப்பிறந்தவடி யேனுமுமை நம்பினேன் சமயமீதாளுதற்கே' எனவும்; இறைவன் யாவருக்கும் திருவருள் செய்யவேண்டியவனென்பார், 'வாடிக்கையாய்க் கருணையுள்ளநீர் பின்றொடா வள்ளலிறசுல்வருகவே' எனவும்; 'வளருமணிறை குணங் குடிவாழு மென்னிருகண் மணியே முகியித்தீனே' எனவுங்கூறினார். (2)

சொல்லரிய சுகவாரி யமிழ்துண் டொடுங்கித்
, துடிப்பொழிவ தெக்கா லமோ

சுந்தரச் சோதிமணி மாலையணி மார்பனைத்
தொழுவதினி யெக்கா லமோ
நல்லநட னம்புரிந் தாடுகரு ணாகர
னடம்புரிவ தெக்கா லமோ
நாடிவலு வாகப் பிடித்திழுத் தென்றனையு
நடியென்ப தெக்கா லமோ
சல்லிக் குணங்கெட்ட புல்லர்களை விட்டுத்
தனிப்பதினி யெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாளு தற்கே
வல்லிருளை வெல்லுமொளி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற குல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! சொல்லுதற்கருமையான சுகக்கடலிலுண்டாகின்ற அமிர்தத்தையுண்டு ஒடுங்கி என்னுடைய மனச்சங்கடமொழிவது எந்தக் காலத்திலோ; அழகிய பிரகாசம் பொருந்திய மணிமாலைகளைத் தரித்துக்கொள்ளுகின்ற மார்பையுடையவனை வணங்குவது இனி எந்தக் காலத்திலோ; உயர்ந்த திருநடனத்தைச்செய்கின்ற கருணைக்கடலானவன் நடனஞ்செய்வது எந்தக்காலத்திலோ; பலமுடன் நாடி என்னைப்பிடித்திழுத்து என்னையும் நடிக்கச் சொல்லுவது எந்தக்காலத்திலோ; சல்லிகளாகிய தீக்குணமுடைய புல்லர்களைவிட்டுத் தனியாயிருப்பது எந்தக்காலத்திலோ; சாதலுக்கென்றே பிறந்திருக்கின்ற அடியேனும் இந்தச்சமயம் ஆண்டருள் செய்வீரென்று உம்மை நம்பினேன். ஆகையால் வலிமையான இருளை வெல்லுதற்குரிய தேஜஸுள்ளநீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும்.(எ-று)

பேரின்பமானது கடல்போலும் பெருகியது, சொல்லுதற்குக் கூடாததுமென்பார், 'சொல்லரிய சுகவாரியமிழ் துண்டொடுங்கித் துடிப்பொழிவதெக்காலமோ' எனவும்; இறைவனுக்கு ரத்தினமாலையுண்டென்பார், 'சுந்தரச் சோதிமணி மாலையணி மார்பனைத் தொழுவதினி யெக்காலமோ' எனவும்; இறைவன் ஆன்மாக்களிடத்தில் ஆநந்தத் திருத்தாண்டவஞ் செய்தருள வேண்டுமென்பார், 'நல்ல நடனம் புரிந்தாடு கருணாகர னடம்புரிவ தெக்காலமோ' எனவும்; இறைவனுடைய திருவருள் வழிப்பெற்றவர்கள்இறைவனுக்கு முன்நடிக்கவேண்டு

மென்பார், 'நாடிவலுவாகப் பிடித்திழுத் தென்றனேபு நடியென்ட தெக்காலமோ' எனவும்; கெட்ட சிநேகமில்லாமல் தனியாயிருக்க வேண்டு மென்பார், 'சல்லிக் குணங்கெட்ட புல்லர்களை விட்டுத்தனிப பதினி யெக்காலமோ' எனவும்; யாவரும் சாவவேண்டியவர்களே மெ ன்பார், 'சாவப்பிறந்தவடி யேனுமுமை நம்பினேன் சமயமீதாளுதற கே' எனவும்; இறைவனுக்குத் தேஜோமயமுண்டென்பார், 'வல்லிருளை வெல்லுமொளி யுள்ளீர் பின்றொடர வள்ளலிறசூல் வருகவே' என வும்; 'வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிரு கண்மணியே முகியித்தீனே' எனவுங்கூறினர். (3)

நயமே யுறைந்தறிவின் மயமே நிறைந்த பொரு
ளணைவ தெக்கா லமோ
நல்லறிஞர் பின்சாடி யில்லுறவு பிஞ்சோட
நாள்வருவ தெக்கா லமோ
பயமே குறைந்த விருதயமே செறிந்தவினை
பாழாவ தெக்கா லமோ
பாடைதனி லேறுமு னொளித்தோடி யோடியுட்
பதிபுகுவ தெக்கா லமோ
தயவுதந் தெனை யாண்ட தேவரீர் பாதமலர்
தனையணைவ தெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாளு தற்கே
மயிலாடல் போனடன முள்ளீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித்தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டுகண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! நன்மை விளைந்த அறிவினுடைய சொரூபமே நிறைந்த பொருளை நான் சேர்ந்திருப்பது எத்தக் காலத்திலோ; உண்மையான ஞானிகளுடைய பின்னே சென்று அவர்களை உறவுகொண்டு பிஞ்சோடநாள் வருவது எந்தக் காலத்திலோ; பயமானது குறைந்திருக்கின்ற இருதயத்தில் நிறைந்திருக்கின்ற தீவினையானது கெட்டொழிவது எந்தக் காலத்திலோ; பாடையில் ஏறுவதற்கு முன்னேமே ஒளித்து ஒளித்து ஓடி ஓடி அந்தர்ப்பதியில் எழுந்துக்கொள்வது எந்தக் காலத்திலோ, தயவுவைத்து அடியேனை ஆண்டருள் செய்த தேவரீருடைய திருவடித் தாமரைகளை சேர்வது எந்தக் காலத்திலோ; சாதற்கென்றே பிறந்

திருக்கின்ற அடியேனும் இந்தச் சமயத்தில் ஆண்டருள் செய்வீரென்று உம்மை நம்பினேன். ஆகையால் மயிலைப்போல் திருநடனஞ் செய்கின்றநீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வர வேண்டும். (எ-று)

சர்வேஸ்வரன் எவ்வுயிரிலுங் கலந்திருக்கிறானென்பது சகசாகம விருந்தாலும் அவர்களெல்லோராலும் இறைவன் உணரப்படமாட்டா னென்பார், 'நயமேயுறைந்தறிவின் மயமேநிறைந்தபொருளானதை யறிவதெக்காலமோ' எனவும்; உலகத்திலுள்ள ஒவ்வொருவரும் நல்லோரைச் சிநேகிக்கவேண்டுமென்பார், 'நல்லறிஞர் பின்சாடியில்லுறவு பிஞ்சோட நாள்வருவதெக்காலமோ' எனவும்; ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய இருவினைகளையொழிக்கவே முயற்சிசெய்யவேண்டுமென்பார், 'பயமே குறைந்தவிரு நயமேசெறிந்தவினை பாழாவதெக்காலமோ' எனவும்; இறைவனை இறப்பதற்குமுன் வழிபடவேண்டுமென்பார், 'பாடைதனி லேறுமுனெளித்தோடியோடியுட் பதிபுகுவதெக்காலமோ' எனவும்; நன்மை செய்தவர்களுக்கு கைம்மாறுசெய்யவேண்டும் யென்பார், 'தயவுதந் தெனையாண்ட தேவரீர் பாதமலர் தனையணையவதெக்காலமோ' எனவும், மற்றுமுள்ளவைகளை வருந்தியும் கூறினார். (4)

ஊனந் தரும்புகழ்க் கூடான தேகவூற
  வேகுவது மெக்கா லமோ
இன்றுளோர் நாளைக் கிருப்பதும் பொய்யென்ப
  தெய்துவது மெக்கா லமோ
யானையொட் டகமேறு முடலும்லொட லொட்டையென்
  றறிவதினி யெக்கா லமோ
ஆநந்த மானபொரு ளாநந்த மாயடிமை
  யாவதினி யெக்கா லமோ
தானானே தானானே தானானே யென் றுநான்
  றானவ தெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுனை நம்பினேன்
  சமயமீ தாகு தற்கே
வானினுங் கருணைவா னுள்ளநீர் பின்றொடா
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மொன்னிருகண்
  மணியே மூகி॥பித் தீனே

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்

தீனே! துன்பத்தைக்கொடுக்கின்ற புகழ்க்கூண்டாகிய தேகப்பற்று என்னைவிட்டொழிவது எந்தக்காலத்திலோ, இன்றைக்கு இருப்பவர்கள் நாளைக்கு மிருப்பார்கள் என்பது பொய்யாக மனத்திலுறைப்பது எந்தக்காலத்திலோ; யானை, ஒட்டகம் முதலியவற்றில் ஏறித்திரிகின்ற சரீரமும் லொடலொட்டை யென்று உணர்வது எந்தக்காலத்திலோ; ஆநந்தமாதற்குறிய பொருள்கள் ஆநந்தமாய் உனக்கு நான் அடிமைப் படுவது எந்தக்காலத்திலோ; தானுனே தானுனே தானுனே யென்று நான் தானுவது எந்தக்காலத்திலோ; சாவதற்கென்றே பிறந்திருக்கின்ற அடியேனுகிய நானும் உம்மை நம்பினேன்; இந்தச் சமயத்தில் ஆளுதற்பொருட்டே ஆகையால் ஆகாயத்தைவிடக் கருணையுள்ளீர் பின்ருேடா வள்ளலாகவும் இறசூலாவும் எழுந்தருளி வரவேண்டும்.(எ-று)

இவ்விதமாகப் பலநாள் வருந்தியிருக்கின்ற எனக்கு ஒருநாளாவது கிருபைசெய்யக் கூடாதா? என்பது கருத்து. (5)

கடன் மடை திறந்தென் வருண்மடை திறந்தடிமை
கண்குளிர்வ தெக்கா லமோ
கங்கற்ற பேரின்ப வெள்ளத்தின் மூழ்கியென்
கலிதீர்வ தெக்கா லமோ
உடல்குழைய நெக்குருகி விழிநீரு மாருக
வூருவது மெக்கா லமோ
உள்ளுேளே பற்றியெரி யுந்தீயமர்ந் துளமு
முட்குளிர்வ தெக்கா லமோ
சடைவனே மிடைகொண்டு மிடைவனே தேவரீர்
தாம்வருவ தெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாளு தற்கே
வடுவேது மற்றபடி வுள்ளநீர் பின்ருேடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்வியக்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! கடலில் ஒரு மடையிருந்து அதை திறந்தாலன்ன திருவருள் மடையைத்திறந்து அடியேனுகிய என்னுடைய கண்கள் திருவருட் குளிர்ச்சியை யடைவது எந்தக்காலத்திலோ; கரையில்லாத பேரின்பமாகிய வெள்ளத்தில் முழுகி என்னுடைய கலிதீர்வது எந்தக்காலத்திலோ; சரீரமானது குழையவும் எலும்புகளெல்லாம் நெக்குவிட்டும்,

விழிகளில் கண்ணீரும் ஆற்றைப்போல் சுறப்பதும் எந்தக்காலத்திலோ; மனத்துக்குள்ளே பிடித்து எரிகின்ற தீயானது அமர்ந்து என்னுடைய மனமும் உள்ளே குளிர்ச்சியை யடைவது எந்தக்காலத்திலோ; நான் அதனால் சடைவனோ; தரித்திரத்தைக்கொண்டு பின்வாங்குவேனோ; தேவரீர் எனக்குமுன் எழுந்தருளுவது எந்தக்காலத்திலோ; சாவதற்கென்றே பிறந்திருக்கின்ற அடியேனும் இதுசமயம் ஆண்டருள்செய்வீரென்று உம்மை நம்பினேன். யாதொரு குற்றமுமில்லாத ரூபமுள்ளநீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும்.(எ-று) (6)

ஈனமின் ஞானோ தயத்தையென் கண் கண்
டிருப்பதினி யெக்கா லமோ
ஏறாத மேட்டுக்கு முத்துலையி னீரிறைத்
திளையாத தெக்கா லமோ
கோனான குருநாத னும்மடிமை நெஞ்சிற்
குடிகொள்வ தெக்காலமோ
குறைவற்ற தேசோ மயச்செல்வம் வந்துகுதி
கொள்வதுவு மெக்கா லமோ
தானே மகிழ்ச்சிபெற் றோனேயென் றன்னைநீர்
தழுவுவது மெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாளு தற்கே
வானோர் வணங்குநெறி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித்தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! குற்றமற்ற ஞானசொரூப உதயத்தை என்னுடைய கண்கள் கண்டிருப்பது எந்தக்காலத்திலோ; ஏறுதற்குக்கூடாத மேட்டுலையில் நீரை இறைத்து மனமிளைக்கா திருப்பது எந்தக்காலத்திலோ; தலைவனான குருநாதனானவனும் உம்முடைய அடியவனாகிய என்னுடைய மனத்தில் குடியாய் வாசஞ்செய்து கொண்டிருப்பது எந்தக்காலத்திலோ; யாதொரு குறைவுமில்லாத தேஜோமயச் செல்வமானது எழுந்தருளிவந்து நடனமிடுவது எந்தக்காலத்திலோ; தனக்குத்தானே மகிழ்ச்சியையடைந்தவனே! அடியேனைத் தழுவுவது எந்தக்காலத்திலோ; சாவதற்கென்றே பிறந்திருக்கின்ற அடியேனாகிய நானும் இந்தச்

சமயம் ஆண்டருள் செய்வீரென்று உம்மை நம்பினேன் ஆகையால் தேவர்களெல்லாம் வணங்குகின்ற உயர்ந்த தன்மையையுடையநீர் பின்ருேடா வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும்.(எ-று) (7)

இலைசருகு சந்தமூ லங்களா லென்கும்பி
யெரியொழிவ தெக்கா லமோ
என்பெலா நெக்குருகிநிற்குநிலை சொக்கிநின்
றின்புறுவ தெக்கா லமோ
உலையிட்ட மெழுகெனப் பாழான கன்னெஞ்ச
முருகுவது மெக்கா லமோ
ஒடியலை சிந்தையு மாடிய கறங்குபோ
லுழலாத தெக்கா லமோ
சலியாது கான்மலை கடன்மீ துறைந்தருட்
டுணை யணைவ தெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாளு தற்கே
வலியமலை தன்னைநிக ருள்ளநீர் பின்ருேடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமருணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித் தீனே! பச்சையிலை உலர்ந்த சருகு இவைகளைத்தின்று என்னுடைய கும்பியாகிய வயிற்றின் அக்கினியடங்குவது எந்தக்காலத்திலோ; எலும்புகளெல்லாம் நெகிழ்ந்து உருகி நிற்கின்ற நிலையில் சொக்கி யிருந்து இன்பத்தையடைவது எந்தக்காலத்திலே; என்னுடைய பாழ் பட்ட கல்லைப்போன்ற மனமானது உலையிலிட்ட மெழுகைப்போல உருகுவது எந்தக்காலத்திலோ; ஓடியோடி யலைந்து திரிகின்ற மனமும் ஆடுகின்ற காற்றாடிபோல் உழலாமல் நிற்பது எந்தக்காலத்திலோ; யாதொருசலிப்பையுமடையாமல் கால், மலை, கடல் இவைகள்மேல்வாசஞ் செய்து திருவருளைப் பெறுவது எந்தக் காலத்திலோ; சாவதற்கென்றேபிறந்திருக்கின்ற அடியேனும் இந்தச்சமயம்ஆண்டருள்செய்வீரென்றுஉம்மைநம்பினேன் ஆகையால் பலம்பொருந்திய மலையைபோலிருக்கின்றபலமுள்ளநீர் பின்ருேடா வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும்.(எ-று) (8)

எதம்மில் லாதருரு வடிசென்னி மீதெடுத்
தேந்துவது மெக்கா லமோ

ஏழையடி யேனறிவி லாமலுள றுந்தமிழ்க்
கிரங்குவது மெக்கா லமோ
தீதுமத பேதங்க ளற்றுமே யெங்குமிது
செல்வதுவு மெக்கா லமோ
சிறியார் மணற்சோற்றை நிகரிதென் றறிஞர்பிழை
செப்பாத தெக்கா லமோ
சாதிவரை யற்றகுரு நாதனே முத்திநிலை
தருவதினி யெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாளு தற்கே
வாதச்சம யக்கடப் புள்ளநீர் பின்றொடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! குற்றமில்லாத ஞானாசிரியருடைய திருவடிகளை என்னுடைய தலைமேல் எடுத்து வைத்துக்கொள்வது எந்தக்காலத்திலோ; அறிவில்லாதவனான அடியேன் அறிவில்லாமலே உளறுகின்ற தமிழ் பாடல்களுக்கு நீர் மனமிரங்குவது எந்தக்காலத்திலோ; இப்பாடல்கள் குற்றம், மதபேதம் முதலியவைகளொழிந்து எவ்விடத்தும்செல்வது எந்தக்காலத்திலோ; இது சிறுபிள்ளைகளுடைய மணற் சோற்றுக் கொப்பானது என்று அறிவுள்ளவர்கள் இதற்குப் பிழை சொல்லதிருப்பது எந்தக்காலத்திலோ; சாதியில்லாத ஞானாசிரியனே! நீர் முத்திநிலையை எனக்குக் கொடுப்பது எந்தக் காலத்திலோ; சாவதற்கென்றே பிறந்திருக்கின்ற அடியேனும் இந்தச் சமயம் ஆண்டருள் செய்வீரென்று உம்மை நம்பினேன். ஆகையால் வாதஞ்செய்யும் மதங்களைக்கடந்துள்ளநீர் பின்றொடா வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும்.(எ-று) (9)

மக்கநக ராளும்மு கம்மதுர் றசூல் பாதம்
வருவதினி யெக்கா லமோ
வந்தெனது சிந்தைகுடி கொண்டுமகி ழுண்டடிமை
வாழ்வதுவு மெக்கா லமோ
எக்கால மெக்கால மெக்கால மெக்கால
மென்றழுவ தெக்கா லமோ
எக்கால மெந்தையே தேவரீர் கூடவந்
தெனையாள்வ தெக்கா லமோ

தக்கநிலை மீதிலே சொக்கிமண நிற்குமிறு
  சாதருள்வ தெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
  சமயமீ தாளு தற்கே
வக்கீல்கள் பலகோடி யுள்ளநீர் பின்றொடா
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப் போன்றவனே! முகியித்தீனே! மக்காபட்டணத்தை ஆண்டருள் செய்கின்ற முகம்மதுர்றசூல் என்பவருடைய திருவடிகள் எனக்குக்கிடைப்பது எந்தக்காலத்திலோ; வந்து என்னுடைய மனத்தில் குடிகொண்டு மகிழ்ச்சியுடன் அடியேனுன வன் வாழ்வதுவும் எந்தக்காலத்திலோ; எக்காலம் எக்காலம் என்று அழு வதும் எக்காலத்திலோ; தேவரீர்கூட எழுந்தருளிவந்து என்னை யாண் டருள்செய்வது எந்தக்காலத்திலோ; தகுந்த உண்மை நிலையில் என்னு டைய மனமானது சொக்கிநிற்க வழியருள்வது எந்தக்காலத்திலோ; சாவதற்கென்றே பிறந்திருக்கின்ற அடியேனும் இந்தச்சமயம் ஆண்ட ருள் செய்வீரென்று உம்மை நம்பினேன். வக்கீல்கள் பலகோடியுள்ள நீர் பின்றொடா வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டு ம். (எ-று) (10)

அளவிடற் கரிய வரியன காட்சி
வளபல சமுகத்தில் தேறுநின் மகிமையைப்
பலகோடி சீடர் பலரி லொருகோடி
நிலனுறு மடியனு நேர்பெற வருள்கென
முன்னிலைக் குருவா முகியித்தீன்
தன்னிலை நோக்கித் தாழ்ந்துவந் திரத்தல்.

(பொ-ரை) அளவிடுவதற் கருமையான அரியகாட்சியிலுள்ள பல சமுகங்களால் சொல்லப்படுகின்ற உன்னுடைய மகிமையை பலகோடி சீடர்கள் பலபேரில் ஒருகோடி நிலங்களில் பொருந்தின அடியேனும் நேராகப்பெற அருள்வாயென்று முன்னிலைக் குருவாகிய முகியித்தீன் தன்னுடைய உண்மை நிலையைப்பார்த்து தாழ்ந்து வந்து இரத்தல். (எ-று)

## ஆசிரிய விருத்தம்.

ஏகறப் பில்ஆல மீனருட் காளான
  வேழைபங் காளர் கோடி
எங்கள்மகு பூபீன்க ளொருகோடி ஆரிபீ
  னென்பரொண் ணரிய கோடி

சேகுவொலி மார்கண்முறை முறையாக விறுசாது
  தேடிவரு வார்கள் கோடி
திவ்யகுண நிலயவுல மாக்களெதிர் கொண்டுதீன்
  தீனென்று வருவார் கோடி
தேகமழி யாதநற் பாகம் படைத்தமா
  சித்தர்க ளநந்த கோடி
தேவரீர் சீடரடி யேனுமுமை நம்பினேன்
  தீட்சைதந் தாளு தற்கே
மாகோடி சீடர்கணமுள்ளநீர் பின்றொடர
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந்திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித் தீனே! ஏகறப்பில் ஆலமீனருட்காளான ஏழைகளுடைய பங்காளர் கோடி; எங்களுடைய மகுபூபின்களானவர்கள் ஒருகோடி; ஆரிபீனென்பர் எண்ணிதற்கரியகோடி; சேகுவொலிமார்கள் வரிசை வரிசையாக விறுசாதுவைத் தேடிக்கொண்டு வருபவர்கள்கோடி; திவ்வியமான குணத்தையுடைய நிலயவுலமாக்களானவர்கள் எதிர்கொண்டு தீன் தீனென்று சொல்லி வருபவர்கள் கோடி; சரீரமழியாத நல்லபாகத்தைப் படைத்த மகத்தாகிய சித்தர்கள் அநந்தகோடி; இவர்களெல்லாம் தேவரீருடைய சீடர்களாவார்கள். அவர்களில் நானும் உம்முடைய அடியவனுக்கிருக்கிறேன். ஆகையால் இத்தச்சமயம் எனக்குத் தீட்சை செய்வித்து ஆண்டருள் செய்வீரென்று உம்மை நம்பினேன். ஆகையால் அநேக கோடிசீடர் கூட்டங்களையுடைய நீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (1)

அருள்பொழியு ஞானவா நந்தநட னம்புரிந்
  தாடிவரு வார்கள் கோடி
அட்டாங்க யோகநிட் டானுபூ தியர்களே
  யளவற்ற கோடி கோடி
நரர்தொழுந் தவராஜ சிங்கங்கள் கோடி
  நாளுமுள் ளோர்கள் கோடி
நாசச் சரீரத்தை நேசித்த பாசத்தை
  நாசமாக் கினவர் கோடி
சிரம் விரித் தவர்கோடி காம்விரித் தவர்கோடி
  சினமறுத் தவர்கள் கோடி

தேவரீர் சீடராடி யேனுமுமை நம்பினேன்
  தீட்சைதந் தாளு தற்கே
மருவுற்ற மணிமகுட முள்ளநீர் பின்றொடர
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முகியித்தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! திருவருள் பொழிகின்ற ஞானமாகிய ஆனந்த தாண்டவஞ்செய்து ஆடிக்கொண்டு வருபவர்கள் கோடி; அட்டாங்க யோகஞ் செய்பவர்களான நிஷ்டானுபூதியர்களே அளவற்ற கோடி; நரர்களெல்லாம் வணங்குகின்ற தவராஜ சிங்கங்கள் கோடிபேர்கள்; எக்காலத்திலும் இருப்பவர்கள்கோடி; கெட்டுவிடுந் தன்மையுடைய தேகத்தை விரும்பின பாசத்தை நாசமாக்கின பெரியவர்கள் கோடி; தலையைவிரித்திருக்கின்றவர்கள் கோடி; கையை விரித்திருகின்றவர்கள் கோடி; கோபத்தை யொழித்தவர்கள் கோடி; இவர்களெல்லாம் தேவரீருடைய சீடருக்கு அடியேனாகிய நானும் எனக்குத் தீட்சைகொடுத்து ஆளுவீரென்று உம்மை நம்பினேன். ஆகையால் பொருந்திய இரத்தின கிரீடமுள்ளநீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (2)

கதியாசை கொண்டதிக துதிபேசி நின்றெதிர்
  கைகூப்பி நிற்பர் கோடி
கனிவாய் திறந்தருள் பொழிந்திடரோவென்று
  கண்மாரி பொழிவர் கோடி.
பதியாசை முத்திப் பாழாசை யற்றுமுப்
  பாழேத்தி னோர்கள் கோடி
பத்திவை ராக்யமொடு முத்திவழு சென்றநிச
  பத்தர்கோ டானு கோடி
சிதைவற்ற சிந்தையர்க ளோவனந் தங்கோடி
  சின்மயா நந்தர் கோடி
தேவரீர் சீடராடி யேனுமுமை நம்பினேன்
  தீட்சைந் தாளு தற்கே
மதிகோடி போற்பிரபை யுள்ளநீர் பின்றொடர
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! மோட்ச ஆசையைக்கொண்டு அதிக துதிசொல்லியிருந்து எதிரே கைகுவித்து நிற்பவர்கள் கோடிபேர்; கனிந்த திருவாயைத் திறந்து திருவருள் பொழிந்திடரோவென்று கண்களினின்றும் ஆநந்த பாஷ்பம் பொழிபவர்கள் கோடிபேர்; மோட்ச நகரத்து ஆசையைக் கொண்டு இந்தப் பாழாசைவிட்டு முப்பாழைத் துதிசெய்தவர்கள் கோடிபேர்; பத்தியும், வைராக்கியமும், கொண்டு மோட்ச வழியிற் போன உண்மை அடியார்கள் கோடாநு கோடிபேர்; யாதொரு சிதைவுமில்லாமல் மனமுடையவர்களோ அநேக கோடிபேர்கள்; சின்மயாநந்த முள்ளவர்கள் கோடி; தேவரீருடைய சீடருடைய அடியேனும் இந்தச் சமயம் தீட்சைசெய்து ஆண்டருள் செய்வதற்பொருட்டு உம்மை நம்பினேன் ஆகையால் கோடி சந்திரர்களைப்போல் பிரகாசமுள்ள நீர் பின்றொடா வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வர வேண்டும். (எ-று) (3)

நடனமிடு வாசிதனி லேறிவரு வார்கோடி
  நாடாளு மன்னர் கோடி
நாதாந்த மூர்த்தியர்கள் கோடிநன் மவுனகுரு
  நாதாக்கள் கோடி கோடி
திடஞான வைராக்ய வான்கள் பல கோடிநற்
  றிவ்ய ஞான வான்கள் கோடி
சிந்தையற நீக்குதிற மிக்கவொரு மிக்குநிலை
  சென்ற நிலை யோர்கள் கோடி
செடிகாடு தனிலுறைந் திலைசருகு பக்ஷணஞ்
  செய்தலைந் தோர்கள் கோடி
தேவரீர்சீடரடி யேனுமுமை நம்பினேன்
  றீட்சைதந் தாளு தற்கே
மடலவிழ்மலர்ப்பாத முள்ளநீர் பின்றொடா
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! நடனமிடுகின்ற சரத்தின்மேல் ஏறிக்கொண்டு வருபவர்கள் கோடிபேர்; நாட்டையரசாளும் இராஜாதி இராஜர்கள் கோடிபேர் நாத தத்துவத்தின் அந்தத்தில் வாழ்கின்றவர்கள் கோடிபேர்; நல்ல

மௌனகுருவின் நாதாக்கள் கோடிபேர்; திடமான ஞானவைராக்கிய முள்ள பலவான்கள் பலகோடிபேர்; உயர்ந்ததிவ்விய குணமுள்ளவர் கள் கோடிபேர்; மனமிறக்க நீக்குகின்ற திறமைமிகுந்த ஒருமிக்கு நிலையில்போன உண்மை நிலையிலுள்ளவர்கள் கோடிபேர்; காடுகளிலும், செடிகளிலும் வாசஞ்செய்து இலைசருகு முதலியவற்றைத் தின்று அலைந்தவர்கள் கோடிபேர்; இப்படிப்பட்ட தேவரீருடைய சீடர் களுக்கு அடியவனான நானும் நீர் இந்தச்சமயம் ஆண்டருள் செய்வீ ரென்று உம்மை நம்பினேன். ஆகையால் இதழ்கள் விரிந்த மலர் போ லுந் திருவடிகளையுடைய நீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (4)

நாசமா மோசதுன் பங்கடரு சம்பத்தை
  நழுவவிட் டவர்கள் கோடி
நாரியென் னுந்தூண்டி லின்மச்சமாகாத
  நடனவல் லாசர் கோடி
ஆசைக் கடன்மீதி லோடியக் கரைகாணு
  மக்கரைக் காரர் கோடி
அவ்வருகு மிவ்வருகு மெவ்வருகுமுந்திவந்
  தாடிவரு வார்கள் கோடி
தேசோ மயாநந்த ஜெயவீர வாண்பிள்ளை
  சிங்கங்கள் கோடி கோடி
தேவரீர் சீடரடி யேனுமுனை நம்பினேன்
  றீட்சைதந் தாளு தற்கே
வாசமெனை யினும்வாச முள்ளநீர் பின்றொடர
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமருணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித் தீனே! நாசமாகிய மோகமென்னுந் துன்பங்களைக் கொடுக்கின்ற சம் பத்தை அறவேவிட்டவர்கள் கோடிபேர்; பெண்களென்கிற தூண்டி லில் மச்சம்போல் சிக்கிக்கொள்ளாத திருநடனவல்லாசர்கள் கோடி பேர்; ஆசையென்னும் சமுத்திரத்தில் ஓடி அந்தக்கரையைக் காண வேண்டுமென்கிற அக்கரையுள்ளவர்கள் கோடிபேர்; எந்த விடத்திலும் முன்னிட்டுவருபவர்கள் கோடிபேர்; தேஜோமயத்தையுடைய ஆநந்த ஜெயவீர ஆண்பிள்ளைச் சிங்கங்கள் கோடிபேர்; இப்படிப்பட்ட தேவரீ ருடைய சீடர்களுக்கு அடியேனாகிய நானும் இந்தத் தீட்சைதந்தாளுவீ

றொன்றுஉம்மை நம்பினேன். ஆகையால் எல்லா வாசனைகளிலும் மிக்க வாசனையுள்ள நீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும்.(எ-று) (5)

பொன்னாசை பெண்ணாசை மண்ணாசை மண்ணா
பூரண நந்தர் கோடி
புவிராஜர் கோடிமெய்த் தவராஜர் கோடிநற்
புனிதகவி ராஜர் கோடி
மென்னிமுட் டக்கண்ட மட்டு மருள் வாரியில்
வீழ்ந்து மூழ் குவர்கள் கோடி
வேதவே தாந்திகளு மொருகோடி மெய்ஞ்ஞான
வீடடைந் தோர்கள் கோடி
சின்னவெனை யொத்தவே ழைகளநந்தங்கோடி
சின்னவெனி லேழை கோடி
தேவரீர் சீடராடி யேனுமுமை நம்பினேன்
றீட்சைதந் தாளு தற்கே
வன்னமணி மலர் மாலை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! பொன்னின்மேல் ஆசையும், பெண்ணின் மேல் ஆசையும், மண்ணின் மேல் ஆசையுமான இவைகளை யெல்லாமொழித்த பூரண இன்பத்தை யடைந்தவர்கள் கோடிபேர்; பூமியை ஆண்டராஜாக்கள் கோடிபேர்; உண்மையான தவசிரேஷ்டர்கள் கோடிபேர்; நல்ல பரிசுத்தத்தையுடைய கவிராயர்கள் கோடிபேர்; மென்னியிலிருந்து கண்டம் வரைக்கும் திருவருள் சமுத்திரத்தில் விழுந்து முழுகுகின்றவர்கள் கோடிபேர்; வேதவேதாந்திகளுங் கோடிபேர்; உண்மையான ஞான வீட்டை யடைந்தவர்கள் கோடிபேர்; சிறியவனான என்னைபோன்ற ஏழைகளாயுள்ளவர்கள்கோடிபேர்; என்னைவிட ஏழைகளாயுள்ளவர்கள் கோடிபேர்;இப்படிப்பட்டவர்களெல்லாம் தேவரீருக்குச் சீடர்களாயிருக்கின்றார்கள் ஆகையால் அடியேனாகியநானும் நீர் தீட்சைசெய்து ஆண்டருள் செய்வீரென்று உம்மை நம்பினேன். ஆனது பற்றி பலவர்ணமான அழகிய மலர் மாலையையுடைய நீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும்.(எ-று)

இறைவனே தேவரீருக்கு சகல பற்றுக்களையும் விட்டவர்களெல்லாம் அடியார்களாயிருக்க அந்தக் குணத்தையடைந்திராத நானும்

உமக்கு அடியவனுகவிரும்புகின்றேன். ஆகையால் என்னை யாண்டருளுதற்பொருட்டு எழுந்தருளி வரவேண்டும் என்பது கருத்து. (6)

அண்டகோ டிகளுமோ ரணுவைத் துளைத்ததி
லடக்கவல் லவர்கள் கோடி
அறமியற் றுநர்கோ சரமுயற் றுநர்கோடி
யாளான பேர்கள் கோடி
தொண்டர்சில கோடிபுய ரண்டர்பல கோடிநற்
றுறவோ ரநந்த கோடி
சோதிகண் டுச்சிவெளி சென்றபா னப்பெரிய
தொண்டிகண் டோர்கள் கோடி
செண்டென்ன வகிலமே யையுமெடுத் தாட்டிச்
சிரித்துவருவார்கள் கோடி
தேவரீர் சீடரடி யேனுமுமை நம்பினேன்
தீட்சைதந் தாளு தற்கே
வண்டுலவு மலர்மாலை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே? ஒரு அணுவில் தொளையிட்டு அந்தத் தொளையில் சர்வ அண்டங்களையும் அடக்க வல்லமையுடையவர்கள் கோடிபேர்; தர்மஞ் செய்யவர்கள் கோடிபேர்; கலைப்பழக்க முள்ளவர்கள் கோடிபேர்; பரிபக்குவதசையை யடைந்தவர்கள் கோடிபேர்; தொண்டர்களாயுள்ளவர்கள் கோடிபேர்; உயர்ந்ததேவர்களுடைய தலைமையைப்பெற்றவர்கள்கோடிபேர்; நல்ல துறவறத்தை யடைந்தவர்கள் கோடிபேர்; சோதிதெரிசனஞ்செய்து உச்சியான ஆகாயத்திற்போய் அபான தொண்டியைக் கண்டு விட்டவர்கள்கோடிபேர்; ஏழுலகங்களையும் செண்டைப் போலெடுத்து ஆட்டிச்சிரிப்புடன் வருபவர்கள் கோடிபேர்; இப்படிப்பட்டவர்களெல்லாம் தேவரீருக்குச் சீடர்களாயிருக்க நீர் தீட்சைசெய்து ஆண்டருள் செய்யென்று ஏழையாகிய அடியேனும் உம்மை நம்பினேன். ஆகையால் வண்டுகள் மொய்க்கின்ற மலர் மாலையையுள்ள நீர்பின்தொடர வள்ளலாகவும் இரசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

இறைவனே! தேவரீருக்கு சர்வ வல்லமையுமிருப்பதால் அடியேனையும் ஆண்டருள் செய்ய வேண்டும் என்பது கருத்து. (7)

சாசுவத வாநந்த ஞானபத யோகநிலை
சார்ந்தநிறை யோர்கள் கோடி
சர்வபரி பூரணப் பெரியபொரு ளைத்தொழுஞ்
சகசநிட் டையர்கள் கோடி
நாசிநுனி மீதுநட னம்புரிதல் கண்டுபுன்
னகைகொண்டு வருவர் கோடி
நாதமுங் கீதமும் வேதமும் மோதிநன்
னடனமிடு வார்கள் கோடி
தேசுறும் பரவெளியை மனவெளியி னுட்கொண்ட
தேசிக ரநந்த கோடி
தேவரீர் சீடரடி யேனு முமை நம்பினேன்
றீட்சைதந் தாளு தற்கே
வாசக நிறைந்த நிறை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித்தீனே! என்றைக்கும் அழியாத ஞான பாதத்தையுடைய யோகநிலையைச்சேர்ந்த பரிபூரண குணத்தையுடைவர்கள் கோடிபேர்; சர்வ பொருள்களிலும் நீக்கமில்லாமல் நிறைந்திருகின்ற பெரிதான பொருளை வணங்குகின்ற சகச நிஷ்டையை யடைந்தவர்கள் கோடிபேர்; மூக்கின் நுனியின் மேல் நடனஞ் செய்வதைக்கண்டு புன் சிரிப்பை யடைந்து வருபவர்கள் கோடிபேர்; நாதமும் கீதமும் வேதமும் சொல்லி நல்ல நடனஞ் செய்பவர்கள் கோடிபேர்; தேஜஸமைந்த பரவெளியை மனோவெளியினூடு கொண்ட ஆசிரியர்களாவார்கள் அநேக கோடிபேர்; இவர்களெல்லாம் தேவரீருக்குச் சீடர்களாயிருப்பவர்கள். ஆகையால் அடியேனாகிய நானும் உம்மை தீட்சைகொடுத்து ஆண்டருள் செய்வீரென்று நம்பினேன். ஆனது பற்றி வேதவாசகமானது நிறையுள்ள நீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

இறைவனே! தேவரீருக்கு நன்மார்க்க வழிகளில் சேர்ந்த அநேக கோடிமாணாக்கர்கள் இருப்பதைநோக்கி உம்மை யடைக்கலமடைந்தேன். ஆகையால் நீர் என்னை ஆண்டருள் செய்ய வேண்டும் என்பது கருத்து. (8)

அவனன்றி யோரணுவு மசையாத தென்றறிந்
தசைவற் றிருப்பர் கோடி
அகிலாண்ட கோடிக ளனைத்துங் கணத்தில்விளை
யாடிவரு வார்கள் கோடி
நவநாத சித்தியும் முத்தியும் மெத்திசையு
நற்றவம் செய்வர் கோடி
நாதனே யுமதுபா தாரவிந் தங்களே
நாடினே னென்பர் கோடி
சிவஞான வருளைசர் கோடானுகோடியுப
தேசிக ளநந்த கோடி
தேவரீர் சீடாடி யேனுமுமை நம்பினேன்
றீட்சைதந் தாளு தற்கே
மவுனகம னக்குளிகை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னூர் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப்போன்றவனே! முகியித் தீனே! அவனல்லாதபடி ஒரு அணுகூட அசைய மாட்டாதென்றுணர்ந்து யாதொரு தொழிலிலும் அசைவில்லாமலிருப்பவர்கள் கோடிபேர்; சர்வ அண்ட கோடிகளையும் க்ஷணநேரத்தில் விளையாடி வருபவர்கள் கோடிபேர்; நவநாத சைகூடுதலையும் முத்தியையும் பற்றி எந்தத் திசையிலும் உயர்ந்த தவம் செய்பவர்கள் கோடி பேர்: தலைவனே! உன்னுடைய திருவடித்தாமரைகளையே நாடினேன் என்றிருப்பவர்கள் கோடிபேர்; சிவஞானத்தை யடைந்த திருவருளில் விருப்பமுள்ளவர்கள் கோடிபேர்; உபதேசஞ் செய்பவர்கள் கோடி பேர்; இவர்களெல்லாம் தேவரீருக்குச் சீடர்களாயுள்ளவர்கள். ஆகையால் அடியேனையும் அவ்விதமே கொண்டு தீட்சைசெய்து ஆண்டருள் செய்வீரென்று உம்மை நம்பினேன். ஆகையால் மௌனகமனத்திற்குத் தகுந்த குளிகையைப் பெற்றிருக்கின்ற நீர் பின்றொடர வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளிவரவேண்டும். (எ-று)

பலமார்க்கங்களிலும் தேர்ச்சியடைந்த அநேக கோடி சீடர்களை வைத்திருக்கின்ற நீர் என்னையும் ஒரு அடிமையாக்கி யாண்டருள் செய்வீரென்று உம்மை நம்பினேன். ஆகையால் என்னைக் கைவிடாமல் ரட்சிக்க வேண்டும் என்பது கருத்து. (9)

முகில்கவியு நபிஞர்மு கம்மதுர் றசூலென்று
முத்தொளியி தென்பர் கோடி

மோனகுரு வானசுல்த் தானப்துல் காதிறு
முகியித்தீ னென்பர் கோடி.
மகுபூபு சுபுகானி யென்றபேர் வாழிமேல்
வாழியென் பார்கள் கோடி.
வாக்காலும் வாசகத் தாலுமுமை வாழ்த்துவார்
வாழியென் பார்கள் கோடி.
ஜெகஜோதி யானசிற் பரன்வாழி ஜெயஜெயா
ஜெயஜெயா வென்பர் கோடி.
தேவரீர் சீடராடி யேனுமுமை நம்பினேன்
தீட்சைதந் தாளு தற்கே
வருதாதை யாளும்வாழ் வுள்ளநீர் பின்றொடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழ மென்னிருகண்
மணியே முகியித் தீனே.

(பொ-ரை) வளருகின்ற திருவருளானது நிறைந்திருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய இரண்டு கண்களின் மணியைப் போன்றவனே! முகியித்தீனே! மேகங்கள் கவிகின்ற நயினார் முகம்மதுர்றசூல் என்கிற முத்தைப்போன்ற ஒளி இது என்று சொல்லுபவர்கள் கோடிபேர்; மோனஞானத்தை யடைந்த குருவான சுல்தான் அப்துல் காதிறு முகியித்தீன் என்று சொல்லுபவர்கள் கோடிபேர்; மகுபூபுசுபுகானி என்கிற பேர் வாழக்கடவது அதற்கு மேற்பட்ட பொருளும் வாழக்கடவது என்று சொல்லுபவர்கள் கோடிபேர்; வாயாலும் வசனத்தாலும் உம்மைவாழ்த்துகின்றவர்களும் வாழி என்று சொல்லுபவர்களும் கோடிபேர்; மிகுந்த ஜோதியையுடைய ஞானவான் வாழி. ஜெய ஜெய! ஜெய ஜெய!! என்று வாழ்த்துபவர்கள் கோடிபேர்; இவர்களெல்லாம் தேவரீருக்குச் சீடர்களாயிருப்பவர்கள் ஆகையால் அடியேனாகிய நானும் உம்மை தீட்சைசெய்து ஆண்டருள் செய்வீரென்று நம்பினேன். ஆனது பற்றி வருதாதை யாண்டருள் செய்கின்ற வாழ்க்கையுள்ள நீர் பின்றொடா வள்ளலாகவும் இறசூலாகவும் எழுந்தருளி வரவேண்டும் (எ-று)

இறைவனே! தேவரீருக்கு அநேக கோடி சீடர்கள் இருப்பத்தைக் கண்டே அடியேனாகிய நானும் உம்மை நம்பினேன். ஆகையால் என்னை ஆண்டருள் செய்யவேண்டும் என்பது கருத்து. (10)

ஆ பாடல்-114.

## முகியித்தீனாண்டவர்பேரிற் பாடிய கொச்சகம்.

அழுக்கைத் துடைத்தணைக் கலைத்துமடி மீதுவைத்தும்
புழுக்கைக் குணமெனக்குப் போனதில்லை யாகையினால்
தழைக்குங் குணங்குடிக்கென் றந்தையே வந்திடுவேன்
பழிக்காம லேழைமுகம் பாருமுகி யித்தீனே.

(பொ-ரை) முகியித்தீனே! என்னுடைய மாயையாகிய அழுக்கைப் பலதரமும் துடைத்து மடியின் மேல் வைத்தும் என்னுடைய புழுக்கைக் குணமானது போவதேயில்லை. ஆகையால் தழைக்கின்ற குணங்குடி என்னும் ஸ்தலத்திற்கு தந்தையே! நான் உம்மிடத்தில் வருவேன் அப்போது இவன் இப்படிப்பட்ட வனாயினனே என்று எண்ணி என்னை அவமதித்து விடாமல் எழையாகிய என்னுடைய முகத்தைப் பார்த்தருள வேண்டும்.(எ-று)

இறைவனே! அடியேனுடைய மாய்கையைப் பலமுறையும் நீர் ஒழிக்க அநுக்கிரகித்தும் நான் அதை நீக்கிக்கொள்ளாமையால் என்னை வெறுக்காமல் ஆண்டருள வேண்டும் என்பது கருத்து. (1)

பட்டதுவுங் கெட்டதுவும் பாய்முடைந்து விற்றதுவும்
வெட்ட வெளியாய் விடிந்துமின்னம் பாருமையா
கொட்டமெல்லாம் விட்டுக் குணங்குடிகொள் ளாவீணர்
இட்டமென்னை விட்டொழிவ தில்லைமுகியித்தீனே.

(பொ-ரை) முகியித்தீனே! நான் பட்டபாடும் நான் கெட்டதும் நான் ஓலையால் பாய் முடைந்து விற்றதும் யாவருக்கும் என்க்கும் வெட்ட வெளியாய் விடிந்தும் துன்பங்களை யெல்லாம் விட்டு குணங்குடி நாதரையடையாத வீணருடைய இஷ்டமானது என்னைவிட்டு ஒழிவதில்லை ஆகையால் என்னுடைய முகத்தை இன்னும் பார்த்தருள வேண்டும். (எ-று)

நான்பட்ட பாடெல்லாம் எனக்குத் தெரிந்திருந்தும் இன்னும் வீணர்களுடைய சிநேகமிருக்கிறது. ஆயினும் அதைப்பொறுத்து எனக்குத் திருவருள் செய்ய வேண்டும் என்பது கருத்து. (2)

நாட்டுறவஞ் சாதிருந்து நம்பிகொலை செய்துமென்னை
ஓட்டாண்டி யாக்கியும் விட்டொழிவதில்லை பாருமையா
கூட்டாவென் கூடக் குணங்குடிக்கு வாரவரை
ஓட்டாமல் வீணரைவிட் டோட்டுமுகி யித்தீனே.

(பொ-ரை) முகியித்தீனே! நாட்டமாக அஞ்சாதிருந்து நம்பிக் கொலைசெய்தும் என்னை ஓட்டாண்டியாக்கியும் விட்டு ஒழிவதில்லை என்னுடன் கூடக்குணங்குடிக்கு வருபவரை விட்டு ஓட்டாமல் வீணரை மாத்திரம் ஓட்டிவிடு.

துஷ்டரை விலக்கி விட வேண்டும் என்பது கருத்து. (3)

மேலாங் குணங்குடியின் மெய்ஞ்ஞான வீடுசென்று
நாலாம் படியேறி நானொளித்தி ருப்பனையா
வாலாய மாகவங்கே மவுன மலரணைமேல்
மாலா யெனையணையவாருமுகி யித்தீனே.

(பொ-ரை) முகியித்தீனே! உயர்வான குணங்குடியில் உண்மை ஞானவீட்டைச்சென்று நாலாவது படியாகிய துரியப்பதத்திலேறி நான் ஒளித்துக்கொண்டிருப்பேன், ஐயா! வழக்கமாக அவ்விடத்தில் மவுனமானபுஷ்பவணையின் மேல் இஷ்டங்கொண்டு என்னைச்சேர வர வேண்டும். (எ-று)

இறைவனே! தேவரீர் அடியேனை ஆண்டருள் செய்ய எம்மிடத்தில் எழுந்தருளி வரவேண்டும் என்பது கருத்து. (4)

ஆ பாடல்-118.

# அகத்தீசன் சதகம்.

## குருவணக்கம்.

அவற்றுண் முறைவழி யருந்தம் யோகம்
எவற்றினு முந்திய தியல்புடை யாசான்
நன்னயக் கருணை நனிகூரன் பால்
இன்னய மந்திர மியைதலா தலினால்
திருவருள் பெறுவான் சிந்தித்து மெய்ம்மைக்
குருவருள் வேண்டிக் குறைபிரந் துயர்த்தது.

(பொ-ரை) முன்னர் கூறியவற்றுள் முறையாகவும் வழிக்கிரமமாகவும் அருமையான தவம், யோகம் எவற்றிலும் முதன்மையான லட்சணமுடைய குருவின் நன்மை மிகுந்த கிருபையானது மிகவும் அதிகப்பட்ட அன்பினால் இனிமையான நயத்தையுடைய மந்திரமானது ஏற்படுத்தினால் திருவருளையடைவதற்கு எண்ணி உண்மையாகிய ஞானாசிரியனுடைய திருவருளை விரும்பி அவரிடத்தில் குறைகளைச் சொல்லி உயர்த்தியது இதுவாகும். (எ-று)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

குணங்குடி யார்நற் குணங்குடித் தோங்கக்
கொடுகொடென் றடிக்கடி குணங்குணங்
குணங்குடி யார்நற் குணங்குடி போகக்
குணமெலாந் திரண்டருள் பரப்பிக்

குணங்குடி யேறிக் குறைவற நிறைந்து
குணக்கட லானமெய்ஞ் ஞானக்
குணங்குடி வாழு மகத்தீச ஞமென்
குருபதஞ் சிரத்தின் மேற் கொள்வாம்.

(பொ-ரை) நற்குணத்தில் குடியாயிருப்பவர் நல்ல குணத்தைப் பெற்று ஓங்கவும், கொடு, கொடு என்று அடிக்கடி வருந்தும் குணங் குடியாருடையதுர்க்குணங்களெல்லாம் குடிகெட்டோடவும் நற்குணங்க ளெல்லாம் இரண்டு திருவருளைப்பரப்பி குணங்குடியில் ஏறி யாதொரு குறைவுமில்லாமல் நிறைந்து' குணக்கடலாகிய உண்மை ஞானத்தைப் பெற்றிருக்கின்ற குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் வாழ் கின்ற அகத்தீஸ்வரனை என்னுடைய ஞானசிரியனுடைய திருவடி களை எம்முடைய தலையின்மேல் தாங்கிக் கொள்ளுவோம் (5)

---

முதலாவது

# குருவருணிலை.

மனத்தைத் தழுவித் தற்காத்துச் சீராடச் செல்வப்பால்
கொடுத்துப் படுக்கவைக்க வரவேண்டும்.

தாயனைய வின்பந் தனைத்தந்து தந்துகை
தழுவிநின் றருள்பு ரியவுந்
தந்தைதா யுந்தானு மாகவு மிருந்தெனைத்
தற்காத்து னருள்பு ரியவுஞ்
சேயென் றிரங்கியணை காலியின் கன்றெனச்
சீராட வருள்பு ரியவுஞ்
செங்கீரை யாடுசிறு மதலைபோற் கொஞ்சிநான்
செல்வமிட வருள்பு ரியவும்
பாயுமடை கால்கண்டு கரைபுரள வருமதிப்
பால்கொடுத் தருள்பு ரியவும்
பக்குவத் தோடுமவு னத்தொட்டி லுக்குட்
படுக்கவைத் தருள்பு ரியவும்
வாயுவைக் கட்டவுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே,

(பொ-ரை) தவத்தில் மிகுந்தவராகிய ராஜசிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தின்கண் வாழ்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனஞானகுருவே! தாய்கொடுக்கின்ற இன்பம்போன்ற இன்பத்தைக் கொடுத்துக் கொடுத்து கையால் தழுவியிருந்து திருவருள் செய்யவும், தகப்பனும் தாயும்தானுமாகவுமிருந்து என்னைக்காத்து உன்னுடைய திருவருளைக் கொடுக்கவும், பிள்ளையென்று மனமிரங்கி அணைகின்ற காலிபசுவின் கன்றைப்போல் சீர்செய்ய வருள்புரியவும், செங்கீரையாடுகின்ற சிறு குழந்தைப்போல் கொஞ்சி நான் செல்வ மிகுதற்கு அருள்புரியவும், பாய்கின்ற மடையானது கால்கண்டு கரையானது புரளவரும் மதிப் பாலைக்கொடுத்து அருள்புரியவும், வாயுவினைக்கட்டவும் என்றன் சமீபத்தில் வந்தருளவேண்டும். (எ-று)

இறைவனே! எனக்குச் சகலவித நன்மைகளையுந் தந்து ரட்சிக்க வேண்டும் என்பது கருத்து. (1)

கனமிடையாமலொண்ணுமற் பதைத்திடாது பார்த்து
மனமுவந்து வருஷிக்க வரவேண்டும்.

எந்தலையி லிட்டவிதி யென்னமோ வென்னநா
னிடையாம லருள்பு ரியவும்
என்செய்தே னென்றடிமை யெண்ணாத வெண்ணங்க
ளெண்ணும லருள்பு ரியவும்
பந்தமதி லிட்டமெழு கென்னநெஞ் சுருகிப்
பதைத்திடா தருள்புரியவும்
பாவியா காதெனைக் கருணைநய னங்கொண்டு
பார்த்துநல் லருள்பு ரியவும்
மந்திரங் கொண்டுமாங் காய்விழா தாதலான்
மனமுவந் தருள்பு ரியவும்
மாரியினு நின்கருணை மாரியனு மாறுது
வருஷிக்க வருள் புரியவும்
வந்துபணி வார்க்குதவு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதேசிகநா தனே.

(பொ-ரை) வந்து திருவடிகளை வணங்குபவர்களுக்கு அருள்செய்கின்ற தவராஜசிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் வாழ்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனஞானகுருவே! என்னுடைய தலையில் போட்டவிதி என்னமோவென்ன நான் பின்னிடையாமல் திருவருள் புரியவும்,என்ன

செய்தேனென்று அடிமையானவன் எண்ணாத எண்ணங்களெல்லாம் எண்ணாமல் அருள்புரியவும், அக்கினியிலிட்ட மெழுகைப்போல் நெஞ்ச மானது உருகிப் பதைக்காமல் அருள்புரியவும், பாவியாகாமல் என்னைக் கருணைக் கண்கொண்டு பார்த்து நல்ல அருள்புரியவும், மந்திரத் தினால் மாங்காய் விழுமாட்டாதாதலால் மனஞ்சந்தோஷித்தருள் புரிய வும், மழையினும் உன்னுடைய கிருபை மழையானது அணுவளவும் மாறாமல் வருஷிக்க அருள் புரியவும், எம்மிடத்தில் எழுந்தருளி வர வேண்டும். (எ-று)

பலவகைப்பட்ட விதமாக என்னை ஆண்டருள் செய்யத் தேவரீர் எழுந்தருளி வரவேண்டும் என்பது கருத்து. (2)

மனந்தாளுகச் சாகாவென்ற நாடோறும் நகைத்திடாது
தொழும்புகொண்ட துரையே வரவேண்டும்.

தாயாயு மென்றந்தை தாளுயு நின்றுநீ
தானாக வருள்பு ரியவும்
தாபந்த மெல்லா மறிந்தநீ நிஷ்டைச்
சகாவென்ற வருள்பு ரியவும்
நாயடிய னுய்யும் பொருட்டாக ரட்சித்து
நாடோறு மருள் புரியவும்
நச்சுநச் சென்றெனை யாற்றுரு னென்றெனை
நகைத்திடா தருள்பு ரியவும்
தூயனே மாயனே நேயனே தாயனே
தொழும்புகொண் டருள்பு ரியவும்
தோலா வழக்கனிவ னென்றுசொல் லாமலென்
றுரையேயு னருள்பு ரியவும்
வாய்மொழி மறக்குமுன் றவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) தவராஜசிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடையஅகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனஞானகுருவே! தாயாகியும் என் னுடைய தந்தையாகியும் இருந்து நீயாக அருள்புரியவும், என்னுடைய தாபந்த மெல்லாவற்றையும் உணர்ந்த நீ நிஷ்டைகளை அருள்புரியவும், நாயைப் போன்ற அடியேனை நான் பிழைக்கும்பொருட்டாக ரட்சி த்து அநுதினமும் அருள்புரியவும், நச்சு நச்சு என்று என்னைத்தொந் தரை செய்யாமலும் நகைக்காமலும் அருள்புரியவும், தூயனே! மாய னே! நேயனே! தாயனே! என்னை அடிமைகொண்டு அருள்புரியவும்,

தோல்வியடையாத வழக்கன் இவனென்று சொல்லாமல் என்னுடைய துரையே உன்னுடைய அருள்புரியவும், வாய்ச்சொல்லை மறப்பதற்கு முன் எனக்கு சமீபத்தில் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (3)

மனமிடையா தின்ப முறைந்திட ஓய்ந்திடாது
குன்றுகுகை யருளவர வேண்டும்.

என்றடிமை யாளாவ தென்றெணி யெணிக்கருத்
திடையாம லருள் புரியவும்
இரவுபக லாயிடை யறாதுருகி நாடிநல்
லின்பமுற வருள்பு ரியவும்
உன்றிருப் பொன்னடியு மென்றன் சிரத்தே
யுறைந்திடற் கருள்பு ரியவும்
ஓடாம லோடியா னுலகைவலம் வந்துகா
லோய்ந்திடா தருள்பு ரியவும்
குன்றங்க டோறுமலை யாதுகுகையுள்ள நற்
குன்றொன்றை யருள்பு ரியவும்
குருமூர்த்த மாயிருந் துபதேச மோதியக்
குகையுள்வைத் தருள்பு ரியவும்
மன்றுணின் றாடுமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மௌனதே சிகநா தனே.

(பொ-ரை) அம்பலத்திலிருந்து நடமாடும் தவராஜசிங்கமே! மகத்தாகியகுணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌன ஞானகுருவே! அடிமையான நான் என்றைக்கு உனக்கு ஆளாவதென்றெண்ணி யெண்ணி மனமிடையாமல் அருள்புரியவும், அகோராத்திரம் இடைவிடாமல் உருகி நாடி நல்ல சுகத்தையடைய அருள் புரியவும், உன்னுடைய அழகிய பொன்னடியும் என்னுடைய தலையில் இருப்பதற்கு அருள்புரியவும், ஓடாமலோடியான் இவ்வுலகத்தை வலமாக வந்து கால் ஓய்ந்துவிடாமல் அருள்புரியவும், மலைகளிலெல்லாம் அலையாமல் குகையுள்ள நல்ல மலை ஒன்றை யருள்புரியவும், ஆசாரிய மூர்த்தியாய் எழுந்தருளி உபதேசஞ்செய்து அந்தக் குகைக்குள் என்னை வைத்து அருள்புரியவும், என்னிடம் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (4)

மனத்தில் மார்க்கவகை மாழ்வித்துச சுடர் சூக்ஷமமளித்து
அகமுவந் தாதரித்தருள வரவேண்டும்

வகையொன்று மறிகிலே னிறைவனே சன்மார்க்க
வகையொன்றை வருள் புரியவும்

வாழிமேல் வாழியென வாக்குக் கொடுத்தென்னையும்
வாழ்வித்து னருள்பு ரியவும்
சுகசுகா தீதச் சுயஞ் சோதியா யெடுஞ்
சுடரிடற் கருள்பு ரியவுஞ்
சும்மா விருக்கவுஞ் சொல்லாத சூட்சாதி
சூட்சமெற் கருள்பு ரியவும்
அகமகிழ்ந் திடவும்வஞ் சகமகன் றிடவுநின்
னகமுவந் தருள்பு ரியவும்
அஞ்சாத டாவென்று நெஞ்சோ டணைத்தனைத்
தாதரித் தருள்புரியவும்
மகிழா மகிழ்ச்சி யொடு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) தவராஜசிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீசுரனே! மௌனஞான குருவே! இறைவனே! யாதொருவகையையும் அறியமாட்டேன், ஆகையால் சன்மார்க்க வகையொன்றை அருள்புரியவும், வாழி யினிமேல் வாழி என்று வாக்குக் கொடுத்து என்னையும் வாழ்வித்து அருள்புரியவும், சுகசுகாதீதம், சுயஞ்சோதி இவைமுதலியவைகளால் எழுகின்றசுடர் இடுதற்கு அருள்புரியவும், சும்மாவிருப்பதற்கும் சொல்லாத சூட்சாதி சூட்சமொன்று அருள் புரியவும், மனம் சந்தோஷித்திடவும், கபடம்ஒழியவும் உன்னுடைய மனஞ் சந்தோஷித்து அருள் புரியவும் பயப்படவேண்டா மென்று மனத்தினோடணைத்து ஆதரித்து அருள்புரியவும், மகிழாத மகிழ்ச்சியுடன் என்றன் அருகே எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

சகல விதமாக எனக்கு அருள்புரிந்து ஆதரிக்கவேண்டும் இறைவனே! என்பது கருத்து. (5)

மனத்தினியற்கை யெந்நாளும் வாய்த்திட மாறுமற்
போதுமெனப் பொங்கவர வேண்டும்.

ஈசனே யன்பர்க்கு நேசனே நின்கருணை
யியற்கையோ டருள்பு ரியவும்
எம்பிரா னேயெமக் கிறைவனே நின்கருணை
யெந்நாளு மருள்பு ரியவும்
வாசனே ஞானோப தேசனே நின்கருணை
வாயத்திடற் கருள்பு ரியவும்

வாகனே யோகனே யேகனே நின்கருணை
மாறும லருள்பு ரியவும்
போஜனே போஜமக ராஜனே நின்கருணை
போதுமென வருள்பு ரியவும்
பூரணா னந்தமே சொந்தமாய் நின்கருணை
பொங்கநின் றருள்பு ரியவும்
மாசங்க டோறு மெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
பவுனதே சிகநா தனே.

(பொ-ரை) உண்மைத் தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் வாழ்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌன ஞானகுருவே! ஈசனே! அன்பர்களுக்கு நேசனே! உன்னுடைய கருணை இலட்சணத்துடன் அருள்புரியவும், எம்முடைய பெருமானே! எமக்கு தலைவனே! உன்னுடைய கிருபை எந்நாளும் அருள்புரியவும், வாசனே! ஞானோபதேசஞ் செய்பவனே! உன்னுடைய கிருபை வருவதற்கு அருள் புரியவும், வாகனே! யோகனே! ஏகனே! உன்னுடைய கருணையானது போது மென்று அருள் புரியவும், பூரணானந்தமே! சொந்தமாக உன்னுடைய கருணையானது பொங்கவிருந்து அருள் புரியவும், மாசங்கள தோறும் எம்மிடத்தில் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

இறைவனே! தேவரீர் பலவகையாக எனக்கருள் புரிதற்பொருட்டு மாசந்தோறும் எழுந்து வரவேண்டும் என்பது கருத்து. (6)

மனம் முன்னின்று முத்தமிட வுபதேசச் சின்மயம்
அடிமைகொண்டாடி நின்றருள வரவேண்டும்,

முத்துநவ ரத்நமேமுழுவயிர மலையேயென்
முன்னின்று னருள்பு ரியவும்
முச்சுடர் பரப்புசெம் பொற்கமல
முத்தமிட வருள்பு ரியவும்
சித்தனே சித்தர்தொழு முத்தனே செவியினுப
தேசமெற் கருள்பு ரியவுந்
தெக்ஷிணா மூர்த்தமே பக்ஷம்வைத் திக்கணஞ்
சின்மயம் மருள்பு ரியவுஞ்
அத்தனே யப்பனே வையனே யுய்யவெனை
யடிமைகொண் டருள்பு ரியவும்
ஆனந்தமானபர மானந்த திருநடன
மாநின்றருள்பு ரியவும்

வைத்தகரு ணைக்குரிய தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) வைக்கப்பட்ட திருக்கருணைக்கு உரித்தான தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! முத்தே! நவரத்தினமே! முழுவயிரமே! எனக்கு முன்னே நின்று திருவருள் புரியவும், ஒளிகளைப் பரப்புகின்ற செவந்த பொன்போலுமுள்ள திருவடித்தாமரைகளை நான் முத்தமிடும் படி அருள்புரியவும், சித்தனே! சித்தர்களால் வணங்கப்படும் முத்தனே! செவியின் கண் உபதேசத்தை எனக்கு அருள்புரியவும், தெட்சணாமூர்த்தமே! என்மீது பட்சம்வைத்து இந்தக்கணத்தில் சின்மயத்தை அருள்புரியவும், அத்தனே! அப்பனே! ஐயனே! நான் பிழைக்க என்னை யடிமையாகக்கொண்டு அருள்புரியவும், இன்பமான உயர்ந்த ஆநந்தத் திருநடனமாடி நின்று அருள்புரியவும், என்றன் சமீபத்தில் வந்தருளவேண்டும். (எ-று)

சர்வ சுகங்களையுமுள்ள நீர் என்னை ஆண்டருள் செய்யவேண்டும். என்பது கருத்து. (7)

மனத்தை யிரட்சித்துத் தினந்தினங் கடாக்ஷித்துக்
கதிதந்து தூக்கித் தொழுதிட வரவேண்டும்.

திக்கற்ற பாவியைப் பக்கத்தில் வைத்திரட்
சித்துநல் லருள்பு ரியவுந்
திருவுள மிரங்கிநின் றிருவடி யளித்துத்
தினந்தினம் மருள்பு ரியவுங்
கைக்குள் வளர் நெல்லிக் கனிக்குநிக ராகக்
கடாக்ஷித்து வருள்புரியவும்
கன்மந் தொலைத்தே கடைத்தேற்றி வைத்துநற்
கதிதந்து னருள்பு ரியவுந்
துக்கக்கடற்கடந் தக்கரைப் படவெனைத்
தூக்கிவிட் டருள்பு ரியவுந்
துன்பங்க ளெல்லாந் தொலைத்தடிமை யுன்பதந்
தொழுதிடற் கருள் புரியவும்
வைக்குமனம் வைத்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) உண்மையான தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்வியக்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! திக்கில்லாத பாவியை உன்னுடைய பக்கத்தில் வைத்து ரட்சித்து உயர்ந்த அருள்புரியவும், திருவுள்ளமிரங்கி உன்னுடைய திருவடியை கொடுத்து நாள்தோறும் அருள்புரியவும், கைக்குள்ளே வளர்கின்ற நெல்லிக்கனிக்கு ஒப்பாக கடாட்சித்து அருள்புரியவும், கர்மத்தை யொழித்து கடைத்தேற்றி வைத்து உயர்கதியைக்கொடுத்து அருள்புரியவும், துக்கமாகிய சமுத்திரத்தைக் கடந்து அந்தக் கரையில்சேர என்னைத் தாங்கி விட்டு அருள்புரியவும், சர்வ துன்பங்களையு மொழித்து அடிமையான நான் உன்னுடைய திருவடிகளைத்தொழுவதற்கு அருள்புரியவும், வைக்கின்ற மனத்தை வைத்து என்னிடத்திற்கு எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (8)

மனங்கைகாட்டித் தருந்த சதாநந்த வறிவொன்று
அறிந்திடவரவேண்டும்

காகமாய் நின்றுகத றிக்கதறி யழுமென்னைக்
கையணைத்தருள்பு ரியவுங்
கன்மபடு கண்கலக் கந்தீர வுங்கருணை
காட்டிநின் றருள்பு ரியவுந்
தாய்கைக் குழந்தையென நீகைக்குள் வைத்து
தருந்தநல் லருள்பு ரியவுஞ்
சத்தமுகி லெனவின்ப மாமழை சொரிந்திடு
சதாநந்த மருள்பு ரியவும்
ஆகம புராணங்க ளாலுமறி தற்கரிய
வறிவொன்றி னருள்பு ரியவும்
அளகேச னேதுளவ மணிமார்ப னேயுனை
யரிந்திடற் கருள்பு ரியவும்
வாகனே யேகனே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) வாகனே! ஏகனே! தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீசுரனே! காகத்தைப்போல் கதறிக் கதறியழுகின்ற என்னை கையால் அணைத்து அருள்புரியவும், கர்மியோ நான் படுந்துக்கமானது தீரவும் கருணையைச் செய்திருந்து அருள்புரியவும், தாயின் கையிலிருக்கின்ற குழந்தையைப்போல நீ

உன்னுடைய கைக்குள்ளே வைத்து தகுந்த வண்ணம் அருள்புரியவும், ஏழுமேகங்களைப்போல இன்பமாகிய மகத்தான மழையைப் பொழி கின்ற சதானந்தம் அருபுரியவும், ஆகமங்களாலும் புராணங்களாலும் உணர் வதற்கு அருமையான அறிவு ஒன்றின் அருள்புரியவும், அளகே சனே! துளசி மாலையையணிந்த அழகியமார்பனே! உன்னை அறிவ தற்கு அருள்புரியவும், எனக்குச் சமீபத்தில் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (9)

மனக்கலிதீர்த்துக் கவிகையிட வாட்கொண்டறிந்து
முறையாக மூர்த்திகரமருள வரவேண்டும்.

கன்னலின் னமுதெனவு மின்பங் கொடுத்தெனது
கலிதீர்த்து னருள்பு ரியவுங்
காலூன்றி மழைபொழியு முகிலின மெனக்கருணை
கவிகையிட வருள்பு ரியவுங்
அன்னையேயுன்னையே நம்பினே னாதரித்
தாட்கொண்டு னருள்பு ரியவும்
ஆருமெனை யாதரிப் பாரிலைப் பாரினி
லதுவறிந் தருள்பு ரியவும்
முன்னாக சொன்னதனை மன்னவர்கண் மன்னனே
முறையாக வருள்பு ரியவும்
முப்பத்து முக்கோடி தேவர்க்கு முதல்வனே
மூர்த்திகர மருள்பு ரியவும்
வன்னிநிற மென்ன மெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழி மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) அக்கினியின் நிறத்தைப்போன்ற சரீரத்தையுடைய தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத் திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! கன்னலான சர்க்கரை எனவும் இனிமையான அமிர்த மெனவும், சுகத்தைக்கொடுத்து என்னுடைய கலியைத்தீர்த்து உன்னு டைய அருள்புரியவும், காலைத்தாங்கி மழைபொழிகின்ற மேகம்போல கிருபைக்குடையையிட அருள்புரியவும், தாயே! நான் உன்னையே நம்பி னேன், ஆகையால் என்னை ஆதரித்து அருள்புரியவும், உலகத்தில் என்னை ஆதரிப்பவர்கள் ஒருவருமில்லை ஆகையால் அதையுணர்ந்து அருள்புரியவும், முன்னதாகச் சொன்னவைகளையெல்லாம் அரசர் களுக்கு அரசனே! எனக் குயிலிசையாக அருள்புரியவும், முப்பத்து முக்கோடி தேவர்களுக்குத் தலைவனே! எனக்கு மூர்த்திகரம் அருள் புரியவும், எனக்குச் சமீபத்தில் எழுந்தருளி வரவேண்டும்.(எ-று) (10)

ஆ பாடல்-128,

இரண்டாவது

# தவ நிலை.

இதனை யெழுந்த வெவ்வகை வணக்கமும்
அதனை லாகிய வங்கமெத் திரமுமே
அமைதரு தவநிலை யணிபெற வருள்கெனச்
சமைதர விரைந்து தாழ்ந்துநின் றுயர்த்தது.

மனம்போதித்துப் போதுமெனக்கறந்து கைகொ
டுத்துப் பந்தாடப் பரப்பிவரவேண்டும்.

பொல்லாத காயமல் லாடாது நல்லறிவு
போதித்து னருள்புரியவும்
பொங்குமருண் மெய்ஞ்ஞான வனுபோக நிலையெலாம்
போதுமென வருள்பு ரியவும்
கல்லாவி னின்பால் பசிக்குப் புசிக்கக்
கறந்துதந் தருள்பு ரியவும்
கற்பவரை தேடியலை யாதபடி கற்பமுறை
கைக்கொடுத் தருள்பு ரியவும்
பல்லா யிரங்கோடி யண்டமுங் கைக்குளே
பந்தாட வருள்பு ரியவும்
பட்டப் பகற்போல வெட்டவெளி யாயொளி
பரப்பிநின் றருள்பு ரியவும்
வல்லபஞ் சொல்லரிய தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) வல்லமையைச் சொல்லுதற் கருமையான தவராஜ சிங்கமே! மகத்தாகியகுணங்குடி என்னுந்திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! கொடுமையான சரீரமானது மல்லாடாமல் நல்லறிவு போதித்து உன்னுடைய அருள்புரியவும், மிகுந்த திருவருளையுடைய உண்மை ஞான அநுபோக நிலைமையெல்லாம் போதுமான தென்று அருள்புரியவும், கல்லாவின் பாலைப் பசிக்குப் புசிக்க கறந்து கொடுத்தருள் புரியவும், கற்பவர்களைத் தேடியலையாதபடி கற்பமுறையைக் கொடுத்து அருள்புரியவும், பல்லாயிரங்கோடி யண்டமும் கைக்குள்

ளே பந்தாட அருள்புரியவும், பட்டப்பகலைப்போல வெட்டவெளியாய் ஒளிபரப்பியிருந்து அருள்புரியவும், எனக்குச் சமீபத்தில் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (1)

மனமுப்பாழின் முச்சுடர்சேவிக்கத் திறப்படத்
தத்துவஞ் சலியாமலருள வரவேண்டும்.

முத்தர்பணி செய்யவுஞ் சற்றேனு முய்யவு
முப்பாழி னருள்பு ரியவும்
மூச்சைப் பிடிக்கவும் காய்ச்சற்ற பொன்னுன
முச்சுடரி னருள்பு ரியவும்
சித்துச் சடங்களைத்தெரிசித்து நிற்கவுஞ்
சேவிக்க வருள்பு ரியவுந்
திருவரு ளிரங்கவுங் குருவடி வணங்கித்
திறப்படற் கருள்பு ரியவுந்
தத்துவக் கலைகளைப் பற்றறக் களையுமோர்
தத்துவம் மருள்பு ரியவுஞ்
சலியாம னின்னடிமை கேட்டதெல் லாமனஞ்
சலியாம லருள்பு ரியவும்
மத்தமத முற்றமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மா குணங் குடிவாழ மென்னகத் தீசனே
மவுனதே சிகநாதனே.

(பொ-ரை) மத்த மதம் பொருந்திய உண்மையான தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! மோட்சசாதனத்தை யடைந்தவர்களுடைய வேலையை செய்யவும், கொஞ்சமாஞலும் பிழைக்கவும் முப்பாழினை அருள் புரியவும், மூச்சைப் பிடித்தடக்கவும் காய்ச்சுதலையொழிந்த பொன்ஞன முச்சுடரின் அருள்புரியவும், சடசித்துக்களைத் தரிசித்து இருக்கவும் சேவிக்க அருள்புரியவும், திருவருளானது என்மீதிரங்கவும் ஞாஞசிரியனுடைய திருவடிகளை வணங்கி திறமடைவதற்கு அருள்புரியவும், தத்துவமாகிய கூட்டங்களை பற்றொழியக்களையுமொரு தத்துவத்தை அருள்புரியவும், யாதொரு மனச்சலிப்பையும் அடையாமல் உன்னுடைய அடிமை கேட்டதெல்லாம் மனம் சலியாமல் அருள்புரியவும், எனக்குச் சமீபத்தில் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (2)

மனச்சித்திரந்து சித்தம்வைத்துப் பறந்தோடப்பண்ணி
நடனமிட நழுவிடாதருள வரவேண்டும்.

தேவரீர் திருவடிக் காளாக வட்டமா
சித்திதந் தருள்பு ரியவுஞ்

சித்தர்கண மெல்லா மெனக்கரு ளிரங்கவுஞ்
சித்தம்வைத் தருள்பு ரியவும்
பாவியடி யேன்செய்த பாவங்க ளெல்லாம்
பறந்தோட வருள்பு ரியவும்
பக்குவ மறிந்தெனைப் பக்குவ விசேடனாய்ப்
பண்ணிவைத் தருள்பு ரியவும்
நாவிட் டுரைக் கொணுச் சோதிநய னத்தூடு
நடனமிட வருள்பு ரியவும்
நம்பினே னையனே நட்டாற்றி லென்கைகள்
நழுவிடா தருள்பு ரியவும்
மாவேக மாகமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தான வேகமாக உண்மையான தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌன குருவே! தேவரீர் திருவடிகளுக்கு ஆளாகும்படி அட்டமாசித்திகளைக் கொடுத்து அருள்புரியவும், சித்தர்களுடைய கூட்டங்களெல்லாம் என் விஷயத்தில் அருளுடன் மனமிரங்கவும் மனம்வைத்து அருள்புரியவும், பாவியாகிய அடியேனை நான் செய்த பாவங்கள் முழுமையும் பறந் தோட அருள்புரியவும், பக்குவத்தை யுணர்ந்து என்னைப் பக்குவ விசேஷனாய் செய்வித்து அருள்புரியவும், நாக்கினால் சொல்ல முடியாத தேஜஸையுடைய கண்ணில் தெரியம்படி நடனமிடுதற்கு அருள்புரிய வும், உன்னை நம்பியிருக்கின்ற என்னை ஐயனே! நட்டாற்றில் கைவிட்டு விடாமல் அருள்புரியவும், என்னுடைய சமீபத்தில் எழுந்தருளிவர வேண்டும். (எ-று)

சகல காரியங்களிலும் எனக்கு அருள்புரிய வேண்டியவன் நீயே யாகையால் இறைவனே! என்னை ஆண்டருளும் விஷயத்தில் தவறிவிட வேண்டாம் என்பது கருத்து. (3)

இயல்பிருந்து மெலிந்து மெய்ஞ்ஞானஞ் சிற்சுகம்
சாகாது செற்றிட வரவேண்டும்.

இயல்புகெட் டோனாகி போனா னலைந்திடா
தியல்பொன்ற வருள்பு ரியவும்
இலைசருகு பக்ஷணம் பண்ணியே காந்தமோடி
டிருந்திடற் கருள்பு ரியவும்

வெயிலூ டுறைந்தெனது தேகமென் பென்பாய்
மெலிந் திடற் கருள்பு ரியவும்
மெய்த்தவசு மூட்டவும் பொய்த்தவசை யோட்டவு
மெய்ஞ்ஞான மருள்பு ரியவும்
செயலினை மறுக்கவு முயலினை யறுக்கவுஞ்
சிற்சுகம் மருள்பு ரியவும்
செத்தசவ மென்னக் கிடக்கவுஞ் சாவாது
செத்திடற் கருள்பு ரியவும்
மயில்வெட்கு நடன மொடு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! இலட்சணங்கெட்டவனுய்போனுல் எவ்விஷயத்திலும் அலையாமல் இயல்புபொருந்த அருள்புரியவும், இலை, உலர்ந்த சருகு இவைகளைத் தின்று ஏகாந்தமாய் இருப்பதற்கு அருள்புரியவும், வெயிலிலே வாசஞ்செய்து என்னுடைய தேகமானது எலும்பெலும்பாய் போய் விடுவதற்கு அருள்புரியவும், உண்மையான தவசு அதிகரிக்கவும் பொய்த்தவசை யோட்டவும் உண்மை ஞானத்தை அருள்புரியவும், செய்கைகளையெல்லாம் தடுக்கவும், முயற்சியை யறுத்தொழிக்கவும், ஞானசுகத்தை யருள்புரியவும், செத்துப்போன பிணத்தைப்போல் கிடக்கவும், சாவாது சாவதற்கு அருள்புரியவும், மயிலானது வெட்கிப்போகின்ற நடனத்துடனே எனக்குச் சமீபமாக எழுந்தருளிவரவேண்டும். (எ-று)

பலவகையான நற்கிரியைகளை எனக்கு அநுக்கிரகித்திற் பொருட்டு தேவரீர் என்னிடம் வரவேண்டும் என்பது கருத்து. (4)

மனத்தைக் குவித்துக் கொடுங்கைதந் தருகணைத்து அவல
மாகாமற் பார்த்துப் பாதமருள வரவேண்டும்.

கொலைசெயம னுக்குட் படாதெனைக் கைக்குட்
குவித்துவைத் தருள்பு ரியவும்
கோதைய ரிடுக்குங் கொடுங் கைதரு முன்னின்
கொடுங்கைதந் தருள்பு ரியவும்
அலைவாய்த் துரும்பென வலைந்தலமை யாகாம
லருகணைத் தருள்பு ரியவும்
அடியே னினைத்தேடி யாசைகொண் டதுமவல
மாகாம லருள்பு ரியவும்

பலகா லிரந்தவென் பாலுமன் பான்முகம்
 பார்த்துநல் லருள்பு ரியவும்
பன்மலர்க டூவியர்ச் சனைசெய்து தொழவுநின்
 பாதமல ரருள்பு ரியவும்
மலைபோ லெழுந்தமெய்த் தவராஜ சிங்கமே
 வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
 மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! கொலைத்தொழில் செய்கின்ற எமனுக்கு உட்படாமல் என்னைக் கைக்குள்படுத்தி யருள்புரியவும், பெண்களிருக்கின்ற கொடுமையான கையைத் தடுப்பதற்கு முன்னரே உன்னுடைய கையைக்கொடுத்து அருள்புரியவும், அலையிற் சிக்கின துரும்பைப்போல அலைந்து பிசாசாகாமல் சமீபத்தில் அணைத்து அருள்புரியவும், அடியேனை நான் உன்னைத் தேடியாசை யடைந்தும் வீணாய்விடாமல் அருள்புரியவும், பலநாட்களாக குறையிரந்த என்னிடத்திலும் அன்பின் மேலீட்டால் என்னுடைய முகத்தைப்பார்த்து உயர்ந்த அருள்புரியவும், பல மலர்களைத் தூவி யர்ச்சனை செய்து வணங்கவும் உன்னுடைய திருவடித்தாமரைகளை அருள்புரியவும், மலையைப்போல எழுந்தருளியிருக்கின்ற உண்மையான தவராஜசிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளிவரவேண்டும்.

இறைவனே! பலவகையாலும் எனக்குத் திருவருள் செய்ய என்னிடம் எழுந்தருளி வரவேண்டும் என்பது கருத்து. (5)

மனத்தொழும்பு துலங்கிடக் கசப்பாகக் கழன்றிட
வல்லாமெண்ணாமல் வரவேண்டும்.

துச்சனே நாயினும் பட்சம்வைத் தென்றனைத்
 தொழும்புகொண் டருள்பு ரியவும்
துரியமா நின்றதுரி யாதீத செஞ்சுடர்
 துலங்கிடற் கருள்பு ரிவும்
கைச்சரச மானசிற் றின்பவனு போகங்
 கசப்பாக வருள்பு ரியவும்
களகளென் றுனந்த பாஷ்பமிரு கண்ணிற்
 கழன் றிடற் கருள்பு ரியவும்
எச்சித்தனம்பண்ண வேண்டாமெ னையனே
 யெல்லாநீ ரருள்பு ரியவும்

என்னகுறை வந்துபோ மென்றெண்ணு நீரொன்று
 மெண்ணும லருள்பு ரியவும்
மைச்சினிச் சாசமொடு தவராஜ சிங்கமே
 வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
 மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந்திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! ஏதுக்கப்பட்டவனுனாலும் ஆசையைவைத்து என்னை அடிமையாகக்கொண்டு அருள் புரியவும், துரியமாய் நின்றிருந்த துரியாதீதப்பொருளான செவந்த தேஜோமயப் பொருளானது விளக்குவதற்கு அருள்புரியவும், கைக்குச் சரசமாயிருந்த சிற்றின்ப அநுபோகத்தை கசப்பாக அருள்புரியவும், களகளவென்று ஆனந்த பாஷ்பமானது இரண்டு கண்களிலும் ஒழுகுதற்கு அருள்புரியவும், எச்சித்தனஞ்செய்ய வேண்டாம் என்னுடைய தலைவனே! எல்லாம் நீர் அருள்புரியவும், என்ன குறைவந்து போகும் என்று எண்ணுகிறீர் ஒன்றும் எண்ணாமல் அருள்புரியவும், இனிசரசத்துடனே தவராஜ சிங்கமே! எனக்குச் சமீபத்தில் எழுந்தருளி வரவேண்டும்.(எ-று) (6)

மனம்புகழ்ந்திடப் பொருடந்து நிராகரித்து நெஞ்சுற
வேதார்த்த மிருந்திட வரவேண்டும்.

புகழுவார் புகழும் புகழ்க்குரிய நின்னைப்
 புகழ்ந்திடற் கருள் புரியவும்
புத்திக்கு மெட்டாது புத்திக்கு ளூற்றவான்
 பொருடந்து னருள்பு ரியவும்
நிகழ்பந்து தன்னையும் நிர்த்தூளி யாகிட
 நிராகரித் தருள்பு ரியவும்
நிருமல சிதாகாச நிஷ்பிரபஞ்சப் பொருளென்
 னெஞ்சுறவி னருள்பு ரியவும்
இகபர மிரண்டென்று வகையுண்ட நீசெனு
 மெதார்த்தமதை யருள்பு ரியவும்
என்னுள் ளிருக்குசெங் கோமானென் னுள்ளே
 யிருந்திடற் கருள்பு ரியவும்
மகிழ்வோடெழுந்து மெய்த் தவராஜ சிங்கமே
 வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
 மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) உண்மையான தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் வாழ்கின்ற என்னுடைய அகத்

தின் கண்ணுள்ள அகத்தீச்சுவரனே! மௌனகுருவே! புகழ்கின்றவர்களுடைய புகழ்ச்சியும், புகழுக்குரிமையான உன்னைப் புகழ்ச்சி செய்வதற்கு அருள்புரியவும், புத்திக்கும் எட்டாதபடி அந்தப் புத்திக்குள்ளாகவே யிருந்த பெரிய பொருளைக் கொடுத்து உன்னுடைய அருள் புரியவும், நடமாடுகின்ற சுற்றத்தாரையும் நிர்த்தூளியாக நிராகரிப்பதற்கு அருள்புரியவும், பரிசுத்தமான சிதாகாச நிஷ்பிரபஞ்சப்பொருளானது என்னுடைய மனத்தை உறவு கொண்டருள் புரியவும், இம்மை, மறுமையென்னும் இரண்டு வகையுண்ட நீது, எதார்த்தம் என்பவைகளை அருள்புரியவும், எனக்குள்ளாகவே யிருக்கின்ற என்னுடைய தலைவனானவன் என் மனதினுள்ளிருக்குமாறே யருள்புரியவும், மகிழ்ச்சியுடனே யெழுந்து என்றனுக்குச் சமீபத்தில் வந்தருளவேண்டும்.(எ-று)

எனக்குச் சர்வ காரியங்களையுந் திருவருள் செய்யத் தேவரீர் மிகவும் கிருபையுடன் எழுந்தருளி வரவேண்டும் என்பது கருத்து. (7)

மனத்தைக் கரையேற்றிக் கைக்கொண்டு சமுகந்
தன்மயம் போனின்ற பூரணா வரவேண்டும்.

கங்கற்ற வாழாழி வங்கத்தை யொத்தெனைக்
சரையேற்றி யருள் புரியவும்
கையைக் கொடுக்கவுங் கையைப் பிடிக்கவுங்
கைக் கொண்டு னருள்புரியவுஞ்
சங்கைதரு சங்கத்தை நீக்கவுஞ் சங்கைதரு
சமுகம்வைத் தருள்புரியவுந்
தட்டாத நிஷ்டைமீ திஷ்டமோ டிருத்தவுந்
தன்மயம் மருள்புரியவும்
பொங்குஞ் செழுஞ்சுடர் பொருந்துகர்ப் பூரமது
போனின்ற தருள்புரியவும்
பொன்னடியும் வாழியுன் புண்ணியமும் வாழிபரி
பூரணா வருள்புரியவும்
மங்களந் தங்கு மெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மங்கள குணம் பொருந்திய உண்மையான தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் வாழ்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுவரனே! மௌனகுருவே! கரையில்லாத சமுத்திரத்தில் செல்லும் கப்பலைப் போல் என்னை அக்கரையிலேற்றி அருள் புரியவும், தேவரீர் கை

கொடுக்கவும், கைபிடிக்கவும் உள்ளங்கொண்டு அருள்புரியவும், சந்தேகங் கொடுக்கின்ற சங்கத்தை நீக்கவும், சந்தேக சமுகத்தில் வைத்து அருள்புரியவும், இடையூறில்லாத நிஷ்டையின்கண் என்னை நிறுத்தி வைக்கவும், சிவமயத்தை அருள்புரியவும், விளங்குகின்ற செழுஞ்சோதியானது கலந்து கர்ப்பூரசோதியைப்போலிருந்து அருள்புரியவும், உன்னுடைய பொன்போலுந் திருவடிகளும் வாழக்கடவது, உன்னுடைய புண்ணியமும் வாழக்கடவது, ஆகையால் பரிபூரணக்கடவுளே! நீ எனக்கு அருள்புரியவும், எனக்குச் சமீபத்தில் எழுந்தருளி வாவேண்டும். (எ-று) (8)

மனந்தனைக்கொண்டு தாற்பரியம்பாய்ந்து பருவமொன்று தொலைந்து தொடக்கற வாவேண்டும்.

தஞ்சமே தஞ்சமென் றடையுமென் னஞ்சலி
தனைக்கொண்டு னருள்புரியவுந்
தற்பரஞ் சிற்பரத் துட்பரவி நிற்பதோர்
தாத்பரிய மருள்புரியவும்
பஞ்சவர் ணப்பரஞ் சோதிகிள ரிம்பத்தி
பாய்ந்திடற் கருள்புரியவும்
பன்மயத் துட்பரவு தன்மயத் துட்பரவு
பருவமொன் றருள்புரியவுந்
துஞ்சமொளி கொஞ்சவும் நெஞ்சமும் வஞ்சந்
தொலைந்திடற் கருள்புரியவும்
துக்கவலை வீசுமலை யின்னார்களாசைத்
தொடக்கறற் கருள்புரியவும்
வஞ்சியரு மொஞ்சவுந் தவராஜ சிங்கமே
வாவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் வாழ்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணிருக்கின்ற அகத்தீச்சுரனே! மௌனகுருவே! நீயே அடைக்கலமென்று அடையும் என்னுடைய அஞ்சலியாஸ்தத்தைக்கொண்டு அருள்புரியவும், தற்பரம் எனது ஞானபரத்துள் பரவியிருக்கின்ற உள்மர்மத்தை யருள்புரியவும், பஞ்சவர்ணங்களையுடைய பரஞ்சோதியின்மேல் பக்திசெல்லுவதற்கு அருள்புரியவும், பலவகைக்குள் வியாபித்திருக்கின்ற தன்மயத்துள்ளே பரவுகின்ற நல்ல பருவமொன்றை அருள்புரியவும், துஞ்சமாகிய ஒளியானது கொஞ்சவும் மனத்தினது வஞ்சகமொழிய அருள்புரியவும், துன்பமென்னும் வலையை வீசுகின்ற

பெண்களுடைய ஆசாபாசத்தை அறுப்பதற்கு அருள்புரியவும், எனக்குச் சமீபத்தில் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (9)

மனதுக்குச் செல்வந்திறந்து முகூர்த்தமுடிசூட்டி
ஜெயந்தந்து ஜெயமாக வரவேண்டும்.

தேனைப் பழித்தபே ரின்பந் தரும்பெருஞ்
செல்வமொன் றருள்பு ரியவுஞ்
சின்மயச் சிந்தா மணிப்பொக்கிஷத்தைத்
திறந்தளித் தருள்பு ரியவும்
மோனசிங் காசன திபனுக வைத்திட
முகூர்த்தமிட் டருள்பு ரியவும்
முச்சுடர் பரப்பியொளி பத்திபா யும்மகுட
முடிசூட்டி யருள்பு ரியவுஞ்
சேனு சமுத்திரத் தொடுநின்று வாழ்த்திச்
செயந்தந்து னருள்பு ரியவும்
ஜெயஜெயா ஜெயஜெயா ஜெயஜெயா வென்றடிமை
ஜெயமாக வருள்பு ரியவும்
வானனைய கருணைகொடு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் வாழ்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுவரனே! மௌனகுருவே! தேனையும் பழித்துவிட்ட பேரின்பத்தைக் கொடுக்கின்ற பெருஞ்செல்வம் ஒன்றை அருள்புரியவும், ஞானமயமான சிந்தாமணி பொக்கிஷத்தைத் திறந்து கொடுத்து அருள்புரியவும், மௌன சிங்காசனத்தில் உட்கார முகூர்த்தகாலத்தை அருள்புரியவும், மூன்று சுடர்களையும் பரப்பி வரிசையாக ஒளிவீசும் மகுடஞ்சூட்டி அருள்புரியவும், அநேக சேனைகளுடன் நின்று வாழ்த்தி ஜெயங்கொடுத்து அருள்புரியவும், ஜெய ஜெயா ஜெய ஜெயா ஜெய ஜெயாவென்று அடிமையான நான் ஜெயமடைய அருள்புரியவும், ஆகாயத்தைப்போன்ற கிருபையைக்கொண்டு எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும்.(எ-று) (10)

ஆ பாடல் -138.

மூன்றாவது.

# துறவிநிலை.

நினைப்பும் விளிப்பு நீத்தலுந் தனிப்பும்
அனைத்தினு மமைத்திட் டாய்ந்தாய்ந்து நோக்கி
விரத மவுனம் விருப்பொடு வெறுப்பெனும்
இரத மமையா தெழுந்தவெட் டகமும்
பற்றிய தவநிலை பதித்த பெருநிலை
சுற்றிய மென்மைத் துறவா கையினால்
அத்துற வியல்பினை யாண்டகை யருள்கென
வெத்திறத் தினுங்குறை யிரந்திரந் துயர்த்தது.

(பொ-ரை) நினைப்பும் விழிப்பும் நீக்குதலும், தனித்திருத்தலும் ஆகிய இவைகளை எல்லாவற்றிலும் படைத்து பலவகையாக ஆராய்ந்து பார்த்து விரதம், மௌனம், விருப்பம், வெறுப்பு என்று சொல்லப்படும் இரதம் பொருந்தாமல் எழுந்து அஷ்ட தவநிலைகளைப் பதித்த பெரிய நிலையானது, சூழ்ந்திருக்கின்ற மேன்மையையுடைய துறவறமாகையினால், அந்தத்துறவின் லட்சணத்தை ஆண்டகைமையுள்ள கடவுளே! நீ அருள்செய்வாய் என்று எவ்வகையாலுங் குறைகூறி இரப்பது. (எ-று) (1)

மனங்களைதீரக்கண் டாண்டகல வொதுக்கியுறைந்திட வரவேண்டும்.

காமக் குரோதமோ கக்கிளை களைந்துநான்
 களைதீர வருள்புரியவும்
கரையாத நெஞ்சக் களிம்பொலாந் துரிசறக்
 கண்டுநல் லருள்புரியவும்
ஆமைமீன் பறவைபோ லடியேனை யாதரித்
 தாண்டணைத் தருள்புரியவும்
ஆசைப் பசாசமெனை யணுகா தடித்தடித்
 தகலவிட் டருள்புரியவும்
ஓமங்கண் முதலான நியமங்க ளெல்லா
 மொதுக்குவித் தருள்புரியவும்
ஊருக்கு நேர்கிரிந தலைபாம லிமதரு
 ளுறைந்திடற் கருள்புரியவும்
மாமேரு வொத்தமெய்த் தவராஜ சிங்கமே
 வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
 மவுனதேசிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய மேருமலையை யொப்பான உண்மையான தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் வாழ்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணிருக்கின்ற அகத்தீச்சுவரனே! மௌனகுருவே! காமம், குரோதம், மோகம் என்னுங் கிளைகளையெல்லாங் களைந்து நான் என்னுடைய களையினின்றும்நீங்க அருள்புரியவும், இளகாத மனத்துரும்பின் குற்ற மறக்கண்டு அருள்புரியவும், ஆமை, மீன், பறவை இவைகளைப்போல அடியவனை என்னைக்காப்பாற்றி யாண்டு அணைத்து அருள்புரியவும், ஆசையாகிய பசாசானது என்னைச்சேராதபடி அடித்துத் துரத்திவிடுவதற்கு அருள்புரியவும், ஓமஞ்செய்தல்முதலிய நியமங்களெல்லாம் நீக்குவிக்க அருள்புரியவும், ஊரூர்களாகத்திரிந்து அலையாமல் உம்முடைய திருவருளையடைவதற்கு அருள்புரியவும், எனக்குச் சமீபத்தில் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (1)

மனந் தீய்ந்து சேர்ந்து பக்குவம் பத்தியக்காடுறை
கனன்மூட்ட வரவேண்டும்.

தேய்ந்திடவு மீராறு கலைகளும் மனமாயை
 தீய்ந்திடவு மருள்பு ரியவுந்
தீராதவல்வினைக டீர்ந்துதிரு வடியினிற்
 சேர்ந்திடற் கருள்பு ரியவும்
பாய்ந்தேற வும்வாசி நான் றேற வும்பெரும்
 பக்குவ மருள்பு ரியவும்
பத்தியுஞ் சித்தியும் முத்தியின் முற்றுமோர்
 பத்தியும் மருள்பு ரியவுங்
காய்ந்தசரு கிலையுனற் காய்கனிக ளுண்டுண்டு
 காடுறைய வருள்பு ரியவும்
கட்டையைச் சுட்டுக் கருக்குமெய்ஞ் ஞானமாங்
 கனன்மூட்டி யருள்பு ரியவும்
மாய்ந்துமா யாதமெய்த் தவராஜ சிங்கமே
 வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழுமென்னகத் தீசனே
 மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) இறந்தும் இறவாத தவராஜசிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுவரனே! மௌனகுருவே! பன்னிரண்டு கலைகளும் தேய்ந்துவிடவும், மனோமாயை தீய்ந்துவிடவும், அருள்புரியவும், நீங்காதவலிய இருவினைகளெல்லாந் தீர்ந்து திருவடியை யடைவதற்கு அருள்புரியவும், வாசியில் பாய்ந்து ஏறவும்

பெரியபக்குவத்தை யருள்புரியவும், பக்தி, சித்தி, முத்தி இவைகள் நிறைகின்ற ஒரு பக்தி யருள்புரியவும், உயர்ந்த சருகு, இலை, சலம், காய், கனிகள் இவைகளைப் புசித்து காட்டில் வாசஞ்செய்ய அருள் புரியவும், சரீரத்தைச்சுட்டு கருகுகின்ற உண்மை ஞானமான அக்கினி யைமூட்டி யருள் புரியவும், எழுந்தருளி எனக்குச் சமீபத்தில் வந்தருள வேண்டும்.(எ-று) (2)

மனத்தின் பேர்பிடுங்கி நலம்பெற நாளுமஞ்ஞானத் தீநீறச்
சித்தித்திட வரவேண்டும்.

பேயைப் பழுத்தபெண் பேய்கொண் டிடார்கொண்ட
பேரொன்று மருள் புரியவும்
பிள்ளைக ளெனுங் கூளி பலகூளி யென்னைப்
பிடுங்கிடா தருள்பு ரியவும்
நாயைப் பழித்தபேய் நாயினுங் கடையே
னலம் பெறற் கருள்பு ரியவும்
நல்லரு ளிரங்குமுன் பாதார விந்தமெந்
நாளுமெற் கருள்பு ரியவும்
தீயைப் பழித்தசெந் தீயவஞ் ஞானமாந்
தீநீற வருள்பு ரியவும்
சித்தமங்கைத் தத்தனே சித்திதரு முத்திசித்
தித்திடற் கருள்பு ரியவும்
மாயைப் பழிப்பற்ற தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மாயையினாலுண்டாகும் பழிப்பு ஒழிந்திருக்கின்ற தவராஜசிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுவரனே! மௌனகுருவே! பேயைப் பழித்திருக்கின்ற பெண்பேய்களைக் கொண்டிடாதவர்கள் கொண்டபேர் ஒன்று நானடைய அருள் புரியவுங், பிள்ளைகள் என்கிற கூளிகளில் பல சேர்ந்து என்னைப் பிடுங்காமல் அருள்புரியவும், நாயைப்பழிசெய்த பேய் நாயிலும் கடைப் பட்டவனான நான் நன்மையையடைவதற் கருள்புரியவும், உயர்ந்த திருவருளால் இரங்குகின்ற உன்னுடைய திருவடித்தாமரைகளை என்றைக்கும் எனக்குத் திருவருள்செய்ய அருள்புரியவும், அக்கினியைப் பழித்த செவந்த அக்கினிமயமான அஞ்ஞானமன்றி மடிய அருள். புரியவும், மனம் கொண்டு தலைவனே! சித்திகொடுக்கின்ற முத்தியா

ணத சித்தியாவதற்கு அருள்புரியவும், அடியேனுக்குச் சமீபத்தில் தேவரீர் எழுந்தருளி வரவேண்டும். (3)

மனம் நிலையாகிறுத்திப் பாழாகப்பருவம்
அறைந்தானந்தமருளவரவேண்டும்.

நிசமான தெய்வமுனை யன்றியுண் டென்றடிமை
நிலையாம லருள்பு ரியவும்
நீர்க்குமிழி யொத்தகா யத்தநிலை யத்திலு
நிறுத்திவைத் தருள்பு ரியவும்
பசுபாச பாசமும் பாவையர்க ளாசையும்
பாழாக வருள்பு ரியவும்
பத்திமார்க் கந்தரும் முத்திமோ கந்தரும்
பருவமொன் றருள்பு ரியவும்
அசரசர பேதமா யாடுவது மீதென்
றறைந்தறைந் தருள்பு ரியவும்
அஞ்ஞான மூடந் துறக்கவும் மெய்ஞ்ஞான
வானந்த மருள்பு ரியவும்
வசமான தேகனே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணக் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) யாவர்க்கும் வசப்பட்ட சரீரத்தையுடையவனே! தவ ராஜசிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுவரனே! மௌனகுருவே! உண்மைத் தெய்வம் உன்னையன்றி வேறொன்றில்லை யென்று அருள்புரியவும், நீரிற் குமிழியைப்போன்ற சரீரத்தை உண்மை நிலையில் நிறுத்திவைத்து அருள் புரியவும், பசு, பாசம் என்னும் அவாவும் பெண்கள் மேலுள்ள ஆசையும் பாழ்பட்டழிய அருள்புரியவும், பக்தி வழியைக் கொடுக்கின்ற மோட்ச ஆசையைக்கொடுக்கும் பருவமொன்றை அருள்புரியவும், அசரம், சரம் என்னும் வித்தியாசப்பட திருநடனமாடுவதும் இதுவே யென்று எனக்குச்சொல்லி யருள்புரியவும், அஞ்ஞானம் ஒழியவும், மெய்ஞ்ஞான வரவும் அருள்புரியவும்; என்றன் சமீபத்தில் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (4)

மனமெய்தி யெண்ணம் மண்ணுகமடியாமல் தள்
ளென்று தள்ளாது வரவேண்டும்.

எங்களா லொன்றுமிலை யெதுவுமுன் றருமமென்
றெய்திடற் கருள்பு ரியவும்

எண்சா ணுடம்பினுஞ் சிரசு பிரதானமென்
றெண்ணமொன் றருள்பு ரியவும்
மங்கையர்கள் கொங்கையெனு மண்கட்டி மீதிஷ்ட
மண்ணுத வரிள்பு ரியவும்
மாருத புண்ணுன வல்குலாம் படுகுழியில்
மடியாம லருள்பு ரியவுந்
தங்கத்தை யுஞ்செங்க லென்றெண்ணி யேதள்ளு
தள்ளனற் கருள்பு ரியவும்
தந்தையே யுன்றனுக் கென்றனை யளிக்கிறேன்
றள்ளாம லருள்பு ரியவும்
வங்கமென வோடிமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) உண்மையான தவராஜசிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீசுவரனே! மௌனகுருவே! எங்களாலாவது ஒன்றுமில்லை எதுவும் உன்னுடைய தருமமென்று பொருந்துவதற்கு அருள்புரியவும், எட்டுச சாண்களேயுடைய உடம்புக்குச் சிரசே முக்கியமென்று எண்ணும் எண்ணம் ஒன்றை அருள்புரியவும், பெண்களுடைய ஸ்தனங்கள் என்னும் மண்கட்டியின்மேல் இஷ்டமான மண்ணுக அருள்புரியவும், நீங்காத புண்ணுகவிருந்த அல்குல் என்னும் குழியில் விழுந்து அழியாமல் அருள்புரியவும், தங்கத்தையும் செங்கல் என்று நினைத்து அரைத் தள்ளிவிடு என்று நினைக்க அருள்புரியவும், தந்தையே உமக்கு என்னைக்கொடுக்கிறேன். ஆகையால் எனக்கு தள்ளாமல் அருள்புரியவும், கப்பலைப்போல் ஓடி எனக்குச் சமீபத்தில் எழுந்தருளிவரவேண்டும்.(எ-று) (5)

மனத்தின் வல்லபம் வஞ்சமறவுட்குளிர வூடாடிப்
போகாமற் போகவர வேண்டும்.

வலைவீசு முலையரைக் கொலைஞரென் றெண்ணுமோர்
வல்லபம் மருள்பு ரியவும்
வஞ்சியெனு மெண்சா ணுடம்புவெரு நஞ்சென்று
வஞ்சமற வருள்பு ரியவும்
உலைபிட்ட மெழுகெனப் பின்னமா யுருகுமன
முட்குளிர வருள்பு ரியவும்
ஓடாம லுந்தேடி வாடாம லும்மெனது
ளூடாடி யருள்பு ரியவும்

புலருமில வைக்காத்த கிளியெனவு முன் னடிமை
போகாம லருள்பு ரியவும்
பூரணா னந்தமய மானபே ரின்பவனு
போகமுன் னருள்பு ரியவும்
மலசலா திகளற்ற தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மலசலம் ஒழியப்பெற்ற தவராஜசிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந்திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! முலைகளையுடைய பெண்களைக் கொலைகளிலொன்று நீக்கிவிடும்படி யருள்புரியவும், சரீரத்தை வெறுத்துவிட அருள்புரியவும், உலையிலிட்ட மெழுக்கைப் போல உருகுகின்ற மனமானது குளிரும்படி யருள்புரியவும், ஓடாமலும் வாடாமலும் எனக்குள் தங்கியிருக்க அருள்புரியவும், இலவைக்காத்த கிளியைப்போல நாளுய்விடாமல் அருள்புரியவும், பரிபூரண ஆநந்தமான பேரின்ப அனுபோகமொன்று எனக்கு அருள்புரியவும், எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (6)

மனஞ்சலியாது தள்ளாதுட்குளிர்ந் தொட்டாது
நேயம்வைத்து நில்லாது வரவேண்டும்.

சக்களத் திப்போர் கொடுக்கிறு னென்றுநீர்
சலியாம லருள்பு ரியவும்
சண்டிபோற் றிண்டுமிண் டாடுறு னென்றெனைத்
தள்ளாம லருள்பு ரியவும்
ஒக்கநின் றென்னையுய் யக்கொண்டு மையமற
வுட்குளிர்ந் தருள்பு ரியவும்
ஒட்டாத மாயையை யொட்டினுட் சிட்டெனவு
மொட்டாது னருள்பு ரியவும்
நிற்குநிலை காணாது நிற்குலை நிற்க நின்
னேயம்வைத் தருள்பு ரியவும்
நீச்சனிவ னென்றுபோ திப்பார்கள் போதனையி
னில்லாது னருள்பு ரியவும்
மக்கப் புனைதக்குமுன் றவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மக்கப்புதைக்கு முன்னே வரும் தவராஜசிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! இவன் என்ன சக்களத்திப்போர் கொடுக்கின்றானே என்றெண்ணி மனஞ்சலியாமல் அருள்புரியவும், சண்டியைப்போலிருக்கிறானே யென்று என்னைத் தள்ளிவிடாமல் அருள்புரியவும், என்னோடு கலந்திருந்து என்னைப்பிழைக்கக்கொண்டு உள்ளிருந்து குளிர அருள்புரியவும், மாயையை என்னிடம் ஒட்டாதபடி அருள்புரியவும், உண்மை நிலையில் காணாதபடிநிற்க நீ மனம்வைத்து அருள்புரியவும், இவனென்ன நீசனாயிற்றே யென்றுபோதிப்பார்களுடைய போதனையில் நில்லாமல் அருள்புரியவும், எனக்குச் சமீபமாக எழுந்தருளி வர வேண்டும். (எ-று) (7)

மனம்போகாது போகவென் றெண்ண வெளிநிற் கைபிடித்து காப்பாற்றியருள வரவேண்டும்.

பொந்துதே டித்தேடி மேவாத பேரொனப்
போகாது னருள்பு ரியவும்
பொருடேடி யோடியோ டிப்போகு வோரெனப்
போகவிட் டருள்பு ரியவும்
எந்தைமுதல் யாவரும் வந்துகலை யுஞ்சந்தை
யென்றெண்ண வருள்பு ரியவும்
எவராலு மெய்தரிய துறவோடு மற்றுளவு
மெளிதிலெற் கருள்பு ரியவுங்
கந்தையைச் சுற்றவுங் கானகஞ் சுற்றவுங்
கைப்பிடித் தருள்பு ரியவும்
கந்தமூ லந்தனைத் தந்துகந் தென்றனைக்
காப்பாற்றி யருள்பு ரியவும்
மந்தைவழி யாயினுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! பொந்துகளைத் தேடி அந்தப்பேரையடையாமல் உன்னுடைய அருள்புரியவும், பொருளைத்தேடி பலகால் ஓடிப்போவார்களைப்போல் ஓடாமல் அருள்புரியவும், என்னுடைய தந்தைமுதல் யாவரும் வந்து கலைந்துவிடுகின்ற சந்தை இதுவென்றெண்ண அருள்புரியவும், யாவராலும், அடைதற்

கரிய துறவறத்தை நானடைய அருள்புரியவும், கந்தைத்துணிகளையும் காட்டையும் சுற்றிச்சுற்றி வர அருள்புரியவும், கந்தமூலபலாதிகளைக் கொடுத்து மனம்விரும்பி என்னைப் பாதுகாத்து அருள்புரியவும், மந்தையின் வழியாகவாகிலும் என்சமீபத்தில் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (8)

மனப்பொதும்புபூசி வியாபியாதுவீழ்ந்து
பூவெடுத்தீடேற வரவேண்டும்.

பொன்னைப் பழித்தபொதி கைச்சார்பு மீதிற்
பொதும்பொன்ற வருள்பு ரியவும்
பூவைப் பழித்தநின் பொன்னடியு முன்னடிமை
பூசிக்க வருள்பு ரியவும்
மின்னைப் பழித்தமன முஞ்சஞ் சலத்தோடு
வியாபியா தருள்பு ரியவும்
வேலைப் பழித்தவிழி யார்முயக் களறுதனில்
வீழ்ந்திடா தருள்பு ரியவும்
என்னைப் பழித்தநா னென்பதனை யென்னைவிட்
டெடுத்தெறிய வருள்பு ரியவும்
எவையும் பழித்ததுற வெய்திவெளி யேறிநா
னீடேற வருள்பு ரியவும்
மன்னைப் பழித்தமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) அரசாங்கத்தை வெறுத்த தவராஜசிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! பொன்னை யசட்டைசெய்த பொதிகை மலையின் சாரலிலுள்ள சோலையை யடைய அருள்புரியவும், பூவைஜெயித்த உன்னுடைய திருவடிகளை உன்னடிமையான நான் பூசைசெய்ய அருள்புரியவும், மின்னலைஜெயித்தமனமும் வருத்தத்துடன் வியாபிக்காதிருக்க அருள்புரியவும், வேலாயுதத்தைப் பரிசெய்த கண்களையுடைய பெண்களுடைய மயக்கமான சேற்றில் விழாமல் அருள்புரியவும், என்னைப் பழித்த நான் என்று சொல்லுவதை என்னைவிட்டு ஓட்ட அருள்புரியவும், யாவற்றையுமிகழ்ந்த துறவறத்தை யடைந்து வெளிப்பட்டு நான் பிழைக்கும்படி யருள்புரியவும், எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும்.(எ-று) (9)

மணத்தைப்பார்த்துப் பதமளித்துக் கலிதீர்த்துக் கடாக்ஷித்துப்
பொருடந்து பொன்னடியருள வரவேண்டும்.

பையலோ நெஞ்சம் பதைத்துருகி நிற்பதும்
பார்த்தேனு மருள்பு ரியவும்
பாவியடி யேன்படுந் துயரைத் தொலைத்துநற்
பதமளித் தருள்பு ரியவும்
கையில்வெண் ணெயைவைத்து நெய்க்கழா வண்ணமென்
கலிதீர்த்து னருள்பு ரியவும்
கன்மங்க ளாவுஞ் செனமசா பல்லியங்
கடாக்ஷித்து னருள்பு ரியவும்
பொய்யுலக வாழ்வுபிற ருக்கிடவு மெற்குமெய்ப்
பொருடந்து னருள்பு ரியவும்
பொன்னுலகு மண்ணுலகு நின்றிலகு முன்றிருப்
பொன்னடியை யருள்பு ரியவும்
மையலோ டெழுந்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழ மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மெய்த் தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! பையனுன நான் மனம் பதைத்துருகி நிற்பதைப் பார்த்தாவது அருள்புரியவும், பாவியாகிய நான் படுந்துன்பத்தைத் தொலைத்து நல்ல திருவடிகளைக் கொடுக்க அருள்புரியவும், கையினிடத்தில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழாதபடி என்னுடைய கலியைத்தீர்த்து அருள் புரியவும், கர்மங்கள் தீரவும் செனமசாபல்லியமாகவும் கிருபை செய்து உன்னுடைய அருள்புரியவும், பொய்யாகிய உலகவாழ்க்கையை அந்நியருக்குக்கொடுக்கவும், எனக்கு உண்மைப்பொருளைத் தந்து அருள் புரியவும், பொன்னுலகம், மண்ணுலகம் இவைகளிலிருந்து விளங்கும் உன்னுடைய திருவடிகளை யருள் புரியவும், ஆசையோடு எனக்குச் சமீபத்தில் எழுந்தருளிவரவேண்டும். (10)

ஆ பாடல்-148.

# நியம நிலை.

பொய் கொலை களவு காமம் பொருளாசை
யிவ்வகை யெவையு மடக்க லியமமும்
பெற்றதற் குவத்தல் பெருந்தவந் தூய்மை
மற்றறி வுணர்தல் வழிபடனியமமும்
நிற்ற லிருத்தல் கிடத்த னடத்தலென்
றுற்றவிந் நான்கா முயரா தனமும்
அவ்விரு வகைக்கு மாதியு மந்தமும்
செவ்விய லாவிவை சிறந்திருந் தமையால்
பிரியாது நியம நிலைபெறற் கருள்கென
வாவேண்டு மென்ற னருகே
விரியா திரந்து வேண்டி யுயர்த்தது.

(பொ-ரை) பொய், கொலை, களவு, ஆசை, பணஆசை இப்படிப் பட்டவைகளை அடக்குதலான இயமும், பெற்றவரைக்கும் திருப்தி யடைதல், மகத்தானதவம், பரிசுத்தம், அறிவைஉள்ளபடியே யுணர் தல், வழிபடலானநியமமும், நிற்றல், இருத்தல், கிடைத்தல், நடத்தல் என்று பொருந்தின நான்குவகையினை யடக்கினதான ஆசனமும், அந்த இரண்டுவிதங்களுக்கும் முதலும் கடைசியும், அழகில்லாத இவைகள் சிறப்படைந் திருந்தமையால் நீங்காது நியமநிலையை அடைவதற்கு அருள் செய்யக்கடவது என்று இரந்து ஏத்தியது இது (எ-று) (1)

மனத்தைப்பார்த்துப் பலனிலையாம னில்லாமல்
அணைத் தன்புகூர்ந் தருள வேண்டும்.

பஞ்சரித் துப்பஞ் சரித்தியான் கொஞ்சியது
பார்த்தேனு மருள்பு ரியவும்
பஞ்சைபோ னின்றழும் பாவிக் கிரங்கிப்
பலன்றாவு னருள்பு ரியவும்
நின்சார்பை யன்றிவே றுண்டென்று மென்றென்று
நிலையாம லருள்பு ரியவும்
நெஞ்சம் பதைத்துப் பதைத்தடிமை திக்கற்று
நில்லாம லருள்பு ரியவும்
அஞ்சாமலென்றெனக் காதரவு சொல்லவு
மணைத்தாண்டு னருள்பு ரியவும்
அருகினி லிருத்தவுந் திருவருள் பொருத்தவு
மன்புகூர்ந் தருள்பு ரியவும்
வஞ்சகரு மஞ்சவுந் தவராஜ சிங்கமே
வாவேண்டு மென்ற னருகே

மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) தவராஜசிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! நான் அநேக விதத்தில் கொஞ்சியதை நீ பார்த்தாவது அருள்புரியவும், திக்கற்றவனைப்போல் இருந்து அழுகின்ற பாவியாகிய எனக்கு மனமிரங்கி பலன்கொடுக்க அருள்புரியவும், உன்னுடைய சார்பையல்லாமல் வேறே சார்பு இருக்கிறதென்று என்றைக்கும் எண்ணுதிருக்க அருள்புரியவும், மனம் பதைத்து பதைத்து அடிமையான நான் யாதொரு திக்குமில்லாமல் பரிதபிக்காமல் அருள்புரியவும், பயப்படாமல் எனக்கு ஒரு ஆதரவு சொல்லவும் சேர்த்தாண்டு அருள்புரியவும், என்னைச் சமீபத்திலிருத்தி வைக்கவும், திருவருளை எனக்குக் கொடுக்கவும், அன்புவைத்து அருள் புரியவும், வஞ்சகர்களும் பயப்படவும் எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (1)

மனத்தைக் கடாக்ஷித்துக் கரங்கொடுத்தணைத் தடுக்கவைத்துக்
குறைதீர்த்துக் குணமேற்ற வரவேண்டும்.

கானுக் கெறித்தநில வாகாத வண்ணங்
கடாக்ஷித்து னருள்பு ரியவும்
சல்லுக் கிரங்குமழை யாகாத வண்ணங்
கரங்கொடுத் தருள்பு ரியவும்
ஆனைவாய்க் குட்கரும் பாகாத வண்ணமு
மணைத்தாண்டு னருள்பு ரியவும்
ஆழித் துரும்பெனவுமாகாத வண்ணமு
மடுக்கவைத் தருள்பு ரியவும்
கோளைப் பழித்தகுடி யாகாத வண்ணமென்
குறைதீர்ந்து னருள்பு ரியவுங்
குருவற்ற சீடனென வாகாத வண்ணநற்
குணமேற்றி யருள்பு ரியவும்
மானம்வைத் துதவுமெய்த் தவராஜ சிங்கமே
வாவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்யக்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! காட்டில் எரிக்கும் சந்

திரனைப்போல் ஆக்கிவிடாமல் அருள்புரியவும், மலையில் பெய்யும் மழையைப்போல் செய்துவிடாமலும் கைகொடுத்தருள் புரியவும், ஆனைவாய்ப்பட்ட கரும்பாகாதபடி சேர்த்தாண்டு அருள்புரிவும், சமுத்திர நரும்பைப்போ லாகாதபடி சேர்த்துவைத்து அருள்புரியவும், அரசனைப் பழித்த குடிகள்போலாய் விடாதபடி அருள்புரியவும், குருவில்லாச் சீஷனுகா வண்ணம் நற்குணந் தந்து அருள்புரியவும், அபிமானம் வைத்து எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (2)

மனங்கதறுதற்குங் கலுழுதற்கு மாறாத மாதவமே
நெஞ்சிடையாமலேற்க வரவேண்டும்.

கண்ணே கருத்தேயெ னின்பமே யென்றடிமை
கதறுதற் கருள்பு ரியவும்
கண்ணீரு மாறாத புண்ணீரு மாகவுங்
கலுழுதற் கருள்பு ரியவும்
மண்ணுண மூவாசை மண்ணுக வுங்கருணை
மாறாது னருள்பு ரியவும்
மலைநுழைவு புக்கவும் மனவாசி சொக்கவும்
மாதவம் மருள்பு ரியவும்
எண்ணாத வெண்ணமெ லாமெண்ணி யெண்ணி நெஞ்
சிடையாம லருள்பு ரியவும்
என்னுலே யென்னுலு மொன்றுமில்லை யாவுநீ
ரேயேற்க வருள்பு ரியவும்
மண்ணுள்ள சித்தரொடு தவராஜ சிங்கமே
வாவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! கண்ணே! கருத்தே! என் இன்பமே! என்று அடியேனுன நான் கதறுவதற்கு அருள்புரியவும், கண்ணீரும் மாறாதபுண்ணீராகவும் அழுவதற்கு அருள்புரியவும், பொன்னுசை, பெண்ணுசை, மண்ணுசை என்கிற மூன்று ஆசைகளும் ஒழிய உன்னுடைய திருவருளை யருள்புரியவும், மலைக்குகைகளில் புகவும், மனேசாத்தில் மயங்கியிருக்கவும் மகத்தாகிய தவத்தையருள்புரியவும், எண்ணாத எண்ணங்களையெல்லாம் எண்ணி எண்ணி மனம் பின்னடைந்து போகாதபடி அருள்புரியவும், என்சத்தியம் என்னுல் ஒன்றுமேயில்லை, ஆகையால் எல்லாவற்றையும் நீயே யடைய

அருள்புரியவும். உலகத்திலுள்ள சித்தர்களுடன் தேவரீர் எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) ()

மனமுய்ய நிஷ்டைமோக்க முதிர்ந்துகத்தங்
கருணைகூர வரவேண்டும்.

நித்தனே நித்தபரி சுத்தனே சிற்றடிய
னேனுய்ய வருள்பு ரியவும்
நிருவிகற் பங்கொண்ட நின்மலா நந்தசுக
நிஷ்டைவைத் தருள்பு ரியவும்
முத்தனே நற்றவஞ் சித்திக்க வும்முத்தி
மோக்கமொன் றருள்பு ரியவும்
மூலப் பிராணனென வாலைப் பிராயம்
முதிர்ந்திடுமு னருள்பு ரியவும்
கத்தனே கத்தனே யென்றிடைய றுமலே
கத்துமெற் கருள்பு ரியவும்
கத்தாத டாவென்று பொற்று ளளித்துநற்
கருணைகூர்ந் தருள்பு ரியவும்
வைத்தமோ கத்துடன் றவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! அழியாதவனே! பரிசுத்தமானவனே! சிறு அடியனான நான் பிழைக்க அருள்புரியவும், பரஞானத்தை யடைந்த மலமற்ற சுகாநந்தத்தையுடைய சுகநிஷ்டையை யருள்புரியவும், முத்தக்கடவுளே! உண்மையான தவமானது எனக்குச் சித்தியாவதன்பொருட்டு முத்திவழி யொன்றை அருள்புரியவும், பாலப்பிராயமானது முதிர்ந்து விடுவதற்குமுன் மூலாதாரத்திலமையும் பிராணவாயுவுடன் அமைய அருள்புரியவும், கடவுளே! கடவுளே! என்று எப்போதும் சொல்லிக் கொள்ளுகின்ற எனக்கு அருள்புரியவும், அவ்விதம் கத்தவேண்டாமென்று உமது பொன்போலுந் திருவடிகளைக் கொடுத்து நல்ல கிருபைவைத்து அருள்புரியவும், இவ்விதம் கொண்ட ஆசையுடன் எனக்குச் சமீபமாக எழுந்தருளிவரவேண்டும். (எ-று) (4)

மனங்கொள்ளாமற் கொள்ளிவைத்திதயமலர்ந்து சதாநந்தக்
காட்சிக்கண்ணே யருளவரவேண்டும்.

கொண்டார்களைக்கொலும் பெண்டாசை யென்றடிமை
கொள்ளாம லருள்பு ரியவுங்

கொள்ளிவைத் துடலைக் கொளுத்துமுன் முச்சுடர்க்
  கொள்ளிவைத் தருள்பு ரியவும்
தண்டா மரைக்கமல மென்மட லவிழ்ந்தெனவி
  தயமலர்ந் தருள்பு ரியவுந்
தளதளென் றளவில்பே ரொளிகொப் பளித்திடு
  சதாநந்த மருள்பு ரியவும்
கண்டாலு மென்கலிக ளெல்லா மகன்று போங்
  காட்சிதந் தருள்பு ரியவும்
கண்கொண்டு காணவுங் கண்கண்ட தெய்வமே
  கண்ணேயு னருள்பு ரியவும்
வண்டாய்ப் பறந்துமெய்த் தவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே
மாதுணங் குடிவாழு மென்னகத் தீசனே
  மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) வண்டாகப் பறந்த உண்மையான தவராஜ சிங்கமே! என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீசுரனே! மௌன குருவே! பெண்சாதியினது ஆசையானது கண்டவர்களைக் கொல்லுவதாமென்று நினைத்து அவ்வாசையையடியேனை நான்கொள்ளாமலிருக்க அருள்புரியவும், கொள்ளிவைத்து சரீரத்தைக் கொளுத்திவிடுவதற்கு முன்னே மூன்று சுடர்களாகிய கொள்ளியை வைத்து அருள்புரியவும், தாமரையின் இதழ்கள் விரிந்தாலென்ன திருவுள்ள மலர்ந்து அருள் புரியவும், தேஜோமயமானது பளபளவென்று ஜொலிக்க என்றைக்கும் அருள்புரியவும், பார்த்தாலும் என்னுடைய கலியெல்லாம் தீர்ந்து போகும்படியான திருக்காட்சிகொடுத்தருள்புரியவும், கண்கொண்டு உணர கண்கண்ட தெய்வமே! நீஎனக்குத் திருவருள்புரியவும், எனக்குச் சமீபமாக எழுந்தருளிவரவேண்டும். (எ-று) (5)

மனத்தின் சமர்த்துச் சார்ந்திட வழிவிட்டு மண்ணா குருவே
குறைதீர வரவேண்டும்.

சகச்சூதை மாற்றிச் சுகச்சோதி யேற்றுஞ்
  சமர்த்தொன்றை யருள்பு ரியவும்
சாட்சாதி யீசுர சொரூபமே யானுனைச்
  சார்ந்திடற் கருள்பு ரியவும்
வகையற்ற சமையக் குதர்க்கங்க டத்திநல்
  வழிவிட்டு னருள்பு ரியவும்
மண்ணாசை யேகவும் பெண்ணாசை வேகவும்
  மண்ணாமு னருள்பு ரியவும்

குகைசேர வும்மாயை நகைதீர வும் மெங்கள்
குருவேயு னருள்பு ரியவும்
கொண்டாட்ட மாகவுங் கொத்தடிமை யாக்கியென்
குறைதீர்த்து னருள்பு ரியவும்
மகத்துவாய் நின்றமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகாத்துமாவாக விருக்கின்ற தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்வியக்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌன குருவே! உலகச் சூதை யொழித்து தேஜோமயத்தை ஏற்றுகின்ற சாமர்த்திய மொன்றை யருள்புரியவும், சாட்சாத் ஈஸ்வர சொரூபமாகவுள்ள உன்னை நான் அடைவதற்கு அருள்புரியவும், சமயவாதத்திலகப்படாமல் அருள்புரியவும், மண், பெண், பொன் இவைகளின் ஆசை ஒழிய அருள்புரியவும், மனக்குகையில் ஒடுங்கவும், மாய்கைதீரவும் எங்கள் குருவே! உங்களுடைய அருள்புரியவும், மனோசந்தோஷத்துடன் என்னை வாழி வாழி யடியவனுக்கி என்னுடைய குறையைத் தீர்த்து அருள் புரியவும், எனக்குச் சமீபத்தில் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (6)

மனங்கருதாது கைச்சரச நையாது நம்பிக்கிருபை
கேட்குமுன் வரவேண்டும்.

கஞ்சாவின் வர்க்கமுங் கஞ்சனிம யக்கமுங்
கருதாது னருள்பு ரியவும்
கைச்சரச மெல்லாங் கசந்தரச மாகவுங்
கைச்சரச மருள்பு ரியவும்
நஞ்சான மூவாசை நஞ்சாக வெந்நேரமு
நையாது னருள்பு ரியவும்
நாடவும் பாடவுந் தேடவும் மடிமையுனை
நம்பவும் மருள்பு ரியவும்
கெஞ்சாது கெஞ்சுமெற் குன்சார்வு தந்துநற்
கிருபைகூர்ந் தருள்பு ரியவும்
கேட்டது கொடுக்கநான் கேட்டது கொடுக்கநான்
கேட்குமுன் னருள்பு ரியவும்
வஞ்சமில் பரமார்த்த தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநாதனே.

(பொ-ரை) கபடில்லாத உயர்ந்த தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! கஞ்சா முதலியவைகளை நினையாதபடி அருள்புரியவும், சரசங்களெல்லாம் கசந்துவிட அருள்புரியவும், மூன்றாசைகளும் விஷயமாகவும் சரீரம் வருந்தாமலும் அருள்புரியவும், நாடவும், பாடவும், உனைத்தேடவும், உன்னை நம்பவும் அருள்புரியவும், இவ்விதம் கெஞ்சுகின்ற எனக்கு உன்னுடைய சார்பைக்கொடுத்து அருள்புரியவும், நான் கேட்டவைகளையெல்லாம் கொடுக்க கேட்குமுன்னே அருள்புரியவும், அடியேனுக்குச் சமீபத்தில் எழுந்தருளி வரவேண்டும்.(எ-று) (7)

மனநின்று நீந்ாது நாட்டாமற் கட்டவிழக்
காடுறைய வரவேண்டும்.

நிட்டூர மின்னார்கள் வெட்டையி லழுந்தாது
நின்றிடற் கருள்பு ரியவும்
நீச்சுநிலை யற்றயோ னிக்கேணி யாழ்ந்தடிமை
நீந்தாது னருள்பு ரியவும்
நட்டுங் கருந்தேளை யொத்தமுலை யென்றன்மேல்
நாட்டாம லருள்பு ரியவும்
நாறுநா ரியர்கள்புண் ணுற்றமோர் கனவிலு
நாடாம லருள்பு ரியவும்
கட்டையிற் போமுனே கட்டுபா சக்கயிறு
கட்டவிழ வருள்பு ரியவும்
காலமுஞ் சென்றசுடு காடுறையு முன்மனங்
காடுறைய வருள்பு ரியவும்
மட்டமே விட்டமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) உயர்வுமிகுந்த உண்மைத் தவராஜசிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுங் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! பெண்கள் மாய்கையில் அழுந்தாமலிருக்க அருள்புரியவும், பிறவியிற் சிக்காமலிருக்க அருள்புரியவும், பெண்களுடைய முலையின்மேல் படாதபடி அருள்புரியவும், பெண்களுடைய அல்குல் நாற்றத்தை ஒருநாளும் நாடாமல் அருள்புரியவும், சாவுமுன்னே பாசக்கயிற்றையவிழ்த்துக்கொள்ள அருள்புரியவும், காலங்கழிந்து சுடுகாடு போமுன்னர் மனமானது காட்டில் வாசஞ்செய்ய அருள்புரியவும், அடியேனுக்குச் சமீபத்தில் எழுந்தருளிவரவேண்டும். (எ-று) (8)

மனத்திற் குலாவாக் கொள்ளாவக்கரை ஆளாகச்
சிறப்புச் சீராட வரவேண்டும்.

கூசிக் குலாவுமட வார்களைக் கொஞ்சிக்
குலாவாது னருள்பு ரியவுங்
குஞ்சுங் குழந்தையுங் கஞ்சிக்கெ னைக்கோட்டி
கொள்ளாது னருள்பு ரியவும்
ஆசைப் பெருங்கங்கை நீந்தியக் கரைகாணு
மக்கரைக் கருள்பு ரியவும்
ஆளாக வொட்டாத பாழாசை பாழாகி
யாளாக வருள்பு ரியவுந்
தேசிகா நின்றிருச் சமுகதரி சனமாய்ச்
சிறப்புட னருள்பு ரியவும்
செல்வம் பொழிந்தடிமை யுல்லாச மாய்நின்று
சீராட வருள்பு ரியவும்
வாசங் கொழிக்கமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) தவராஜசிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! பெண்களிடத்தில் கொஞ்சி விளையாடாதபடி அருள்புரியவும், சமுசாரத்தில் பெண்டு பிள்ளைகள் சாப்பாட்டின் பொருட்டு என்னை வருத்தாதிருக்க அருள் புரியவும், ஆசையையொழிக்க அருள்புரியவும், குருவே! உன்னுடைய திருமுகதரிசனத்தை யருள்புரியவும், உன்னுடைய மௌனஞான செல்வத்தை யொழித்து நான் உல்லாசமாக விளையாட அருள்புரியவும், வாசனை வீசும்படி எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (9)

மனமேகி யெட்டுதற்கு மனமுவந்து மருவி ஓரா
துரைசெய வரவேண்டும்.

இனவாச மெல்லா மறந்துவன வாசத்தி
லேகிவிட வருள்பு ரியவும்
எட்டாத பேரின்ப வனுபூதி வழியவந்
தெட்டுதற் கருள்பு ரியவும்
மனமாயை சோரவும் மனவாசி யேறவும்
மனமுவந் தருள்பு ரியவும்

மாங்காயில் வண்டுபோ னீங்காத வண்ணமுண்
மருவிநின் றருள்பு ரியவும்
உனையன்றி யெனையடிமை கொள்வருண் டென்றடிமை
யோராம லருள்பு ரியவும்
ஓயா தரற்றியுங் கேட்கவிலை யோவதுவு
முரைசெய்து னருள்பு ரியவும்
வனிதையர் முயக்கற்ற தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) பெண்கள் மாய்கையற்ற தவராஜசிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌன குருவே! உறவினர் ஆசையொழிந்து காடாசைகொள்ள அருள்புரியவும், பேரின்பானு பூதியானது வலியவந்து கைகூடற் கருள்புரியவும், மாயைநீங்கி மனமானது சாதிசையில் ஏற அருள்புரியவும், மாங்காயின் வண்டைப்போல் நீங்காமல் அகஞானமடைய அருள்புரியவும்; உன்னை யல்லாமல் என்னை அடிமை கொள்ளுபவர்கள் வேறொருவரில்லை யென்றுணர அருள்புரியவும், இவ்வுலகம் பலவகையாகக்கதறியும் கேளாமலிருக்கின்றதோ அதையும் எனக்குச் சொல்லி அருள்புரியவும், எனக்குச் சமீபத்தில் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (10)

ஆ பாடல்-158.

ஐந்தாவது

# வளி நிலை.

இம்முறை யகலா நியைந்து தொடர்ந்து
செம்முறை புனையும் யோகஞ்சிறப்ப
உந்தியொடு புணர்ந்த விருவகை வளியுந்
தந்தமியக்கந் தடுப்படு வளிநிலை
என்னும் பான்மையி னிரேசக பூரகத்
தன்ன வாயுவைக் கும்பித் தடக்கும்
படித்திற னருள்கெனப் பணிந்து பணிந்து
முடித்தலை பராவி முன்னிரந் துயர்த்தது.

(பொ-ரை) இந்தக் கிரமத்தை விட்டொழியாது பொருந்தித் தொடர்ந்து நல்ல முறையைக் கொண்டிருக்கின்ற யோக மார்க்கமா

னது, சிறப்பையடைய தொப்புள்ஸ்தானத்தில் கலந்திருக்கின்ற இரண்டு வகையான காற்றுகளும், தங்கள் தங்களுடைய அசைதலைத் தடுப்பதே வளிநிலையாம் என்னும் குணத்தினால் இரேசகம், பூரகங்கள் செய்த வாயுவைக் கும்பகஞ்செய்து அடக்கும்படி வல்லமையைக் கொடுவென்று வணங்கி முடிப்பதற் பொருட்டுத் துதித்து முற்பட்டு யாசித்து உயர்த்தது இது. (எ-று)

மனம் விவரித்து வெட்டி விட்டெண்காலினால் இருடீரப்
பண்புதந்து பறந்தாட வரவேண்டும்.

வெட்டவெளி யாய்ந்ததும் விட்டுவெளி பாய்ந்ததும்
  விவரித்து னருள்பு ரியவும்
விட்டகுறை தொட்டகுறை யெட்டி யென் கிட்டவா
  வெட்டிவிட் டருள்பு ரியவும்
எட்டொன்று மெட்டவும் மீராறு கெட்டவு
  மெண்காலி னருள்பு ரியவும்
இரவிமதி யேகவும் மிரவுபக லாகவும்
  மிருடீர வருள்பு ரியவும்
பட்டமது காற்றாற் பறந்தாடுசூத்திரப்
  பண்புதந் தருள்பு ரியவும்
பாராதி யண்டப் பரப்பெலாம் யானும்
  பறந்தாட வருள்பு ரியவும்
வட்டந் துதிக்குமெய்த் தவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
  மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) உலகத்தார் துதிசெய்கின்ற உண்மைத் தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்வியக்ஷேத்திரத்தில் வாழ்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌன குருவே! வெட்டவெளியை ஆராய்ச்சிசெய்ததும், அதைவிட்டு வெளியிடத்தில் பாய்ந்ததும், விவரப்படுத்தி உன்னுடைய திருவருள்புரியவும், விட்டகுறை தொட்டகுறையானது எட்டி என்சமீபமாகவர எட்டிவிட்டு அருள்புரியவும், எட்டையும் ஒன்றையும்* அடையவும், பன்னிரண்டுசரங்களையும் கட்டவும், எண்ணுகின்ற சரமார்க்கமாக அருள்புரியவும், சூரிய சந்திரர்கள் போகவும், இராத்திரியும் பகலாகவும் அஞ்ஞானம் நீங்கவும் அருள்புரியவும், காற்றினால் பட்டம் பறந்தாடுகின்ற சூஸ்திர குணத்தைக் கொடுத்து அருள் புரியவும், உலக முதலிய சகல அண்டங்களின் பரப்புகளில் எல்லாம் நானும் பறந்தாட அருள்புரியவும், எனக்குச் சமீபத்தில் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (1)

மனம் பசுவைப் படுக்கவைத்துப் பண்பாகக் கட்டுதற்குக்
கருணைவைத்து மேன்மேலும் வெருளாமல் வரவேண்டும்.

பாற்பசு தனைப்பக்கு வத்துடன் பதியிற்
படுக்கவைத் தருள்பு ரியவும்
பால்கறத் துண்டுபசி தாகமற யோகநெறி
பண்பாக வருள்பு ரியவும்
காற்பசு தனைக்காலிரண்டும் முடங்கவெளி
கட்டுதற் கருள்பு ரியவும்
கன்றினுக் குத்தாய் கனிந்திரங் குதலெனக்
கருணைவைத் தருள்பு ரியவும்
மேற்படியி லேற்றியெனை மேலாம் பதந்தந்து
மேன்மேலு மருள்பு ரியவுங்
வேதவே தாந்தவெறு வெளிகாட்டி விட்டடிமை
வெருளாம லருள்பு ரியவும்
மாற்படிக் குதவு மெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) பெரியபடிகளுக்கு உதவுகின்ற உண்மையான தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! பாலைக்கறக்கின்ற பசுவை பக்குவமாக நிலையில் படுக்கவைத்து அருள்புரியவும், பாலைக்கறந்து குடித்து பசியும் தாகமும் நீங்க யோகநெறியை குணமாக அருள்புரியவும், காலாகிய பசுவினது கால்கள் இரண்டும் முடங்க வெளியே கட்டுவதற்கு அருள்புரியவும், கன்றுக்குத் தாய் கனிவுகொண்டு இரங்குவதைப் போல கிருபை வைத்து அருள்புரியவும்; என்னை உயர்ந்தபடியில் ஏற்றி மேலாம் பதவியை அனுக்கிரகித்து மேன் மேலுமாக அருள்புரியவும், வேத வேதாந்தங்களில் சொல்லப்படுகின்ற வெளியைக் காட்டிவிட்டு அதைக் கண்டதினால் அடியேனை நான் பயப்படாமல் அருள்புரியவும், எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (2)

மனமெட்டொன்றை யேறாமல் வட்டமுற வைத்தாட்டி
யடக்கி வரவேண்டும்.

எட்டெட்டு மெட்டினுட் கட்டவு மெட்டாத
வெட்டொன்றை யருள்பு ரியவும்
ஈராறு கலையுமிரு நான்குவலை மாட்டிவெளி
யேறாம லருள்பு ரியவும்

மட்டடங் காதபரி வட்டமும் மேற்சோம
வட்டமுற வருள்பு ரியவும்
மதியமிர்த மும்பொங்கி வழியமூ லக்கனலை
வைத்தெடுத் தருள்பு ரியவும்
அட்டமா சித்திநற் சட்டமா யிட்டமா
யாட்டிவைத் தருள்பு ரியவும்
அழிவின்றி விளைகின்ற வெளிகொண்டு வெளிசென்
றடங்கிடற் கருள்பு ரியவும்
வட்டமதி போலமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! பதினாறு கால்களையும் உள்ளேயே யடக்கவும், எட்டாதிருக்கின்ற ஒரு எட்டை யருள்புரியவும், பன்னிரண்டு கலைகளையும் எட்டுவலையில் மாட்டி வெளியில் சென்று விடாமல் அருள்புரியவும், எண்ணுக்கடங்காத பரிவட்டமும் அதற்கு மேல் சோம வட்டத்தையடைய அருள்புரியவும், சந்திராமிர்தமும் ததும்பி வழிய மூலத்திலுண்டாகும் அக்கினியை வைத்தெடுத்து அருள்புரியவும், அஷ்டமாசித்திகள் நற்சட்டமாகவும் இஷ்டமாகவும், ஆட்டிவைத் தருள் புரியவும், அழியாமல் விளைகின்ற வெளியைக்கொண்டு உயர் வெளியில்போய் அடங்கி விடுவதற்கு அருள்புரியவும், வட்டமாகிய சந்திரனைப்போல உண்மைத் தவராஜ சிங்கமே! என்னிடத்தில் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (3)

மனமனை யுறைந்திடற்குச்சரித்து மாட்டிவைத்தடைத்துச்
சார்ந்திடற்குச் சற்றேனும் வரவேண்டும்.

உந்தியின் கீழ்நின்று தித்தசுழி மூனைமனை
யுறைந்திடற் கருள்பு ரியவும்
ஒருநான்கு மாகவு மிருநான்கு மேகவு
முச்சரித் தருள்பு ரியவும்
மந்திரத் தைக்கந் தரத்தூடு வக்கென்று
மாட்டிவைத் தருள்பு ரியவும்
வாயிலோ ரொன்பதும் வன்னிநடு வணையொன்று
வைத்தடைத் தருள்பு ரியவும்
சந்திர சூரிய ரிரண்டுமொன் றேயொடொன்று
சார்ந்திடற் கருள்பு ரியவுஞ்

சத்தாகி யென்னுளச் சித்தாகி நின்றநீ
சற்றேனு மருள்பு ரியவும்
வந்தவழி யொளிரமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! தொப்புளின் கீழிருந்து உண்டான சுழிமுனை என்னும் வீட்டில் வாசஞ்செய்வதற்கு அருள்புரியவும், ஒரு நான்கும் பொருந்தவும், இருநான்கான எட்டும் போகவும் உச்சரித்து அருள்புரியவும், மந்திரத்தை. கந்தரத்தோடு சேர்த்து வக்கென்று மாட்டி வைத்து அருள்புரியவும், ஒன்பது வாசல்களையும், அக்கினியில் நடுவளையில் ஒன்றைவைத்து அருள்புரியவும், சந்திரசூரியர்கள் இருவரும் மனத்தின் ஞானமாகியும் இருந்த நீ கொஞ்சமாவது அருள்புரியவும், நான் வந்தவழி விளங்க உண்மையான தவராஜசிங்கமே! என்றனிடத்தில் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (4)

மனமுன்னேற மூட்டி விளையாட வீடுபுக ஏற்றி
யேகாம லருளவரவேண்டும்.

மூலவரை யுண்ணின்ற தேகிமேற் கொண்டுநான்
முன்னேற வருள்பு ரியவும்
முன்னேறு குதிரைதனை மோனகுற டாக்கொண்டு
மூட்டிவிட வருள் புரியவும்
மேலூரு வீதியில் வையாளி போட்டங்கு
விளையாட வருள் புரியவும்
மேலுமுச் சந்திமேற் சந்தினால் வந்துமேல்
வீடுபுக வருள்பு ரியவும்
ஏலேலோ வென்றுகா லிரண்டையு மிழுத்துயா
வேற்றுவித் தருள்பு ரியவும்
என்னையே மூட்டவு மெம்பிரா னென்னைவிட்
டேகாம லருள்பு ரியவும்
மாசியு மேலான தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) பெருமையைக் கொடுக்கின்ற உயர்ந்த தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்

தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! மூலாதாரத்துள்ளிருந்த தேசியை மேற்கொண்டு நான் முன்னுக்கு வர அருள்புரியவும், முன்னதாக ஏறுகின்ற கலையாகிய குதிரையை மௌன மென்னும் குறடாவினால் மூட்டி விடும்படி அருள்புரியவும்,மேல்இருக்கின்ற ஒரு வீதியில் வையாளி போட்டு அவ்விடத்தில் விளையாட அருள்புரியவும்,இன்னும் முச்சந்திமேற் சந்தி இவைகளின் வழியாக வந்து மேல் வீட்டில் சேரும்படி அருள் புரியவும்,சரங்கள் இரண்டையும் ஏலேலோவென் று சொல்லியிழுத்து உயர ஏற்றி அருள்புரியவும், என்னையே மூட்டுவிக்கவும்,எம்பெருமானுனவன் என்னை விட்டுப்போகாதபடி அருள்புரியவும், என்னிடத்தில் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (5)

மனமிடையாம லென்னை யேற்குமாளாக அயர்ந்து
நடனமிட நயனமிட வரவேண்டும்.

இடைபிங் கலைகூடி யங்குசுழி தடையுணின்
றிடையாம லருள்பு ரியவும்
என்னையறி யாமலு மொளித்தெனு ளிருந்தாடு
மென்னையெற் கருள்பு ரியவும்
அடைகாயொ டிலைசருகு பக்ஷணம் பண்ணியா
ளாக வருள்பு ரியவும்
அஷ்டாங்க யோகநித் திரைகொண்டு சும்மா
வயர்ந்திடற் கருள்பு ரியவும்
நடனமிட பரியுமண் ணனவெளி சென்றுதிரு
நடனமிட வருள்பு ரியவும்
நயனநடு வணையினடு வணையுஞ் சுயஞ்சோதி
நயனமிட வருள்பு ரியவும்
வடுவற்ற சடையுற்ற தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநாதனே.

(பொ-ரை)குற்றமற்ற சடைகளையுடைய தவராஜசிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே!இடைகலையும்,பிங்கலையுஞ்சேர்ந்து' அவ்விடத்தில்சுழிமுனைத் தடை செய்யவிருந்து பின்னிடையாதபடிஅருள்புரியவும், என்னை உணராதவண்ணம் ஒளித்து எனக்குள்ளிருந்து ஆடும் என்னை எனக்கு அருள் புரியவும், இலை, காய், சருகு இவைகளைப் புசித்து யான் ஆளாகும்படி யருள்புரியவும், அஷ்டாங்க யோக நித்திரையைக் கொண்டு சும்மா

விருப்பதற்கு அருள்புரியவும், நடிக்கின்ற குதிரையும் பூமியையாள வெளியேசென்று திருநடனஞ்செய்ய அருள்புரியவும், கண்களின் நடுவணையில் நடுவே சேர்கின்ற சுயஞ்சோதியாகிய சயனத்தைக்கொடுக்க அருள்புரியவும், எனக்குச் சமீபத்தில் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (6)

மனத்திற்குக் கொடுத்துக் கொளுத்தாமலூட்டி உட்புகத்
தயைபுரிந்து சார்பொன்றவரவேண்டும்.

கொள்ளாது வெள்ளம்வரு முன்னணை கோலிக்
கொடுத்துநல் லருள்பு ரியவும்
கும்பித்தி ரேசித்த லொடுகொல்ல னுலையிற்
கொளுத்தாம லருள்பு ரியவும்
உள்ளே முளைத்தெழுந் துயர் பனையி லூறுகள்
ளூட்டிவைத் தருள்பு ரியவும்
ஓடுமோ கடகமு மோங்கார சாரமு
முட்புகற் கருள்பு ரியவும்
தள்ளாத படியடிமை கொள்ளவுந் தாயெனத்
தயைபுரிந் தருள்பு ரியவும்
தானென்று நின்றுதற் காத்திரட் சித்துனது
சார்பொன்ற வருள்பு ரியவும்
வள்ளலாய் நின்று மெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) உண்மையான தவராஜசிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! மிகுந்த வெள்ளமானது வருவதற்கு முன்னமே அணையைக் கோலிக்கொடுத்து நல்ல அருள்புரியவும், கும்பகம், ரேசகம் இவைகளைச் செய்வதுடன் கொல்லனுடைய உலையில் கொளுத்தாதபடி அருள்புரியவும், உள்ளே முளைத்து எழுந்து உயர்கின்ற பனையில்சுரக்கின்ற கள்ளை உண்பித்து அருள்புரியவும், ஓடுகின்ற கடகமும், ஓங்காரசாரமும் உள்ளேசெல்லுவதற்கு அருள்புரியவும், என்னைத் தள்ளிவிடாதபடி அடிமையாக்கிக் கொள்ளவும், தாயைப்போல் செய்தாளவும் அருள்புரியவும், தானே எல்லாவற்றிற்கும் முதன்மையானவனென்று நினைந்து காத்துரட்சித்துஉன்னுடைய சரீரமானது எனக்கு வர அருள்புரியவும், வள்ளலாக எழுந்தருளி எனக்குச் சமீபமாக வர வேண்டும். (எ-று) (7)

மனமுளவுகாட்டிக் கட்டியொட்டி லொத்தூதத்
தேயாமற் றிடப்பட வரவேண்டும்.

காயா புரிக்கோட்டை கைக்கொள்ளு தற்குளவு
காட்டிவிட் டருள்பு ரியவும்
காலோய்ந் தயர்ந்துவிடு முன்கா லிரண்டினைக்
கட்டிவைத் தருள்பு ரியவும்
ஓயாது கும்பித் திரேசித்த வுட்டங்கு
மொட் டொன்றை யருள்பு ரியவும்
ஒற்றாதியூதா திரண்டுமொன் றோடொன்று
மொத்தூத வருள்பு ரியவும்
தேயாத விரவிமதி யுந்தேய வுஞ்சுழிமுனை
தேயாம லருள்பு ரியவும்
தேவரீர் திருவடிக் காளாகி யடியேன்
றிடப்படற் கருள்பு ரியவும்
மாயா மயக்கற்ற தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மாயாத மயக்கமானது ஒழிந்த தவராஜசிங்கமே! மகத்தாகியகுணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! காயாபுரிக்கோட்டையைக்கைக்கொள்ளுவதற்குரிய உளவைக் காட்டி அருள்புரியவும், கால்கள் ஓய்ந்து தளர்ந்து விடுவதற்கு முன்னே இரண்டு காலங்களையும் கட்டிவைத்து அருள்புரியவும், இடைவிடாமல் கும்பகஞ் செய்து இரேசகஞ்செய்து உள்ளே தங்குகின்ற ஒரு கதலிமொக்கை அருள்புரியவும், ஒற்றை ஊதியூதாமல் இரண்டும் ஒன்றொடொன்றும் இரண்டும் ஒன்றோடொன்றும்ஒத்து ஊதுதற்குஅருள்புரியவும், தேயாத சூரிய சந்திரர்களுந் தேயவும், சுழிமுனையானது தேயாமலுமருள்புரியவும், தேவரீருடைய திருவடிகளுக்காளாய் அடியேனை நான் திடமடைவதற்கு அருள்புரியவும், எழுந்தருளி அடியேனுக்குச் சமீபமாக வரவேண்டும். (எ-று) (8)

மனத்தை காட்டிக் காப்பாற்றிப் பீறுமற் பெலப்பாடு
நெருங்கநேரிடவரவேண்டும்.

காற்றைப் பிடிக்கவுங் கரகத் தடைக்கவுங்
கட்டிவைத் தருள்பு ரியவும்
காகந் தனைக்காறு றுருட்டியுடை யாமலுங்
காப்பாற்றி யருள்பு ரியவும்

பீற்றிலோ ரொன்பதும் மூடவுங் காற்றதிற்
  பிறழும லருள்பு ரியவும்
பின்னுமுன் னும்பிறழ வொட்டாது கட்டும்
  பெலப்பாடு னருள்பு ரியவும்
நேத்திர மிரண்டுமுன் றோற்றாவு கொண்டிட
  நெருக்குண்டு னருள்பு ரியவும்
நெற்றிநே ரிட்டவெளி பற்றிபா யவுநிஷ்டை
  நேரிடற் கருள்பு ரியவும்
வாத்தியா ராகமெய்த் தவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
  மவுனதேசிகநா தனே

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! காற்றைப் பிடித்துக் கரகத்திலடைக்கவும், கட்டிவைத்து அருள்புரியவும், கரகத்தைக் காற்றினுருட்டியுடையாமலும் காப்பாற்றி அருள்புரியவும், தொளைகள்ஒன்பதும் மூடவும், பிறகு காற்றினல் தொளையடையாமலிருக்கவும் அருள்புரியவும், பின்னும்முன்னும் பிறழவொட்டாமல் கட்டுகின்ற பலாபலத்தை அருள்புரியவும், இரண்டுகண்களும் முன்னே காணப்பட உன் அருள்புரியவும், நெற்றிக்கு நேராக விருக்கின்ற சிதாகாசத்தைப்பற்றிபாயவும், நிஷ்டைகூடுவதற்கான வழிகூடவும் அருள்புரியவும், உபாத்தியாராக உண்மைத் தவராஜசிங்கமே! நீர் எனக்குச் சமீபத்தில் எழுந்தருளி வரவேண்டும். (9)

மனந் தின்னச் சுற்றக்கட்டிக் காத்துக் கூட்டிக்
கொடிபோட வரவேண்டும்.

துள்ளுமன வாசிமேற் கொள்ளவும் வையாளி
  துள்ளவுன் னருள்பு ரியவும்
தூரநட வாதுமேன் முச்சந்தி வீதியைச்
  சுற்றவிட் டருள்பு ரியவும்
கள்ளரறி யாதுமுள் ளறையிலென் குதிரையைக்
  கட்டிவைத் தருள்பு ரியவும்
கட்டாம லுங்கதவு சாற்றவும் வாயிலிற்
  காத்திருந் தருள்பு ரியவும்
கொள்ளையிட வோலைவந் தாலும் வெருட்டியே
  கூட்டிவிட் டருள்பு ரியவும்

கோட்டையுங் கைவசங் கொண்டுகொண் டுன்றன்
கொடிப்போட வருள்பு ரியவும்
வள்ளலென வோடிமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! துள்ளுகிற மனமென்னும் குதிரையின் மேலேறிக் கொள்ளவும், வையாளியானது துள்ள உன்னுடைய அருள்புரியவும், தூரமாக நடக்காமல் மேலேமுச்சந்திவீதியைச்சுற்ற விடுத்து அருள்புரியவும், திருடர்கள் உணராதபடி உள்ளறையில் என்னுடைய குதிரையைக் கட்டிவைத்து அருள்புரியவும், கட்டாமலும் கதவைச்சார்த்தவும் வாசலிற் காவல்செய்து கொண்டிருந்து அருள்புரியவும், கொள்ளை யடிப்பதாக ஓலையானதும் வந்தாலும் அவ்வோலைக் குரியவனை வெருட்டி யோட்டிவிட்டு அருள்புரியவும், கோட்டையைக் கைவசமாக்கிக்கொண்டு உன்னுடைய கொடியை நாட்ட அருள்புரியவும், வள்ளலாக ஓடி உண்மையான தவராஜசிங்கமே! நீர் எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (10)

ஆக பாடல் -168

ஆறாவது

# தொகை நிலை.

அடங்கா தடங்கி யமைதற் காகினு
மடங்கா தியங்கு மறிபொறி யதனுற்
பொறிபுணர் வெல்லாம் புலத்தின் வழாமை
ஒருவழிப் படுத றொகைநிலைப் புறமென
ஓதிய முறைமைபோ லொன்றினோ டொன்று
வாதியன் றடாது மடங்கி யொருங்குற
நன்னிலை புணர்ந்து நாயக வென்றெழு
திந்நிலை யருள்கவென் றிரந்திரந் துயர்த்தது.

(பொ-ரை) அடங்காமலடங்கிப் பொருந்து வதற்காலும் ஒளியாது சஞ்சரிக்கின்ற ஐம்பொறிகளினுல் பொறியுணர்ச்சிகளெல்லாம் ஐம்புலத்தின் வழாமல் ஒருவழியேயாகுதலேதொகைநிலையாகும். புறம் பென்று சொல்லின முறைமையைப்போல ஒன்றினுடனென்று அடாத படி மடங்கி ஒருப்பட உண்மையான நிலையிற் கலந்து நாயகனே!

என்று இந்த நிலையிலெழுந்து அருள் செய்யக்கடவர் என்று யாசித்து உயர்த்தினதாகும். (எ-று)

மனமிணக்கியேற்றி யடங்கி யடைந்து
சார்ந்தொன்றாக வரவேண்டும்.

எந்நாளு மந்திரமு முன்னாத தந்திர
மிணக்கிவைத் தருள்பு ரியவும்
எட்டங் குலத்துக்கு மெட்டாத கந்தரத்
தேற்றிவிட் டருள்பு ரியவும்
அந்நாள மீதுகண் ணாக்குமூக் குச்செவி
யடங்கிடற் கருள்பு ரியவும்
ஆநந்த வொளிகண்டு நான் வந்த வெளிசென்
றடைந்திடற் கருள்பு ரியவும்
தன்னிலே தானா யயர்ந்தடிமை தன்மயஞ்
சார்ந்திடற் கருள்பு ரியவும்
சர்வபரி பூரண சதாநந்த மோனப்பிர
சாதமொன் றருள்பு ரியவும்
மன்னுமுனி வர்க்குதவு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! எந்தக் காலத்திலும் மந்திரத்தையும், நினைக்காத தந்திரத்தையும் சேர்த்து வைத்து அருள்புரியவும், எட்டு அங்குலத்துக்குமெட்டாத ஆகாயத்திலேற்றி விட்டு அருள்புரியவும், அந்த நாளத்தின் மேல் கண், நாக்கு, மூக்கு, செவி இவைகள் அடங்குவதற்கு அருள்புரியவும், ஆநந்தமான தேஜஸைக்கண்டு நான் வந்த வெளியில் சென்று அடைவதற்கு அருள்புரியவும், தன்னிலே தானாய் அடங்கி அடிமையினுடைய மயத்தைச் சேர்வதற்கு அருள்புரியவும், சர்வபரிபூரண ஆநந்த மௌனப்பிரசாதம் ஒன்றை அருள்புரியவும், நிலைபெற்ற முனிவர்களுக்கு உதவுகின்ற தவராஜசிங்கமே! எனக்குச் சமீபத்தில் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (1)

மனமுழங்க மூட்டி மேலேற்றி மேலுமெற்குச்
சந்தானஞ் சார்ந்திட வரவேண்டும்.

மூலப் பிராணனைச் சண்டமா ருதமென
முழங்கவிட் டருள்பு ரியவும்

மும்மண்ட லங்களும் முட்டும் படிக்கங்கி
மூட்டிவைத் தருள்பு ரியவும்
மேலாம் பதங்காட்டு மெய்ஞ்ஞான நாலேணி
மேலேற்றி யருள்பு ரியவும்
மேலுமே லானநா லாம்படி கடத்திமேன்
மேலுமெற் கருள்பு ரியவும்
சாலோக சாமீப சாரூப சாயுச்ய
சந்தான மருள்பு ரியவும்
சாசுவத சாம்பரதா யத்தோடு சதாநிட்டை
சார்ந்திடற் கருள்பு ரியவும்
மாலையணி மார்பனே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மூலாதாரத்திலுள்ள பிராணவாயுவைச் சண்டமாருதம்போல முழங்கும்படி விட்டு அருள்புரியவும், மும்மண்டலங்களிலும் முட்டும் பொருட்டு அக்கினியை மூட்டிவைத்து அருள்புரியவும், உயர்ந்த பதவியைக் காட்டுகின்ற உண்மை ஞானமான நாலேணியின் மேலேற்றி அருள்புரியவும், அதற்கு மேலான நாலாம்படியைக் கடத்தி மேன்மேலும் எனக்கு அருள்புரியவும், சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுஜ்ஜியம் இவைகளைச் சந்தானமாக அருள்புரியவும், புராதனமான சாம்பிரதாயத்துடன் சதாநிஷ்டையுங் கைகூடுவதற்கு அருள்புரியவும், புஷ்பமாலை தரித்த மார்பையுடையவனே! தவராஜ சிங்கமே! எனக்குச் சமீபத்தில் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (2)

மனத்தைத் திறந்து திறவாமல் கட்டிக்கலீரென்ன
ஆட்டியாளாக்கியருள வரவேண்டும்.

திண்டுமுண் டானவா ருதாரவீடுந்
திறந்துதந் தருள்பு ரியவும்
திருகுமுரு காநின்ற வாயிலோ ரொன்பதுந்
திறவாம லருள்பு ரியவும்
கண்டசரமாலையங் கென்றுகண் டந்தனிற்
கட்டிவைத் தருள்பு ரியவும்
காலினின் றதம்ணி யோசைக் கலீர்க்கலீ
ரென்னவே யருள்பு ரியவும்

அண்டர்களு நின்றுதுதி கொண்டிடவு மெனைநடன
மாட்டிவைத் தருள்பு ரியவும்
அஷ்டாங்க யோகநன் னிஷ்டையினும் வைத்துமக்
காளாக்கி யருள்பு ரியவும்
மண்டல மெலாந்தொழுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) பூமண்டலத்தார்களெல்லாம் தொழப்படுகின்ற தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச் சுரனே! மௌனகுருவே! திண்டிமுண்டாயிருக்கின்ற ஆறு ஆதார வீடுகளைத் திறந்து எனக்கு அருள்புரியவும், பலவகை திருகு முருகாக விருந்த ஒன்பது வாசல்களையுந் திறவாமல் அருள்புரியவும், கண்டத்தில் சரமாகிய மாலையை அங் என்றுசொல்லி கண்டத்திலேயே கட்டிவைத்து அருள்புரியவும், காலில் நன்மையையுடைய மணியோசையானது கலீர் கலீர் என்று அருள்புரியவும், தேவர்களு மிருந்து துதிசெய்தும் என்னை நடனஞ்செய்வித்து அருள்புரியவும், அஷ்டாங்க யோகத்தை நல்ல நிஷ்டையில் வைத்து உமக்கு ஆளாக்கி யருள்புரியவும், எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

மனந் தம்பிக்கத் தம்மனம் பஞ்சாகப் பாழ்தந்து
கருணைக் கதியளிக்க வரவேண்டும்.

தசநாத மாமுன்ன பானவா யுவினைவிட்
டம்பிக்க வருள்பு ரியவும்
தாரணியி லங்கென்று முச்சரித் திடுஜலத்
தம்பனம் மருள் புரியவும்
பசுபாச நேசப் பெரும்பாவ மனவிட்ட
பஞ்சாக வருள்பு ரியவும்
பாழான மூன்றுசை பாழாக வும்மூன்று
பாழ்தந்து னருள்பு ரியவும்
கசமான சிற்றின்ப விடமுண்டு சாகாது
கருணைகூர்ந் தருள்பு ரியவும்
கருணைநிதி யேசரண மடையுமடி யேற்குநற்
கதியளித் தருள்பு ரியவும்
வசியவச னித்தலொடு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! பத்து நாதங்களில் அபானவாயுவை விட்டுத் தம்பிக்க அருள்புரியவும், உலகத்தில் அங் என்று உச்சரித்து ஜலத்தம்பனமருள்புரியவும், பசுபாசம் இவைகளில் வைத்திருக்கின்ற பெரும் பாவமானது நெருப்பிலிட்ட பஞ்சைப்போலாக அருள்புரியவும், பாழ்பட்ட மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை இம்மூன்றும் பாழாகவும், மூன்று பாழை யருளிச் செய்து அருள் புரியவும், மற்றுள்ள சிற்றின்ப விஷயத்தைப் புசித்து சாகாதபடி கருணை தந்து அருள்புரியவும், கருணாநிதியே! சரணஞ்செய்யும் அடியேனுக்கு உயர்ந்த மோட்சத்தைக் கொடுத்து அருள்புரியவும், வழியமென்று சொல்லுதலுடனே தவராஜசிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (4)

மனத்தகமாகச் சுத்திசெயச் சொக்கிவிட
மாறிட வற்றறு தருளவரவேண்டும்.

அத்திமி லுதித்தெழு மகத்தீ யெரித்தே
யகந்தீய வருள்பு ரியவும்
அத்தீயை நத்தியு மிருந்தே யறந்தங்கி
யாகுக வருள்பு ரியவுஞ்
சுத்தபரி சுத்தமது வாகதச நாதமுஞ்
சுத்திசெய்தருள்புரியவுஞ்
சோடசந் தன்னையுஞ் சோமவட் டந்தனிற்
சொக்கிவிட வருள்பு ரியவும்
மத்திமி லிருந்தமதி யமுதூற்றி நரைதிரையு
மாறிடற் கருள்பு ரியவும்
வாரியை நிகர்த்தவருள் வாரிகளை தத்தவும்
வற்றறு தருள்பு ரியவும்
வத்துமய மாய்நின்ற தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) வஸ்துசொரூபமாயிருந்த தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! எலும்பிலுதித்து எழுகின்ற மனத்தீயை எரித்து அகமானது தீயும்படி அருள்புரியவும், அந்தத்தீயை விரும்பியுமிருந்து தருமத்தைத் தாங்கியாகும்படி அருள்புரியவும், பரிசுத்தமாகும்படி தசநாதங்களையும்

சுத்திசெய்து அருள்புரியவும், பதினாறையும் சந்திரவட்டத்தில் சொக்கியிருக்க அருள்புரியவும், நடுவேயிருந்து சந்திர அமிர்தத்தையூற்றி நரை திரைகள் மாறுவதற்கு அருள்புரியவும், சமுத்திரத்தை யொத்த திருவருள் வாரியானது கரையில் ததும்பும்படி வற்றாதிருக்க அருள் புரியவும், எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும்.(எ-று) (5)

மனம் வரம் வசியமடர்ந் தடங்கிச் சோர்ந்து
சுருண்டிட வரவேண்டும்.

வாதனை யிறக்கவுஞ் சாதனை நிறக்கவும்
வரமளித் தருள்பு ரியவும்
வாசிதனி லேற்றவும் பாசவினை மாற்றவும்
வசியமெற் கருள்பு ரியவும்
ஆதார மாறினுஞ் சேதாரம் வாரா
தடர்ந்தேற வருள்பு ரியவும்
அங்கென்று கும்பித்து வங்கென்றி ரேசித்
தடங்கென்று னருள்பு ரியவும்
சூதான மானவெறு வெட்டவெளி சென்றங்கு
சோர்ந்திடற் கருள்பு ரியவுஞ்
சோதிமணி மண்டபக் கமலா சனத்திற்
சுருண்டிடற் கருள்பு ரியவும்
மாதவர்க் கரசனே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) தவசிரேஷ்டர்களுக்கு அரசனே! தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! வேதனைகளெல்லாம் நீங்கவும், சாதனைகளெல்லாம் நிறக்கவும் வரங்கொடுத்து அருள்புரியவும், சரத்தில் ஏற்றவும் பாசங்களை மாற்றவும் வசியத்தை எனக்கு அருள்புரியவும், ஆறுதாரங்களிலும் யாதொரு சேதமும் வராமல் அமர்ந்து ஏறுவதற்கு அருள்புரியவும், அங் என்று கும்பகஞ்செய்து வங் என்று ரேசித்து அடங்கென்று உன்னுடைய அருள்புரியவும், சூதான ஆகாயமாகிய வெட்டவெளியிற் போய் அவ்விடத்தில் சேர்வதற்கு அருள்புரியவும், தேஜோமயத்தையுடைய மணிமண்டபத்திலுள்ள கமலாசனத்தில் சுருண்டிருப்பதற்கு அருள்புரியவும், எனக்குச் சமீபத்தில் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (6)

மனங்குதித்துக் கூத்தாடக் கிட்டுதற்குக் கிருபைபுகு
தெப்போது மருள வரவேண்டும்.

குதிகொள்ளு மச்சுமட் டத்தைப் பிடித்துக்
குதித்தேற வருள்பு ரியவும்
கோபுரத் தடியினிற் கொஞ்சிநட னங்கொண்டு
கூத்தாட வருள்பு ரியவும்
கெதிகொண்டு பாய்ந்துமடி யாறுங் கடந்துளுங்
கிட்டுதற் கருள்பு ரியவும்
கெற்பகிர கத்தினிற் குதிரையைக் கட்டவுங்
கிருபைதந் தருள்பு ரியவும்
பொதிகைமா மலையது பொதும்பிலடி யேனும்
புகுந்திடற் கருள்பு ரியவும்
போதுமென வாழ்வதுஞ் சித்தமென் பாக்யமெய்ப்
போதுமென வருள்பு ரியவும்
மதியென வெழுந்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) உண்மையான தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! கூத்தாடுகின்ற அச்சுமட்டத்தைப் பிடித்து குதித்தேற அருள்புரியவும், அங்கோசரத்தின் அடியில் கொஞ்சி நடனங்கண்டு திருக்கூத்தாட அருள்புரியவும், கெதிகொண்டுபாய்ந்து அடியாரையுங்கடந்து அகத்தில் கிட்டுவதற்கு அருள்புரியவும், கர்ப்பமென்றும் வீட்டில் குதிரையைக் கட்டவும் கிருபை செய்து அருள்புரியவும், பொதிகைமலையின் குகையில் அடியேனை நான் புகுந்திருப்பதற்கு அருள்புரியவும், என்னுடைய வாழ்வேபோதும் என்று வாழ்வதும் உன்னுடைய சித்தம், என்னுடைய பாக்கியமானது எப்போது எனக்கு அருள்புரியவும், சந்திரனைப்போல வெழுந்து எனக்குச் சமீபத்தில் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (7)

மனத்தின் ஞானைதம்பிக்கக் கசிந்து கருக்கிப்
பதவிபால் தரவரவேண்டும்.

தசநாடி யும்மூல நாடியு மொடுங்குநற்
ஞானைக ளருள்பு ரியவுந்
தாதுமுந் நான்குமிரு நான்காக வொருநான்கு
தம்பிக்க வருள்பு ரியவுந்

கசியாது சோமவட் டத்துறையு மமிர்தங்
 கசிந்திடற் கருள்பு ரியவும்
கனலினாற் றத்துவக் குப்பையைச் சுட்டுக்
 கருக்கிவிட வருள்பு ரியவும்
பசிதாக மற்றவமு தூற்றவுஞ் சாயுச்சிய
 பதவியொன் றருள்பு ரியவும்
பசுவினைப் பதியினிற் கட்டவுங் கற்பசுப்
 பால்தரற் கருள்பு ரியவும்
வசவிர்த்தி யாகமெய்த் தவராஜ சிங்கமே
 வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
 மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) உண்மையான தவராஜசிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! பத்துநாடிகளும் மூலாதார நாடிக்குள் ஒடுங்குகின்ற உயர்ந்த தாரணை மார்க்கங்களை யருள்புரியவும், தாதுவானது பன்னிரண்டும், எட்டும், நான்குமாகத் தம்பிக்க அருள்புரியவும், சந்திரமண்டலத்தில் கசியாதபடி இருக்கின்ற அமிர்தமானது கசியும்படி அருள்புரியவும், ஞானாக்கினியினால் தத்துவமென்கிற குப்பையைச் சுட்டுக்கருக்கி விடுவதற்கு அருள்புரியவும், பசியும், தாகமுமொழிந்த அமிர்தத்தை ஊற்றவும், சாயுச்சியபதவி கைகூடவும் அருள்புரியவும், பசுவாகிய ஆன்மாவைப் பதியாகிய தலைவனிடத்தில் சேர்க்கவும் கற்பசுவானது பால்கொடுப்பதற்கு அருள்புரியவும், வசப்படுதல் விர்த்தியாதற்பொருட்டு எனக்குச் சமீபத்தில் எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

தத்துவமார்க்கங்களை யெல்லாம் திருவருள் செய்து ரட்சிக்க வேண்டும் என்பது கருத்து. (8)

மனம் வெல்லுதல் விலாசஞ்சுமாறுபடச் சூக்ஷங் கொள்ளாது
குலைந்திட வரவேண்டும்.

வெல்லரிய மாயைதனை வெல்லென்று சொல்லவும்
 வெல்லுதற் கருள்பு ரியவும்
விரிமறைகண் முாசறையு மறிவுக் ககண்டித
 விலாசமொன் றருள்பு ரியவும்
சொல்லரிய வாசாம கோசர சுபாவஞ்
 சுமாறுபட வருள்பு ரியவுஞ்
சும்மாவி ராமலுஞ் சும்மாவி ராநின்று
 சூட்சமெமற் கருள்பு ரியவும்

கொல்லரிய பேய்க்குரங் காமனம் பாய்ந்துகுதி
  கொள்ளாது னருள் புரியவுங்
கொலைகேட ரானைவம் புலவேடர் கூட்டங்
  குலைந்திடவு னருள்பு ரியவும்
வல்லிரு டுலைக்கவுந் தவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
  மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) உண்மையான தவராஜசிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னு திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருசிரியனே! யாவராலும் ஜெயிப்பதற்கு அருமையான மாயையை வெல்லென்று சொல்லவும் அதுபோல வெல்லுவதற்கு அருள்புரியவும், விரிந்த வேதங்கள் வாத்தியங்கள்போல் கோஷிக்கின்ற ஞானத்திற்கு அகண்டிதவிலாச மொன்றை யருள்புரியவும், சொல்லுதற்கு அருமையான வாசாமகோசர சுபாவமானது சுமாருக அருள்புரியவும், மௌனமாயிராமலு மௌன மாயிருக்கின்ற ஒருகுட்சத்தை அருள்புரியவும், கொல்லுதற்கு முடியாத பேய்க் குரங்கைப் போல மனமானது பாய்ந்து குதியாது அருள்புரியவும், கொலைசெய்யும் கொடுதியை யுடையவரான ஐம்புலவேடர்களுடைய கூட்டமானது குலைந்துபோக உன்னுடைய அருள்புரியவும், கொடிய அஞ்ஞான இருட்டைத்தொலைக்கவும், எனக்குச் சாமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

மகாமாயையை ஒழித்தலாகிய செய்கைகளை என்னிடத்தில் காட்டியருள்செய்யவேண்டும் என்பது கருத்து. (9)

மனமதுகொள்ள வாநந்தங் கடைத்தேறக் கட்டி
நான்புக நயந்து வரவேண்டும்.

அஷ்டாங்க யோகமே கிட்டநீ ரிஷ்டமைத்
  தது கொள்ள வருள்பு ரியவும்
ஆதிநடு முடிவில் லகண்டிதா காரவறி
  வாநந்த மருள்பு ரியவுங்
கட்டையிற் போமுனே நிட்டைசா தித்துக்
  கடைத்தேற வருள்பு ரியவுங்
காலைப் பிடித்துமூ லப்பிரா ணன்றனைக்
  கட்டிவைத் தருள்பு ரியவும்
நட்டநடு வீதிமீ தோடியங் நாளற்று
  ஞான்புகற் கருள்பு ரியவும்

நாதநா தாந்தவே தாந்தச ரத்தையு
நயந்து தந்தருள்பு ரியவும்
மட்டறிவ தற்கரிய தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநாதனே.

(பொ-ரை) இவ்வளவு பெருமையினை யுடையவரென்று தெரிந்துகொள்ளுவதற்கு அருமையான குணத்தையுடைய தவராஜசிங்கமே! மகத்தாதிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுரியனே! அஷ்டாங்கயோகமானது எனக்குக் கைகூட நீர் இஷ்டம் வைத்து அதை நான் கொள்ளும்படி அருள்புரியவும், ஆதிமத்தியாந்த ரகிதமான அகண்டிதாகார அறிவானந்தம் அருள்புரியவும், பாடையில் ஏறுவதற்கு முன்னமே நிஷ்டையைச் சாதனஞ்செய்து கடைத்தேறுவதற்கு அருள்புரியவும், சரத்தைச் சரநூலிற் சொல்லியபடியே பிடித்து மூலாதாரத்திலுள்ள பிராணவாயுவை கட்டி வைத்து அருள்புரியவும், நட்டநடுத்தெருவில் ஓடி அந்தத் துவாரத்துள் நான் புகுவதற்கு அருள்புரியவும், நாதநாதாந்த வேதங்களின் சாராம்சத்தையும் விரும்பிக் கொடுத்தருள்புரியவும், எனக்குச் சமீபமாக எழுந்தருளிவரவேண்டும். (எ-று)

அடயோக முதலியவற்றை எனக்குக் கிருபை செய்தருளவேண்டும் என்பது கருத்து. (10)

ஆ பாடல் - 178.

---

ஏழாவது

# பொறை நிலை.

தொகுத்துப் பலபுறந் துருவிச் செல்லா
தகத்தே நாட்டி யவ்வரு நிலையொடு
மனத்தினை யொருவழி நிறுப்பது பொறையால்
நினைத்த நினைவை நினைவாக் கொண்டு
பொறுக்கு நிலையினைப் பொருந்த வருள்கவென்
றிருக்குங் கருத்தோ டிரந்திரந் துயர்த்தது.

(பொ-ரை) எண்ணிக்கையாக்கிப் பலவழிகளிலும் போகாமல் மனத்தின் கண்ணே யிருத்தி அந்த அருமையான நிலைமையுடன் மனத்தை ஒருவழியே நிறுத்துவதாம் பொறுமையினால் எண்ணின எண்ணத்தை ஒரு எண்ணமாகக்கொண்டு தரிக்கின்ற உண்மை நிலையை

யுடைய திருவருள் செய்யக்கடவாயென்று இருக்கின்ற எண்ணத்துடன் மனமிரந்து உயர்த்தது. (எ-று)

மனங் கனலை மூட்டிவைத்து முன்னேற்றிச் சீர்பாததீக்ஷை
வைத்துச் சரணமிடச் சரணமிட வரவேண்டுமே.

முன்னையே மூட்டுமூட் டென்றுமூ லக்கனலை
மூட்டிவைத் தருள்பு ரியவும்
முன்வைத்த காலையும் பின்வாங்கி டாமலென்னை
முன்னேற்றி யருள்பு ரியவுஞ்
சென்னிமீ தேந்தியான் றெண்டனிட் டுய்யவுஞ்
சீர்பாத மருள்பு ரியவும்
தெட்சண மூர்த்தமாய் நின்றுதரி சனைதந்து
தீக்ஷைவைத் தருள்பு ரியவுஞ்
சந்நிதா னத்திற் சரண்சரண மென்றுநான்
சரணமிட வருள்பு ரியவுஞ்
சட்டமுனி முதலான நாதாக்க ளடியிணையுஞ்
சரணமிட வருள்பு ரியவும்
வன்னிநடு வணையான தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) அக்கினியில் நடுவணையிலிருக்கின்ற தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! முன்னமே மூட்டு மூட்டு என்று மூலாதார வனலைமூட்டிவைத்து அருள்புரியவும், முன்வைத்தகாலைப் பின்வைக்காமல் என்னை முற்பட்டுவரும்படி அருள்புரியவும், தலையின்மேல் கையை வைத்து தெண்டஞ்செய்து உய்வதற்கு உன்னுடைய திருவடிகளை அருள்புரியவும், தெட்சணமூர்த்தமாயிருந்து தரிசனை கொடுத்து தீட்சை வைத்து அருள்புரியவும், சந்நிதானத்தின்கண்ணே சரணஞ்சரணமென்று நான் நமஸ்காரஞ்செய்ய அருள்புரியவும், சட்டமுனிவர்கள் முதலான நாதாக்களுடைய திருவடிகளிலும் சரணமிடுவதற்கு அருள்புரியவும், எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

இறைவனே! மூலாதார யோக முதலியவற்றைத் திருவருள் செய்யவேண்டும் என்பது கருத்து. (1)

மனந்தனை சமர்ப்பொருத குதித்தேறக் கொடிபோட
வாடம்பர மாட்ட வரவேண்டும்.

சாட்டியில் லாதுபம் பரமாட்ட வல்லமை
தனைத்தந்து னருள்பு ரியவுஞ்

சரவாள் பிடித்தச்சு மட்டமே விட்டுச்
 சமர்ப்பொருத வருள்பு ரியவுங்
கோட்டைவா யிற்படி கடந்தலங் கத்திற்
 குதித்தேற வருள்பு ரியவுங்
கொடிமரங் கைக்கொண்டு ஜயமாகி யென்கைக்
 கொடிப்போட வருள்பு ரியவும்
ஆட்டுமோர் சக்கரமு மோயாம லாடவா
 டம்பரம ருள்பு ரியவும்
அகிலாண்ட கோடிக ளனைத்தையு நினைத்தபடி
 யாட்டென்ற வருள்பு ரியவும்
மாட்டோ மெனுமலே தவராஜ சிங்கமே
 வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
 மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுரியனே! சாட்டியில்லாதபடி பம்பரமாட்ட வல்லமையைக்கொடுத்து உன்னுடைய அருள் புரியவும், பாணத்தையும் வாளையும் பிடித்து அச்சுமட்டமேவிட்டு சண்டைசெய்ய அருள்புரியவும், கோட்டைவாசற்படியைக் கடந்து அலங்கத்தில் குதித்து ஏறுவதற்கு அருள்புரியவும், கொடிமரத்தைக் கையிற் பிடித்துக்கொண்டு ஜயமடைந்து என்னுடைய கையினால் கொடிபோட அருள்புரியவும், ஆட்டுகின்ற ஒரு சக்கரமும் ஓயாமல் ஆட ஆடம்பரஞ்செய்ய அருள்புரியவும், சர்வ அண்டகோடிகளையும் நினைத்தபிரகாரம் ஆட்டென்று உன் அருள்புரியவும், மாட்டோமென்று சொல்லாமல் எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

இறைவனே! சர்வதந்திரங்களையும் எனக்குத் திருவருள் செய்ய வேண்டும் என்பது கருத்து. (2)

மனத்திற்குச் சாயுச்யஞ்சாதித்துக் கைக்களித்துக் காட்டிப் போதித்துப் பொருத வரவேண்டும்.

சாதனையி லேற்றவும் வாதனையை மாற்றுமோர்
 சாயுச்ய மருள்பு ரியவுஞ்
சட்டக் குழப்பமெல் லாம்விட்டு நன்னிஷ்டை
 சாதித்து னருள்பு ரியவுங்
காதினுப தேசங்க ளோதவும் மாதவங்
 கைக்களித் தருள்பு ரியவும்

காதலா மலகமென வென்னுக்கு ளென்னையுங்
 காட்டிவிட் டருள்பு ரியவும்
போதனைக்கெட்டாத போதனை கைக்கொண்டு
 போதித்து னருள்பு ரியவும்
புத்திக்கு மெட்டாத மத்திபத் தீபம்
 பொருத்திவைத் தருள்பு ரியவும்
மாதாபி தாவனைய தவராஜ சிங்கமே
 வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
 மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) பெற்றோர்களைப்போன்ற தவராஜசிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனாசிரியனே! சாதனத்தில் ஏற்றவும், வாதனையை மாற்றுகின்ற ஒரு சாயுஜ்ஜிய பதவியை அருள்புரியவும், எற்பாடென்கிற குழப்பங்களையெல்லாம்விட்டு நல்லநிஷ்டையைச்சாதித்து உன்னுடைய அருள்புரியவும், என்னுடைய காதின்கண் உபதேசங்கள் சொல்லவும் மகத்தாகிய தவத்தைக் கைக்குக்கொடுத்து அருள்புரியவும், உள்ளங்கை நெல்லிக்கனியைப்போல எனக்குள்ளே என்னையும் காட்டிவிட்டு அருள்புரியவும், போதனைகளுக்கு எட்டாத போதனையைக் கைக்கொண்டு போதித்து உன் அருள்புரியவும், அறிவுக்கும் எட்டாத நடுத்தீபத்தைச் சேர்த்துவைத்து அருள்புரியவும், எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எறு) (3)

மனச்சூது சுருண்டு போதனை போகங் காதல்
கட்டவிழ வரவேண்டும்.

சூதொன்று மில்லாது நம்மா லிராநின்ற
 சூதொன்றை யருள்பு ரியவுஞ்
சோப்புதலு மற்றுமாச் சோம்பேறி போலுஞ்
 சுருண்டற் கருள்பு ரியவும்
போதனைக் கோதற்ற வற்றுமோர் மெய்ஞ்ஞான
 போதனை யருள்பு ரியவும்
போகங்க ளற்றபரி பூரணா நந்தசுக
 போகமெற் கருள்பு ரியவும்
காதலற வுந்திரு வடித்தாளின் மீதடிமை
 காதலுற வருள்பு ரியவுங்

கால்களைக் கட்டவுங் கட்டுமா தாரவன்
  கட்டவிழ்த் தருள்பு ரியவும்
வாதனை யொழிந்தமெய்த் தவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்றா னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
  மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) சகலவேதனைகளையும் ஒழியப்பெற்ற தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனாசிரியனே! யாதொரு கூறுமில்லாமல் சும்மாவிருக்கின்ற மௌனத்தை அருள்புரியவும், சோம்பியிருப்பதும் ஒழிந்து சோம்பேறியைப்போல சுருண்டு விடுவதற்கு அருள்புரியவும், உபதேசக்குற்ற மொழிந்து அவற்றுள்ளும் ஒரு உண்மை ஞானோபதேசத்தை அருள் புரியவும், சர்வபோகங்களுமொழிந்த பரிபூரணானந்த சுகபோகத்தை எனக்கு அருள்புரியவும், ஆசையொழியும்படி உன்னுடைய பாததூளியில் விருப்பம் வைப்பதற்கு அருள்புரியவும், சரங்களைக் கட்டுவதற்கும் கட்டுகின்ற ஆதாரமான வலியகட்டை அவிழ்த்துவிட்டு அருள்புரியவும், எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (4)

மனஞ் சுத்திசெயத்துலங்க நின்றிலங்க விறைஞ்சு வீட்டில்
விட்டு விளக்குவைக்க வரவேண்டும்.

சோற்றுலெடுத்தசுவ ரானகா யத்தையுஞ்
  சுத்திசெய வருள்பு ரியவும்
சூக்குமங் காரண காரணமாகார ணத்தொடு
  துலங்கிடற் கருள்பு ரியவும்
ஏற்றபடி யான்மவடி வென்முகத் தெதிர்நின்
  றிலங்கிடற் கருள்பு ரியவும்
இறைவனை யடிமையுனை யேத்தியேத் தித்தொழு
  திறைஞ்சிடற் கருள்பு ரியவும்
வேற்றொருவர் காணாத வேதாந்த வீட்டிலெனை
  விட்டிடத் தருள்பு ரியவும்
விழிமாயை யிருடீர வொளிருமுச் சுடர்மணி
  விளக்கொன்றை யருள்பு ரியவும்
மாற்றாத போற்றுமென் றவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
  மவுனதே சிகநா தனே.

(பொ-ரை)மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! அன்னமயத்தால் எடுத்திருக்கின்ற சுவரைப்போன்ற சரீரத்தைச் சுத்திசெய்ய அருள்புரியவும், சூட்சுமம், காரணம், மகாகாரணம் இவைகளோடு விளங்குவதற்கு அருள்புரியவும், எனக்குத் தகுந்தவண்ணம் ஆன்மாவின் உண்மைச் சொரூபமானது என்முகத்துக்கு எதிரேவெளிப்பட்டு வந்து நின்று விளங்குவதற்கு அருள்புரியவும், கடவுளே! உன்னை அடியேனாகிய நான் பலகாலும் ஏத்தி ஏத்திவணங்குவதற்கு அருள்புரியவும், வேறுயாவராலும் காணப்படாத வேதாந்த மென்னும் வீட்டில் என்னைவிட்டு அவ்விடத்தில் நீர் எழுந்தருளிவந்து அருள்புரியவும், கண்களை மயக்குகின்ற மாயையென்னும், அந்தகாரமானது நீங்க பிரகாசிக்கின்ற முச்சுடர் சம்பந்தப்பட்ட ஒருமணிவிளக்கை அருள்புரியவும், ஒழியாத போற்றுதல் செய்யப்படுகின்ற தவராஜசிங்கமே! தேவரீர் எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (5)

மனத்தைப் பிடித்துப் பிராணே தியங்காமற் சித்திக்க
விழுத் திடையறாது வரவேண்டும்.

பற்றற் றிருத்தியிற் காற்றெலாஞ் சேர்த்துப்
பிடித்தடைத் தருள்பு ரியவும்
பற்றலரற் காற்றும் புறத்துப் படாதெம்
பிராணனையு மருள்பு ரியவுஞ்
சேற்றினிடை நாட்டமொரு கம்பமென வென்னிலை
தியங்காம லருள்பு ரியவுஞ்
செத்தாற் பிழைப்பனோ கருணையீது பக்கிரஞ்
சித்திக்க வருள்பு ரியவும்
ஏற்றபடி தன்னரசு நாடாக வொட்டர்
திழுத்துவைத் தருள்பு ரியவும்
என்றுமா தவமெய்து மென்றிடையு மேழையேற்
கிடையறா தருள்பு ரியவும்
மாற்றுமொழி சாற்றாத தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மௌனதே சிகநா தனே.

(பொ-ரை)மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்வியக்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! நவதுவாரம்பொருந்திய திருத்தியில்காற்றையெல்லாஞ் சேர்த்துப்பிடித் தடைத்து அருள்புரியவும்,

அந்தத்துவாரம் இருப்பதினால் காற்றுகளெல்லாம் வெளிப்பட்டு விடாமலிருக்க அருள்புரியவும், சேற்றின்கண் நடப்பட்ட கம்பத்தைப்போல என்னுடைய உண்மை நிலையானது விளங்குவதற்கு அருள் புரியவும், நான் செத்து போய்விட்டால் பிழைப்பேனோ ஆகையால் சாவாதிருக்கின்ற இந்தத்தருணத்தில் மேலே சொன்னவைகளெல்லாஞ் சீக்கிரமாகச்சித்தியாக அருள்புரியவும், தகுந்தவிதமாக தானே ஒருநாட்டை ஆட்சிசெய்வதாக வைக்காமல் என்னை இழுத்து வைத்து அருள்புரியவும், என்றைக்கு நல்ல தவங் கிடைக்குமென்று மனம் வருந்துகின்ற இந்த ஏழைக்கும் சதாஅருள்புரியவும், வேறு சொற்களைச் சமாதானமாகச்சொல்லாமல் தவராஜ சிங்கமே! நீர்எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (6)

மனத்தைக் கனவென விணக்கிப் பிரித்துப் பேரின்பஞ்
சிந்தாத தேவனே யருள்புரிய வரவேண்டும்.

இந்திரசாலப்புலைச் சேரியா தனைகனு
வெனமுடித் தருள்பு ரியவும்
இல்லந் துறக்கவுஞ் சொல்லரிய நல்லறி
வினைக்கிவைத் தருள்பு ரியவும்
பெந்தமது பந்தமது கண்டவிரு ளென்னப்
பிரிந்திடற் கருள்புரியவும்
பேராசை கொள்ளவும் பாராசை விள்ளுமொரு
பேரின்ப மருள்பு ரியவுஞ்
சிந்தாத பேருட் செல்வமே யென்சிந்தை
சிந்தாது னருள்பு ரியவுந்
தேவனே தேவாதி தேவனே பரவாசு
தேவனே யருள்பு ரியவும்
மந்தார வேலையிற் றவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்திக்கண் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுரியனே! இந்திரசாலம் போன்ற பலமென்னும் சேரியின்வேதனைகள் என்னைத்தொடர்ந்து வருத்தாதபடி அவைகளைக் கனவைப்போல் முடித்தருள்புரியவும், இல்லறத்தை ஒழித்துத் துறவறத்தை யடையவும், சொல்லுதற்கருமையான உண்மையறிவினை விளக்கவும் அருள்புரியவும், பந்தம் இவைகளை இருள்களாக்கொண்டு பிரிந்தொழிய அருள்புரியவும், பேராசை

கொள்ள இடங்கொடுக்கின்ற உலகப்பற்றை விடுகின்ற ஒரு பேரின்பத்தை அருள்புரியவும், கெடுதியடையாத பெரிய திருவருட் செல்வமே! என்னுடைய மனம் யாதொரு விகற்பத்தையுமடையாதபடி அருள்புரியவும், தேவனே! தேவர்களுக்கெல்லாம் ஆதிதேவனே! பரவாசுதேவனே! நீ அருள்புரியவும், தவராஜசிங்கமே! இந்த மப்புவேளையில் எனக்குச்சமீபமாக எழுந்தருளிவரவேண்டும். (எ-று) (7)

மனங்கடாக்ஷித்துக் கரைந்திடப்பதித்துப் பக்குவ
மேகாந்தமேறிட வரவேண்டும்.

கதைபேசி யதிலென்ன காரியம் மேதுங்
கடாக்ஷித்து னருள்பு ரியவும்
கல்விகல் லாக்கருங் கல்லாமென்னெஞ்சங்
கரைந்திடற் கருள்பு ரியவும்
பதியா மனத்தைப் பதைப்பறப் பதிவிற்
பதித்துவைத் தருள்பு ரியவும்
பற்றறத் துணிவுதரு முத்தரைப் பணியுநற்
பக்குவம் மருள்பு ரியவும்
இதயந் திறக்கவும் மெய்தையுந துறக்குமோ
ரேகாந்த மருள்பு ரியவும்
இல்லாசை யில்லாது வல்லாண்மை கொண்டுவெளி
யேறிடற் கருள்பு ரியவும்
மதிளுங் கடந்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீசுரனே! மௌனாசிரியனே! வீண்கதை பேசுவதில் எந்தக் காரியமுமில்லை. ஆகையால் அவைகளை நீக்கிக் கடாட்சஞ்செய்து அருள்புரியவும், யாதொரு கல்வியையுங் கல்லாத கருங்கல்லைப் போன்ற என்னுடைய மனமானது கரைந்துவிடற் கருள்புரியவும், அடங்காத மனத்தை அடங்கும்படிசெய்து நல்லவிடத்தில் சேர்த்து வைத்து அருள்புரியவும், யாதொரு பற்றுமில்லாமல் திடசித்தத்தைக் கொடுக்கின்ற முத்தர்களை வணங்குகின்ற உண்மையானதும், உயர்ந்ததுமான பக்குவகாலத்தை எனக்கு அருள்புரியவும், என்னுடைய மூடப்பட்டிருக்கின்ற இதயமானது திறக்கவும், எல்லாவற்றையும் விட்டொழிக்கின்ற ஒரு ஏகாந்த நிலையையும் அருள்புரியவும், வீட்டாசை வையாமல் உயர்ந்த ஆண் தன்மையோடு வெளிப்பட்டுப்போய்

விடுவதற்கு அருள்புரியவும், உண்மைத்தவராஜசிங்கமே! நீமதிலையுங் கடந்து எனக்குச் சமீபமாக எழுந்தருளிவரவேண்டும். (எ-று) (8)

மனமண்ணலே வாநந்தஞ்சோதி சுடரிருந்திட
எந்நாளு மருளவரவேண்டும்.

அகமுதற் சகமயக் ககலவும் மகமேவு
மண்ணலே யருள்பு ரியவும்
அல்லவிழ வெல்லவுந் தொல்லையற வெல்லையி
லாநந்த மருள்பு ரியவுஞ்
சுகமீற வும்மனத் தகைமாற வுஞ்சுயஞ்
சோதியெற் கருள்பு ரியவுஞ்
சுருதிமுடி யாய்நின்ற கருதுமடி யாருளஞ்
சுடரொன்றை யருள்பு ரியவும்
இகமொடு பரத்தினு மகமொடு புறத்தினு
மிருந்திடற் கருள்பு ரியவும்
ஏகமற வொன்றுமது பாதார விந்தமெற்
கெந்நாளு மருள்பு ரியவும்
மகிமைசொல் லற்கரிய தவராஜசிங்கமே
வாவேண்டு மென்ற னருகே
பாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
பரமமௌன தேசிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருசிரியனே! மனத்தின்கண் முதலாவதாகக் குடிகொண்டிருக்கின்ற உலகவாசை யொழியவும் அம்மனத்தின் கண்ணே குடியாயிருக்கின்ற தலைவனே! அருள்புரியவும், இருட்டகல வெல்லுதற்கும், ஒழிவில்லாமல் அளவிடப்படாத ஆநந்தத்தை அருள் புரியவும், இன்பமானது அதிகரிக்கவும், மனச்சங்கடம் நீங்கவும், சுயஞ்சோதிப்பொருளை எனக்கு அருள்புரியவும், வேதத்தின் முடிவாக விருந்த நினைக்கின்ற அடியவர் உள்ளத்திலுள்ள ஒருசுடரை அருள் புரியவும், இகம், பரம், அகம், புறம் இவைகளிலிருப்பதற்கு அருள் புரியவும், ஒன்றென்று சொல்லாதபடி உம்முடைய திருவடித்தாமரை களில் எக்காலமும்படிந்திருக்க அருள்புரியவும், மகிமை சொல்லுவதற்கு அருமையான தவராஜசிங்கமே! தேவரீர் எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (9)

மனத்திற் கடாக்ஷங் கதிர்நிறைந்திட நிறுத்தி முதிர்ந்து
முறையாக வரவேண்டும்.

கத்தனே யத்துவித வஸ்துவெற் கெத்துங்
கடாக்ஷம்வைத் தருள்பு ரியவுங்

கருதரிய சிற்பரத் தட்பரவு மெய்ப்பொருட்
கதியளித் தருள்பு ரியவும்
நித்தியா னந்தமோ னந்தமென் சிந்தையு
ணிறைந்திடற் கருள்பு ரியவும்
நேத்திரத் தூடுமே ஹற்றுமலர் பத்தையு
நிறுத்திவைத் தருள்பு ரியவும்
முத்திக்கு வித்தாய் முளைத்தெழும் சோதியு
முதிர்ந்திடற் கருள்பு ரியவும்
முப்பாழ் கடத்திவைத் தப்பால் நடத்துமுறை
முறையாக வருள்பு ரியவும்
மத்தியி லுதித்தமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தீச்சுரனே! மௌனதேசிகனே! தலைவனே! அத்துவிதப்பொருளைத் துதிசெய்யும் மார்க்கத்தைக் கடாட்சம்வைத்து அருள்புரியவும், நினைப்பதற்கு அருமையான ஞானபாத்திலுள் வியாபிக்கின்ற உண்மைப்பொருளின் கதியைக்கொடுத் தருள்புரியவும், நித்தியானந்த முண்டாக்குகின்ற மோனமானது என்னுடைய மனத்தில் நிறைவதற்கு அருள்புரியவும், என்னுடைய கண்ணினுடன் நாற்றுகின்ற பத்துமலர்களையும் நிறுத்திவைத்து அருள்புரியவும், மோட்சத்திற்குக் காரணமாக முளைத்து எழுகின்ற சோதிப்பொருளும் என்னிடம் முதிர்வதற்கு அருள்புரியவும், மூன்று பாழ்களையும், தாண்டுவித்து வைத்து பிறகு நடத்துவதை முறைமுறையாக அருள்புரியவும், நடுவே தோன்றின உண்மைத் தவராஜசிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (10)

ஆ பாடல் -188

எட்டாவது

# காட்சி நிலை.

வளிவசப் பட்டும் பொறிவசப் பட்டும்
தெளிவசந் திருந்த சிந்தையை யணைத்தும்
ஒருவழி யோங்கு முயர்மன வழியே
திருவொளி கனிந்து திவலையிற் றிகழ்ந்து
வெளியி லிரவும் விளங்கிய பகலும்
ஒளியா யிருந்த வுவமை யென்னத்
தோற்றுந் தோற்றத் தோற்ற வருள்கெனப்
போற்றிப் போற்றிப் புகழ்ந்திரந் துயர்த்தது.

(பொ-ரை) காற்றின் வசத்திலும் பஞ்சபொறிகளின் வசத்திலும் அகப்பட்டும், தெளிவானது ஓய்ந்திருந்த மனத்தைச்சேர்த்தும், ஒரே வழியில் உயர்கின்ற உயர்ந்த மனத்தின் வழியே ஞானதேஜசானது, கனிந்து துளியைப்போல் விளங்கி ஆகாயத்தின்கண் இரவும், பகலும் தேஜஸை வீசிக்கொண்டிருந்த ஒப்புவமைபோல காணப்படுகின்ற உண்மைக் காட்சியானது எனக்குத் தெரிய அருள்செய்யக் கடவீர் என்று பலதரம் துதிசெய்து புகழ்ந்து இரந்து வேண்டியது. (எ-று)

மனமணைந் தர்ச்சிக்கப் பணிந்து வசம்பண்ணிச்
சென்றுடச் சிறியவெற்கருள வரவேண்டும்.

ஆத்தாளை யெனையீன்ற வாலையா நந்தியை
யணைந்திடற் கருள்பு ரியவும்
அம்பிகை மனோன்மணிக் குண்டலித் தாய்பதமு
மர்ச்சிக்க வருள்பு ரியவும்
பார்த்தாளை யாமையுங் காத்தாளை யென்றும்
பணிந்திடற் கருள்பு ரியவும்
பரையாளை மாநல்ல சிரையாளை யென்வசம்
பண்ணிவைத் தருள்பு ரியவும்
சேர்த்தாளை வான்கருணை பூத்தாளை யொத்தபடி
சென்றுட வருள்பு ரியவுஞ்
சிறியாளை மெத்தவும் பெரியாளை யறியவுஞ்
சிறியவெற் கருள்பு ரியவும்
மாற்றுள னுப்பாது தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய

அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! ஆத்தாளும் என்னைப் பெற்றெடுத்த வாலையும், ஆநந்த சொரூபியுமான பரமேஸ்வரியை சேர்ந்திருக்க அருள்புரியவும், அம்பிகையும், மனோன்மணியும் ஆகிய குண்டலி என்னும் தாயின் திருவடிகளை அர்ச்சனைசெய்யவும் அருள்புரியவும், சர்வ உயிர்களையும் திருக்கண் பார்த்தவளும் எல்லாப் பொருள்களையும் காத்தவளுமானவளை எக்காலத்திலும் வணங்குவதற்கு அருள்புரியவும், பரையென்னும் பேருள்ளவளும், மகத்தான நல்ல சிறையுடையவளுமானவளை என் வசஞ்செய்து வைக்க அருள்புரியவும், யாவரையும் சேர்த்தவளும், மிகுந்தகருணை பூத்தவளுமானவளை தகுந்தபடிபோயாட அருள்புரியவும், சிறியவளும், ரொம்பவும் பெரியவளுமானவளை உணரவும் சிறியேனான எனக்கு அருள்புரியவும், வேறு ஆளை அனுப்பாமல் நீரே எனக்குச் சமீபவாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (1)

மனம் பதம்பணிந்து சேவிக்கச் சிறப்பிடு சரண்புகத்
தடையற வரவேண்டும்.

பத்துவய துடையசிறு பெண்ணென வென்றாய்
பதந்தொழற் கருள்பு ரியவும்
பாலான வாமம்வைத் துப்பூசை பண்ணிப்
பணிந்திடற் கருள்பு ரியவுஞ்
சித்தந் தெளிந்துபர தெய்வசந் நிதிசென்று
சேவிக்க வருள்பு ரியவுஞ்
சின்மய சிதாகாச தேவதைக் கென்றுஞ்
சிறப்பிடற் கருள்பு ரியவுஞ்
சத்தியத் தொடுபரா சத்திசமு கத்திற்
சரண்புகற் கருள்பு ரியவுஞ்
சங்கநிதி பத்மநிதி போலுதவி யாய்நின்று
தடையறற் கருள்பு ரியவும்
மற்றெவ ரிருந்துமென் றவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) தவராஜ சிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! பத்து வயதையுடைய சிறிய பெண்ணென என்னுடைய தாயின் திருவடிகளைத் தொழுவதற்கு அருள்புரியவும், பால்,பழம் முதலானவைகளை வைத்து வாமபூசைசெய்து வணங்குவதற்கு அருள்புரியவும், மனத்தெளிவை

யடைந்து உயர்ந்த தெய்வத்தின் திருக்கோயிலிற் சென்று சேவை செய்வதற்கு அருள்புரியவும், ஞானமயமான சிற்றம்பலத்தில் எழுந்தருளி யிருக்கின்ற கடவுளுக்கு என்றைக்குஞ் சிறப்புசெய்ய அருள் புரியவும், உண்மையுடனே ஞானசத்தியின் சமுகத்தில் சரணமடைவதற்கு அருள்புரியவும், சங்கநிதியையும், பதும நிதியையும்போல் ஒத்தாசையாயிருந்து தடையற்றிருக்க அருள்புரியவும், வேறு யாவரிருந்தும் என்ன? ஒன்றுமில்லை. ஆகையால் தேவரீர் எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (2)

மனம்முயர்ச்சி மோகங் கடத்திக் காட்டிச் சூக்ஷ்மவகை தொகையாக வரவேண்டும்.

மூலமுத லாறுவகை தாண்டி மேற் றுண்டவு
முயற்சிதந் தருள்பு ரியவும்
மூலவர்க் கங்களென வாலையைப் பூசிக்க
மோகமெற் கருள்பு ரியவும்
காலைப் பிடித்திழுத் துக்கந் தரத்தைக்
கடத்திவைத் தருள்பு ரியவுங்
காலனுக் குங்கால னுகவுங் கற்பமுறை
காட்டிநல் லருள்பு ரியவுந்
தூலத்தை விட்டுவிட வொட்டாது சூக்ஷ்மாதி
சூக்ஷ்மமொன் றருள்பு ரியவுஞ்
சுழிபின்ன தென்றுமேசா டசமின்ன தென்றுவகை
தொகையாக வருள்பு ரியவும்
வாலாய மாகமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
பாருணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) உண்மையான தவராஜசிங்கமே! மகத்தாகிய குணங்குடி என்னுந்திவ்விய க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனதேசிகனே! மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனுகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்கிற ஆறுவகைகளையும் தாண்டி அதற்கு மேலேறவும் எனக்கு முயற்சியைக்கொடுத்து அருள்புரியவும், மூலவர்க்கங்களென்று சொல்லப்படுகின்ற காரண வஸ்துவாகிய வாலையை பூசிப்பதற்கு எனக்கு வேண்டிய ஆசையை அருள்புரியவும், காற்றைப்பிடித்து இழுத்து கழுத்தைக் கடக்கச் செய்துவைத்து அருள்புரியவும், எமனுக்கும் எமனுகவும் காயகற்ப முறைமையைக்காட்டி நல்லருள்புரியவும், ஸ்தூலதேகத்தை விட்டுவிட வொட்டாமல் சூட்சாதி சூட்

சத்தை எனக்கு அருள்புரியவும், சுழிமுனையானது இன்னதென்றும், சோடசகலை என்பது இன்னதென்றும், வகையாகவும், தொகையாகவும் அருள்புரியவும், வழக்கமாகவே எனக்குச் சமீபத்தில் எழுந்தருளி வர வேண்டும். (எ-று) (3)

மனத்தைக்காட்டிக் கண்ணே தயைபுரிந்து பிரசாதமொன்று
பார்த்துப் பரிகரித்தருள வரவேண்டும்.

கலையாம வீராறு கலையினிலை குலையுமுன்
கட்டிடற் கருள்பு ரியவும்
காலைப் பிடிக்கின்றே னம்மைகுண் டலியையென்
கண்ணையெற் கருள்பு ரியவும்
சலனமற வுங்கருணை நிதியே தயாளமே
தயைபுரிந் தருள்பு ரியவும்
சரணார விந்தமுன் பாதார விந்தப்ர
சாதமொன் றருள்பு ரியவும்
பலகால விரந்தமும் பலனுகவென் முகம்
பார்த்துநல் லருள்பு ரியவும்
பாவியடி யேன்படுங் கண்கலக் கங்களைப்
பரிகரித் தருள்பு ரியவும்
மலமத்த னையுமற் றவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீசுரனே! மௌனாசிரியனே! புத்தி கலையாமலும் பன்னிரண்டுகலைகளின் உறுதிநிலை கெடுவதற்குமுன் கட்டிவிடுவதற்கு அருள்புரியவும், நான் காற்றைப் பிடிக்கிறேன். தேவியான குண்டலிசத்தியானவளும், என் கண்போன்றவளும் எனக்கு அருள்புரியவும், ஜென்மமொழியவும் கருணைசெல்வமே! தயாளமே நீயே தயவுவைத்து அருள்புரியவும், சரணாரவிந்தமான உன்னுடைய திருவடிப்பிரசாதமும் எனக்கு அருள்புரியவும், நான் பலதரம் வேண்டிக்கொண்டதே பிரயோசனமாக என்னுடைய முகத்தைப்பார்த்து நல்ல அருள்புரியவும், பாவியான அடியவனான நான் படுந்துன்பங்களை நோக்கி அருள்புரியவும், சர்வ மலங்களு மொழிந்திருக்கின்ற தவராஜசிங்கமே; எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (4)

மனமுத்த முத்திரைத் தண்ணீரைத் தள்ளாமற்
றெளித்து சேவிக்க வரவேண்டும்.

மோகந் தவிரக்கலை யாரையணை யாமலுமை
முத்தமிட வருள் புரியவும்

மொழியைத் தவிர்க்கவாய் மூடலுடனேமோன
  முத்திரையை யருள்பு ரியவும்
தாகித்த வென்றனுக் கெண்ணெயூட் டாதுநற்
  றண்ணீரை யருள்பு ரியவும்
தாராதவருளெலாந் தந்தடிமை கொள்ளவுந்
  தள்ளாம லருள்பு ரியவுந்
தேகத்தை விட்டுவிடு முன்மனத்தேறித்
  தெளிந்திடற் கருள்பு ரியவுஞ்
செம்பொனிற மானசிறு வாலையிரு காலையுஞ்
  சேவிக்க வருள்பு ரியவும்
மாகத்த ஞனமெய்த் தவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
  மவுனதேசிகநாதனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! முலையையுள்ள பெண்கள்மேல் வைத்திருக்கும் ஆசையையொழித்து உம்மை முத்தங்கொடுக்க அருள்புரியவும், என் சொல்லையொழிக்க வாய்மூடுவதுடன் மௌனஞான முத்திரையை அருள்புரியவும், தாகங்கொண்டிருக்கின்ற எனக்கு எண்ணெயைக் குடிப்பிக்காமல் தண்ணீரையே அருள்புரியவும், கொடுக்கக் கூடாதத்திருவருளை யெல்லாங்கொடுத்து தள்ளாமல் அடிமைகொள்ள அருள்புரியவும், சரீரத்தைவிட்டு விடுவதற்குமுன் மனந்தெளிந்துவிட அருள்புரியவும், பொன்மயமான சிறிய வாலைப்பெண்ணின் இரண்டு திருவடிகளையும் சேவிக்க அருள்புரியவும், மகத்தாகிய கர்த்தனை உண்மைத்தவராஜசிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (5)

கனத்தின் பேரின்பம் பெண்ணாசையை ஆதரிப்பு
நாசமாய் நானாக வரவேண்டும்.

பேசாது மவுனத் திருக்கவும் பேசாத
  பேரின்ப மருள்பு ரியவும
பெண்ணாசை மண்ணாக வும்வாலை யம்பிகைப்
  பெண்ணாசை யருள்பு ரியவும்
ஆசாப சாசைத் துறத்தவுன் றிருவடியி
  ஞசைதந் தருள்பு ரியவும்
ஆதரவு மற்றுழ தரிப்பாரு மற்றவெனை
  யாதரித் தருள்பு ரியவும்

நாசச்சரீரமு நாசமா முன்புவன
நாசமெற் கருள்பு ரியவும்
நானென்ப தற்றுநா னென்ப தற்றுநா
னுகை வருள்பு ரியவும்
வாசாம கோசரத் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருசிரியனே! பேசாமல் மௌனமாயிருக்கவும், மௌனஞான பேரின்பத்தை அருள்புரியவும், பெண்ணாசை யொழியவும் அம்பிகைமேல் ஆசையுண்டாகவும் அருள்புரியவும், ஆசையையொழிக்கவும், உன்திருவடியில் ஆசைவைக்கவும் அருள்புரியவும், ஆதரவு, ஆதரிப்பாரில்லாத என்னை யாதரித்து அருள்புரியவும், சரீரம் ஒழிவதற்கு முன்பு வனசரீரம் ஒழிய அருள்புரியவும், நான் என்னும் அகங்காரம் ஒழிய அருள்புரியவும், வாசாமகோசரத்தையுடைய தவராஜ சிங்கமே! எனக்குச்சமீபமாக எழுந்தருளிவரவேண்டும். (எ-று)(6)

மனத்தை யாசையபயந் தடாரித்துத்தாடந்து
பாகம் வைத்துப் பழக்கவரவேண்டும்.

ஆசரித் தம்பிகை தனைப்பூசை செய்துய்பு
மாசையொன் றருள்பு ரியவும்
அறமியற் றவுமனத் திறமியற் றவுமெனக்
கபயநின் றருள்பு ரியவும்
தாய்செத்த பிள்ளையென பேசற் றிராமற்
றடாரித்து னருள்பு ரியவுந்
தடையினிற் றடைபடா நின்றொளிரு மெய்த்திருத்
தாடந்து னருள்பு ரியவும்
பாசத்தை விசுமெம னுக்குட் படாதுநின்
பாகம்வைத் தருள்பு ரியவும்
பஞ்சாட் சரத்தையுந் துஞ்சாச் சரத்தொடு
பழக்கிவைத் தருள்பு ரியவும்
வாசற் கடந்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! அம்பிகையின்மேல் ஆசைவைத்து பூசைசெய்து பிழைக்கும் ஆசையொன்று அருள்புரியவும், தருமஞ் செய்யவும், மனம் வன்மையைச்செய்யவும், எனக்கு அபயாஸ்தங் கொடுக்கவும் அருள்புரியவும், தாய்செத்த பிள்ளையைப்போல எக்கற்றிராமல் உன்னருள்புரியவும், எவ்விதத்திலும்தடையாகாதவண்ணம் விளங்குகின்ற உன்னுடைய திருவடிகளைக்கொடுத்து அருள்புரியவும், எமனுக்கடங்காமல் உன்னுடைய பக்கத்தில்வைத்து அருள்புரியவும், பஞ்சாட்சர தியானத்தை எனக்குப்பழக்குவித்து அருள்புரியவும், திருவாசலைக் கடந்து தவராஜசிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளி வர வேண்டும். (எ-று) (7)

மனங் களித்துக்கறுவென்று நாணை நற்றவந்
தூணைகத் துறையருள வரவேண்டும்.

காணாத காட்சியைக் கண்டடிமை யுள்ளங்
களித்திடற் கருள்பு ரியவுங்
கண்கொண்டு காணப் படாநின்ற வெவையுங்
கறுவென் றருள்பு ரியவும்
நாணுமட மாதரைக் கண்ணினிற் காணுமுன்
நாணை வருள்பு ரியவும்
நாவுருசி தேடுதற் காவிகெட் டலையாது
நற்றவம தருள்பு ரியவுந்
தூணைத் துரும்பாக்க வுந்துரும் பைப்பெருந்
தூணாக்க வருள்பு ரியவுந்
துரியமய மாய்நின்ற பெரியபொருளைத் தொழுந்
துறையொன்றை யருள்பு ரியவும்
வாணாள் விடாதமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! காணாத காட்சிகளையெல்லாம் நான் கண்டு மனங்களிக்க அருள்புரியவும், சர்வபொருள்களையுங் கறுவென்றுணர அருள்புரியவும், பெண்களைக்கண்டால் வெட்கமடைய அருள்புரியவும், நாருசியைத் தேடியலையாதபடி உயர்ந்த தவத்தை அருள்புரியவும், தூணைத்துரும்பாகவும், துரும்பைத்தூணாகவுஞ் செய்

யக்கூடிய வன்மையை அருள்புரியவும், துரியவஸ்துவாயிருந்த பெரிய பொருளை வணங்கும் வழியொன்றை அருள்புரியவும், வாழ்நாளை விட்டுவிடாத தவராஜசிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளி வர வேண்டும். (எ-று) (8)

மனத்தை யடிமைகொண் டனுபூதிமுழுத்திட மூடித்
தாண்டித் தந்தருள வரவேண்டும்.

ஆண்டிடுனே டாண்டனந் தங்கோடி வைத்தெனையு
மடிமைகொண் டருள்பு ரியவும்
அதிசோதி பாவிக் கிடந்தொளி பரப்புமுன்
னனுபூதி யருள்பு ரியவும்
மூண்டெரியு மங்கியிற் கருவிகர ணங்களை
முழுத்திடற் கருள்பு ரியவும்
மூக்குமுனை வாயிலண் ணாக்கினுனி யாலடைய
மூடிவைத் தருள்பு ரியவும்
தாண்டுமீ ராறுகலை தாண்டாம லுன்சுழினை
தாண்டிடற் கருள்பு ரியவும்
தாண்டாம னின்றமதி மண்டலங் கொண்டவமு
தந்தந்து னருள்பு ரியவும்
மாண்டெவையு மாண்டுமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதேசிகநா தனே.

(பொ-ரை) பலகாலம் ஜீவித்திருக்கும்படிவைத்து எனக்கு அருள் புரியவும், தேஜோமயமான உன்னுடைய அனுபூதியை அருள்புரியவும், அக்கினியின்கண் கருவிகரணாதிகளையெல்லாம் முழுத்திவிட அருள் புரியவும், மூக்கின்முனையில் நாக்கின் நுனியைவைக்க அருள்புரியவும், பன்னிரண்டுகலையுந் தாண்டாமல் சுழிமுனையைத் தாண்டுவதற்கு அருள்புரியவும், சந்திரமண்டலத்தி லிருக்கின்ற அமிர்தத்தைக் கொடுத்து அருள்புரியவும், யாவற்றையுங்கடந்து தவராஜசிங்கமே! எனக்குச்சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (9)

மனத்திற்குச் சுகந்துணைதழுவித்தரித்திட ஆட்கொண்டு
ஆளாக்கியருள வரவேண்டும்.

சுந்தரச் சோதிமணி மார்போ டணைத்துச்
சுகந்தந்து னருள்பு ரியவுஞ்
சொந்தவடி யேன்சிந்தை நொந்திடா வண்ணமே
துணையுநின் றருள்பு ரியவுஞ்

சந்திரோ தயமெனச் சிந்துமொளி தந்துனை
தழுவிநின் றருள்பு ரியவும்
தளதளென் றவிர்தரு ஜகச்சோதி பாவித்
தரித்திடற் கருள்பு ரியவும்
அந்தரத் துலவுகம னக்குளிகை யொன்றளித்
தாட்கொண்டு னருள்பு ரியவும்
அம்பிகை பதம்பணியு மாளாக வும்மெனையு
மாளாக்கி யருள்பு ரியவும்
வந்தனங் கைக்கொளுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! அழகிய மார்போடு அணைத்து எனக்கு அருள்புரியவும், அடியேனை நான் மனம் வருந்தாவண்ணம் துணையாகவிருந்து அருள்புரியவும், சந்திரோதயத்தைப்போல ஒளியைக்கொடுத்து அருள்புரியவும், ஜகச்சோதியைப்பாவிக்க அருள்புரியவும், கமனகுளிகையொன்றை எனக்குகொடுத்து அடிமைகொள்ள அருள்புரியவும், அம்பிகையின் திருவடிகளை வணங்குமாளாக்கி என்னையருள்புரியவும், பலபேருடைய வந்தனங்களைக் கொள்ளுகின்ற தவராஜசிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

ஆ பாடல் - 198.

—:—

ஒன்பதாவது

# தியான நிலை.

தோற்றிய காட்சியிற் சுயத்தினைப் பற்றி
யேற்றி யேற்றி யிடம்வல முன்பின்
இயங்கா தோங்கி யெழுமனந் தன்னினை
வுயங்காத் தோன்றி யுண்மையிற் றிகழ
நிறுத்தி வன்மன நிலைதிரி யாமற்
குறித்த பொருளொடு கொளுத்த றியானம்
என்னும் பாங்கி னிம்முறை யருள்கவென
றுன்னி யுன்னி யுவந்திரந் துயர்த்தது.

(பொ-ரை) காணப்பட்ட காட்சியில் சுயமான பொருளைப் பிடித்துத்தொழுது இடம், வலம், முன், பின் என்னும் பக்கங்களில் சஞ்சரி

க்காமல் உயர்ந்து எழுகின்ற மனமானது உண்மை நிலையின்கண் விளங்க நிறுத்தி மனம்போன போக்குகளிலெல்லாந் திரியாமல் குறிக்கப்பட்டிருக்கின்ற பொருளுடன் கொளுத்தல் தியானமாம் என்கிற கிரமத்துடன் அருள்செய்யக்கடவது என்று எண்ணி யெண்ணி ஆசையுடன் இரந்தது. (எ-று)

மனமோகமதை நாளும் நாட்டிவைத் தவிழாம லவிழ்த்துத்
தேனொழுகச் சிறப்பிட வரவேண்டும்.

நவகண்ட யோகமே நான்கொண்ட மோகமதை
நாளுமெமற் கருள்பு ரியவும்
நாவதனை யோட்டிவிட் டங்நாள மாட்டிநிலை
நாட்டிவைத் தருள்பு ரியவும்
அவிழுமொன் பதுவாயி லுங்கட்ட வுங்கட்டு
மவிழாம லருள்பு ரியவும்
அவயவா திகளுநவ கண்டமா யவிழத்
தவிழ்ந்திடற் கருள்பு ரியவுந்
திவநிலையொன் றாயினும் புன்னுனியின் மணியெனத்
தேனொழுக வருள்பு ரியவுஞ்
சிற்றாற லூட்டஞ் சித்தாந்த முத்திச்
சிறப்பிட் டினருள்பு ரியவும்
மவுனமணி யானமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீசுரனே! மௌனஞ்சிரியனே! என்னால் விரும்பப்பட்டிருக்கின்ற நவகண்டயோகத்தை எனக்கு அருள்புரியவும், நாவை அதின் துவாரத்தில் மாட்டி உண்மைநிலையை அருள்புரியவும், திறந்திருக்கின்ற நவத்துவாரங்களையும் கட்டவும், கட்டவிழாமலிருக்கவும் அருள்புரியவும், உறுப்புக்களெல்லாம் நவகண்டமாய் அவிழ்ந்து விடுவதற்கு அருள்புரியவும், புல்லின் நுனியின்மேல் மணியைப்போலத் தேனொழுக அருள்புரியவும், சிற்றாறலை ஊட்டவும் சித்தாந்த முத்தியைச் சிறப்பித்து உன்னுடைய திருவருளைப் புரியவும், மௌன மாணிக்கமான உண்மைத் தவராஜசிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (1)

மனம்பெரும்பாதை யொன்றில் நிர்த்தூளி பண்ணிக்கடந்து
கையூன்றி யொன்றுக்கு ளொன்றாக வரவேண்டும்.

பாலமுந் தாண்டியப் பாலடக் கப்பெரும்
பாதையொன் றருள்பு ரியவும்
பாருக்க ளோவனந் தங்களதை நிர்த்தூளி
பண்ணிவிட் டருள்பு ரியவும்
காலா லடர்ந்துசமர் செய்துதல மாறும்
கடந்திடற் கருள்பு ரியவும்
கண்டத்தை வென்றுகா யாபுரிக் கோட்டையென்
கைப்படற் கருள்பு ரியவும்
ஓலமிட் டோங்கார வுன்னதக் கம்பமங்
கூன்றிடற் கருள்பு ரியவும்
ஓசைமணி மண்டபஞ் சென்றுநின் றொன்றுக்கு
ளொன்றாக வருள்பு ரியவும்
வாலிபம் முதிருமுன் றவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்வியக்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய் அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! பாவத்தைத் தாண்டி அப்பால் நடக்க பெரிய வழியொன்றை அருள்புரியவும், பல பாருக்களையுங்கெடுத்து அருள்புரியவும், வாயுவால் ஆறுதாரங்களையுஞ் சண்டைசெய்து கடக்க அருள்புரியவும், கண்ட ஸ்தானத்தைவென்று காயாபுரி கோட்டையானது என்னுடைய கைவசப்படுவதற்கு அருள்புரியவும், சத்தநாதஞ்செய்து ஓங்காரக்கம்பத்தில் ஊன்றுவதற்கு அருள்புரியவும், சத்தமுள்ள அழகிய மண்டபத்தில்சென்று இருந்து ஒன்றுக்குள் ஒன்றாவதற்கு அருள்புரியவும், வாலிபம் முதிர்கின்ற தவராஜசிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (2)

மனமுட்புக வொடுங்கிடத் தூங்கிடச் சோபிக்கத்
தகைதீர்ந்திட யேற்றிடவரவேண்டும்.

ஓங்கார மதுகொண் டெழும்பிராண வப்பதியி
னுட்புற் கருள்பு ரியவும்
உள்ளறையி னுள்ளேயோர் மூலையிற் சென்றங்
கொடுங்கிடற் கருள்பு ரியவும்
தூங்காது தூங்கிசிவ யோகநித் திரைவந்து
தூங்கிடற் கருள்பு ரியவுஞ்

சுடருண்ட கர்ப்பூர வுண்டைபோனின் றுடல்
　சோபிக்க வருள்பு ரியவும்
தேங்காத் திருக்கருணை வெள்ளம் படிந்துதகை
　தீர்ந்திடற் கருள்பு ரியவும்
தேருத சிந்தையுந் தேறவு மெனைக்கடைத்
　தேற்றிவிட் டருள்பு ரியவும்
வாங்காளி னோசையொடு தவராஜ சிங்கமே
　வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
　மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந்திவ்விய க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! பிரணவத்தைக்கொண்டு எழும்புகின்ற பிரணவப்பதியில் உள்ளே புகுவதற்கு அருள்புரியவும், உள்ளறையினுள்ளே ஒரு மூலையில்சென்று அங்கே ஒடுங்கிவிடுவதற்கு அருள்புரியவும், தூங்காமல் தூங்கிச் சிவயோக நித்திரைவந்து தூங்குவதற்கு அருள்புரியவும், சுடருக்குள்சிக்கிய கர்ப்பூர உண்டையைப் போலநின்று உடலமானது சோபத்தையடைய அருள்புரியவும், தெவிட்டாத திருவருள் வெள்ளத்தில் மூழ்கிசோகம் நீங்குவதற்கு அருள்புரியவும், தெரியாத மனமானது தேற என்னைக் கடைத்தேற்றுவிக்க அருள்புரியவும், ஒழியாத இனிய ஓசையுடன் தவராஜசிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (3)

மனமங்கங்கென் றுள்ளடங்கிப் பக்குவம்பண்ணி அமிர்த
பானந் திருத்தித் திறமருள வரவேண்டும்.

ஆயபன் னிருகலையு மாயாதுதங்கவும்
　மங்கங் கென் றருள்பு ரியவும்
அங்குசிங் கென்றுமைம் பத்தோ ரெழுத்துள்
　ளடங்கென் று னருள்பு ரியவும்
பாயவும் வாசிகலை தேயவும் பக்குவம்
　பண்ணிவிட் டருள்பு ரியவும்
பானூற வுஞ்சுழினை மேலேற வும்மமிர்த
　பானமெற் கருள்பு ரியவும்
தீயைப் பொருத்தியென் னையத் திருத்தித்
　திருத்திவைத் தருள்பு ரியவுந்
தேறத் தெளிக்கவுஞ் சோப் பழிக்கவுந்
　தீரமொன் றருள்பு ரியவும்

மாயையைக் காயவுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருசிரியனே! பன்னிரண்டு கலைகளும் மாயாத படி தங்கவும், மங், கங் என்று அருள்புரியவும், அங்கு, சிங்கு ஐம்பத் தோரெழுத்து உள்ளடங்கு என்று அருள்புரியவும், வாசியானது பாயவும், கலையானது தேயவும், பக்குவஞ்செய்து அருள்புரியவும், அமிர்தமானது ஊற சுழிமுனையின்மேல் ஏற அமிர்தபானத்தை எனக்கு அருள்புரியவும், அக்கினியைக்கூட்டி என்னுடைய குணத்திலிருத்தி வைத்து அருள்புரியவும், அறிவு தெளிவடையவும், தீமைகளைப்பழிக்கவும் ஒரு தைரியத்தை அருள்புரியவும், தவராஜசிங்கமே! மாயையை ஒழிக்க எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும்.

மனம்வழிமருவச் சமர்செய்யத் தம்பனம் அடைத்துச்
சரணடைய வரவேண்டும்.

வங்குவங் கென்றுரீங் காரமுட னேகமேல்
வழிவிட் டருள்பு ரியவும்
வாசிதனி லேற்றியெனை மாசற்ற பரவெளியின்
மருவவைத் தருள்பு ரியவுஞ்
சங்குசிங் கென்றங்கு சண்டமா ருதமெனச்
சமர்செய்ய வருள்பு ரியவும்
தம்பனங் கும்பித் திரேசிக்க வாயுவுட்
டம்பனம் மருள்பு ரியவும்
அங்கடங் குண்டவமிர் தங்கடைந் தென்கட
மடைத்துவைத் தருள்பு ரியவும்
அம்மைகுண் டலிபாத மாசரித் துச்சர
ணடைந்திடற் கருள்பு ரியவும்
மங்காத தங்கமே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே; மௌனகுருசிரியனே! வங், வங் என்றும், ரீங் என்றும் சொல்லிக்கொண்டுபோக மேல்வழிவிட்டு அருள்புரியவும், என்னை

வாசிக்குதிரையின் மேலேற்றி என்னைக் குற்றமற்ற உயர்ந்த வெளியில் சேரவைத்து அருள்புரியவும், சங், சிங் என்று சண்டமாருதத்தைப் போல சண்டைச்செய்ய அருள்புரியவும், ஸ்தம்பித்தும், கும்பித்தும், ரேசித்தும் வாயுவைவிட அருள்புரியவும், அவ்விடத்தில் அடங்கியிருந்த அமிர்தத்தை கடைந்து என்னுடைய சரீரத்தை அடைத்துவைத்து அருள்புரியவும், அம்மையாகிய குண்டலி சத்தியின் பாதத்தை ஆஸ்ரயித்து அவளுடைய திருவடிகளை யடைவதற்கு அருள்புரியவும், ஒளி குறையாத தங்கமே! தவராஜசிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (5)

மனத்தீரஞ் சின்மயமெய்தாம லென்னுள் சுடர்சொந்தத்
தோடருள வரவேண்டும்.

செத்தாலும் வைத்தடிபின் வாங்காது முன்னேற
தீரமொன் றருள்பு ரியவும்
சிற்பர வெளிக்கூடு செல்லவுஞ் செல்லரிய
சின்மயம் மருள்பு ரியவும்
எத்தாத முத்திநெறி யேற்றவு மற்றெவையு
மெய்தாம லருள்பு ரியவும்
ஏகவுரு வாகிநின் றெங்குநிறை கின்றபொரு
ளென்னுளுற வருள்பு ரியவும்
சுத்தமய படிகச் சுயஞ்சோதி பரவிமுச்
சுடர்கொழித் தருள்பு ரியவும்
சொக்குமதி மோகமுக வாரியமு தூட்டவுஞ்
சொந்தத்தொ டருள்பு ரியவும்
வற்றாத செல்வமே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருசிரியனே! செத்தாலும் முன் வைத்தகாலை பின் வைக்காத தைரியம் ஒன்றை அருள்புரியவும், ஆகாயவெளியில் செல்லவும், ஞானமயத்தை அருள்புரியவும், மோட்சமார்க்கத்தை ஏற்றவும், மற்றவைகள் பொருந்தாமல் அருள்புரியவும், ஒரேருபமாய் எங்குமிருக்கின்றபொருள் எனக்குள்ளிருக்க அருள்புரியவும், சுத்தமான சுயஞ்சோதியானது பரவி மூன்று சுடர்களையும்வீச அருள்புரியவும், சந்திரமண்டல அமிர்தத்தை எனக்கு ஊட்ட அருள்புரியவும், என்றும் வற்

ரூத செல்வமே! தவராஜசிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (6)

மனத்தினிஷ்டம் வைத்தென்னை யெற்காராய்ந்து அறிவதற்குச்
சித்தம்வைத்துச் செய்யுநல்லருள் புரியவரவேண்டும்.

இதமாக வேயடிமை பதமாம் பொருட்டாக
விஷ்டம்வைத் தருள்பு ரியவும்
எல்லாம தாயேது மில்லாது மாய்நின்ற
வென்னையெற் கருள்பு ரியவும்
அதுவேய தானவோ ரருமறைப் பொருளையா
ராய்ந்திடற் கருள்பு ரியவும்
அறிவதற் கரியவறி வாகார மானவுனை
யறிவதற் கருள்பு ரியவும்
சிதையுமித யத்தையுஞ் சிதையா திருத்தவுஞ்
சித்தம்வைத் தருள்பு ரியவும்
சேவடி கொடுத்திந்த நாயடிய னுக்குதவி
செய்யுநல் லருள்பு ரியவும்
மதமற்ற மதமுற்ற தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! நன்மையாக அடிமைப்பதத்தையடைய அருள்புரியவும், எல்லாமாயும், அல்லவாயுமிருக்கின்ற எனக்கு என்னை அருள்புரியவும், அதுவேதானாய் விளங்கும் வேதப்பொருளை ஆராய்வதற்கு அருள்புரியவும், அறிவதற்கு அருமையான உன்னை யான் உணர்வதற்கு அருள்புரியவும், கெடுகின்ற இருதயத்தை கெடாமலிருக்க மனம்வைத்து அருள்புரியவும், திருவடியைக்கொடுத்து அடியேனை இந்த நாய் போன்றவனுக்கு அருள்புரியவும், மதம் ஒழிந்த மதத்தைப் பெற்ற தவராஜ சிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (7)

மனத்தைத்தூக்கித் துணிந்திருந்திருக்கும்
நிலையம் நெக்குருக வரவேண்டும்.

தொலையாப் பவக்கட லலைத்துமக் கரையிலென்னைத்
தூக்கிவிட் டருள்பு ரியவுந்
தொல்லைதரு தொல்லுலகை வெல்லவுந் துறவிற்
றுணிந்திடற் கருள்பு ரியவும்

இலையும் புலர்ந்தசரு குங்கும்பி யெரிவற்
றிருந்திடற் கருள்பு ரியவும்
இருகலையி னூடுருவி மூக்கலைக் கப்பா
லிருக்கு முன் னருள்பு ரியவும்
நிலையற்ற விதயத்தை நிலையத் திருந்துநந்
நிலையமொன் றருள்பு ரியவும்
நிற்குநிலை சொக்கியா னிற்கா து நிற்கவும்
நெக்குருக வருள்பு ரியவும்
மலைவெலாந் தீர்க்கவுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருசிரியனே! ஒழியாத சென்மக்கடலை யொழித்து அந்தக்கரையில் விட அருள்புரியவும், உலகப்பற்றை வெல்ல தறவறத்தில் துணிய அருள்புரியவும், இலைசருகுகளை *அருந்தி பசியை யடக்க அருள்புரியவும், இடைகலை பிங்கலையின் ஊடுருவி மூன்றுகலைகளுக்குமப்பால் இருக்குமுன் அருள்புரியவும், நிலையில்லாத இருதயத்தை உண்மை நிலைவியிருத்தி நல்லநிலையையடைய அருள்புரியவும், நிற்கின்ற நிலையிலேயே சொக்கி நான் நிற்காமல் நிற்க அருள்புரியவும், என்னுடைய பிரமைகளை யெல்லாம் தீர்க்கவும் தவராஜசிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளிவரவேண்டும். (எ-று) (8)

மனக்கருத்துக் கற்பித்தொழிந்தொடங்கி நடந்து
நானென வரவேண்டும்.

கானக விலங்கினின மாகும்வை ராக்கியக்
கருத்தொன்று னருள்பு ரியவும்
காடுவீ டாகவும் வீடுகா டாகவும்
கற்பித்து னருள்பு ரியவும்
ஊனிறைந் தோருரு வெடுத்தகா யத்துற
வொழிந்திடவு னருள்பு ரியவும்
உண்டுடுத் துப்பூணு முலகநடை யெனைவிட்
டொதுங்கிடற் கருள்பு ரியவும்
ஞானேதை யங்கண்டு மானபி மானம்
நடந்திடவு னருள்பு ரியவும்
நானென்ற தற்றுநா னுறைகும் வண்ணநீ
நானென்ற தருள்பு ரியவும்

வானுச்சி யுதவுமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்வியக்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! காட்டுவிலங்காகும் வைராக்கியத்தை எனக்கு அருள்புரியவும், காடுவீடாகவும், வீடுகாடாகவும் எனக்குக் கற்பனைசெய்து அருள்புரியவும், சரீரத்தில் நிறைந்து ஒருரூபம் எடுத்து உறவு ஒழிந்திட அருள்புரியவும், உலக நடக்கையானது என்னை விட்டொழிய அருள்புரியவும், ஞான உதயமாய் மானம், அபிமானங்கள் நடாத்தி அருள்புரியவும், நானென்பதற்று நான் நானாகும் வண்ணம் நீநானென் றருள்புரியவும், ஆகாயத்தின் உச்சியில் வாசஞ்செய்கின்ற தவராஜசிங்கமே! நீ எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (9)

மனத்தி னடனஞ் சந்தியிற் சென்று திறந்து
வசம் வளர்ந்தேற வரவேண்டும்.

நாசிநடு வணைநட்ட நடுவினின் றுல்லாச
நடனமிட வருள்பு ரியவும்
நாதநா தாந்தம் முழங்குமோர் தெய்வசந்
நதியில்விட் டருள்பு ரியவும்
தேசுதரு மோசைமணி மாமண்ட பத்தினுட்
சென்றிடற் கருள்பு ரியவும்
திரையைக் கடந்தங் கடங்கவுள் ளறையைத்
திறந்துதந் தருள்பு ரியவும்
வாசங் கொடுத்தகம லாசனத் தையுமென்
வசங்கொடுத் தருள்பு ரியவும்
வற்றாத செல்வங்க ளத்தேச காலமும்
வளர்ந்தேற வருள்பு ரியவும்
மாசேது மற்றமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்வியக்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! மூக்கின் நடுவில் உல்லாசமாக நடனஞ்செய்ய அருள்புரியவும், தொனிகள் முழங்குகின்ற கடவுள் சந்

நிதியில்விட்டு அருள்புரியவும், நாததத்துவத்துள் செல்லுவதற்கு அருள்புரியவும், திரையைத்தாண்டி அவ்விடத்தில் உள்ளறையைத் திறந்து கொடுக்க அருள்புரியவும், வாசனைவீசும் பத்மாசனத்தை என் வசங்கொடுத்து அருள்புரியவும், அழியாதசெல்வங்கள் என்று மோங்க அருள்புரியவும், குற்றமற்ற உண்மைத் தவராஜசிங்கமே! நீர் எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (10)

ஆ பாடல் -208

பத்தாவது

# சமாதி நிலை.

ஒன்றிய தத்தை யொன்றற் றறுகுணம்
இன்றித் தானுந் தன்பெய ரின்றிச்
சேர்ந்துஞ் சேரா திருந்தவுண் மையா
லார்ந்து மதுவு மாகா தாகா
அங்ஙனங் குறித்த வம்முதற் பொரு ளொடு
தான்பிற னாகத் தகையது சமாதி
ஆகு மென்ற வந்நிலை யருள்கவென்
றேக மாகி யிரந்திரந் துயர்த்தது.

(பொ-ரை) பொருந்தியதை பொருந்துவித்து அடைந்த குணமில்லாமல் தானும் தன்னுடைய பெயரற்று சேர்ந்தும் எதிலுஞ் சேராமலிருந்த உண்மையுடன் கலந்தும் அதுவும் ஆகாதாகாது என்று அங்ஙனங்குறித்த அந்த முதற் பொருளுடன் தான் வேறு பொருளாகத் தகைவது சமாதியாகும். ஆகையால் அந்த நிலையை அருள்செய்யக் கடவாயென்று ஒன்றாயிரந்திரந்து உயர்த்தினது.

மனங் கூடுகொள்ளாம லடங்கியஞ்சி ஒடுங்கி
யொழிதற்கு வரவேண்டும்.

கூடுவிட் டுக்கூடு பாயுங் கருக்குருவி
கூடுறைய வருள்பு ரியவும்
கொல்லனுலை மேனின்று கூத்தாடு குறளிகுதி
கொள்ளாம லருள்பு ரியவும்
ஆடுநற் குண்டலிப் பாம்புமெய்ப் புற்றினு
ளடங்கிடற் கருள்பு ரியவும்
அஞ்சாத வஞ்சுபுல வேடர்களு மடியனேற்
கஞ்சிடற் கருள்பு ரியவும்

ஓடிபுழல் சிந்தையுங் கணமேனு மூசென்
றொடுங்கிடற் கருள்பு ரியவும்
ஓவியம் போலவே சும்மா விருக்கமற்
றொழிதற்கு னருள்பு ரியவும்
வாடுத லறிந்தமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்வியக்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின், கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனாசிரியனே! கூண்டுவிட்டுக் கூண்டைப்பாய்கின்ற கருக்குருவியின் கூண்டில் வாசஞ்செய்ய அருள்புரியவும், கொல்லனுடைய உலைக்களத்தின்மேல் நின்று கூத்தாடுகின்ற குறளியானது குதிகொள்ளாமல் அருள்புரியவும், ஆடுகின்ற குண்டலிப் பாம்பானது புற்றில் அடங்கிவிட அருள்புரியவும், எதற்கும் பயப்படாத ஐம்புல வேடர்கள் எனக்குப் பயப்படுவதற்கு அருள்புரியவும், ஓடித்திரிகின்ற மனமும் க்ஷணநேரமானாலும் ஒடுங்கி விழுவதற்கு அருள்புரியவும், சித்திரம்போல் சும்மாவிருக்க ஒழிந்திருப்பதற்கு அருள்புரியவும், வாடுவது அறிந்த தவராஜசிங்கமே! நீர் எனக்குச்சமீபமாக எழுந்தருளி வர வேண்டும். (எ-று) (1)

மனந் திகழ்ந்து தீயிற்சரிப்படச் சமஸ்தமும்
ஆட்கொண் டடக்க வரவேண்டும்.

தீபம் பொருந் துகர்ப் பூரமென வுடலந்
திகழ்ந்திடற் கருள்பு ரியவும்
தீயிலிட் டென்னைக் கருக்குமுன் பென்னகந்
தீயிலிட் டருள்பு ரியவும்
சாபங்க டரச் சமாதிநிறை வேறிச்
சரிப்படற் கருள்பு ரியவுங்
தடையுறா துதவுகற் பகமா யிருந்தே
சமஸ்தமும் மருள்பு ரியவும்
ஆபத்தை யும்மடிமை பாபத்தை யுந்தொலைந்
தாட்கொண்டு னருள்பு ரியவுங்
ஆங்கார மெல்லா மடக்கியுன் கைக்குள்
ளடக்கிவைத் தருள்பு ரியவும்
மாபதவி சேர்த்து மெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே

மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாதிய குணங்குடி என்னும் திவ்வியக்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின் கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருசிரியனே! கர்ப்பூரதீபத்தைப்போல் சரீரம் விளங்க அருள்புரியவும், சரீரத்தைக் கொளுத்தாத முன்னர் என் மனத்தைக்கொளுத்த அருள்புரியவும், எனக்கிருக்கும் சாபங்கள் ஒழிய சமாதியானது நிறைவேறிசரிப்படுவதற்கு அருள்புரியவும், யாதொரு தடையுமில்லாமலிருந்து எல்லாவற்றையும் அருள்புரியவும், ஆபத்தையும் பாவத்தையும் நீக்கி என்னையாட்கொண்டு அருள்புரியவும், என்னுடைய அகங்காரங்களை யெல்லாம் ஒடுக்கி என்னை உன்னுடைய கைக்குள் அடக்கிவைத்து அருள்புரியவும், மகத்தாகிய பதவியில் சேர்த்து தவராஜசிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (2)

மனத்தின் றத்துவந் தான்சாக நாள்வருமுன்
சித்தி சீக்கிரமருள வரவேண்டும்.

தான்செத் திருந்துலக முழுதுமா சாளுமோர்
தத்துவம் மருள்பு ரியவும்
தான்சாக வும்மருந் துண்பாரி யாரியான்
முன்சாக வருள்பு ரியவும்
நான்சாமு னன்சாக நாடினே னன்சாமு
னன்சாக வருள்பு ரியவும்
நாள்வருமு னன்சாக நாள்வந்து நான்சாக
நாள்வருமு னருள்பு ரியவுந்
தீஞ்சுதிரு பிடிசாம்ப லாகவுந் தானுன
சித்தியெற் கருள்பு ரியவுந்
தேகநிலை யல்லவே திருவரு ளிரங்கிமாச்
சீக்கிரம் மருள்பு ரியவும்
வாஞ்சாலை யானமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்வியக்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருசிரியனே! தான்செத்து உலக முழுமையும் அரசாளுகின்ற ஒப்பற்ற தத்துவத்தை அருள்புரியவும், தான்சாவ மரு

ந்து நின்பாரிலர் தான்சாவ அருள்புரியவும், சரீரம் இறந்துபடுமுன் நான்சாவ அருள்புரியவும், ஒருபிடி சாம்பலாகும் சத்தியை எனக்கு அருள்புரியவும், சரீரம் நிலையாப் பொருளாச்சுதே ஆகையால் உம்முடைய திருவருள் இரங்கிச் சீக்கிரம் அருள்புரியவும், தாவுகின்ற சாலையான உண்மைத் தவராஜசிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (3)

மனங் கரைதத்தக் கவிழ்ந்து விளையாட வீடுபுக
எண்ணமின்புற வரவேண்டும்.

கண்ணாறு விண்ணா றெனப்பொங்க வுங்கங்கு
  கரைதத்த வருள்பு ரியவுங்
கருணா சமுத்திரம் பாவிவந் தென்னைக்
  கவிந்திடற் கருள்பு ரியவும்
விண்ணாடர் போற்றிசெய் யண்ணவு மென்கூட
  விளையாட வருள்பு ரியவும்
வேதவே தாந்தமெல் லாம்விட்டு நட்டநடு
  வீடுபுக வருள்பு ரியவும்
எண்ணரிய ஞானவா நந்தமோ னந்தந்
  தெணந்தாற் கருள்பு ரியவும்
ஏகதத் துவசுரூ பத்தைமோ கித்தடிமை
  யின்புறற் கருள்பு ரியவும்
மண்ணொளிர விண்ணுலவு தவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
  மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்வியக்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனாசிரியனே! கண்களில் சலம்சிந்த கங்குகரை தத்தும்படி அருள்புரியவும், கிருபைக்கடலானது பெருக்கெடுத்து வந்து என்னைச் சூழ்ந்துவிடுவதற்கு அருள்புரியவும், தேவர்களால் துதிசெய்யப்படுகின்ற கடவுள் என்னோடு விளையாட அருள்புரியவும், வேதவேதாந்தங்களையெல்லாம் ஒழித்து நட்டநடு வீடுசேர அருள்புரியவும், அளவிடப்படாத ஞானானந்தந்தந்து என்னுடைய எண்ணத்தை முற்றுவிக்க அருள்புரியவும், ஒரே உண்மை வஸ்துவை மோகித்து அடியேனவன் சுகமடைய அருள்புரியவும், பூமிவிளங்க ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற தவராஜசிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (4)

மனவெண்ண மிரங்கித் தீக்ஷைசெய்வித் தொடுங்கி
யுறைந்திட வரவேண்டும்.

இன்றுளோர் நாளையு மிருப்பரென் றெண்ணாத
வெண்ணமொன் றருள்பு ரியவும்
இந்தவடி யானுனது சொந்தவடி யானென
விரங்கிநல் லருள்பு ரியவும்
தென்றிசைக் கைலாச மாம்பொதிகை வாசனே
தீக்ஷைதந் தருள்பு ரியவும்
தேசிக சிகாமணிய னேயடிமை பண்படச்
செய்வித்து னருள்பு ரியவும்
ஒன்றுக்கு ளொன்றான வொன்றுக்கு ளொன்று
யொடுங்கிடற் கருள்பு ரியவும்
உள்ளுக்கு ளுள்ளுருகி யுள்ளுக்கு ளுள்ளே
யுறைந்திடற் கருள்பு ரியவும்
மன்றிலெவ ருந்தொழுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்றன் நடே
மாகுணங் குடிவாழு மெனகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! இன்றைக் கிருப்பவர்கள் நாளைக்கு மிருப்பார்களென்று எண்ணாத எண்ணம் எனக்கு அருள்புரியவும், நான் சொந்த அடிமையென்று எனக்கு மனமிரங்கி யருள்புரியவும், தென்திசைக்குக் கயிலாயமான பொதிகை மலையிலுள்ளவனே! தீட்சைசெய்து அருள்புரியவும், குருவே! அடிமையான நான் பழகிவர அருள்புரியவும், ஒன்றுக்குள் ளொன்றாக வொடுங்க அருள்புரியவும், மனத்துக்குள்ளே யுருகி அகத்தில் வாசஞ்செய்ய அருள்புரியவும், சிற்றம்பலத்தில் யாவரும் வணங்குகின்ற தவராஜசிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (5)

மனமுனையே தொழ வுண்ணின்று மறந்திடாது வாய்த்திட
நானாக நானறிய வரவேண்டும்.

ஊனான காயமுயிர் போமுனடி யேனுமுனை
யேதொழற் கருள்பு ரியவும்
உயிரினிக் குயிரா யுறைந்தநீ யென்றுமெற்
குண்ணின்று னருள்பு ரியவும்
வானாதி பூதலய மானபெரு மானெனை
மறந்திடா தருள்பு ரியவும்

வாக்குமன மணுகாத பூரணந் தானாக
வாய்த்திடற் கருள்பு ரியவும்
நானாக நின்றநா னானாக நின்றநா
னானாக வருள்பு ரியவும்
நான்மறையு மறியாத நான்மறையி னுட்பொருளை
நானறிய வருள்பு ரியவும்
மானென விரைந்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந்திவ்விய க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளி யிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுரியனே! என்னுடைய சரீரத்தைவிட்டு உயிர் போவதற்குமுன் உன்னையே வணங்குவதற்கு அருள்புரியவும், உயிர்க்குயிராயிருக்கும் நீ என்றைக்கும் எனக்குள்ளிருக்க அருள்புரியவும், பஞ்சபூதலயமான பெருமான் என்னை மறக்காதிருக்க அருள்புரியவும், வாக்குக்கும், மனத்துக்கும் பொருந்தாத பூரணப்பொருள் தானேவந்து கிடைக்க அருள்புரியவும், எல்லாம் நானேயாக அருள்புரியவும், வேதங்களு மறியாத அவற்றினுட் பொருளை நானுணர அருள்புரியவும், மானைப்போல் சீக்கிரமாகவே உண்மைத் தவராஜ சிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (6)

மனமடர்ந்து பகர்ந்தீதென் றிருந்திட
மதமண்ணாக வரவேண்டும்.

அதிமோக மாகிமெய்ஞ் ஞானவா னந்தத்
தடர்ந்தேற வருள்பு ரியவும்
அங்கிங்கெ னுமலெங் கெங்குமது வானதெது
வதுபகர்ந் தருள்பு ரியவும்
இதயங்க ணின்றமித யங்களறி தற்கரிய
தீதென்று னருள்பு ரியவும்
ஏகமா கியபரா பரமுமென் பரமா
யிருந்திடற் கருள்பு ரியவும்
மதமத்த னையுமற்ற மதமுற்றி யானுமும்
மதமாக வருள்பு ரியவும்
மனமயக் கந்தரும் மென்மயக் கம்வெறும்
மண்ணாக வருள்பு ரியவும்
மதிமுகத் தழகனே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே

மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத் தின்கண் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருசிரியனே! மிகவும் ஆசையைப்பெற்று உண்மை ஞானனந்தத்தில் படிந்து ஏறுவதற்கு அருள்புரியவும், எவ் விடத்திலும் வியாபகமாயுள்ள பொருளை எனக்குச் சொல்ல அருள்புரி யவும், மனத்தால் உணர்வதற்கு அருமையான பொருள் இதுவென்று அருள்புரியவும், ஒன்றாகிய பராபர வஸ்துவானது என் பட்சமாயிரு க்க அருள்புரியவும், சர்வ கர்வங்களையுமொழித்து உம்முடைய மத த்தையடைய அருள்புரியவும், என்னுடைய மனோமாய்கைகளெல்லாம் மண்ணாய்விடும்படி அருள்புரியவும், சந்திரன்போலும் முகதேஜ முடையவனே! தவராஜசிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளி வர வேண்டும். (எ-று) (7)

மனமைய மணை கால் பாயக்காத்துப் பாரிசப்
பம்பரமாட வரவேண்டும்.

அடியனே னுய்யவு மாதரவு செய்யவு
மையமற் றருள்பு ரியவும்
அன்புமழை சொரியவா றாய்ப்பெருகி வந்துமற்
றணைதக்க வருள்பு ரியவுங்
கடலின்மடை போலுமென் கண்மடை திறக்கவும்
கால்பாய வருள்பு ரியவுங்
கதியான பூமிமயி சேற்றியதை யும்பாது
காத்துநின் றருள்பு ரியவும்
படுபாடு பங்குபற் றுமலும் முழுதுமென்
பாரிசத் தருள்பு ரியவும்.
பாசமற் றிடவுநன் னேசமுற் றடிமைபம்
பரமாட வருள்பு ரியவும்
மடமடென நடனமிடு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னும் திவ்விய க்ஷேத்திரத் தின்கண் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருசிரியனே! நான் பிழைப்பதற்கு துணை செய்து சந்தேகமில்லாமல் அருள்புரியவும், இன்பமென்னும் மழை பொழிய அது ஆற்றைப்போல் பெருக்கெடுத்து வந்து அணையை

மோத அருள்புரியவும், கடல்மடை திறந்தாற்போலும் என்னுடைய கண்மடைதிறந்து காலாகப்பாய அருள்புரியவும், மோட்சபூமியில் என்னை ஏற்றி அதைக்காப்பாற்றி அருள்புரியவும், உண்மையான நிலத்திற்குப்பங்காளி வியாச்சியம் வையாமல் நானே அனுபவிக்க அருள்புரியவும், மாய்கை யொழியவும், நல்சினேகத்தைப்பெறவும், அடியேனை நான் பம்பரம் போலாடவும் அருள்புரியவும், விரைந்து நடனஞ்செய்கின்ற தவராஜசிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (8)

பனமன்பறிவு வீறு வீடுபதம் பரமடைய வரவேண்டும்.

அகடமுறு சாமர்த்திய மெல்லா மறந்தடிமை
யன்படைய வருள்பு ரியவும்
அதிகப்ர சங்கங்க ளெல்லா மறந்தடிமை
யறிவடைய வருள்பு ரியவும்
வெகுளிவிளை யாட்டுமுத லெல்லா மறந்தடிமை
வீறடைந் தருள்பு ரியவும்
வேடிக்கை யொடுபகட் டெல்லா மறந்தடிமை
வீடடைய வருள்பு ரியவும்
பகடிபரி காசங்க ளெல்லா மறந்தடிமை
பதமடைய வருள்பு ரியவும்
பாடிப் படித்தகதை யெல்லா மறந்தடிமை
பரமடைய வருள்பு ரியவும்
மகுடந் தரித்தமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுருவே! பலமுள்ள சகல சாமர்த்தியங்களையுமொழித்து அன்பையடைய அருள்புரியவும், அதிகப் பிரசங்கங்களையெல்லாம்விட்டு நல்லறிவைப்பெற அருள்புரியவும், கோபம், விளையாட்டு முதலியவைகளை யெல்லாம்விட்டு அடியேனை நான் மோட்சவீட்டையடைய அருள்புரியவும், விநோதம், டம்பம் இவைகளையெல்லாம் விட்டு மோட்சவீட்டைப்பெற அருள்புரியவும், பக்ஷ, பரிகாசங்கள் இவைகளை யெல்லாம்விட்டு அடியேனை நான் உமது திருவடிகளையடைய அருள்புரியவும், நான இதுவரைக்கும், பாடிப்பாடிப் படித்த கதைகளையெல்லாம் விட்டொழித்து உயர்ந்த பரம்பொருளையடைய அருள்புரியவும், கிரீடம்கொண்ட தவராஜசிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (9)

**மனம்போகாமற் புணருதற்குச் செழுஞ்சாரல் தினந்தந்து நான்சார நாகை வரவேண்டும்.**

பூஞ்சோலை வாழுமோ ஞானெனவும் வீணிறன்
போகாம லருள்பு ரியவும்
பொற்ரு மரைக்குளத் தவளையா காதனைப்
புணருதற் கருள்பு ரியவுந்
தேஞ்சாறு பாஞ்சாறு பாயுநின் பொதிகைச்
செழுஞ்சார லருள்பு ரியவுந்
திவ்யமா மதுரந் திரண்டமதி யமிர்தந்
தினந்தந்து னருள்பு ரியவும்
நான்சாமு னசெத்து நாடோறு முன்சமுக
நான்சார வருள்பு ரியவும்
நாதமும் வேதமும் நாதநா தந்தமு
நாளுகை வருள்பு ரியவும்
வாஞ்சித்த லோடுமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

(பொ-ரை) மகத்தாகிய குணங்குடி என்னுந் திவ்வியக்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற என்னுடைய அகத்தின்கண்ணுள்ள அகத்தீச்சுரனே! மௌனகுசிரியனே! பூஞ்சோலையிலிருக்கும் ஓணனைப் போல் நான் வீணுகாதபடி அருள்புரியவும், தாமரைத் தடாகத்திலுள்ள தவளையைப் போலாய்விடாமல் உன்னைச் சேர்வதற்கு அருள்புரியவும், நல்ல இனிப்புள்ள சந்திர அமிர்தத்தை நாள்தோறுங்கொடுத்து அருள் புரியவும், சரீரம் இறப்பதற்கு முன் நான் செத்து அனுதினமும் உன்னுடைய சமுகத்திலிருக்க அருள்புரியவும், நாதம், வேதம், நாதாந்தம் இவைகளை நாளுகும் வண்ணம் அருள்புரியவும், இஷ்டத்துடனே தவ ராஜசிங்கமே! எனக்குச் சமீபமாக எழுந்தருளி வரவேண்டும். (எ-று)

## நேரிசை யாசிரியப்பா.

இவ்வகை யெல்லா மியைந்தும் பயன் கொளும்
அவ்வகை யெவர்க்கே யாயினும் விதியருள்
அருளுவ தாயி னவரே யுலகெலாந்
தெருளு மூர்த்தித் திருப்பொரு ளென்ப
நல்வழி தேடு நரர்காள்
சொல்வழி யிவ்வே துணிந்து கொளீரே,

(பொ-ரை) இப்படிப்பட்ட தன்மைகளையெல்லாம் பொருந்தியும் பிரயோசனத்தைக் கொள்ளும், அப்படி யாவருக்காலும் விதியினுடைய திருவருள் கொடுப்பதானல் அவர்களே உலகமெல்லாமறியும் மூர்த்தியாவார். இதை உண்மை வழியைத் தேடுகின்ற மனிதர்களே! சொல்லும் வழியாகிய இதை நீங்கள் துணிந்து கொள்ளுங்கள். (எ-று)

---

இச்சதகப்பெயரின் கருத்துப் பொருளும், கொள்ளுந் தன்மையும்,
இச்சதகஞ் சொல்லிய காரணமும் காரியப்படுதலும், இச்சத
கத்திற்போந்த அதிகாரமும், இவ்வதிகாரத் துட்பொரு
ளும், இவற்றினியல்பும், ஒழுங்கும், இவற்றிற்குப்
பழஞ்சூத்திரக் கோட்பாடும் விளங்கிக்காட்டி,
அதிகாரந்தோறும் பன்மையா யொழுகி
ஈற்றினொருமையாய் முற்றுப்பெற்ற
இல்வகத்தீசர் சதகத்தின் அதி
காரத் துறையினை யமைத்த

## நிலமண்டில வாசிரியப்பா.

அருந்தவ முனிவ ரணைவரி னுயர்ந்த
பெருந்தவ முனிவர் பெயரே யாயினும்
அமைவன வமைக்க லாகுமே லாமே
கமைவரு தாபதர் கருத்ததஞ் தன்றால்
அகமும் புறமு மாயெப் பொருட்கும்
வகைபெற விளங்கு மதியா வுண்மையைக்
காரணத் தானுங் காரியத் தானும்
ஆரணத் தானு மருந்தெளி வானுந்
தொகுக்கவு மிவற்றுற் றொகுத்ததை மறுத்து
வகுக்கவு மாகா வண்மைபூண் டமையால்
அகத்தீ சனுக்கினன் புறத்தீச னென்று
தகத்தீ சனென்றே யாளவேண்டியதால்
அவ்வகத் தீசனை யானந்தம் பூத்த
இவ்வகத் தீச னின்பமோ டிறைஞ்சித்
தன்பெயர் மாறிக் காரணந் தந்து
பின்பெயர் மாறி யறிவெனப் பிறழ்ந்து
மாயை யுடையான் மனமெனத் தோன்றுஞ்
சாயை யுடைய தாடாண்மை வீரனை
அடக்கி யொடுக்கி யணிகா ரணப்பெயர்

மடக்கி மடக்கி வவாா தாக்கித்
தானே தானுந் தன்மையின் விளங்கற்
காறு முறைசெய்வா னகத்தி னமைத்துத்
தவமும் யோகமுந் தகையென வியல்பின்
அவயவ மெல்லா மருளினோ டளித்து
விளக்கியாட் கொள்கென வேண்டி வேண்டித்
துளக்கி யிரந்துயர் தீரக் கேட்டது.

(பொ-ரை) அருமையான தவத்தைச் செய்கின்ற முனிவர் யாவரினும் உயர்ந்த பெரிய தவமுனிவருடைய பெயரானாலும், பொருந்துவனவற்றை சேர்க்கலாகும். பொருந்தாமல் அரிய நிறைவையுடைய தாபதர்களுடைய எண்ணம் அஃதன்று. ஆகையால் உள்ளும், புறமுமாய் எந்தப்பொருளுக்கும் விதம்பெற விளங்குகின்ற மதியாத உண்மையை காரணமுகாந்தரத்தாலும், காரிய முகாந்தரத்தாலும், ஆரணத்தாலும், அருமையான தேர்ச்சியிலும், தொகுக்கவும் இவைகளால் தொகுத்த விஷயங்களை மறுத்து வகுக்கவும் முடியாத வளப்பத்தைப் பூண்டிருப்பதால், அகத்தீசனுக்கு இனம் புறத்தீசன் என்னுமல் அகத்தீசனை ஆநந்தமடைந்த இந்த அகத்தீசன் இன்பத்துடன் வணங்கி தன்னுடைய பெயரை மாறி அதற்குக் காரணத்தைக் கெடுத்து பிறகு பெயரைமாறி அறிவென்று பிறழ்ந்து, மாய்கையுடையவனுடைய மனமென்று சொல்லும் வண்ணம் காணப்படும் சாயலையுடைய தாடாண்மையுள்ளவீரனை, அடக்கி யொடுக்கி அழகிய காரணப்பெயரை மடக்கி மடக்கி வாராதாக்கி, தானே தானாகுந் தன்மையின் விளங்குவதற்கு நீங்காத முறைமையை செய்யும்படி மனத்தின்பொருந்தி தவமும், யோகமும் தன்மையென்று இயல்பினால் அவயவங்களை யெல்லாம் அருளினுடன் கொடுத்து விளக்கிக்காட்டி ஆட்கொள்ளக் கடவையென்று பல முறை வேண்டி வேண்டி அசைத்து இரந்து துன்பம் நீங்கக் கேட்டதென்க. (எ-று)

அகத்தீசர் சதக முற்றுப்பெற்றது.

ஆ. பாடல்-218.

## மகுமூது நபியாண்டவரைச்

### சுகானு பவமுறத் துதித்தல்.

ஆசிரிய விருத்தம்.

வெட்டவெட் டத்தளிர்கள் விட்டுப் படர்ந்தடரும்
விசுபா சாட வியெனும்
வினையென்ற பெருமா வனக்கான கக்காடு
வெட்டிநிர்த் தூளி பண்ணி

வெருளிக ளெனும்பல பாட்டுமுட் காடெலாம்
வேரோ டறப்பி டுங்கி
விரிகருணை வீரகண் டாமணி யணிந்துதுணி
வீரவா யுதம ணிந்து
வெற்றிகொண் டெழுமகங் காரவேங்கைப்புலியை
வேட்டையா டித்து ணித்து
வெட்கமொடு துக்கமும் வெருட்சியு மருட்சியும்
வெருண்டோட வருவி காரம்
வெஞ்சின மெனுங்கொடிய துஷ்டமிரு கங்களும்
வெட்டிவா ளெடுத்தெ டுத்து
வீறுவிட் டலறியொன் றேடொன்று சேராமல்
வெருவியே கிடவ டித்து
வெல்லரிய மாமாயை யெனுமலைப் பாம்பினை
விவேகமெனு மண்டா விஞல்
வெட்டிப் பிளந்தபின் மின்னுகா ணத்தொடு
விரிந்தோடு கருவி வேரை
மீறிய விசாரமெனு மண்வெட்டி கொடுவெட்டி
மேட்டிமைக ளென்னு மாமும்
வெட்டுண்ட மாறேடு முட்களுஞ் சேர்த்ததின்
மெய்த்தவக் கனலை மூட்டி
விண்டலமு மொன்ருகி நின்றபெரு
வெளிவாயு வதனை யூதி
மெய்யான வடவன லெனச்சுடர் பரந்தபுன்
விழிமாயை யெனுமி ருளெலாம்
விரிகதிர் வரக்கண்ட பனியின்முக மென்னவழி
விட்டுவெளி வாங்கி யேங்க
வெட்டிமைக் கட்டிவழி வெட்டிப் பறிக்கின்ற
வினையறக் காடு வெட்டி
சுட்டபி னகந்தைதுண மென்றகற் பாறையைச்
சுழியெனும் விழியினுலே
சொச்சமற வெட்டிப் பிடுங்கியிடை பிங்கலைச்
சூட்சியென் னுஞ்ச கட்டிற்
றாக்கினைத் தேற்றியே தொந்தங்க ளென்னுமொரு
தோல்வடக் கயிறு கட்டித்
துட்டத் துடுக்கெனுங் காமாட்டி யாட்களுந்
தோல்வடந் தொட்டி முக்கத்

தூயமெய்ஞ் ஞானவை ராக்கியக் கசையினாற்
றெண்டுசெய் யென்ற டித்து
தூரா த மிடியெனுந் தொல்லைப் பெருங்கேணி
தூர்க்கவத ஞனி ரப்பிச்
சொற்பிரண வச்சொருப நிச்சயக் கருமுகில்
சூழ்ந்துதங் காலூன் றியே
சுற்றிக் கவிந்துகொண் டானந்த மழைமாரி
சோராம லேபொ ழிந்து
சொல்லரிய நெஞ்சக மெனும்பூமி சுத்தவெளி
யாகவச் சுத்தி ருத்தித்
துய்யசதுர் வேதத்தை நால்வரப் பாக்கியே
துறவெனுங் கிடைம ரித்துச்
சுருதிமுடி வென்னுமெய் யறிவுழவு தற்கான
சூத்திரமெ னுங்க லப்பை
துன்பவின் பங்களென் பதிரண்டு மாடாய்ச்
சுருக்கிவார் பூட்டி யிதமாய்த்
துள்ளிக் குதித்தோடுத் தேறியே போகின்ற
துடியடக் கின்ற தடமாய்த்
தூலமொடு சூக்குமத் தாசையு நிராசையாய்த்
தொந்தநிர்த் தொந்த மாகிச்
சோதிமய மாயென்ற வித்தகப் பண்ணையா
டொட்டிதய மேழி யதனைச்
சொன்னபடி வந்திடக் கௌரிகுண் டலியெனுஞ்
சுழிமுனைத் தாரொடுத்துப்
பட்டும் படாதும்வைத் திடைதரிசி லாதுழுது
பல்வருண பேத மென்னும்
பாவிகச் சாதிவரை கின்றகளி யளறது
பழிக்கவழு கக்க லக்கிப்
பழக்கமெனு மடைதலுங் கட்டியு மிதித்தபின்
பழகரிய சமா சமெனும்
படிகொண்ட மூலமுத லாதார மாறும்
பரப்பிப் பரம்ப டித்து
பகருமிரு கலைநோக்கு வருசுழிபிலமைகின்ற
பலவினைனுங் கைகு லுக்கிப்
பாரமலை யோடணு வகண்டமொடு கண்டம்
பரிக்ஷிக்கொ ணாத விதையைப்

பட்டுமுக் தாதுபிந் தாமலே ப்ரவியே
பருவமது செய்த பின்பு
பாசட செடுப்பமொன் றெடுப்புநீ ரதனையும்
பார்த்துக் கழித்து விட்டுப்
பத்திவை ராக்கியக் கடன்மடை திறந்துகால்
பாய்ச்சியது பயிரா கவே
பரிபாக பக்குவக் காலமது பிசகாது
பார்த்துப் பதந்தன் னிலே
பற்றிப் படர்ந்தகொண் ணூற்றூறு தத்துவப்
பலகளை யறப்பி டுங்கிப்
பரிபூர்ண மாகவே நாளுக்கு நாட்கதிர்ப்
பலகோ ளறப்ப றித்து
பாளையென் னும்பருவ முற்றியே முத்திப்
பலன்பெற்ற சமுசா ரிநீ
படைகொண்ட மும்மண்ட லத்தினு முன்மகிமை
பற்றிப் படர்ந்த குருவே
பாதபங் கயமதுக் காளடிமை யாகாது
பாவத் தழுந்து வேனோ
பாசவலை வீசியே மோசமது செய்கின்ற
பாவையர்க் காளா வனோ
கொட்டிய கருந்தே னிகர்த்தவிழி மின்னார்
குவித்தவிரு பொற்கொங் கையும்
கோசமொடு மும்மத மிறைக்கின்ற கர்விதக்
குஞ்சரக் கொம்பு தானோ
கொஞ்சுகிளி மொழியார்க ளுவுநல் லரவினது
கொடியநஞ் சுப்பை யதோ
கூரிருட் கூந்தலென் சொல்லுகேன் கோடையிடி
குடிகொண்ட கருமே கமோ
கோதையிள மின்னார்கள் யோனிப் பெருங்கேணி
குறையாத யானை மடுவோ
கூறுமுகி லேழும் படர்ந்துவரு டிக்கினும்
குறையுருக் கெடு பள்ளமோ
கொத்துக் கடங்காத மதகரி தனக்குமது
கொப்பமோ படுபள் ளமோ
குருவைத் தொழாமனுக் குப்பைக ளொதுங்குமோர்
குட்டைக் கிடங்கு தானோ

கொலைசெயம ரைிருக் கின்றபடு களமோ
 கொடுஞ்சிங்க மிடிபொ தும்போ
குமுகுமென வதிரசத் தேனொழுகு கனியெனக்
 கொண்டுநெஞ் சினைவாட் டுதே
கோளடப் பெண்ணிலத் தாசைதரு கின்றதே
 கோதையர்கள் காத லாலே
கூளமத ரிப்பதே யல்லா திருந்துநான்
 குளிர்காய நேர மிலையே
கூர்குணம சத்துநிற் கின்றபர வெளியெலாங்
 குடிகொண் டிருந்த குருவே
கொடியகெடு மாயையைக் கூடாதிருக்கின்ற
 குறியருள்வ தென்று புகலாய்
கோடானு கோடிமறை யானுமறி யாக்குணங்
 குடிகொண்ட கருணை வடிவே
கூலாயி லாகஇல் லல்லாகு வென்பதற்
 குரியமகு மூது நபியே.

(பொ-ரை) வெட்டுந்தோறும் தளிர்கள் விட்டுப்படர்ந்து நெருங்கி பரவுகின்ற பாசக்காடென்கிற இருவினையென்னும் பெரிய மரங்களடர்ந்த காட்டைவெட்டி சீர்த்தூளிசெய்து, கோபங்கள் என்கிற பல வகைப்பட்ட பரட்டுமுள் காட்டையெல்லாம் அடியோடொழியப் பிடுங்கி, பரந்த கருணையென்கிற வீர கண்டாமணியைத் தரித்து, துணிவு என்கிற வீரவாயுதமணிந்து, ஜெயங்கொண்டு எழுகின்ற அகங்காரம் என்னும் வேங்கைப்புலியை வேட்டையாடித் துணித்து, வெட்கம், துக்கம், வெருட்சி, மருட்சி இவைகள் பயந்தோட வருகின்ற விகாரமான கொடிய கோபம் என்கிற கொடிய துஷ்டமிருகங்களையும் வெட்டி, வாள் எடுத்தெடுத்து வீறிட்டலறி ஒன்றோடொன்று சேராமல் பயந்து போகும்படி யடித்து, வெல்லுதற்கருமையான மகத்தாகிய மாயை என்கிற மலைப்பாம்பினை விவேகம் என்கிற அண்டாவினால் வெட்டிப்பிளந்து, விட்டபிறகு விளங்குகின்ற அந்தக்கரணங்களுடன் விரிந்து ஓடுகின்ற கருவிகளின் வேரை மீறியிருந்த விசாரம் என்கிற மண் வெட்டியினால் வெட்டி, மேட்டிமைகள் என்று சொல்லுகின்ற மரமும் வெட்டுப்பட்ட மாறுகளோடு முட்களுஞ் சேர்த்து அதில் உண்மைத்தவம் என்கிற நெருப்பைமூட்டி, ஆகாயமும், பூமியும் ஒன்றாயிருந்த பெருவெளியில் வாயுவை ஊதி உண்மையான வடஅனலைப்போல அக்கினிவிரிந்த அற்பவிழியான மாயையென்னும் அந்தகாரங்களெல்லாம் விரிந்த சூரியன் வரக்கண்ட பனியைப்போல ஒழிந்து வெளிசென்றேங்க, வெட்டியைக்கட்டி வழியில் வெட்டிப் பறிக்கின்ற இரு

வினை யென்னுங் காட்டை வெட்டி சுட்டுவிட்டபின் அகங்காரகுணம் என்கிற கற்பாறையை சுழியென்கிற கண்ணினால் மிச்சமில்லாமல் வெட்டிப்பிடுங்கி இடைகலை, பிங்கலை என்கிற ரூக்ஷமென்னும் பண்டியில் தூக்கிவைத்து ஏற்றித் தொந்தங்களென்கிற ஒரு தோல் வடக்கயிற்றைக்கட்டி துஷ்டர்களும் துடுக்கர்களுமான காமாட்டியாட்களெல்லாம் அந்த வடகயிற்றைப் பிடித்து இழுக்க, பரிசுத்தமான உண்மை ஞான வைராக்கியம் என்னும் சாட்டியினால் தொண்டுசெய் என்று சொல்லி யடித்து, அழியாத தரித்திரம் என்கிற பழையதும் பெரியதுமான கேணியைத்தூர்க்க அதனால் நிரப்பி, சொல்லுகின்ற பிரணவரூப நிச்சயத்தையுடைய கறுத்த மேகமானது சூழ்ந்து தம்முடைய தாலை ஊன்றிச் சுற்றிச் சவிந்துகொண்டு ஆநந்தமழையை ஒழியாமல் பொழிந்து சொல்லுதற்கருமையான மன்மென்னும் பூமியைச் சுத்த வெளியாக திருத்தி அந்த நிலத்திற்கு நான்கு வேதங்களையும் நான்கு வரப்பாக்கி துறவு என்கிற கிடையைத்தடுத்து சுருதிகளுக்கு முடிவென்கிற உண்மையறிவாகிய உழவு செய்வதற்கான கலப்பையில் துன்ப இன்பங்கள் என்கிற இரண்டையும் இரண்டுமாடாய்க்கட்டி நன்மையுடன் துள்ளிகுதித்து எடுத்தேறிப்போகிற துடிப்பையடக்குகின்ற தடமாக, ஸ்தூல, சூட்சுமங்களின் ஆசையும், நிராசையாய், தொந்தம், நீர்த்தொந்தம் இவைகளாய் தேஜோமயமாய் பரிசுத்தமான பண்ணையாள்தொட்டு இருதயம் என்கிற மேழியை சொன்னபடியே வரும் வண்ணம் கௌரி குண்டலி என்று சொல்லும் சுழிமுனை யென்னும் தாரை எடுத்துப் பட்டதும், படாததுமாக வைத்து மத்தியில் யாதொரு தரிசுமில்லாமல் உழுது பலவகைப்பட்ட வருணபேதம் என்கிற பாவிகச்சாதிவரைகின்ற களிப்பாகிய சேற்றைப்பழுக்க அழுகக் கலக்கி பழக்கமென்கிற அடைதலும், கட்டியையும் நன்றாய் மதித்த பிறகு பழகுதற்கு அருமையான சமரசமென்கிற படியைக்கொண்ட மூலாதாரமுதல் ஆறாதாரங்களிலும் பரப்பி பரம்படித்து சொல்லுகின்ற இருகலைநோக்கு உண்டாகின்ற சுழிமுனையில் பொருந்தினபலன் என்கிற கையைக்குலுக்கி பெருத்தமலை, அணு, அகண்டம் என்னும் கண்டங்களாகிய பரீட்சைசெய்ய முடியாத விதையைபோட்டு நற்பருவஞ்செய்தபிறகு பாசடர் எடுப்பரென்று எடுப்புநீரையும் பார்த்துக் கழித்துவிட்டு பத்திவைராக்கியம் என்கிற கடல் மடைதிறந்து கால் பாய்ச்சி அது பயிராக பரிபாக பக்குவகாலம் பிசகாமல் பார்த்துக் கொண்டிருந்து நல்லபதத்தில் பற்றித்தொடர்ந்த தொண்ணூற்றாறு தத்துவங்கள் என்கிற பலகளைகளையும் அறவேபிடுங்கி பரிபூரணமாக நாளுக்கு நாள் வருகின்ற கதிரைப்பல கோளில்லாமல் பறித்து பாளை என்கிற காலம் முதிர்ந்து முற்றிப் பலனையடைந்த சமுசாரி நீயே! படைகளைக் கொண்டிருக்கின்ற மூன்று மண்டலங்களிலும் உன்னுடைய மகிமை பிடித்துத்தொடர்ந்த குருவே! நான் உன்னுடைய திருவடித் தாமரைக்கு அடிமையாளாகாமல் பாவத்தில் அழுந்துவேனோ?

பாசமென்கிற வலையை வீசி மோசஞ்செய்கின்ற பெண்களுக்கு ஆளாவேனே? கொட்டின கறுத்ததேனை யொப்பான கண்களையுடைய பெண்களுடைய துவித்த பொன்போலும் கொங்கையும் மூன்று மதங்களை இறைக்கின்ற கர்வமுள்ள யானைக்கொம்போ? கொஞ்சுகின்ற கிளிச்சொல்லார்களுடைய நாவு நல்ல பாம்பினுடைய விஷப்பையோ? கூர்த்த இருட்கூந்தலை என்னவென்றுசொல்லுவேன்! கோடைக்காலத்தில் இடித்தலைக்கொண்ட கருமேகமோ! மாலை சூடிய பெண்களுடைய யோனி என்னும் பெரிய கேணியானது குறைதலில்லாத யானை மடுவோ! சொல்லப்பட்ட சத்தமேகங்களும் படர்ந்து பெய்தாலும் நிறையாத கெடுபள்ளமோ! அங்குசக் கொத்துக்கு மடங்காத மதம் பிடித்த யானையின் மதுகொப்பமோ! படுபள்ளமோ! ஆசாரியனை வணங்காத மனுக்குப்பைகள் ஒதுங்குகின்ற குப்பைக்கிடங்கோ! கொலைசெய்கின்ற எமனிருக்கின்ற படுகளமோ! கொடிய சிங்கங்களுடைய இடிபொதும்போ! (இப்படிப்பட்டதென்று சொல்லவொண்ணுத அது) குமுகுமு என்று தேன் ஒழுகுகின்ற பழத்தைப்போல் என்னுடைய மனத்தை வாட்டுகின்றதே, அப்பெண்கள் மேல் வைத்த ஆசையினால் கிலத்தாசை தருகின்றதே, கூளம் அரிக்கிறதேயல்லாமல் எனக்குக் குளிர்காய நேரம் இல்லையே, கூர்த்த சற்குணம், அசத்து இவைகளிருக்கின்ற உயர்ந்த வெளிகளிலெல்லாம் குடிகொண்டிருக்கின்ற குருவே! கொடிய கெடுமாயையைச் சேராமலிருக்கின்ற குறியை அருளிச்செய்வது என்றைக்கோ? அதைச்சொல்வாய் அனேக கோடி வேதங்களாலும் அறியாத குணங்குடியிலுள்ள கிருபை வாழ்க்கையே! கூலாயிலாக இல்லல்லாகு என்று சொல்லுவதற் குரிய மகுமூதுநபியே. (எ-று)

தத்துவங்களை யெல்லாம் கட்டியாளவேண்டும் என்னுங் கருத்தைக்கொண்டு ஈண்டு இங்ஙனம் வருந்தியதென்க.

முற்றுப்பெற்றது

ஆ பாடல்-219.

## தவமேபெற வேண்டுமெனல்.

### கட்டளைக் கலித்துறை.

ஓடி யலைந்துமிவ் வையக முற்று முழன்றுழன்றுந்
தேடி யெடுத்த திரவியம் யாவையுஞ் செத்தபின்பு
நாடி யெடுப்பது முண்டோ மறந்து நடக்குநெஞ்சே
வாடி பிறந்தறஞ் செய்வாய் குணங்குடி வாய்த்திடுமே.

(பொ-ரை) மறந்து நடக்கின்ற மனமே! ஓடியோடி யலைந்தும், இவ்வுலக மெல்லாந்திரிந்தும், தேடிவைத்த திரவியம் யாவையும்

(அங்ஙனம் தேடியவன் இருந்த சரீரம் விழுந்தபிறகு) மறுபடியும் வந்து அச்செல்வத்தை எடுத்துக்கொள்ளும் வழக்கமிருக்கின்றதா? இல்லை. ஆகையால் வாடி இறந்து தருமஞ்செய்வாய். (அங்ஙனஞ் செய்வாயானால்) குணங்குடி நாதருடைய அருள்கிடைக்கும். (எ-று) (1)

பெண்ணாசை யென்கிற பேய்பிடித் தாடிய பேதைநெஞ்சே
கண்ணா லதில்வருங் கன்மங்கள் யாவையுங் கண்டிலையே
எண்ணாத பாவங்க ளெண்ணமற் செய்யுமிப் பேருடம்பு
மண்ணாக நற்றவஞ் செய்வாய் குணங்குடி வாய்த்திடுமே.

(பொ-ரை) பெண்ணாசை என்னும் பசாசு பிடித்தாடின அறிவில்லாத மனமே! வருகின்ற கர்மங்களையெல்லாம் கண்ணாற் பார்த்திலையா? ஆகையால் அளவில்லாத பாவங்களை நினைக்காமல் செய்கின்ற இந்தப்பெரிய சரீரம் மண்ணாவதன்பொருட்டு நீ உண்மையான தவஞ் செய்வாய். (அங்ஙனஞ் செய்வாயானால்) குணங்குடி நாதருடைய அருள் கிடைக்கும். (எ-று) (2)

ஆடும் படுபொரு ளாட்சியென் றங்கிங்கு மாயலைந்து
பாடும் படுவதுன் பாரம தோசொல்லு பாழ்மனமே
கூடும் படுபயன் றேடுமப் பாலுள்ள கூட்டமீவிட்டு
வாடும் படும்பெறு முண்மைக் குணங்குடி வாய்த்திடுமே.

(பொ-ரை) பாழ்பட்ட மனமே! அங்குமிங்கும் ஆடுகின்ற கொடிய பொருளாட்சிக்கு அங்குமிங்குமாயலைந்து பாடுபடுவது உன்னுடைய பாரமாமோ? நீசொல். சரீரம் கெட்டுப்போகின்ற வழியைத்தேடும் அப்பால் இருக்கின்ற கூட்டத்தைவிட்டு வாட்டம் பெறுவதொழிந்து உண்மை குணங்குடி நாதருடைய அருள்கிடைக்கும். (எ-று) (3)

ஆதி முகம்ம தருளா முகம்ம தருள்விரிந்த
சோதி முகம்மது தோற்ற முகம்மது தூயவுளத்
தோதி முகம்மதென் றுண்மைகண் டாலிவ் வுலகினுக்கு
வாதி முகம்மதி னோடு குணங்குடி வாய்த்திடுமே.

(பொ-ரை) ஆதிமுகம்மது, அருளாகின்ற முகம்மது, திருவருள் விரிந்தசோதி முகம்மது, காட்சி முகம்மது, பரிசுத்தமான மனத்தினகண் ஓதுகின்ற முகம்மது என்கிற உண்மையை உணர்ந்துகொண்டால் இந்த உலகத்திற்கு வாதியான முகம்மதினோடும் உண்மைக் குணங்குடி நாதருடைய அருளுங் கிடைக்கும். (எ-று) (4)

எல்லாப் படைப்பும் படைத்து மிரணங்க ளீபவனே
அல்லா வொருவ னவனன்றி வேறிலை யாகையினாற்
சொல்லாமற் சொல்லுஞ் சுருதி முடிவினிற் சொல்லிறந்த
வல்லான் குணங்குடி வாழ்ந்திருப்போமினி வாருமினே.

(பொ-ரை) எல்லாச் சிருஷ்டிகளையும் சிருஷ்டித்து இரணங்கள் கொடுப்பவன் அல்லா வொருவனேயல்லாமல் வேறு ஒருவரில்லை. ஆகையால் சொல்லாமல் சொல்லுகின்ற வேதத்தின் முடிவில் சொல்லிறந்த வல்லான் எழுந்தருளியிருக்கின்ற குணங்குடியில் வாழ்ந்திருப்போமாதலின் இனி நீங்கள் வாருங்கள். (எ-று) (5)

அய்யோ வுலகி லழியா வரம்பெற்றி யாரிருந்தார்
அய்யோ வுனக்கந்த வாதா வென்னகி லாசையென்னோ
பொய்யான வாழ்வும் புலையாட்டு நம்பும் புதாலர்க்கும்
ஒய்யார முள்ள குணங்குடி யாற்கு முறவில்லையே.

(பொ-ரை) அந்தோ! உலகத்தில் அழியா வரத்தைப்பெற்று யாவர் இருந்தார் ஒருவருமில்லை, அப்படியிருக்க உனக்குமாத்திரம் அந்த ஆசை என்? உலகவாசையும் என்ன? பொய்யான வாழ்க்கையும் புலையாட்டும் ஆகிய இவைகளை நம்புகின்றவர்களுக்கு ஒய்யாரமாகவிருக்கின்ற குணங்குடி வாழ்பவருக்கு உறவில்லை. (எ-று) (6)

உற்று ரிருந்தென்னைப் பெற்று ரிருந்தென் னுனக்குதவி
சற்று மினுமில்லை சொன்னேன்சொன் னேனிது சத்தியமாய்ச்
செற்றாலும் வைத்தடி வாங்காம னிற்கிற் செயம்பெறலாங்
கற்றுற் குணங்குடி கொண்டிடு வாய்மனக் கண்மணியே.

(பொ-ரை) சுற்றத்தார்களும், என்னைப் பெற்றவர்களும் இருந்தென்ன? எனக்குச் கொஞ்சமும் சகாயமில்லை. இதை உண்மையாகச் சொன்னேன். இதுவே சத்தியமாகக் கோபித்தாலும் வைத்து அடி வாங்காமல் இருக்கின்ற ஜெயத்தையடையலாம். மனத்திற்குக் கண்மணியே! கற்றால் குணங்குடியைக் கொண்டிடுவாய். (எ-று) (7)

எண்சா ணுயரத் திருக்கும் பனையி னிறக்கியுண் ணும்
பஞ்சாக் கரமெனும் பாரிய வாளினைப் பரிந்தெடுத்துத்
தஞ்சாவூ ராளு மகாராஜன் பாதம் தனைப்பணிந்தால்
கெஞ்சாக் குணங்குடி கொள்வா யிதுபுத்தி கேணெஞ்சமே.

(பொ-ரை) எட்டுச்சாண் உயரத்திலிருக்கும் பனையிலிருந்து இறக்கியுண்ணுகின்ற பஞ்சாட்சரம் என்கிற பெரியவாளைப் பரிவாக எடுத்து தஞ்சாவூரையாளுகின்ற மகாராஜனுடைய திருவடிகளை வணங்கினால் கெஞ்சாத குணங்குடியையடைவாய் நெஞ்சமே! இந்த புத்தியைக் கேட்பாய். (எ-று) (8)

படிக்கும் படிக்கு நடக்கின்றை யோவிப் பழஞ்செருப்பா
வடிக்கட்டு மோவுனக் கொத்தாசை யாரறை பாவிநெஞ்சே
முடக்கிப் படுத்துக்கொண் முச்சந்திக் குப்பையின் மோடுகளி
லடக்கிக் குணங்குடி கொள்வா யதுபா மானந்தமே.

(பொ-ரை) கற்ற கல்வியைப்போல நடக்கின்றாயோ? அன்றி இத் தப்பழுஞ் செருப்பால் அடிக்கட்டுமோ? உனக்கு யார் சகாயம்? பாவி நெஞ்சே! சொல்லுக. முடக்கிப் படுத்துக்கொள், முச்சந்திக் குப்பை சோடுகளில் அடக்கி குணங்குடியைக் கொள்ளுவாய், அதுவே பரமானந்தமாகும். (எ-று) (9)

ஆருக்கு மந்த விருந்தென் றிராம லருமையுள்ள
பேருக்கு வந்த தெனவே நினைந்து பிரியமுற்றா
ரூருக்கமைந்ததோ ரன்னங்களுண்டுண்டொன் றும்முரையாய்
பாருக்கு ணல்ல குணங்குடி போய்ப்பள்ளி கொண்டிடுமே.

(பொ-ரை) ஆருக்குவந்த விருந்தென்று இருந்து விடாமல் அருமையுள்ள பேருக்கு வந்ததென்று நினைந்து பிரியங்கொண்டு ஊரார்களுக்குப் பொருந்தினதான ஒரு அன்னங்களுண்டுண்டென்றும் சொல்லாய். உலகத்துக்குள் நல்ல குணங்குடியில் போய் பள்ளி கொள்ளுங்கள். (எ-று) (10)

மூல முகம்மது முப்பாழ் முகம்மது மோனமுள்ள
பால முகம்மது பத்தியுள் ளோர்களும் பாய்ந்தெடுக்கும்
வேலு முகம்மது வேதாந்த மூல விளக்குடைய
கோலு முகம்மது குன்றாக் குணங்குடி கொண்டவர்க்கே.

(பொ-ரை) மூலமுகம்மது, முப்பாழ் முகம்மது, மௌனமுள்ள பாலமுகம்மது, பத்தியுள்ளோர்களும் பாய்ந்தெடுக்கின்ற வேலுமுகம்மது, வேதாந்த மூலவிளக்கையுடைய கோலுமுகம்மது இவர்களாவார்கள். குன்றாத குணங்குடியைக் கொண்டவர்களுக்கே. (எ-று) (11)

நாளைக் கிருந்திட லாமென வெண்ணி நடுநெஞ்சமே
நாளைக் கிருப்பதை நம்புவ தோவில்லை நானிலத்தில்
நாளைக்கும் பின்னைக்கும் நாமிருப் போமென்னுநட்டமற்றெவ்
வேளைக்கு நல்லகுணங்குடி வாழ்ந்திரு வேலையிதே.

(பொ-ரை) நடுவுநிலைமையான மனமே! நாளைக்கு இருக்கலாமென்றெண்ணி இராதை, இவ்வுலகத்தில் நாளைக்கிருப்பதை நம்புவதில்லை. நாளைக்கும், அதற்குப்பிறகும் நாம் இருப்போமென்னும் நாட்டமொழிந்து எக்காலத்திலும் உயர்ந்த குணங்குடியில் வாழ்ந்து கொண்டிரு; உனக்கு இதுவே வேலையாகும்.(எ-று) (12)

நாட்டமென் றேயிரு வுன்னிரு பாதத்தி னன்னிலையின்
ஓட்டமென் றேயிரு வொன்றான வக்கர மோதியதின்
ஆட்டமென் றேயிரு தோற்ற மெனையு*மலிவுடைய
நீட்டமென் றேயிரு நெஞ்சே குணங்குடி நிச்சயமே.

(பொ-ரை) உன்னுடைய இரண்டு திருவடிகளில் நாட்டமென்றே யிரு; உண்மையான நிலையில் ஒட்டமென்றே இரு: ஒரு அட்சரத்தை ஓதியதின் திருக்கூத்தென்றே இருகாட்சிகள் யாவும், மிகவும் பருக்க நீட்டம் என்றேயிரு மனமே! குணங்குடியே நிச்சயமாகும். (எ-று)

நாடு நகருண்டு நல்லோர் களுமுண்டு நாதனுமுண்
டோடுமெனக்குண்டென் றெண்ணியுன் கையிலுடல்பசித்தாற்
போடென்று கொண்ட கவளத்தைவாங்கிப் புசித்துக்கொண்டு
பாடுங் குணங்குடி வாழ்ந்திட வேபர மானந்தமே.

(பொ-ரை) நாடு, நகரம், நல்லோர்கள், ஈஸ்வரன், ஓடு இவைகளெல்லாம் எனக்கு உண்டென்றெண்ணி உடல் பசித்தால் உன்கையில் போடு என்று அவ்விடம் போடக்கொண்ட கவளத்தை எடுத்துப் புசித்துக்கொண்டு பாடுகின்ற குணங்குடியில்வாழ பரமாநந்தம் உண்டாகும். (எ-று) (14)

தவமேபெற வேண்டுமெனல் முற்றுப்பெற்றது.

ஆ பாடல் - 233.

---

# குறையிரங்கி யுரைத்தல்.

நேரிசைவெண்பா.

கள்ளினங்க ளுண்ணுங் கழுதைகா ளென்சொலினும்
எள்ளளவு முன்னிதயத் தெய்திலே-உள்ளம்
இணங்காமடமாந்த ரெக்கேடு தான் கெடினுங்
குணங்குடியார்க் குண்டோ குறை.

(பொ-ரை) கள்வகைகளைக் குடிக்கின்ற கழுதைகளே! என்ன சொன்னாலும் எள்ளளவாவது உன்னுடைய மனத்தில் பொருந்த வில்லையே! மனமானது சம்மதியாத அறிவில்லாத மக்கள் எந்தக்கேட்டை யடைந்தாலும் குணங்குடியார்க்கு என்ன குறை உண்டு. (எ-று) (1)

உற்றா ரழாம லுறன்முறையார் திட்டாமற்
பெற்றார் பிறந்தார் பிதற்றாமல்-எத்தாலும்
அங்கிங் கெனாதபடி யாரும் பெருவெளியிற்
றங்கல் குணங்குடியே தான்.

(பொ-ரை) சுற்றத்தார் அழாமலும், உறன்முறையார் திட்டாமலும், பெற்றவர்களும், பிறந்தவர்களும் வாய்க்குவந்தவாறு பிதற்றாமலும், எவ்விதத்தினாலும் அங்கு இங்கு என்று சொல்லாதபடி யாவரும் பெருவெளியில் தங்குவது குணங்குடியேயாகும். (எ-று) (2)

நாசி நுனியி னயனத் திடைவெளியிற்
றேசிகனா ராடுந் திருநடனம்- வாசிகொடுத்
தோரா யெழுவா யுணர்வா யருணெஞ்சே
பாராய் குணங்குடியின் பால்.

(பொ-ரை) அருளையுடைய மனமே! நாசியின் நுனியிலுள்ள கண்களுக்கு மத்தியிலுள்ள ஆகாயத்தின்கண் ஞானசிரியர் ஆடுகின்ற திருநடனத்தை வாசியினால் எழுந்து உணர்வாய், அன்றி குணங்குடியான் சமீபத்தில் பாராய். (எ-று) (3)

பாவிடுக்குந் தோற்பையைப் பற்றியுளம் பாவையரின்
காலிடுக்குக் காகக் கரைவனோ- மேலெடுக்கும்
உன்னருளை யுங்காட்டி யோங்குங் குணங்குடியின்
றன்னருளை யுங்காட்டிக் கா.

(பொ-ரை) பாவையடக்கிவைக்கும் தோற்பையைப்பற்றி மனத்தினால் பெண்களின் காலிடுக்குக்காக கரைவேனோ? மேலாக எடுக்கும் உன்னுடைய அருளையும் காட்டி ஓங்குகின்ற குணங்குடியானின் திருவருளையுங் காட்டிக்கொடு.(எ-று) (4)

நஞ்சுண்ணுமாப்போ லுநாத னருள்பெறவென்
னெஞ்சேநீ புண்ணாய் நினைப்பதென்-அஞ்சாதே
என்றுமுத்த னம்முள்ளே யேகா திருப்பதால்
ஒன்றுங் குணங்குடியி னுள்.

(பொ-ரை) விஷத்தைத் தின்பதுபோல ஈஸ்வரனுடைய திருவருளைப்பெற என்னுடைய மனமே! நீ புண்ணாக எண்ணுவது என்? பயப்படாதை என்று முத்தனானவன் நமக்கும் போகா திருப்பதால் குணங்குடிக்குள் சேர்வாய்.(எ-று) (5)

நீண்டாண் பனைபோலு நெற்பதரைப் போலுமே
வன்று னெனைப்படைத்தா யென்கோவே-தீண்டாத
கல்லா மிடாவதைநின் கைத்தடியான் மோதினால்
அல்லாற் குணங்குடியா கா.

(பொ-ரை) ஆண்பனையைப்போலவும், நெல்லின் பதரைப்போலவும் என்னை என் சிருஷ்டித்தாய்? என்னுடைய தலைவனே! தீண்டாத கல்லாத மிடாவை உன்னுடைய கைத்தடியினால் அடித்தால் அல்லாமல் குணங்குடியாகமாட்டா. (எ-று) (6)

மெத்தத் துணிபோர்க்க மெத்தமெத் தக்குளிருஞ்
சற்றுதுணி போர்த்துவரச் சற்றுகுளிர்-இற்றதுணி
இல்லைக் குளிருமில்லை யில்லையிது தானுளமே
செல்லக் குணங்குடியார் சீர்.

(பொ-ரை) மெத்தத் துணியைப் போர்க்க மெத்த மெத்தக் குளிரும், கொஞ்சம் துணியைப் போர்த்துக் கொண்டுவரக் கொஞ்சம் குளிரும், நீங்கிய துணியில்லையேல் குளிருமில்லை, இதுதான் மனமே! செல்லக் குணங்குடியாருடைய சீர் உண்டாம். (எ-று) (7)

ஆக பாடல் - 240

---

நாகூர்மீருன்சாகிபு அவர்கள்மீதுபாடிய

ஆசிரிய விருத்தம்.

திக்குத் திகந்தமுங் கொண்டாடியேவந்து
 தீன்கூறி நிற்பர் கோடி
சிங்காச ஞதிபர்க ளதையேந்தி
 ஜெயஜெயா வென்பர் கோடி
அக்கனருள் பெற்றபெரி யோர்களொலி மார்களணி
 யணியாக நிற்பர் கோடி
அஞ்ஞான வேரறுத் திட்டமெய்ஞ் ஞானிக
 ளணைந்தருகு நிற்பர் கோடி
மக்கநக ராளும் முகம்மதுற் றசூல்தந்த
 மன்னரே யென்பர் கோடி
வசனித்து நிற்கவே கொலுவீற் றிருக்குமுன்
 மகிமைசொல வாயு முண்டோ
தக்கபெரி யோனருட் டங்கியே நிற்கின்ற
 தவராஜ செம்மே ருவே
தயையைவைத் தென்னையாள் சற்குணங் குடிகொண்ட
 சாகுல்கமீத ரசரே.

(பொ-ரை) தகுந்த பெரியவர்களுடைய திருவருளை நிலைநிறுத்து கின்ற தவராஜசிங்கமே; ஞானமயமான குணங்குடியில் வாழ்கின்ற சாகுல்கமீதரசரே! சர்வதிசைகளிலும் கொண்டாடிக்கொண்டு வந்து தீன்சொல்லி நிற்பவர்கள் அனேகர்; சிங்காசனதிபர்கள் அதைத் தாங்கிக் கொண்டுவந்து ஜெய! ஜெய!! என்று சொல்லுபவர்கள் அனேகர்; ஈஸ்வரனுடைய திருவருளையடைந்த ஒலிமார்களில் வரிசை வரிசையாக நிற்பவர்கள் அனேகர்; அஞ்ஞானத்தின் வேரையறுத்த உண்மை ஞானிகள் சேர்ந்து சமீபமாக நிற்பவர்கள் அனேகர்; மக்கா நகரத்தை யாளுகின்ற முகம்மதுற்றசூல் என்பவர் கொடுத்த அரசரே என்று சொல்லுபவர் அனேகர்; இவர்களெல்லாம் துதிசெய்து நிற்க கொலுவீற்றிருக்கின்ற உன்னுடைய மகிமையைச் சொல்லவாயுண்டோ? இல்லை. தயவுசெய்து என்னை ஆண்டருள் செய்யவேண்டும். (எ-று)

முற்றிற்று.

### கலி விருத்தம்.

வஞ்ச வேல்கொடு மார்பி லெறியினும்
விஞ்ச வேதழல் மூட்டி யெரிக்கினும்
நஞ்சி னாழ லுக நலியினும்
அஞ்சி டாதவ ரானந்த மாவரே.

(பொ-ரை) வஞ்சகத்தையுடைய வேலைக்கொண்டு மார்பின்கண் எறிந்தாலும், விளங்கும்படி அக்கினியை மூட்டி எரித்தாலும், நஞ்சனூர் அழல் நரகத்தில் நலிந்தாலும் பயப்படாதவர் ஆநந்தமடைவர். (1)

முற்றிற்று.

ஆ பாடல் 242.

# ஆனந்தக்களிப்பு.

இரக்கத் துணிந்துகொண் டேனே - எனக்
கிருக்குங்குறைமுழுதும் நிகழ்த்திக்கொண்டேனே (இர)

(பொ-ரை) கடவுளை இரக்கவேண்டி மனத்துணிந்து எனக்கிருக்கின்ற எல்லாக்குறைகளையும் அவரிடத்தில் சொல்லிக்கொண்டேன்.

கொடிகட்டிக் கொண்டெழு கோடி - தனங்
குவித்தந்த மகிழ்ச்சியாற் கூத்துக ளாடி
கெடுபுத்தி யுடையோரைக் கூடி - யானுங்
கெட்டலை யாமலே கெதிபெற நாடி (இர)

(பொ-ரை) கொடியைக் கட்டிக்கொண்டு ஏழுகோடி தனம் சேர்த்து அந்தச் சந்தோஷத்தினால் கூத்துகளாடி கெட்ட புத்தியுடையவர்களோடு சினேகித்து நானும் கெட்டு அலையாதபடி கெதியை யடைய வேண்டி. (எ-று)

சொற்கடங் காச்சுக ஞானம் - தன்னிற்
சும்மாவிருக்குஞ் சுகமதே மோனம்
எட்கிடை யாயினும் பானங் - தன்னை
எடுத்துண் டிருப்பதற் கிச்சித்தே யானும் (இர)

(பொ-ரை) சொல்லுக்கு அடங்காத சுகத்தை விளைவிக்கின்ற ஞானத்தில் சும்மா விருப்பதே மௌனம், ஆகையால் எள்ளளவாவது பானம் எடுத்து உண்டிருப்பதற்கே நான் விரும்பினேன். (எ-று)

வஞ்சிய ராசையைத் தாட்டி - விட்டு
வழிபெற்றுக் களிப்புற்று வாசியைப் பூட்டி
துஞ்சாத வறிவினைச் சூட்டி - அற்புதத்
தொல்லுல காசை துணித்துவிட் டோட்டி (இர)

(பொ-ரை) பெண்களுடைய ஆசையைத் தாண்டிவிட்டு நல்ல வழியைப் பெற்றுக் களிப்பையடைந்து வாசியைப் பூட்டி கெடாத அறிவைமாட்டி அற்பமாகிய பழைய உலக ஆசையைக் கெடுத்துவிட்டு ஓட்டி. (எ-று)

அஞ்சுதா ணாட்டிய மாடி - அது
அஞ்சோடு நாலோட்டை யடையாம லோடி
பிஞ்சழிந் திடுமென்று நாடி - யானும்
பேரின்ப வீட்டினைப் பிரியமாய்த் தேடி (இ)

(பொ-ரை) அஞ்சு தூண்கள் நாட்டப்பட்ட மாடியானது அஞ்சுடன் நாலோட்டையடையாமல் ஓடி, பிஞ்சானது அழியுமென்று நாடி யானும் பேரின்ப மோட்சவீட்டை ஆசையுடன் தேடி. (எ-று)

நற்பூச்சந் தனவத்தர் பூசி - மிக
நன்றாக வைத்தாலும் நாற்றமே வீசி
எப்போதுங் கொடுமைசெய் தோசி - என்றே
இவ்வுடல் வாழ்வுக ளியாவையும் வீசி (இ)

(பொ-ரை) நல்ல புஷ்பங்கள், சந்தன அத்தர், இவைகளைப்பூசி, மிகவும் நன்றாக வைத்தாலும் நாற்றம்வீசி எப்பொழுதும் கொடுமைகளைச் செய்கின்ற தோஷி என்று இந்தச் சரீர வாழ்வுகள் யாவையும் எறிந்து. (எ-று)

மாளிகை மேல்வீடு கட்டி - மனை
வாழ்வை நிலையென்று வாழ்கின்ற மட்டி
நாளை யெமன்வந்த தட்டிக் - கொண்டு
நடப்பானென்றறியானை யடுப்பதைவெருட்டி (இ)

(பொ-ரை) மாளிகை, மேல்வீடு, இவைகளைக்கட்டி மனைவாழ்க்கையை நிலையென்ற மட்டி, நாளைக்கு எமனெனவன் வந்து அதட்டிக்கொண்டு போவான் என்று அறியாதவனைச் சேர்வதை மயக்கி.

பட்டும்பணிகளும் பூண்டு - கொண்டு
பாழான வாழ்வினைப் பலனென மாண்டு
கெட்டவர்களைக்கண்டு மீண்டு - கதி
கிடைக்கும் படிக்கு நடப்பதற் கீண்டு (இ)

(பொ-ரை) பட்டுவஸ்திரம், ஆபரணங்கள் இவைகளைத் தரித்து பாழ்பட்ட வாழ்க்கையைப் பலனென்று கொண்டு மாண்டு கெட்டவர்களைப் பார்த்து நீங்கி, ஈண்டு கெதிகிடைப்பதற்கு நடப்பதற்கு.(எ-று)

காமக்குரோ தங்க ளற்று - சூழுங்
கருவி காணஞ் சகலமு மற்று

நேம நிஷ்டைகளையு மற்று - நின்ற
நிலையு மறந்து குருவடி பெற்று (இ)

(பொ-ரை) காமம், குரோதங்கள் ஒழிந்து, சூழ்கின்ற கருவி, கரணங்கள் சகலமும் அற்று, நியமம், நிஷ்டைகள் நீங்கி, நின்ற உண்மை நிலையையும் மறந்து ஞானாசிரியனுடைய திருவடிகளைப்பெற்று. (எ-று)

எத்தனை யெத்தனை காலம் - இந்த
என்பு தசையா லெடுக்கின்ற தூலம்
மெத்தன வாழுமிஞ் ஞாலம் - அதை
மேவாது மேவாதெ டுத்திந்தக் கோலம் (இ)

(பொ-ரை) எத்தனைகாலம் எலும்பு, சதை முதலியவற்றால் எடுக்கின்ற ஸ்தூலம், பிருதுவாக வாழ்கின்ற இவ்வுலகம், அதை அடையாமல் இந்தக்கோலம் எடுத்து. (எ-று)

எந்நிலை தன்னை யறிந்தே - என்னுள்
இருந்தாடுஞ் சூத்திரம் பொருந்தாட மறிந்தே
அன்னிய நிலைகளைத் துறந்தே - குரு
அருளினா லநுதின மருளெலா மறிந்தே (இ)

(பொ-ரை) எம்முடைய நிலையை உணர்ந்து எனக்குள்ளிருந்து ஆடுகின்ற சூத்திரம் பொருந்துகின்ற ஆட்டத்தையறிந்து அன்னியருடைய நிலைமைகளைவிட்டு ஞானாசிரியனுடைய கிருபையினால் தினந்தோறும் அருளெல்லாவற்றையும் அறிந்து. (எ-று)

ஆழித் துரும்பென வங்கும் - இங்கும்
அலைந்து திரிவதி லஞ்ஞானந் தங்கும்
பாழிற் கெடாதருள் பொங்கும் - படி
பார்த்துத் துணிந்து பரதேச மெங்கும் (இ)

(பொ-ரை) சமுத்திரத்தில் பட்ட துரும்பைப்போல அங்குமிங்கும் திரிவதில் அஞ்ஞானமே குடிகொள்ளும்படியான கெடுதியினால் நான் கெட்டுப் போகாதபடி திருவருள் பொங்கப்பார்த்து துணிந்து சர்வ தேசங்களிலும். (எ-று)

காடுங்க ரையுஞ்சு ழன்று - ஒரு
காட்சியுங் காணேமெனவேயு ழன்று
தேடும் பருவத்திற் சென்று - திக்குத்
திசை யொன்றுந் தெரியாமற் றெளிதற்கு நின்று (இ)

(பொ-ரை) காடு, கரை முதலியவைகளில் சுற்றி ஒரு காட்சியும் காணப்படவில்லையேயென்று உழன்று தேடுகின்ற காலத்தில் போய் எந்தத் திசையும் தெரியாமல் தெளிவதற்கு நின்று. (எ-று)

ஆடிய கூத்தினைப் போற்றி - அருள்
ஆனந்தஞ் சேர்க்கு மருளினிற் றேற்றி
ஓடிய காற்றினை யேற்றி - அதில்
உருகி யொழுகும மிர்தத்தைத் தேற்றி (இ)

(பொ-ரை) ஆடின திருக்கூத்தைத் துதித்து திருவருளினால் ஆனந்தத்தை யுண்டாக்குகின்ற அருளிலுதித்து ஓடின வாசியை ஓடாமல்பற்றி அதில் உருகி ஒழுகுகின்ற அமிர்தத்தைத் தேற்றி. (எ-று)

நாலிரண் டரைமுழ மான - பிண
நாற்றச் சடலத்து ளானென்று ஞானக்
கோலம் விளக்கிய மோன - அருள்
குருவடி திருவடி வுருவத்தை மான (இ)

(பொ-ரை) நாலிரண்டரை முழமான பிணநாற்றம் வீசுகின்ற சரீரத்திற்குள் நான் என்றைக்கும் கோலத்தை விளக்கின மோன அருள்குருவின் திருவடி யுருவத்தைப்போல. (எ-று)

எறியுமகத்தைத் தடுத்தே - அதில்
இச்சித்துப் பக்ஷமிகவைத்த டுத்தே
அறிவைக்கொண் டறிவைத்தொ டுத்தே - அருள்
ஆனந்தஞ் சேர்க்கின்ற வருளினை யெடுத்தே (இ)

(பொ-ரை) வீசுகின்ற கர்வத்தை தடுத்து அதில் இச்சைவைத்து பட்சத்தை அடுத்தடுத்து வைத்து உண்மையறிவினால் அறிவையுணர்ந்து திருவருளானந்தத்தை எனக்குக்கொடுக்கின்ற உயர்ந்த அருளை எடுத்து. (எ-று)

பாரினிற் பலவிதங் காட்டி - நல்ல
படிகத்தின் குணமெனப் பரவெளி சூட்டி
ஆரிய னருளினைக் கூட்டி - குரு
அருள்செய்த வுடனேயென் வினைகளை யோட்டி (இ)

(பொ-ரை) உலகத்தில் பலவிதங்களைக் காட்டி உயர்ந்த படிகத்தின் நற்குணத்தைப்போல பரவெளியைச்சூட்டி, குருவின் அருளைச் சேர்த்து அந்தக்குருவானவர் அருள் செய்தவுடன் இருவினைகளைப் போக்கடித்து. (எ-று)

மண்டப வுள்ளறை விண்டு - வரும்
மாமண மூறிய தேமது வுண்டு
உண்டுகளிப்போரைக் கண்டு - யானும்
உள்ளத்திருக்கினைத் தள்ளிக்கை கொண்டு (இ)

(பொ-ரை) மண்டபத்திலிருக்கின்ற உள்ளறையை விட்டு வருகின்ற பெரியமணமானதூ றுறியும்பொருட்டுத் தேனைக்குடித்து சந்தோஷிப்

பார்களைக்கண்டு நானும் மனமயக்கத்தை நீக்கி நன்மையைக் கைக்கொண்டு. (எ-று)

மாதவந் தன்னைப்பு ரிந்து - ரச
வாதங்கள் செய்கிறேனென் றுதி ரிந்து
சூதோடு வாதைபு ரிந்து - கெட்ட
சூதரைச் சத்திய மாக்ப்பி ரிந்து (இர)

(பொ-ரை) மகத்தாகிய தவஞ்செய்து ரசவாதங்கள் செய்கிறேனென்று திரிந்து சூதாடுகின்ற வேதனைகளைச்செய்து கெட்ட சூதாடிகளை உண்மையாகப் பிரிந்து. (எ-று)

பொறிபுல னடங்கிய காலே - பரி
பூரணப் பொருள் வந்து வாய்க்குமப் பாலே
அறிஞரு மறியாது போலே - காணும்
ஆனந்த வெள்ளத்தி னாடின தாலே (இர)

(பொ-ரை) பொறி, புலன் இவைகள் ஒடுங்கினகாலத்தில் பரிபூரணப் பொருள்வந்து கைகூடும். அப்பால் அறிவுள்ளவர்களும் அறியாமல்போல காணுகின்ற ஆநந்தவெள்ளத்தில் நாடினதினால். (எ-று)

நினைவுங் கனவு மறந்து - பின்னர்
நிலையு மறந்தெழுகலையு மறந்து
இனமு மனமும் மறந்து - பின்னர்
இதனிடை தோற்றிய விதங்களு மறந்து (இர)

(பொ-ரை) நினைவையும், கனவையும் மறந்து இருந்த நிலைமையையும் மறந்து சாதியையும், மனத்தையும் மறந்து, பிறகு இதில் உண்டான சர்வவகைகளையும் மறந்து. (எ-று)

கற்பட்டுப் பாய்கின்ற தோயம் - போலக்
காட்டி மறைக்கும் பிரபஞ்ச மாயம்
அற்பர்க்குத் தெரியாது பாயம் - என்று
ஆலோ சனைசெய்த ழியுமுன் காயம் (இர)

(பொ-ரை) கல்லிடிந்து ஓடுகின்ற வெள்ளத்தைப் போலக்காட்டி பிரபஞ்சமாயமானது மறைக்கும். இதை தடுக்கும் உபாயம் அற்பருக்குத்தெரியாது என்று காயம் அழிவதற்கு முன் ஆலோசனை செய்து

எனையாரென் றறியாத பாடு - என்னை
இக்கோல மாக்கிய தேயதன் கேடு
தனையாளு மெதிர்க்கைபி னோடு - கொண்டு
சாபத்துட னடர்ந்து கோபத்தி னோடு (இர)

(பொ-ரை) என்னை நானென்று அறியாதபாடு என்னை இந்தக் கெடுதியாக்கியதே கேட்டையானும் எதிர்த்துக்கொண்டு சாபத்துடன் அடர்ந்து கோபத்திறேடு. (எ-று)

விண்ணுக்குள் வெளியிருண் மாற்றி - அதில்
வேதாந்த மூலவி ளக்கினை யேற்றிக்
கண்ணுக்குண் மணியாகத் தோற்றி - தருங்
காரண மான கடவுளைப் போற்றி (இர)

(பொ-ரை) ஆகாச வெளிக்குள்ளிருக்கின்ற இருட்டைபற்றி அதில் வேதாந்த மூலவிளக்கை ஏற்றி கண்ணுக்குள் கண்மணியாகக் காட்டி வருகின்ற காரணவஸ்துவான கடவுளை நமஸ்காரஞ்செய்து.

எல்லாரு மானிடர் தாமோ - இந்த
இழிவான பிரமைகளெல்லார்க்கும் போமோ
கல்லெல்லா மாணிக்க மாமோ - என்று
கற்பித்த காரண குருவடி போற்றி (இர)

(பொ-ரை) யாவரும் மானிடர்கள் தாமோ அப்படியிருக்க இந்த பழிபாவமுள்ள மாய்கைகள் எல்லாருக்கும் நீங்குமோ, எல்லாக்கற் களும் மாணிக்கக்கற்களாகுமோ? என்று கற்பனைசெய்த காரணகுரு வின் திருவடிகளை நமஸ்காரஞ்செய்து. (எ-று)

நாதமுங் கீதமுங் கேட்கும் - அந்த
நாயகன் சந்நிதி தன்னிடை சேர்க்கும்
மாதவ நன்னிலை யாக்கும் - நல்ல
மாசறு தேசிகன் பொற்பதம் போற்றி (இர)

(பொ-ரை) நாத, கீதங்கள் கேட்கின்ற அந்தநாயகனுடைய திருக் கோவிலில் சேர்க்கும் மகத்தாகிய தவநிலையை யுண்டாக்குகின்ற உயர் ர்ந்த குற்றமற்ற ஞானசிரியனுடைய திருவடிகளை நமஸ்காரஞ்செய்து.

கட்டுப் படுங்கன்மக் குட்டை - வருங்
காலத்தச் சன்கையால் வெட்டிடுங் கட்டை
துட்டத் தொழில் படைத்த மட்டை - இந்தத்
தூலமென் றெண்ணிக்கு ருவருள் போற்றி (இர)

(பொ-ரை) கட்டுக்கடங்குகின்ற கர்மமென்னும் குட்டைவருகின்ற காலனென்னும் தச்சன்கையினல் வெட்டுங்கட்டை, துஷ்டத்தனம் படைத்தமட்டை, ஆகிய இவைகளே இந்தச் சரீரமாம் என்று நினை த்து ஞானசியரினுடைய திருவருளை நமஸ்காரஞ்செய்து. (எ-று)

போக்கு வரவற்ற போதம் - பஞ்ச
பூதாதி யாலடங் காதெழு நாதம்
வாக்கி லமையாத வேதம் - தன்னை
வடித்துப் புகட்டு மகத்துவைப் போற்றி (இர)

(பொ-ரை) போக்குவரவில்லாத போதம், பஞ்சபூதங்களால் எழுகின்ற வாதம், வசனத்துக்கு அடங்காத வேதம் ஆகிய இவைகளை வடித்து தின்பிக்கிற ஞானுசிரியனை நமஸ்கரித்து. (எ-று)

நரம்பு தசைதோ லெலும்பு - கொண்டு
நாட்டும் வினைகளுக் காட்டுந் துரும்பு
நிரம்புந் துயர்கோ ளுடம்பு - என்று
நில்லாதென் றெண்ணியில் லில்லாளைப் போற்றி (இர)

(பொ-ரை) நரம்பு, தசை, தோல், எலும்பு இவைகளைக்கொண்டு நாட்டுகின்ற இருவினைகளுக்கு ஆட்டுகின்ற துரும்புகள் நிறைந்திருக்கின்ற துன்பங்கள் ஒழியாத உடம்பு என்றும் இது நிலைநில்லா என்றெண்ணி இல்லல்லாளை நமஸ்காரஞ்செய்து. (எ-று)

ஆழித் திரளெனப் பொங்குஞ் - அருள்
ஆனந்தஞ் சேர்க்கு மறிவிற்க டங்கும்
நாளுக்கு நாளங்கு மிங்குஞ் - சற்றும்
நாதாந்த வேதாந்த நாதனைப் போற்றி (இர)

(பொ-ரை) சமுத்திரக் கூட்டத்தைப்போல பொங்கும் திருவருளானந்தத்தைச் சேர்க்கும் உண்மை யறிவுக்கடங்கும் நாளுக்குநாள் அங்குமிங்குமாகச் சுற்றுகின்ற நாதாந்தத்திலும் வேதாந்தத்திலும் இருக்கின்ற தலைவனை நமஸ்காரஞ்செய்து. (எ-று)

இன்றைக் கிருப்பதும் பொய்யே - இனி
இன்றைக் கிருப்பது மெய்யென்ப தையே
என்று மிருப்பது மெய்யே - என
எண்ணி யெண்ணியரு ளுண்மையைப் போற்றி (இர)

(பொ-ரை) இன்றைக்கு ஜீவித்திருப்பதும் பொய்யே, இனி என்றைக்கிருப்பது மெய்யோ, என்றைக்கு மிருப்பது உண்மையே என்று எண்ணி யெண்ணி திருவருளுண்மையை நமஸ்காரஞ்செய்து. (எ-று)

பார்க்கப் பலவித மாயும் - ஆகப்
பல்லாயி ரங்கோடி யண்டம தாயும்
காக்கு நிலைக்குயி ராயும் - நின்ற
காரண பூரண நாதனைப் போற்றி (இர)

(பொ-ரை) பார்ப்பதற்குப் பல வகையாகவும், அன்றி பலகோடி அண்டங்களாகவும் காவல் செய்கின்ற உயிர் நிலையாகவும் இருந்த காரணபூரண தலைவனை நமஸ்காரஞ்செய்து. (எ-று)

கரும்புசர்க் கரைகற்கண் டாலே - பாகங்
காய்ச்சி யெடுத்துத் திரட்டிய பாலே
அரும்பாவிக் கருத்துங்கை யாலே - அணைத்
தாட்கொளு நாயகன் ருள்களைப் போற்றி (இர)

(பொ-ரை) கரும்பு, சர்க்கரை, கற்கண்டு இவைகளால் பாகமாகக் காய்ச்சி எடுத்துத் திரட்டினபாலே அரும்பாத இந்தக்கருத்து உம்முடைய கையினால் அணைத்து அடிமைகொள்ளும் தலைவனுடைய திருவடிகளை நமஸ்காரஞ்செய்து. (எ-று)

கற்பங்க ளுண்கிறோ மென்றே - வெறி
கஞ்சாவுங் கள்ளும பினியுந் தின்றே
துப்புக்கெட்டலையாம லின்றே - அருள்
தூயமெய்ஞ் ஞானச் சுடரினைப் போற்றி (இர)

(பொ-ரை) காயகற்பங்கள் செய்து கொள்ளுகிறோமென்று வெறியைக்கொடுக்கின்ற கஞ்சா, கள், அபினி இவைகளைத்தின்று கெட்டலையாமலிருந்து திருவருளையுடைய பரிசுத்தமான உண்மை ஞானச்சுடரைப்போற்றி. (எ-று)

கருவி வழிதனி லோடி - யானுங்
காலுக ளோய்ந்தும் விடாமலே தேடி
அருவிக்க யர்ந்துவாம் வாடி - அலை
யாமலெனக்கருள் வாமனைப் போற்றி (இர)

(பொ-ரை) கருவிகளாகிய வழியில்போய் நான் என் கால்கள் ஓயாமல் தேடி அங்கிருந்துவருகின்ற அருவியாற்றினால் சரீரமிளைப்பால் மனம்வாடியலையாமல் எனக்கு அருள்செய்கின்ற இறைவனைப்போற்றி.

நாசி நுனியிடை நின்று - நல்ல
நடனம்புரிவதைக் கலீர்கலீ ரென்று
வாசியி லேறிக்கொண் டின்று - காண
வைத்த குருபா னற்றுளைப் போற்றி (இர)

(பொ-ரை) நாசியின் நுனியிலிருந்து உயர்ந்த நடனஞ் செய்வதைக் கலீர் கலீர் என்று வாசியிலேறிக்கொண்டு இன்று காணும்படி வைத்த ஞானாசிரியனுடைய திருவடிகளைப்போற்றி. (எ-று)

தேடிய பொருள்புதைப் போரும் - தேசா
தேசங்கள் ராஜாங்க மாண்டிருப் போரும்
ஈடெனக் கில்லையென் போரும் - செத்
திறப்போரென் றேமனந் திறப்படப் போற்றி (இர)

(பொ-ரை) சம்பாதித்த திரவியத்தை புதைத்து வைப்பவர்களும், சகல தேசங்களையும் அரசாள்பவரும், எனக்குச் சமமில்லை யென்பவரும், செத்துப்போவார் என்றேமனம் திறமடையப் போற்றிசெய்து.

ஆனைகுதிரைக ளொட்டை - ரதம்
ஆசையோ டேறுமுடலொட லொட்டை
ஞானமி லாதகண் பொட்டை - என்ற
நாதன் குருவறி வித்ததைப் போற்றி (இர)

(பொ-ரை) ஆனை, குதிரைகள், ஒட்டை, ரதம் இவைகளை ஆசையுடன் ஏறுகின்ற சரீரமானது லொட லொட்டை, ஞானமில்லாத கண்களோ மொட்டை என்று உபதேசஞ்செய்த ஆசாரியனை உணரும் விதத்தைப் போற்றிசெய்து. (எ-று)

அரச னரண்மனைக் கோட்டை - சூழ
அன்பர் நடனம் புரிகின்ற பாட்டை
இரவும் பகன்மனக் கோட்டை - வைத்த
இன்பக் குணங்குடி யானருள் போற்றி (இர)

(பொ ரை) ராஜாவின் அரண்மனையான கோட்டையைச்சூழ அடியார்கள் நடிக்கின்ற பாட்டை, இரவும் பகலும் மனக்கோட்டை வைத்திருக்கின்ற இன்பத்தையுடைய குணங்குடியினுடைய திருவருளைப் போற்றிசெய்து. (எ று)

ஆ பாடல்-280.

# நிராமயக்கண்ணி.

ஆதிமுதலே யகண்டபரி பூரணமென்
றோதுங் குணங்குடி கொண்டோனே நிராமயமே.

(பொ-ரை) முதற்கடவுளே! சர்வபரிபூரணவஸ்துவென்று எவராலும், சொல்லப்படுகின்ற குணங்குடிஎன்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கின்றவனே! ரோகபீடிதமில்லாய்பொருள் என்னும் நிராமயமே! (எ- று) 1

தேசிகனு னென்றே திருநடன மாடுகின்ற
வாசாம கோசரமே வாழி நிராமயமே.

(பொ-ரை) ஞானாசிரியன் நானென்று திருக்கூத்தாடுகின்ற வாசாமகோசரப் பொருளே! வாழி, நிராமயமே! (எ-று)

எல்லாவற்றிற்கும் யாவருக்கும் குருதானேயென்று பரிபாகிகளுக்குச் சொல்லவருபவன் இறைவனே யென்பார், 'தேசிகனுனென்றே திருநடனமாடுகின்ற' எனவுங்கூறினர். (எ-று) 2

சுத்தத் திருவடியிற் சொக்கி யருள்பெறுமுன்
செத்திறந்து போனாலென் செய்வே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பரிசுத்தமான திருவடிகளில் சொக்கித் திருவருளை யடைவதற்கு முன்னமே நான் இறந்துபோனால் என்ன செய்வேன்? (எ-று)

சரீரம் இறந்துபடா முன்னர் இறைவனுடைய திருவருளைத் தேடவேண்டும் என்பது கருத்து. 3

கண்ணே மணியேயென் கண்ணிறைந்த காரணமே
விண்ணே மெய்ஞ் ஞான வெளியே நிராமயமே.

(பொ ரை) கண்ணே! கண்ணுக்குள்மணியே! என்னுடைய கண்ணுக்குள் நிறைந்திருக்கின்ற காரண வஸ்துவே! ஆகாயமே! உண்மை ஞான வெளியே! நிராமயப்பொருளே! (எ று)

இறைவன் கண்போலறிவின னென்பார், 'கண்ணே' எனவும், அக் கண்ணொளிபோலா வானுமவனே யென்பார், 'கண்ணுக்குள் மணியே' எனவும்; கண்ணின்வியாபகத்தை போலவே சர்வ வியாபகனென்பார், 'கண்ணிறைந்த காரணமே' எனவும், ஆகாசரூபனென்பார், 'விண்ணே' எனவும்; ஞானிகளால் உணரப்படுவானென்பார், 'மெய்ஞ்ஞான வெளியே' எனவுங்கூறினார். 4

எந்த விதமென் னிதயந் தெளிவதற்கே
பந்த வினையகலப் பாராய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எவ்விதத்திலாவது என்னுடைய மனமானது தெளிவையடையவும், அதனால் என்னைப்பற்றியிருக்கின்ற மாயைவினை நீங்கவும் திருவருட்கண்பார். (எ-று) 5

இறந்தான் முதலைகத்தியா னென்னதியா னென்பதெல்லாந்
துறந்தானே யந்நிலையே சொல்வாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எனது என்னும் மமகாரத்தையும், நான் என்னும் அகங்காரத்தையும் துறந்தவனே! அந்த உண்மை நிலையையே எனக்குத் திருவருள் செய்யவேண்டும். (எ-று) 6

வற்றா சமுத்திரமே வள்ளலே வான்பொருளே
சித்தருளத்திற் றெளிவே நிராமயமே.

(பொ-ரை) என்றும் வற்றாத சமுத்திரமே! வள்ளலே! உயர்ந்த பொருளே! சித்தர்களுடைய மனத்தெளிவே! நிராமயப்பொருளே. 7

உம்பர்க்கு மெட்டாதென் றொன்றிமறை யோலமிட்ட
செம்பொற் கிரியே செயமே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! தேவர்களுக்கு மெட்டாமல் பொருந்தி வேதங்கள் முறையிட்ட சிவந்த பொன்மலையே! வெற்றிப் பொருளே! (எ-று) 8

பேய்ச்சுக் கடங்காத பேரின்பத் தேனமிர்தங்
காய்ச்சி வடித்த கடலே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! வார்த்தைக்கு அடங்காத பேரின்பத்தேனை அமிர்தத்தைக் காய்ச்சிவடித்த கடலே! (எ-று)

சர்வேஸ்வரனுடைய செய்கைகள் பேச்சுக்கடங்காதன வென்பார் இங்ஙனங்கூறினார். 9

அந்தரத்தி னுள்ளேநின் றாடுதிருக் கூத்தனை
சிந்தை யறிகிலனென் செய்வே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! அந்தரமென்னும் ஒரு இடத்திற்குள்ளிருந்து திருநடனஞ் செய்கின்றவனை மனத்தினாலறிகில்லேன். அதனால் நான் என்னசெய்வேன்? (எ-று) 10

மோன மவுனமணி மூடிவைத்த பெட்டகமே
தேனமுத வின்பத் தெளிவே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மோனமென்னும் மௌனமணியை மூடிவைத்த பேழையே; தேன் என்னும் அமுதமான இன்பம் விளைவிக்குந் தெளிவே! (எ-று) 11

மண்பட்ட நெஞ்ச மயக்கமெலாந் தீரவருள்
பண்பட்டார்க் கல்லோ பயன்கா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மாயாவசப்பட்ட மனத்தின் மயக்கங்களெல்லாம் ஒழிய கருணைகொண்ட மனத்திருத்தத்தை அடைந்தவர்களுக் கல்லவோ பிரயோசனம்? (எ-று)

மாயை நீங்கிய மனமுடையவர்களே பயனையடைவார்கள் என்பது கருத்து. (எ-று) 12

மனவாக் கணுகா மறைந்தவான் செஞ்சுடரே
இனமாதி யற்ற விறைவே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மனத்துக்கும், வாக்குக்கும் பொருந்தாத மறைந்திருக்கின்ற பெரிய தேஜோமயமே! சுற்றமொழிந்த தலைவனே! (எ-று) 13

பார்க்குமிட மெல்லாம் பரிபூ ரணமாக
நிற்கையுட னின்ற வியல்பே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பார்க்கின்ற இடங்கள் தோறும் நிறைவாகத் தகுதியுடன் நிற்கின்ற லட்சணமே! (எ-று) 14

விண்ணுமுதன் மண்ணாய் விளங்கிநின்ற மெய்ச்சுடரே
கண்ணேயென் னின்பக் கடலே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஆகாயமுதலிய பஞ்சபூதங்களாய் விளங்கியிருந்த உண்மைச் சுடரே! கண்ணே! என்னுடைய இன்பம் பெருகிய கடலே! (எ-று)

சர்வேஸ்வரன் பஞ்சபூதங்களையும் அதிஷ்டிப்பானென்பார் இங்ஙனங் கூறினார். 15

துன்புறுமென்னெஞ்சத் துயரமெலாந் தீர்க்கவெனக்
கன்புருவாய் நின்ற வருளே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மிக்க தீமைகளை விளைவிக்கும் என்னுடைய மனத்துயரங்களையெல்லாம் நீக்க எனக்குஅன்பே வடிவமாக விருந்த திருவருளே! (எ-று)

சர்வ ஜீவர்களுடைய துன்பங்களையெல்லாம் நீக்கவல்லவன் இறைவனே என்பார் இங்ஙனம் கூறினார்.

16 அங்கிங் கெனவொண்ணா வகண்டபரி பூரணமாய்
எங்கு நிறைந்த விறையே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! அவ்விடத்திலும் இவ்விடத்திலும் என்று சொல்லவொண்ணாத சர்வ பரிபூரணமாய் எவ்விடத்திலும் நிறைந்திருக்கின்ற தலைவனே! (எ-று)

சர்வேஸ்வரன் எங்கும் வியாபிக்கும் பூரண நிலைமையையுடையவனென்பார், இங்ஙனங் கூறினார்.

17 நாட்டு மிருவினையு நாட்டா ருனதருளின்
றேட்டாள ரென்ற திறமே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! நாட்டுகின்ற நல்வினை, தீவினை என்னும் இவைகளை நாட்டாதவர்கள் உன்னுடைய திருவருளின் தெளிவை யடைந்தவர்களாவார்கள் என்று சொன்ன வல்லமையே!

இருவினை யொப்பு மலபரிபாகம் அடைந்தவர்கள் சர்வேஸ்வரனுடைய திருவருளையடைந்தவர்களாவார்கள் என்பது கருத்து.

18 படர்ந்த மனங்குடியாம் பக்குவர்பா சாடவியைத்
தொடர்ந்து தொடர்ந்துவெட்டத் துணிவார் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! படர்ந்த மனமென்னும் வீட்டில் வாசஞ்செய்து கொண்டிருப்பவர்களாகியபக்குவத்தை யடைந்தவர்கள் தங்களுடைய பாசமென்னுங் காட்டைத் தொடர்ந்து தொடர்ந்து வெட்டுவார்கள். (எ-று)

மனோ உறுதியை யடைந்தவர்களைப் பாசமணுகமாட்டாதென்பது கருத்து.

19 உத்தமர்கட் காகா வுலுத்தப் புலையரென்னும்
பித்தர் நெறியுளரோ பேசாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! நல்லவர்களுக்கு உதவாத உலுத்தத் தன்மையுடைய புலையரென்கிற பித்துக்கொண்டவர்கள் நன்மார்க்கத்தையுடையவ ராவாரோ? (எ-று)

20 பாவபுண்ணி யத்தைப் பறக்கவிட்ட பத்தர்தமக்
கேவல் விலகவில்லை யென்றாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பாவங்களையும், புண்ணியங்களையும் ஒழியும்படி விட்ட அன்பர்களுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகள் என்னைவிட்டு நீங்கவில்லையே. (எ-று)

அடியார்களுக்குப் பணிவிடை செய்யவேண்டும் என்பது கருத்து.

முத்திதரும் வேத மொழிந்த வழிநடக்கப்
பெற்ற குருவென் பிணைகா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மோட்சத்தைக் கொடுக்கின்ற வேதங்கள் சொன்ன சொற்படியே நடக்கப்பெற்ற குரு என்னுடைய பிணையாம். (எ-று) 22

ஊத்தைப் பிணமா முடலை யிடிசுவரை
ஏற்ற படிவிடுத லீன நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஊத்தை நாற்றத்தை வீசுகின்ற பிணமான இந்தச்சரீரத்தை, இடிகின்ற சுவரை, தகுந்தமாதிரி விட்டு விடுவது ஈனத்தொழிலாம். (எ-று)

சரீரத்தை உண்மையாக நம்பக்கூடாதென்பது கருத்து. 23

தஞ்ச மழிந்து வருபாசம் விட்டொழிந்து
நெஞ்சந் தெளியநெறி நிற்பார் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! வஞ்சகமும், அதனாலுண்டாகும் பாசமும்என்னை விட்டு ஒழிந்து மனமானது தெளிவையடைய நன்மார்க்கத்தில் நிற்பார்கள். (எ-று)

உண்மை ஞானிகள் உண்மைநெறியில் நிற்பார்கள் என்பது கருத்து.

தொந்தம் கடிந்தே சுபமனைபி னல்லாலென்
புந்தி மயக்கம் விட்டுப் போமோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பந்தத்தை வெறுத்து சுபத்தை விளைவிக்கின்ற வீட்டிலேயல்லாமல் என்னுடைய மனோமயக்கமானது தீர்ந்துவிடாது. (எ-று)

மோட்சவீட்டினுட் சென்றாலே நான் பரிசுத்தனாவேன் என்பது கருத்து. 25

வாராக் கருணைமழை வந்துபொழிந் தாலொழியத்
தீரா மனமயக்கந் தீரே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! வரவொண்ணாத கிருபைச் செல்வமானது வந்து எனக்குச் சரமாரியாகப் பொழிந்தாலல்லாமல் தீராத மனோமயக்கத்தைத் தீரேன். (எ-று) 26

மாயும் பசுபாச மடிய மடியவரு
டாயனைய வின்பந் தருவாய் நிராமயமே.

. (பொ-ரை) நிராமயப்பொருளே! மாயுந்தன்மையையுடைய பசுபாசங்களொழிய திருவருட்டாய் போன்ற இன்பத்தைக்கொடுப்பாய்.

இறைவனே மாய்கையை யொழித்து சுகத்தைக் கொடுப்பவன் என்பது கருத்து. (எ-று) 27

அய்யனையென்னை யணைத்தாட்கொண்டாளவந்த
மெய்யனை நாத வெளியே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஐயனே! அடியேனைச்சேர்த்து ஆட்கொண்டு அடிமைகொள்ள எழுந்தருளின உண்மைப்பிதாவே! நாததத்துவத்தின் வெளியே! (எ-று) 28

கூரு மவத்தைக் குணங்குடிபோ மன்பருக்கி
யாரை நிகரிடுவ தையா நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! அதிகரித்த அவஸ்தைகளினால் குணங்குடியை நாடிச்செல்லும் பக்தர்களுக்கு யாரை இணையாகச்சொல்லுவதையா! (எ-று)

குணங்குடியானை விரும்புவோர்க்கு எவரும் இணையாகார் என்பது கருத்து. 29

பித்தம் பிடித்தலையும் பேய்க்குரங்கு போற்காணம்
புத்தி தனையுலைக்கப் போமோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பைத்தியம்பிடித்து அலைகின்ற பேய்குரங்கைப்போல கரணத்தையும், புத்தியையும் உலையவிடலாமே.

தஞ்சமெனு ஞானத் தடாகம் முழுகுநர்க்கு
விஞ்சிய நாத விளக்கே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! அடைக்கலமென்னும் ஞானக் குளத்தில் முழுகினவர்களுக்கு விளங்கின நாதவிளக்கே! (எ-று)

அடைக்கலமடைந்தவர்களுக்குஅருள்செய்வான் என்பது கருத்து.

ஆரிருந்தென் னார்போயென் னுயிக் குறுந்துணையாம்
பேறுபெறச் செய்தாற் பிழைப்பே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஆர் இருந்தாலென்ன? ஆர் போனுலென்ன? என்னுடைய உயிருக்கு உயர்ந்த துணையாகிய பேற்றையடையச் செய்தாலே பிழைப்பேன். (எ-று)

யார் இருந்தும் என்னபயன்? இறைவனருள் கிடைக்காதபோது என்பது கருத்து. 32

போகாக் கவலைப் புழுக்கமெல்லாந் தீருதற்கு
வாகா யருள்புரிய வாராய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஒழியாத துன்பத்தை விளைவிக்கின்றதுன்பங்களெல்லாம் நீங்குவதன் பொருட்டு திருவருள் செய்ய வருவாய். (எ-று) 33

காமக் கடல்கடக்கக் கர்த்தனெனக் கப்பல்வைத்தால்
நேமநிஷ்டைக் கம்பம் நிலைகா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! காமம் என்கிற சமுத்திரத்தைத் தாண்ட[illegible]யம் என்னும் கப்பலை வைத்தால் நியமநிஷ்டை என்கிற கம்ப[illegible]ண்டாகும். (எ-று) 34

நின்னைச் [illegible]புகுந்தா னிர்மூட மாகவெனை
யென்ன[illegible]காட்கொண்ட தியம்பாய் நிராமயமே

(பொ-ரை) நிராமயப்பொருளே! நான் உன்னை மூடத்தனமாக அடைக்கலமடைந்தால் என்னை என்மனத்திலேயே ஆட்கொண்ட விதத்தைத் திருவருள் செய்வாய். (எ-று)

உன்னை அடைக்கலமடைந்த என்னை ஆண்டவிதம் எப்படியோ? என்பது கருத்து. 35

சிந்தை யறிவைச் சிதையவிட்டுன் னருள்பெறவே
வந்தேனுக்குன் திருக்கருணை வைப்பாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மனத்தின்கண்ணுள்ள அஞ்ஞான அறிவைக் கெடுத்து உன்னுடைய திருவருளையடைய வந்த எனக்கு உன்னுடைய திருவருளை வைப்பாய். (எ-று)

இறைவனே! என்னுடைய அஞ்ஞானத்தையொழித்து ஆண்டருள வேண்டும் என்பது கருத்து. 36

தேனமுதே பாகு திரண்ட பெருங்கடலே
வானவர்க்கு மெட்டா மணியே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! தேன் அமிர்தமே! பாகானது திரண்டபெரிய சமுத்திரமே! தேவர்களுக்கும் எட்டாத மாணிக்கமே!

இந்த விதய மிணங்கி வணங்கவரு
டந்தடிக்காட் கொண்ட [illegible] நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! இந்த இருதயமானது சம்மதித்து வணங்கும்படி திருவருள்கொடுத்து உன்னுடையதிருவடிகளுக்கு அடிமைகொண்ட தானுவே! (எ-று)

இப்படிப்பட்ட இறைவன் என்னை ஆண்டருளாமல் விட்டுவிடான் என்பது கருத்து. 38

இடம்பொருளேவ லெவைபு மறந்தகுணங்
குடியார்க் குவமைக் குறியே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! இடம், பொருள், ஏவல் இவைகளை யெல்லாம் மறந்திருக்கின்ற குணங்குடியார்க்கு ஒப்புக்குறி என்?

ஆழாழி தானு மணைகடவா தாணைதனிற்
றாழவிலையோவென் றாயே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஆழமுள்ளதான பெரிய சமுத்திரமானது உன்னுடைய உத்திரவின்பேரில் அணையைக் கடவா தாழவில்லையே. (எ-று) 40

தீது நலமறியேன் றிசைநாக மற்றெவையு[illegible]
ஈதென் றறியே னெளியே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! நான் தீமையையும், நன்மையையும் உணரேன், திசைநாகங்கள்முதலிய எவைகளையும் [illegible]தென்றுணரமாட்டேன். (எ-று) 41

மீளா வெளியில் விழற்கிறைத்த நீரெனவும்
பாழி லலைவதுமென் பாவம் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! நீங்காத வெளியின் கண் விழலுக்கு இறைத்த நீரைப்போலும் பாழில் அலைவதும் என்னுடைய பாவமேயாகும். (எ-று)

நான் விழலுக்கிறைத்த நீர் பயன்படாவாறுபோல் [illegible]ல்பட்டுத் தவிக்கிறேன் என்பது கருத்து. 42

ஈன்றெடுத்த மாதா வெனையாட்கொண் டாள்வதென
ஆண்டணைப்ப தென்றோ வருளாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே!பெற்றெடுத்ததாயானவள் என்னை ஆட்கொண்டு ஆளுவதைப்போல என்னை நீ ஆண்டணைப்பது எந்தக் காலமோ நீ அதை அருளிச் செய்வாய். (எ-று)

இறைவனே! நீ அடியேனைத் தாயைப்போல் ஆண்டருள் செய்ய வேண்டும் என்பது கருத்து. 43

சாத்திரங்க ளோதுஞ் சழக்கர் தமக்குமருள்
மாத்திரைப்போ தேனும் வருமோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! சாத்திரங்களையெல்லாஞ்சொல்லிக்கொண்டு திரிகின்ற வம்பர்களுக்குந் திருவருளானது ஒருமாத்திரை நேரமாவது கிடைக்குமா? (எ-று)

சாத்திர ஆராய்ச்சியிலுள்ளவர் அதிலேயே காலங்கழிப்பார்களேயல்லாமல் திருவருளைக் கொஞ்சமும் அடைய மாட்டார்கள் என்பது கருத்து. 44

அய்யனே மெய்யருளி லாசையற்ற நீசனுக்கும்
உய்யுந் திருக்கருணை யுண்டோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஐயனே உண்மையாயிருக்கின்ற திருவருளின்கண் ஆசையில்லாத எனக்குப் பிழைக்கும் வழியுண்டா.

திருவருளில்அன்பில்லாதவன் மோட்சமடையான்என்பதுகருத்து.

காதறுங் கண்ணீர்க் கரைபுரள நின்றவர்க்குச்
சூதறுங் கண்ணீர் தொலையும் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஆசையைக்கொடுக்கின்ற கண்ணீர் கரைபுரளும்படி இருந்தவர்களுக்கு வஞ்சகத்தைக் கொடுக்கின்ற கண்ணீரானது ஒழியும். (எ-று)

ஆநந்தம்மேலிட்டவர்களுக்கு கண்ணீர் வழங்கும் என்பதுகருத்து.

வஞ்சங் குடியிருந்து வாழு மனத்தினருக்
கெஞ்சா திருக்கு மிருப்பே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! வஞ்சகமானது குடியிருக்கப் பெற்று வாழ்கின்ற மனத்தினையுடையவர்களுக்குக் குறையாதிருக்கும் லட்சணமே! (எ-று)

வஞ்சமற்றவர்களுக்கே இறையவன்வெளிப்படுவான் என்பது கருத்து.

பற்றற்று நின்ற பரம பதத்தினருக்
கெத்தொழிலுஞ் செய்ய வியல்போ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எந்தப்பொருளிலும் யாதொரு பற்றுமில்லாமலிருந்த பரமபதத்தையடையும் மகான்களுக்கு எந்தத் தொழிலையுஞ் செய்யுந்தன்மையுண்டோ? (எ-று)

உயர்ந்த பரமபதத்தை யடைந்தவர்களுக்கு எத்தொழிலும்லகுவே என்பது கருத்து. 48

வாதே யகண்டகுணங் குடிவாழ வைத்தாயே
ஈதே பெருமையெனக் கென்றாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! வாதுபொருந்திய அகண்டகுணங்குடியில் வாழும்படி வைத்தாயே, இதுவே எனக்குப் பெருமையென்று திருவருள் செய்தாய்? (எ-று)

குணங்குடிப்பதியில் வாழ்வதே பெரியோர்களுக்குப் போதுமானது என்பது கருத்து. 49

என்றுமிருப் போமென் றெண்ணி யெண்ணி யென்னிதயஞ்
சண்டை பிடிக்கச் சரியோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! என்றைக்கும் அழியாமல் இருப்போமென்று சதாநினைந்து என்னுடைய மனமானது சண்டைசெய்வது நியாயமாகுமா! (எ-று)

சரீரம் அழியாததென்று நினைக்கவேண்டாம் என்பது கருத்து. 50

பட்டுக் கடங்கா மயக்கமெலாந் தீர்த்துவெளிப்
பட்டோர்கட் கல்லோ பயன்கா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! அளவுக்குள் அடங்காத மயக்கங்களெல்லாவற்றையும் ஒழித்து கஷ்டப்படவர்களுக்கல்லவோ பிரயோசனம் உண்டாகும்? (எ-று)

மாயையை ஒழித்தவர்களுக்கே பிரயோசனமுண்டு என்பதுகருத்து.

மன்னுமுயிர்க்கு மறலி வரும்பொழுதில்
உன்னையன்றி யார்தா முளரோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! நிலைபெற்ற உயிர்க்கு எமன்வருங்காலத்தில் உன்னையல்லாமல் யார் ஆதாரவாகவுள்ளவர்? (எ-று) 52

எண்ணாத வெண்ணமெலா மெண்ணி யிடைந்துமனம்
புண்ணாவதற்கோ புகுந்தே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! நான்எண்ணாத எண்ணங்கள் எல்லாவற்றையும் எண்ணி மனம் வருத்திப் புண்ணாவதற்குத்தானோ நான் புகுந்தது? (எ-று) 53

உள்ள துரியதெலா மொழியா துரைத்தவெனைத்
தள்ளி விடத்தான் றகுமோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! நான் எனக்கு உள்ளது, உரிமையானது இவைகளையெல்லாம் ஒளிக்காமல் தேவரீரிடத்தில் சொல்லிவிட்டேன். அப்படியிருக்க நீர் என்னைத்தள்ளிவிடல் தகுதியாகுமோ?

வன்னத் திருக்கருணை வாழுந் திருவடிக்கே
என்னத்தைச் செய்வேனெளியே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பலவிதமான அழகிய கிருபை தங்கியிருக்கின்ற திருவடிகளுக்கே ஏழையாகிய நான் எதைச்செய்வேன்? (எ-று) 55

கற்றபடி நடக்கக் கல்லாத பாவியெனைச்
சித்தந் தெளியவருள் செய்வாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! கற்றுக்கொண்ட விஷயத்தின்படியே நடந்துகொள்ள கற்றுக்கொள்ளாத பாவியான என்னை மனந்தெளிவடையும்படி திருவருள் செய்வாய்? (எ-று) 56

பேச்சற்றுஞ் சிந்தை பிரக்ஞையு மற்றபதம்
வாய்ச்சார்க்கல் லோமவுனம் வாய்க்கு நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! சொல்லிறந்தும் பிரக்ஞையிறந்தும் இருக்கக்கூடிய பதவியை அடையப் பெற்றவர்களுக்கல்லவோ மௌனஞானங் கைகூடும். (எ-று) 57

நிஷ்டை நிருவிகற்ப நித்திரைகொண் டேயிருக்க
அஷ்டாங்க யோகமெனக் கருளாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! நிஷ்டை, நிர்விகற்ப நித்திரை இவைகளைக் கொண்டிருக்க அஷ்டாங்க யோகத்தை எனக்கு அருளிச்செய்வாய். (எ-று) 58

தொல்லுலகி லல்லற் றுயரமெலாந் தீர்க்கவொரு
சொல்லருளாய் வந்த துரையே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பழமையான உலகத்தில் பிறவியாகிய துன்பங்கள் எல்லாவற்றையுந் தீர்க்க ஒரு சொல்லாகிய உபதேசஞ் செய்தருளவேண்டும். (எ-று) 59

உயிர்த்துணைவ ரேனுமுளந்தெளியா வுலுத்தரையோர்
மயிர்க்கு நிகர் குறிக்க மாட்டே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எனக்கு உயிருக்குத் துணைவர் போல்பவர்களாக விருந்தாலும் மனந்தெளிவடையாத உலுத்தரை ஒரு மயிர்க்கு ஒப்பாகவும் மதிக்கமாட்டேன். (எ-று) 60

கொல்லா விரதத்தைக் கொள்ளக் கொலைஞருள்ளங்
கல்லாகத் தானோ கணித்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! கொல்லாதவிரதத்தைக்கொள்ள கொலையாளிகளுடைய மனத்தைக் கல்லாகப் படைத்தாயோ? (எ-று)

எத்தனையோ வுத்தி யெடுத்தெடுத்துச் செய்யுமுடல்
உற்றா ரிருக்க வுடையு நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பலவகையான யுத்திகளை எடுத்தெடுத்துச் செய்யும் சரீரமானது சுத்றத்தார் சமீபத்திலிருக்கும் போதே உடைந்துவிடும். (எ-று) 62

வாயே புலம்பி வருபாசப் பேய்பிடித்த
தீயனெனச் சொன்னாலென் செய்வே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! வாயாற்புலம்பிவருகின்ற பாசமென்னும் பசாசு பிடித்த தீமையையுடையவனென்று என்னைப்பலருஞ் சொன்னால் நான் என்ன செய்வேன்? (எ-று) 63

தாயிருக்கப் பிள்ளை தளரா தொருபோது
நீயிருக்க நான்றளர நேரோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! தாயானவள் இருக்கப் பிள்ளை ஒருநாளும் மனந்தளர்வடையாது. அதுபோல் நீயிருக்க நான் தளர்ச்சியடைவது தகுதியோ? (எ-று) 64

சொல்லுக் கடங்காச் சுகங்காண் டுறவிகட்கு
நல்லறிவு சற்றே நருங்கா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! வாக்குக்கடங்காத மேலான சுகத்தைக்காணும் துறவிகளுக்கு கொஞ்சம் உயர்ந்த அறிவானது உண்டாகும். (எ-று) 65

மத்திபத்தி னூடே மறைந்த மணிவிளக்கை
நித்தம் விளங்கவருள் வேணாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மத்திபமாக மறைந்திருந்த ரத்தினவிளக்கை நிதமும் பார்க்கும்படியான திருவருளைச் செய்வாய்.

மெத்தப் படித்த வெரும்பாசப் பித்தருக்கே
சித்தந் தெளியாதென் செய்கே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! அதிகமாகப்படித்த வீண்பாசங் கொண்ட பித்தர்களுக்கே மனந்தெளிவை யடையாது இதற்கு நான் என்ன செய்வேன். (எ-று) 67

கள்ள விருளைக் கடிந்துகரை யேறுதற்குத்
தெள்ளியவான் சோதித் திரளோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! கள்ளத்தனமாய் இருட்டைக் கடிந்து கரையேறுவதற்கு தெளிந்த உயர்ந்த தேசோமயச்சுடரோ? 68

ஒட்டாதே யுன்னைவிட்டு மோட்டி நயமிடரில்
மாட்டாதே யான்பொறுக்க மாட்டேனிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஒட்டாமலும் உன்னைவிட்டு ஓட்டி நன்மையிடரில் மாட்டாதே. அப்படி செய்தால் நான் பொறுக்க மாட்டேன். (எ-று) 69

தன்னை யறிந்தாற் றலைவன் றனையறிந்த
தென்னு மொழியே யிதங்கா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! தன்னைத்தான் உணர்ந்தால் தலைவனையுணர்ந்த விதமாம் என்னும் சொல்லே நன்மையை விளைவிப்பதாகும். (எ-று) 70

அபய மெனக்காப்ப தண்ணலே யுன்னுபய
மூபய முபய முனதுபய நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! அண்ணலே! உன்னை அடைக்கலம் வந்தபோது அபயமாகக் காப்பாற்ற கடமைப்பட்டவை உன்னுடைய இரண்டு திருவடிகளேயாம். (எ-று) 71

பிரியா வுனதடியைப் பின்றொடர்ந்தார் பின்றொடர
அறியாச் சிறியேனென் னையாநிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எவராலும் நீங்கியிருக்க முடியாத உன்னுடைய திருவடிகளைக் கற்றுணர்ந்தவர்களெல்லாம் பின்பற்றினர்கள். அவ்விதம் பின்தொடர வுணராத அறிவீனன் நானே யாவேன். (எ-று) 72

நற்குணமே கொண்ட தொழும்பனியான் றொல்லுலகிற்
கற்குணத்தா ரென்போலுங் காணே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! நற்குணத்தைப் பெற்றிருக்கின்ற அடியவனான நான் பழமையான இவ்வுலகத்தில் கல்லைப் போலும் மனத்தையுடைய என்னைப்போல் ஒருவரையுங் காணவில்லை.

பொய்யுங் கவடுமுள்ளே பூட்டிவைத்த பெட்டகமாய்
மையுமுடலெடுத்தே னென்கா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பொய், கவடு ஆகிய இவைகள் சேர்த்துவைத்த பெட்டகமாக வருந்துகின்ற உடலை நான் எடுத்தேன்.

கங்குல் பகலொழிந்த காரணர்க்கோ நின்னருளைப்
பங்கு கொடுத்தாய் பகராய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! இரவும் பகலும் ஒழித்த காரணர்களுக்கோ உன்னுடைய திருவருளைப் பங்கு கொடுத்துவிட்டாய்? அதை நீயே சொல்லவேண்டும். (எ-று) 75

தேறாப் பிரபஞ்சத் திடுக்கமெல்லாந் தீர்ந்தவர்க்கு
மாறா வருணிலைதான் வாய்க்கு நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! தெளியாத இவ்வுலகத்து இடுக்கங்களெல்லாம் நீங்கினவர்களுக்கு ஒழியாத திருவருள் நிலைமையுண்டாகும். (எ-று) 76

சருவ தயாநிதியாய்ச் சஞ்சரித்த நெஞ்சினர்க்குப்
பிரியா வருணிலைதான் பேறும் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப் பொருளே! சர்வதய வுடையவர்களாய் வாசஞ்செய்த மனமுடையவர்களுக்கு நீங்காத திருவருள் நிலையே பயனாகும். (எ-று) 77

பாத முடிநடுவும் பக்கமுன்னும் பின்னுமற்ற
நாத வடிவே நலமே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! அந்தம், ஆதி, நடு, பக்கம், முன், பின் இவைகள் அற்ற நாதவடிவமே! நலமே! (எ-று) 78

பேசா விடமறிந்தும் பேய்க்குரங்கு போற்கருவி
ஊசா டுவதே னுரையாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பேசாத இடத்தை உணர்ந்தும் பேய்பிடித்த குரங்கைப்போல கருவிகள் ஊசலாடுவது ஏனோ?

எனையாட்கொண் டாளவரு மென்குருநா தன்வடிவந்
தனையார்க்குஞ் சொல்லத் தகுமோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! என்னை அடிமைகொண்டு ஆளவருகின்ற என்னுடைய ஞானாசிரியன் சொரூபத்தை யார்க்குஞ் சொல்ல முடியாது. (எ-று) 80

கொப்புவித்தி னுள்ளே குடியிருந்த கொள்கையென்
எப்பொருட்குஞ் சித்தா யிருந்தாய் நிராமயமே.

(பொ-ரை) கொப்பவிரைக்குள் குடியிருந்த தன்மையைப்போல எந்தப் பொருளுக்குஞ் சித்துப்பொருளாயிருந்தாய் நிராமயமே! (எ-று)

இறைவன் எல்லாப்பொருள்களுக்குஞ் சித்தாவான்என்பது கருத்து.

கூறுங் கருவி குடிபோன வன்பருக்கே
யாரும் நிகரோவென் னையா நிராமயமே.

(பொ-ரை) சொல்லப்பட்ட தொண்ணூற்றாறு கருவிகளைக் கடந்திருக்கின்ற அன்பர்களுக்கே ஒப்பாவார் யாவருளர்? ஐயனே! (எ-று)

தத்துவாதீதத்தையடைந்த அன்பர்களுக்கு ஒப்பானவர்கள் யாவருமிலர் என்பது கருத்து. 82

சிந்தை சிதையாச் சிவராஜ யோகநிலை
வந்தோர்க் கருள்புரிய வந்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மனவுறுதிகெடாத சிவயோக நிலையை யடைந்தவர்க்குத் திருவருள் செய்யவந்தாய். (எ-று)

இறைவன் மனோசுத்த மடைந்தவர்களுக்கு அருள்செய்வான் என்பது கருத்து. 83

கோடானு கோடிமறை கூறவறி யாதவனைத்
தேடுகின்ற தெந்நேரோவென் றிறமே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! அநேககோடி வேதங்களாலும் சொல்லுதற்கரிய உன்னை நான் தேடுவது என்னதிறம்? (எ-று) 84

பிரியா வருணிலையைப் பெற்றார்பெற் றாரெனவு
மறியா வெறியனையா னையா நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! நீங்காத திருவருள் நிலையை யடைந்தார் அடைந்தார் என்று சொல்லவும் உணராத வெறியன் நானே. (எ-று) 85

எமனார் விடுதூ தெனும்பாசக் கட்டறுத்தோர்
நமனார் தமக்கு நமனே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எமனார் விடுகின்ற தூது, என்று சொல்லப்படும் பாசத்தின் கட்டையொழித்தவர்கள் அந்த எமனுக்கு எமனாவர். (எ-று)

துலங்கு மருண்மயத்தைத் தோன்றா திருண்மயமாம்
புலனைத்தொலைப் பாயுனக்குப் புண்யம் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! விளங்குகின்ற திருவருள் மயத்தை வெளிப்படுத்தாமல் அஞ்ஞானமயமான ஐம்புலனை யொழிப்பாய் இது உனக்கு புண்ணியமாகும். (எ-று) 87

மன்னிக்க வொண்ணு மனக்குறையுந் தாய்பொறுப்பாள்
நின்ன தருளுமந்த நேராம் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! தாயானவள் மன்னிக்கக்கூடாத பெரும்பிழையையும் பொறுப்பாள். உன்னுடைய திருவருளும் அது போன்றதேயாம். (எ-று)

கடவுளுடைய திருவருளுக்குந் தாயின் தயைக்கும் ஏற்றத்தாழ்ச்சியில்லை என்பது கருத்து. 88

எந்த வறிவை யெடுத்தெடுத்தே யோதினு மென்
புந்தி மயக்கணுவும் போகா நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! நான் எந்தெந்த அறிவை எடுத்தெடுத்துச்சொன்னாலும் என்னுடைய மனோமயக்கமானது அணுவளவும் போகமாட்டாவே. (எ-று) 89

செகத்துண் மயக்கஞ் சிதறிப் பறக்கவுமென்
றகைப்பறவோர் முத்தந் தருவாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! உலகமயக்கமானது என்னை விட்டு ஒழிந்துபோகவும் என்னுடைய மயக்கமற ஒரு முத்தங்கொடுப்பாய். (எ-று) 90

உய்த்த துணர்வெல்லா முயிர்க்குயிர்நீ தானெனவுஞ்
சித்தந் தெளிந்ததா திறங்கா நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! நினைக்கிறது ஆராய்ந்தவறிதெல்லாம் நீ உயிருக்குயிர் என்பதே இவ்விதமே என்னுடைய மனந் தெளிந்தது. (எ-று)

இறைவன் பரமான்மா என்பது கருத்து. 91

அனைத்துயிரு நீயென் றறிந்தார் மறப்புமுதல்
நினைக்குமா றெங்கே நிகழ்த்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! சர்வ ஆன்மகோடிகளும் நீயேயென்று உணர்ந்தவர் மறப்பு முதலிய அவஸ்தைகளை நினைப்பதில்லை அதை நீயே சொல்லவேண்டும். (எ-று) 92

நின்செயல்க ளென்று நினைப்பு மறப்புமுத
லென்செயல்களுண்டோ வியம்பாய் நிராமயமே.

(பொ-ரை) நினைப்பு, மறப்பு முதலியவை உன்னுடைய செய்கைகளென்றால், என்னுடைய செய்கைகள் என்ன உண்டு? நீ சொல்வாய்.

எரும்பூரளூர விரும்புமுதற் றேய்வதுபோல்
இரும்பூரு மன்பருள மித்தே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எறும்பானது ஊரவூர இரும்பும் தேய்வதைப்போல, இரும்பின் தன்மையைப் படைந்த அன்பர்களுடைய உள்ளமானது மித்தேயாம். (எ-று) 94

கும்பிக் கிரைதேடிக் கொடுப்போர்முகம் பார்த்திதயஞ்
சம்பித் திரியத் தகுமோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! வயிற்றிற்கு இரையைத்தேடிக் கொடுப்பவர்களுடைய முகத்தைப்பார்த்து மனம்வாடித்திரியத்தகுமா.

கடலின்மடை கண்டதெனக் கண்ணீர் கரைபுரளும்
அடியன்முகம் பார்த்திரங்கி யருளாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! கடலில் மடைகண்டாற்போலக் கண்ணீரானது புரளும் அடியேனுடைய முகத்தைப்பார்த்து அருளிச் செய்வாய். (எ-று) 95

பருவமது செய்யப் படர்ப்பயிராம் பக்குவர்க்குக்
கருவா மருணிலையே கனிகா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பருவத்தில் பயிர்செய்யப்படருகின்ற பயிரான பக்குவதிசையை யடைந்தவர்களுக்கு கருவாகிய திருவருள் நிலையே கனியாகும். (எ-று) 97

நினைப்பு மதிப்புமெலா நின்செயலென் றன்பருளந்
தினைப்போதும் விட்டுத் திரும்பார் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! நினைப்பும், உதிப்புமாகிய எல்லாம் உன்னுடைய திருவருள் செய்கையே யென்று அனபர்கள் தங்கள் மனத்தை விட்டுத்திரும்பார். (எ-று) 98

சிவராஜ யோகந் தெளிந்த திறத்தினருக்
கெவரைச் சரியிடுவ தெந்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! சிவராஜயோகத்தில் தெளிவடைந்த வலிமையுடையவர்களுக்கு யாரைச் சரியாய்ச் சொல்லலாம்.

அந்திபக லற்ற வகண்டபரி பூரணர்க்கே
சிந்தை நிறைந்த தெளிவே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! இரவு பகலில்லாத சர்வபரிபூரணர்க்கே மனம் நிறைந்த தெளிவே! (எ-று) 100

வேதங்க ளாலும் வெளிப்படாச் சுந்தரமாஞ்
சோதியெனக் கென்றோ துலங்கு நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே ! அநேககோடி வேதங்களாலும் வெளிப்படாத அழகிய சோதியானது எனக்கு என்றைக்கு விளங்குவது? (எ-று) 101

எப்பொருளுந் தானா யியங்குமுனைப் பூசைசெய்யப்
புட்ப மெடுக்கவுந்தான் போமோ நிராமயமே,

(பொ-ரை) நிராமயப்பொருளே! சர்வ பொருள்களும் நீயேயாய் விளங்குகின்ற உன்னைப் பூசைசெய்ய புட்பம் எடுக்கப்படுமோ? (எ-று)

எல்லாம் நீயாகையால் புட்பத்திலுள்ளும் வியாபகம் ஏற்படுவதை நோக்கி இங்ஙனங் கூறினர். 102

கைப்பொருளைத் தேடிக் கடலோடிப் போவரென
மெய்ப்பொருளைத் தேடி மெலிந்தே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! செல்வப்பொருளை விரும்பி திரைகடற் செல்பவர்போல உண்மைப்பொருளைத் தேடியுழன்றேன்.

உயிர்க்குளுயி ராயென் னுள்ளுள் ளுலாவியநீ
தயிர்க்குளுறு வெண்ணெயெனத் தானே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! நீ தயிர்க்குள் வெண்ணெயைப் போல உயிர்க் குயிராய் என்னுடைய உள்ளத்திலும்உலாவினாய்.(எ-று)

மூடும் விருக்கிடையா மூக்குநுனிக் கட்கிடைக்கீ
ழாடுந் திருநடனத் தாட்டம் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மூக்கு நுனிக்கும் கண்ணுக்கும் கீழும் ஆடுகின்ற திருநடனமானது மிகவும் சிறப்புடைத்து. (எ-று)

நீளுங் கரணமுத னெக்குருகி மட்கினர்க்குத்
தாழா வருணிலையைத் தந்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மிகுந்த கரணங்கள் முதல் நெகிழ்ந்து உருகி இளகினவர்களுக்கு ஒழியாத திருவருள் நிலையைக் கொடுத்தாய். (எ-று) 106

கொல்லுதற்கு வந்த கொலைஞரெனப் பாவிமன
மல்லுப் பொருதுதற்கேன் வைத்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! கொலைசெய்ய வந்த கொலையாளிகளென்று பாவியினுடைய மனம் வருத்தப்பட ஏன் வைத்தாய்?

பல்லுயிரும் போற்றும் பரம பதத்தினர்க்குச்
சொல்லுஞ் செயலுந் தொலையு நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! சர்வ ஆன்மாக்களும் துதிக்கின்ற உயர்ந்த பதவியுடையவர்க்கு சொல்லுஞ் செய்கையும் ஒழியும்.

தன்னை யறிந்தாற் றனக்கொருகே டில்லையெனச்
சொன்ன மொழியே சுகங்கா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! தன்னைத்தான் உணர்ந்தால் தனக்கு ஒரு கேடுமில்லை யென்று சொன்னமொழியே சுகமொழியாம்.

புண்ணாய்க் கசிந்துமனம் பூணுகின்ற வன்பருக்குக்
கண்ணீர் கரைபுரளக் கண்டாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மனமானது புண்ணைப்போல் கனிந்து இளகுகின்ற அன்பர்கட்கு கண்களினின்றும் நீரானது கரைபுரளக் கண்டாய். (எ-று) 110

முன்னாற் சுருதி முறையா லெனையறித
லுன்னை யறிதற் குளவா நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! முன்னே நினைத்து அம்முறைப்படி என்னை யறிவது உன்னை உணர்வதற்கான உளவாகும். (எ-று)

தன்னை யறிந்து தலைவனை யறியவேண்டும் என்பது கருத்து. 111

அண்டபகி ரண்ட மகண்டபரி பூரணமாய்க்
கொண்டநின்னை யாரறிந்து கொண்டார் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! அண்ட பகிரண்டங்களை அகண்ட பரிபூரணமாய்க்கொண்ட உன்னையாவரறிந்து கொண்டவர்?

உன்னையன்றி வேறொன் றுளதோவுண் டாயினதை
இன்னதுவா மென்றே யியம்பாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! உன்னையல்லாமல் வேறொரு பொருளிருந்தால் அது இந்தப் பொருள்தானென்று சொல்லாய்.

நெஞ்சகத்தில் வஞ்ச நெகிழாக்கட் டுண்டவருக்
கஞ்சலென்ன நீயென் றறியாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மனத்தில் வஞ்சகக் கட்டுள்ளவர்களுக்குப் பயப்படவேண்டாமென்று சொல்லுபவன் நீயே யென்றறியாய். (எ-று) 114

துற்கவலை யற்ற துரியாதீ தத்தினர்க்கு
நற்கவலை தானே நடிக்கு நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! தீயகவலைகளொழிந்த துரியாதீத நிலைமையை யடைந்தவர்களுக்கு உண்மை நிலையே நடனஞ்செய்யும். (எ-று) 115

விண்ணோடு மண்ணுமுதல் வேணதெலா முன்கருணைக்
கண்ணா டிடைகிடைக்கக் கண்டே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஆகாயம், பூமி முதலியவைகள் யாவும் உன்னுடைய கிருபையின்கண் கிடைப்பதாக உணர்ந்தேன்.

நாய்க்கு விருந்தோ நரிக்கோ புழுக்கூடு
தீய்க்கு விறகோ தெரியே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! சரீரம் நாய், நரி முதலியவைகளுக்கு விருந்தாமோ? அல்லது தீக்கு விறகாமோ? ஏதென்றறியமாட்டேன். (எ-று) 117

ஈக்க ளெறும்புமுத லென்னதுவா மென்னுமுடல்
பேய்க்க டமக்குப்பெறு பேறோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஈ, எறும்பு முதலிய ஜெந்துக்கள் என்னுடையது என்னுடையது என்று அபிமானிக்கின்ற இந்தச் சரீரம் பேய்களுக்குக் கிடைக்கக் கூடியதோ? (எ-று) 118

விண்ணாதி யாவும் விளங்குவது நீயெனவென்
கண்ணார வுங்கனவு கண்டே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஆகாயம் முதலிய சர்வபொருள்களுமாக விளங்குவது நீயென்று என்னுடைய கண்ணாரக் கனவுகண்டேன். (எ-று) 119

இல்லாமை யில்லாதென் றிதயந் தெளிவதற்கென்
வல்லாண்மை கொண்டு வருமே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! இல்லாமையானது இல்லாதென்று என்னுடைய இருதயம் தெளிவையடைய பலத்த ஆண்மையைக் கொண்டுவரும். (எ-று) 120

உன்னையறி யாவு முளவோவென் றோதியபின்
என்னையென்னத் தில்வைத் திசைப்பாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! உன்னையல்லாமல் யாவுமிருக்கின்றனவாமென்று சொன்னபின் என்னை எதில் வைத்து எண்ணுவாய். (எ-று) 121

கானற் சலமாங் கவிபாசக் கட்டுண்டார்
தானானே யெனத் தகுமோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! கானற்சலமாகிய கவிந்த பாசத்தில் கட்டுப்பட்டவர்களை நானென்னத்தகுமோ? (எ-று) 122

காட்டுக் கொலைவேடன் கைக்குள்சிக்கு மானெனவு
மாட்டித் துயருறவு மாட்டே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! காட்டிலிருக்கின்ற கொலைசெய்யும் வேடனுடைய கைக்குள்ளே அகப்படுகின்ற மானைப்போலவும் மாட்டிக்கொண்டு துன்பமடைய மாட்டேன். (எ-று) 123

கல்லு முருகுமொரு காலத்தினு மென்னிதய
அல்ல லிறுவதில்லை யையா நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஒரு காலத்தில் கல்லும் உருகும், ஆனால் என்னுடைய இருதயத்தின் துன்பம் இளகுதலில்லையையா.

காயக் கருவி கரணமுயற் காயவைத்த
நேய ருளத்தி னிறைவே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! காயத்தின்கண் கருவிகரணங்களின் துன்பத்திற்கு இடங்கொடாத ஞானிகளுடைய மனத்தில் நிறைந்திருப்பவனே. (எ-று) 125

பல்லா யிரங்கோடி பகிரண்ட மும்மையும்
எல்லா முனதடிக்கா ளென்றாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பல்லாயிரங்கோடி அண்டங்களும் மற்றுமுள்ளவைகளும் எல்லாம் உன்னுடைய திருவடிகளுக்கு ஆள் என்று சொன்னாய். (எ-று) 126

எனக்கோர் நிகருமில்லை யில்லாரில் வல்லாரில்
உனக்கோர் நிகரொருவ ருண்டோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எனக்கு ஒப்பார் ஒருவருமிலர், அப்படியிருக்க உனக்கு ஒப்பானவர் யாரிருக்கின்றார்கள்? (எ-று) 127

செப்பஞ் செயுஞ்செயலுட் சிந்தித்தல் வந்தித்தல்
எப்போ தெனைவிட் டியங்கு நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! செப்பஞ்செய்கின்ற செய்கையில் சிந்தனை செய்வதும், வந்தனை செய்வதும் என்னைவிட்டு எப்போது சஞ்சரிக்கும். (எ-று) 128

நீரொற் றிரள்குமிழி நேர்மைதரு மிவ்வுடலம்
யாரார்க்குக் கைக்கொடுத்த தையா நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே; நீரில் திகழ்கின்ற நீர்க்குமிழியைப்போலிருக்கின்ற இந்தச் சரீரமானது யார் யார்க்குக் கைகொடுத்தது? (எ-று) 129

ஒன்றாய்ப் பலவா யுருவருவா யும்முயிராய்
நின்றவுனை யாரறிய நின்றாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஒன்றாகியும், பலவாகியும், உருவமாகியும், அருவமாகியும், பரம ஆன்மாவாகவுமிருந்த உன்னை அறிய வல்லவர் யாவர்? (எ-று) 130

பெற்றெடுத்த மாதா பிதாக்களிருந் தாலுமெனைச்
செத்தவுடன் மண்ணிற் றிணிப்பார் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! என்னைப்பெற்றெடுத்த தாய் தந்தையர்கள் இருந்தாலும் நான் இறந்தவுடன் மண்ணில் புதைப்பார்கள். (எ-று) 131

எந்த வுயிர்க்கே யெமனை வரும்பாச
பந்த மகலமுகம் பாராய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எம்முடைய உயிருக்கு எமனாக வருகின்ற பாசபந்தங்கள் ஒழிய திருமுகம் பார்ப்பாய். (எ-று) 132

அபய மெனைக்காப்ப தண்ணலே யுன்கடமை
உபய மினியொருவர்க் குண்டோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! என்னைக் காப்பாற்ற வேண்டிய கடமை உனக்கே யல்லாமல் வேறொருவருக் குண்டோ? இல்லை. ஆகையால் சரணடைந்தேன். (எ-று) 133

என்னை யுனதடிக்கீ ழிசைத்தாட்கொண் டாளாத
வின்னலேயே யெண்ணி மெலிந்தே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! தேவரீர் உம்முடைய திருவடிகளின் கீழ் என்னை வைத்து ஆளாத துன்பத்தினால் நான் மெலிந்தேன்.

நாமத்தை யற்ற நவநாத சித்தர்தமைக்
காமக் கரைபுரளக் காணே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எந்த அவஸ்தைகளுமில்லாத நவநாதசித்தர்களைக் காமக்கரையிலிருந்து புரளப்பார். (எ-று) 134

தேங்காய்க் கிளநீர் செழிப்பிற் றிரட்சிதரப்
பாங்கா யருளுவதுன் பார நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! தேங்காய்க்கு இளநீரானது செழிப்பைத் தருதல்போல பக்குவமாக என்னை ஆண்டருள வேண்டியது தேவரீருடைய பாரமாகும். (எ-று) 685

கன்னலென வின்பங்கனிந் தொழுகு முன்னடிக்கென்
றன்னாலு மென்னபலன் றோயே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! கரும்பைப்போல இன்பத்தைக் கொடுக்கின்ற உன்னுடைய திருவடிகளுக்கு என்ன லாபம்? (எ-று)

அமையா மனமமைந்தே யருட்கடிமைப் பட்டவரை
எமனாலு மென்செயலா மெந்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பொருந்தாத மனம்பொருந்தி உம்முடைய திருவருளுக்கு அடிமைப்பட்டவர்களை எமன்தான் என்ன செய்யக்கூடும்? (எ-று) 138

ஒன்றுக்கு மெட்டா துறைந்தசுயஞ் சோதியுய
ரண்டர்க்கு மெட்டாதென் றறிந்தே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எவ்வகையாலும் எட்ட ஒண்ணாத வாசஞ்செய்த சுயஞ்சோதிப்பொருளானது தேவர்களுக்கும் எட்டாதென்றே உணர்ந்தேன். (எ-று) 139

வஞ்சமின்றி யென்னை வழிப்படுத்தி வைக்கவுனை
யஞ்சலற நானடைந்தே னையா நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! என்னை யாதொரு வஞ்சனையு மில்லாமல் வழிப்படுத்தி வைப்பதற்கு பயமில்லாமல் உம்மை நான் தஞ்சமென அடைந்தேன். (எ-று) 140

தாயனைய வின்பந் தருபேரின் பக்கடலில்
வாய்மடுக்கிற் றாகம் வருமோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! தாயைப்போலும் இன்பத்தைக் கொடுக்கின்ற பேரின்ப சமுத்திரத்தில் வாய்வைத்துண்டால் பிறகு தாகம் உண்டாகுமோ. (எ-று) 141

முன்னா ளெமக்கிருந்த மூதறிவி னோர்வசனஞ்
சொன்னா லதுவே சுகங்கா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பூர்வத்தில் எமக்கிருந்த பேரறி வாளர்களுடைய வசனத்தைச்சொன்னால் அதுவே சுகமாகும். (எ-று)

அட்டதிக்கு மண்ணின் னடங்கும் பெருவெளியில்
நட்ட நடுவிருந்த நாதா நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எட்டுத்திசைகளும் பூமி, ஆகாயம் முழுமையும் நட்டநடுவேயிருந்த தலைவனே! (எ-று) 143

தீது நலமுதலாஞ் செய்கை யகலவைத்தால்
ஈதொன்றும் போதுமெனக் கெந்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! நன்மை தீமைகளை யெல்லாம் என்னைவிட்டு நீங்கும்படி செய்துவிட்டாய்; அதுவே அடியேனுக்குப் போதுமானது? எ-று) 144

கொப்பத்தி லென்னைக் கிடத்தியமு தூட்டுமுனக்
கொப்புவமை யாதென் றுரைப்பே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! கெர்ப்பத்தின்கண் என்னை இருத்தி அவ்விடத்தில் அமிர்தத்தை ஊட்டுவித்த உனக்கு ஒப்பானவர்கள் யாவரிருக்கின்றனர். (எ-று) 145

எவ்வுலகு மேவற் கிணங்காதோ நின்னருடான்
செய்விக்கப் பட்டோர்க்குச் செப்பாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எந்த உலகத்தாரும் உம்முடைய ஏவலுக்கு இணங்கமாட்டார்களோ! உன்னுடைய திருவருளை யடைந்தவருக்குச் சொல்லாய். (எ-று) 146

தன்றேசம் விட்டுத் தனித்த தபோதனர்க்குச்
சென்றவழி யெல்லாஞ் சிறப்பா நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! தன்னுடைய சொந்த தேசத்தைவிட்டுத் தனிமையான தபோவல்லவர்களுக்கு அவர்கள் போனவிடமெல்லாம் சிறப்பைத் தருபவனே! (எ-று) 147

சிந்தைக் கலக்கஞ் சிதறிவிடச் செய்வதுவே
எந்தத் தவத்தினுநன் றெந்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எம்முடைய தந்தையே! மனக் கலக்கத்தை யொழிக்கச்செய்வதே எல்லாத்தவங்களிலும் நன்மையை யுடையதாம். (எ-று) 148

தேடுவது நாடுவதுஞ் சிந்தைத் திருநடனம்
பாடுவது முன்னடியார்க் காசை நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! என்னைத்தேடுவதும், விரும்புவதும், மனோநடனஞ்செய்வதும் உன்னுடைய அடியவர்களுக்கு ஆசையாம். (எ-று) 149

கண்ட பகலிரவுங் காணார்க்குச் சூரியனா
ரென்றெழுநா மென்ன வியம்பாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! யாவராலும் காணப்படுகின்ற பகலையும், இரவையும் காணாதவர்களுக்குச் சூரியனாக எழுகின்றவன் நாமேயாவோம் என்று சொல்லுவாய். (எ-று) 150

செத்த சவமென்றுஞ் சின்னஞ் சிறியரென்றும்
முத்தர்க் கிருக்கு முறைகா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! செத்த பிணமென்றும், மிகச் சிறியவர்களென்றும் மோனஞான முடையவர்களுக்கிருப்பதே முறைமையாகும். (எ-று) 151

சட்ட ரசங்கள் முதற் சருவவில் லங்கசுத்தி
இட்டார்க் குனதருள்வந் தெய்து நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! சட்டரசங்கள் முதல் சகலமான வில்லங்க சுத்தியைக் கொடுத்தவர்களுக்கு உன்னுடைய திருவருள் வந்து கைகூடும். (எ-று) 152

ஆகமத்துக் கெட்டா வகண்டபரி பூரணமாம்
ஏகவெளி யன்றோ வியம்பாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! இருபத்தெட்டு ஆகமங்களுக்கும் எட்டாத எங்கும் நிறைந்த பொருளானது ஏகவெளியல்லவா? (எ-று)

தேக முடையுமெனத் தேர்ந்த மனத்தினர்போற்
பாகபக்கு வத்தைப் படையே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! சரீரம் அழியுமென்று தேர்ந்த மனமுடையவர்களைப்போலப் பரிபக்குவத்தையடையேன். (எ-று)

காழியுப்பு நழிபப்பும் நாழியாந் தன்மையுமுப்
பாழெய்தி னோர்க்கோ பகராய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஒருபடி உப்பும், ஒருபடி ஜலமும் ஒருபடியேயாகுந் தன்மை முப்பாழை யடைந்தவர்களுக்கோ அதை நீயே சொல்லவேண்டும். (எ-று) 155

கொத்தோ டடிமை குடியாகவென் றனையுன்
பத்தருக் கென்றோ படைத்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! கொத்தோடு அடிமைப்பட என்னை உன்னுடைய பக்தர்களுக்கென்றோ படைத்தாய்? (எ-று) 156

எந்த வுயிரு மெமதுயிரென் றெண்ணி யெண்ணிச்
சிந்தை தெளியவருள் செய்வாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எந்த உயிரும் எம்முடைய உயிரென்று எண்ணி யெண்ணி மனந் தெளிவையடைய திருவருள் செய்வாய். (எ-று) 157

அந்திபக லற்ற வகண்டிதா காரமுமென்
புந்தி வெளிக்குப் புகுமோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! இராப்பகல்களற்ற அகண்டிதாகாரமும் என்னுடைய மனவெளியில் நுழையுமோ? (எ-று) 158

உள்ளுள் ளுயிரா யுறைந்த வுனைத்தொழவே
பள்ளி யறையேன் பகராய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! உள்ளுக்குள்ளாக உயிர்க்குயிராய்க் கலந்திருக்கின்ற உன்னைத் தொழுவதற்குப் பள்ளியறை எற்றுக்கு? (எ-று) 159

மேலிட்ட வாணவத்தை மெலியவிட்ட மேலவர்க்கு
மூலத் தெழுந்த முனையே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மேம்பட்டுவருகின்ற ஆணவத்தைத் தளரவிட்ட பெரியவர்களுக்கு மூலாதாரத்திலெழுந்த சுடர் முனையே! (எ-று) 160

மூலமுத லாறுதலமுட்டிநின்ற குண்டலியின்
பாலிற் கலித்தேகப் படுமோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மூலாதாரம் முதலிய ஆறு இடங்களிலும் முட்டியிருந்த குண்டலிசத்தியின் பக்கத்தில் கலக்குமோ ?

பஞ்சசுத்தி செய்த பழவடியா ரென்னவுன்னை
யஞ்சலி செய்தே யடைந்தே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஐந்துசுத்திகள் செய்த தொன்று தொட்ட பழைய அடியாரென்று உன்னைத் துதிசெய்து வந்து சரணடைந்தேன். (எ-று) 162

தொண்டர்பணிக் காளாய்ச் சுதைப்படுத்தி விட்டுவிடற்
கென்றிரங்கு வாய்கருணை யெந்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! கருணையையுடைய என்னுடைய தந்தையே! அடியார்களுடைய பணிவிடைகளைச் செய்ய என்னைச் சுத்தப் படுத்திவிட்டு விடுவதற்கு எக்காலத்தில் கிருபைசெய்வாய்!

ஓவியத்தைப் போலேயுறைந்த மனத்தினரொன்
றைவிக் குறுதுணையா மையா நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! சித்திரத்தைப் போலிருக்கின்ற மனத்தையுடையவர்கள் என்னுடைய உயிர்க்குத் துணையாவார்கள்.

விரிந்த சரியை முதன் மேவிநின்ற மெய்ஞ்ஞானக்
கரும்புமுதற் கண்டெனவுங் கண்டே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பரந்தசரியை முதலிய மார்க்கங்களையடைந்த உண்மை ஞானக்கரும்பே! உயர்ந்த கற்கண்டென்று கண்டுகொண்டேன். (எ-று) 165

அஞ்ஞானம் விட்டே யறந்தாங்கி வந்தவர்க்கு
மெய்ஞ்ஞானந் தானே விளங்கு நிராமயமே,

(பொ-ரை) நிராமயப்பொருளே! அஞ்ஞானத்தை யொழித்து அறத்தைச்செய்து வந்தவர்களுக்கே உண்மை ஞானமானது விளங்கும். (எ-று) 166

தின்றுடுத்திப் பூண்டு திரியவெனப் பாவிமனச்
சண்டி புரளச் சரியோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! உண்டு, உடுத்தி, ஆபரணங்களைத்தரித்துத் திரியவென்று என்னுடைய பாவிமனமாகிய சண்டியானது திரியவருவது சரியாமோ. (எ-று) 167

எம்மா லிசைந்த விருவினையும் போகவிட்டுச்
சும்மாவிருக்கச் சுகந்தா னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எம்மாலுண்டான இருவினைகளையும் போகவிட்டு சும்மாவிருந்தால் சுகமாகும். (எ-று) 168

பாசவினை யெல்லாம் பறந்திடமெய்ஞ் ஞானவைவாள்
வீசவரு டானே விளக்காய் நிராமயமே,

(பொ-ரை) நிராமயப்பொருளே! பாசமாகிய நல்வினை, தீவினைகளெல்லாம் ஒழிய உண்மை ஞானமான கூர்மை பொருந்திய வாளால் வீசித் திருவருளை விளக்காய். (எ-று) 169

தன்னி லிருந்த தலைவன் றனையறியா
தென்னையறிந் தென்னபல னெந்தாய் நிராமயமே,

(பொ-ரை) நிராமயப்பொருளே! எம்முடைய தந்தையே! தன்னிலேயிருந்த தலைவனை அறியாமல் என்னை நான் அறிந்து என்ன பிரயோசனம்? (எ-று) 170

உன்னை மறப்பிக்க வுருவெடுத்த வாணவப்பேய்
தன்னை மறப்பிக்கத் தகாதோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! உன்னை நினைக்கவொட்டாமல் மறக்கச்செய்ய ரூபங்கொண்ட ஆணவம் என்கிற பசாசை மறக்கத் தகாதோ? (எ-று) 171

இல்லாத மாயை யெனைத்தொடாா வண்ணமொரு
சொல்லருளச் செய்யென் றுரையே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! என்னுடைய துரையே! என்றும் ரூபமில்லாததாகிய மாயையானது என்னைத் தொடாராதபடி ஒரு சொல்லைத் திருவருள் செய்யச்செய். (எ-று) 172

துற்குணமே கொண்ட தொழும்பனியான் றுல்லுலகிற்
கற்குணத்த னென்போலுங் காணே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! துர்க்குணத்தையே பொருளாகக்கொண்ட அடியேனை நான் கல்லைப்போன்ற குணத்தையுடையவனுவேன்; இப்படி என்னைப்போல் ஒருவரையுங் காணேன். (எ-று)

பொல்லாவென் னெஞ்சம் புழுங்க வருகவலை
சொல்லுக் கடங்கா சுகங்கா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பொல்லாததான என்னுடைய மனம் வருந்த உண்டாகின்ற துன்பமானது சொல்லுக்கடங்காத சுகமாகும். (எ-று) 174

அலையு மனத்தை யகத்தடக்கு மன்பருளம்
உலைபி னிடுமெழுகுக் கொப்பாம் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! சர்வ காரியங்களிலும் போய்ப்போய் அலைகின்ற மனத்தை அடக்குகின்ற அன்பர்களுடைய மனமானது கொல்லனுடைய உலையில் இட்ட மெழுகுக்கு ஒப்பாகும். (எ-று)

ஏழுகடலு மோர்கடுகி னிடையிருக்கக் கற்றாலும்
வழுவு மனத்தினர்க்கு வாயே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஏழு சமுத்திரங்களையும் ஒரு கடுகில் அடக்க வழியைக் கற்றுக்கொண்டாலும் தவறும்மனமுடையவர்களுக்கு வாயிருந்து என்னபயன்? (எ-று) 176

போருக்கே வந்தெதிர்த்த போக்கிலிபோ லென்னிதயம்
தீரம்பே சுவதென்ன செய்வே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! சண்டையே செய்ய வந்து எதிர்த்த போக்கிலிகள்போல என்னுடைய மனமானது தைரிய வசனங்களைப் பேசாநிற்கின்றது. அதற்கு நான் என்ன செய்வேன்? (எ-று)

சோம்பே றிகள்போற் சுருண்ட மனத்தினர்க்குக்
காம விகாரங் கசப்பாம் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! சோம்பேறிகளைப்போல குறைந்த மனமுடையவர்களுக்கு காமவிகாரமானது கைக்கக் கூடியதாம்.

ஒழியாப் பிரபஞ்சத் துறவை மறவார்க்குக்
கழியிற் படுநாரைக் கதிகா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! நீங்காத உலகப்பற்றை மறவாதவர்களுக்குக் கழியிலிருக்கும் நாரையின்கதி உண்டாகும். (எ-று) 179

புந்தி யிதமகிதப் பூட்டுவிட்ட போகர்தமக்
கந்தி பகலறுமென் னையா நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மனத்தில் நன்மை தீமைகளைச் சேர்ப்பித்த போகமுடையவர்களுக்கு இராப்பகல்கள் ஒழியும். (எ-று)

நானே நெருப்பாறு நடக்குமயிர்ப் பாலமும் யான்
றானே யெனுமறிவைத் தாராய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! நெருப்பாறும், நடக்கின்ற மயிர்ப்பாலமும் நானே என்று உணரும் உணர்ச்சியைக் கொடுக்கவேண்டும். (எ-று) 181

மின்னனைய பொய்யுடலை மெய்யென்ற பொய்யரினி
என்ன கதிபெறுவா ரெந்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எம்முடைய தந்தையே! மின்னலைப்போல் அழிந்து விடுவதான பொய்யுடம்பை உண்மையானதென்கிற பொய்யறிவுள்ளவர்கள் இனி என்ன கதியைப்பெறுவாரோ?

கருவிப் பெருவெளியிற் கருத்தைச் செலுத்தாருக்
கருவி சொரியவரு ளாங்கா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! துணைக்காரணமாகிய பெருவெளியில் மனத்தைச் செலுத்தாதவர்க்கு அருவியானது சொரிய அருளாகும். (எ-று) 183

தேயாப்பஞ் சாக்ஷரவா ளூட்டுந் திறத்தினர்க்குக்
காயா புரிக்கோட்டை கனங்கா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! தேயாத பஞ்சாட்சரமென்னும் வாளாயுதத்தைத் தீட்டுகின்ற தன்மையுடையவர்களுக்குக் காயாபுரிக் கோட்டை என்னும் சரீரமானது கனமுள்ளதாகும். (எ-று) 184

பூமிப் பாப்பைவலம் போய்வரினும் பாவிகளைக்
காம வினையகலக் காணே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மிகவும் விசாலமான பூமியைத் பிரதட்சணஞ்செய்தாலும் பாவிகளுக்குக் காமமானது விட்டொழிய வில்லை. (எ-று) 185

கோணற் கருப்பிரசங் கோணது கொள்கையென்றன்
ஆணவத்தி லுந்த னறிவா நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! கோணலான கரும்பின் ரசத் தைக் கோணமல் கொள்ளுவது ஆங்காரத்தில் உம்முடைய அறிவு உண்டானதினாலாம். (எ-று) 186

கானலைநேர் பொய்யுடலைக் கல்லாகக் கண்டவர்க்கு
நாணமை நின்றே நடிக்கும் நிராமயமே.

(பொ-ரை) கானற்சலத்தை யொப்பான பொய்யான சரீரத்தை கல்லைப் போன்றதாகக் கண்டவர்களுக்கு வெட்காமல் இருந்து நட னஞ்செய்கின்ற நிராமயப்பொருளே! (எ-று) 187

சலக்குமிழி போன்றவென்றன் சிற்றுடற்கு மித்தனையோ
கலக்கமதை வைத்தாயென் கண்ணே நிராமயமே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! நிராமயப்பொருளே! நீரிற் குமிழியைப்போன்ற என்னுடைய சிறிய சரீரத்திற்கும் இத்தனை துக் கத்தை வைத்துவிட்டாய். (எ-று) 188

பொய்வாழ்வை நம்பும் புலையர் தமக்குனது
மெய்வாழ்வு வந்து விடுமோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பொய்யாகிய வாழ்க்கையை நம்புகின்ற புலையர்களுக்கு உன்னுடைய உண்மை வாழ்வுகிடைத்து விடுமோ; (எ-று) 189

கனக்கு மிருவினையாங் காவடியைத் தூக்குவதற்
கெனக்குமுடி யாதினிமே லெந்தாய் நிராமயமே.

(பொ-ரை) எம்முடைய தந்தையே! நிராமயப்பொருளே! பளுவா யுள்ள நல்வினை, தீவினை என்னும் காவடியைத் தூக்குவதற்கு இனி மேல் எனக்கு முடியாது. (எ-று) 190

துறவின்றிச் செய்வினையின் றொகைப்பலனே தென்பவர்க்கு
நரகசொர்க்க மென்றே நவின்றாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! துறப்பதில்லாமல் செய்வினை யின் தொகைக்குப் பலன் ஏது என்று கேட்பவர்களுக்கு நரகமும், சொர்க்கமும் என்று சொன்னாய். (எ-று) 191

காதொடுகண் வாய்மூக்குங் கண்டமெய்யோ டையறிவும்
வாதாடு தற்கோ வளர்த்தே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! காது, கண், வாய், மூக்கு, கண்டம் என்னும் ஐந்து அறிவும் சரீரத்தோடு வாதாடுவதற்காகவோ வளர்த்தேன்? (எ-று) 192

மாதா பிதாவும் வருந்தி வருத்திவைத்த
போதனையைப் பார்க்கிற் பிழைகா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மாதா பிதாக்கள் வருத்தப்பட்டு செய்வித்த போதனையைப் பார்த்தால் தப்பிதமாய் முடியும். (எ-று)

செல்லு மளவுஞ் செலுத்துகின்ற சிந்தையினோர்க்
கல்லும் பகலுமறு மையா நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! போகின்றவரைக்கும் விடுகின்ற மனத்தையுடையவர்களுக்கு இராப்பகல்கள் ஒழியும். (எ-று) 194

வேதச் சுமையதனை வீம்புக் கெடுத்தவுடன்
மாதவத்திற் கெங்கே வளையும் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! வேதமென்கிற சுமையை வெறு வீம்புக்கு எடுத்தவுடன் மாதவத்திற்கு எப்படி வளையும்? (எ-று)

நரம்பென்பு தோலா னடிக்கின்ற பாவைதனிற்
குரும்பு முத லெல்லாங் குடிகா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! நரம்பு, எலும்பு, தோல் என்னும் இவைகளால் நடிக்கின்ற பாவையில் குறும்பு முதலிய சகல காரியங்களும் குடியிருப்பனவாகும். (எ-று) 196

ஞாலத்து னிச்சை தொலைத்தோரிஞ் ஞாலமுதல்
ஆலத்துக் கொப்பென் றறைந்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! சரீரத்தின் பற்றைவிட்டவர்களுக்கு இவ்வுலகமானது விஷத்துக் கொப்பானதென்று சொன்னாய், (எ-று) 197

வானேற நூலேணி வைத்தாற்போ லுன்னடிபால்
நானேறு வேனென்ற நாட்டம் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! உன்னடியினிடத்தில் நான் ஏறுவேன் என்கிற நாட்டமானது ஆகாயத்தின்கண் ஏறுவதற்கு நூலேணி வைத்தாற் போன்றதாம். (எ-று) 198

மைந்தர்களைப் பெற்று மறலிக்களித் தாரெனவுஞ்
சிந்தைநெருப் பாயெரியச் செய்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பிள்ளைகளைப் பெற்று எமனுக்குக் கொடுத்தார்களென்று சொல்லவும், மனமானது நெருப்பாய் எரியும்படி செய்தாய். (எ-று) 199

நாலுதிக்கி னும்விஜய நாட்டுமன்னர் கோட்டை யெல்லாம்
பாலர்மணற் சோற்றின் படியா நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! நான்கு திசைகளிலும் திக்குவிஜயஞ்செய்கின்ற அரசர்களுடைய கோட்டைகளெல்லாம் பிள்ளைகள் விளையாடுகின்ற மணற்சோற்றுக்கு ஒப்பாகும். (எ-று) 200

பாட்டைப் படித்ததனாற் பகர்ஞான வாமென்ப
தேட்டுச் சுரைக்காய்க் கியல்பாம் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பாட்டுகளைப் படித்ததினால் சொல்லப்பட்ட ஞானவாமென்பது ஏட்டுச்சுரைக்காய்க் கதைக்கு ஒப்பாகும். (எ-று) 201

நின்ன தருளன்றி நிறைவு குறை வென்பார்க்
கென்ன கதிமுடிவி லெந்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எம்முடைய தந்தையே உன்னுடைய திருவருளல்லாமல் நிறைவும், குறைவும் என்று சொல்லுபவருக்கு முடிவில் என்னகதியோ? (எ-று) 202

தேகாபி மானத்திரைகடந்த தேசிகர்க்கு
மோகங்க ளெங்கே முயலும் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! தேகாபிமானம் என்கிற திரைச்சீலையைக் கடந்த ஞானாசிரியர்க்கு மோகங்கள் எங்கே? (எ-று) 203

சித்தந் தெளிந்த சிவஞா னியருலகப்
பித்த ருறவைப் பிடியார் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மனத்தெளிவையடைந்த சிவஞான மடையப்பெற்றவர்கள் உலகப்பித்தையுடையவர்களுடைய உறவினைப் பற்றார். (எ-று) 204

புத்தி தெளியாப் புலத்தோர் தமைத்தவத்துன்
மத்த மனுஷரென மாட்டே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மனத்தெளிவடையாத அறிவுள்ளவர்களைத் தவத்தினால் உன்மத்த மனுஷரென்று சொல்லமாட்டேன். (எ-று) 205

தொல்லைப் பெருமல்லற் றொலைத்தாருக் கேதொன்றுஞ்
சொல்லத்தா னுண்டோதான் சொல்லாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பழமையான பெரிய துன்பங்களை ஒழித்தவர்களுக்கு ஏதாவது சொல்லுவதற்குண்டோ? நீ சொல்வாய். (எ-று) 206

போக்கும் வரத்துமெல்லாம் பொய்யென்ற புண்ணியர்க்கு
நீக்கு மருளுண்டோ நிகழ்த்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! இறப்பும், பிறப்புமெல்லாவற்றையும் பொய்யென்று வெறுத்த புண்ணியர்களுக்கு நீக்குகின்ற மயக்கமுண்டா? அதை நீ சொல்லுவாய். (எ-று) 207

எத்தனையோ கற்று மிதயந்தெளி யாதிருந்த
பித்தருட னேசம் பிழைகா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எத்தனையோ வித்தைகளைக் கற்றும் மனத்தெளிவையடையாதிருந்த பித்தகுண முடையவர்களுடைய சினேகம் தப்பிதமானதாகும். (எ-று) 208

வஞ்சப் பந்த மயக்கொழிந்தா லல்லாதுன்
அஞ்சலெனும் பேரருளி லாகே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! வஞ்சகத்தையுடைய உலகமயக்கமானது ஒழிந்தாலல்லாமல் உன்னுடைய அபயாஸ்தமென்னும் பெருங்கருணையில் சேரமாட்டேன். (எ-று) 209

அண்டு மிருவினைப்பே யண்டா தடிப்பவர்க்குத்
தொண்டுசெய்வார்க் கன்றோ சுகங்கா ணிராமயமே.

பொ-ரை) நிராமயப்பொருளே! நெருங்குகின்ற நல்வினை, தீவினைகள் என்னும் பசாசுகளைச் சேராதபடி அடிப்பவர்களுக்கு அடிமை செய்பவர்களுக்கே சுகமாகும். (எ-று) 210

என்னெஞ்சந் தானே யெனைக்கெடுக்கு மின்னுமெனைச்
சின்னப் படுத்திலென்ன செய்வே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! என்னுடைய மனமே என்னைக் கெடுக்கும் அந்த மனம் இன்னும் என்னைச் சின்னப்படுத்தினால் நான் என்ன செய்வேன். (எ-று) 211

மூடு மெனதறிவே மூடி யிருந்தாலுன்
ஆடுமறி வெங்கேநின் றாடு நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மூடுகின்ற என்னுடைய அறிவானது மூடப்பட்டிருந்தால் உனனுடைய ஆடுகின்ற அறிவானது எங்கே நின்று ஆடும். (எ-று) 212

ஓடியே யுள்ளமட்டு மோடி யிதயமயங்கி
வாடியே நின்சமுகம் வந்தே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! நான் வெகுதூரம் ஓடியோடி மனமயங்கி மனம்வாடி கடைசியாக உன்னுடைய சமுகத்திற்குவந்தேன். (எ-று) 213

முட்டா ளெனும்பட்ட முழுதுமெனக் கியவுனக்
கிட்ட மிருந்தா லியம்பாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எனக்கு முழுமையும் முட்டாள் என்கிற பட்டங்கொடுக்க இஷ்டமிருந்தால் சொல்லுவாய். (எ-று) 214

ஆலமுறுந் தூல மநித்தியமென் போர்க்காசை
மாலெங்கே நின்று வருங்கா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! விஷம்பொருந்திய சரீரமானது நிலையற்றதென்று சொல்லுபவர்களுக்கு ஆசையெங்கிருந்து உண்டாம்? (எ-று) 215

ஆர்ப்புக் குயிரான வண்டபகி ரண்டமுமாந்
தாற்பரியஞ் சொல்லத் தகுமோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! உள்ளண்டங்களும் வெளியண்டங்களும் ஆரவாரத்திற்கு உயிரானதாம், அப்பொருளுக்குத் தாத்பரியஞ் சொல்ல முடியுமோ. (எ-று) 216

எண்டிசையுந் தானாயிலங்கு முனைத்தொழுதற்
கண்ட சராசரநின் றுடும் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! அஷ்டத்திக்குகளும் தானாகவே விளங்கும் உன்னை வணங்குவதற்குச் சராசரங்கள் யாவும் விரும்பும்.

காற்றூடி போலக் கருத்துவந்து தேடியுனை
ஆற்று தயர்ந்தேனென் னையா நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! காற்றூடியைப் போலக் கருத்துடன் வந்து உன்னைத்தேடி பொறுக்காமல் இளைத்தேன். (எ-று) 218

எல்லால் படித்துநடப் பெய்தினரின் புற்றனர்மற்
றல்லாரை யாரென் றறிவே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எல்லாவற்றையும் படித்து நடந்தவர்கள் இன்பத்தையடைந்தார்கள், மற்று அப்படி அல்லாதவர்கள் யாரென்றறிவேன். (எ-று) 219

அன்னைசுற்ற மெல்லா மகலவிட்ட வன்பர்தமக்
கின்ன லகலுமற் றெவர்க்காம் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! தாய், சுற்றத்தார் முதலிய பற்றுக்களைவிட்ட அன்பர்களுக்குத் துன்பம் ஒழியும். (எ-று) 220

சாருதனீ யன்றியில்லைச் சத்தியா மென்மனத்தை
ஆராய வேண்டாமென் னரசே நிராமயமே.

(பொ-ரை) அரசே! நிராமயப்பொருளே! சத்தியாகிய என்னுடைய மனத்தை ஆராயவேண்டாம். ஏனெனில் சேர்வதற்கு நீயேயல்லமால் வேறொருவரில்லை யாகையால். (எ-று) 221

தந்து மனத்தினர்க்குத் தாரபலன் போகிறதை
எத்தனையென் றேயுரைப்ப தெந்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ததும்புகின்ற மனத்தையுடையவர்களுக்குத் தாரபலன் போகிறதை எத்தனையென்று சொல்லுவேன்?

கொல்லுங் கொலைக்கஞ்சாக் கொலைஞனெனும் பாவிமனத்
தொல்லையைத் தீர்க்கச் சுகங்கா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! கொல்லுகின்ற கொலைப்பாதகத்தையுடைய கொலையாளி என்னும் பாவியின் மனத்துன்பத்தைத் தீர்க்கச் சுகமுண்டாகும். (எ-று) 223

உன்னையின்றி யென்னை யொதுக்கிவைப்ப தெந்தநெறி
அன்னையன்றிச் சேய்தானுண் டாமோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! தாயில்லாதவழி பிள்ளையுண்டாகுமோ? ஆகாது. அப்படியிருக்க, உன்னையில்லாமல் என்னை ஒதுக்கிவைப்பது எந்த நியாயம்? (எ-று)

தாயில்லையெனில் பிள்ளை உண்டாகாவாறுபோல், என்னை மாத்திரம் ஒதுக்குவதெங்ஙனம்? என்பது கருத்து. 224

பொங்கு கருணைப் புறச்சுழித்தார் கள்ளமன
வங்கமங்கே யோடி வருங்கா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! விளங்குகின்ற கருணையென்கிற சுழி சுழித்தவர்களுடைய கள்ளத்தன்மை பொருந்திய மனமான கப்பலானது அங்கே ஓடிவரும். (எ-று) 225

கல்லாத கல்வியெல்லாங் கற்றுமுயர் ஞானகலை
இல்லார்க்கு மின்பநிலை யேதோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! கற்கக்கூடாத வித்தைகளையெல்லாங் கற்றுக்கொண்டும் உயர்ந்த ஞானசாஸ்திரங் கல்லாதவர்க்கு சுகநிலை உண்டாகாது. (எ-று) 226

விளக்குஞ் சுடரினையும் வேறுவே றெண்ணுருக்
குழக்குளப்பு முப்பெனவு மொன்றா னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! விளக்கையும், சுடரையும் வேறுவேறாக நினையாதவர்களுக்கு உழக்கு ஜலமும், உழக்கு உப்பும் ஒன்றாக நினைப்பது போலுமாம். (எ-று) 227

சார்ந்தோரைத் தூடணிக்குந் தப்பிலிக ளைப்புவியில்
ஏன்றான் படைத்ததுதா னெந்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எம்முடைய தந்தையே! தம்மைச் சேர்ந்தவர்களைத் தூஷணை செய்கின்ற தப்பிலிமார்களை இவ்வுலகத்தில் ஏன் சிருஷ்டித்தாய்? (எ-று) 228

புத்தி யகங்காரம் பூணு மனமிறக்கிற்
சித்த மகத்துவத்தைச் சேரும் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! புத்தி, அகங்காரம் இவைகளைச் சேர்ந்திருக்கின்ற மனமானது இறந்துபடுமானால் சித்தமானது மகத்துவத்தையடையும். (எ-று) 229

நானோ திருவடியை நாடுவதுந் தேடுவதும்
ஆனா லதுபெரிதா மையா நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஐயனே! உம்முடைய திருவடியை விரும்புவதும் தேடுவதும் நான் தானோ? அப்படி நானேயானால் அதுபெரிதான காரியமாகும். (எ-று) 230

காற்றுத் துருத்தியைந்து கள்ளர் புலைக்குடிலை
சோற்றா லெடுத்த சுவர்கா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! காற்றுத்துருத்தியும், ஐந்து கள்ளர் இருக்கின்ற புலால் நாற்றம் வீசுகின்ற குடிசையுமான இந்தச் சரீரமானது சோற்றால் எடுத்த சுவராம். (எ-று) 231

மன்னுங் கலைஞான மார்க்கமறிந் தோர்க்குமுறும்
அந்நியங்க ளொன்று மறியார் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! நிலைபெற்ற கலைஞான வழியை உணர்ந்தவர்களுக்கு உண்டாகின்ற அந்நியவிஷயங்கள் ஒன்றுந் தெரிதவில்லை. (எ-று) 232

சென்னிக் கிசையாச் சிவராஜ யோகநிலை
வன்ன மலர்ப்பதத்தை வைத்தே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! சிரசின்கண் பழகமுடியாத சகசநிஷ்டையாகிய சிவராஜயோக நிலையின்கண் வர்ணமான மலர்போலுந் திருவடிகளை வைத்தேன்; (எ-று) 233

சென்ம மெடுத்தாற் செகமாயை விட்டொழிந்து
நன்மை பெறுத னயங்கா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! சென்மமெடுத்தால் உலகமாயையானது விட்டொழிந்து நன்மையையடைதல் 'நன்மையாகும். (எ-று)

பாச மறவார பரமபதத் தினர்போற்
பேசுசிலர் கூடவுநான் பேசே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பாசபந்தங்களை மறவாத பரமபதத்தை யடைந்தவர்களைப்போலப் பேசுகின்ற சிலர் கூட்டங்கூடியிருக்கவும் நான் பேசமாட்டேன். (எ-று) 235

நேராம் வழிகாட்டி நிச்சயத்தைச் சொல்லவெனக்
காருண்ணை யன்றி யாரசே நிராமயமே,

(பொ-ரை) நிராமயப்பொருளே! உண்மையாக நேரான வழியைக்காட்டி நிச்சயத்தைச் சொல்லுவதற்கு உன்னைவிட எனக்கு வேறே யாவரிருக்கின்றனர். (எ-று) 236

வாசகத்தின் ஞானமெல்லாம் வந்ததுபோற் பேசியையோ
மோசப் படவு முறையோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! வாசக ஞானங்களெல்லாம் வந்ததைப்போற் பேசி ஐயோ! மோசத்தையடையவும் முறையாமோ?

பெட்டி நிறையப் பெருக்கிவைத்த பெட்டகத்தாற்
குட்டிச் சுவரென்றே குறித்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பெட்டியின் நிறையப் பெருக்கிவைத்த பெட்டகத்தினுல் என்னைக்குட்டிச் சுவரென்றே நினைத்தாய்?

மனம்பாச மற்றுநிற்க வாயாலுனைப்புகழும்
இனங்கள் முழுதுமெனக் கெதிர்கா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மனத்தின்கண் பாசமென்னும் மாய்கை யொழிந்தவர்கள் நிற்க உன்னை வாயினுற் புகழ்கின்ற இனங்கள் முழுமையும் எனக்கு எதிராம். (எ-று) 239

வாசனையைப் போக்கும் வாமுண் டெனவொருசொல்
நீசருக்கு முண்டோ நிகழ்த்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மணத்தை நீக்கிவிடுகின்ற வரமானது எனக்கு உண்டென்று சொல்லுகின்ற ஒரு சொல்லானது நீசர்களுக்கும் உண்டாகுமா? (எ-று) 240

அன்னை பிதாவு மணைந்தகுற்ற வாக்கினைக்கோ
என்னைப் பிறக்கவைத்தா யெந்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! தாயும் தந்தையுஞ்சேர்ந்த குற்ற சிட்சைக்காகவா என்னைப் பிறக்கவைத்தாய்? (எ-று)

மாதா பிதாக்கள் செய்தவினை மக்களுக்கு என்னும் பழமொழியை நோக்கி இங்ஙனங் கூறினுர். 241

மாதா பிதாவும் மயறீர்ந்த வாற்றினுக்கு
வாதோ வெனைப்பிறக்க வைத்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! தாய் தந்தையர்களுடைய மயக்கமானது ஒழிந்தவிதத்துக்கு வாதோ என்னைச் சிருஷ்டிசெய்தது?

பின்னை யொருவர் செய்யும் பிழைக்குப் பரிகாரம்
எனனைத் தெருவில்விட்ட தேன்கா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஒருவர்செய்கின்ற தப்பிதத்தின் பொருட்டு என்னைத் தெருவில் விட்டது ஏன்? (எ-று) 243

தொண்டாசை கொண்டோர் துயிலார் முகத்தணைக்கக்
கண்டுயிலா ரன்பரெனக் கண்டாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! உன்னுடைய திருத்தொண்டில் ஆசைப்பட்டவர்கள் தூங்கமாட்டார்கள், முகத்தில் சேர்க்கக்கண் படார்; அன்பர்களாவார்களென்று கண்டு கொண்டேன். (எ-று) 244

ஈனத்துக் கேற்றவுட லென்ன தென்ன தென்பதுவும்
ஞானத்துக் கேற்றவர்க்கு நன்றோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஈனமான சரீரம் என்னுடையது என்னுடையது என்று சொல்லுவது ஞானவான்களுக்குத் தகுதியாகுமோ? (எ-று) 245

ஆசைக்கடலி னலைவாய்ப்பட் டேயலைந்து
மோசப் படுதன் முறையோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஆசையாகிய சமுத்திரத்தினுண்டாகின்ற அலையிற் சிக்கியலைந்து மோசத்தையடைவது முறைமையாகுமோ? (எ-று) 246

எட்டிரண்டு மின்னதென்று மேதையறி யாதபடி
வெட்டவெளிப் பேதையென விட்டாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எட்டும், இரண்டும் இன்னதென்று அறிவில்லாதவனான நான் உணர்ந்து கொள்ளாதபடி வெட்டவெளியில் அறிவில்லாதவனென்று சொல்லும்படி விட்டுவிட்டாய்.

பித்தம் பிடித்தபிர பஞ்சத்தார் போலன்றோ
முத்தர்க் கிருக்கு முறைகா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பைத்தியம் பிடித்த உலகத்தவர்களைப்போலல்லவா மௌனஞானிகளுடைய முறைமையாகும். (எ-று.)

காமக்கு ரோதமத மாச்சரியக் காரருக்கே
ஆமோ திருக்கருணை யையா நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஐயனே! காமம், குரோதம், மதம், மாற்சரியம் ஆகிய இவைகளை உடையவர்களுக்கு உன்னுடைய திருக்கருணை யுண்டாகுமோ? (எ-று) 249

ஜெகத்து மயமாயுந் தேஜோ மயமாயும்
அகத்து டணுவான தன்றோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! உலகமயமாகியும், சோதிமயமாகியும், மனத்தின்கண் அணுரூபமாயிருந்ததல்லவா? (எ-று) 250

கேசாதி பாதமுதல் கெர்ப்பக் குவட்டில்வைத்த
ஈசா வுனக்கே யியல்பாம் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! சிரசு முதல் பாதம் வரைக்கும் கர்ப்பத்தில் அடக்கிவைத்த சர்வேஸ்வரனே! அப்படிச் செய்வது உனக்குச் சுபாவமாகும். (எ-று) 251

எக்கலைக்குஞ் சொக்கா தியங்கு முனைத்தொழுதல்
நிற்கவலை கெல்லா நிலைகா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எந்தக்கலைக்கு மயங்காமல் இயங்குகின்ற உன்னை வணங்குதல் உன்னுடைய துன்பங்களுக்கெல்லாம் நிலைமையாம். (எ-று) 252

அகத்து விழியுமறி தற்கரி தாயவுன் பால்
முகத்து விழியோ முயலும் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மனக்கண்ணினால் அறிவதற்கு அருமையான உன்னிடத்தில் முகத்திலிருக்குங் கண்கள் காரியசித்தியை அடைவனவாமோ? (எ-று) 253

திக்கு விஜயஞ் சிவராஜ யோகியர்க்காந்
துற்க வலையோர்க்குத் துறையோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! திக்கு விஜயஞ்செய்யும் வல்லமையானது சிவராஜயோகிகளுக்கு உண்டாகும்; மற்றைய தீங்கவலையுடையவர்களுக்கு அவ்வன்மை உண்டாமோ? (எ-று) 254

வாழுகின்று மென்றே வலக்காரம் பேசிலையோ
வழும் நரகுக் கிரைகா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! நாம் வாழ்கின்றோமென்று வலக்காரம் பேசினால் அந்தோ! அச்செய்கையானது ஏழாகிய நரகத்திற்கு இரையாம். (எ-று) 255

ஈடெனக் காரென்றே யெதிர்பேசு மாட்டியுடல்
நீடூழி கால நிலையோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எனக்கு ஒப்பானவர்கள் யாவரென்று எதிர்த்துப்பேசுகின்ற மட்டிகளுடைய சரீரமானது சர்வகாலம் நிலைத்திருக்கக் கூடியதாகுமோ? (எ-று) 256

பாகாய்க் கசிந்துருகும் பரம பதத்தினர்க்குத்
தேகாபி மானமெல்லாந் தீயு நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மனம் பாகைப்போல் கசிந்து கசிந்து உருகுகின்ற பரமபதத்தை யடைந்தவர்களுக்குத் தேகாபிமானங்களெல்லாம் நீங்கும். (எ-று) 257

ஆவியுடல் பொருளுமடங் கக்கொள்ளை கொண்டுமெனைப்
பாவியென்று தள்ளப் படுமோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஆவி, உடல், பொருள் ஆகிய இவைகளை ஒருங்கே கொள்ளைகொண்டும் என்னைப் பாவியென்று தள்ளப்படுமோ? (எ-று) 258

அளந்தாலு மிந்தவுல கவ்வளவு மெவ்வளவும்
உளந்தெளியா ருக்கருடா னுண்டோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! இந்த உலகத்தை அவ்வளவும் எவ்வளவும் அளந்தாலும் மனத்தை அறியாதவர்களுக்குத் திருவருள் உண்டாகுமோ? (எ-று) 259

சொன்ன படிக்கிணங்கா துட்டன்யா னாகிலுமுன்
வன்ன மலர்ப்பதத்தை வைப்பாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! சொன்னபடி கேட்காத துஷ்டன் நானேயானாலும் உன்னுடைய செந்தாமரை மலர்போலுந் திருவடிகளை என் சிரசில் வைக்கவேண்டும். (எ-று) 260

பாத முடியின் பரமார்த்த மானவுனக்
கேது வடிவென்றே யிசைப்பே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பாதம், சிரசு இவைகளின் பரமார்த்தமான உனக்கு என்ன ரூபமுண்டென்று சொல்லுவேன். (எ-று)

முன்னுளிருந்த முறைபோலு மூர்த்திகராய்
எந்நாள் வருவதெனக் கெந்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! எம்முடைய தந்தையே! பூர்வத்திலிருந்த முறைமையைப்போல மூர்த்திகளாய் எனக்கு எந்நாளில் வருவது? (எ-று) 262

மடக்கெடுத்து வீசி மணல்குடித்த நீரதனால்
கடற்குறை யுண்டோவென் கண்ணே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! என்னுடைய கண்ணே! மடக்கை எடுத்து வீசி மணலானது குடித்த நீரினால் கடல் சலத்துக்குக் குறையுண்டாகுமோ? (எ-று) 263

தானேதா னெவ்வுயிர்க்குந் தற்பரமாய் நிற்பதுடல்
ஊனுகிக்கொண்ட வுளவே நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! தானே எவ்வுயிர்க்குந் தற்பரமாய் நிற்பது உடலின் ஊனுகிக்கொண்ட உளவேயாம். (எ-று) 264

பாச மொழித்துநெறி பற்றிநின்ற வித்தகர்க்கு
வீசுந் திருக்கருணை வீசும் நிராமபமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! பாசங்களை நீக்கி உண்மை மார்க்கத்தைப் பிடித்திருந்த பரிசுத்தமானவர்களுக்கு வீசுகின்ற திருவருளானது பரவும். (எ-று) 265

கற்றகல்வி யற்று கன்மமுதல் பாசமற்று
உத்தமர்க்குச் சித்த மொடுங்கு நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! படித்தபடிப்பும், கர்மங்களும், பாசங்களும் ஒழிந்துநின்ற உத்தம புருஷர்களுக்கு மனமொடுங்கி நிற்கும். (எ-று) 266

சித்த நிரஞ்சனத்திற் சென்றிருக்க வல்லார்க்குப்
புத்தி நிருவிகற்பம் பூணும் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மனோநிறைவிற் போயிருக்க வல்லமையுடையவர்களுக்கு புத்தியானது நிர்விகற்பஞானத்தையடையும்.

நீட்டிக் குறுக்கநெடும்பகையென் பாரதுபோற்
காட்டி மறைக்க கணக்கோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! முதலில் கையை நீட்டிப் பிறகு குறுக்கிவிட்டால் பகையுண்டாகுமென்றுசொல்லுவார்கள். அதுபோல தாங்கள் காட்டி மறைத்தல் கணக்காகுமோ? (எ-று) 268

கற்பூர வுண்டை கரைவதுபோ லக்கரையுந்
தற்போத கக்கருணை தந்தா ணிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! அனலிற்பட்ட கற்பூரவுண்டையானது கரைவதைப்போலக் கரைகின்ற தற்போதத்தையும் திருவருளையுங்கொடுத்து ஆள்க. (எ-று) 269

தேனேநெய் பாகாய்த் திரண்டமுத மென்னுடலோ
டூனோ டடலோ நிறைந்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! தேனைப்போலவும், சர்க்கரைப் பாகைப்போலவும், அமிர்தத்தைப்போலவும் என்னுடைய சரீரத்துடன் கலந்திருந்தாய். (எ-று) 270

கண்டித்த வெள்ளுங் கரும்பும்போ லும்மெனது
சண்டித்தன மெய்யதற்குச்சார்நீ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! துண்டாக்கின எள்ளினையும், கரும்பையும்போல என்னுடைய சண்டித்தனமான சரீரத்திற்கு நீயே சாரவேண்டும். (எ-று) 271

ஐந்துபுலவேடருக்கே யாளாக்கி னுனக்கு
வந்தபல னென்னோ வழுத்தாய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! என்னை ஐம்புலவேடர்களுக்கு ஆளாக்கிவிட்டால் உனக்கு வந்த பிரயோஜனம் என்ன? அதைச் சொல்லுவாய். (எ-று) 272

ஓயாக் கவலைக் குரித்தாம் புழுக்குரம்பை
ஆயே னெனவுருக்க தையா நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஒழியாத துன்பங்களுக்கு உரிமையான புழுநெளிகின்ற சரீரத்தை ஆராயமாட்டேனென்று சிருஷ்டித்தது என்? (எ-று) 273

ஐவர்க்கு மென்னை யடங்கச்சிறை யாக்குவது
உய்யுங் கருணைக் குளதோ நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஐந்து பேர்களுக்கும் நான் அடங்கும்படி சிறைசெய்வது நான் பிழைப்பதற்குரிய கருணைக்கு உண்டாகுமோ? (எ-று) 274

ஊசிதனைக் காந்த மூசுத்தனைக்கு மாறெனவே
பாசத்தைப் போக்கியருள் பாராய் நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! ஊசியைக் காந்தம் இழுப்பது போல பாசத்தை நீக்கித் திருவருள் கொடுக்கப் பார்ப்பாய். (எ-று)

உள்ளந் தெளிந்தே யொளியாய்ப் பிறங்கினர்க்குக்
கள்ளந்தெளி யக்கனவு கண்டே னிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! மனத்தெளிவையடைந்து தேஜோமயமாய் விளங்கினவர்களுக்குக் கள்ளந்தெளியுமென்று கனக் கண்டேன். (எ-று) 276

அற்புதமே நிர்க்குணமே வன்பர்க் கருள்புரியுஞ்
சற்குருவே யெங்கள் சலுவேநிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! யாவருக்கும்அற்புதப் பொருளே! நிர்க்குணப்பொருளே! அடியார்களுக்குத் திருவருள் செய்யும் ஞானாசிரியனே! எங்களுடைய சலுவே! (எ-று) 277

அழியா வருள்வாழி யள்ளியடி யேன்றனக்கா
மழையாய்ப் பொழிந்தாய்நீ வாழி நிராமயமே.

(பொ-ரை) நிராமயப்பொருளே! என்றுங்கெடாத திருவருளானது வாழக்கடவது, அந்தத்திருவருளை அள்ளி அடியேனுக்காக மழையைப்போல் பொழிந்த நீயும் வாழக்கடவாய். (எ-று) 278

முத்தர்க்கும் வாழியெங்கள் முன்னோர்க்கும் வாழியருள்
வித்தர்க்கும் வாழியெங்கும் விளங்கும் நிராமயமே.

(பொ-ரை) எவ்விடத்திலும் விளங்குகின்ற நிராமயப்பொருளே! முத்தர்களானவர்களும், எங்களுடைய பூர்வாசாரியர்களும், பரிசுத்தமுடையவர்களும் வாழக்கடவர்கள். (எ-று) 279

ஒழியா வருள்வாழி வுத்தமர்க ளும்வாழி
அழியாப் பதிவாழி யையா நிராமயமே.

(பொ-ரை) ஐயனே! நிராமயப்பொருளே! நீங்காத திருவருளும், புண்ணிய புருஷர்களும், கெடாத உயர்பதிகளும் வாழக்கடவன. (எ-று)

குன்றாக் குணங்குடிகொண் டோராயெம் வித்தகரும்
எந்நாளும் வாழியருளெந்தாய் நிராமயமே.

(பொ-ரை) திருவருளையுடைய எம்முடைய தந்தையே! நிராமயப் பொருளே! குறையாத குணங்குடியைத் திருப்பதியாகக் கொண்டவர் களாய் எம்முடைய வித்தகர்களும் எக்காலமும் வாழ்க. (எ-று) 281

நிராமயக்கண்ணி - முற்றுப்பெற்றது.

ஆக பாடல்-563.

# பராபரக் கண்ணி.

அண்ட புவனமென்று மாடுதிருக் கூத்தினையான்
கண்டு மகிழ்ந்திடவே காட்டாய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! அண்டத்திலும், உலகத்திலும் எக்காலத்தும் ஆடுகின்ற திருக்கூத்தைத் தெரிசித்து சந்தோஷிக்கும் படி காட்டவேண்டும். (எ-று) 1

ஆதியா யாண்டவனா யகதுகது வாகிதுவாய்
சோதியாய் நின்மலமாய்ச் சூழ்ந்தாய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! முதற்பொருளாகியும், ஆண்ட வனாகியும், அகதுகதுவாகியும், சோதிப்பொருளாகியும், நிர்மலப் பொருளாகியும் வளைந்தனை. (எ-று) 2

வேத மறைப்பொருளை வேதாந்தத் துட்கருவை
ஓதி யுனையறிந்தோ ருண்டோ பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! வேதப்பொருளையும், வேதாந் தத்தின் உட்கருவையும் ஓதி உன்னையறிந்தவர்கள் யாவரிருக்கின்ற னர். (எ-று) 3

அண்ட புவனமுட னாகாச மென்றுசும்பிக்
கொண்டாடு மெய்ஞ்ஞானக் கூத்தே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! அண்டங்களும், உலகங்களும், ஆகாச வாசிகளும் துதித்துக் கொண்டாடுகின்ற உண்மை ஞானக் கூத்தே! (எ-று) 4

நாவாற் புகழவெட்டா நாயகமே நாதாந்தப்
பூவாய் மலர்ந்திருக்கப் பூத்தாய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! நாக்கினாற் புகழ்வதற்கு எட் டாத நாயகனே! நாதாந்தப்பூவாய் மலர்ந்திருக்கும்படி பூத்தாய். (எ-று)

பேரற் பெரிய பெரும்பொருளே பேதைதனக்
காரா ரிருந்தும்பல னுமோ பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! பேரினற் பிரபலமாயிருக்கின்ற பெரிய பொருளே! ஏழையாகிய எனக்கு யாரிருந்தும் என்ன பிரயோசனம்? (எ-று) 6

மாருய நற்கருணை மாவருள்சித் தித்திடவே
பாயாயோ வையா பகராய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! ஐயனே! எனக்கு அந்நியமான உயர்ந்த திருவருளானது எனக்குக் கைகூடும்படி திருக்கண் சாத்தியருளமாட்டாயோ? (எ-று) 7

ஆனுலு முன்பாதம் யாசித் திருப்பதற்குத்
தானு யிரங்கியரு டாராய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! எப்படியானலும் உன்னுடைய திருவடிகளை யாசித்திருப்பதற்குத் தானகவே கிருபைவைத்து அருள் செய்யவேண்டும். (எ-று) 8

நாதாந்த மூல நடுவீட்டுக் குள்ளிருக்கு
மாதவத்தோர்க் கான மருந்தே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! நாததத்துவத்திற்கு அந்தமான மூலநடு வீட்டுக்குள்ளே எழுந்தருளியிருக்கின்ற மகத்தாகிய தவசிரேஷ்டர்களுக்கான சிநேக வஸ்துவே! (எ-று) 9

உடலுக் குயிரேயென் னுள்ளமே யுன்பதத்தைக்
கடலுமலை யுந்திரிந்துங் காணேன் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! சரீரத்திற்குள்ளிருக்கின்ற என்னுடைய உயிரே! என்னுடைய மனமே! உன்னுடைய திருவடிகளைக்கடலிலும், மலைகளிலுந் திரிந்துங் காண்கிலேன். (எ-று) 10

மாந்திரத்துக் கெட்டா மறைப்பொருளே மன்னுயிரே
சேர்ந்தவெழு தோற்றத்தின் சித்தே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! சர்வமந்திர பீஜங்களாலும் உணரமுடியாத வேதப்பொருளே! நிலைபெற்ற உயிரே! சேர்ந்திருக்கின்ற எழுவகைப் பிறவிகளிலும் ஆடுகின்ற சித்துப்பொருளே!(எ-று)

தனியேனுக் காதரவு தாரணியி லில்லாமல்
அனியாய மாவதுனக் கழகோ பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! தனிமையானவனை எனக்கு இவ்வுலகத்தின்கண் யாதொரு ஆதரவுமில்லாமல் அநியாயமாய்க் கெடுவது உனக்கு அழகுதானே? (எ-று); 12

ஓடத் திரிந்தலைந்து முன்பாதங் காணமல்
வாடிக் கலங்குகிறேன் வாராய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! நான் அநேக இடங்களெல்லாம் ஓடியோடித்திரிந்து அலைந்தும் உன்னுடைய திருவடிகளைக் காணமல் மனம்வாடிக் கலக்குகிறேன். ஆகையால் இனியாவது தேவரீர் இவ் வேளையின் முன் எழுந்தருளி வரவேண்டும். (எ-று) 18

தூராதி தூரந் தொலைத்துமதி னுன்பாதம்
பாரா தலைத்தாற் பயந்தேன் பராபரமே.

(பொ-ரை)பராபரப்பொருளே! அதிக தூரங்களெல்லாம் போய்ப் போய்த் தொலைத்தும், அதில் உன்னுடைய திருவடிகளைப் பாராமல் (தெரிசனஞ் செய்யாமல்) வீண் வேலையினுல் பயமடைந்தேன். (எ-று)

தேடக் கிடையாத திரவியமே தேன்கடலே
ஈடுனக்கு முண்டோ விறைவே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! தேடினாலும் கிடைக்காத செல் வமே! தேன் சமுத்திரமே! தலைவனே! உனக்கு ஒப்பானவர்கள் யாவ ரிருக்கின்றனர்? (எ-று) 15

அரிய பெரும்பொருளே யன்பா வொருவார்த்தை
பரிபூ ரணமாய்ப் பகராய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! அருமையான பெரிய வஸ்துவே! நீ என் மேல் அன்பாக ஒரு சொல்லைப் பரிபூரணமாய்ச் சொல்லவேண் டும். (எ-று) 16

ஐயோ வெனக்குதவு மாதாவை விட்டுவிட்டுத்
தையலரைத் தேடித் தவித்தேன் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! அந்தோ! அடியேனுக்கு உதவி செய்கின்ற உன்னை ஆஸ்ரயிக்காமல் விட்டுவிட்டுப்பெண்களைத் தேடித் தேடிப் பரிதவித்தேன். (எ-று) 17

எத்திசையு நோக்கி லிசையாத் திருக்கூத்தாய்
வித்தைவிளை யாட்டு விளைப்பாய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! எந்தத்திசையைப் பார்த்தாலும் பொருந்தாத திருக்கூத்தாய் வித்தைசெய்யும் விளையாட்டைச் செய் வாய். (எ-று) 18

எப்பொழுது முன்பதத்தி லென்கருத்தே யெய்துதலுக்
கிப்பொழுதே கைப்பிடித்தா ளிறையே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! எந்தக்காலத்திலும் உன்னுடைய திருவடிகளில் என்னுடைய மனம் பதிவையடைய இப்பொழுதே அடி யேனைக் கைப்பிடித்து ஆண்டருளவேண்டும், (எ-று) 19

வாதுக் கடாவரும் வம்பரைப்போற் றோஷிமனம்
ஏதுக் கடர்வதியா னெளியேன் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! வாது தொழில்களுக்கு அடரும்படி வருகின்ற வீண் வம்புக்காரர்களைப்போல பஞ்தோஷியாகிய என்னுடைய மனம் எதற்கு விரும்புகிறது? நானோ எளியவன். (எ-று) 20

கண்ணே மணியே கண்மணியே கண்பார்வைக் கெட்டாத
விண்ணடங்கா வெட்ட வெளியே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! என்னுடைய கண்ணே! மனோன் மணியே! கண்ணின் பார்வைக்கெட்டாத ஆகாயத்திற் கடங்காத வெட்டவெளியே! (எ-று) 21

அடக்கவரி தாமாயி லைம்பொறியைக் கட்டிப்
படிக்கப் படிப்பெனக்குப் பகராய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! பஞ்சபொறிகளையும் அடக்குவதற்கு அருமையாகும். ஆனாலும் அவைகளைக் கட்டுகிறதற்கான படிப்பை எனக்கு அருளிச்செய்யவேண்டும். (எ-று) 22

எத்தவங்கள் செய்தாலு மின்பமுட னுன்பதத்தை
முத்தரொருபோது முற்றார் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! சீவன் முத்ததசையை யடைந்த பெரியவர்கள் எப்படிப்பட்ட தவங்களைச் செய்தார்களானாலும் உன்னுடைய திருவடிகளை ஒருநாளு மறவார். (எ-று) 23

சொல்லுக் கிணங்காத சூத்திரத்தைப் பார்த்திருக்க
அல்லும் பகலுமெனக் காசை பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! வார்த்தைக்குள் அடங்காததான சூஸ்திரப்பொருளைத் தெரிசனஞ்செய்து கொண்டிருப்பதற்கே எனக்கு இரவும் பகலும் ஆசையாகும். (எ-று) 24

நாற்றச் சடலமதை நம்பார் முகந்திருக்கப்
பூத்து மலர்ந்திருக்கும் பூவே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! நாற்றமான சரீரத்தை நிலையற்றதென்று நம்பாதவர்கள் முகர்ந்திருக்கும்படி பூத்து மலர்ந்திருகின்ற பூவே! (எ-று) 25

சோற்றுப் பொதியைச் சுமந்தே திரிந்தலைந்தே
ஆற்றும ணின்றுகளைத் தழுதேன் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! சோற்றுப்பொதியான இந்தச் சரீரத்தைச் சுமந்து திரிந்து அலைந்து பொறுக்காமல் நின்று களைத்துக் களைத்து அழுதேன். (எ-று) 26

காற்றுத் துருத்திதனைக் கல்லா யணைந்திருக்கச்
சூத்திரமாய் நின்றாய் சுழியே பராபரமே,

(பொ-ரை) பராபரப்பொருளே! காற்றுத்துருத்தியான சரீரம் கல்போன்றதென்று நான் அதைச்சேர்ந்திருக்க அதில் நீ சூஸ்திரமாயிருந்தாய். (எ-று) 27

கோலத் திருவடிவு கோதையர்க ளாசையினால்
ஆலைக் கரும்புபோலானேன் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! பெண்களுடைய ஆசையினால் அழகிய என்னுடைய சொரூபமானது ஆலைவாய்க் கரும்புபோலாயிற்று. (அதினால் நான் மெலிவடைந்தேன்.) (எ-று) 28

கேளாயோ வென்கவலை கேட்டிரங்கி யடிமைதனை
யாளாயோ வையாபா லானேன் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! நீ என்னுடைய துன்பத்தைக் கேட்கமாட்டாயோ, அவ்விதம் கேட்டு மனமிரங்கி அடிமையாகிய என்னை ஆண்டருளமாட்டாயோ, நானோ உன் பாற்பட்டவனேனன்றோ? (எ-று) 29

எத்தனைதான் குற்ற மெதிர்த்தடிமை செய்தாலும்
அத்தனையு நீபொறுப்ப தழகே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! நான் எவ்வளவு குற்றங்களைச் செய்தாலும் அவ்வளவு குற்றங்களையும் நீ பொறுத்தாள்வது அழகேயாகும் . (எ-று) 30

அல்லல் வினையா லறிவுகெட்ட வான்மாவாய்
நெல்லும் பதருமென நின்றேன் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! நான் துன்பம் விளைவிக்கின்ற நல்வினை, தீவினைகளினால் அறிவின் கேட்டையடைந்த ஆன்மாவாய் நெல்லும், பதரும்போல் நிலைகெட்டு இருந்தேன். (எ-று) 31

சொல்லரிய ஞானச் சுடரே யொருவார்த்தைச்
செல்வம் பொழிந்திடநீ செப்பாய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! சொல்லுவதற்கு அருமையான ஞானதேஜஸே! ஒரு வார்த்தையாலான உபதேசத்தை நீ செல்வம் செழிக்கும்படி திருவருள் செய்வாய். (எ-று) 32

நித்த முனைத்தொழா நிர்மூட னாயிருக்கும்
பித்தனா யேன்காண் பிறந்தேன் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! அனுதினமும் உன்னை வணங்காத நிர் மூடனாயிருக்கும் பித்துக்கொண்டவனாய் நான் ஏன் பிறந்தேன்? (எ-று) 33

உற்றார்க ளாலு முறவின் முறை யோராலும்
பெற்றார்க ளாலு முனைப் பிரிந்தேன் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! சுற்றத்தார்களாலும், உறவின் முறையோர்களாலும், என்னைப் பெற்றவர்களாலும் உன்னைப் பிரிந்தேன். (எ-று) 34

ஏழை முகம்பார்த் தெளியேனை யெப்பொழுதும்
ஆழாம லாண்டருளென் னழகே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! அழகு சொரூபமே! நீ ஏழையாகிய என்னுடைய முகத்தைப்பார்த்து அடியேனை எக்காலத்திலும் தீவினையில் அமிழ்ந்தாமல் ஆண்டருளவேண்டும். (எ-று) 35

பாவவுடலெடுத்துப் பாதகனா யான்பிறந்துள்
ளாவி கெடுவதுனக் கழகே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! பாவமாகிய சரீரமெடுத்து நான் பாவியாய் என்னுடைய உயிர் கேட்டையடைவது உனக்கு அழகாகுமோ? (எ-று) 36

வாராயோ வென்னிடத்தில் வந்தொருக்கா லென்றன்முகம்
பாராயோ சற்றே பகராய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! நீ என்னிடத்தில் எழுந்தருளி வரமாட்டாயோ? அவ்விதம் வந்து ஒருதரமாவது என்னுடைய முகத்தைக் கொஞ்சமும் பார்க்கமாட்டாயோ? அதை நீயே சொல்லுவாய்.

பார்க்கப் பலவிதமாய்ப் பல்லுயிருக் குள்ளிருந்தும்
ஆர்க்குந் தெரியாம லானாய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! பார்ப்பதற்குப் பலவிதமாகப் பல ஆன்மாக்களுள்ளும் வியாபித்திருந்தும் அவ்விஷயம் யாவருக்குமே தெரியாதபடியானாய். (எ-று) 38

ஆனாலும் பொல்லா தரும்பாவி யாகவுடல்
ஏனோ வெடுத்தேனோ னெந்தாய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! என்னுடைய தந்தையே! எப்படியானாலும் பொல்லாத கொடும்பாவியாக நான் ஏனோ இந்தச் சரீரத்தை எடுத்தேன்? (எ-று) 39

கர்ப்பூர தீபக்கன லொளிபோற் காட்சிதர
முப்பாழும் பாழாய் முடித்தாள் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! கர்ப்பூரத்திலுண்டான ஒளியைப் போல் எனக்கு உன்னுடைய திருக்காட்சியை அருளிச்செய்ய முப்பாழையும் பாழாகவே செய்து ஆண்டருளவேண்டும். (எ-று) 40

கரும்பே நவரசமே கடலமுதே கண்மணிக்குள்
அரும்பொருளாய் நின்ற வழகே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! கரும்பே! நவரசமே! கடலிற் றோன்றிய அமிர்தமே! என்னுடைய கண்ணின் மணிக்குள் அருமையான பொருளாய் நிறைந்திருந்த அழகே! (எ-று) 41

ஏழை யடியேனை யெப்படியுங் கைபிடித்து
ஆளா திருப்பதுனக்கழகோ பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! ஏழையாகிய அடியேனை என்னை எந்த விதத்திலாவது கைபிடித்து என்னை ஆண்டருள் செய்யாதிருப்பது உனக்கு அழகாகுமோ? (எ-று) 42

ஆளாயோ வையா வடியேன் பிதற்றுதலைக்
கேளாயோ வென்றன் கெதியே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! ஐயனே! அடியேனுடையகதியே! என்னை ஆண்டருள் செய்யாயோ? தவிர, நான் பிதற்றுவதைக் கேட்கவு மாட்டாயோ? (எ-று) 43

ஊனாகி யுள்ளுயிரி லொட்டாத வக்கருவாய்த்
தானாகி நின்ற தனுவே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! ஊனாகியும், உள்ளேயிருக்கின்ற உயிரில் ஒட்டாத அந்தக் கருவாகியும் தானாகியுமிருந்த தனுவே!(எ-று)

பொன்னான் மயக்கெடுத்து புத்திகெட்டு நானெனவே
பன்னாளு நின்றாற் பலனே பராபரமே.

(பொ-ரை)பராபரப்பொருளே! பொன்முதலிய திரவியங்களினால் மயக்கத்தையடைந்து புத்திகெட்டு நானென்ற அகங்காரத்தினால் பலகாலமும் நின்றால் என்ன பலன்? (எ-று) 45

இல்லல்லா கூவென் றெனைமறந்து கொண்டெனையே
சொல்லவருண் மெய்ஞ்ஞானச் சுடரே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! என்னை நான் மறந்து உன்னை இல்லல்லாகூவென்று சொல்லுவதற்கு உண்மைஞானச் சுடரே! தேவரீர் திருவருள் செய்யவேண்டும் (எ-று) 46

ஐயோ வடிமைதனக் காரிருந்து மென்னபலன்
கையாற் கவிழ்த்தணைக்கக் காணேன் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! அந்தோ! அடியேனுக்கு யாரிருந்தாலும் என்னபலன்? கையினாற்கவிழ்த்து அணைக்க வழியைக் காணகிலேன். (எ-று) 47

ஆனாலு மேழை யடியேனுக் காதரவாய்த்
தானா யிரங்கியரு ளாராய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! நான் எப்படிப்பட்டவனானாலும் ஏழையாகிய அடியேனுக்கு ஆசைப்பட்டவனாய் நீ தானே மனமிரங்கித் திருவருள் செய்யவேண்டும். (எ-று) 48

தூங்கி யிருந்து தொழுவோர் முகம்பார்க்கும்
வேங்கைப் புலியாக்கு விப்பாய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! தூங்கிக்கொண்டிருந்து தொழுபவர்களுடைய முகத்தைப்பார்க்கின்ற வேங்கைப் புலியாகச் செய்வாய். (எ-று) 49

கண்ணே கருத்தேயென் கண்மணியே கண்ணிறைந்த
விண்ணடங்கா வெட்ட வெளியே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! கண்ணே! என்னுடைய கருத்தே! என்னுடைய கண்மணியே! என்னுடைய கண்ணுக்குள் நிறைந்திருந்த ஆகாயத்திற்கடங்காத வெட்டவெளியே! (எ-று) 50

காசாசை கொண்டு கலங்கியே கெட்டலைந்த
தோஷியாய் நின்றேன் துணையே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! பணத்தில் ஆசைகொண்ட மனங் கலங்கிக் கெட்டலைந்த தோஷியாக நின்றேன். (எ-று) 51

ஐயோ வெனதுதுய ராரிடத்திற் சொல்லிநின்று
கையெடுக்கப் போறேனென் கண்ணே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! என்னுடைய கண்ணே! என்னுடைய துன்பத்தை யாரிடத்தில் சொல்லிக் கைகுவிக்கப் போகிறேன்?

என்னதான் செய்திடுவே னென் விதியைச் சொல்லியழ
வுன்னையன்றி வேறெனக்கு முண்டோ பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! நான் என்னசெய்வேன்? என்னுடைய விதியைச் சொல்லி அழுவதற்கு உன்னையன்றி யாரிருக்கின்றார்கள்? (எ-று) 53

முக்கண் விழியொளியே முத்திதரு முத்தமனே
அக்கண் டிறந்தோர்க் கறிவே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! மூன்று கண்களின் தேஜஸே! மோட்சங்கொடுக்கின்ற உத்தமனே! அந்த மூன்றாவதான ஞானக்கண்ணைத் திறந்தவர்களுக்கு அறிவே! (எ-று) 54

முப்பாழும் பாழாகி முத்திபெற் றிருக்கவெனைக்
கைப்பிடிப்ப தெப்போ தென் கண்ணே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! என்னுடைய கண்ணே! மூன்று பாழ்களும் பாழாய் மோட்சம் பெற்றிருக்க என்னைக் கைப்பிடிப்பது எப்போதோ? (எ-று) 55

உல்லாச மாக வொளிவு பரந்திடவுன்
செல்வம் பொழிந்திடவே செப்பாய் பராபரமே

(பொ-ரை) பராபரப்பொருளே! மனோவுல்லாசமாக தேஜஸ் பரவ உன்னுடைய செல்வம் பொழியும்படி சொல்லுவாய். (எ-று)

மாச்சரியஞ் செய்யு மதமொடுங்கி முத்திபெறக்
காட்சி தருவதெப்போ கண்ணே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! கண்ணே! மாச்சரியஞ்செய்கின்ற மதமானது ஒடுங்கி மோட்சத்தையடையக் காட்சிகொடுப்பது எப்பொழுது? (எ-று) 57

சண்டாள னென்றென்னைச் சகலருரைபிட்டாலுங்
கொண்டணைப்ப துன்பாரங் குருவே பராபரமே.

(பொரை) பராபரப்பொருளே! குருவே! என்னைப் பலரும் சண்டாளனென்று சொன்னபோதிலும் என்னைக் கொண்டணைப்பது உன்னுடைய பாரமாகும். (எ-று) 58

மோத்திதரு மெய்ஞ்ஞான முச்சுடரைக் காணுமற்
செத்திறந்து போனலென் செய்வேன் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! மோட்சத்தைக் கொடுக்கின்ற உண்மைஞானம் விளைகின்ற முச்சுடரைக் காணுதபடி இறந்துபோனல் என்ன செய்வேன்? (எ-று) 59

தன்னை யறிந்துணைத் தயையா யொருவார்த்தை
இன்னபடி யென்றே யியம்பாய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! தன்னைத்தான் அறிந்து பிறகு தலைவனையுணரத் தயவுடனே ஒரு வார்த்தையை இன்னபடியென்று சொல்லுவாய். (எ-று) 60

களியேகண் டுன்னுடைய கைப்பிடிப்போ மென்றுசற்றே
எளியேன் முகம்பார்த் திரங்காய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! களிப்பையே பார்த்து உன்னுடைய கையைப் பிடிப்போமென்று கொஞ்சமாவது ஏழையாகிய என்னுடைய முகத்தைப் பார்த்து இரங்காய். (எ-று) 61

பாசவினை போக்கிப் பலவினையைப் பாழாக்கி
ஆசைவைப்போர் தங்க ளருளே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! பாசமாகிய நல்வினை, தீவினைகளைப்போக்கி பல தொழில்களையும் பாழ்படுத்தி உன்மேல் ஆசை வைப்பவர்களுடைய அருளே! (எ-று) 62

ஆளவரு வோமென் றன்பா யொருவார்த்தை
ஏழை முகம்பார்த் தியம்பாய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! நாம் உன்னை ஆண்டருள் செய்வதற்கு வருவோமென்று அன்புடனே ஒரு வார்த்தையை இந்த ஏழையின் முகத்தைப்பார்த்துச் சொல்லாய். (எ-று) 63

நிலைநாட்டுங் காய நிசமென்று நிச்சயித்த
புலையாட்ட லென்று தள்ளப் போமோ பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! உண்மை நிலையை நாட்டுகின்ற சரீரமானது உண்மையென்று நிச்சயித்த புலையாட்டல் என்றைக்குத் தள்ளப்போகுமோ? (எ-று) 64

பார்க்கப் பலவிதமாய் பல சமயமாகவொரு
வாக்கை வெளிப்படுத்தி வைப்பாய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! பார்ப்பதற்குப் பலவிதமாகவும், பல சமயங்களாகவும் ஒருவாக்கை எனக்கு வெளிப்படுத்தி வைக்க வேண்டும். (எ-று) 65

ஆனு லெளியேனுக் காதரவே யில்லாமற்
போனு லுனக்கழகோ புகலாய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! ஆனால் அடியவனான எனக்கு ஆதரவே யில்லாமற்போனால் உனக்கு அழகோ? அதைச்சொல்லாய்.

நீச்சாய்ப் பெருகிவா நிரம்புமா னந்தவெள்ளம்
பாய்ச்சாயோ வையா பகராய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! ஐயா! நீச்சாகிப் பெருகிவருவதற்கு நிறைகின்ற ஆனந்தமென்னும் வெள்ளத்தைப் பாய்ச்சாயோ? அதைப் பகரவேண்டும். (எ-று) 67

எத்தனையோ கெஞ்சு மெளியேன் றனக்குதவி
உற்று ருனைத்தவிர வுண்டோ பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! எத்தனையோ கெஞ்சுகின்ற ஏழையாகிய எனக்கு உதவி செய்கின்ற சுற்றத்தார் உன்னையன்றி வேறொருவருண்டோ? (எ-று) 68

கன்ன மிடுங்கருவி கரணமதைச் சுட்டே
தன்னுக்குட் டானுந் தனுவே பாரபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! கன்னமிடுகின்ற கருவிகளையும், கரணங்களையும் சுட்டொழித்தவர்களுக்குள் தானுயிருக்கின்ற தனுவே!

காயாமற் காய்த்துக் கனிந்து சொரிவதற்கு
மாயமாய்ப் பூத்த மலரே பாரபரமே.

(பொ-ரை) பராபர்ப்பொருளே! காயாமற் காய்த்துக் கனிந்து சொரிவதற்கு மாயமாய்ப் பூத்த மலரே! (எ-று) 70

உயிருக் குயிரான வுட்கருவுக் குள்ளமைவே
தயையா யெனக்குதவி தந்தாள் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! உயிருக்கு உயிரான உட்கருவுக் குள்ளிருக்கின்ற அமைவே! என்மேல் தயவுவைத்து ஆளவேண்டும்.

அறிவை யறிவோருக் கானந்த வெள்ளமதாய்க்
கரையறவே பொங்குங் கடலே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! உண்மையறிவை உணர்பவர்களுக்கு ஆநந்த வெள்ளமாய்க் கரைகடந்து பொங்குகின்ற கடலே! (எ-று)

மறைப்பொருளைக் காணு மடையனிவ னென்றியம்பிச்
சிரிப்பார் சிரிக்கிலென்ன செய்வேன் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! வேதப்பொருளைக் காணுதமடையன் இவன் என்று சொல்லிச் சிரிப்பவர்கள் சிரிக்கின் என்னசெய்வேன்? (எ-று) 73

குறிவிளக்குங் குருவடியைக் கொள்கையுடன் போற்றுமல்
அறிவுமயங்குகின்றேனையா பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! ஐயனே! குறியை விளக்குகின்ற குருவின் திருவடியைக் கொள்கையுடன் துதிசெய்யாமல் என்னுடைய அறிவு மயங்குகின்றேன். (எ-று) 74

வல்லாரை கெஞ்சி வலியாரைக் கால்பிடித்திட்
டில்லாரை நம்பி யிருந்தேன் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! வலிவுடையவர்களைக் கெஞ்சி வலியாரைக் கால்பிடித்து இல்லாதவர்களை நம்பியிருந்தேன். (எ-று)

சொல்லும் பதர்தூற்றிச் சூத்திரத்தைப் பாராமற்
கல்லும்நெல்லும் போலக் கலந்தேன் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! சொல்லுகின்ற பதரைத் தூற்றி சூஸ்திரமாகிய பொருளைப்பார்க்காமல் கல்லையும், நெல்லையும்போலக் கலந்திருந்தேன். (எ-று) 76

செகமுழுதுஞ் சுற்றியுமுன் சீர்பாதங் காணமற்
றிகைத்தழுதே னீயுந் தெரிவாய் பராபரமே.

(பொ-ரை). பராபரப்பொருளே! பதினன்கு லோகங்களையும் சுற்றிவந்தும் உன்னுடைய சீர்த்த திருவடிகளைக் காணமல் நான் வெருண்டு அழுதேன், அது உனக்குந்தெரியும். (எ-று) 77

கள்ளக் கருத்துகளைக் கட்டோ டறுத்தவருக்
குள்ளிருக்கு மெய்ஞ்ஞான வொளியே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! கள்ள எண்ணங்களை அடியோடு ஒழித்தவர்களுக்கு உள்ளே எழுந்தருளியிருக்கின்ற உண்மை ஞான தேஜஸே! (எ-று). 78

கும்பிக் கிரைவிரும்பிக் கொடுப்பார் தமைத்தேடிச்
சம்பித் திரிந்தே சலித்தேன் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! வயிற்றிற்கு ஆகாரந்தேடி கொடுப்பவர்களைத் தேடித் தேடித்திரிந்து மனஞ்சலித்தேன். (எ-று)

காண்கதா வாசை கடித்தாலென் கான்முகமும்
வீங்காதோ வையா விதியே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! காணுகின்ற கதாவாசை கடித்தால் என்னுடைய காலும் முகமும் வீங்கமாட்டாதோ, ஐயனே! இது வென்ன விதியே. (எ-று) 80

தூங்காமற் றூங்கித் தொழுதிருக்க வென்னுடைய
ஆங்கார மெல்லா மகற்றாய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! தூங்காமல் தூங்கி நமஸ்காரஞ் செய்து கொண்டிருக்க என்னுடைய ஆங்காரங்களையெல்லாம் போக்க வேண்டும். (எ-று) 81

தேனமிர்த மூறத் திவ்யமது ரஞ்சொரியத்
தானு யொருவார்த்தை தாராய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! தேன் அமிர்தமானது ஊறவும், திவ்வியமான மதுரம் சிந்தவும் தானுகவே ஒரு வார்த்தையை அருள வேண்டும். (எ-று) 82

சாத்திரங்க ளோதுஞ் சதுர்மறையோர்க் கெட்டாத
சூத்திரமாய் நின்ற சுழியே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! சாஸ்திரங்களை யெல்லாம் நன்ருய் ஓதுகின்ற பிராமணர்களுக்கு எட்டாத சூஸ்திரப்பொருளாக நின்ற சுழியே. (எ-று) 83

வேற்றொருவர் காணுத வேதாந்தத் துட்பொருளைப்
பார்த்தோர்க ளெய்தும் பலனே பராபரமே

(பொ-ரை) பராபரப்பொருளே! மற்றொருவராலும் உணரப் படாத வேதாந்தத்தில் உணரப்படும் ரகசியப்பொருளை உணர்ந்தவர் களால் அடையப்படும் லாபமே! (எ-று) 84

சாதி சனத்துடனே சார்ந்திருந்து பட்டதுயர்
போதும்போ தும்போதும் போதும் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! சுற்றத்தார்களுடன் சேர்ந்திரு ந்து அடைந்த துன்பம் எனக்குப் போதுமானது. (எ-று) 85

உற்றாரை நம்பியிருந் தொருபலனுங் காணமற்
செத்தாலென்ன துக்கந்தான் சின்னம் பராபரமே.

(பொ-ரை) பராபரபொருளே! சுற்றத்தாரை நம்பியிருந்து ஒரு லாபத்தையும் காணமல் இறந்தால் எனக்கு அதுவே ஒரு சின்னமாகும். (எ-று) 86

செல்லு முறையறிந்து சித்திவழி காணமற்
கல்லுமரம் போலானேன் கண்ணே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! போகும் முறைமையை உணர்ந்து கைகூடுகின்ற மார்க்கத்தைக் காணமல் கல்லையும், மரத்தையும் போல் ஆனேன். (எ-று) 87

ஓகோ வுனையறிந் தொருபலனுங் காணமற்
போகாமற் காத்தருளென் புனையே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே!என்னுடையகண் போன்றவனே! அந்தோ! உன்னை உணர்ந்தும் ஒரு பலனையும் காணமல் போய்விடாமல் என்னைக்காத்து ரட்சிக்கவேண்டும். (எ-று) 88

உன்னையறிவதற்கோ வுடலெடுத்தே னென்றென்னைச்
சின்னஞ்சொல் வார்கட்கென் செய்வேன் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! உன்னை உணர்வதற்குத் தானே சரீரத்தையெடுத்தேன் என்று என்னை எளனஞ் சொல்லுவார்களுக்கு நான் என்ன சொல்லுவேன். (எ-று) 89

தெரியாத வின்பத் தெளிவா யருண்மயமாய்
பரிபூரண முடனே பாராய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! யாவருக்குத் தெரியாத ஆநந்தத்தின் தெளிவாகவும், திருவருள் மயமாகவும் இருக்கின்ற பரிபூரணத்தால் என்னைச்சற்று பார்க்கவேண்டும். (எ-று) 90

ஆச்சி தனைத்தேடி யாசைவைத் தலையாமற்
பூச்சியா யேனே பிறந்தேன் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! ஆச்சியைத்தேடி அவள் மேல் ஆசையைவைத்து அலையாதபடி பூச்சியாக ஏன் பிறந்தேனே? (எ-று)

காசை விரும்பிக் கலங்கிநின் றன்பாத
ஆசைவிரும்பா தலைந்தேன் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! பணத்தில் ஆசைவைத்து அதனால் மனங்கலங்கி யிருந்து உன்னுடைய திருவடிகளில் ஆசையை வைக்காமல் அலைந்தேன். (எ-று) 92

சாகாமற் செத்துதயச் சச்சிதா னந்தமயப்
பாகமா யாகமுகம் பகராய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! நான் சாவாமலும் அப்படிசெத்தும் உதயமாகின்ற சத்துச் சித்தாநந்த மயமாகவும் ஆக தேவரீர் திருமுகம் பார்த்தருளவேண்டும். (எ-று) 93

வாராயோ வையா வந்திரங்கிக் கொண்டணைக்கப்
பாராயோ சற்றே பகராய் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! வரமாட்டாயோ! அங்ஙனம் வந்து மனங்கருணைகொண்டு என்னை ஆதரிக்க யோசனை செய்யாயோ இவ்விஷயத்தை எனக்குக் கொஞ்சந்தயை செய்யவேண்டும். (எ-று)

ஆசைவலைப் பாசநெறி யத்தனையுங் கட்டறுத்து
வாசிதனி லேற்றியெனை வைத்தாள் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! ஆசையாகிய வலையென்னும் பாசத்தை விளைவிக்கும் வழிகளையெல்லாம் கட்டறுத்து என்னைச் சரமென்னுங் குதிரையிலேற்றி ஆண்டருளவேண்டும். (எ-று) 95

வேஷந் தனைப்போட்டு வேதாந்த சாத்திரத்தைக்
காசுபணம் பறிக்கக் கற்றேன் பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! வேஷத்தைத்தரித்து வேதாந்த சாஸ்திரங்களை யெல்லாம் காசு சம்பாதிக்கவே கற்றுக்கொண்டேன்.

செய்ததெல்லாங் குற்றஞ் சிறியேன் மனமிரங்கிக்
கைதூக்கிக் கொண்டருளென் கண்ணே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! என்னுடைய கண்ணே! நான் செய்தவைகளெல்லாம் குற்றமாம், ஆகையால் அடியேனுக்கு மனமிரங்கி என்னைக் கைதூக்கி ஆதரித்தருள்வாய். (எ-று) 97

மாளா மயக்கறுத்து மனக்கறையைத் தான்கழுவி
ஆளாக்கிக் கொள்வாயென் னையா பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! ஒழியாத மயக்கத்தை யொழித்து மனத்தின் களங்கத்தை நீக்கி என்னை உனக்கு அடிமையாக்கிக் கொள்ளுவாய். (எ-று) 98

நாட்டமங்கு மிங்கிருக்க நாதாந்த முத்திநிலை
காட்டா யணைந்தருளென் கண்ணே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! என்னுடைய கண்ணே! பார்வையானது அங்கும் இங்குமாக விருக்க, நாதாந்தத்தின் மோட்சநிலையைக் காட்டமாட்டாய்; அப்படியானபோதிலும் என்னைச் சேர்ந்தருளவேண்டும். (எ-று) 99

சிந்தை தனைத்தெளிந்து சித்திமுத்தி பெற்றுயர்ந்த
உன்றன் குணங்குடியார்க் குயிரே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! மனத்தைத்தெளிந்து சித்தியையும், முத்தியையும் பெற்று உயர்வையடைந்த உன்னுடைய குணங்குடியார்க்கு உயிரே. (எ-று) 100

பராபரக்கண்ணி - முற்றுப்பெற்றது.

ஆ பாடல் - 663

# நருமான் கண்ணி.

பார்க்கப் பலவிதமாய்ப் பல்லகண்டந் தன்னையடை
காக்குந் திருக்கருணைக் கண்ணே நருமானே.

(பொ-ரை) நருமானே! பார்ப்பதற்குப் பல வழியாகப்பல அகண்டங்களை அடைகாத்து (சிருஷ்டிக்கின்ற) கண்ணே! (எ-று) 1

ஈறுமுதலுமற்றே யியங்குகின்ற முச்சுடராய்க்
காரணிக்கும் பூரணமே கண்ணே நருமானே.

(பொ-ரை) நருமானே! என்னுடைய கண்ணே! அந்தமும், ஆதியுமற்று சஞ்சரிக்கின்ற மூன்று சுடராய்க் காணப்படுகின்ற பூரணவஸ்துவே! (எ-று) 2

பாணிக்க வொண்ணாப் பதம்பெறுதற் கென்சிரசைக்
காணிக்கை வைத்தேனென் கண்ணே நருமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! நருமானே! அளவிடுதற்கு முடியாத பதவியைப் பெறுவதற்பொருட்டு என்னுடைய சிரசை உனக்குக் காணிக்கையாக வைத்தேன். (எ-று) 3

பொய்யடிமை யாயினுமுன் பொன்னடிக்கா ளாக்கியெனைக்
கையைக் கொடுத்தாளத்தாள் கண்ணே நருமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! நருமானே! நான் தேவரீருக்குப் பொய்யடிமைப் பட்டவனானாலும் உன்னுடைய பொன்னைப் போலும் திருவடிகளுக்கு அடிமைப்படுத்தி என்னைக் கைகொடுத்து ஆளவேண்டும்; (எ-று) 4

பெண்டுபிள்ளை யென்றே பிதற்றுதல்பொய் யல்லாமற்
கண்டபல னொன்றுமில்லை கண்ணே நருமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! நருமானே! பெண்டு, பிள்ளைகளென்று பிதற்றுவது பொய்யே யல்லாமல் அவர்களால் அடைந்த பலன் ஒன்றுமில்லை. (எ-று) 5

பேதவித்தே னுன்னடிமை பேதகமில் லாமலுனைக்
காதலித்தே னண்டருள்செய் கண்ணே நருமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! உன்னுடைய அடிமையாகிய நான் பேதகங்கொண்டேன். ஆனாலும் பிறகு அப்பேதமுண்டாகாதபடி உன்னை விரும்பினேன். ஆகையால் என்னை தேவரீர் ஆண்டருளவேண்டும். (எ-று) 6

ஏகப் பெருவெளியி லிருட்கடலிற் கம்பமற்ற
காகமது வானேனென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! ஒரே வஸ்துவான பெருவெளியின், இருட்கடலின் கலக்கமற்ற காகத்தைப்போலானேன்.

ஐயோ வுனதருளி லாசையற்ற பாவியென்னைக்
கையை நெகிழ்த்தாதருளென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! ஐயோ! உன்னுடைய திருவருளின்கண் ஆசைவைக்காத பாவியாகிய என்னைக் கைவிட்டுவிடாமல் திருவருள் செய்யவேண்டும். (எ-று) 8

போதமய மாகவெங்கும் பூரணித்த காரணத்தைக்
காதலித்து நின்றேனென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! போதமே வடிவாக எங்கும் நிறைந்திருக்கின்ற காரண வஸ்துவை அடைய நான் ஆசைப்பட்டிருந்தேன். (எ-று) 9

எல்லார்க் கமுதளிக்கு மியல்புபோற் றேரைகட்கும்
கல்லுள் ளமுதளிக்குங் கண்ணே றகுமானே.

(பொ-ரை) றகுமானே! யாவருக்கும் அமுதுகொடுக்குந் தன்மையைப்போல தேரைகளுக்கும் அவைகளிருக்கின்ற கல்லுக்குள் அமுதமளிக்கின்ற கண்ணே! (எ-று) 10

சொல்லுட் பதர்நீக்கிச் சும்மா விருந்தருளைக்
கல்லாருங் கல்லேயென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) றகுமானே! சொல்லுக்குள் ளிருக்கின்ற பதர்களை நீக்கிச் சும்மாயிருந்து திருவருளைக் கல்லாதவர்களுக்குக் கல்லே! என்னுடைய கண்ணே! (எ-று)

சொல்லுட்பதர் என்றது-அற்பவசனங்களை 11

வெட்டவெறும் பாவியென்ன வீணிலெனைத் தள்ளாமற்
கட்டியணைத் தாண்டருள்செய் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! என்னை வெறும் பாவியென்றெண்ணி வீண் காரியங்களில் தள்ளாமல் கட்டியணைத்து ஆண்டருளவேண்டும். (எ-று) 12

யானாத மேறு மரசர்பெரு வாழ்வுமுதற்
கானற் சலமன்றோ கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! யானை, தேர் முதலியவைகளில் ஏறுகின்ற ராஜாக்களுடைய பெரியவாழ்வு முதலியயாவும் கானற்சலம்போல் காணப்படுவன வல்லவோ? (எ-று) 13

எவருடைமை யும்மெடுத்திட் டென்னுடைமை யென்பவர்க்குக்
கவறில் வருந்துணையே கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! யாவருடைமைகளையும் எடுத்து என் உடைமை என்று சொல்பவர்களுக்குக் கவறில் வருகின்ற துணையே! (எ-று) 14

ஊனெடுத்த நாண்முதலா வுபயோக மற்றயான்
கானினில வானேனென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! சரீரம் எடுத்த நாள் முதலாக உபயோகமில்லாதவனாயிருக்கின்ற நான் காட்டில் பிரகாசிக்கின்ற சந்திரனைப்போலானேன். (எ-று) 15

வாசிதனி லேறி மனமகிழ்ந்து வாழாமற்
காசாசை கொண்டேனென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! சரமென்கிற குதிரையின்மேல் ஏறி மனம் சந்தோஷித்து வாழாமல் பணத்தாசை கொண்டவனானேன். (எ-று) 16

வீடோவென் றேகம் விழுமிடந்தான் வீதிகளோ
காடோ செடியோவென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! என்னுடைய சரீரம் இறந்துபடும் இடமாயுள்ளது வீடோ? தெருக்களோ? காடோ? செடியோ? (எ-று) 17

பாகமுடன் வளர்த்த பாழுடலு நாய்க்கிரையோ
காகங் கழுக்கிரையோ கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! மிகவும் பக்குவமாக வளர்த்த பாழாகிய இந்தச் சரீரமானது நாய்க்கு இரையாகுமோ? அல்லது காகத்திற்கோ? கழுகுக்கோ? (எ-று) 18

ஏங்காம லங்குமிங்கு மேகாந்த மாகவுனைக்
காண்கவந்து பாங்கருள்செய் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! அவ்விடத்திலும், இவ்விடத்திலும் ஏங்காமல் ஏகாந்தமாகஉன்னைக் காண்பதற்கு எழுந்தருளிவந்து நற்குணமருளவேண்டும். (எ-று) 19

தொண்டுசெய்ய நின்ற துறவியர்க ளேயருளைக்
கண்டுகொள்ளக் கண்டாயென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! அடிமை செய்வதன் பொருட்டு இருந்த துறவியர்களே திருவருளைத் தெரிசிக்கச் செய்தாய். (எ-று) 20

அல்லும் பகலு மடிமைமனந் தேம்புதற்குக்
கல்லுங் கரைந்திடுமென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! அடியேனுடைய மனமானது இரவும் பகலுமாக தேம்புவதன்பொருட்டு கல்லுங் கரையும். (எ-று) 21

வேட்டை பெரிதென்றே வெறிநாயைக் கைப்பிடித்துக்
காட்டிற் புகலாமோ கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! வேட்டையே பெரிதென்று வெறிபிடித்த நாயைக் கைப்பிடித்து காட்டினுள் புகலாமோ? (எ-று) 22

அடைத்த மனக்காட்டை யாளுமைந்து கள்வரையுங்
கடத்த முடியவில்லை கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! சேர்ந்தமனமென்னுங் காட்டையாள்கின்ற பஞ்சபூதங்களையும் அழிக்கமுடியவில்லை.

மடம்புகு நாய்போல மயங்குமென்னை யுன்னைவிடக்
கடத்துவாரைக் காணேனென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! மடத்திற் புகுந்த நாயைப்போல மயங்குகின்ற என்னை உன்னைவிட நடத்துபவரைக் காணேன். 24

வையம்பொய் யென்றே மறையோல மிட்டதெல்லாங்
கையுமெய்யு மாச்சுதென்றன் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! வேதமானது உலகம் பொய்யென்று முறையிடுவது உண்மையாச்சுது. (எ-று) 25

சொல்லறுமெய்ஞ் ஞானச் சுடரொளிகண் டாலென்மனக்
கல்லுங் கரைந்திடுமென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! சொல்லுதலற்ற உண்மை ஞானச்சுடரொளியைக் கண்டால் என்னுடைய மனமாகிய கல்லானது கரையும். (எ-று) 26

மாதாபிதாவு மென்னை மயக்கி மயக்கி யுன்னைக்
காதலிக்க வொட்டாரென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! மாதா பிதாக்கள் என்னைப் பலகால் மயக்கி உன்னை விரும்பவொட்டார்கள். (எ-று) 27

வெற்றிதரு மெய்ப்பொருளை வேதாந்தத் துட்கருவைக்
கற்றோர்க் கருள்புரியுங் கண்ணே றகுமானே.

(பொ-ரை) றகுமானே! ஜெயங்கொடுக்கின்ற உண்மைப்பொருளை, வேதாந்தத்துட்பொருளை, கற்றவர்களுக்கு அருள்செய்யுங் கண்ணே!

உடையா பரணமென வுன்னியுன்னிப் பாவிமனங்
கடையா விடலாமோ கண்ணே றகுமானே.

(பொ-ரை) என் கண்ணே! றகுமானே! உடை, ஆபரணம் என்று நினைந்து நினைந்து பாவியின் மனமானது கடைப்பட்டுவிடலாமோ?

ஓயாக் கவலையினா லுள்ளுடைந்து வாடுதற்கோ
காயமெடுத்தேனென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! ஒழியாத துன்பத்தினால் மனமிளகி வாடுவதற்கோ நான் சரீரம் எடுத்தேன். (எ-று) 30

நேசம்வைத்த துன்னடிமை நின்பதத்திற் கல்லாது
காசுதனக் கோவென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! உன்னுடைய அடிமையானவன் உன்னுடைய திருவடிகளுக்கு இஷ்டம் வைத்ததேயல்லாமல் காசுக்கன்று. (எ-று) 31

எண்ணாத வெண்ணமெல்லா மெண்ணி யெண்ணியுன்னடிமை
கண்ணிக்குட் கிட்டானேன் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! எண்ணாத எண்ணங்களையெல்லாம் எண்ணி எண்ணி உன்னுடைய அடிமையான நான் வலைக்குட்பட்டவனானேன் .(எ-று) 32

பொய்யெடுத்தா னென்று புறக்கணித்தா யாகிலெனைக்
கையணைப்பா ருண்டோவென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! பொய்யுடையவனென்று என்னைத் தள்ளிவிட்டால் வேறு யார் ஆதரிப்பவர் உளர்.

விண்ணாடர் காணா விரிகருணைச் செஞ்சுடரைக்
கண்குளிரத் தந்தருள்செய் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என் கண்ணே! றகுமானே! தேவர்களால் காணப்படாத விரிந்த கருணையையுடைய தேஜோமயத்தைக் கண்குளிரத்திருவருள் செய். (எ-று) 34

தங்குபே ரின்பமதைச் சார்ந்தகுரு நாதனுக்கே
கங்குல்பகற் றானறுமென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என் கண்ணே! றகுமானே! நிலைபெற்ற பேரின்பத்தையடைந்த ஞானாசிரியனுக்கு இரவுபகல் ஒழியும். (எ-று) 35

தூங்காமற் றூங்கித் தொழுது தொழு துன்னருளைக்
காண்க வெனக்கருள்செய் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என் கண்ணே! றகுமானே! தூங்காமல் தூங்கி வணங்கி உன்னுடைய திருவருளைக்காண எனக்கு அருளிச்செய். (எ-று)

இன்றுள்ளோர் நாளைக் கிருப்பதுபொய் யென்பதையான்
கண்டுகொண்டே னையாவென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என் கண்ணே! றகுமானே! இன்றைக்கு இருப்பவர்கள் நாளைக்கு இருப்பது பொய் என்று சொல்லுவதை நான் உணர்ந்து கொண்டேன். (எ-று) 37

பிற்றற் றுருத்திதனைப் பீக்குழியைச் சாக்கடையைக்
காத்தேன் வளர்த்தேனென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என் கண்ணே! றகுமானே! பீற்றற்றுருத்தியும், பீக்குழியுமான சரீரத்தை நான் காத்துக்கொண்டிருந்தேன். (எ-று) 38

போதத் தனம்படைத்த புல்லர்க் கிரும்பூச்சி
காதம் றதும்வருமோ கண்ணே றகுமானே.

(பொ-ரை) என் கண்ணே! றகுமானே! மாய்கையுள்ளவர்க்கு காதற்ற இரும்பூசியும் வருமோ? (எ-று) 39

பாடிப் படித்தறிந்தும் பற்றுர் பாசவலைக்
காடுகொண்டு போவாரென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என் கண்ணே! றகுமானே! பாடியும், படித்தறிந்தும், பாச நீங்காதவர்கள் சுடுகாட்டுக்குக் கொண்டுபோகப் படுவார். (எ-று)

நிறைந்தபரி பூரணமே நிர்க்குணமே நிர்மலமே
கருணைக் கடலேயென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என் கண்ணே! றகுமானே! பரிபூரணமே! குணரகிதமே! பரிசுத்தமே! கிருபைச் சமுத்திரமே! (எ-று) 41

பார்ப்பாயோ வென்றன்முகம் பாவியா காமலெனைக்
காப்பாயோ வையாவென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) ஐயா! என் கண்ணே! றகுமானே! என்னுடைய முகத்தைப் பார்ப்பாயோ? பாவியாகாமல் என்னைக் காப்பாற்றுவாயோ?

மெய்யெடுத்த நாண்முதலா மெய்பறியாப் பாவியெனைக்
கைவிடவும் வேண்டாமென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என் கண்ணே! றகுமானே! நான் சரீரமெடுத்த நாள் முதல் உண்மையை யறியாத பாவியாவேன். ஆயினும் என்னைக் கைவிடவேண்டாம். (எ-று) 43

சோற்றுப் பொதியைச் சுமந்தே யலைந்துசுழற்
காற்றுத் துரும்பானேன் கண்ணே றகுமானே.

(பொ-ரை) கண்ணே! றகுமானே! சோற்றுப்பொதியான சரீரத்தைச் சுமந்து சுழல்காற்றை ஒப்பானேன். (எ-று) 44

சேர்ந்தசுற்றந் தன்னைச் சிதறவிட்ட சிந்தையர்க்குக்
காந்த மலையேயென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என் கண்ணே! றகுமானே! கூடிய சுற்றத்தாரைச் சிதறவிட்டவர்களுக்குக் காந்தமலையே! (எ-று) 45

உலையி லிடுமெழுகி னொப்பாக வென்றனுள்ளம்
கலைதலது காரியமோ கண்ணே றகுமானே.

(பொ-ரை) கண்ணே! றகுமானே! உலையிலிட்ட மெழுகைப்போல என்னுடைய மனம் கலைவதும் உன்னுடைய காரியந்தானோ? (எ-று)

ஆவி தனைக்குரங்கா வாட்டுகின்ற வையறிவைக்
காவ லிடவருள்செய் கண்ணே றகுமானே.

(பொ-ரை) கண்ணே! றகுமானே! உயிரைக் குரங்காக வாட்டுகின்ற பஞ்சவறிவையும் காவலாக வைக்க அருள்செய்யவேண்டும்.

வேஷந் தனைப்போட்டு மெய்ம்மயக்கும் பொய்க்குருவாய்க்
காசுபணம்பறித்தேன் கண்ணே றகுமானே.

(பொ-ரை) கண்ணே! றகுமானே! நான் பொய்க்குருவின் வேஷம் போட்டுக் காசு பறித்தேன். (எ-று) 48

எட்டிப் பிடிக்கு மிதமறிந்தா லுன்பதத்தைக்
கட்டிப் பிடித்திடுவேன் கண்ணே றகுமானே.

(பொ-ரை) கண்ணே! றகுமானே! உன்னுடைய திருவடிகளை எட்டிப்பிடிக்கக் கூடிய உளவையறிந்தால் கட்டிப்பிடிப்பேன். (எ-று) 49

அழியா மனமழிய வாயுங்கலை யோர்கடமைக்
கவியுந் திருக்கருணைக் கண்ணே றகுமானே.

(பொ-ரை) அழியாதமனம் அடங்க ஆய்கின்ற சாஸ்திர வாதிகளைக் கவிகின்ற திருக்கருணையையுடைய கண்ணே! றகுமானே!

சித்திதரும் வேதாந்தச் செழுஞ்சுடரைச் சின்மயத்தைக்
கற்றவர்க்கு முத்திதருங் கண்ணே றகுமானே.

(பொ-ரை) றகுமானே! கைவல்லியப் படுத்துகின்ற வேதாந்தச் செழுஞ்சுடரை, ஞானமயத்தைக், கற்றவர்களுக்கு மோட்சங்கொடுக்குங் கண்ணே! (எ-று) 51

அருவி சொரியும்படிக் கம்பரத்தி லன்புவைத்தாற்
கருவி பிரியாதென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என் கண்ணே! றகுமானே! அருவிசிந்தும்படி அம்பரத்தின் கண் ஆசைவைத்தால் கருவி பிரியமாட்டாது; (எ-று) 52

மாராய வெள்ள மருங்கமிழ்ந்த நின்கருணைக்
காரார் மழைபொழியுங் கண்ணே றகுமானே.

(பொ-ரை) றகுமானே! மாறுதலில்லாத வெள்ளத்தின் சமீபத்திலமிழ்ந்த உன்னுடைய திருக்கருணை மழைபொழியுங் கண்ணே!

எண்படா தெண்ணமெல்லா மெண்ணியெண்ணி நெஞ்சமொரு
கண்படா தலங்குவதோ கண்ணே றகுமானே.

(பொ-ரை) கண்ணே! றகுமானே! எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி யெண்ணி என்னுடைய நெஞ்சம் கண்படாது அலங்குவதோ?

கோலங் குழியில்லாக் குருவடிதொ ழார்கண்மனங்
கால னிருப்பிடமோ கண்ணே றகுமானே.

(பொ-ரை) கண்ணே! றகுமானே! கோலமும் குழியுமில்லாத ஆசாரியனுடைய திருவடிகளை வணங்காதவர்களுடைய மனமானது காலனுடைய இருப்பிடமோ? (எ-று) 55

உள்ளுயிரி னுள்ளே யுறைந்தபரஞ் சோதிவரிற்
கள்ளமனந் துள்ளாதென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! உள்ளுயிரினுள் வாசஞ்செய்த பரஞ்சோதியானவன் வந்தால் கள்ளமனமானது துள்ளாது. (எ-று) 56

சேர்க்குந் திரவியமுஞ் சித்ரமணி மண்டபமுங்
காக்குந் துணையோவென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என் கண்ணே! றகுமானே! சேர்த்து வைக்கின்ற திரவியமும், சித்திரமிழைத்த மணிமண்டபமும் காக்கின்ற துணையோ.

பட்டுடையு மொப்பனையும் பாதகமு மென்னைவிட்டுக்
கட்டோ டொழிவதிலை கண்ணே றகுமானே.

(பொ-ரை) கண்ணே! றகுமானே! பட்டுவஸ்திரமும், பெண்சாதியும், பாவமும் என்னைவிட்டு முழுமையும் ஒழிவதில்லை. (எ-று) 58

எண்ணாத வெண்ணமெல்லா மெண்ணு திருக்குமனங்
கண்ணாடிக் குண்முகமாங் கண்ணே றகுமானே.

(பொ-ரை) கண்ணே! றகுமானே! எண்ணாத எண்ணங்களை யெல்லாம் எண்ணுமலிருக்கின்ற மனமானது கண்ணாடிக்குள் முகமாம்.

மண்டபமுந் தண்டிகையு மாளிகையுஞ் சாளரமுங்
கண்டு களிக்கவருள் கண்ணே றகுமானே.

(பொ-ரை) கண்ணே! நருமானே! மண்டபம், தண்டிகை, மாளிகை, சாளரம் இவைகளையெல்லாம் கண்டு கழிக்கும்படி அருள் செய். (எ-று) 60

மன்னுங் கருவி மவுனமணிப் பெட்டகத்தைக்
கன்னமிடப் போமோவென் கண்ணே நருமானே.

(பொ-ரை) என் கண்ணே! நருமானே! நிலைபெற்ற காரணமான மௌன மணப்பெட்டியை கன்னமிட்டுக் கொள்ளை கொள்ளலாகுமோ?

என்றுமன்னை சுற்றமுத லெற்குப்பழி காரரெனக்
கண்டறிந்து கொண்டேனென் கண்ணே நருமானே.

(பொ-ரை) என் கண்ணே! நருமானே! எக்காலமும் தாய் உறவினர் முதல் யாவரும் எனக்குப் பழிகாரர்களென்று கண்டுணர்ந்து கொண்டேன். (எ-று) 62

கொடிய மனத்துயரைக் கூடா திருப்பவர்க்குக்
கடுக முடுகிவருங் கண்ணே நருமானே.

(பொ-ரை) கொடிய மனத்துன்பத்தில் சேராமலிருப்பவர்களுக்கு விரைந்துவரும் கண்ணே! நருமானே! (எ-று) 63

வச்சு மதிமயக்கு மில்லார்க ளாலுடைதேங்
காய்ச்சிறட்டை யானேனென் கண்ணே நருமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! நருமானே! வசுதல், மனமயக்கம் முதலியவைக ளில்லாதவர்களாய் உடைக்கப்படும் தேங்காய் ஓடு ஆனேன். (எ-று) 64

விள்ளரிய வேதம் விளைவுதலை யுங்கடிந்து
கள்ளமனந் துள்ளுவதென் கண்ணே நருமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! நருமானே! சொல்லுதற்கரிய வேதம் கேட்டலையுங்கடிந்து திருட்டு மனமானது துள்ளுகிறது.

வேதக் கருவை விளைகருணைக் குஞ்சரத்தைக்
காதலித்தே னுதரித்தாள் கண்ணே நருமானே.

(பொ-ரை) கண்ணே! நருமானே! வேதத்தின் கருப்பொருளையும் விளைகின்ற கிருபைக்குஞ்சரத்தையும் விரும்பினேன், தேவரீர் ஆதரவு செய்து ஆண்டருளவேண்டும். (எ-று) 66

அரும்பே மலரேயென் னாசைதரும் வாசனையே
கரும்பே ரசமேயென் கண்ணே நருமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! நருமானே! அரும்பே! மலரே! எனக்கு ஆசையைக் கொடுக்கின்ற வாசனையே! கரும்பே! அதின் ரசமே! (எ-று) 67

பூரணமே வற்புதமே பொங்குகரு ணைக்கடலே
காரணமே யென்றனருட் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய அருட்கண்ணே! றகுமானே! பூரணப் பொருளே! ஆச்சரியமே! பொங்குகின்ற கிருபைக் கடலே! காரண வஸ்துவே! (எ-று) 68

ஓயாதோ வென்கவலை யுன்னருளா லென்கருவி
காயாதோ வையாவென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) ஐயனே! என்னுடைய கண்ணே! றகுமானே! என்னுடைய துன்பமானது ஓயாதோ? உன்னுடைய அருளினால் என் ஜென்மம் ஒழியாதோ? (எ-று) 69

ராஜாங்கம் வேண்டி ரதகஜங்க ளேறுதற்குக்
காசெங்குங் கேளேனென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! ராஜாங்கத்தை விரும்பி ரதகஜங்களில் ஏறுவதற்கு நான் காசு எங்கும் கேட்கமாட்டேன். (எ-று) 70

தந்தைதா யென்றே தயங்குகின்ற பாவிமனக்
கண்டிறக்க வந்தருள்செய் கண்ணே றகுமானே.

(பொ-ரை) கண்ணே! றகுமானே! தந்தை, தாய் என்று மயங்குகின்ற என்னுடைய மனமானது கண்திறக்கவந்து திருவருள் செய்.

அச்சமெமக் கில்லையென வைம்புலனும் பாழ்மனத்தைக்
கைச்சூறை யாட்டிவிடேன் கண்ணே றகுமானே.

(பொ-ரை)என்னுடைய கண்ணே! றகுமானே! எனக்கு அச்சமில்லையென்று ஐம்புலனுலான பாழ்மனத்தைக் கைச்சூறையாட்டிவிடு.

இனியவமிர் தம்பொங்கி யெங்குங்கரை தத்திவரக்
கனிவாய் திறந்தருள்செய் கண்ணே றகுமானே.

(பொ-ரை) கண்ணே! றகுமானே! இனிமையான அமிர்தமானது பொங்கி எவ்விடத்தும் ததும்பிவரக் கனிபோலும் வாயைத்திறந்து அருள்செய். (எ-று) 73

ஆணையிட்டே னாணையிட்டே னையனே யுன்னருளைக்
காண வெனக்கருள்செய் கண்ணே றகுமானே.

(பொ-ரை) ஐயனே! கண்ணே! றகுமானே! நான் இரண்டுமுறை ஆணைவைத்தேன். உன்னுடைய அருளைக்காண எனக்கு அருளிச்செய்.

அல்லும் பகலு மறிவில்லய மாவோர்க்குக்
கல்லும் பிளந்திடுமென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என் கண்ணே! றகுமானே! இரவும் பகலும் அறிவில் அடங்குபவர்களுக்கு கல்லும் பிளவுபடும். (எ-று) 75

புவியு மெழுவானும் பொன்னுலகும் பல்லுயிருங்
கவியுந் திருக்கருணைக் கண்ணே றகுமானே.

(பொ-ரை) றகுமானே! பூமியும், ஆகாயமும், பொன்னுலகமும், பல்லுயிரும் கவிகின்ற திருக்கருணைக் கண்ணே! (எ-று) 76

எண்ணரிய தாக விருந்திடுஞ் சூத்திரமோ
கண்ணிலொளி பாய்ந்ததுவோ கண்ணே றகுமானே.

(பொ-ரை) கண்ணே! றகுமானே! எண்ணுதற் கருமையாக இருக்குஞ் சூத்திரமோ, கண்ணில் ஒளிமாய்ந்ததுவோ? (எ-று) 77

உழையோ வழுக்கோவென் னுள்ளங்கழு வக்கழுவக்
கழுவாத் தொடக்கோவென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என் கண்ணே! றகுமானே! என்னுடைய மனமானது உழையோ? வழுக்கோ? கழுவக்கழுவக் கழுவாத்தொடக்கோ? (எ-று)

உற்ற கிளைத்திமுறையு முறவினை ரைத்திரையும்
கத்தரித்து விட்டருள்செய் கண்ணே றகுமானே.

(பொ-ரை) கண்ணே! றகுமானே! சுற்றத்தார் முதலிய யாவரையும் கத்தரித்துவிடவேண்டும். (எ-று) 79

நற்பவளக் கொம்பே நவமணிக்கு மற்புதமே
கைப்பொருட்கு மெய்ப்பொருளே கண்ணே றகுமானே.

(பொ-ரை) கண்ணே! றகுமானே! நல்ல பவளக்கொம்பே! நவமணிக்கும் அற்புதமே! கைப்பொருளுக்கும் மெய்ப்பொருளே! (எ-று)

ஒப்புரவு தப்பி யுணர்வற் றுனைக்கை விட்டுக்
கப்பரைகைக் கொண்டேனென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! ஒப்புரவில்லாமல் உணர்ச்சியற்று உன்னைக் கைவிட்டு கப்பரையைக் கைப்பற்றிக்கொண்டேன். (எ-று) 81

பசப்பிப் பணம்பறிக்கும் பாவிக் குருமுகத்தைக்
கசப்பாகக் கண்டேனென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! பசப்பிப் பணத்தைப் பறிக்கின்ற பாவியானவன் குருமுகத்தைக் கசப்பாகக்கண்டேன். (எ-று) 82

வேதியர்க்கு மாதவர்க்கு மெய்யடியார் கட்குமுனைக்
காதலிப்போ ருக்குமருள் கண்ணே றகுமானே.

(பொ-ரை) றகுமானே! வேதியர்க்கும், மகத்தாகிய தவசிரேஷ்டர்களுக்கும், உண்மையடியார்களுக்கும், உன்னை விரும்புகின்றவர்களுக்கும், அருள்செய்கின்ற கண்ணே! (எ-று) 83

வேரைவே ரோடறுத்து மெய்யடியார் கட்குழுனைக்
காரியத்திற் றாமதமென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) கண்ணே! றகுமானே! வேரோடறுத்து உண்மையடிமையாக்குவதற்கு என்னுடைய காரியத்தில் இவ்வளவு தாமதம்என்ன?

பழகப் பழகிவரும் பாக்கியத்தைப் பைமுதலைக்
களவு கொடுக்கேனென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! பழகி வருகின்ற முதலைக் களவுக்குக் கொடுத்தேன். (எ-று) 85

நாமாண்மை கண்முழுது நாசமாக் கார்தமக்கும்
காமவினை போமோவென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என் கண்ணே! றகுமானே! ஆண்மை முதலியவற்றைக் கெடுக்காதவர்களுக்கு காமவினையானது போகக் கூடியதோ?

அடிமை யுனதபய மாகா திருக்கினுமென்
கடைவழிக்குங் கட்டமுதே கண்ணே றகுமானே.

(பொ-ரை) கண்ணே! றகுமானே! அடியேனுன நான் உனக்கு அபயமாகாவிட்டாலும் கடைவழிக்குக் கட்டமுதே யாவாய். (எ-று)

வேதாந்த வேதமெல்லாம் விட்டேறி யேகடந்து
காதலித்து நின்றேனென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! வேதாந்த முதலியவைகளையெல்லாம் விட்டேறி உன்னை விரும்பினேன். (எ-று) 88

இனமுஞ் சனமுமென வெண்ணி யெண்ணி யுன்னடிமை
கனசழக்குப் பட்டேனென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என் கண்ணே! றகுமானே! சாதியென்றும் ஜனங்களென்றும் எண்ணி எண்ணி நான் வருத்தப்பட்டேன். (எ-று) 89

நவசூத்தி ரத்தைவிட்டு நன்னினைவெண் ணுதுமனங்
கவலைப் படுவதென்ன கண்ணே றகுமானே.

(பொ-ரை) கண்ணே! றகுமானே! நவசூஸ்திரத்தைவிட்டு நல்லநினைவை எண்ணுமல் மனங்கவலைப் படுவது என்ன? (எ-று) 90

மடிப்புங் கொலைகளவும் வஞ்சமுமென் னெஞ்சைவிட்டுக்
கடக்க நடப்பதில்லை கண்ணே றகுமானே.

(பொ-ரை) கண்ணே! றகுமானே! மடிப்பு, கொலை, களவு, வஞ்சம் முதலியவை என்னுடைய மனத்தைவிட்டு கடக்க நடப்பதில்லை.

பலவிடத்தைச் சுற்றிப் பரதவித்துப் பாவிமனங்
கலங்கி மலங்குவதென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) கண்ணே! றகுமானே! பல விடங்களைச்சுற்றிப் பரித பித்துப் பாவியின் மனமானது கலங்கி மயங்குவது என்ன?(எ-று) 92

உள்ளக் கருத்தா லுவந்துறவு கொள்ளாமற்
கள்ளமனந் துள்ளுவதென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) கண்ணே! றகுமானே! மனக்கருத்தால் விரும்பி உறவு கொள்ளாமல் கள்ளமனமானது துள்ளுவது என்? (எ-று) 93

மண்ணுமுதன் மற்ற மயக்கமறக் கல்லாரைக்
கண்ணெடுத்துப் பாரேனென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என் கண்ணே! றகுமானே! மண்ணாசை முதலிய மார்க் கம் ஒழியக் கல்லாதவர்களைக் கண்ணாற் பார்க்கமாட்டேன். (எ-று) 94

தேசிகனு னென்னுந் திருட்டுக்குருக் கள்சொல்லோர்
காசாய் மதியேனென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என் கண்ணே! றகுமானே! நானே குருவென்று சொல்லும் திருட்டுக் குருக்களின் சொல்லை நான் ஒரு காசாக மதிக்க மாட்டேன். (எ-று) 95

தன்னை யறிந்து தவம்புரியாத் தன்மையினுற்
கன்னெஞ்ச னுனேனென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! றகுமானே! தன்னைத்தான் உணர்ந்து தவஞ்செய்யாமையினுன் கன்னெஞ்ச முடையவனுனேன்.

மாடகூ டங்கண்மணி மண்டபமு மன்றுகளுங்
காடுகொள்ளக் கண்டேனென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என் கண்ணே! றகுமானே! மாடங்கள், கூடங்கள், மணிமண்டபங்கள், மன்றுகள் முதலியவைகளைக் காடு கொள்ளக் கண் டேன். (எ-று) 97

குரனெரிய வேகதறிக் கூப்பிட்டுங் காணுக்
கருவே குருவேயென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) என் கண்ணே! றகுமானே! நான் என்னுடைய குரலா னது நெறியக் கதறி கூப்பிட்டுங் காணுத காரணவஸ்துவே! குருவே!

மருளாத் தவத்தான் மறப்புநினைப் பற்றவர்க்குக்
கருணைக் குணங்குடியாங் கண்ணே றகுமானே.

(பொ-ரை) கண்ணே! றகுமானே! மயக்காத தவத்திஞல் மறப் பும், நினைப்பும் அற்றவர்களுக்குக் கருணைக் குணங்குடியாளனே?(எ-று)

உதிக்குமுணர் வன்றி யுணர்வோ டுணர்வொன்றிற்
கதிக்குங் குணங்குடியென் கண்ணே றகுமானே.

(பொ-ரை) றகுமானே! உண்டாகின்ற உணர்ச்சியல்லாமல் அறிவுடன் அறிவு சம்பந்தப்பட்டால் செழிக்கின்ற குணங்குடியில் வாழ்கின்ற என்னுடைய கண்ணே? (எ-று) 100

றகுமான்கண்ணி - முற்றுப்பெற்றது.

ஆ பாடல்-763.

# எக்காலக்கண்ணி.

முத்திதரும் வித்தை முனையில்வைத்துச் சீராட்டி
நித்த மறவாம னினைப்பதினி யெக்காலம்.

(பொ-ரை) மோட்சங்கொடுக்கின்ற காரணவஸ்துவை முன்னதாக வைத்துச் சீராட்டி அனுதினமும் மறவாமல் நினைப்பது இனி எந்தக்காலம்? (எ-று) 1

ஆதியின்மே லாசை யடர்ந்தெரித்த வக்கினியின்
சோதியினல் வெந்து சுகம்பெறுவ தெக்காலம்.

(பொ-ரை) முதற்பொருளின் மேல் ஆசைநெருங்கி எரித்த அக்கினியின் சோதியினல் வெந்து நான் சுகமடைவது எந்தக்காலம்?

காமக் கடல்கடக்கக் கர்த்தவியக் கப்பல்வைத்து
நேமநிஷ்டை தம்ப நிறுத்துவது மெக்காலம்.

(பொ-ரை) காமமென்னும் கடலைத்தாண்ட கர்த்தவியம் என்னும் கப்பலைவைத்து நேமநிஷ்டை தம்பத்தை நிறுத்திக்கொள்வது எந்தக்காலம்? (எ-று) 3

பங்கப் பழிப்பேய்ந்த பைபன்யான் றையலர்கள்
கொங்கையைநான் பாராக் குருடாவ தெக்காலம்.

(பொ-ரை) கெட்ட பழிப்பைப்பெற்ற பையனுன நான் பெண்களுடைய ஸ்தனங்களைப் பாராத குருடாவது எந்தக்காலம்? (எ-று) 4

கொங்கைதனைப் பாராக் குருடா யிருப்பதுடன்
அங்கமுமிழ் மோக மழிவதினி யெக்காலம்.

(பொ-ரை) கொங்கைகளைப் பார்க்காத குருடாயிருப்பதுடன் மோகத்தையும் ஒழிப்பது எந்தக்காலம்? (எ-று) 5

அங்கமுமிழ் மோக மழிந்தே யறமெலிந்து
வெண்கிழடு போல வரண்டுணர்வ தெக்காலம்.

(பொ-ரை) சரீரத்தை உமிழ்கின்ற மோகமழிந்து அறவேமெலிந்து வன்கிழடுபோல வரண்டு உணர்வது எந்தக்காலம்? (எ-று) 6

வாசியினு னேறி வலமிடந்தி ருப்பாமற்
றேசிநடை போலத் திடப்படுவ தெக்காலம்.

(பொ-ரை) வாசியிலே நான் ஏறி வலமிடமாகத் திருப்பாமல் குதிரையின் நடையைப்போல திடப்படுவது எந்தக்காலம்? (எ-று) 7

தேசிநடை போலத் தியங்காச் சுழிமுனையை
நாசி நுனியிலதை நான்மறிப்ப தெக்காலம்.

(பொ-ரை) குதிரையின் நடையைப்போல இயங்காத சுழிமுனையை நான் நாசி நுனியில் மறிப்பது எந்தக்காலம்? (எ-று) 8

நாசி நுனிகடந்து நாசமாய்ப் போகாமல்
வாசியுமென் கையில் வசப்படுவ தெக்காலம்.

(பொ-ரை) நாசி நுனியைக் கடந்து நாசமாய்ப் போகாமல் வாசியும் என்கையில் வசப்படுவது எந்தக்காலம்? (எ-று) 9

மையலெனு மாலை மார்புநிறை யப்பூண்ட
தையலர்க ளெல்லாமென் றாயாவ தெக்காலம்.

(பொ-ரை) மயக்கமென்கிற மாலையை மார்பின் நிறையத் தரித்த பெண்களெல்லாம் என்னுடைய தாயாவது எந்தக்காலம்? (எ-று) 10

கஞ்சா வபினசக்குங் கற்பமென வுண்ணுமல்
எண்சாண் பனங்கள் ளிறக்கியுண்ப தெக்காலம்.

(பொ-ரை) கஞ்சா, அபின், சாரூயம் முதலியவைகளை கற்பம் என்று உண்ணுமல் எட்டுச்சாண்களையுடைய பனங்கள் இறக்கியுண்பது எந்தக்காலம்? (எ-று) 11

பொய்யே மிகுத்த புதர்ப்பாவிப் பையல்யான்
அய்யோவென் றேயழுதுன் னடிபணிவ தெக்காலம்.

(பொ-ரை) பொய்மிகுத்த பாவிப்பையனுனவன் ஐயோ வென்றழுது உன்னுடைய திருவடிகளை வணங்குவது எந்தக்காலம்? (எ-று)

அய்யோகூ வென்றே யலறவடி யுண்டவென்றன்
பொய்யான மெய்யின் பிழைபறுவ தெக்காலம்.

(பொ-ரை) ஐயோ! என்று கூவியலறி அடியுண்ட என்னுடைய பொய்யான மெய்யின் குற்றம் அறுவது எந்தக்காலம்? (எ-று) 13

மருவு தகைமறந்து மனமு மனமிறந்து
இருகையு மேந்தி யிரந்துண்ப தெக்காலம்,

(பொ-ரை) மருவுந்தன்மை மறந்தும், மனமும் நன்மையும் இறந்தும், இரண்டு கைகளையும் ஏந்தி இரந்து உண்பது எந்தக்காலம்! 14

இருகையு மேந்தி யிரந்து குடித்தேநான்
சருகா யுலர்ந்து சலிப்பறுவ தெக்காலம்.

(பொ-ரை) இரண்டு கைகளையும் ஏந்தி இரந்து குடித்து நான் சருகைப்போல் உலர்ந்து சலிப்பற்றிருப்பது எந்தக்காலம்? (எ-று)

ஆசானற் காலே யணைத்திருந்து மோந்துகலந்
தாசாடிப் பேசி யுணர்வருள்வ தெக்காலம்.

(பொ-ரை) குருவின் நல்ல திருவடிகளைப் பிடித்திருந்து மோந்து கலந்து ஊசலாடிப் பேசியுணர்வது எந்தக்காலம்? (எ-று) 16

வாசிவா வென்று வருந்தெள் ளமுதமுண்டு
பேசிநான் வாழ்ந்தே பிழைதீர்வ தெக்காலம்.

(பொ-ரை) வா! சிவாவென்று வருகின்ற ஒளிவாகிய அமிர்தத்தை உண்டு பேசி நான் வாழ்ந்து குற்றம் நீங்குவது எக்காலம்?

எக்காலக்கண்ணி - முற்றுப்பெற்றது.

ஆ பாடல் - 780.

# கண்மணிமாலைக் கண்ணி.

அத்து விதமே யறிவகண்டி தாகாரக்
கர்த்த வியமேயென் கண்ணே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! அத்துவித வஸ்துவே! அறிவு அகண்டிதாகாரக் கர்த்தவியமே! என்னுடைய கண்ணே! (எ-று) 1

தற்பரமே சிற்பரமே தானென்று நின்றுதவுங்
கற்பகமே யற்புதமே கண்ணே பராபரமே.

(பொ-ரை) பராபரப்பொருளே! தற்பரமே! ஞானபரமே! தானென்று நின்று உதவுகின்ற கற்பகமே! அற்புதமே! என்னுடைய கண்ணே!

உடலே யுயிரே யுளங்குளிர்ந்த செந்தேனே
கடலே நிறையமுதே கண்ணே பராபரமே.

(பொ-ரை) என்னுடைய சரீரமே! உயிரே! மனங்குளிர்ந்த செந்தேனே! கடலே! நிறைந்த அமிர்தமே! கண்ணே! (எ-று) 3

கொட்டிவைத்த முத்தே குவிந்தநவ ரத்தினமே
கட்டிப்பசும் பொன்னேயென் கண்ணே பராபரமே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! பராபரமே! கொட்டிவைத்த முத்தே! குவித்து வைத்த நவரத்தினமே! கட்டியான பசும்பொன்னே,

சட்டாச வர்க்கமே சார்ந்தோர் குஞ்சரமே
கட்டழகுப் பெண்ணேயென் கண்ணே பராபரமே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! பராபரமே! சட்ரசவர்க்கமே! சேர்ந்த ஒப்பற்ற யானையே! நல்ல அழகினையுடைய பெண்ணே!(எ-று)

செல்வப் பெருக்கே திரண்டமணி பொக்கிஷமே
கல்விக் களஞ்சியமே கண்ணே பராபரமே!

(பொ-ரை) கண்ணே! பராபரப்பொருளே! திரண்ட செல்வமே திரட்சியான ரத்தினப்பொக்கிஷமே! கல்விக்களஞ்சியமே! (எ-று) 6

இன்னமுதே கண்டே யெனக்கேற்ற முக்கனியே
கன்னலரும் பாகேயென் கண்ணே பராபரமே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! பராபரமே! இனிமையான அமிர்தமே! கற்கண்டே! எனக்குத்தகுந்த முக்கனியே! கரும்புப்பாகே!

பேச்சாத் திரண்டமுதே பிரியாப் பெருவாழ்வே
காய்ச்சாச்செம் பொன்னேயென் கண்ணே பராபரமே.

(பொ-ரை) என் கண்ணே! பராபரமே! திரண்ட அமிர்தமே! பிரியாத பெரிய வாழ்வே! காய்ச்சாத செவந்த பொன்னே! (எ-று) 8

நற்பவழக் கொம்பே நவின்றமணிப் பெட்டகமே
கைப்பொருட்கு மெய்ப்பொருளே கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! நல்ல பவளக்கொம்பே! சொல்லப்பட்ட மணிப்பெட்டகமே! கைப்பொருளுக்கும் மெய்ப்பொருளே!

பட்டைக் கரும்புவட்டே பானைகொண்ட சர்க்கரையே
கட்டிக் கரும்பேயென் கண்ணே பராபரமே.

(பொ-ரை) என் கண்ணே! பராபரமே! பட்டையான கருப்புக்கட்டியே! பானை நிறைந்த சர்க்கரையே! கட்டிக்கரும்பே! (எ-று) 10

துன்பக் கடலைத் தொலைத்தோர் துயர்தீர்க்குங்
கம்பமற்ற பாற்கடலே கண்ணே பராபரமே.

(பொ-ரை) என் கண்ணே! பராபரமே! துன்பமாகிய கடலைத் தொலைத்தோர் துன்பத்தைத் தீர்க்கின்ற கலக்கமற்ற பாற்கடலே!

பொய்ப்பொருள்க ளெல்லாம் புறக்கணித்த புண்ணியர்தங்
கைப்பொருட்சித் தேயென்றன் கண்ணே பராபரமே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! பராபரமே! பொய்யான பொருள்களெல்லாம் புறக்கணித்த புண்ணியர்களுடைய கைப்பொருள் சித்தே! (எ-று) 12

பவக்கடலை நீக்கிப் பரிவாய்க் கரையேற்றுங்
கவிழா மரக்கலமே கண்ணே பராபரமே.

(பொ-ரை) என் கண்ணே! பராபரமே! ஜென்மமான சமுத்திரத்தை நீக்கிப் பரிவாகக் கரையேற்றுகின்ற கவிழாத மரக்கலமே!

தம்பனங் கொண்டே தரித்துநின்ற வோங்காரக்
கம்பத்தடி யானேயென் கண்ணே பராபரமே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! பராபரமே! ஸ்தம்பனமாய்த் தரித்திருந்த ஓங்கார கம்பத்தடியிலிருப்பவனே! (எ-று) 14

மலிகாதல் கொண்டகையான் மண்ணிற் கவிழ்ப்பதற்கோ
கலகம் விளைத்துவிட்டாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! மிகுந்த காதலைக்கொண்ட கையினால் மண்ணினிடத்தில் கவிழ்ப்பதற்கோ கலகம் விளைத்துவிட்டாய். (எ-று) 15

தெள்ளிய வான்சோதி தெளிந்துமெல்ல வந்ததையுங்
கள்ளப் படுத்திவிட்டாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! தெளிந்த பெருஞ்சோதி ஒளிந்து மெல்ல வந்ததையும் கள்ளப்படுத்திவிட்டாய். (எ-று) 16

புண்ணீ ரொழுகிப் புழுங்கு மனத்தினர்போற்
கண்ணீர் கலங்கவிட்டாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! பராபரமே! விரணநீர் ஒழுகிப் புழுங்குகின்ற மனத்தினர்போல கண்ணீர் கலங்கவிட்டாய். (எ-று)

பித்தர்கள் போலும் பிதற்றிக்கா கம்போலுங்
கத்திகத்திச் சாகவிட்டாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! பயித்தியம் பிடித்தவர்களைப் போல் பிதற்றிக் காகத்தைப்போலும் கத்திக் கத்திச் சாவவிட்டாய்.

போற்றுமற் சிந்தை பொருதுசமர்க் காற்றுமற்
காற்றாய்ப் பறக்கவிட்டாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! துதிசெய்யாமல் மனஞ்சண்டை செய்து சண்டைக்காற்றுமல் காற்றாகப் பறக்கவிட்டாய். (எ-று) 19

நெற்பதற்கே யொப்பாக நிற்பதற்கோ வென்றலையில்
கற்பித்து விட்டுவிட்டாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! நெற்பதற்கு ஒப்பாக நிற்பதற்காகவோ என் தலையில் கற்பித்து விட்டுவிட்டாய். (எ-று) 20

சொல்லாச் சுயஞ்சோதிச் சுடர்கொழித்த நெஞ்சுகருங்
கல்லாகச் செய்துவிட்டாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! சொல்லாத சுயஞ்சோதி சுடரானது கொழித்த நெஞ்சைக் கருங்கல்லாகச்செய்து விட்டாய்.

அவிழ்ந்தவிழ்ந்து சிந்தையுன்மீ தாசைவைத்த தத்தனையுங்
கவிழ்ந்துப்பா ழாக்கிவிட்டாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) என் கண்ணே! பராபரமே! மனம் அவிழ்ந்து உன் மீது ஆசை வைத்ததத்தனையும் கவிழ்த்துப் பாழாக்கி விட்டாய். (எ-று)

ஓசைமணி மண்டபத்தி னுட்புகா வண்ணமெனைக்
காசினியிற் சுற்றவிட்டாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) என் கண்ணே! பராபரமே! ஓசையையுடைய மணி மண்டபத்தினுள்ளே சேராதபடி என்னை உலகத்திற் சுற்றவிட்டாய்.

வீண்காத றந்ததல்லால் வேற்றினுனைக் கண்ணுனுங்
காண்கவரி தாக்கிவிட்டாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! வீணாசை கொடுத்ததல்லாமல் வேறாக உன்னைக் கண்ணாலுங்காண அரியதாக்கி விட்டாய். (எ-று) 24

சேத்துமத்தி னீப்போலென் சிந்தைநைந் தேங்கவுனைக்
காட்டி மறைத்துவிட்டாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) என் கண்ணே! பராபரமே! கபத்தில்பட்ட ஈயைப் போல என்னுடைய மனமிளகி ஏங்க உன்னைக்காட்டி மறைந்துவிட்டாய். (எ-று)

துட்டமா மாயையினிற் சுட்டெரிந்த கொள்ளிக்
கட்டைவிற காக்கிவிட்டாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! துஷ்டத்தனமான மாய்கையிற் சுட்டெரிந்த கொள்ளிக் கட்டையின் விறகாக்கிவிட்டாய். (எ-று) 26

வேல்விழியார் காம வேட்கையளற் றிலெனைக்
கால்மாற்ற விட்டுவிட்டாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! பெண்களுடைய காமவிகாரமான சேற்றில் என்னைக் கால்மாற்றவிட்டாய். (எ-று) 27

வீடுகா டென்று விதித்ததுவு மல்லாமற்
காடுவீ டாகவிட்டாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! வீடு, காடென்று சொன்னது மல்லாமல் காடு வீடாக விட்டாய். (எ-று) 28

ஓடாம லோடி யுலகைவலஞ் சுற்றுதற்கோ
காடோட வாக்கிவிட்டாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! ஓடாதபடியோடி உலகத்தை வலமாக வருவதற்கோ காட்டிலோடச் செய்து விட்டாய். (எ-று) 29

ஈடேறயா னுன்றனக்கு மென்மீதி லேனுவிக்
காதிநயஞ் செய்துவிட்டாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! ஈடில்லாத உன்றனக்கும் என் மேல் ஆவிக்காட்டி நன்மை செய்து விட்டாய். (எ-று) 30

அச்சமில்லாப் புல்வேட ரைவருக்கு மென்னறிவைக்
கைச்சூறை யாக்கிவிட்டாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! அச்சமில்லாத புல்லர்களான வேடர் ஐவருக்கும் என்னுடைய அறிவைக் கைச்சூறையாக்கிவிட்டாய்.

வில்லங்க மற்று விளக்கொளிபோ னின்றநெஞ்சைக்
கல்லங்க மாக்கிவிட்டாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! வில்லங்கமற்று விளக்கின் ஒளியைப்போல நின்ற மனத்தைக் கல்லாக்கி விட்டாய். (எ-று) 32

மண்ணாதி மூவாசை மாமாயை முக்கூட்டுக்
கண்ணியுட்சிட் டாக்கிவிட்டாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! மண்ணாதியான மூவாசை, மகத்தான மாயையின் முக்கூட்டு வலையுட் சிட்டாக்கி விட்டாய். 33

கொண்டணைத்துக் கொள்ளுங் குணங்குடி யான் சீரடியைக்
கண்டணைக்க நீயருளாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! கொண்டணைத்துக் கொள்ளுகின்ற குணங்குடியானுடைய சீர்த்த திருவடியைக் கண்டணைக்க நீ அருளிச்செய்வாய். (எ-று) 34

எட்டி லெழுத வொண்ணா விறையேயுன் றன்வடிவைக்
காட்டிக் கொடுத்தருளாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! எட்டினிடத்தில் எழுத வொண்ணாத இறைவனே! உன்னுடைய வடிவைக்காட்டிக் கொடுத் தருளவேண்டும். (எ-று) 35

மைச்சினிச்சி போலு மணக்கோலப் பெண்போலுங்
கைச்சரசஞ் செய்தருளாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! மைச்சினிச்சியைப்போலவும், கலியாணப்பெண்ணைப்போலவும் கைச்சரசஞ் செய்யவேண்டும். 36

நிதியாசை யற்று நிரஞ்சனமாய் நின்றிடநற்
கதியாசை தந்தருளாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! செல்வத்தாசையற்று குற்றமில்லாமல் நின்றிட நல்ல மோட்ச ஆசைதந்தருளவேண்டும். (எ-று)

நாதவிந்தால் நின்றதுவு நானென் றுபதேசங்
காதி லுரைத்தருளாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! நாதவிந்துக்களால் நின்றதும் நானென்று உபதேசம் காதில்சொல்லி யருளவேண்டும். (எ-று)

மாதவசி யாகி மலைமுழையிற் புக்கவுன்மேற்
காதலொன்று தந்தருளாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! மகத்தாகிய தவசியாய் மலைக்குகையிற் புகுந்த உன்மேல் ஆசையொன்று கொடுத்தருளவேண்டும்.

நிர்க்குணத்தைக் கொண்டு நிருவிகற்பஞ் சாதிக்கக்
கற்குணத்தைத் தீர்த்தருளென் கண்ணே பராபரமே.

(பொ-ரை) என் கண்ணே! பராபரமே! நிர்க்குணத்தைக்கொண்டு சவிகற்பத்தைச் சாதித்தற் பொருட்டு கல்மனத்தைத் தீர்த்தருள்வாய்.

ஜென்மந் தொலைத்தடிமை சின்மயமாய் நின்றிடவுங்
கன்மந் தொலைத்தருளாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) என் கண்ணே! பராபரமே! ஜென்மத்தை யொழித்து அடிமையானவன் ஞானமயமாய் நிற்கவும் என்னுடைய கர்மத்தை ஒழித்தருளவேண்டும். (எ-று) 41

சிந்தை யொளிபரப்பிச் சிதறுவன் கண்டாயோ
கந்தனையுந் தந்தருளாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! மனவொளியைப் பரப்பிச் சிதறுவேன் கண்டாயோ அப்படிப்பட்ட எனக்கு உம்முடைய திருவருளைக்கொடுப்பாய். (எ-று) 42

அஷ்டாங்க யோகமதி லாசையற வேயெனது
கட்டைவெட்டு முன்னருளாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! அஷ்டாங்கயோகத்தில் ஆசையறவே என்னுடைய கட்டையைவெட்டும் உன்னருள் தரவேண்டும்.

விற்புருவத் தூடு விளங்குமொளி பந்தாடக்
கற்பித் தருளாயென் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! புருவத்தின்மத்தியில் விளங்குகின்ற தேஜஸானது பந்தாடக் கற்பித் தருளவேண்டும். (எ-று) 44

ஒப்பி லருளாழி யோடவடி யேற்குமொரு
கப்பலாய் வந்தருளாய் கண்ணே பராபரமே

(பொ-ரை) கண்ணே! பராபரமே! ஒப்பில்லாத திருவருள் சமுத்திரத்தில் ஓட அடியவனான எனக்கும் ஒரு கப்பலாக வந்தருளவேண்டும்.. (எ-று) 45

உனையாள்வோ மென்றடிமை யுள்ளங் குளிர்ந்திடநின்
கனிவாய் திறந்தருளாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! உன்னை ஆண்டருள்வோ மென்று என்னுடைய மனக்குளிர களிவாய் திறந்தருளவேண்டும்.

பொய்கோத்த மெய் யதனைப் போட்டுவிடு முன்னமெனைக்
கைகோத் தணைத்தருளாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! பொய்யான சரீரத்தை வீழ்த் திவிடாத முன்னர் என்னைக் கைகோத்தணைப்பாய். (எ-று) 47

வாய்ச்சதெனக் கென்று மகிழ்ச்சிகொண்டு நின்றிடநின்
காட்சி யளித்தருளாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! எனக்கு உண்டானதென்று மகிழ்ந்திருக்க உன்னுடைய தெரிசனந் தந்தருள்வாய். (எ-று) 48

மலைக்கு மலைதிரிந்து மனுவாக வேழைமனக்
கலக்கந் தவிர்த்தருளாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! மலைமலையாகத் திரிந்து மனுவா வதற்கு ஏழையின் மனக்கலக்கத்தைத் தீர்த்தருளவேண்டும். (எ-று)

நாணு மடவாரை நான்கைதழு வக்கனவுங்
காணுது காத்தருவாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! வெட்கமடையாத பெண்களைத் தழுவக் கனவுகாணுதபடி காத்தருளவேண்டும். (எ-று) 50

தொண்டரிடஞ் சென்றிடவுந் தொண்டு செய்து நின்றிடவுங்
கண்டித்து வைத்தருளாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! அடியார்களிடத்தில் போகவும் தொண்டு செய்யவும் கண்டித்து வைத்தருளவேண்டும். (எ-று) 51

மூலவர்க்க மாக முழுமதிப்பா லுங்கொடுத்துக்
காலபயந் தீர்த்தருளாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! மூலவர்க்கமாக முழுசான சந் திராமிர்தத்தைக் கொடுத்து காலபயத்தைத் தீர்த்தருளவேண்டும்.

சோற்று லெடுத்த சுவரிடியா மற்பாது
காத்துமுகம் பார்த்தருளாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! சோற்றாலெடுத்த சுவரான சரீ ரம் இடியாதபடி பாதுகாத்து என்னுடைய முகத்தைப் பார்த்தருள வேண்டும். (எ-று) 53

மூலக் கனன்மூட்டி முட்டிவரு காலனையும்
காலா லுதைத்தருளாய் கண்ணே பராபரமே,

(பொ-ரை) கண்ணே! பராபரமே! மூலாதாரத்தில் அக்கினியை எழுப்பி என்னிடத்தில் வருகின்ற எமபடாளையும் காலால் உதைத்தருளவேண்டும். (எ-று) 54

சிட்டனென வும் பூசை செய்தேனு மிப்பாவிக்
கட்டை கடைத் தேறவைத்தாள் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! உயர்ந்தவனென வும்முடைய பூசையைச் செய்தவனென என்னுடைய கட்டையைக் கடைத்தேற வைத்தாளவேண்டும். (எ-று) 55

எட்டுமோ ரெட்டையுமெட் டெட்டுக் கயிறதனாற்
கட்டவுநல் லிஷ்டம்வைத்தாள் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! எட் டெட்டு அறுபத்திநான்கு தத்துவங்களையும் அவைகளினால் கட்டவும் உயர்ந்தஇஷ்டம்வைத்தாள வேண்டும். 56

ஆதார மாறு மடுக்கடுக்கா கக்கடத்திக்
காதுக்குமே லேற்றி வைத்தாள் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! ஆறுதாரங்களையும் அடுக்கடுக்காகத் தாண்டிக் காதுக்குமேலேற்றி வைத்து ஆளவேண்டும். (எ-று)

கும்பித்தி ரேசித்துட்கொள்ளும் படிக்குதவிக்
கம்பமுனைக் காட்டிவைத்தாள் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! பிராணாயாமங்களைச் செய்யும் படி அருளிச்செய்து கம்பமுனையைக் காட்டி யருளவேண்டும். (எ-று)

பட்டிப் பசுப்பாலைப் பக்குவத் துடன் காலைக்
கட்டிக் கறந்தளித்தாள் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! பட்டியானபசுவின் பாலைப்பக்குவத்துடன் அதன் காலைக்கட்டி கறந்தளிக்கவேண்டும். (எ-று) 59

நில்லா வுடற்கு நிலையுங் கொடுக்குமொரு
கல்லாவின் பாலளித்தாள் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! அழியும் சரீரத்திற்கு நிலைமையைக் கொடுக்கின்ற ஒரு கல்லாவின் பாலைக் கொடுத்தாளவேண்டும்.

சோமப்பா லூட்டிச் சூரந்தவா மப்பாலுங்
காமப்பா லுங்கொடுத்தாள் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! அடியேனுக்கு சோமப்பால், வாமப்பால், காமப்பால் இவைகளைத் தந்தருளவேண்டும். (எ-று) 61

மண்டைநடு மண்டலத்துண் மண்டியமு• துண்டிடவுங்
கண்டங் கடத்திவைத்தாள் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! மண்டையின் நடுவிடத்தி லிருந்த அமிர்தத்தை உண்ணக் கண்டத்திற்குமேல் ஏற்றியருள்.

மூலாதா ரத்துண் முளைகொண் டுயர்ந்தெழுந்த
காலாற் கனலெரித்தாள் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! மூலாதாரத்தில் முளைத்துயர்ந் தெழுந்த காலினால் அக்கினியை எரித்தருள். (எ-று) 63

ஆயுங் கலையிரண்டு மாயா தடக்கியென்றன்
காய நிலைக்கவைத்தாள் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! ஆராய்கின்ற இருகலைகளையும் அடக்கி என்னுடைய சரீரம் நிலைக்கும்படி வைத்தாளவேண்டும்.(எ-று)

அற்ப வுடலா லருந்தவே புரிந்திடவுங்
கற்பமுறை கைக்களித்தாள் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! அற்பமான சரீரத்தினால் அருந் தச் செய்யவும் கற்பமுறையைக் கைக்குக் கொடுத்தருளவேண்டும்.

அண்டபிண்ட மென்றுநின் றாடுந் திருக்கூத்தைக்
கண்டுகளி கூறவைத்தாள் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! அண்டத்திலும் பிண்டத்திலும் என்றுமிருந்து ஆடுகின்ற திருக்கூத்தைக்கண்டு களிப்படையவைத்தாள்.

எண்ணாத வெண்ணமெல்லா மெண்ணாம லென்றன்மனக்
கண்ணாடிக் குள்ளளித்தாள் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணாமல் என்னுடைய மனமாகிய கண்ணாடிக்குள்ளளித்தாள்வாய்.

எவ்வுலகுந் தானா யிருந்தவனை யான் றொழவுங்
கவ்வுமலக் கட்டறுத்தாள் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! எந்த உலகமும் நீயேயாயிருந்த உன்னை நான் தொழும்படி கவ்வுகின்ற மலக்கட்டை யறுத்தாளவேண் டும். (எ-று) 68

அற்ப வுடல மழிந்திடுமுன் றீபமிட்ட
கர்ப்பூர மாக்கி வைத்தாள் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! அற்பமான சரீரம் அழிவதற்கு முன்னே கர்ப்பூர தீபமாகச் செய்தாளவேண்டும். (எ-று) 69

விலங்கினங்க ளோடு வீற்றிடவு மேழைநெஞ்சு
கலங்காத வண்ணம்வைத்தாள் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! மிருகங்களுடன் வீற்றிருக்க அடியேனுடைய மனத்தைக் கலங்காதபடி செய்தாளவேண்டும் (எ-று)

அடுத்துக் கெடுக்கு மரிவையர்க்கா ளாகாமல்
கடக்கக் கடத்திவைத்தாள் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! நெருங்கிக்கெடுக்கின்ற பெண்களுக்கு ஆளாகாமல் கடக்கும்படி கடத்திவைத் தாளவேண்டும்.(எ-று)

நாற்றந் தொலைய நறையணியு நாரியர்தங்
காற்றும் படாதுவைத்தாள் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! நாற்றநீங்கற்பொருட்டு வாசனை பூசிக்கொள்ளுகின்ற பெண்களுடைய காற்றுபடாமல் வைத்தாள வேண்டும். (எ-று) 72

ஆணிப்பொன் மேரு வாமுனையு முன்னடிமை
காணுங் கருணைவைத்தாள் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! மாற்றுள்ள பொன்மேருவாகிய உன்னையும் உனக்கு அடியவனை நானும் காணும்படி கருணைசெய்தாண்டருளவேண்டும். (எ-று) 73

வனவாச மேக வரமளித்துன் பொற்பதத்தைக்
கனமா யிறைஞ்சவைத்தாள் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! வனவாசஞ்செல்ல வரங்கொடுத்து உன்னுடைய அழகிய திருவடிகளை உறுதியாய் வணங்கும்படி ஆள்வாய். (எ-று) 74

எட்டிப் பிடித்தாலு மெட்டாது நின்றவுனைக்
கட்டிப் பிடிக்கவைத்தாள் கண்ணே பராபரமே

(பொ-ரை) கண்ணே! பராபரமே! நான் எட்டி எட்டிப் பிடித்தாலும் எட்டாமலிருந்த உன்னைக் கட்டிப் பிடிக்கவைத்தாள்வாய்.(எ-று)

மதபேத மோதி மறைக்குமறை சொல்வதெல்லாங்
கதையாய் முடித்துவைத்தாள் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! மதவிகற்பங்களைச் சொல்லி வேதங்களில் சொல்வதெல்லாம் கதையாக முடித்துவைத் தாள்வாய்.

அண்டபிண்ட மாயுமதற் கப்பாலு நின்றவெளி
கண்டவுனைக் காட்டிவைத்தாள் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! அண்ட பிண்டங்களாகியும், அதற்கு அப்பாலாகியும், இருந்த வெளியான உன்னைக் காட்டி வைத்து ஆளவேண்டும். (எ-று) 77

உலையி லிடுமெழுகா யுள்ளம் பதைத்துருகிக்
கலங்கியதுங் கண்டிலையோ கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! உலையில் இடுகின்ற மெழுகைப் போல மனம்பதைத்துருகி நான் கலங்குவதையும் நீ பார்த்தாயில் லையோ? (எ-று) 78

வெம்பிமிக நொந்தேன் மெலிந்தேனென் கண்ணீருங்
கம்பலையுங் கண்டிலையோ கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! நான் மிகவும் வருத்தப்பட் டேன், என்னுடையகண்ணீரையும்வருத்தத்தையுங்கண்டாயில்லையோ.

மெத்த மயலுற்று விருப்பமொடு பன்னூலுங்
கற்றும்பா ழாக்கிவிட்டேன் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! மிகவும் மாய்கையையடைந்து ஆசையோடு பல நூல்களைப் படித்தும் காலத்தை வீணாக்கி விட்டேன்.

பாலங் கடந்துபெரும் பாதைநட வாமலும்வீண்
காலங் கடத்திவிட்டேன் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! வாராவதியைத்தாண்டி பெரிய வழியை நடவாமலும் வீண்காலத்தைப் போக்கினேன். (எ-று) 81

பூத்த மலரெடுத்துன் பொன்னடியை யானுமென்றுங்
காத்திருந்து பூசைசெய்வேன் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! பூத்தபுஷ்பத்தை எடுத்து உன் னுடைய பொன்னுமடியை நான் சதாகாத்துக் கொண்டிருந்து பூசை செய்வேன். (எ-று) 82

விண்கொண்டு நின்று விளங்குமுனை யெக்காலங்
கண்கொண்டு காண்பேனென் கண்ணே பராபரமே.

(பொ-ரை) என்னுடைய கண்ணே! பராபரமே! ஆகாயத்தை இட மாகக் கொண்டு விளங்குகின்ற உன்னை எந்தக்காலத்திலும் கண் கொண்டு பார்ப்பேன். (எ-று) 83

ஐயோவென் செய்கிற்பே னாருமற்ற பாவியைநீ
கைவிட லாமோவென் கண்ணே பராபரமே.

(பொ-ரை) என் கண்ணே! பராபரமே! அந்தோ! நான் என்ன செய்வேன்? யாருமில்லாத பாவியான என்னை நீ கைவிடலாமோ?

நட்டநடு வீடுசென்று நானொளித்தி ருந்துனையுங்
கட்டித் தழுவேனோ கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! நட்டநடுவேயுள்ள வீட்டில் சென்று நான் ஒளித்திருந்து உன்னைக் கட்டித் தழுவமாட்டேனோ?

அல்லும் பகலு மடியேன் படுந்துயர்க்குக்
கல்லுங் கரைந்திடுமென் கண்ணே பராபரமே.

(பொ-ரை) என் கண்ணே! பராபரமே! இரவும் பகலும் அடியவனாநான் படுகின்ற துன்பத்திற்குக் கல்லுங்கரையும். (எ-று) 86

பொன்னைப்பு தைத்துவைத்துப் போவா ருளந்தோறும்
கன்னங் கருநிறங்காண் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! பொன்னைப் புதைத்துவைத்துப் போகின்றவர்களுள்ளத்திற்கு விளங்காதவனே! (எ-று) 87

பணத்தைப் பணமெனவும் பார்த்ததுண்டோ வுன்றனுக்கென்
கணக்குத் தெரியாதோ கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! நான்பணத்தைப் பணமென்று பார்த்ததுண்டா? உனக்கு என்னுடைய கணக்கு தெரியாதா? (எ-று)

நிற்கும் பொழுதாடை நெகிழ்ந்தா லுபசாரங்
கைக்குஞ் சொல்வதுண்டோ கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! நிற்கின்ற சமயத்தில் வஸ்திரம் விலகினால் கைக்கு உபசாரஞ் சொல்லுவதுண்டா? (எ-று) 89

தடையி லுலகனைத்துந் தானா யிருந்துமொரு
கடுகிடையு மானாயென் கண்ணே பராபரமே.

(பொ-ரை) என் கண்ணே! பராபரமே! உலகமெல்லா மாகியும் கடுகளவுமானாய். (எ-று) 90

உனக்குள் ளெனை மறந்தோ ருள்ளக் கருத்தினுண்மாங்
கனிக்குளூறு வண்டானாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! உனக்குள் என்னை மறந்து ஒரு உள்ளக்கருத்தினுள் மாங்கனிக்கு ளூண்டான வண்டானாய். (எ-று) 91

நெக்குருகி நின்ற நிலைதோன்றா நிர்க்குணத்தார்
கைக்குட்படிந் தாடிநின்றாய் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! இளகின்ற உண்மைதோன்றாதநிர்க்குணத்தையுடையவர்களுடைய கைக்குட் படிந்தாடியிருந்தாய்.

பதித்த மனம்வாழி பரமார்த்த மும்வாழி
கதித்த நிலைவாழி கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! பதியவைத்த மனசு, பரமார்த்தம், உயர்ந்த நிலை இவைகள் வாழக்கடவன. (எ-று) 93

அத்துவிதம் வாழி யறிவகண்டி தம்வாழி
கர்த்தனே நீவாழி கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! அத்துவிதம், அறிவு, அகண்டிதம் இவைகளும் நீயும் வாழ்க. (எ-று) 94

தற்பர மேவாழி தாராதுந் தந்துதவுங்
கற்பகமே வாழியென் கண்ணே பராபரமே.

(பொ-ரை) என் கண்ணே! பராபரமே! ஞானபரம் வாழி, தாரா தவைகளை யெல்லாங் கொடுக்கும் கற்பகமே! வாழி. (எ-று) 95

சிற்பரமே வாழி சிவயோ கியர்வாழி
கற்பனையெல் லாம்வாழி கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! சிற்பரம்வாழி, சிவயோகிகள் வாழி, கற்பனைகளெல்லாம் வாழி. (எ-று) 96

நற்பதவி யும்வாழி நவின்றன் மறைவாழி
கற்பதா ரிகள்வாழி கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! நல்லபதவிவாழி, நான்குவேதங்கள்வாழி, கற்பதாரிகள் வாழி. (எ-று) 97

சித்தர் கணம்வாழி சின்மயந் தான்வாழி
கர்த்தவியம் வாழியென் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! சித்தர் கூட்டம்வாழி, சின்மயம்வாழி, கர்த்தவியம் வாழி.(எ-று) 98

மாதவத்தோ ரும்வாழி மவுனமுத்தி ரையும்வாழி
காதலித்தோ ரும்வாழி கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! பராபரமே! மாதவத்தோர்வாழி, மவுன முத்திரை வாழி, அதில் ஆசைவைத்தவர் வாழி. (எ-று) 99

குவலயத்தோ ரும்வாழி குணங்குடியா ரும்வாழி
கவலையற்றோ ரும்வாழி கண்ணே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! உலகத்தவர்கள் வாழி, குணங்குடியாரும் வாழி, துன்பமற்றவர்களும் வாழி. (எ-று) 100

கண்மணிமாலைக்கண்ணி - முற்றுப்பெற்றது.

ஆ. பாடல் - 880

# மனோன்மணிக் கண்ணி

மெய்தொழவு மேனு மேலுநந்தி கேஸ்வரனைக்
கைதொழ வுங்கனவு கண்டேன் மனோன் மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! நந்திகேஸ்வரனைச் சரீரத்தாலுங் கைகளாலுந் தொழ நான் கனக்கண்டேன். (எ-று) 1

கோப்பா கவுமுனையான் கொண்டாடிப் பாடவுநீ
காப்பாக வுங்கனவு கண்டேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! உன்னைக் கோப்பாகக் கொண்டாடிப் பாடவும் நீ காவலாகவும் நான் கனாக்கண்டேன். (எ-று) 2

பெண்கணிர்த்தத் தோடுனையான் பிரியா மணம்புணரக்
கண்களுறங் காக்கனவு கண்டேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! பெண்களின் நடனத்துடன் உன்னை நான் பிரியாமணம் செய்யத் தூங்காத கனாக்கண்டேன். (எ-று) 3

மலர்ந்திருக்கும் பொற்கமல மணவறையி லிருவருங்கை
கலந்திருக்க வுங்கனவுகண்டேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! மலர்ந்திருக்கின்ற பொற்றாமரை யிணையுடைய வாசனை வீசுகின்ற அறையில் நாமிருவரும் கைகலந்திருக்கவும் கனாக்கண்டேன். (எ-று) 4

மெய்மஞ்சட் குளிர்ப்புங்கண் விழிப்புமெக் களிப்புமெனைக்
கைமிஞ்ச வுங்கனவு கண்டேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! சரீரத்தின் மஞ்சள் குளிப்பும், கண்விழிப்பும், எக்காலமும என்னைக் கைமிஞ்சவுங் கனாக்கண்டேன்.

மைதீட்ட வுங்கயற்கண் மலரின் மலர்முலையிற்
கைபூட்ட வுங்கனவு கண்டேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! நான் உன்னுடைய கண்களில் மையைத் தீட்டவும், மலரைப்போல் முலையில் கைவைக்கவும் கனாக்கண்டேன். (எ-று) 6

மெய்தழுவ வும்மிருவர் மெய்யோடு மெய்நெருங்கக்
கைதழுவ வுங்கனவு கண்டேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! சரீரத்துடன் சரீரமாக நாம் இருவரும் கைதழுவவுங் கனாக்கண்டேன். (எ-று) 7

வாமப்பா லப்பெருக மறுவாலி பம்வருக
காமப்ப லுண்ணக் கண்டேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! வாமப்பால் பெருகவும் வேறு வாலிபதசை வரவும், காமப்பாலை உண்ணவும் கனாக்கண்டேன். (எ-று)

பாலரு கவுங்காற்ற பாலுணவு மென்னைவிட்டுக்
காலனே கவுங்கனவு கண்டேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! நான் குழந்தையாய்ப் பாலுண்ண என்னை எமன் விட்டுப் போய்விடவும் கனாக்கண்டேன். (எ-று) 9

வடியா வருளமிர்தம் வடியவடி யக்குணங்
குடியா ரொடுகனவிற் குடித்தேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! நீங்காத திருவருள் அமிர்தம் வடிய வடியக் குனைக்குடியானேடுங் கனவிற்குடித்தேன். (எ-று) 10

கோடி பெருமதிகள் கூடுமொரு மதிபோல்
வாடியெம் மானேபெம் மானே மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! எம்முடைய மானே! பெம்மானே! கோடி சந்திரர்களுங்கூடி ஒருமதியாக வந்தாற்போல்வாடி. (எ-று) 11

கண்ணேயென் கண்மணியே கண்குளிர்ந்த கட்டழகுப்
பெண்ணே யமிர்தப் பிழம்பே மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! கண்ணே! என்னுடைய கண்மணியே! கண்ணுக்கு அழகைத் தருகின்ற மிக்க அழகினையுடைய பெண்ணே! (எ-று) 12

பெண்ணே மயிலினமே பேரனமே யென்றுனையென்
கண்ணிற் கிடக்கவென்று காண்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! பெண்ணே! மயிலினமே! பெரிய அன்னமே! என்று உன்னை என்னுடைய கண்ணிற்கிடைக்க என்று காண்பேன். (எ-று) 13

வன்ன வுடைக்குமுன் றன்வால வயதினுக்கும்
அன்ன நடைக்குமென்ற னாசை மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! உன்னுடைய அழகிய உடுப்புக்கும் பாலவயசுக்கும், அன்னநடைக்குமே என்னுடைய ஆசையாகும்.(எ-று)

கூந்த லிலங்கக் குரும்பைத் தனங்குலுங்க
நேர்ந்து நடம்புரிந்து நிற்பாய் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! கூந்தலானது விளங்கவும், குரும்பைப்பிஞ்சையொத்த ஸ்தனங்கள் குலுங்கவும் இடைநேர்ந்து நடனஞ் செய்து நிற்பாய். (எ-று) 15

துவளுந் துடியிடையுந் தோகை மயினடையும்
பவள விதழுமென்று பார்ப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! துவள்கின்ற உடுக்கையைப்போலும் இடுப்பும்,தோகையையுடைய மயில்போலும் நடையும்,பவழம்போலும் இதழும் என்று பார்ப்பேன். (எ-று) 16

மலர்மாலை கள்கிடந்து மார்பிற்பின்ன லாடுமுன்றன்
அலர்முலையும் யானென் றணைவேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! மலராற் செய்யப்பட்ட மாலைகள் மார்பிற் பின்னலாடுகின்ற உன்னுடைய அலர்கின்ற முலையை யான் எக்காலத்தில் அணையப்பெறுவேன். (எ-று) 17

வெய்யிற்பட் டாலும் வெதும்புமுட லாயுனது
மெய்யிற்றொட்டா லுங்கதம்பம் வீசும் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! வெயிலில் பட்டாலும் வெதும்புகின்ற சரீரமாய் உன்னுடைய மெய்யிற்றொட்டாலும் கதம்பம்வீசும்.

காற்றுப்பட் டாலுங் கலங்குமென்றன் மேனியுநீ
பார்த்துத் தொடவின்பம் படைப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! காற்றுபட்டாலும் கலங்குகின்ற என்னுடைய சரீரத்தை நீ பார்த்துத்தொட இன்பம் படைப்பேன்.

பிடியாரைப் போலும் பிடிப்பேன் முலையைக்குணங்
குடியாரைப் போலுங் குடிப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! பிடியாதவர்களைப்போலவும் பிடிப்பேன் முலையைக் குணங்குடியாரைப்போலவுங் குடிப்பேன். (எ-று) 20

கூந்தலுக்கு நெய்தோய்த்துக் குளிர்மஞ்ச ணீராட்டி
வார்ந்துசிங் காரித்து வைப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! கூந்தலுக்கு நெய் தோய்த்து குளிர்ந்தமஞ்சள் நீராட்டி மிகுதியும் சிங்காரித்து வைப்பேன். (எ-று) 21

காலிற்பனி நீர்விட்டுக் கழுவிமடி மீதுவைப்பேன்
மேலிலத்த ரும்பூசி விடுவேன் மனோனமணியே.

(பொ-ரை) மனோன்மணியே! காலிற் பனி நீர் விட்டுக்கழுவி மடிமேல் வைப்பேன். மேலுக்கு அத்தரும் பூசி விடுவேன். (எ-று) 22

காதம் பரிமளிக்குங் கஸ்தூரிப் பொட்டிடுவேன்
போதுஞ்ச வாதணிந்து புணர்வேன மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! ஒருகாதம்வரைக்கும் வாசனை வீசுகின்ற கஸ்தூரிப் பொட்டிடுவேன், போதுமான சவ்வாது தரித்துப் புணர்வேன். (எ-று) 23

தலைக்குமினுக் கெண்ணெய் தடவிச்சடை பின்னிவைப்பேன்
முலைக்குவன்னக் கசசிறக்கி முடிப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! தலைக்கு மினுக்குகின்ற எண்ணெய் தடவிச் சடைபின்னிவைப்பேன் முலைக்கு நல்லகசசிறுக்கி வைப்பேன்.

கட்டாடை வாக்கமெல்லாங் கண்டு களித்துயர்ந்த
பட்டாடை வர்க்கம்வைத்துப் படைப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! கட்டுகின்ற வஸ்திரவகைகளை யெல்லாம் பார்த்துச் சந்தோஷித்து உயர்ந்த பட்டுவஸ்திரவகைகளை வைத்துப் படைப்பேன். (எ-று) 25

மூக்குகுத்திக் காதுகுத்தி முழுவயிரந் தூக்கிவைப்பேன்
கோக்குமுத்துந் தூக்குமுத்துங் குவிப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! மூக்கையும், காதையும் குத்தி, துளையிடாத வயிரத்தைத் தூக்கிவைப்பேன் கோக்கும் முத்தையும், தூக்குகின்ற முத்தையும் குவிப்பேன். (எ-று) 26

கைக்குஞ் சுரிகடகங் கல்லுமிழைத் துக்கொடுப்பேன்
மொய்க்குழறகுஞ் சடைப்பில்லை முடிப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! கைக்குக் கல்லிழைத்த கடகஞ் செய்து கொடுப்பேன், கூந்தலுக்குச்சடைபில்லை முடிப்பேன். (எ-று)

தங்கக்கொலுசுஞ்சிலம்புந் தண்டைரத்ந பாடகமுங்
கொங்கைக்கு மோகனமாலை கொடுப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! தங்கக்கொலுசும், சதங்கையும், தண்டையும், ரத்னமிழைத்த பாடகமும், கொங்கைக்கு மோகனமாலையும் கொடுப்பேன். (எ-று) 28

காலாழி பீலிமுதற் கன்னகையும் பொன்னகையும்
நாலாட் சுமைவேண்டி நடக்கு மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! காலாழி, பீலி முதலிய கல்நகையும் பொன் நகையும் நாலாள் சுமைவேண்டினும் நடக்கும். (எ-று) 29

முடிமீ தினுமகுட முடிசூட்டு வேனற்குணங்
குடிமா தவர்களகுலக் கொழுந்தே மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! குணங்குடியிலுள்ள தவசிரேஷ்டர்களின் குலக்கொழுந்தே! உன்னுடைய முடியின்மேலும வேறுமுடி சூட்டுவேன். (எ-று) 30

சந்நிதா னத்திற் சரணஞ் சரணமென்று
சொன்ன மலர்தூயித் தொழுவேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! உன்னுடைய திருக்கோவிலில் சரணஞ் சரணமென்று சொன்னம்போலும் புஷ்பஞ் சொரிந்து வணங்குவேன் (எ-று) 31

கர்ப்பூர மேற்றிக் கரத்தீப வாலாத்தி
எப்பாரும் போற்ற வெடுப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! கர்ப்பூரத்தைக் கொளுத்தி கரத்தினல் தீப ஆலாத்தியை எவ்வுலகத்தாரும் துதிசெய்ய எடுப்பேன்.

முக்கால மும்பூசை முடிப்பேன்முக் காலமல்லால்
எக்கால மும்பொங்க லிடுவேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! நான் திரிகாலங்களிலும் பூசை முடிப்பேன், தவிர எக்காலங்களிலும் பொங்கலிடுவேன். (எ-று) 33

சாதந்தளி கைசமைத்துச் சாம்பிராணித் தூபமிட்டுப்
பாதந் தொழுதிட்டுப் படைப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! சாதம், தளிகை சமைத்து சாம்பிராணி தூபமிட்டு திருவடிகளைத் தொழுது படைப்பேன். (எ-று) 34

பச்சைப் பருப்புமுதற் பருப்பிற்பத்து வகைகடைவேன்
வச்சநறு நெய்யுருக்கி வார்ப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! பச்சைப்பருப்புமுதற் பத்துவகைப் பருப்பு கடைவேன், நல்ல நெய்யுருக்கி வார்ப்பேன். (எ-று) 35

முட்டை பொரிப்பேன் முழுக்கோழி யும்பொரிப்பேன்
தட்டைப்பீங் கானிற் றருவேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! முட்டையையும், முழுசான கோழியையும். பொரிப்பேன், தட்டைப் பீங்கானில் படைப்பேன். (எ-று)

ஆட்டுக்கறி யுங்கொள்வே னதிலனந்தம் வகைசமைப்பேன்
கூட்டுக்கறி யும்பண்ணிக் கொடுப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! ஆட்டுக்கறியில் அநேகவிதஞ் சமைப்பேன், கூட்டுக்கறிகளுஞ் செய்துகொடுப்பேன். (எ-று) 37

குட்டிக் கறிதானுங் குழம்புபண்ணித் தாளித்தோர்
சட்டிக் கறியேனுந் தருவேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! குட்டிக்கறி குழம்பு செய்து தாளித்து ஒரு சட்டிகறியாவது கொடுப்பேன். (எ-று) 38

பால்பழமுந் தேனும் பலகார வர்க்கங்களும்
மேலுமே லும்பரப்பி விடுவேன் மனோன் மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! பால், பழம், தேன், பலகார வர்க்கங்கள் இவைகளை மேலுமேலும் பரப்பிவைப்பேன். (எ-று) 39

அடிக்கா யிரம் பொன்விலை யானாலு மீந்து குணங்
குடிக்குண்மா ளிகைகட்டிக் கொடுப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! அடிக்கு ஆயிரம் பொன் விலையானாலும்கொடுத்து வாங்கி குணங்குடிக்குள் மாளிகைகட்டிக்கொடுப்பேன்.

ஆணிப்பொன்மதிலுயர்ந்த வரண்மனையுந் தீர்ப்பாக
மாணிக்க மேவிளக்காய் வைப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! மாற்றுயர்ந்த பொன்மதில்கள் உயர்ந்த அரண்மனையும், தீர்ப்பாக மாணிக்க விளக்குவைப்பேன். (எ-று)41

துலங்குமணி மண்டபமுஞ் சொர்க்கமென வும்பிலங்கா
திலங்குமலங் காரஞ்செய் திடுவேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! விளங்குகின்ற மணிமண்டபமும் சொர்க்கலோகமென விளங்கும்படி அலங்காரஞ் செய்வேன். (எ-று)

ரத்தினங்கள் வைத்திழைத்த ராவைப்பக லாக்குஞ்
சித்திரங்கள் வகைவகையாய்ச் செய்வேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! ரத்தினங்கள் வைத்து இழைத்து இராவைப்பகலாக்குகின்ற சித்திரங்களை வகைவகையாய்ச் செய்வேன்.

மண்ணா யழுத்தாமன் மனமே முழுவதிலுங்
கண்ணாடி யாயிருக்கக் காண்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! மண்ணாகப்போய் விடாமல் மனம் முழுவதிலும் கண்ணாடியாயிருக்கப் பார்ப்பேன். (எ-று) 44

மங்கா தொளிபரப்பும் மவுனமணி யாலுமொரு
சிங்கா சனமேடைசெய்வேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! குறையாமல் ஒளிசெய்கின்ற மவுனமென்னும் மாணிக்கத்தினால் ஒரு சிங்காசன மேடைசெய்வேன்.

நாற்காலி கட்டில்பல நற்பவள வாசனங்கள்
நீக்கமறச் சுற்றும் நிறைப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! நாற்காலி, கட்டில், பவழவாசனங்கள் இவைகளை எங்கும் நிறைத்து வைப்பேன். (எ-று) 46

பாதம்பூ சித்துப் பணிவிடைகள் செய்துநிற்க
மாதர்க ளோவனந்தம் வைப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! திருவடிகளைப் பூசிக்கவும், வேலை செய்யவும் அநேக பெண்களை வைப்பேன். (எ-று) 47

புவனத் தரசரெல்லாம் போற்றிப் பணியவென்றன்
மவுன மலரணைமேல் வாழ்வாய் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! உலகத்திலுள்ள அரசர்களெல்லாம் துதிசெய்து வணங்க என்னுடைய மௌனமென்னும் புஷ்பசயனத்தின் மேல் வாழவேண்டும். (எ-று) 48

கட்டிலினுங் கூடி களிகூர்ந்து கொண்டிருப்போம்
தொட்டிலினு மாடிச் சுகிப்போ மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! கட்டிலிலும் சேர்ந்து களிகூர்ந்துக் கொண்டிருப்போம், தொட்டிலிலும் ஆடிச்சுகிப்போம். (எ-று) 49

முடிமன்னர் தம்வாழ்வு மூதலைவையு மெங்கள்குணங்
குடிமன்னர் தம்வாழ்வுங் கொடுப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! ராஜாக்கள் வாழ்வு முதலிய எவையும் எங்களுடைய குணங்குடியின் அரசருடையவாழ்வும்கொடுப்பேன்.

சொர்ன்ன மலைமலையாய்த் தொகைவகையி லாதளிக்குங்
கர்ன்ன னெனவுமெனைக் காண்பாய் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! சொர்ணத்தை மலைமலையாய் கொடுக்கும் கர்ன்னனென என்னைக் காண்பாய். (எ-று) 51

போதத் தனம்புதைத்த பொக்கிஷமுங் கைகுவிப்பேன்
பாதத்தி னும்வீழ்ந்து பணிவேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! போதுமான தனத்தையும், புதைத்த பொக்கிஷத்தையும், கைகுவிப்பேன். உன்னுடைய திருவடிகளிலும் விழுந்து வணங்குவேன். (எ-று) 52

கிடையாப் பொருள்களெல்லாங் கிடைக்குமுன்ன நீயுமென்றாற்
படையாப் பொருள்களெல்லாம் படைப்பாய் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! கிடைக்காத பொருள்களெல்லாங் கிடைக்கு முன்னமே நீயும், என்றால் படையாப் பொருள்களெல்லாம் படைப்பாய். (எ-று) 53

தானா சமுத்திரம்போற் சான்றோர்க்கெல் லாமளிப்பாய்
சேனா சமுத்திரமுஞ் சேர்ப்பாய் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! தானான சமுத்திரத்தைப்போல சான்றவர்களுக்கெல்லாம் கொடுப்பாய், சேனாசமுத்திரத்தையுஞ் சேர்ப்பாய். (எ-று) 54

முடிதூக்கு மன்னர் முதலெவரு முன்வாயிற்
படிகாக்கும் வாழ்க்கை படைப்பாய் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! அரசர்களெல்லாம் முன்வாசற்படியைக் காக்கும் வாழ்வையடைவாய். (எ-று) 55

கவிராஜ ரும்விருது கட்டியங்கள் கூறிநிற்பார்
தவராஜ ரும்போற்றத் தவறார் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! கவிராஜர்களெல்லாரும் விருதுகள் கட்டியங்கள் சொல்லாநிற்பார்கள், தவசிரேஷ்டர்களும் தவறாமல் போற்றி செய்வார்கள். (எ-று) 56

உன்மீதி லாசித் துயிர்பொருளுன் றாட்களிப்ப
என்மீதி லாசையுனக் கிலையேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! உன்மீது ஆசைவைத்து, உயிர், பொருள் முதலியவைகளை உன்னுடைய திருவடிகளுக்குக் கொடுக்க என்மீதில் உனக்கு ஆசையில்லாதது என்? (எ-று) 57

உள்ள துரிய மெல்லா மொப்புக்கொண்ட பின்னலவோ
கள்ள மனம்படைக்கக் கற்றாய் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! எனக்கு உள்ளதும், உரிமையுடையதுமாகிய எல்லாவற்றையும் நீ ஒப்புக்கொண்டபின்னல்லவா கள்ளத் தன்மையையுடைய மனத்தைப்படைப்பாய். (எ-று) 58

வேசைக் குணத்தை விரும்புவா யென்றறிந்தாற்
காசைப் பணத்தைநான் காட்டேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! நீ வேசிகளின் குணத்தையடைவாயென்று நான் உணர்ந்தால் பணத்தைக்காட்டமாட்டேன். (எ-று) 59

படையாதெல் லாமென்றாற் படைத்துப்பர தேசிகுணங்
குடியாரை யோதேடிக் கொண்டாய் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! என்னால் படைக்காதவைகளையெல்லாம் படைத்துக் கடைசியில் பரதேசியாகிய குணங்குடியாரை தேடிக்கொண்டாய். (எ-று) 60

உத்தமிப் பெண்ணென் றுவந் தேனிப் போதுன்றன்
பத்தினித்த னத்தைநன்றாய்ப் பார்த்தேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! உன்னை உத்தமிப் பெண்ணென்று விரும்பினேன், இப்போது உன்னுடைய பத்தினித்தனத்தை நான் பார்த்துவிட்டேன். (எ-று) 61

என்பற் றுனக்கிருந்தா லிராஜ ராஜேஸ்பரியாய்
ஐம்பத் தறுதேசமுநீ யாள்வாய் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! என்னிடத்தில் உனக்கு ஆசையிருந்தால் நீ ராஜராஜேஸ்வரியாய் ஐம்பத்தாறு தேசங்களையும் ஆள்வாய்.

உள்ள மணவாள னுனக்கெவனோ வென்னைவிடக்
கள்ளமண வாளனிச்சை கடிதோ மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! என்னைவிட உனக்குஉள்ள மணவாளன் எவனோ? கள்ளப்புருஷனிச்சை கடுமையானதோ. (எ-று) 63

வேசியென்ற பேர்படைத்து வெளியிற்புறப் பட்டவளைத்
தாசியென்று சொல்லத் தகாதோ மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! 'வேசியென்ற பேரோடு வெளியிற் புறப்பட்டவளைத் தாசியென்று சொல்லத்தகாதோ? (எ-று) 64

ஆடாதா ட்டமாடி யவிசாரி யானவுனைப்
பாடாதபாட்டுப் பாடிலென்ன பயமோ மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! ஆடக்கூடாத ஆட்டங்களையெல்லாம் ஆடியாடி அவிசாரியான உன்னைப் பாடக்கூடாத பாட்டுக்களையெல்லாம் பாடினால் என்ன? பயமா. (எ-று) 65

மூக்கு முனக்குமுழம் மூன்றேனோ பத்தினியே
நாக்கு முனக்குமுழ நாலேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! நீஎன்னவோ பத்தினிபோல இருக்கிறாய் உனக்கு மூன்றுமுழம் மூக்கும், நான்குமுழம் நாக்கும் ஏன்?

பானைச்சோ றெல்லாம் பதம்பார்த்துத் தின்றாயினி
மான மழியினுயிர் மயிர்தான் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! பானைச்சோற்றை யெல்லாம் பதம் பார்த்து தின்ற இனிமேல் மானமழிந்தால் உயிர்மயிர்தான். (எ-று) 67

இனிக்கண் டறிந்துகொள விவனாண் பிள்ளையானாற்
றனிக்கண்ட போதுபுத்தி தருவான் மனோன மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! இவன் ஆண்பிள்ளையானால் இனிக் கண்டறிந்து கொள்ளப் புத்திகொடுப்பான். (எ-று) 68

பல்லை யிதழ்கடிக்கப் பானை தடியொடிக்கக்
கல்லைத்தேங் காயுடைக்கக் காண்பாய் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! பல்லில் இதழைக்கடிக்கவும், பானையைத் தடியால் உடைக்கவும், கல்லால் தேங்காயுடைக்கவும் காண்பாய்.

தடிபோ லிருந்துனையான் சாதிகெட்ட பாழுங்குணங்
குடியார்க்கெப் படிகூட்டிக் கொடுப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! நான் தடியனைப்போலிருந்து சாதி கெட்ட பாழான குணங்குடியானுக்கு எப்படிக் கூட்டிக்கொடுப்பேன்.

போனதெல்லாம் போச்சு பொழுதும் விடிந்ததினி
யானதெல லாமனத்தி னாடேன மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! போனதெல்லாம் போச்சுது, பொழுதும்விடிந்தது, இனியானதெல்லாம் மனத்தில் நாடமாட்டேன்.

மல்லாந்து நான்படுத்து மார்பிற்றுப்பிக் கொண்டுமினும்
பல்லைக்குத்தி முகர்ந்தோ பார்ப்பேன் மனோனமணியே.

(பொ-ரை) மனோன்மணியே! நான் மல்லாந்து படுத்து மார்பின் மேல்துப்பிக்கொண்டும் இன்னும் பல்லைக்குத்தி முகர்ந்தா பார்ப்பேன்.

என்னைவிட்டால் மாப்பிளையா ரெத்தனையோ வுன்றனுக்கே
உன்னைவிட்டாற் பெண்ணெனக்கு முண்டோ மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! என்னைவிட்டால் மாப்பிள்ளைமார் எத்தனையோ பேர்உனக்கு, ஆனால் உன்னைவிட்டால் எனக்குப் பெண் உண்டோ? (எ-று)

தடித்தனமே செய்தாலுஞ் சமுசாரத் திற்படிந்து
குடித்தனஞ்செய் தாலென்மனக் குறையோ மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! நான் தடித்தனங்களெல்லாஞ் செய்தாலும் சமுசாரத்தில் படிக்குகுடித்தனஞ் செய்தால் என்ன? மனக்குறையோ (எ-று) 74

தொடுத்தணைத்துக் கொண்டே துயில்வன்மற்ற நேரமெல்லாம்
எடுத்தணைத்துக் கொண்டே யிருப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! மற்றநேரங்களெல்லாம் கட்டியணைத்துக்கொண்டே தூங்குவேன். எடுத்து அணைத்துக் கொண்டு யிருப்பேன். (எ-று) 75

படுத்துப் படுத்துநெஞ்சிற் பளிச்சுபளிச் சென்றுமுத்தங்
கொடுத்துக் கொடுத்துநான் கொள்வேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! படுத்துப்படுத்து நெஞ்சில் பளிச்சுபளிச்சென்று முத்திகொடுத்து நான்கொள்வேன். (எ-று) 76

வன்னச்செழும்பவள வாயிதழை நற்சுவைத்துன்
கன்னத்தில் விழ்ந்து கடிப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! உன்னுடைய செழுமையான பவளம் என்னும் வாயிதழைச் சுவைத்துக் கன்னத்தில் விழுந்து கடிப்பேன்: (எ-று) 77

கச்சிறுக்கு மாதரின்பங் கைச்சிறுக்கும் போதவின்பம்
வைச்சிறுக்கு மாதரின்பங் கையிற்கை வைப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! பெண்கள் மேல்வைத்த இன்பத்தினால் வாரிறுக்கிய ஸ்தனங்களின்மேல் கைவைப்பேன். (எ-று) 78

தித்தித் தொழுகுகாம தேனமிர்த ஊறலுண்பேன்
முத்திதழு வித்தழுவி முகப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! தித்தித்து ஒழுகுகின்ற காமதேனுவின் அமிர்தத்தை உண்பேன் முத்தியைத்தழுவித்தழுவி விரும்புவேன்.

படியோர்க்கெல் லாமுயன்ற படியோர்க ளானகுணங்
குடியோர்கள் போலுமின்பங் கொள்வேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! உலகத்தார்களுக்கெல்லாம் உயர்ந்த உலகத்தவர்களான குணங்குடியோர்கள் மேலும் இன்பத்தைக் கொள்ளுவேன். (எ-று) 80

சேயாய பென்படியிற் செங்கீரை யாடியருட்
டாயாவு மங்கை தருவாய் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! குழந்தையாகியும், என்னுடைய மடியில் செங்கீரையாடி திருவருட்டாயாயும்அழகியகையைக்கொடுப்பாய்.

அங்கைதந்து தந்தே யணைதா யருளமிர்தங்
கொங்கைதந்து தந்தே கொடுப்பாய் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! அழகியகையைக் கொடுத்துக்கொடுத்து சேர்த்தினாய் இனி திருவருட்கொங்கையைக் கொடுக்கவேண்டும்.

தாவியணைத்தென் றாயேயுனை யென்றிந்தப்
பாவி மடியில்வைத்துப் பார்ப்பேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! என்னுடைய தாயே! உன்னைத் தாவியணைத்து இந்தப்பாவியின் மடியில் வைத்துப்பார்ப்பது என்றைக்கோ.

ஏங்கியழு வேனோவுன் னிணையடியைக் காணமற்
றூங்கிவிழு வேனோவென் றோழி மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! என்னுடைய தோழீ! நான் ஏங்கியேங்கி அழுவேனோ? உன்னுடைய இரண்டு திருவடிகளையும் காணாமல் தூங்கிவிழுவேனோ? (எ-று) 84

உலைபோ லெரியுமென்ற னுளங்குளிர மேல்வளர்ந்த
மலைபோ லெழுந்தருளி வருவாய் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! கொல்லனுலையைப்போல எரிகின்ற என்னுடைய மனமானது குளிர்ச்சியடைய மேலே உயரவளர்ந்த மலையைப்போல எழுந்தருளிவருவாய். (எ-று) 85

கன்ம மறுவதெந்தக் காலமோ யானறியேன்
நன்மை தருவதெந்த நாளோ மனோன் மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! என்னுடைய கர்மம் அறுவது எந்தக் காலமோ? எனக்கு நன்மை கொடுப்பது எந்நாளோ? நான் அறியமாட்டேன். (எ-று) 86

பன்னீ ரொழுகுமுன்றன் பாத மலரையென்றன்
சென்னிமீ தென்றுமருள் செல்வாய் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! பன்னீர் ஒழுகுகின்ற உன்னுடைய மனம் போன்ற திருவடிகளை என்னுடைய சிரசில்வைத்து எப்போதும் அருள்செய்யவேண்டும். (எ-று) 87

தாயினுமிக் காங்கருணைத் தயாநிதியே யிவ்வுரையே
நாயினுமிக் காங்கடையே னவின்றேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! தாயைப்பார்க்கிலும் மிகுந்த கருணையையுடைய தயாநிதியே! இந்தச் சொல்லை நாயிற்கடைப்பட்டவனான நான் சொன்னேன். (எ-று) 88

கால்பிடித்துக் கண்ணில்வைத்துக் கைகுவித்து மெய்மயங்கி
மால்பிடித்துச் சொன்னதெல்லா மகிழ்வாய் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! உன்னுடையகாலைப்பிடித்து என்னுடைய கண்ணில்வைத்துக் கைகுவித்து மெய்மயங்கி மயக்கங்கொண்டு சொன்னவைகளை யெல்லாம் மகிழ்வாய். (எ-று) 89

அடியானை யுன்னடியார்க் கடியானு மாக்கிகுணங்
குடியா னெனப்பிரியங் கொடுப்பாய் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! அடியவனை உன்னுடைய அடியவர்க்கு அடியவனுமாக்கி குணங்குடியானே! என்றுசொல்ல இஷ்டங் கொடுப்பாய். (எ-று) 90

உச்சிதவச் சிரமலையே யொப்பில்லா மாணிக்கமே
கச்சிதப் பச்சைமர கதமே மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! உயர்ந்த தவசிரேஷ்ட மலையே! ஒப்பில்லாத மாணிக்கமே! கச்சிதமான பச்சைமரகதமே. (எ-று) 91

செப்புறு வாணிமுத்தே சிறந்தபவ ளக்கொடியே
புட்பரா கக்கமலப் பூவே மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! சொல்லாத கெட்டிமுத்தே! சிறந்த பவழக் கொடியே! புஷ்பராகக் கமலப்பூவே! (எ-று) 92

கோமே தகமே குளிர்ந்தவயி டூரியமே
மாமேரு வேநீல மலையே மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! கோமேதகமே! குளிர்ந்தவயிடூரியமே! மகத்தானமேருமலையே! நீலமலையே. (எ-று) 93

வற்றா வருட்செல்வ வாழ்வேக ருணாநிதியே
பொற்றா மரைக்கமலப் பொகுட்டே மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! வற்றாத அருட்செல்வவாழ்க்கையே! கருணாநிதியே! பொன்தாமரைப் பூவின்பொகுட்டே! (எ-று) 94

அல்லி மலரே யலர்செங்க ழுநீர்மலரே
மல்லிகைக் கொத்து மலரே மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! அல்லிமலரே! அலர்கின்ற செங்கழுநீர் மலரே! கொத்துமல்லிகையின்மலரே! (எ-று) 95

பொன்மலரே பன்மலரே புகழ்தருபன் னீர்மலரே
மன்மத பாணமா மலரே மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! பொன்மலரே! பலவகைப்பட்ட மலரே! புகழ்கின்ற பன்னீர்மலரே! நீலோற்பலமலரே! (எ-று) 96

குடலை நிறைந்தழகு கொக்கலரிச் செம்மலரே
மடலவிழ்ந்த செந்தாழை மலரே மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! குடலைநிறைந்திருக்கின்ற கொக்கலரி மலரே! மடல்விரிந்த செந்தாமரைமலரே! (எ-று) 97

பூக்கு மருண்மலரே புளிக்காத மாமலரே
வாக்கு மலரேகண் மலரே மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! பூக்கின்ற அருள்மலரே! புளிக்காத மாமலரே! வாக்குமலரே! கண்மலரே! (எ-று) 98

வஞ்சியர்செய் மோசமுடன் மறலிசெயு நாசத்திற்கு
மஞ்சி யுனக்கடிமை யானேன் மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! பெண்கள் செய்கின்றமோசமுடனே எமன் செய்கின்ற நாசத்திற்குப் பயந்து உனக்கு அடிமையானேன். 99

அடியாரும் வாழியிந்த வடியேனும் வாழிகுணங்
குடியாரும் வாழிகுணக் குன்றே மனோன்மணியே.

(பொ-ரை) மனோன்மணியே! குணமலையே! அடியார்களும்வாழி அடியேனும்வாழி, குணங்குடியாரும்வாழி! (எ-று) 100

உமையாள்பாத முன்னிற்க.

ஆதியந்தங் கடந்தவுமை யாடன் பாதம்
அகண்டபரி பூரணமா மையர் பாதஞ்
சோதியந்தங் கடந்தகண பதியின் பாதந்
தொழுதிறைஞ்சிக் கரங்குவித்துப் போற்றி செய்து
வாதியந்தங் கடந்தநந்தி பாத மென்றும்
வாலைமனோன் மணியம்மை பாத மென்றும்
ஓதியந்தங் கடந்தண்ட மிரண்டதாக
ஒன்றுமறி யாவறிஞ னுரைசெய் தானே.

(பொ-ரை) ஆதியந்தங்களில்லாத உமையம்மை, அகண்டமும் பரிபூரணமுமாயிருக்கின்ற இறைவன், சோதிமயமான அந்தமல்லாத கணேசன், இவர்களுடையதிருவடிகளை வணங்கி நமஸ்காரஞ்செய்து துதித்து வாதென்று மில்லாத நந்தீஸ்வரர் வாலையான மனோன் மணி, இவர்களுடைய திருவடிகளை எக்காலத்திலும் துதித்து ஒன்று மறியாத ஏழை இதைச்சொன்னேன்! (எ-று)

மனோன்மணிக்கண்ணி - முற்றுப்பெற்றது.

ஆக பாடல் 763.

# நந்தீஸ்வரக்கண்ணி.

ஆதியந்தங் கடந்தவுமை யாளருணா தாந்தச்
சோதியந்தங் கடந்தசெழுஞ்சுடரேநந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! ஆதியந்தமென்பவைகளில்லாத உமா தேவியின் அருளைப்பெற்ற நாதாந்தச் செழுஞ்சுடரே! (எ-று) 1

முடியடியாய் நின்றநடு மூல மணிவிளக்கே
அடிமுடியாய் நின்றநடு வணையேநந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! முடியும் அடியாய் நின்ற நடுமூலத்தில் விளங்குகின்ற மாணிக்கவிளக்கே! அடியும் முடியுமாய் நின்ற நடு வணையே. (எ-று) 2

கர்த்தனே யானுன் கருணைத் திருவடிக்கே
எத்தனைதான் றெண்டனிடுவேனந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! கர்த்தனே! நான்உன்னுடைய கருணை யையுடைய திருவடிகளுக்கு எத்தனை தெண்டன் சமர்ப்பிப்பேன். 3

தீர்க்கதெண்ட னிட்டேன் றிருவடியைப் போற்றிசெய்தேன்
வாக்கு நடக்க வரமருணந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! தீர்க்கமாகக்கும்பிட்டேன், திருவடி களைத் துதிசெய்தேன், எனக்கு வாக்குநடக்க வரந்தந்தருள். (எ-று) 4

மாசில் பரவெளியே மவுனமணி மாளிகையில்
வாயிற் பெருவழியே மகத்தேநந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! குற்றமற்ற பரவெளியே! மவுனமென் னும் அழகிய மாளிகையின் வாசலில்வாழ்கின்ற பெரிய வாழ்க்கையே.

மகத்தோனே ஞான மழையே யருள்வெள்ள
முகத்தோனே மோன முனையேநந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! மகத்தானவனே! ஞானமழையே! திரு வருள் வெள்ள முகத்தவனே! மௌனமுனையே! (எ-று) 6

ஞானம் விளைவேற்று நல்லசமு சாரிகட்கு
மோன மழையூற்றி முகிலேநந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! ஞானவிளைவை ஏற்று நல்ல சமுசாரி களுக்கு மௌன மென்னும் மழையை பொழிகின்ற மேகமே! (எ-று)

மும்மூல யோக முழுதுஞ்சித்தி செய்துதர
உன்னாலே யாகு முயிரேநந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வ்ரனே மூன்றுமூலயோகங்கள் முழுமையும் சித்திசெய்து கொடுக்க உன்னாலாகும். (எ-று) 8

சமர்கொடுத்து வென்றோங்கு சாம்பவியைக் கைப்படுத்தித்
தமர்விடுத்து நீக்கித் தருவாய்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! சண்டையைக் கொடுத்து ஜெயித்து ஓங்குகின்ற சாம்பவியைக் கைக்குட்படுத்தி தமர்விடுத்தி நீக்கிக்கொடுப்பாய். (எ-று) 9

நல்லோர்க்கு நீகாட்ட நல்குங் குணக்குடிவாழ்
வெல்லோர்க்கு நேர்காட்ட வெளிதோநந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! நல்லவர்க்கு நீ காட்டகொடுக்கின்ற குணக்குடியின் வாழ்வு எல்லாருக்கும் நேராகக்காட்டலேசானதா? 10

இல்லி னிடங்காட்டி யிதழ்விரியுஞ் செங்கமல
வல்லி னிடங்காட்டி வைப்பாய் நந்தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! வீட்டினிடத்தைக்காட்டி மலர்விரிகின்ற செந்தாமரைவல்லியினிடமுங் காட்டிவைப்பாய். (எ-று) 11

சாதுதனை யுஞ்சுத்த சைதந்ய மானசிவ
காமிதனை யும்மென்று காண்பேனந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! சாமியையும், சுத்தசைதன்யமான சிவகாமியையும் நான் என்றைக்குக் காண்பேன். (எ-று) 12

உமையாளு மெய்யா யுவந்தடிமை கொள்ளும்வண்ண
எமையாளு மையா விறையேநந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! ஐயனே! இறையவனே! உமாதேவியும் மெய்யாக விரும்பி அடிமைகொள்ளும்படி எமையாளவேண்டும்.

கேசரத்தைக் காட்டி கிளரொளியா டன்னருட்பால்
ஆசரித்தே யூட்ட வருள்வாய்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! கேசரத்தைக் காண்பித்து விளங்குகின்ற ஒளியானவன் தன் அருட்பாலை யாசரித்து ஊட்ட அருள்வாய்.

சத்தி சிவமுதலாச் சாம்பவியம் பாளருளிற்
செத்த சிவமுதலாச் சித்தாநந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! சத்தி, சிவம் முதலாகச் சாம்பவியம்பாளின் அருளில் செத்த சிவமுதலாகிய சித்தாம் (எ-று) 15

சித்தாளை யீன்ற சிறுபெண்ணாந் தாளிரண்டு
பெற்றாளை யென்றோ புணர்வேனந் தீஸ்வரனே

(பொ-ரை) நந்தீஸ்வரனே! சித்தாளைப்பெற்ற சிறுபெண்ணானவள் இரண்டு திருவடிகளையும் என்றைக்குப் புணர்வேன். (எ-று) 16

பத்து வயதுடைய பாவையரை யன்றோநீ
சித்தர்க்கெல் லாந்தாயாய்ச் செய்தாய்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! பத்துவயதுள்ள பெண்ணையல்லவா நீ சித்தர்களுக்கெல்லாந் தாயாகச்செய்தாய். (எ-று) 17

காமரூபி யைநித்ய கல்யாண சுந்தரியை
ஓமரூபி யையெற்கு முதவுநந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! காமரூபியை, நித்தியகல்யாணசுந்தரியை, ஓமரூபியை, எனக்கும் உதவவேண்டும். (எ-று) 18

கேசரியா டன்கருணை கிட்டினன்றோ வாசாம
கோசரவாழ் வெல்லாங் கொடுப்பாய்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! கேசரியில் வாழ்பவனின் திருவருள் கிட்டினலல்லவா வாசாமகோசர வாழ்வெல்லா வற்றையுங் கொடுப்பாய். (எ-று) 19

மூலவெளி சூட்டி மோனக் குணங்குடிக்கும்
மேலைவழி காட்டி விடுவாய்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! மூலாதார ஒளியைச்சூட்டிமௌனமான குணங்குடிக்கும் மேலைவழியைக்காட்டி விடுவாய். (எ-று) 20

கண்டப்பா லங்கடத்தி கமலாசனத் தேற்றி
அண்டப்பா லுங்கொடுக்கை யருள்வாய்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! கண்டமென்னும் பாலத்தைத் தாண்டுவித்து தாமரையாசனத்தில் ஏற்றி அண்டப்பாலையுங் கொடுத்தருளுவாய். (எ-று) 21

செங்கமல பீடச் செல்வியர்தாஞ் சித்தம்வைத்தா
றங்கமாலை சூடத் தருவனந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! செவந்த பத்மாசனத்தில் வீற்றிருப்பவர்கள் மனம் வைத்தால் தங்கமாலையைக் சூடக்கொடுப்பான். (எ-று)

போதகத்தைப் பூட்டிப் புருவமையத்தாயு மெற்கும்
வாதவித்தை காட்ட வருவாய்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! போதகஞானத்தைப்பூட்டிப் புருவமத்தியிலே ஆராய்கின்ற எனக்கு வாதவித்தையை யருளிச்செய்யவருவாய்.

ரசயோக சித்து நாயனருளினு லடிமை
நிசயோக முற்று நிலைப்பேனந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! ரசவாத யோகத்தின் சித்திணைக்கடவுளின் திருவருளினுல் அடிமையானநான் நிசமான யோகத்தையடைந்து நிற்பேன். (எ-று) 24

மகாவித்தை காய்ப்பதற்கு மதியமிர்த ஆறலுண்டே
லகிரியுற்று நிற்பதற்கு லபிப்பாய்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! மகாவித்தை யென்கிற காய்காய்ப்பதற்கு சந்திராமிர்தத்தின் ஊறலைப்பானஞ் செய்து நான்மயக்கங் கொண்டிருக்க அருள்செய்வாய். (எ-று) 25

குப்பை வழலையெனுங் கோழையெல்லாங் கக்கவைத்துக்
கற்ப வழலைவரக் காட்டுநந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! வழலையென்ற குப்பைகளையெல்லாம் கக்கவைத்து கற்பம் என்கிற வழலையானது எனக்குக்கிடைக்கும் வழியைக் காட்டுவாய். (எ-று) 26

கற்ப வழலைவரக் காட்டிகற்ப முண்டதற்பின்
பற்ப வழலைமுறை பகர்வாய்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! கற்பமென்னும் வழலையை வரக்காட்டி அந்தக்கற்பம் உண்டதன்பிறகு பற்பமென்னும் வழலையின் முறைமையைச் சொல்ல வேண்டும். 27

ரூதமுத னீற்றிற் சொன்னமதி யமிர்தப்ர
சாதமதி லூற்றித் தருவாய்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! ரசமுதலிய நீற்றிற் சொல்லப்பட்ட மதியமிர்தத்தை பிரசாதத்தில் ஊற்றிக்கலந்து கொடுப்பாய். (எ-று)

அற்பதே கமதா யடியே னெடுத்தவுடல்
கற்பதேக மாய்க் கணிப்பாய்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! அற்ப சரீரமாக எளியவனான நான் எடுத்த உடலைக் கற்பசரீரமாய்ச் செய்வாய். 29

உமைநம்பி னோர்வாழு மோங்கு குணங்குடியார்க்
கெமனும் பிறையாரு மெதிரோநந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! உம்மைநம்பினவர்கள் வாழ்கின்ற உயர்ந்தகுணங்குடியாருக்கு எமனும், பிறரும் எதிரிகளோ. (எ-று) 30

முநீஸ்வாரி லொன்றாய் முடித்தருள்வா யாகிலெனைச்
சநீஸ்வார் கூடச் சாட்டாய்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! முநீஸ்வரர்களில் ஒருவனாக என்னை செய்வாயாகில் சநீஸ்வரருடன் கூடச்சாட்டுவை. (எ-று) 31

காலனும் போய்விடுவான் காலங்கடந்துசிறு
பாலனும் மாய்விடுவேன் பரமேநந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! பரவஸ்துவே! எமனும் போய்விடுவான், காலத்தைக் கடந்து சிறிய பாலகனுமாவேன். 32

கவன மணிமுதலாய்க் கட்டியென் கைக்குளிக்க
மவுன மணித்தாய்க்கு வகுப்பாய்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! கவனமணிமுதலாக யாவையும் கட்டி என்னுடைய கைக்குக்கொடுக்க மௌனமென்னும் அழகிய தாய்க்கு அருளுவாய். (எ-று) 33

மாயை வலைவீசி மயக்காமலென்றன்மேல்
நேய வலைவீச நிகழ்த்துநந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! மாய்கைஎன்னும் வலையை வீசிமயக்காமல் என்மேல் ஆசைவலையை வீச அருளாய். (எ-று) 34

தோகை யிளமின்னார் சுகபோக மும்பசியும்
போக வழிசொன்னாற் போதும்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! மயிலைப்போலும் இனிமையான பெண்களின் சுகபோகமும், பசியும் போய்விட வழிசொன்னாற் போதுமானது. (எ-று) 35

பெண்ணா யுலகமெல்லாம் பிணக்காட தாக்கியையோ
மண்ணாய் மடிவதென்ன மாயம்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! உலகமெல்லாம் பெண்ணாய்ப் பிணக்காடாக்கி அந்தோ! மண்ணாகச்சாவது என்னமாயம். (எ-று) 36

சையோகப் பித்தவெல்லைச் சமர்த்தோடு கச்சைகட்டு
மெய்யோகப் புத்திசொல்ல வேண்டும்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! சையோகமென்னும் பித்தினைவெல்ல சாமர்த்தியத்துடன் கச்சைப்பட்டையைக் கட்டிக்கொள்ளுகின்ற உண்மையோகஞ்செய்யும் புத்தியைச் சொல்லவேண்டும். (எ-று) 37

பாஷாண்டி கடோறும் பலனொன்று மின்றிவெறும்
வேஷாண்டி யாக்கி விடுகாண்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! பாஷாண்டிகளெல்லாம் யாதொரு பலனுமில்லாமல் வெறும் வேஷம்பூண்ட ஆண்டிகளாக்கிவிட வேண்டும். (எ-று) 38

பிணம்பிடுங்கித் தின்னும் பேய்போற் சிலருளையர்
பணம்பிடுங்கித் தின்பதென்ன பாவம்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! பிணத்தைப்பிடுங்கித்தின்ற பேயைப் போல சிலருளைஞர்கள் பணத்தைப் பிடுங்கித்தின்கிறார்கள், அது என்னபாவம். (எ-று) 39

பணமுடியா னென்றும் பவம்பிடியா னென்றுமெனைக்
குணங்குடியா னென்றுங் குறிப்பாய்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! என்னை பணம் முடியாதவனென்றும், பாவஞ்செய்யாதவனென்றும் குணங்குடியானென்றும் குறிக்கவேண்டும். (எ-று) 40

உன்னையன் றியேழை யோரோ ரொருவரையும்
அன்னையென் றுமாள வருள்வாய்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! ஏழையாகிய நான் உன்னையல்லாமல் ஒருவரையும் உணரமாட்டேன் ஆகையால் அன்னையாகிய நீ என்றும் ஆண்டருளவேண்டும். (எ-று) 41

ஆத்தாளைத் தேடி யலேந்தலேந்து விண்பறக்குங்
காற்றாடி யானேனென் கண்ணேநந் தீஸ்வரனே.

(பொ-ரை) என்கண்ணே! நந்தீஸ்வரனே! ஆத்தாளைத்தேடி அலேந்தலேந்து ஆகாயத்தில் பறக்கின்ற காற்றாடியானேன். (எ-று) 42

மான்பிரிந்த கன்றாய் மயங்குதற்கென் றாய்வயிற்றி
லேன்றந்த கன்றே யிருந்தேன்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! மானைப்பிரிந்த கன்றைப்போல மனம் வருந்துவதற்கு என்னுடையதாய் வயிற்றில் ஏன்பிறந்து அகன்றிருந்தேன்? 43

ஏனோ வென்னையீன் றாளென்தாயிவ் வாறுசெயத்
தானோ விதானுமென்செயத் தானோநந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! என்தாய் என்னை ஏன்பெற்றாளோ? இவ்வாறு செய்வதற்குத் தானோ? இன்னும் என்ன செய்யவோ? (எ-று)

தாய்தாயே யென்றே தலேப்புறட்டக் கொண்டுவெறு
வாய்வாயை யென்றோடி மடிவேனந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! தாயேதாயே என்று தலேபுரட்ட அதைக்கொண்டு வெறும் வாயையென்று ஓடி இறைப்பேன். (எ-று) 45

தாயைவிட்டுப் பிள்ளை தவிப்ப தறிந்தவுடன்
சேயையிட்டம் வைத்தணைக்கச் செய்வாய்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! தாயைவிட்டுப் பிள்ளைதவிப்பதை உணர்ந்தவுடனே அப்பிள்ளையை இஷ்டம்வைத்து அணைக்கச்செய்வாய். (எ-று) 46

கன்றினுக் கேயிறங்கு காலியென் வென்மனைத்தாய்
என்றுமெனக்கிரங்க விசைப்பாய்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! கன்றின்பொருட்டு மனமிரங்கும் பசுவைப்போல என்வீட்டுத்தாயை என்றைக்கும் உன்பொருட்டு மனமிரங்கச் செல்லுவாய். (எ-று) 47

மாயை மணமுடித்து மயக்காதெனை யீன்ற
தாயை மணமுடித்தது தருவாய்நந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! மாயையை எனக்குக் கலியாணஞ் செய்து என்னை மயக்காமல் என்னைப்பெற்றதாயை எனக்குக் கலியாணஞ் செய்விப்பாய். (எ-று) 48

தற்பரத்தி னல்வெளியே சர்வபரிபூரணமே
சிற்பரத்தி னேரொளியே சிவமேநந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! தற்பரத்தின் நல்லவெளியே! எங்கும் நிறைந்த வஸ்துவே! ஞானப்பலத்தின் ஒளியே! சிவமே. (எ-று) 49

முத்தரெலாம் வாழியெங்கண் மோனமணித் தாயருளுஞ்
சித்தரெலாம் வாழிசுத்த சிவமேநந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! சுத்தசிவமே! முமூட்சுக்களெல்லாம் வாழக்கடவர், எங்களுடைய மௌனமென்னும் அழகியதாய் அருளுகின்ற சித்தர்களெல்லாம் வாழி. (எ-று) 50

குற்றம் பலநீக்கிக் குணங்குடி யென்றேமேவுஞ்
சிற்றம் பலம்வாழ் சிவமேநந் தீஸ்வரனே.

(பொ-ரை) நந்தீஸ்வரனே! குற்றம்பலவற்றையும் நீக்கிக்குணங்குடி என்று பொருந்துகின்ற சிற்றம்பலம் வாழ்சிவனே! (எ-று) 51

கட்டளைக் கலித்துறை.

மடக்கி மடக்கி வருமா யினுஞ்சொல்லு மாண்பொருளும்
அடக்கி யடக்கிக் கிடக்குங்கண் டீர்பல னாய்ந்துகொள்வார்
நடக்கினு மாமன வுண்மையி னுள்ளி நடையொழிந்து
கிடக்கினு மாமென் றறிதாநாடிக் கிளத்தியதே.

(பொ-ரை) சொல்லும் பொருளும் மடக்கிமடக்கிவந்தாலும் அவைஅடக்கிக்கிடக்கும், ஆனால்பலனை யாராய்ந்து கொள்பவர் நடந்தாலும் மனவுண்மையில் நினைந்து நடையொழிந்து கிடந்தாலும் அனுபவமாகும் ஆமென்றறியச் சொன்னதேயாம். (எ-று)

நந்தீஸ்வரக்கண்ணி முற்றிற்று.

ஆ பாடல் - 932

———*———

# கீர்த்தனைகள்.

இரா-புன்னாகவராளி-தாளம்-அடசாப்பு

பல்லவி.

பாமுத்தன் குணங்குடி தெருவில் வரும்பவனி
பார்த்து வருவோம் வாருங்கள்.

(பொ-ரை) உயர்ந்த மோட்சங்கொடுக்குந் தலைவனானவன் குணங்குடியின் தெருவில் வருகின்ற பவனியைப்பார்த்து வருவோம் வாருங்கள். (எ-று)

அநுபல்லவி.

வாமுத்தர் சுர கணந் தாமுற்றவர்களிரு
பாமெய்த் தினியதுதி தாமுத்தி யருளுநம் (பாமுத்)

(பொ-ரை) நல்வரம்பெற்றவர்களும் தேவர்களும் நல்ல பதவியையடைந்தவர்களும் அதிக்க மோட்சங்கொடுக்கின்றநம்முடைய. (எ-று)

சரணங்கள்.

சாத்திரவேதஞ் சலாம்-சலாம் சலாமென்ன
ஜகஜோதி மின்னல் பளீர்-பளீர் பளீரென்ன
பேர்த்துளம் போற்றும் றகீம்-றகீம் றகீமென்ன
பிசுமில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீமென்றுள்
அசையாம லொருநிலை விசுவாச மருளுநம் (பாமுத்)

(பொ-ரை) சாத்திரங்களும், வேதங்களும், சலாம் என்னவும், தேஜோமயமானது பளீர் பளீர் என்று மின்னவும், மனமானது றகீம், றகீம், றகீம் என்னவும், பிசுமில்லா ஹிற்றஹ்மானிற்றஹீம் என்று மனஞ் சஞ்சலமடையாமல் ஒரேநிலையான விஸ்வாசத்தையருள்கின்ற நம்முடைய! (எ-று)

கருமமத்தளதாளந் திடீல்-திடீல் திடீலென்ன
கைம்மணியோசை கணீல்-கணீல் கணீலென்ன
திருவருளாட்டந் திடும்-திடும் திடுமென்ன
தினத்தக்தோம் தினத்தக்தோம் மனத்தொக்தோமனத்தொக்தோம்
உனத்தாளினைத்தையு நினைத்த படியாகநம் (பாமுத்)

(பொ-ரை) மத்தள தாளங்களின் ஓசை திடீல், திடீல் என்னவும் கையிலுள்ள மணியோசை கணீல், கணீல் என்னவும், திருவருள் நடனமானது திடும், திடும் என்னவும், அநந்தவகை தாளத்துடன் நடனஞ் செய்கின்ற திருவடிகளை நினைத்தபடியாக நம்முடைய, (எ-று)

நாசச் சரீரம் நரேல்-நரேல் நரேலென்ன
நஞ்சு வினைகள் சரேல்-சரேல் சரேலென்ன
வீசு மருட்கள் விறீல்-விறீல் விறீலென்ன
வேதவா ளெடுத்தேந்தி சோதிவா சியிலேறி
ஆதி பிசுமிலுட னேதிக் கலிமாவை நம் (பாமுத்)

(பொ-ரை) நாசமாகின்றசரீரமானது நரேல், நரேல் என்னவும், கொடிய வினைகள் சரேல், சரேல் எனவும், மாய்கைகள் விறீல் விறீல் என்னவும், வேதமென்னும் வாள்பிடித்தேந்தி, சோதி என்னும் குதிரையில் ஏறி ஆதிபிசுமிலுடனே துதித்துக் கலுமாவை நம்முடைய. எ-று

நாடாத பேர்கள் பயம்-பயம் பயமென்ன
நம்பிய பேர்கள் ஜயம்-ஜயம் ஜயமென்ன
தேடிய பேர்கள் நயம்-நயம் நயமென்ன
திக்குத் திசைகளெங்குமிக்க வொளிபரப்பி
ஒக்க வுலகமொரு கைக்குள் ளடக்குநம் (பாமுத்)

(பொ-ரை) உன்னை விரும்பாத பேர்களெல்லாம் பயம் பயம் என்னவும், விரும்பின் பேர்களெல்லாம் ஜயம், ஜயம், என்னவும், தேடின பேர்கள் எல்லாரும் நயம் நயம் என்னவும், திக்குதிசைகளிலெல்லாம் மிகுந்த தேஜஸை வெளிப்படுத்தி உலகம் யாவற்றையும் ஒருகைக்குள் அடக்குகின்ற நம்முடைய. (எ-று)

இராகம்-சௌராஷ்டிரம்- தாளம்-சாப்பு.

பல்லவி.

இல்லல் லாகூவென் றென்னை மறந்துகொண்
டிருப்பா யென்மனெஞ்சமே

(பொ-ரை) ஓ மனமே! இல்லல்லாகூ என்று துதிசெய்துகொண்டு நான் என்பதை மறந்திருப்பாய். (எ-று)'

அநுபல்லவி.

அல்லல்லா கூவென்ற வகண்டித கண்டா
நல்லா யிருக்குது காணும்-ஒரு
சொல்லாலே இப்படித் தோணும்-ஒரு
உல்லாச மாலாயிலாக (இல்லல்)

(பொ-ரை) அல்லல்லாகூ வென்றது கண்டிக்கப்படாததாய் நன்றாயிருக்கிறது ஒரு சொல்லாலே நன்றாய் விளங்கும், மிகவும் உல்லாசமாக லாயிலாக. (எ-று)

அண்டபுவனங்க ளென்று மிருப்பதை
யாதென் றறியாது தானே-எங்கும்
நின்று நிறைந்து மறைந்து சிறந்த
நெடிய நிராமயத் தானே-முதல்
பண்டு பழகிய நாட்டத்துக் கேயது
பாவைக்கூத்தானது தானே-நீ
கண்டு களித்துச் சகலமும் விட்டுக்
கரையேறி னால்நலந் தானே-தான்
சென்ற விடஞ்செயந் தானே-தன்னைக்
கண்டுகொண்டு லாயிலாக (இல்லல்)

(பொ-ரை) சகலபுவனங்களிலும் அறியாமலிருப்பதும் யாதொன் றறியாமலிருப்பதும், எவ்விடத்தும் நிறைந்து மறைந்து சிறந்த நீண்ட நோயற்றதும், பழைய நடனஞ்செய்வதும், எல்லாவற்றையுங்கண்டு சந்தோஷித்து சகலபந்தங்களையும் விட்டுக் கரையேறினால் நன்மை தானே அப்போது சென்றவிடத்தில் ஜெயந்தான் ஆனால் தன்னைத்தா னறிந்துகொண்டு லாயிலாக. (எ-று)

கெட்ட மனத்தை யடையவெருமைக்
கிடாவினைப் போலவு முண்டோ-காசைக்
கட்டிப் புதைத்துக் கடைசியிற் சாகின்ற
கழுதைகட் கும்பல னுண்டோ-சுத்த
மட்டிப் பயல்கள் மனத்தைக் கரைக்க
மருந்துகள் மாத்திரை யுண்டோ-வெகு
சட்டம தாகிய நிட்டையிராத
சண்டாளர்க்குச் சாஸ்திர முண்டோ-இந்தத்
துட்டரைப் போலவு முண்டோ-நீ
கெட்டியுடன் லாயிலாக (இல்லல்)

(பொ-ரை) கெட்ட மனத்தையடைய எருமைக்கடாவைப்போலு ண்டா? காசைப்புதைத்து வைக்கின்ற கழுதைகளுக்குப் பலன் உண் டா? மட்டிப்பையல்கள் மனத்தைக் கரைக்க மருந்துகளாவது மாத்தி ரைகளாவதுண்டா? நிஷ்டையிராத சண்டாளர்களுக்குச் சாஸ்திரமுண் டா? இந்தத் துஷ்டரைப்போலுண்டா? இல்லை ஆகையால் நீ கெட்டி யாக லாயிலாக. (எ-று)

இல்லல்லா கூவென் றேகாணிராமல்
இணைபடவு மிருந் தேனே-மெத்த
நல்ல நோன்புடன் றொழுகையும்விட்டு
நலங்களையுமறந் தேனே-தன்னை

வெல்லுங் குருபான் சொல்லிய தீக்ஷை
  வினவாமல் விட்டிருந் தேனே-அதை
அல்லும் பகலுமறியாம லென்னுள்ளே
  ஆபாச மாக்குவித் தேனே-இது
    எல்லா மறிந்திடுந் தானே-சொல்
    சொல்லுஞ் சொல்லும் லாயிலாக (இல்லல்)

(பொ-ரை) நான் இல்லல்லாகூ வென்று இராமல் சும்மாவிருந் தேனே, நல்லவிரதங்களையும் வணங்குவதையும் விட்டேனே, குருவா ணையைவிட்டிருந்தேனே, இரவும் பகலுமில்லாமல் ஆபாசவுள்ளமானே னே இவைகளையெல்லாம் அறிந்தும் சொல்லுகின்ற லாயிலாக.(எ-று)

பூசைகள் செய்கிறே னென்று திரிந்து
  புலம்பிய பாபமும் போக்கி-பெண்கள்
ஆசையி ஞலேனெயகந் தாங்கள்
    அடிபட்ட துமலகு வாக்கி-எங்கள்
ஈசன் திருவடி யாசையுள் ளானபின்
  என்னைக்கை யாலவர் தூக்கி அந்தத்
தோஷத் தனங்க டொலையத் தொழுநற்
  றறைகளைப் போதனை யாக்கி-கெட்ட
    பாசங்களைவிட்டு நீக்கி-தந்த
    வாசியுடன் லாயிலாக (இல்லல்)

(பொ-ரை) பூசைசெய்கின்றேனென்று திரிந்து புலம்பியபாவத் தைநீக்கி ஸ்திரீகளின் ஆசையினுல் அடிப்பட்டவை லகுவாக்கி எங்களு டைய கடவுள் திருவடியாசையுண்டான என்னைக் கையினுல் தூக்கி அந்தத்தோஷ தனங்களெல்லாம் தொலையத்தொழுகின்ற நன்மார்க் கங்களைப் போதித்து கெட்ட மாய்கைகளை விட்டு நீக்கி கொடுத்த சர த்துடனே லாயிலாக. (எ-று)

எண்சா ணுயரத் திருக்கும் பனங்க
  ளிறக்கி யுண்ணேன் மனக் கண்ணே-கெட்ட
கஞ்சாவுங்கள்ளு மாக்கு பபினுங்
  கலப்பதை விடுவெறு மண்ணே-நீ
தஞ்சா வூராளு மகாராஜன் பாதந்
  தணிந்து நமஸ்காரம் பண்ணே-என்றன்
கொஞ்சப் பெலனுள்ள காயாபுரிஎன்ற
  கோட்டை யிடித்திடு மெண்ணே-அவர்
    அஞ்சா திடிப்பரென் றெண்ணே-இனிக்
    கொஞ்சிக் கொஞ்சி லாயிலாக (இல்லல்)

(பொ-ரை) மனமான கண்ணே! என்சாண் உயரத்திலிருக்கின்ற பனங்கள்ளை யிறக்கியுண்ணேன் கெட்ட கஞ்சா, கள்ளு, அரக்கு, அபின் இவைகளை கலந்து உபயோகிப்பதைவிடு, நீ தஞ்சாவூரை யாள்கின்ற மகாராஜன் பாதத்தை நமஸ்காரஞ்செய், கொஞ்சம் பலமுள்ள காயா புரி என்னும் கோட்டையை இடித்திடுமெண்ணே அவர் பயப்படாமல் இடிப்பாரென்று நினைத்துக்கொள் ஆகையால் இனிமேல் கொஞ்சிக் கொஞ்சி லாயிலாக. (எ-று)

என்ன விதமென்று சொல்வேன் முழக்க
முழங்குவ தென்னுக்குள் ளாலே-ஒரு
அன்ன மிருந்தே யழகுபிறக்க
அசைந்தசைந் தாடுவ தாலே-அதன்
முன்னாலே யான்செய்த பாக்கியங்கண்டு
மூன்றாசை யில்லாத தாலே-அது
தன்னாலே யானந்த வெள்ளம் பெருகித்
தடையறப் பாய்வத னாலே-பயிர்
அன்ன பிடிப்பத னாலே உனக்
கென்ன குறை லாயிலாக (இல்லல்)

(பொ-ரை) என்னவகை யென்று சொல்லுவேன், முழங்குவது எனக்குள் ஒரு அன்னமிருந்து அசைந்தசைந்து ஆடுவதால் அதின் முன் நான்செய்த பாக்கியத்தைக்கண்டு மூன்றாசைகளையும் ஒழித்தால் அதினால் ஆநந்தவெள்ளமானது பெருகி தடையில்லாமல் பாய்வதினால் பயிர் அன்னம் பிடிப்பதினால் உனக்கு என்னகுறைவு லாயிலாக. (எ-று)

வாசனை யாகிய மாசற்ற வஸ்துவும்
வாக்கு மனத்துக் கெட்டாத-அதில்
ஆசைக் கடல்பொங்கி யோசையுடனலை
யடிடு மொன்றுங் கட்டாதே-இந்த
நாசச் சரீரத்தை வாசியிற் றீட்டிடில்
நாசத்தை யண்ட வொட்டாதே-நல்ல
யோசனை செய்யுங் குணங்குடி வந்திடில
யோக முனக்குக் குன்றாதே-ஒரு
மாசற்ற கூவென் றோதே-காசில்
ஆசைவிட்டே லாயிலாக (இல்லல்)

(பொ-ரை) மணம்வீசுகின்ற குற்றமற்ற வஸ்துவும் வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாது, அதில் ஆசைக்கடலானது பொங்கி சத்தத்துடன் அலையடிப்பது கட்டாது, இந்த அழிகின்ற தேகத்தை வாசியில் தீட்டினால் நாசமாக்காது நல்லயோசனை செய்கின்ற குணங்குடியில் வந்தால் யோகம் உனக்குக் குறையாது, ஒரு மாசற்ற கூவென்றுசொல்லு காசில் ஆசையைவிடு லாயிலாக. (எ-று).

இராகம்-பந்துவராளி-தாளம்-சாப்பு.

பல்லவி.

பெண்கொண்ட பேர்பட்ட பாட்டையுங் கேட்டையும்
பேசுவோ மேநெஞ்சமே.

(பொ-ரை) நெஞ்சமே! பெண்ணைக் கொண்டவர்கள் பட்டபாட்டையும் கேட்டையும் பேசுவோம். (எ-று)

அநுபல்லவி.

சங்கையும் போக்கிச் சதிமன மாகச்
சகசண்டி யாக்குவித் திடுவாள்-வெகு
பங்கப்படுத்திவிட் டிடுவாள்-அந்த
மங்கையராசைவைத் தையையோவையகத்தில் (பெண்)

(பொ-ரை) சங்கையைப்போக்கிச் சதிசெய்கின்ற மனமாக சகசண்டி யாக்குவாள், மிகவும் பங்கப்படுத்துவாள், அப்படிப்பட்ட பெண்கள்மேல் ஆசையைவைத்து ஐயையோ உலகத்தில். (எ-று)

சரணங்கள்.

தங்க நகையு முகப்பணிச் சேலையுந்
தாவென வேகுரங் காட்டுவாள்-என்றன்
செங்கை வளையுந் தலைக்கெண்ணெய் சீப்புஞ்
சிறப்பொடு தாவென மாட்டுவாள்-வன்னக்
கொங்கைக்கிசைந்த ரவிக்கையுங்-கோலப்
பணியுங் கொடுவென மூட்டுவாள்-அட
வெங்கப் பயனீயென் னமக் கனேவென்று
வீட்டில் வாரதேயென் றோட்டுவாள்-வெகு
பங்கப்பழிப்பினி னாட்டுவாள்-அந்த
மங்கையராசைவைத் தையையோவையத்தில் (பெ)

(பொ-ரை) தங்கத்தால் செய்யப்பட்ட நகைகள், முகப்பணியையுடைய சேலைகள் முதலியவைகளைக் கொடுவென்று குரங்கையாட்டுவதுபோல் ஆட்டுவாள், என்னுடைய கைக்கு வளையலும், தலைக்குஎண்ணெயும், சீப்பும்கொடுவென்று மாட்டுவாள், ஸ்தனங்களுக்கு இசைந்த ரவிக்கையும், அழகியமணிகளும் கொடுவென்று மூட்டுவாள், கொடாவிட்டாலோ, அடா! வெங்கப்பையலே, நீ என்ன மகனே என் வீட்டில் வாராதை யென்று ஓட்டுவாள் மிகுந்த பழிப்பினில் நாட்டுவாள் ஆகையால் அப்படிப்பட்ட பெண்கள்மேல் ஆசைவைத்து ஐயையோ! உலகத்தில். (எ-று)

ஆதியைத் தேடி யருள்பெற நாடில்
அழுதழு தமடி பிடிப்பாள்-நீதான்
ஏதென்னை விட்டு பிரிவதுமென்றவள்
ஏங்கியேங்கித்துடி துடிப்பாள்-இன்னும்
வாதாநீ செய்யுந் தவம்பலி யாதென
வாழ்த்தி வசைகொடை கொடுப்பாள்-கெட்ட
மூதேவி புத்தி படைத்தவளாகி
மூாணுக்கு மாரடி துடிப்பாள்-வெகு
வேதனையாய்மட மடப்பாள்-அந்த
வாதிக ளாசைவைத் தையையோவையத்தில் (பெ)

(பொ-ரை) சர்வேஸ்வரனையடைய விரும்பினால் அழுதழுது மடியைப்பிடிப்பாள், நீ என் என்னைப் பிரிந்து விடுவது என்று ஏங்கித் துடிதுடிப்பாள் நீ செய்யும் தவம்பலியமாட்டாதென்று வசையாகுவாள், கொடியமூதேவிபுத்தியுடையவளாய் வீணுக்குமாரடிப்பாள், மிகவும் வருத்தமாய் மடமடவென்ற குறியைக்காட்டுவாள் அப்படிப் பட்ட வாதிகளின் ஆசையைவைத்து ஐயையோ! உலகத்தில். (எ-று)

நாடிக் குருவடி தேடி நடக்கின்ற
நற்செயலைக்கசப் பாக்குவாள்-எங்கும்
ஓடித் திரிந்தே யலைந்து பணங்கள்
ஒருக்காலே தேடென்று தாக்குவாள்-அவன்
தேடும் பொருடனைக் காணிலுமக்கெதிர்
தேசத்தி லாரென்றும் தூக்குவாள்-இன்னும்
ஆடென்றும மாடென்றும் வீடென்றும் தேடென்றும்
ஆண்டவனைமறப் பாக்குவாள்-பின்பு
ஈடொன் றிலாநினை வாக்குவாள்-அந்த
கேடிக ளாசைவைத் தையையோ வையத்தில் (பெ)

(பொ-ரை) விரும்பி ஆசிரியனடியைத் தேடுகின்ற நல்லகாரியத்தை கைப்பாக்குவாள், எங்கேயாவது திரிந்துபோய் பணஞ் சம்பாதியென்று சண்டைகொடுப்பாள், சம்பாதிக்கின்ற பொருளைக் கண்டால் உனக்கினையாரென்று சிறப்பிப்பாள், இன்னும் ஆடு மாடு வீடுகளைத் தேடென்று சொல்லி இறைவனை மறக்கச்செய்வாள், பிறகு ஒப்பில்லாத நினைப்பையுண்டாக்குவாள், அந்த பேடிகள்மேல் ஆசைவைத்து ஐயையோ உலகத்தில். (எ-று)

நீராட்ட மாடிமை யிட்டுப் பொட்டிட்டு
நிரம்ப வுடமைக ளிடுவாள்-வந்து
போராட்ட மாகவே சீராட்டஞ் செய்துன்றன்
புத்தியைப் போக்கடித் திடுவாள்-பின்பு

பாராட்டம் பண்ணியுன் றன்னையும்விட்டுப்
பலர்முகம் பார்த்தவள் கெடுவாள்-சுத்த
மாராட்ட மாகு மனந்தெளியார்க்கு
மருண்மழை யேபொழிந் திடுவாள்-கெட்ட
சீராட்டி யாய்வந்து முடிவாள்-அந்த
நாரிக ளாசைவைத் தையையோ வையத்தில் (பெ)

(பொ-ரை) குளித்துப்பொட்டிட்டு நிறைய உடைமைகள் தரிப்பாள், சீராட்டிக்கொண்டு உன்புத்தியைக் கெடுப்பாள் இவ்விதம் பாராட்டிஉன்னைத்தெரியாமல் பலபேரையும் பார்த்திடுவாள் மனமாருட்டமுள்ளவர்களுக்கு மாயை மழையையே பொழிவாள், கெட்டவளாவாள் அந்த நாரிகளின்மேல் ஆசையைவைத்து ஐயையோ உலகத்தில். எ-று

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பாடையிலே துறவடைந்து பரமடைந்த குணங்குடியார்
பகர்ந்த ஞானம்
பாடையிலே துறவடைந்து பரமடைந்தா னந்தசுகம்
படைத்தி டாரைப்
பாடையிலே போட்டுமிடு காட்டிலிடப் படுமுன்னையும்
பலரு மந்தப்
பாடையிலே போட்டெடுக்க நாள்வருமென் றறிந்திலையே
பாவி நெஞ்சே.

(பொ-ரை) பாவிநெஞ்சே! பாஷையினால் துறவறத்தைப்பெற்று உயர்ந்த பதவியையடைந்த குணங்குடியார் சொன்ன ஞானப்பாடலைப் பாடும்போதே துறந்து பதவியைப்பெற்று சுகானந்தத்தை அடையாதவர்களை பாடையிலிட்டு இடுகாட்டில் இடுவதற்குமுன் பலபேர்களையும் அந்தப் பாடையிலே போட்டு எடுக்க நாள்வருமென்று உணர்ந்திலே. ()

இராகம்-கல்யாணி-தாளம்-சாப்பு.

பல்லவி.

எத்தனை யாட்டநீ யாடினும் பதைப்பற்
றிருந்திடுவாய் நெஞ்சமே. (எத்தனை)

(பொ-ரை) எவ்வளவு ஆட்டங்களாடினாலும் மனமே! சஞ்சலமில்லாமல் இருப்பாய். (எ-று)

அநுபல்லவி.

புத்திசற்றேனும் படைத்தா யெனிலந்தப்
போதனை யேயுனைத் தேற்றும்-மூன்று
வாதனை யும்மற மாற்றும்-யோக
சாதனை மீறினு மேற்றும் (எத்தனை)

(பொ-ரை) கொஞ்சம்புத்திபடைத்திருந்தால் அந்தப்போதனையே உன்னைத் தெளிவிக்கும் மூவாதனைகளையும் மாற்றும், யோகசாதனையி லேற்றும். (எ-று)

சரணங்கள்.

நற்றவஞ் சித்திக்கு முத்தி தருந்தச
  நாதத்தை யுஞ்சுத்தி யாக்கும்-கட்டிச்
சுற்று மறுதலக் கட்டு மவிழ்ந்திடச்
  சோடசப் பின்னலை நீக்கும்-பாயும்
பத்தோ டிரண்டு கலையுமெட் டாகப்
  பராபர மும்முகம் பார்க்கும்-நல்ல
சுத்த மயப்படி கச்சுயஞ் சோதிச்
  சுழிமுனை யந்தலை காக்கும்-எமன்
உத்தியோ கந்தனைப் போக்கும்-வந்து
  வெற்றிக் குணங்குடி வாய்க்கும் (எத்தனை)

(பொ-ரை) உயர்ந்த தவமுண்டாகும் மோட்சங்கொடுக்கும், பத்து விதநாதங்களையும் சுத்திபண்ணும் பதினாறுகலைகளின் பின்னலை நீக்கும் பன்னிரண்டு கலைகளையும் எட்டுக்கலைகளாக முகம்பார்க்கும் சோதிமயமான சுழிமுனையை தலைகாக்கும் எமனுடைய உத்தியோகத்தைப் போக்கடிக்கும், ஜெயம்பெற்ற குணங்குடி கைகூடும். (எ-று)

காற்பசு தன்னை வெளியிற் விடாமலுங்
  கட்டித்தொழுவினின் மாட்டும்-வீட்டில்
பாற்பசு வைப்பக்கு வத்துடன் வைத்ததன்
  பாலைக் கறந்துனக் கூட்டும்-ஏழை
போற்பசி தன்னையும் போக்கித் தபசுக்குப்
  போவென்ன நேர்வழி காட்டும்-அதன்
மேற்படக் காலா லுதைத்து முதைத்தின்னும்
  விட்டேனோ வென்றுகை நீட்டும்-உன்றன்
மாபடிற் யாவையுஞ் சாட்டும்-மாட்டை
  மேய்ப்பக் குணங்குடி யோட்டும் (எத்தனை)

(பொ-ரை) சரமென்கிற பசுவை வெளியேவிட்டுவிடாமல் தொழுவத்தில்மாட்டும், வீட்டில் கறக்கின்ற பசுவைக் கட்டிப் பாலைக்கறந்து உனக்கு உண்பிக்கும் ஏழையைப்போல் பசியைபோக்கடித்து தவசுக்குப்போக நேரேவழிகாட்டும், அதன்மேல் காலால்உதைத்தும் விட்டானோவென்று கைநீட்டும் உன்னுடைய மயக்கம் யாவையும் சாட்டும் மாட்டைமேய்க்கக் குணங்குடிக்கு ஓட்டும். (எ-று)

வஞ்ச மறலி வாவிடு தூதான
  வஞ்சிய ராசைவிட் டோடும்-மெத்தப்
பிஞ்ச பழங்கந்தை யானபுன் மாயையைப்
  பேயர் தலையினிற் போடும்-காணும்

தஞ்சமென் றென்குரு நாதன் றிருவடி
 தன்னைத் தொழுதிட நாடும்-இனி
என்செய லேது மில்லையென் றவரிடம்
 ஏங்கியேங்கிநையப் பாடும்-நின்று
அஞ்சாம லஞ்சியே வாடும்-மிக்க
 கெஞ்சிக் குணங்குடி தேடும் (எத்தனை)

(பொ-ரை) எமன் விடுகின்ற தூதர்களான பெண்களின் ஆசைவிட்டோடும் மிகவும் பழசானபின் மாயையைப் பேயர் தலையினில் போடும் என்குருநாதன் திருவடியை அடைக்கலமென்று நாடும் இனிஎன்செயல் ஒன்றுமில்லையென்று ஏங்கிநையப்பாட்டுபாடும் பயப்படாமல் பயந்து வாடும், மிகவும் கெஞ்சிக் குணங்குடியை நாடும். (எ-று)

இடைபிங் கலைக்கிடை யில்லடை யுஞ்சுழி
 எளிதிற் றடையற மீறும்-பாயும்
மடைகண்டு வருமதி யமுதமுட் கொண்டு
 வரவரக் காயமுந் தேறும்-இந்த
உடலோ டிருந்து தபஞ்செய்ய வுங்கற்பம்
 உண்டெம கண்டமும் மாறும்-பின்பு
குடங்கவிழ் நீரென்ன நீசெய்பவங்களுங்
 கொட்டுண்டு மண்மீது சாரும்-முன்னைத்
தொடரிரு வினைவெந்து நீறும்-அருள்
 படருங் குணங்குடி யேறும் (எத்தனை)

(பொ-ரை) இடைகலை, பிங்கலை, இவைகளுக்கிடையில் அடைகின்ற சுழிமுனையாவது லேசாக தடையில்லாமல் மீளும், அங்கே வருகின்ற சந்திராமிர்தத்தை யுண்டு சரீரமும் தேறும், இந்தச் சரீரத்துடனிருந்து தவசைச் செய்யவும் கற்பம் புசித்து எமகண்டமும் நீங்கும். குடத்திலிருந்து கவிழ்கின்ற சலத்தைப்போலவே நீ செய்யும் பாவங்களும் நீங்கும். இருவினைகளும் நீறுய்ப்போம். அருள்பெருகுகின்ற குணங்குடியில் ஏறும். (எ-று)

ஆதார மாறினுஞ் சேதாரம் வாரா
 தடுக்கடுக் காகவே விடுக்கும்-எமன்
பாதை பார்த்து நிற்குங் கண்ட மெனுமயிர்ப்
 பாலத்தையுமெள்ளக் கடக்கும்-பின்பு
காதுசண் ணுக்கொடு மூக்குமொன்ருகக்
 கவிந்துமக் நாளத்தை யடக்கும்-என்றுஞ்
சூதான மாகிய வெட்ட வெளிசென்று
 சொக்கி மயக்குண்டு படுக்கும்-குரு
 நாத னருளடை கிடக்கும்-பாஞ்
 சோதிகுணங்குடி யடுக்கும் (எத்தனை)

(பொ-ரை) ஆறு தாரங்களிலும் குற்றம் வராமல் அடுக்கடுக்காகவே விடுக்கும், மயிற்பாலத்தையும் மெள்ளக்கடக்கும், பிறகு கர்மேந்திரியங்களெல்லாம் ஒன்றுபட்டு அத்துவாரத்தை அடக்கும், வெட்டவெளியைக்கண்டு சொக்கி மயங்கிப்படுக்கும், குருநாதனுடைய திருவருளடையில் கிடக்கும் பரஞ்சோதியான திருக்குணங்குடியைச்சேரும். (எ-று)

உந்தியின் கீழ்நின் றுதித்த சுழுமுனை
ஓங்காரக் கோதண்டம் பிடிக்கும்-வருஞ்
சந்திரன் சூரியன் மேல்வைத்துத் தாக்கிச்
சமர்பொருதுஜெயம் படைக்கும்-சற்றே
குந்தியிருந்திளைப் பாறித்தெளிந்து
குசாலாகச் சாய்ந்தங்கே படுக்கும்-அதற்
கந்தியுஞ் சந்தியு முச்சிமுக் காலமும்
ஆசரித்துப் பூசை நடக்கும்-தேவ
இந்திரன் போனின்று நடக்கும்-இங்கே
வந்து குணங்குடி கொடுக்கும் (எத்தனை)

(பொ-ரை) மணிபூரகத்தின் கீழிருந்து உண்டான சுழிமுனையில் ஓங்காரமென்னும் கோதண்டத்தைப் பிடிக்கும், சந்திரசூரியர்கள் மேல் ஆசைவைத்து சண்டைசெய்து ஜெயம்படைக்கும், கொஞ்சமிருந்து இளைப்பாறிதெளிந்து சந்தோஷமாய்ச் சாய்ந்துபடுக்கும். அதற்கு திரிகாலபூசைகள் நடக்கும், தேவேந்திரன்போல் கிர்த்தியங்கள் நடக்கும், குணங்குடியையும் கொடுக்கும். (எ-று)

சொல்லித் திரிதற் கறிவுகற்றதோஷ
தோஷத்தை நாசத்தி லாக்கும்-கற்றும்
நல்ல வறிவற்ற புலையரைக் காண்கி
னடுங்கி யுடலெங்கும் வேர்க்கும்-மலை
கெல்லி யெலிபிடித்த கதைபோற் காசுக்
கேயலை யாதுனைக் காக்கும்-பாயும்
வல்லயம் போல்வரு மாயை யாஞ்சண்டி
மாட்டுக்கும் மாசண்டி யாக்கும்-கரு
நெல்லிக் கனிகைக்குள் வாய்க்கும்-அருள்
முல்லைக் குணங்குடி பூக்கும் (எத்தனை)

(பொ-ரை) அறிவின் தோஷத்தை நாசப்படுத்தும், நல்லறிவில்லாரைப்பார்த்தால் உடலெங்கும் வேர்க்கும். மலையைக் கெல்லி எலியைப் பிடித்தாற்போல் காசுக்கலையாமல் காப்பாற்றும், மாயைக்கு ஒருவிரோதியாக்கும், கருநெல்லிக்கனியைக் கைக்குள் கொடுக்கும், திருவருளையுடைய முல்லையுள்ள குணங்குடியுண்டாகும். (எ-று)

காமக்குரோதக் களையைக் களைந்து
கடுஞ்சுழிக் காற்றிலே தூற்றும்-யோக
பூமிக்குள் மோனவித்தைப்பதித் துப்பரி
பூரண மாய்ப்பயி ரேற்றும்-மேற்
சோமன் மதிவட்டமீது சுழுமுனைச்
சொக்கித் தெளிந்திடத் தேற்றும்-தாயை
வாமம் வைத்துப்பூசை பண்ணிப் பணிந்திட
வாரி யமிர்தத்தை யூற்றும்-நல்ல
நேமத் துட னுனைப் போற்றும்-என்றுஞ்
சேமக் குணங்குடி யேற்றும் (எத்தனை)

(பொ-ரை) காமமென்னுங் களைகளைந்து காற்றில் தூற்றும், போக பூமிக்குள் மௌனவித்தை விதைத்து பரிபூரணப்பயிரையுண்டாக்கும், சந்திரபானத்தால் சொக்கப்பண்ணும், தாயை இடப்பாகத்தில் பூசிக்க அமிர்தத்தைக்கொடுக்கும், நல்ல நியமமார்க்கத்துடன் உன்னைப்போற்றும், என்றைக்கும் பாதுகாப்பையுடைய குணங்குடியில் ஏற்றும். எ-று

இல்லந் துறந்து வரும்பல தொல்லைகள்
எல்லா மெடுத்தெடுத் தெறியும்-மூடும்
வல்லிரு ளாகிய மாமாயை தந்த
மயக்கும் விட்டுவிட்டுப் பிரியும்-ஒரு
எல்லையிற் பேரின்ப வெள்ளப் பெருக்கில்
எடுத்துண்டுந் தன்வயி னிறையும்-பின்பு
அல்லும்பகலுஞ் சுகானந்த நிஷ்டையில்
அண்டமும் பிண்டமுந் தெரியும்-எங்கும்
சொல்லு மருண்மழை சொரியும்-மெத்த
நல்ல குணங்குடி புரியும் (எத்தனை)

(பொ-ரை) இல்லறந்துறவறங்களின் தொல்லையை எறியும், மாயையின் மயக்கமும் உன்னைவிட்டுப் பிரியும், பேரின்பவெள்ளமுண்டு உன்னிடம் நிறையும், இரவும் பகலும் உண்டாகின்ற நிஷ்டையில் அண்ட பிண்டங்களெல்லாம் தெரியும், எங்கும் அருள் மழைபொழியும், மெத்த நல்ல குணங்குடியு முண்டாகும். (எ-று)

கூசிக் குலாவு மடவாரைக் கொஞ்சிக்
குலாவாம லுங்கையை விடுக்கும்-வன
வாசத்துக் கேகித் தவம்புரி தற்கிச்சை
வைத்துவைத் துத்துடி துடிக்கும்-கெட்ட
ஆசைப் பசாசைத் துரத்தித் துரத்திவந்
தண்டவொட்டாமலே யடிக்கும்-ஞான

தேசிகன் பாதார விந்தத்தையே மோனச்
சின்முத்திரையாகப் பிடிக்கும்-உப
தேசத்துக் காரைப்பந் தடிக்கும்-நமக்
கீசன் குணங்குடி கிடைக்கும் (எத்தனை)

(பொ-ரை) வெட்கமடைந்து விளங்குகின்ற பெண்களைக் கொஞ்சிக் குலாவாமலும் கையை விடுக்கும், வனவாசததுக்குச் சென்று தவஞ்செய்வதற்கு ஆசைவைத்துப் பதைக்கும் கொடியதாகிய ஆசையென்னும் பசாசைத்தூரத்தி சேரவொட்டாமலடிக்கும் ஞானாசிரியனுடைய திருவடித்தாமரையையே மௌன சின்முத்திரையாகப் பிடிக்கும், உபதேசத்துக்காரைப் பந்தாக அடிக்கும், நமக்கும் சர்வேஸ்வரனுடைய குணங்குடியும் கிடைக்கும். (எ-று)

செத்தாலும் வைத்தடி வாங்காம னிற்கின்ற
தீரத்தை யேதிர மாக்கும்-சற்றும்
மெத்தாதி புத்திவந் தெற்றும லுன்றனை
மேவி விழுந்துகை தூக்கும்-எங்கள்
சித்தாதி கட்கருள் செய்தநன் முத்தியுஞ்
சித்தியும் வெற்றியும் வாய்க்கும்-நின்று
எத்தா லினிப்பிழை போமென வெண்ணமல்
எங்கோ னருட்பாது காக்கும்-ஒரு
மித்த பவங்களைப் போக்கும்-மோன
விதனைக் குணங்குடி வாய்க்கும் (எத்தனை)

(பொ-ரை) செத்தாலும் வைத்த அடியை வாங்காமலிருக்கின்ற தைரியத்தையே பலப்படுத்தும், கொஞ்சம் மெத்தாதியான புத்திவந்து வருத்தாமல் உன்னையடைந்து விழுந்து கைதூக்கும், எங்களுடைய சித்தாதிகளுக்கு அருளிச்செய்த நல்லமுத்தியும், சித்தியும், வெற்றியும் கிடைக்கும், நாம் எதினால் பிழைப்போமென் றெண்ணாதபடி எம்பெருமான் காத்திரட்சிக்கும், ஒருமித்து வருகின்ற பாவங்களைப் போக்கடிக்கும், மௌனவித்தையாகிய குணங்குடியும் கிடைக்கும். (எ-று)

எண்ணாத வெண்ணத்தினாலே படர்ந்தெழும்
இனப விளைத்தனை விட்டும்-கெட்ட
மண்ணான மூவாசை மண்ணாகவு நலல
மானபி மானத்தை யோட்டும்-என்றன
கண்ணை மணிமேயன் கண்ணுதலெ யெனக
கண்ணீரு முண்ணீரு மூட்டும்-பின்பு
தண்ணீரு மணனும் கலந்ததும்பாற சிந்தை
தத்தளிக நில்ல நாட்டும்-நடம்
பண்ணுய பாவெளி சூட்டும்-உய்யும்
வண்ணக் குணங்குடி காட்டும் (எத்தனை)

(பொ-ரை) எண்ணாத எண்ணத்தினுடனே படர்ந்து எழும்புகின்ற இன்பவிசித்திரத்தை மாய்க்கும், கெடுதியை விளைவிக்கின்ற மண்ணை மூன்றாசைகளும் கெடும்படி நல்லமானாபிமானத்தை ஓட்டும், என்னுடைய கண்ணே! மணியே! என் கண்ணுதலே! என்று கண்ணீரும் உண்ணீரும் மூட்டும், பிறகு சலமும் மண்ணும் கலந்ததைப்போல மனந்ததளிக்க நிலைப்படுத்தும், நடனஞ்செய்கின்ற உயர்ந்த ஞானவெளியைக் கொடுக்கும், நான் பிழைக்கும்படி குணங்குடியைக் காட்டும். (எ-று)

வித்தக னார்சொன்ன புத்தியுன் மாயையை
வேங்கைப் புலியெனச் சாடும்-நம்மை
வெற்றிகொண் மாதர் முயக்களற் கேணி
விரிவோ டவுங்காயப் போடும்-உன்னைப்
பெற்றார் பிறந்தார் சுற்றத்தார் முதலான
பித்தர்க் கெல்லாமுகம் வாடும்-நல்ல
பத்தரை மாற்றுப் பசும்பொன்னை யொத்த
பரவெளி பம்பர மாடும்-மேலுங்
கத்த னருளுங்கை கூடும்-நாளும்
சித்துக் குணங்குடி யாடும் (எத்தனை)

(பொ-ரை) சர்வேஸ்வரன் எனக்குச் சொன்னபுத்தியானது அற்பமானமாயை வேங்கைப்புலி யென்னும்படி சொல்லும், நம்மைவெற்றிகொள்ளுகின்ற பெண்களின் ஆசையென்னும் சேற்றுக்கேணி முழுமையும் காயப்போடும், உன்னைப் பெற்றவர்கள், உடன்பிறந்தவர்கள், சுற்றத்தினர் முதலிய பித்தர்களுக் கெல்லாம் முகம்வாடும், உயர்ந்த பத்தரைமாற்றுள்ள பசுமையான பொன்னைப்போன்ற பரவெளி என்னும் பம்பரம் ஆடும், மேலும் கர்த்தனுடைய திருவருளுங் கைகூடும், தினமும், ஞானக்குணங்குடியில் நடமாடும். (எ-று)

எங்கு நிறைந்த பெரும்பொரு ளென்னுள்ளே
இருந்துகொண் டேவிளை யாடும்-ஒரு
கங்கு கரையறப் பொங்கிப் பரவிக்
கருணைக் கடல்வந்து மூடும்-அருள்
வங்சமுந் தங்காம லிங்குவந் தென்னை
மகிழ்ந்தடுத் தேற்றிக்கொண்டோடும்-நாளும்
மங்காத தங்க மவுனப் பொருளு
மலைமலை யாகக்கை கூடும் இன்னும்
பங்கு கொடுக்கவு நாடும்-யோகம்
தங்குங் குணங்குடி சூடும் (எத்தனை)

(பொ-ரை) எங்கும் நிறைந்த பெரிய பொருளானது என்னுடைய மனத்திற்குள் ளிருந்து கொண்டு விளையாடும், ஒப்பற்ற கங்குகரையில்

லாதபடி ததும்பிப்பாவிக்கிருபா சமுத்திரமானது வந்து மூடும், அருட்கப்பலும் ஓரிடத்தில் தங்காமற்படிக்கு இவ்விடத்தில் வந்து என்னை மகிழ்ச்சியுடன் ஏற்றிக்கொண்டோடும், என்றும் குறையாத தங்கமயமான மௌனப் பொருளும் மலைமலையாகவந்துகைகூடும், இன்னமும் எனக்குப் பங்குகொடுக்க விரும்பும் யோகமானது நிலைபெறுகின்ற குணங்குடியே சூடும். (எ-று)

வாசாம கோசர வான்பொரு ளென்றன்
மடிமீது செங்கீரை யாடும்-மோன
தேசிகன் பாதார விந்தந்தந்தெய்தத்தத்
தெய்யெனக் கூத்துகள் போடும்-எங்கள்
ஈசன் றிருவரு டாணை கொட்டிப்போர்
இன்பக் கோலாகலம் பாடும்-எம
பாச மறுத்துக்கொண் டென்னச் சமட்டமும்
பாய்ந்து மடமடென் றோடும்-கோட்டை
வாசற் கடந்துட்சென் றாடும்-மேலே
பேசுங் குணங்குடி கூடும் (எத்தனை)

(பொ-ரை) வாசாமகோசரம் என்னும் பெரும் பொருளானது என்னுடையமடியின் மேல்வந்து செங்கீரையாடாநிற்கும், மௌனாசிரியனுடைய திருவடிகளைக்கொடுத்து தத், தத், தெய் என்று நடனஞ்செய்யும் எங்களுடைய ஈஸ்வரன்திருவருள் தான் ஆணை, என்று கைகொட்டி பேரின்பக் கோலாகலத்தைப்பாடும், எமனுடைய பாசத்தை அறுத்துக் கொண்டு என்னுடைய அச்சமென்னும் மட்டமும்பாய்ந்து மடமடவென்று ஓடும், கோட்டைவாசலைக் கடந்து உள்ளேபோய் ஆட்டமாடும், மேலே பேசுகின்ற குணங்குடியானது கைகூடும். (எ-று)

கொச்சகக்கலிப்பா.

ஐயையோ வென்விதியை யாரிடத்திற் சொன்னாலும்
ஐயையோ வென்றே யழுங்கவலை கொள்வார்தாம்
ஐயையோ வையகத்தி லாருமிலை யுன்னையன்றி
ஐயையோ வடிமையைக்கை யணைப்பாய் குருபரனே.

(பொ-ரை) அந்தோ! என்னுடைய தலைவிதியை யாரிடத்திற் சொன்ன போதிலும் ஐயையோ என்றே அழுவார்கள், பிறகு துன்பமடைவார்கள், இந்த உலகத்தில் என்றனுக்கு உன்னையன்றி யாருமில்லை. ஆகையால் ஞானாசிரியனே! அடிமையான என்னைக் கையினால் அணைத்து ரட்சிப்பாயாக. (எ-று)

இராகம்-பைரவி-தாளம்-சாப்பு.

பல்லவி.

ஐயையோ நானென் செய்வேன் என்விதிவசம்
ஆருடனே சொல்லி யழுவேன்.

(பொ-ரை) ஐயோ நான் என்ன செய்வேன்? என்னுடைய விதி வசத்தை யாருடன் சொல்லி அழுவேன்? (எ-று)

அநுபல்லவி.

மெய்யெடுத் ததுபொய்யாய் வீணாள்கழிந்து போச்சு
பொய்யி லாதவென் னையாருளது
கையு மெய்யுமாக் கண்ணிற்கா ணேனே (ஐயை)

(பொ-ரை) சரீரம் எடுத்தது பொய்யாக வீணாக நாள் கழிந்து போச்சுது பொய்யில்லாத என்னுடைய சுவாமியின் அருளைக் கையும் மெய்யுமாகக் கண்ணிற் காணேன். (எ-று)

சரணங்கள்.

பார்க்கப் பலவித மறைவாய் சமையலான
பதினாலு லோகமு நிறைவாய்
வாக்கு மனமுமதி னோக்க மதுவாய்நின்றுந்
தீர்க்க மாயறி யாமற் றேடியே
பார்க்குள் ளேயலைந் தலைந்துங் காணேனே (ஐயை)

(பொ-ரை) பார்ப்பதற்குப் பலவகைகளைச் சொல்லுவாய், உண்டான பதினான்கு லோகங்களிலும் நிறைவாய், வசனமும், மனமும், அதினதின் நோக்க மாயிருந்து தீர்க்கமாயறியாமல் தேடி இவ்வுலகத்திற்குள் அலைந்தலைந்துங் காணேன். (எ-று)

முன்னோர்செய்திடுபாவ லாபமோ பாதகமோவென்
மூதேவித் தனங்கொள்பிர தாபமோ
என்ன கொடுமைகளோ வென்றலை விதிதானோ
இன்ன பேதமில் லாத சோதியை
இன்னு மென்னுட் கண்ணிற் காணேனே (ஐயை)

(பொ-ரை) முன்னோர்கள்செய்த பாவம் லாபமோ? அல்லது பாதகமோ? என்றுடைய மூதேவிதனமானது கொண்ட பிரதாபமோ? என்ன கொடுமைகள் செய்தேனோ? என்னுடைய தலைவிதியோ? பேதங்கள் இன்னவென்றுணரப்படாத தேஜோமயப்பொருளை இன்னும் என் மனத்திற்குள் கண்ணிற் காணேனே. (எ-று)

ஆசாபா சங்கவெளவற்றையும் விட்டும் அனுதினம்
ஆனந்த வெள்ளத்து ளகப் பட்டும்
ஓசைமணி பூரகத் துள்ளெங்குந்தேடியும்
வாச மொய்த்த குணங்குடிப்பா
தேசி யெய்த்து மினைத்துங்காணேனே (ஐயை)

(பொ-ரை) ஆசையென்னும் பாசங்கள் எல்லாவற்றையும் விட்டும், தினந்தோறும் ஆநந்தவெள்ளத்திற் சிக்கியும் சத்தத்தையுண்டாக்கு கின்றமணிபூரகத்திற்குள் எங்கெங்குந்தேடியும், வாசனைமொய்க்கின்ற குணங்குடி யென்னுமிடத்தில் வாழ்பரதேசியை நான் இனைத்தும் காணேனே. (எ-று)

இராகம்-கேதாரகௌளம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சூத்திரப் பாவை கயிறற்றுவிழுமுன்
சூக்ஷக் கயிற்றினைப் பாரடா-அதி
சூக்ஷக் கயிற்றினைப் பாரடா

(பொ-ரை) சூஸ்திரப் பதுமையாகிய இந்தசரீரமானது இறந்து படுமுன்னரே சூட்சக்கயிறான இறைவனை ஆராய்ந்து பாரடா! (எ-று)

அநுபல்லவி.

நேத்திரம் ரண்டிலும் நேரே யிலங்கிய
நீடொளி போன்றது தேடரி தாகிய
காத்திர முள்ளது யாவும் பொதிந்தது
கையிலுங் காலிலு மெட்டப்படாததோர் (சூத்திர)

(பொ-ரை) இரண்டு கண்களிலும் நேராகவிளங்கினபெரியதேஜோமயம் போன்றது, தேடுதற்கருமையான சரீரமுள்ளது, எல்லாம் நிறைந்தது, கைக்கும் காலுக்கும் எட்டாதது. (எ-று)

சரணங்கள்.

சாத்திர வேதஞ் சதகோடி கற்றாலும்
சமய நெறிகளி னுசாரம் பெற்றாலும்
பாத்திர மேந்திப் புறத்தி லலைந்தாலும்
பாவனையா லுடலுள்ள முலைந்தாலும்
மாத்திரைப் போது மெமன்வரு மப்போது
மற்றொன் றுதவாதுதவா துதவாது
சூத்திரமாகிய தோணி கவிழுமுன்
சுக்கானைநேர்படுத் திக்கணமே சொன்னேன் (சூத்திர)

(பொ-ரை) சாஸ்திரங்களையும், வேதங்களையும் நூறுகோடி கற்றுக்கொண்டாலும், சமயமார்க்கங்களின் ஒழுக்கத்தை யடைந்தாலும், பாத்திரத்தைத் தாங்கிப் புறங்களில் அலைந்தாலும், பாவனையில் சரீரமும், மனமும் உலைந்தாலும் ஒரு க்ஷணநேரத்திற்குள் எமன்வருவான். அச்சமயத்தில்எதுவும் உதவாது, ஆகையால் சூஸ்திரமான இந்தக் கப்பல் கவிழ்வதற்கு முன்னரே சுக்கானை நேராகப்பிடித்து நான் இப்பொழுதே சொல்லிவிட்டேன். (எ-று)

உற்றா ரின்முறை யார்சூழ்ந் திருந்தென்ன
ஊருடன் சனங்களெல் லாரும் பணிந்தென்ன
பெற்றாரும் பெண்டீரும் பிள்ளை யிருந்தென்ன
பேணும் பெருஞ்செல்வ வாணவத் தாலென்ன
கர்த்தன் பிரிந்திடச் செத்த சவமாச்சு
காணாது காணாது கண்டதெல் லாம்போச்சு
எத்தனை பேர்நின்று சூழ்ந்தா லிட்டாலும்
எட்டாமற் போய்விடுங் கட்டையல் லோவிந்தச் (சூத்திர)

(பொ-ரை) சுற்றத்தார்கள் சூழ்ந்திருந்தால் என்ன? ஊராரும் சனங்களெல்லாமும் பணிந்தால் என்ன? பெற்றவர்களும் மனைவிமார்களும் பிள்ளைகளும் இருந்தால் என்ன? யாவராலும் பாதுகாக்கக்கூடிய மிக்க செல்வம்படைத்ததினாலுண்டாகும் ஆணவத்தினால் என்ன? கர்த்தனானவன் பிரிந்துவிட செத்தசவம்போலாச்சுது, காணாமற்போனபொருள் காணமுடியாது கண்டபொருள்களெல்லாம் போயின, எத்தனைபேர் சூழ்ந்து நின்றுகொண்டழுதாலும் எட்டாமற்போகிற கட்டையல்லவா? (எ-று)

மாயப் பிறவி வலையை யடைத்திட
மாறாத்தி யான மனத்தி னினைத்திட
காயா புரிக்கோட்டை கைக்கு ளாகப்பட
காணுமணிச்சுடர் தானே விளங்கிட
ஆயு மறிவுடன் யோகத்தி னாலெழும்
ஆனந்தத் தேனையுண் டன்புடனே தொழும்
தாயா யுலகத்தை யீன்ற குணங்குடி
தற்பரனைக்கொண்டு வப்புடனே சென்று (சூத்திர)

(பொ-ரை) மாயமாகிய ஜென்மவலையை அடைத்திடவும், ஒழியாத சிந்தனையை மனத்தில் நினைக்கவும், காயமென்னும்கோட்டையானது கையில் கிடைக்கவும் தோன்றுகிற தேஜஸானது தானே விளங்கவும், ஆராய்கின்ற அறிவினுடனே யோகஞ்செய்வதினால் எழுகின்ற ஆநந்தத் தேனைப் பானஞ்செய்து ஆசையுடனே தொழுகின்ற தாயாய் இவ்வுலகத்தைப் பெற்றெடுத்த குணங்குடி அப்பனைக்கொண்டு சந்தோஷத்துடனேபோய். (எ-று)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

வங்கெனுமோர் மொழியாதி பீடமீயோ கத்தினது
மகிமை பெற்றோர்
வங்குசொறி யுங்கொடுக்கும் பெண்களல்குற் புண்களுக்குண்
மடிய மாட்டார்

வங்குசொறி யுங்கொடுக்கும் பெண்களல்குற் கண்களுக்குண்
மடியா வண்ணம்
வங்கெனுப தேசமெங்கள் குணங்குடிமா தவனெனக்கும்
வைத்தி டானோ.

(பொ-ரை) வங் என்று சொல்லும் ஒருசொல்லான ஆதிபீடத்தை யுடையயோகத்தின் மகிமையையடைந்தவர்கள், வங்குரோகத்தையும், சொறியையுங் கொடுக்கின்ற பெண்களின் அல்குல் புண்களுக்குள்ளே சாவமாட்டார், அந்தப்பெண்களின் அல்குல் கண்களுக்குள்ளே சாவாத படி வங் என்னும் உபதேசத்தை எங்களுடைய குணங்குடியான் எனக்கும் வைக்கமாட்டானோ? (எ-று)

இராகம்-சாவேரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

வங்கெனு முபதேச மெங்கள் குணங்குடி
வள்ளலென் றோதுவனோ.

(பொ-ரை) எங்களுடைய குணங்குடி வள்ளலானவன் வங்என்னும் உபதேசத்தை என்றைக்கு அருளிச்செய்வானோ? (எ-று)

அநுபல்லவி.

அங்கென்றெ னட்சரங் கும்பித் தடங்கவும்
ஐம்பத்தோ ரக்ஷரந் தம்பித் தொடுங்கவும் (வங்)

(பொ-ரை) அங் என்கிற பீஜாட்சரத்தினால் கும்பகஞ்செய்து அடங்கவும் ஐம்பத்தோரெழுத்தினால் ஸ்தம்பித்தொடுங்கவும். (எ-று)

சரணங்கள்.

உடல்பொரு ளாவியோ டெவையுங்கைக் கொள்ளவும்
உவந்தென்னையு முய்யக் கொள்ளவும்
கொடிக்குமுன்மனவாசி மேலேறிக் கொள்ளவும்
நூலேணிமேலேறிக் கொள்ளவும்
படிமுடிச்சானவா ரூதாரம் விள்ளவும்
படிக்குப்படி கடந்து கொள்ளவும்
கடினத்துடன் கண்டதையுங்கீழ் தள்ளவும்
காதளவுக்குமேற் கொள்ளவும்
நடனமிடும்பரி துள்ளாட்ட மெடுக்கவும்
நடித்துநடித்துக் கொண்டாட்டங் கொடுக்கவும்
இடைபிங்கலைகண்டத் தாட்ட மெடுக்கவும்
எனக்குப்பயந்தெம னோட்டம் பிடிக்கவும் (வங்)

(பொ-ரை) உடல், பொருள், ஆவி என்பவை முதலிய யாவையுங் கைக்கொள்ளவும், சந்தோஷித்து என்னையும் பிழைக்கும்படி அடிமை

கொள்ளவும், சீக்கிரத்தில் மனவாசியின்மேல் ஏறிக்கொள்ளவும், நூல் ஏணியின்மேல் ஏறிக்கொள்ளவும், சோபானமாகிய ஆறுதாரங்களைச் சொல்லவும்,படிப்படியாகஅவைகளைக்கடக்கவும்,கஷ்டத்துடனே கண்ணுற் காணப்பட்டவைகளைக் கீழே தள்ளிவிடவும், காதின் அளவுக்கு மேல் ஏறிக்கொள்ளவும், நடனஞ்செய்கின்ற குதிரையானது துள்ளியாடவும், நடித்து நடித்துக் கொண்டாடவும், இடை, பிங்கலை, சுழிமுனை இம்மூன்றில் ஆட்டமாடவும், எனக்குப் பயந்து எமனானவன் ஓட்டம் பிடிக்கவும். (எ-று)

கம்பமற்றவருட் கடலுள்வாய் மடுக்கவும்
களகளென் றேசும்மா குடிக்கவும்
செம்பொற்கமலா சனமீதிற் படுக்கவும்
செங்கீரையாடித் துடிக்கவும்
வம்பரைப்போல்விளையாட்டுப் படிக்கவும்
வாசியிலேறி நடிக்கவும்
ஒன்பதுவாயிலி னிலையைப் பிடிக்கவும்
ஒளியினோடுகாலை மடிக்கவும்
தம்பிரானெனு மெல்லை சூட்டவும்
தாக்குச்சுழிமுனை வில்லைப் பூட்டவும்
எம்பிரானென்னுங் கல்லை யோட்டவும்
எனக்குப்பயந் தெமன்பல்லைக் காட்டவும் (வங்)

(பொ-ரை) கலக்கமில்லாத திருவருட்கடலில் வாயைவைத்துக் குடிக்கவும், பொற்றாமரையாசனத்தின்மேல் படுக்கவும், செங்கீரையாடித் துடிக்கவும், வீணர்களைப்போல விளையாடவும், வாசியென்னுங் குதிரையின்மேலேறி நடிக்கவும்,நவவாசல்களின் நிலையைப்பிடிக்கவும், தேஜோமயத்துடன் சரத்தை மடிக்கவும், ஞானபெருமானுடைய எல்லையைச் சூட்டவும், சுழிமுனை என்னும் வில்லைப்பூட்டவும், சர்வவல்லமையுடையபெருமான் என்னும் கல்லை யோட்டவும், எனக்குப் பயந்து எமனானவன் பல்லைக்காட்டவும். (எ-று)

தொட்டுபதேசித்த வுடன்சோதி தட்டவுந்
தொடுமுன்னே சிவயோகங் கிட்டவும்
எட்டுகயிற்றிலென் காலிரண்டுங் கட்டவும்
எட்டியவன்காலைக் கட்டவும்
கட்டைப்பனைதனி லுங்களைக் கட்டவும்
கள்ளுக்கள்ளாகச் சும்மா கொட்டவும்
கொட்டியகள்ளுண்ட பின்போதை மூட்டவும்
குதிகொண்டுகெக்கரி கொட்டவும்
நிஷ்டைபடைத்தனுபூதி மிஞ்சவும்
நிருவிகற்பசமாதி துஞ்சவும்
இஷ்டப்படிக்கரு ளின்று கொஞ்சவும்
எனக்குப்பயந்தெமனின்று கெஞ்சவும்.. (வங்)

(பொ-ரை) தொட்டு உபதேசஞ்செய்தவுடனே தேஜோமயமானது தட்டவும், அதைத் தொடுவதற்கு முன்னமே சிவயோகமானது கைகூடவும், அஷ்டவிதமான கயிறுகளில் என்னுடைய இரண்டு கால்களையும் கட்டவும், அவனுடைய காலையும் எட்டிக் கட்டவும், பனங்கட்டையில் எங்களைக்கட்டவும், கள்ளு கள்ளாக கொட்டவும், அப்படி கொட்டின கள்ளைக் குடித்தபிறகு போதை அதிகப்படவும், அதினால் ஆனந்தமாகவும், பிறகு நிஷ்டானுபூதியை யடையவும், நிர்விகற்ப சமாதியில் தூங்கவும், பிறகு என்னுடைய இஷ்டம்போலத் திருவருளிலிருந்து கொஞ்சி விளையாடவும், எனக்குபயந்து எமன்நின்று வேண்டவும். (எ-று)

கத்தன்றிருவடி பெற்றவ —— னாகவும்
  கட்டைகடைத்தேற —— லாகவும்
நற்றவமுற்றவுஞ் சித்தனு —— மாகவும்
  நாவுமந்நாளத்து —— ளோகவும்
பத்துவகைநாத முஞ்சுத்த —— மாகவும்
  பத்தோடிருகலை —— சாகவும்
ஒற்றைக்காலான்மயிர்ப் பாலத்தி —— லேகவும்
  ஒருபாய்ச்சலிற்றாண்டிப் —— போகவும்
வைத்ததீக்ஷையுந் திருத்த —— மாகவும்
  வாலையம்பிகை பொருத்த —— மாகவும்
எய்த்தவெருத்த மெருத்த —— மாகவும்
  எனக்குப்பயந் தெமனொருத்தன் —— சாகவும் (வங)

(பொ-ரை) ஈஸ்வரனுடைய திருவடிகளைப் பெற்றவனாகவும், கட்டை மோட்சமடையவும், உயர்ந்த தவமானது நிறைவேற, அதினால் ஞானியாகவும், நாக்கும் உண்ணாளத்துள் செல்லவும், தச நாதங்களுஞ் சுத்தமாகவும், இருபதுகலைகளும் சாவவும், ஒரே வாசியினால் மயிர்ப் பாலத்தில் ஏறி ஒரே பாய்ச்சலில் தாண்டியேறவும், எனக்குச் செய்வித்த தீட்சையும் திருத்தமாகவும், வாலையம்பிகாதேவி பொருத்தமாய்ச் சேரவும், இளைத்த எருத்தமானது எருத்தமாகவும், எனக்குப் பயந்து எமன் ஒருத்தன் சாவவும். (எ-று)

இராகம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி.

பல்லவி.

யானேயுனை நம்பினேன்-குணங்குடி.
யானேயென்னாண்டவனே.

(பொ-ரை) குணங்குடியில் எழுந்தருளிய இறைவனே! என்னாண்டவனே! உன்னை நம்பினேன். (எ-று)

அநுபல்லவி.

யானேயுனை நம்பினேன் சாகச் செய்வையோ
யானாகநின்றென்னை நான்சாகச் செய்வையோ
பேய்நாய்கண்டசிறு மானாகச் செய்வையோ
பெருமானுமெம்பெரு மானாகச் செய்வையோ (யா)

(பொ-ரை) நான் உன்னை நம்பினேன் நீ என்னைச் சாவச் செய்வாயோ? நானாக நின்று பிறகு என்னைச் சாவச்செய்வாயோ? பேயும், நாயும் இரையாகக் கண்ட சிறுமானாகச் செய்வாயோ? பெருமானும் எம்முடைய பெருமானாகும்படி செய்வாயோ? (எ-று)

சரணங்கள்.

பாவையரைப்பாவி கூடிடச் செய்வையோ
பாவையர்க்குப்பயந் தோடிடச் செய்வையோ
பாவங்கள் வந்தெனை மூடிடச் செய்வையோ
பாவமெல்லாம்விட்டுச் சாடிடச் செய்வையோ
பாவிகள் போன்முகம் வாடிடச் செய்வையோ
பரஞ்சோதியம்பரமாடிடச் செய்வையோ
பாவாணர்போல்வீணிற் பாடிடச் செய்வையோ
பரிபூரணானந்தம்பாடிடச் செய்வையோ (யா)

(பொ-ரை) நான் பெண்களைச் சேரும்படி செய்வாயோ? அல்லது அவர்களைக்கண்டு ஓடும்படி செய்வாயோ? என்னைப் பாவங்கள் வந்து சேரும்படி செய்வாயோ? அல்லது பாவங்களையெல்லாம்விட்டு ஓடும்படி செய்வாயோ? பாவிகளைப்போல முகம் வாடும்படி செய்வாயோ? பரஞ்சோதி பம்பரத்தில் ஆடும்படி செய்வாயோ? புலவர்களைப்போல வீணாகப் பாடும்படி செய்வாயோ? பரிபூரணானந்தத்தைப் பாடும்படி செய்வாயோ? (எ-று)

சண்டாளரைவாழ்த்திக் கொண்டாடச் செய்வையோ
சற்குருவைப்போற்றிக் கொண்டாடச் செய்வையோ
தொண்டாசை யென்னையுந் துண்டாடச் செய்வையோ
தொண்டாசை தன்னையுந் துண்டாடச் செய்வையோ
முண்டரைப்போற்றிண்டு முண்டாடச் செய்வையோ
முத்திதந் துதுதி கொண்டாடச் செய்வையோ
வண்டாய்த்துவண்டு துவண்டாடச் செய்வையோ
வந்தருடந்தெனைப்பந்தாடச் செய்வையோ (யா)

(பொ-ரை) தீயர்களை வாழ்த்திக்கொண்டாடும்படி செய்வாயோ? ஞானாசிரியனைத் துதித்துக் கொண்டாடும்படி செய்வாயோ? தொண்டின்மேல் ஆசைப்பட்டு என்னைத் திண்டாடச் செய்வாயோ? அதையும்

விட்டுவிடும்படி செய்வாயோ? மூண்டர்களைப்போல நின்றுமூண்டாடச் செய்வாயோ? மோட்சத்தைக்கொடுத்து துதிகொண்டாடும்படி செய்வாயோ? வண்டாகத் துவண்டு துவண்டு அலையச் செய்வாயோ? எழுந்தருளிவந்து திருவருள்தந்து என்னைப்பந்தாடும்படி செய்வாயோ? எ-று

வெட்டவெளியிலென்னை விட்டிடச் செய்வையோ
வித்தகன்பாதத்தைக் கட்டிடச் செய்வையோ
பட்டதெல்லாங்கேடு கெட்டிடச் செய்வையோ
பட்டதற்கும்பலன் கிட்டிடச் செய்வையோ
நெட்டைமரம்போலப் பட்டிடச் செய்வையோ
நீசனுக்குமருளொட்டிடச் செய்வையோ
மட்டியென்றென்கையை விட்டிடச் செய்வையோ
வாசியும்பாவிக்குக் கிட்டிடச் செய்வையோ (யா)

(பொ-ரை) வெட்டவெளியில் என்னை விட்டுவிடும்படி செய்வாயோ? ஈஸ்வரனுடைய திருவடிகளைக் கட்டும்படி செய்வாயோ? நான் பட்டவைகளையெல்லாம் கேடுகெட்டுவிடும்படி செய்வாயோ? அப்படிப்பட்டதற்குப் பலன் உண்டாகும்படி செய்வாயோ? வெட்டையாய் வளையாமல் நிற்கின்ற மரத்தைப்போலப் பட்டுவிடும்படி செய்வாயோ? நீசனுக்கும் திருவருள் எட்டும்படி செய்வாயோ? மட்டியாகிய என் கையை விட்டிடச்செய்வாயோ? சராப்பியாசமும் பாவியாகிய எனக்குக் கிடைக்கும்படி செய்வாயோ? (எ-று)

மதபேத மோதப் படித்திடச் செய்வையோ
மதமற்றஞானம் படித்திடச் செய்வையோ
விதியற்றுப்பிச்சை யெடுத்திடச் செய்வையோ
வேதாந்ததீக்ஷை யெடுத்திடச் செய்வையோ
விதிவந்துதன்னுயிரைப் பிடித்திடச் செய்வையோ
விதியென்றுகாலைப் பிடித்திடச் செய்வையோ
மதுவென்றுகள்ளைக் குடித்திடச் செய்வையோ
மதியமிர்தத்தைக் குடித்திடச் செய்வையோ (யா)

(பொ-ரை) மதபேதங்களைப் பேசும் படிப்பைக் கற்கும்படி செய்வாயோ? மதசம்மதமில்லாத உண்மை ஞானத்தைப்படிக்கும்படி செய்வாயோ? விதியில்லாமல் பிச்சை யெடுக்கும்படி செய்வாயோ? வேதாந்த தீட்சைகொடுக்கும்படி செய்வாயோ? எமன் உயிரைப் பிடிக்கும்படி செய்வாயோ? இதுதான் விதியென்று ஒருவர் காலைப் பிடிக்கும்படி செய்வாயோ? இதுதான் மதுவென்று கள்ளைக்குடிக்கும்படி செய்வாயோ? சந்திராமிர்தத்தைக் குடிக்கும்படி செய்வாயோ? (எ-று)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

எல்லாரு மானிடரோ வெங்கள் குணங் குடியானை
யிறைஞ்சி னோர்கள்
எல்லாரு மானிடரா மெங்கள் குணங் குடியானை
யிறைஞ்ச வேண்டும்
எல்லாருமா மானிடரே யெங்கள் குணங்குடியானை
யிறையே யென்றே
எல்லாரு மிறைஞ்சுமெங்கள் குணங்குடியான் பொற்பதமெற்
கெய்தி டாதோ.

(பொ-ரை) எங்களுடைய குணங்குடியானை வணங்கினவர்களும் அவனை இறைவனே! என்று வணங்குகின்றவர்களும் மானிடர்களன்றி மற்றவர்களெல்லாரும் மானிடர்களாவார்களா? ஆகையால் அந்த இறைவனுடைய பொன்போன்ற திருவடிகள் எனக்குக்கிடைக்காதோ? எ-று

இராகம்-அசாவேரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

எங்கள் குணங்குடி யாண்டவன்பாதத்தை
என்றிந்தப்பாவிக்கண்கண்டிடுமோ.

(பொ-ரை) எங்களுடைய குணங்குடியில் எழுந்தருளிய ஆண்டவன் பொன்போன்ற பாதங்களை என்றைக்கு இந்தப் பாவியின்கண் காணுமோ? (எ-று)

அநுபல்லவி.

பொங்குந்திருவருளும் தங்கும்படிக்கருளும்
பூரணமயமாநின்ற காரணக்கடவுளான (எங்கள்)

(பொ-ரை) விகசிக்கின்ற திருவருளும் நிலைபெறும்படியும் அருளும் பூரணமயமாயிருந்த காரணக்கடவுளான. (எ-று)

சரணங்கள்.

கூட்டிக்கருணைவிழி காட்டிக்காட்டிக் கையைக்
கொடுத்துக்கொடுத்தணைத்துப் பிடித்துப்பிடித்துமெய்யை
பூட்டிப்பூட்டியருள் சூட்டிச்சூட்டித்தரும்
பூரணமயமாநின்ற காரணக்கடவுளான (எங்கள்)

(பொ-ரை) திருவருளைச் சேர்த்து கிருபாநோக்கத்தைக் காட்டி கையில் சரீரத்தைப் பிடித்தணைத்து திருவருளைப் பூட்டிச் சூட்டிக் கொடுக்கும் பூரணவஸ்துவாய்நின்ற காரணக்கடவுளான. (எ-று)

முத்திவித்தாய்ப்பதிந்தும் மொய்த்தபயிராயெழுந்தும்
மூன்றுமண்டலத்தைமுட்டி மூடியொளியால்விளைந்தும்
புத்தியுமெற்றுதுபூத்த பொற்பையற்புதத்தருளும்
பூரணமயமாநின்ற காரணக்கடவுளான (எங்கள்)

(பொ-ரை) மோட்சவிதையாய்ப் பொருந்தியும், செழுங்கின பயிராக எழுந்தும், சோம, சூரிய, அக்கினி என்னும் மூன்று மண்டலங்களையும் முட்டிமாயாயால் மூடப்பட்டு தேஜஸால் விளைந்தும், புத்தி ததும்பாமல் பூத்தஅழகை அற்புதமாக அருள்செய்கின்ற பூரணவஸ்துவாய்நின்ற காரணக்கடவுளான. (எ-று)

வாதனைமாற்றியோக சாதனை யேற்றியேற்றி
வாக்குமனமணுகா வாழ்வினை வாழ்த்தியேத்தப்
போதும்போதுமெனப் போதித்தருள்புரியப்
பூரணமயமாநின்ற காரணக்கடவுளான (எங்கள்)

(பொ-ரை) வேதனைகளையெல்லாம் மாற்றி யோக சாதனையை ஏற்றி, வாக்குக்கும் மனத்துக்கும் எட்டவொண்ணாத வாழ்வை வாழ்த்தித் துதிக்க போதும் போதுமென்று போதனைசெய்து திருவருள் செய்யப் பூரணமயமாயிருந்த காரணக்கடவுளான. (எ-று)

சிற்பரத்துக்குட்சிறந்த தற்பரத்துக்குட்பிறந்த
சிற்பரத்துக்குட்பிறந்து சொற்படிகம்போற்சிறந்து
பொற்பிரபைக்கொப்பளிக்கும் அற்புதகர்ப்பூரமாகி
பூரணமயமாநின்ற காரணக்கடவுளான (எங்கள்)

(பொ-ரை) சின்மயத்துக்குள்சிறந்ததும் ஞானமயத்துக்குள் பிறந்ததும் சொல்லும் படிகத்தைப்போல் சிறந்ததும், பொன்பிரபையானது கொப்பளிக்கின்ற ஆச்சரியமான கர்ப்பூரமாகியும் பூரணவஸ்துவாயிருந்த காரணக்கடவுளான. (எ-று)

---

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அன்றெழுதி னவனெவர்க்கு மெங்கள் குணங் குடியானு
மவன்கை யாலே
அன்றெழுது மெழுத்தையழித் தெழுதிடவல் லபமெவர்க்குண்
டார்க்கு மில்லை
அன்றெழுது மவனேதா னழித்தெழுத வல்லவன்கா
ணுத லாலே
அன்றெழுதுமெழுத் தழித்தென்மண்டையிற்றானல் லெழுத்தொன்
றழுத்தி டானே.

(பொ-ரை) யாவர்க்கும் பூர்வத்தில் எழுதினவன் எங்கள் குணங்குடியானவான். அவன் கையினால் அன்று எழுதும் எழுத்தை அழித்து எழுதவல்லமை யாவர்க்குண்டு? எவர்க்குமில்லை. அன்று எழுதின அவனே தான் அழித்தெழுத வல்லமையுடையவன் ஆகையினால் அவன் அன்று எழுதும் எழுத்தை அழித்து என் மண்டையிற்றான் நல்ல எழுத்து ஒன்றை எழுதமாட்டானோ? (எ-று)

இராகம்-பியாகடை-அடதாளம்-சாப்பு.

பல்லவி.

ஆண்டவனென் செய்வனோ-குணங்குடி
ஆண்டவனென் செய்வனோ

(பொ-ரை) குணங்குடியில் எழுந்தருளியிருக்கின்ற ஆண்டவன் என்ன செய்வானோ? (எ-று)

அநுபல்லவி.

ஆண்டவனணைத்தென்னை யருகில்வைத் திடுவனோ
தீண்டியும் பார்க்காமற் றெருவில்விட்டிடுவனோ (ஆண்)

(பொ-ரை) ஆண்டவனானவன் என்னை அணைத்து சமீபத்தில் வைத்துக்கொள்ளுவானோ? தொட்டுப்பார்க்காமலும் தெருவில்விட்டுவிடுவானோ? (எ-று)

சரணங்கள்.

தேனைப்பழித்தபே ரின்பங் கொடுப்பனோ
தேவடியார்கள்சிற் றின்பங் கொடுப்பனோ
மோனவருட்பரி வட்டங் கொடுப்பனோ
முற்று முட்டாளெனும் பட்டங் கொடுப்பனோ (ஆண்)

(பொ-ரை) தேனையும் இதின்ருசி ஒரு இன்பம் பயக்கத் தக்கதா? வென்று பழிக்கக்கூடிய பேரின்பத்தைக் கொடுப்பானோ? தேவடியார்களுடைய சிற்றின்பத்தைக்கொடுப்பானோ? மௌனவருளென்னும் பரிவட்டத்தைக் கொடுப்பானோ? முழுமுட்டாளென்னும் பட்டங் கொடுப்பானோ? (எ-று)

உச்சிக்குள்வைத்த பொருளைக் கொடுப்பனோ
உச்சந்தலையிலிரண்டு குட்டுக் கொடுப்பனோ
முச்சுடரொடுசோம வட்டங் கொடுப்பனோ
முற்றுமுட்டாளெனும் பட்டங் கொடுப்பனோ (ஆண்)

(பொ-ரை) உச்சிக்குள் வைத்திருக்கின்ற உண்மைப் பொருளைக் கொடுப்பானோ? உச்சந்தலையில் இரண்டு குட்டு குட்டுவானோ? மூன்று சுடர்களுடனே சோமவட்டத்தைக் கொடுப்பானோ? முழுமுட்டாள் என்னும் பட்டத்தைக் கொடுப்பானோ? (எ-று)

வற்றுவருட் செல்வங் கொள்ளை கொடுப்பனோ
மண்ணைத்தானள்ளிக்கைகொள்ளக் கொடுப்பனோ
முத்திதருமோன வட்டங் கொடுப்பனோ
முற்றுமுட்டாளெனும் பட்டங் கொடுப்பனோ (ஆண்)

(பொ-ரை) நீங்காத திருவருட் செல்வத்தைக் கொள்ளையடிக்கக் கொடுப்பானோ! மண்ணை அள்ளி கையிற்கொள்ளக் கொடுப்பானோ!

மோட்சத்தைக் கொடுக்கின்ற மௌன வட்டத்தைக் கொடுப்பானே முழுமுட்டாளென்னும் பட்டத்தைக் கொடுப்பானே! (எ-று)

நாக்கந்நாளவாயிற் காக்கக் கொடுப்பனே.
நாய்போல்வாயில்தோறுங் காக்கக் கொடுப்பனே
மூக்குமுனையில்வன்னி வட்டங் கொடுப்பனே
முற்றுமுட்டாளெனும் பட்டங் கொடுப்பனே (ஆண்)

(பொ-ரை) நாக்கின் நாளத்தைக் காக்குந் தொழிலைக் கொடுப்பானே? நாயைப்போல வாசலைக் காக்குந் தொழிலைக் கொடுப்பானே! மூக்கின் முனையில் அக்கினி வட்டத்தைக் கொடுப்பானே! முழுமுட்டாளென்னும் பட்டத்தைக் கொடுப்பானே! (எ-று)

சிட்டனுகவும்வாசி கட்டிக் கொடுப்பனே
செட்டையிற்றுணிரண்டுதட்டிக் கொடுப்பனே
முட்டமுட்டச் சட்டதிட்டங் கொடுப்பனே
முற்றுமுட்டாளெனும் பட்டங் கொடுப்பனே (ஆண்)

(பொ-ரை) நான் உயர்ந்தவனுகவும் எனக்கு ஒருவாசியைக் கட்டிக் கொடுப்பானே? செட்டையிலிரண்டையுந் தட்டிக் கொடுப்பானே! நெருங்க நெருங்கச் சட்டதிட்டத்தைக் கொடுப்பானே! முழுமுட்டாளென்னும் பட்டத்தைக் கொடுப்பானே! (எ-று)

கண்டங்கடங்கத்தான் காட்டிக் கொடுப்பனே
காலனுக்கென்னைத்தான் காட்டிக் கொடுப்பனே
முண்டம்படாநிலை விட்டுக் கொடுப்பனே
முற்றுமுட்டாளெனும் கட்டங் கொடுப்பனே (ஆண்)

(பொ-ரை) பார்த்து அடங்குவதற்குக் காட்டிக்கொடுப்பானே! எமனுக்கு என்னைக் காட்டிக் கொடுப்பானே! முண்டம் படாதபடி என்னை நிலைவிட்டுக் கொடுப்பானே! முழுமுட்டாளென்னும் பட்டத்தைக் கொடுப்பானே! (எ-று)

செத்துப்போமுன்காயசித்தி கொடுப்பனே
செத்துப்போவென்றுசா பத்தைக் கொடுப்பனே
முத்தமிட்டிட்டுநல் லிஷ்டங் கொடுப்பனே
முற்றுமுட்டாளெனும் பட்டங் கொடுப்பனே (ஆண்)

(பொ-ரை) இறந்துபோவதற்கு முன்னே காயசித்தியைக் கொடுப்பானே! அல்லது செத்துப்போவென்று சாபத்தைக் கொடுப்பானே! அல்லது முத்தங்கொடுத்து நல்ல இஷ்டத்தைக் கொடுப்பானே! முழுமுட்டாளென்னும் பட்டத்தைக் கொடுப்பானே! (எ-று)

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாபு.

பல்லவி.

ஐயையோவென்விதிவசம் ஆருடன்சொல்வேன்

(பொ-ரை) ஐயையோ! என்னுடைய விதியின் வசத்தை யாருடன் சொல்லுவேன்! (எ-று)

அநுபல்லவி.

நையுமுடல்மெய்யென்றெண்ணிப் பொய்யனானேன் (ஐயை)

(பொ-ரை) இறந்துபடுகின்ற சரீரத்தை உண்மையானதென்று நினைத்து நான் பொய்யனானேன். (எ-று)

சரணங்கள்.

பெண்பிள்ளையென்று மனம்பித்துக் கொள்ளுதே-நாம்
என்றுமிருப்போ மெனவுஞ்சண்டை துள்ளுதே (ஐயை)

(பொ-ரை) பெண்பிள்ளையின்மேல் ஆசையைவைத்து மனம் பித்துக்கொள்ளுகிறதே! நாம் என்றைக்கும் இறவாமலிருப்போம் என்றும் சண்டையிட்டுத் துள்ளுகிறதே. (எ-று)

பழிக்கோவென்னுடலைப் படைத்து வளர்ப்பேன்-இதை
புழுக்கோநாய்நரிக்கோ பிடுங்கக் கொடுப்பேன் (ஐயை)

(பொ-ரை) என்னுடைய சரீரத்தைப் பழிப்பதற்காகவா படைத்து வளர்ப்பேன், இதைப் புழுவுக்கோ! நாய்க்கோ! நரிக்கோ! பிடுங்கும்படி கொடுப்பேன்! (எ-று)

கையில்வெண்ணெய்தனைவிட்டுநெய்யைத் தேடுறேன்-எங்கள்
ஐயன்பதந்தனைவிட்டுப் பொய்யைக் கூடுறேன் (ஐயை)

(பொ-ரை) கையிலிருக்கின்ற வெண்ணெயைவிட்டு நெய்யைத் தேடுகிறேன் எங்களுடைய சர்வேஸ்வரன் திருவடிகளைவிட்டு பொய்யைக் கூடுகிறேன். (எ-று)

மாதுமக்களென்று மென்மதி மயங்குதே-இது
சூதுசெய்வாரோடு கூடிவாது பேசுதே (ஐயை)

(பொ-ரை) ஸ்திரீகள், பிள்ளைகள், என்று என்னுடைய மனம் மயங்குகிறதே, இது சூதுசெய்பவர்களுடன் கூடி வாதுபேசுகிறதே! (எ-று)

வாக்குமன மணுகாது வான்பொரு ளுள்ளே-அதை
நோக்கிநோக்கிப் பார்ப்பார்க்குவாய்க்குமோ கொள்ளை (ஐயை)

(பொ-ரை) வாக்குக்கும், மனத்துக்கும் அணுகாத வான்பொருளானது உள்ளே இருக்கிறது. அதைநோக்கிப் பார்ப்பவர்களுக்கு கொள்ளையாக அப்பொருள் கிடைக்குமோ! (எ-று)

புந்திமகிழுண்டுடுக்கச் சிந்தை துள்ளுதே-நீய
அந்தகாரந்தன்னை யகமாக்கிக் கொள்ளுதே (ஐயை)

(பொ-ரை) மனமகிழ்ந்து உண்ணவும், உடுக்கவும் மனந் துள்ளுகிறதே, மாயையை வீடாக்கிக் கொள்ளுகிறதே! (எ-று)

காயிலையுதிர்ந்த சருகுகனி தின்று-நாம்
ஆயுமறைமுடிவைத்தேடிப்போவது மென்று (ஐயை)

(பொ-ரை) காய், இலை, உதிர்ந்த சருகு, பழவர்க்கங்கள் இவைகளைப்புசித்து நாம் ஆராய்கின்ற வேதங்களின் அந்தத்தை ஆராய்ந்து காண்பதற்கு அங்கே போவது என்றைக்கோ! (எ-று)

தேகத்தினென்பு வெளியாக வாடினோர்-அவர்
ஆகமச்சொற்படிக்கே யருளைக் கூடினோர் (ஐயை)

(பொ-ரை) இந்தச் சரீரத்தின் எலும்பானது வெளிப்பட்டு என்பு சரீரம் என்று பலரும் சொல்லும்படி சரீரம் இளைத்தோம், அதுவுமல்லாமல் அவருடைய சிவாகமத்திற் சொல்லுகின்ற சொற்படியே அன்னவருடைய திருவருட் பிரசாதத்தைக் கூடினோம். (எ-று)

ஆழிகரையின்றி நிலைநிற்க வில்லையோ-யான்
பாழிலலையாதெனக் கோர்பாதை யில்லையோ (ஐயை)

(பொ-ரை) சமுத்திரமானது கரையில்லாதபடிக்கே அந்த அளவைக் கடக்காமல் ஒரே நிலையாக நிற்கவில்லையோ? அப்படிப்போல நான் வீண்விவகாரங்களில் சென்று அலையாதபடி எனக்கு ஒருவழியில்லையோ! (எ-று)

ஆசைபாசமற்றவ ரருளைப் படைப்பார்-அவர்
தேசிகன்குணங்குடி தெருவி லிருப்பார் (ஐயை)

(பொ-ரை) ஆசாபாசங்களை விட்டவர்களே உன்னுடைய திருவருளைப்பெறுவார், அன்றி, அவர்கள் எம்முடைய ஞானசிரியன்வாழ்கின்ற குணங்குடியின் தெருவிலும் இருப்பார்கள். (எ-று)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

என்றலைபி விட்டபொல்லா விதியானற் குணங்குடிவாழ்
விணங்கு தில்லை
என்றலைபி விட்டபொல்லா விதிக்கெண்ணெ யிட்டாலு
மேகு தில்லை
என்றலைபி விட்டவிதிக் கினியெவர்பட் டுத்தொலைப்பா
ரெனநின் றேங்கி
என்றலைபி விட்டவிதி கனைநினைந்து பாவியா
னிடைகின் றேனே.

(பொ-ரை) என்னுடைய தலையில்போட்டிருக்கின்ற பொல்லாத தீவினையினால் உயர்ந்த குணங்குடியில் வாழ்கின்ற வாழ்வு எனக்குக் கிடைப்பதில்லை, அந்த தீவினைக்கே என் தலைக்கு எண்ணெயிட்டுக் கொண்டாலும் போகிறதில்லை ஆகையால் என்னுடைய தலைவிதிக்கு இனியாவர் பட்டுத்தொலைப்பார் என்று மனம்பரிதவித்து என்னுடைய தலையில் அமைத்தவிதியை நினைந்து பாவியாகிய நான் பின்னிடைகின் றேன். (எ-று)

இராகம்-ஆகிரி-தாளம்-அடசாப்பு.

பல்லவி.

ஏதேதுசெய்திடுமோ பாவிவிதி ஏதேதுசெய்திடுமோ

(பொ-ரை) பாவியாகிய எனக்கு ஏற்படுத்தின விதியானது என க்கு என்னென்ன தீமைகளைச் செய்யுமோ. (எ-று)

அநுபல்லவி.

ஏதேதுசெய்து வெனைமோசஞ் செய்யுமோ
மாதவஞ்செய்து மனுவாகச் செய்யுமோ (ஏதே)

(பொ-ரை) என்னென்ன தீமைகளைச் செய்து என்னை மோசஞ் செய்யுமோ! மகத்தாகிய தவத்தைச் செய்து மனுவாகும்படி செய்யு மோ! (எ-று)

சரணங்கள்.

சற்றுநல்லறிவற்ற மாடாகச் செய்யுமோ
சாகாவரம்பெற்றுக் காடேகச் செய்யுமோ
கற்றறிமூடர்கட் கீடாகச் செய்யுமோ
கத்தன்குணங்குடி வீடாகச் செய்யுமோ (ஏதே)

(பொ-ரை) அந்த விதிவசமானது கொஞ்சமும் அறிவில்லாத மாடாகச்செய்யுமோ! சாவாதவரத்தை அடைந்து காட்டுக்குப் போக செய்யுமோ! கற்றுணர்ந்த மூடர்களுக்கு ஒப்பாகச்செய்யுமோ! கடவு ளுடைய குணங்குடியையே வீடாகச்செய்யுமோ! (எ-று)

கத்திக்கத்திப்பாவி செத்திடச் செய்யுமோ
கத்தன் திருவருள் பெற்றிடச் செய்யுமோ
கொத்தும்பெண்ணாவெனைக்கொத்திடச் செய்யுமோ
குணங்குடிவாழ்க்கைவந் தெய்திடச் செய்யுமோ (ஏதே)

(பொ-ரை) பாவியானவன் கத்திக்கத்தி சாவும்படி செய்யுமோ! சர்வேஸ்வரனுடைய திருவருளை யடையும்படி செய்யுமோ! கொத்து கின்ற பெண்ணென்னும் சர்ப்பமான என்னைக் கொத்தும்படி செய்யு மோ? குணங்குடியின் வாழ்க்கையானது எனக்குக் கிடைக்கும்படிசெய் யுமோ! (எ-று)

செத்தபிணத்தோடு சேர்ந்திடச் செய்யுமோ
சித்தர்கணத்தோடு சார்ந்திடச் செய்யுமோ
மெத்தப்பணந்தேடி யாய்ந்திடச் செய்யுமோ
மேலக்குணங்குடி வாழ்ந்திடச் செய்யுமோ (ஏதே)

(பொ-ரை) செத்தபிணத்துடன் சேரும்படி செய்யுமோ! சித்தர் கூட்டங்களுடன் சேரும்படி செய்யுமோ! மிகுதியும் செல்வந்தேடி பிறகு இறக்கும்படி செய்யுமோ? மேலான குணங்குடியில் வாழும்படி செய்யுமோ! (எ-று)

பாழானகாயத்தைப் பாழாகச் செய்யுமோ
பாழாகப்போமுன்முப் பாழாகச் செய்யுமோ
தேளானபெண்களுக் காளாகச் செய்யுமோ
தேறிக்குணங்குடிக் காளாகச் செய்யுமோ (ஏதே)

(பொ-ரை) பாழ்படுகின்ற இந்தச்சரீரத்தைப் பாழாம்படி செய்யுமோ! இந்தச் சரீரம் அழிந்துபோவதற்கு முன் முப்பாழ் கிடைக்கும்படி செய்யுமோ! தேள்விஷம்போன்ற பெண்களுக்கு அடிமையாகும்படி செய்யுமோ! தெளிந்து குணங்குடிக்கு அடிமைப்படச்செய்யுமோ! (எ-று)

தேவடியாள்விட்டு நாயாகச் செய்யுமோ
தேவடியாளுமென் றுயாகச் செய்யுமோ
நாவுருசிகொண்டு பேயாகச் செய்யுமோ
நாதன்குணங்குடிக்கேயாளாகச் செய்யுமோ (ஏதே)

(பொ-ரை) தேவடியாள் வீட்டு நாய்போலச் செய்யுமோ? தேவடியாள்மகனாகச் செய்யுமோ! நாக்கு ருசியைப் பெற்றுப் பேயாம்படி செய்யுமோ? சர்வேஸ்வரனுடைய குணங்குடிக்கு அடிமையாளாகச் செய்யுமோ? (எ-று)

இராகம்-பரிசு-தாளம்-சாப்பு.

பல்லவி.

அல்லாகூ வென்னுங்கள்-சதா காலம்
அல்லாகூ வென்னுங்கள்

(பொ-ரை) உலகர்களே! நீங்கள் எப்பொழுதும் அல்லாகூ என்று சொல்லுங்கள். (எ-று)

அநுபல்லவி.

அல்லாகூவென்னுங்கள் அஞ்ஞானந்தனைவிட்டு
எல்லாரும்வெளிப்பட்டு இப்போதெதிர்ப்பட்டு (அல்)

(பொ-ரை) அறியாமை என்னும் அஞ்ஞானத்தைவிட்டு எல்லாரும் ஒன்றாய் வெளிப்பட்டு இப்போது அவனுக்கு எதிர்ப்பட்டு அல்லாகூ என்று சொல்லுங்கள். (எ-று)

சரணங்கள்.

வகுத்தஜோதிமெய்ஞ்ஞான வாரியைமான முன்ன
வஞ்சமில்பாரமார்த்த குருவருளிய தென்ன
ஜெகஜாலவலைதன்னுட் சிக்கிப்பலவு மின்ன
சிற்சொரூபந்தெரியாமற்செத்திறந்துபோ முன்னம் (அல்)

(பொ-ரை) வேதங்களால் எடுத்து வகுக்கப்பட்ட தேஜோமய மான உண்மை ஞானக்கடலை மனத்தால் தியானிக்கவும், கபடமற்ற பாரமார்த்திக ஆசாரியன் அருளிச்செய்த தென்னவும், ஜெகஜாலவலை யினுள் ளகப்பட்டுப் பலவும் மின்னவும், ஞான சொரூபத்தை உணரா மல் செத்துப்போவதற்கு முன்னர். (எ-று)

அல்லாகூவென்ற வரும்பொருளா மென்ன
அனந்தமறைகளு மப்படியே பன்ன
நல்லறிவாளரு நாளுமெடுத்துச் சொன்ன
நன்மையெல்லாமனக் குண்மையிலே மன்ன (அல்)

(பொ-ரை) அல்லாகூவென்று சொல்லப்படுகின்ற அருமையான பொருளாம் என்று சொல்லவும், பலபலவேதங்களும் அப்படியே சொ ல்லவும், உயர்ந்த ஞானிகளும் தினந்தோறும் எடுத்துச் சொன்ன நன் மைகளெல்லாம் மனத்துக்கு உண்மையாகவே நிலைபெறவும். (எ-று)

ஆசாபாசமென்னும் அழிபுத்திகளு மற்று
அளவிட்டறியவொண்ணுதருள் ஞானந்தனைப் பெற்று
மாசற்றொளிருமுன் மனமிருவினை யற்று
மாதாபிதாவெனு மயக்கமுழுவது மற்று (அல்)

(பொ-ரை) ஆசாபாசம் என்கிற அழியக்கூடிய புத்திகளெல்லாம் அற்று அளவிட்டு அறிவதற்குக்கூடாததிருவருள் ஞானத்தைப்பெற்று, குற்றமற்றுவிளங்குவதற்கு பூர்வகர்மவயமாகவந்த மனத்தின்இருவினை யற்று, தாய்தந்தையர்கள் என்னும் மாய்கைமுழுவதும் ஒழிந்து.(எ-று)

மும்மலக்காட்டினை முழுவதையு மரிந்து
மூலநெருப்பினை மூட்டமூட்ட விரிந்து
சின்மயஜெகஜோதித் தெளிதாவே தெரிந்து
தேசிகன்குணங்குடி தெருவீதியி லிருந்து (அல்)

(பொ-ரை) ஆணவம், காமியம், மாயை என்னும் மூன்று மலக்கா ட்டை முழுவதையும் அரிந்து மூலாதாரக்கனலை பன்முறை மூட்ட விரிந்து, ஞானமய தேஜஸ்ானது தெளிவாகத்தெரிந்து ஞானுசிரியனு டைய குணங்குடியின் வீதியிலிருந்து. (எ-று)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

புனிதகுணங் குடிவாழ்க்கை போகாமற் பொங்கு மிச்சை
பொங்கிப் பொங்கிப்
புனிதகுணங் குடிபடைத்துப் போதபரி பூரணபோ
தகமும் பூண்டு
புனித குணங் குடியானைப் போற்றாது போற்றுவார்
போலு மந்தப்
புனிதகுணங் குடியானைப் போற்றவிந்திப் புல்லனும் வாய்
புலம்பு வானே.

(பொ-ரை) பரிசுத்தமான குணங்குடியின் வாழ்க்கையானது போகாதபடி பொங்குகின்ற இச்சையானது பொங்கிப் பொங்கிப் புனிதமான குணங்குடியை ஊராகப்பெற்று ஞானமென்னும் நிறைந்தபோதகத்தைப்பூண்டு, குணங்குடியானை துதியாமல் துதிசெய்கின்றவர் போலும் அந்தக் குணங்குடிக் கடவுளைத் துதிசெய்வதற்கு இந்த அற்பனும் வாயாற் புலம்புவேன். (எ-று)

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-அடதாளம்சாப்பு.

பல்லவி.

கத்திக்கத்தித் தொண்டையுங்கட்டிச் செத்தேனே
காணுமெங்கள் குணங்குடிச் சித்தனே

(பொ-ரை) யாவராலும் காணப்படுகின்ற குணங்குடியில் வாழ்கின்ற சித்தனே? நான் உன்னைக் குறித்துக்கத்திக்கத்தித்தொண்டையுங் கட்டிச்செத்தேன். (எ-று)

அநுபல்லவி.

முத்தனேமுத்தனே யென்றும்
கத்தனே கத்தனே யென்று முனைத்தேடி (கத்தி)

(பொ-ரை) உன்னை மூன்றுமுறை முத்தனே! என்றும், இருமுறை கத்தனே! என்றும் தேடி. (எ-று)

சரணங்கள்.

நாயனே நாயனே நாயனே யென்றும்
மாயனே மாயனே மாயனே யென்றும்
தூயனே தூயனே தூயனே யென்றும்
நேயனே நேயனே யென்று முனைத்தேடி (கத்தி)

(பொ-ரை) உன்னை! நாயனே! மாயனே! தூயனே! நேயனே! என்று மும்முறை இருமுறைகளாகத் தேடி. (எ-று)

ஏகனேயேகனே யேகனே யென்றும்
யோகனேயோகனே யோகனே யென்றும்

மோகனேமோகனே மோகனே யென்றும்
வாகனேவாகனே யென்று முனைத்தேடி (கத்தி)

(பொ-ரை) உன்னை! ஏகனே! யோகனே! மோகனே! வாகனே! என்று மும்முறை இருமுறைகளாகத் தேடி. (எ-று)

நாதனேநாதனே நாதனே யென்றும்
நீதனேநீதனே நீதனே யென்றும்
போதனேபோதனே போதனே யென்றும்
தூதனேதூதனே யென்று முனைத்தேடி (கத்தி)

(பொ-ரை) உன்னை! நாதனே! நீதனே! போதனே! தூதனே! என்று மும்முறை இருமுறைகளாகத் தேடி. (எ-று)

நித்தனேநித்தனே நித்தனே யென்றும்
சுத்தனேசுத்தனே சுத்தனே யென்றும்
பத்தனேபத்தனே பத்தனே யென்றும்
அத்தனேஅத்தனே யென்று முனைத்தேடி (கத்தி)

(பொ-ரை) நித்தனே! சுத்தனே! பத்தனே அத்தனே! என்று மும்முறை இருமுறைகளாகத் தேடி. (எ-று)

ராஜனேராஜனே ராஜனே யென்றும்
போஜனேபோஜனே போஜனே யென்றும்
தேசனேதேசனே தேசனே யென்றும்
வாசனேவாசனே யென்று முனைத்தேடி (கத்தி)

(பொ-ரை) ராஜனே! போஜனே! தேசனே! வாசனே! என்றுமும் முறை இருமுறைகளாக உன்னைத்தேடி (எ-று)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கண்டதெல்லாங் கனவாகக் கண்டகுணங் குடியார்நற்
கருணை காட்டில்
கண்டதெல்லாங் கனவாகக் கண்டருள்கொண் டவராகக்
கருணை காட்டுங்
கண்டதெல்லாங் கனவாகக் கண்டருள்கொண் டவர்போலக்
கன்மி லேனே
கண்டதெல்லாங் கனவாகக் கண்டிடவோர்கனவேனுங்
கண்டி லேனே.

(பொ-ரை) கண்டவைகளையெல்லாங் கனவாகக் கண்ட குணங்குடியாருடைய உயர்ந்த கிருபையைக்காட்டினுல், கண்டவைகளெல்லாங் கனவாகக்கண்டு திருவருளைப் பெற்றவராகக் கிருபை காட்டும்.

கண்டவைகளைக் கனவாகக்கண்டு அருள்கொண்டவர்களைப்போல இக் கர்மியினால் கண்டவைகளையெல்லாம் கனவாகக் காண ஒரு கனவாயி னும் கண்டேனில்லை. (எ-று)

இராகம்-காம்போதி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கனவுங்கண்டிலனே-பாவியொரு
நினைவுங்கண்டிலனே.

(பொ-ரை) பாவியாகிய நான் ஒரு கனவுங் கண்டேனில்லை, ஒரு நினைவுங் கொண்டேனில்லை (எ-று)

அநுபல்லவி.

கனவுங்கண்டிலன் காட்சி கொடுக்கவுங்
கத்தனருளடை காத்துக் கிடக்கவும்
மனமுந்தேறிப்பொய் வாழ்வை விடுக்கவும்
மாகுணங்குடிமெய் வாழ்வைப் படுக்கவும் (கன)

(பொ-ரை) கனவுங் கண்டேனில்லை, காட்சிகொடுக்கவும், கர்த்த னுடைய திருவருளில் அடைகாத்துக்கொண்டிருக்கவும், மனம் தெளி ந்து பொய்வாழ்வை விடவும், மகத்தாகிய குணங்குடி என்னும் உண் மை வாழ்வைப் பெறவும். (எ-று)

சரணங்கள்.

மானபிமான மடமையைப் போக்கவும்
மாதர்க்கடிமைப்படாதெனக் காக்கவும்
வானதிபூத லயம்வந்து வாய்க்கவும்
வாசாமகோசர வாழ்க்கையுஞ் சாய்க்கவும்
மோனமவுன மணிமாலை கோக்கவும்
மூக்குமுனையைச் சுழுமுனை யாக்கவும்
ஞானத்திருநட நாதமுங் கேட்கவும்
நாதன் குணங்குடி பாதையும் பார்க்கவும் (கன)

(பொ-ரை) மானம், அபிமானம் என்னும் அறியாமையை நீக்கவும் பெண்களுக்கு அடிமைப்படாதபடி என்னைக்காப்பாற்றவும், ஆகாயமுத லிய பஞ்ச பூதங்களின் லயம்வந்து சேரவும், வாசாமகோசர வாழ்வை ச்சாய்க்கவும், மௌனமென்னும் மணிமாலையைக்கோக்கவும், மூக்கின் முனையைச் சுழிமுனையாக்கவும், ஞானமென்னும் திருத்தாண்டவத் தால் உண்டாகும் சத்தத்தைக் கேட்கவும், தலைவனானவன் எழுந்தருளி யிருக்கின்ற குணங்குடியின் வழியைப் பார்க்கவும். (எ-று)

நாதாந்தமோன குருபதம் போற்றவும்
நாவைமடக்கியங் நாளத்து ளேற்றவும்
வேதாந்தவீட்டின் வெளிவாயில் சாத்தவும்
வித்தகன்வந்து விளக்கெடுத் தேற்றவும்

சீதமதிதன் னமிர்தத்தை யூற்றவும்
சின்முத்திரையைவைத் தென்மனந் தேற்றவும்
பூதலயத்துட் பொறிகளைத் தாழ்த்தவும்
புண்ணியன்குணங்குடி பொங்கிட வாழ்த்தவும் (கண)

(பொ-ரை) நாததத்துவத்துக்கு அந்தத்தில் விளங்குகின்ற மௌனகுருவினுடைய திருவடிகளைப் போற்றுதல் செய்யவும், நாக்கை மடித்து உண்ணாக்கின் துவாரத்தில் ஏற்றவும், வேதாந்தமென்னும் வீட்டினுடைய வெளிவாசலைச் சாத்தவும், பரிசுத்தனான இறைவன்வந்து விளக்கை எடுத்தேற்றவும், குளிர்ந்த சந்திரனானவன் தன்னுடைய அமிர்தத்தை ஊற்றவும், ஞானமுத்திரையைக்காட்டி என்னுடைய மனத்தைத் தெளிவிக்கவும், பூத ஒடுக்கத்துள்ளே ஐம்பொறிகளையும் அடக்கவும், புண்ணியமூர்த்தி எழுந்தருளியிருக்கின்ற குணங்குடியானது விளங்கும்படி வழ்த்தவும். (எ-று)

பாங்காயுதவுமெங் கோன்வந் தடுக்கவும்
பஞ்சகோசமெனுங் கோட்டை பிடிக்கவும்
ஓங்கார வீட்டினுக் குள்ளே யடுக்கவும்
ஒன்றுக்குளொன்றா யொடுக்கிப் படுக்கவும்
தேங்காமரத்தினிற் கள்ளை வடிக்கவும்
தேறற்றெளித்துத் தெளித்துக் குடிக்கவும்
மாங்காயுள்வண்டாய் மயங்கிக் கிடக்கவும்
வாசிகுணங்குடி வாயி லடைக்கவும் (கண)

(பொ-ரை) தகுதியாக உதவுகின்ற எம்முடைய தலைவனானவன் வந்துசேரவும், பஞ்சகோசம் என்கிற கோட்டையைப் பிடிக்கவும், பிரணவ வீட்டுக்குள் சேரவும், ஒன்றனுக்குள் ஒன்றாக பூதங்களை யொடுக்கவும், தெவிட்டாத மரத்திலிருந்து வருகின்ற கள்ளை வடிக்கவும், அந்தத்தேனை தெளிவித்துக் குடிக்கவும், மாங்காய்க்குள் ளிருக்கின்ற வண்டைப்போல மயங்கியிருக்கவும், வாசியையுடைய குணங்குடியின் வாசலை யடைக்கவும். (எ-று)

கள்ளக்கருத்துகள் கட்டோடே வேகவும்
கன்மந்தொலைந்து கடைத்தேறிப் போகவும்
கொள்ளித்தேளான மனமாயை சாகவும்
கூர்விழியாரிஷ்டங் கொட்டுண்டு போகவும்
உள்ளத்திருக்குமற் றுத்தம னாகவும்
ஒப்புறவுந்தப்பி யூரைவிட் டேகவும்
வெள்ளத்திருக்கருணை யூடே நோகவும்
மெய்யன்குணங்குடி மையமு மாகவும் (கண)

(பொ-ரை) திருட்டு எண்ணங்களெல்லாம் கூட்டமாய் வேகவும், கர்மங்களெல்லாம் நீங்கி நான் கடைத்தேறிப் போகவும் கொள்ளித் தேளைப்போன்ற மனோ மாயையானது கெடவும், பெண்கள்மேலாசை விட்டுப் போகவும், மனோவிகற்பங்கள் ஒழிந்து உத்தம புருஷனாகவும், ஒப்புறவுகெட்டு ஊரைவிட்டோடிப் போகவும், திருக்கருணை வெள்ளத்துடன் சேரவும், உண்மையாளனான குணங்குடியான் பையலாகவும். (எ-று)

வேசையாசையை வேரோ டறுக்கவும்
வெற்றிக்கொடிகட்டி மீசை முறுக்கவும்
பேசறியாவூமர் போ னிருக்கவும்
பேயரைப்போலும் பிதற்றிச் சிரிக்கவும்
வாசிநடத்தி வழியைக் குறுக்கவும்
வாசற்படி கிட்டவந்து நெருக்கவும்
ஓசைமணிமண்டபத்தைத் திறக்கவும்
உச்சக்குணங்குடிக் குட்சற் றிருக்கவும் (கண)

(பொ-ரை) வேசிகளின்மேல்வைத்த ஆசையை வேருடனே அறுத்தெறியவும், ஜெயத்துவசத்தை நாட்டி மீசையைமுறுக்கவும், ஊமைகளைப்போல் நான் மௌனமடைந்திருக்கவும், பிசாசு கோட்பட்டவர்களைப்போலப் பிதற்றிச் சிரிக்கவும், சரத்தை நடத்தி வழியைக் குறுக்கிடவும், வாசற்படியின் சமீபமாக வந்து நெருங்கவும், சுத்தமுள்ள அழகிய மண்டபத்தைத் திறக்கவும், மேலான குணங்குடிக்குள் கொஞ்சநேரம் இருக்கவும். (எ-று)

என்னைக்கொடுக்குமென் றன்னைக் கெடுக்கவும்
என் குருபாதத்தை யெட்டிப் பிடிக்கவும்
பின்னியபாசந்தன் பின்னல் விடுக்கவும்
பித்தம்பிடித்த மனத்தை யொடுக்கவும்
மன்னும்பரவொளி யும்பந் தடிக்கவும்
மாயைப்பசாசினை மண்ணில் மடிக்கவும்
கன்னலையொத்தபே ரின்பம் படைக்கவும்
கத்தன் குணங்குடிச் சித்துங் கிடைக்கவும் (கனு)

(பொ-ரை) என்னுடைய அறிவைக் கெடுக்கின்ற என்னைக் கெடுக்கவும், என்னுடைய குருவின் பாதங்களை எட்டிப்பிடிக்கவும், பின்னலாயிருக்கின்ற பாசத்தை விடவும், பைத்தியங்கொண்ட மனத்தை ஒடுக்கவும், சொல்லுகின்ற மேலான ஒளியும் பந்தடிக்கவும், மாயாபிசாசைப் பூமியில் இறக்கச்செய்யவும், கரும்பையொத்த பேரின்பமானது படைக்கவும், கர்த்தனுடைய குணங்குடி சித்தும் அகப்படவும். (எ-று)

வஞ்சமறலிக்கு மஞ்சா திருக்கவும்
வஞ்சியரை முத்தங் கொஞ்சா திருக்கவும்
கஞ்சாவபின்வர்க்கங் கசப்பா யிருக்கவும்
காசாசைகொண்டு கலங்கா திருக்கவும்
நஞ்சாம் பிரபஞ்சர்க்கு நஞ்சா யிருக்கவும்
நவகண்டயோகநா லஞ்சா யிருக்கவும்
நெஞ்சம்பதைப்பற்ற நெஞ்சா யிருக்கவும்
நித்தன்குணங்குடிநித்த மிருக்கவும் (கண)

(பொ-ரை) கபடத்தையுடைய எமனுக்கும் பயப்படாமலிருக்கவும், பெண்களைக் கொஞ்சாமலிருக்கவும், கஞ்சா, அபினி இவைகள் கசப்பா யிருக்கவும், பணவாசையைப்பெற்று மனங்கலங்காதிருக்கவும், உலகத்தார்க்கு விஷமா யிருக்கவும், நவகண்டயோகமானது ஒன்பதாயிருக்கவும், மனம்பதைப்பில்லாமலிருக்கவும், அழியாதவனுடைய குணங்குடியில் என்றைக்கு மிருக்கவும். (எ-று)

பட்டிப்பசுவையுங் கட்டியே போடவும்
பாற்பசுவுங்கட் டவிழ்த்துக்கொண் டோடவும்
மட்டங்குதித்துக் குதித்துக்கொண் டோடவும்
மதிமண்டலஞ்சென்று மருவியூ டாடவும்
சட்டமுதுண்டு களைதீர நாடவும்
காலனையுங்காலைக்கொண்டுதை போடவும்
பட்டப்பகற்போ லருள்வந்து மூடவும்
பாக்யகுணங்குடிப் பாக்யனைக் கூடவும் (கண)

(பொ-ரை) பட்டியாகிய பசுவையும் கட்டிப்போடவும், பாற்பசு கட்டவிழ்த்துக்கொண்டோடவும், மட்டமானது குதித்துக்கொண் டோடவும், சந்திரமண்டலத்திற்குப்போய் ஊடாடவும், பிராரத்துவத்தை அனுபவித்து களைதீர்வதற்கு வாடவும், எமனைக் காலால் உதைக்கவும், பட்டம்பகலைப்போல திருவருள்வந்து மூடவும், பாக்கியத்தையுடைய குணங்குடி பாக்கியனைச் சேரவும். (எ-று)

மண்ணுமூவாசை மாட்டேனென் றோடவும்
மாறுவனுபூதி வந்தெனை மூடவும்
எண்ணுதவெண்ண மெல்லாம்விட்டுப் போடவும்
என்றன்பிரானரு ளென்றனைத் தேடவும்
புண்ணுளர்போலும் புலம்பிநான் வாடவும்
போதப்பரவெளி பம்பர மாடவும்
விண்ணுடர்போற்றிடி செயவினை யாடவும்
மேலைக்குணங்குடி சாலையைக் கூடவும் (கண)

(பொ-ரை) வீணை, பொன், பெண், மண் என்னும் மூன்று ஆசைகளும் நாங்கள் இருக்கமாட்டோமென்று ஓடவும், ஒழியாத சிவானுபூதியானது வந்து என்னை மூடிக்கொள்ளவும், எண்ணாத எண்ணங்கள் எண்ணுவதை விட்டுப்போடவும், என்னுடைய பெருமானது திருவருளானது என்னைவந்து தேடவும், மனம் புண்ணானவர்களைப்போல புலம்பி நான் வாடவும், உண்மைஞான போதமாகிய மேலான வெளியில் பம்பரம்போலாடவும், தேவர்களெல்லாந் துதிக்க விளையாடவும், உயர்ந்த குணங்குடியின் சாலையில் சேரவும். (எ-று)

அத்துவிதப்பிரணவம்வந் தெற்றவும்
ஆனந்தமான பரமும்வந் தெற்றவும்
கர்த்தவியத்தின் கடாக்ஷம்வந் தெற்றவும்
கங்கற்றபேரருள் கங்கைவந் தெற்றவும்
முத்திக்குவித்தான மோனம்வந் தெற்றவும்
முப்பாழ்முடிவான மோக்ஷம்வந் தெற்றவும்
சத்துச்சித்தாநந்தஞ் சற்றுவந் தெற்றவும்
சாந்தக்குணங்குடி தானும்வந் தெற்றவும் (கண)

(பொ-ரை) அத்துவிதம் என்னும் பிரணவமானது வந்து மோதவும், ஆநந்தமான பரம்பொருள்வந்து மோதவும், காத்தவியக் கடாட்சவீட்சணியம் வந்து கைகூடவும், கரையில்லாத பெரிய அருளானது கங்கையைப்போல் சுரந்துவந்துகூடவும்; மோட்சத்திற்குக் காரணமான மௌனஞானமானது நிறைவேறவும், மூன்று பாழ்களுக்கும் முடிவாயிருக்கின்ற மோட்சங் கிடைக்கவும், சத்து, சித்து, ஆநந்தமென்னும் பொருள் கொஞ்சங் கிடைக்கவும், சாந்தமென்னும் குணங்குடியானது தானேவந்து கைகூடவும். (எ-று)

கண்டனவெல்லாங்கனவாகக் காணவும்
கண்ணாடிக்குள்ளொளி போன்முகங் காணவும்
தொண்டாசைமூன்றுந் தொலைத்திடக் காணவும்
சுத்தமயப்படி கச்சுடர் காணவும்
எண்டிசையுந்தொழு மெங்கோனைக் காணவும்
ஏகபராபர வாகனைக் காணவும்
கண்டங்கடந்தநா தாக்களைக் காணவும்
கடவுளெனுங்குணங் குடியானைக் காணவும் (கண)

(பொ-ரை) கண்ட பொருள்களை யெல்லாம் கனவாகக்கொள்ளவும் கண்ணாடிக்குள்ளே ஒளிக்கின்றதைப் போல் முகங் காணவும், தொண்டின் ஆசை மூன்றும் தொலைந்து போகவும், சுத்தமானதேஜோமயச்சுடர் காணவும், அஷ்டதிசைகளிலுள்ளாரும் வணங்குகின்ற எம்பெருமானைக் காணவும் ஒருவனாகிய பராபரனைத் தெரிசிக்கவும் அகண்டப் பொருளான நாதாக்களைக் காணவும், கடவுள் என்கிற குணங்குடியானைக் காணவும். (எ-று)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

நம்பினபேர்க் கருடருநற் குணங்குடியா னைகுரு
நாதன் பாதம்
நம்பினபேர்க் கும்பர்களும் பணிசெய்வ ரெனமறைக
ணவில்கை யாலே
நம்புமன்பர் போலுமிந்தப் பாவியே னெந்நாளு
நாடி நாடி
நம்பினதற் கந்தகுணங் குடியான்செய் ததுவுமென்ன
ஞாயந்தானே.

(பொ-ரை) யாரொருவர் உள்ளபடியே நம்புகின்றார்களோ அவர்களுக்கு அருள் தருகின்ற குணங்குடியானாகிய ஞானாசிரியனுடைய திருவடிகளை நம்பினவர்களுக்குத் தேவர்களும் பணிவிடைசெய்வார் என்று வேதங்களும் முறையிடுவதினால் நம்புகின்ற அடியார்களைப் போலாம் இத்தப்பாவியாகிய நான் எப்போதும் விரும்பி நம்பினமைக்கு அந்தக் குணங்குடிப் பெருமான் செய்தது என்ன ஞாயம்? (எ-று)

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு.

பல்லவி.

நம்பினதற்குக் குணங்குடியான் செய்த
ஞாயத்தை யென்ன சொல்வேன்.

(பொ-ரை) நான் நம்பினதற்கு குணங்குடிப்பெருமான் செய்த ஞாயத்தை என்ன சொல்லுவேன்? (எ-று)

அநுபல்லவி.

பம்பரம்போற்சுற்றி யயராமலு மழியாப்
பதிதந்தெனைப்பதித் திடவும்-பர
கதிவந்தெனக்கெதிர்த் திடவும்-ஞான
மதியிந்தெனக்குதித் திடவும் (நம்பின)

(பொ-ரை) பம்பரத்தைப்போலச் சுற்றி இளைக்காமலும் அழியாத பதியைக்கொடுத்து என்னை அவ்விடத்தில் பதிக்கவும், மோட்ச கதியானதுவந்து என்னை எதிர்க்கவும், ஞான அறிவானது சந்திரனைப் போல் குதிக்கவும். (எ-று)

சரணங்கள்.

உள்ளதெல்லாங்கொள்ளை கொண்டுகொண்டே யொரு
ஓட்டைபோடென்கையிற் கொடுத்தான்-கேளுங்
கள்ளனைப்போற் கொள்ளை கொண்டதும் பற்றுமற்
காவற்கிடங்கிலு மடைத்தான்-அந்தக்

கொள்ளிக்கண்ணனென்னை யுள்ளுக்குள்ளே விட்டுக்
கொல்லாமலேகொன்று மடித்தான்-ஒரு
எள்ளளவேனு மிரக்கமில்லாமலே
என்காலுக்கும்விலங் கடித்தான்-சொந்தம்
தொள்ளியைப்போல்வைத்து படைத்தான்-காய
முள்ளும்முள்ளாகவும் வடித்தான் (நம்பி)

(பொ-ரை) எனக்குச் சொந்தமாக வுள்ளவைகளை யெல்லாம் கொள்ளையடித்துக்கொண்டு ஒரு வெறும் ஓட்டை யோட்டை என்னுடைய கையில் கொடுத்தான், கேட்கின்ற திருடர்களைப்போல கொள்ளையடித்துக் கொண்டதும் போதாதபடி என்னைக்காவல் கிடங்கிலும் அடைத்து வைத்தான், அப்படிப்பட்ட அந்தக் கொள்ளிக்கண்ணனானவன் என்னை உள்ளுக்குள் விட்டு கொல்லாமலே கொன்றான், கொஞ்சமும் மனவிரக்கமில்லாமல் என்னுடைய காலுக்கும் விலங்குபோட்டான், சொந்தமான தொள்ளிவாய்போல வைத்துப் படைத்தான், சரீரம் முள்ளு முள்ளாகவும் இளைக்கச்செய்தான். (எ-று)

பஞ்சைகள்போலென்றன் பாட்டிற்றிரிந்தேன்
பிடாரியைப்போல்வந்து பிடித்தான்-யார்க்கும்
அஞ்சாதகண்டனேவாவென் றெனைப்பார்த்
ததட்டிப்பல்லைபல்லைக் கடித்தான்-யானுங்
கெஞ்சக்கெஞ்சவாயை மூடுமூடென்றெனைக்
கீழேகாலைவாரி யடித்தான்-கள்ளுங்
கஞ்சாவபின்வர்க்கங் கொள்வார்க்கே யான்றேடின
கன்மமெல்லாம்வாரி கொடுத்தான்-என்னைக்
கஞ்சிக்குச்சாம்படிக் கடிக்தான்-அவன்
நெஞ்சிலிருந்ததை முடித்தான் (நம்பின)

(பொ-ரை) பஞ்சைகளைப்போல என்பாட்டுக்கு நான் திரிந்தேன், என்னைப் பிடாரிபோல் வந்து பிடித்தான், யார்க்கும் பயப்படாத எமனே என்னை அதட்டி வாவென்று பல்லைக் கடித்தான், நான் வேண்ட வேண்ட வாயை மூடு மூடு என்று என்னைக் கீழே காலை வாரியடித்தான், கள், கஞ்சா, அபின் இவ்வகைகளை அனுபவிக்கிறவர்களுக்கே நான் தேடின கர்மங்களையெல்லாம் வாரி வாரிக் கொடுத்தான், என்னைக் கஞ்சிக்கும் சாகும்படிக்கு அடித்தான், அவனுடைய மனத்தில் இருந்த எண்ணத்தைப்போல் செய்து முடித்தான். (எ-று)

பெற்றதகப்ப னமக்கிவன்றானென்றும்
பெற்றோர்பிறந்தாரை மறந்தேன்-கொஞ்சப்
புத்தியினாலவன் பின்னாலேயேநான்
புழுக்கைப்பையல்போலுக் திரிந்தேன்-என்னை

முற்றிலுங்காப்பாற்று வானென்றுநம்பி
முடிமேலுமேற்றிக்கொண் டிருந்தேன்-அதைச்
சற்றேனுமெண்ணாம லென்முகநோக்கிநீ
சாவக்கடவதென் றறைந்தான்-இன்னும்
மெத்தமெத்தவெல்லாம் பறைந்தான்-ஒரு
மித்துநின்றிப்படிக் கிறைந்தான் (நம்பின)

(பொ-ரை) இவனே நம்மைப்பெற்ற தகப்பனென்று தாய் தந்தையர்களையும், உடன் பிறந்தவர்களையும் மறந்தேன், கொஞ்ச புத்தியினால் அவனுக்குப் பிறகே நான் புழுக்கைப் பையனைப்போல் திரிந்தேன், என்னை முழுமையும் காப்பாற்றுவானென்று நம்பி அவனை என் தலைமேலும் ஏற்றிக்கொண்டிருந்தேன், அதைக் கொஞ்சமும் நினைக்காமல் என்னுடைய முகத்தைப்பார்த்து நீ சாவக்கடவதென்று சொன்னான், இன்னும் வேண்டியவரைக்கும் பறைந்தான் ஒருமித்திருந்து இப்படியெல்லாம் இறைந்தான். (எ-று)

உண்டுடுத்துப் பூண்டு சையோகித்துச்செல்வத்
தோடுறுநாளில்வந் தடுத்தான்-எந்தச்
சண்டாளனென்னத்தைக் காதிலுரைத்தானோ
சடுதியில்வந்தெனைக் கடுத்தான்-உள்ளப்
பண்டம்படுதலை யெல்லாங்கைகொண்டுமென்
பண்டகசாலையுங் கெடுத்தான்-தன்னை
அண்டினபேரெல்லா மாளாகவும் வாரி
அளவற்றபாக்கியத்தைக் கொடுத்தான்-பின்னுந்
தொண்டுசெய்யென்றெனைத் தடுத்தான்-யானுங்
கொண்டமூவாசையை விடுத்தான் (நம்பின)

(பொ-ரை) உண்டு, உடுத்து ஆபரணங்களைப் பூண்டு, சையோகஞ்செய்து நான் செல்வத்துடனிருக்கின்ற நாளிலே என்னை வந்தடுத்தான், எந்தச் சண்டாளன் எதைக் காதினிடஞ் சொன்னானோ உடனே வந்து என்மேற் கோபித்தான், இருக்கின்ற பண்ட முதலியவற்றையெல்லாங் கொள்ளையடித்துக்கொண்டு என் பண்டசாலையையுங் கெடுத்தான், தன்னை யடைந்தவர்களெல்லாம் அடிமைகளாகவும் அளவில்லாத பாக்கியத்தை வாரிக்கொடுத்தான், பின்னரும் என்னைத் தனக்கு ஊழியம் செய்யென்று தடுத்தான், நான் பெற்றிருந்த மூன்றாசைகளையும் விடுவித்தான். (எ-று)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

எங்கள் குணங்குடியானே தனக்கேதா னெனவனை
மின்னங்கேளீர்
எங்கள்குணங் குடியானே யெனக்குமவன் றனக்குமிடை
யில்லை யென்றான்

எங்கள்குணங் குடியானே தனக்குமற்றை யெவர்க்குமா
யெங்கு மானால்
எங்கள்குணங் குடியானை யென்றைக்கோ காண்பேனென்
றிரங்கினேனே.

(பொ-ரை) எங்களுடைய குணங்குடியானனவன் தனக்கே தான் தலைவனானவனும், இன்னங்கேட்டால் எங்கள் குணங்குடியானனவன் எனக்கும் அவனுக்கும் இடையில்லையென்றான், (என்றால் சர்வ வியாபக முள்ளவனென்று சொன்னான்) அன்னவனே தனக்கும் மற்றெல்லா உயிர்களுக்கும் கலந்தவனாய் எங்கும் நிறைந்தவனானால் அவனை என்றைக்குத் தரிசிப்பேனென்று மன மிரங்கினேன். (எ-று)

இராகம்-தன்னியாசி-தாளம்-சாப்பு

பல்லவி.

எங்கள்குணங் குடியானை என்றைக்கோ காண்பேன்

(பொ-ரை) எங்களுடைய குணங்குடியானை என்றைக்கு நான்காண்பேனோ? (எ-று)

அநுபல்லவி.

தங்குபேரின்பந்தரு மென்றன்பிரானை (எங்கள்)

(பொ-ரை) நிலைபெற்ற பேரின்பத்தைக் கொடுக்கின்ற என்னுடைய பெருமானை. (எ-று)

சரணங்கள்.

அங்கிங்கென்றொ தங்கும் பிரகாசமாய்நின்ற
செங்கமலபீடமிசை செங்கீரையாடும் (எங்கள்)

(பொ-ரை) அவ்விடத்தில் தான் உள்ளது இவ்விடத்தில் தான்உள்ளதுஎன்று சொல்லாவண்ணம் எவ்விடத்திலும் தேஜோரூபமாயிருந்த செவந்த பத்மாசனத்தின்மேல் செங்கீரையாடுகின்ற. (எ-று)

சாசுவதவானந்த சகசநிஷ்டையில்
ஓசைமணித்தீபமல் லொன்றிக்கொண்டுநான் (எங்கள்)

(பொ-ரை) நான் என்றைக்கும் அழியாத ஆனந்தத்தை விளைவிக்கின்ற சகச நிஷ்டையிலே சத்தங்கொடுக்கின்ற மணிதீபத்தில் பொருந்திக்கொண்டு. (எ-று)

பொற்பிரபைக்கொப்பான கர்ப்பூரதீபம்போல்
விற்புருவமையமணி விளக்காய்நின்ற (எங்கள்)

(பொ-ரை) பொன்னாற் செய்யப்பட்ட பிரபைக்கு ஒப்பான கர்ப்பூர தீபத்தைப்போல வில்போன்ற புருவத்தின் நடுவே யிருக்கின்ற மணிவிளக்காக விருந்த. (எ-று)

உனக்குள்நானாகவும் என்றனக்குள் நீயாகவும்
எனக்குள் நானுனக்குநீ யென்றதாய்நின்ற (எங்கள்)

(பொ-ரை) உனக்குள்ளே நானாகவும், எனக்குள்ளே நீயாகவும் எனக்குள்ளே நான், உனக்குள்ளே நீ என்றுசொல்லுவதாயிருந்த.எ-று

அவனன்றியணுவொன்று மசையாவென்னுமொழிக்
கிவனென்றுசொல்லவும்வல் லவனாகிநீயநின்ற (எங்கள்)

(பொ-ரை) இறைவனையல்லாமல் ஒரு அணுவும் அசையாது என்றுசொல்லுஞ் சொல்லுக்குப் பொருளாயுள்ளவன் இவனென்று சொல்லவும் வன்மையையுடையவனா யிருந்த. (எ-று)

அண்டபிண்டமதற்குமப் புறத்துக்கப்புறமுங்
கொண்டபெரும்பெருமையுங் கொண்டபெரும்பொருளான

(பொ-ரை) வெளி உள் என்னும் இடங்களுக்கு புறத்திலுங் கோலங் கொண்ட பெரும் பெருமையையும் பெற்றிருக்கின்ற பெரிய வஸ்துவான. (எ-று)

ஆர்க்குமரிதாகியபே ராசைமிகவுங்கொண்டு
பார்க்கக்கண்ணாயிரம் படைத்துக்கொண்டுநான் (எங்கள்)

(பொ-ரை) யாவருக்கும் அருமையான பேராசையை மிகவுங் கொண்டு பார்ப்பதற்கு ஆயிரங் கண்களைப் பெற்றுக்கொண்டு நான்.

நோக்கினுநோக்கொண்ணாது நோக்குக்குநோக்காய்நின்று
வாக்குமனமற்றபெரு மானவனாய்நின்ற (எங்கள்)

(பொ-ரை) பார்வைக்கும் பார்க்கக்கூடாமல் பார்வையாகவே யிருந்து வாக்குக்கும் மனத்துக்கும் தட்டாத இறைவனாயிருந்த. (எ-று)

பொன்னிலமாதாசையும் பூமிதனக்கேயளித்து
மன்னுமுனிவர்க்குதவுமன் னவன்றனை (எங்கள்)

(பொ-ரை) பொன், மண், பெண், இந்த மூன்றாசைகளையும் மண்ணாகச் செய்து முனிவர்களுக்கு கொடுக்கின்ற இறையவனை. (எ-று)

வஞ்சகமனைவஞ்சி யருமஞ்சியெஞ்சவும்
அஞ்சுபுலவேடரு மென்றனைக்கெஞ்சியஞ்சவும் (எங்கள்)

(பொ-ரை) கபடத்தையுடைய எமன்போன்ற பெண்களும் பயந்து ஒதுங்கவும் பஞ்சபுலன்களென்கிற வேடர்களும் எனக்குக் கெஞ்சிப் பயப்படவும். (எ-று)

பெண்கொண்டபேர்போ லெனையுமண்கொண்டேபோமுன்
கண்கொண்டமணியாய் நின்றுகாட்சியேதரவும் (எங்கள்)

(பொ-ரை) பெண்ணைக் கொண்டிருக்கிறவர்களை மண்கொண்டு போவதைப்போல என்னையும் கொண்டுபோவதற்குமுன் கண்மணியைப்போல் இருந்து தெரிசனங் கொடுக்கின்ற. (எ-று)

கொச்சகக்கலிப்பா.

என்னை மறந்தே னிருந்தேன் வெகுகாலம்
என்னைமறந்திப்போ திறந்தா லிதுநலமோ
என்னை யறிவா லறிய வெளியில்மகிழ்
எனையறி வித்தாளா யெந்தாய் குருபரனே.

(பொ-ரை) நெடுநாள் வரைக்கும் நான் என்னை மறந்திருந்தேன், இப்போது என்னை மறந்து இறந்தால் நன்மையாகுமா? என்னை நான் என்னுடைய அறிவினாலுணர வெளியே மகிழ்கின்ற என்னை யறிவித்து ஆளுவாய், என்னுடைய தந்தையே! ஞானாசிரியனே! (எ-று)

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஏகம்.

பல்லவி.

என்னையறிந்தேனே-இனி
ஏகாந்தமானேனே.

(பொ-ரை) நான் என்னை உணர்ந்து கொண்டேன் ஏக சொரூபியு மானேன். (எ-று)

அநுபல்லவி.

தன்னைமறந்து தலைகீழாய்நில்லாமல்
என்னைமறந்து முன்னை நினைந்திட்டபோ (தென்னை)

(பொ-ரை) தன்னைத் தானறிவதை மறந்து தலைகீழாக நிற்காமல் என்னை மறந்தும் உன்னை நினைத்த காலத்தில். (எ-று)

சரணங்கள்.

பார்க்குந்தினந்தோறும் பரிபூரணங் கண்டேனே
நோக்குமிடந்தோறும் நூறினிற் சென்றேனே
ஏற்கையுடனே யிருள்வெளியாயிட
வாக்குமனமறத் தாக்கிய போதினில (என்னை)

(பொ-ரை) தினமும் நான் பார்க்கும்போதெல்லாம் பரிபூரண வஸ்துவைக் கண்டேன், நோக்குகின்ற இடங்களிலெல்லாம் நூற்றிற் சென்றேன், இயற்கையுடனே அஞ்ஞானம் சிதாகாசமாக வாக்கும் மனமும் ஒழியத் தாக்கின காலத்தில். (எ-று)

உப்புக்குரித்தான உடலுக்குளிருந் தேனே
செப்பமுடனழகாயெற் கதுசிங்காசனந் தானே
சப்பரம்போலதைத் தப்பாமற்சோடித்தும்
இப்புறமப்புற மொப்புரவாக்கும்போ (தென்னை)

(பொ-ரை) உப்புபிடித்துப் பூர்க்குந் தன்மையையுடைய சரீரத்திற் குள் நான் இருந்தேன் செம்மையாக எனக்கு அது சிங்காசனந்தானே,

தவறாமல் அதைச் சப்பரம்போல் சோடித்து எந்தப் பக்கத்திலும் பொருத்தி வைக்கும்போது. (எ-று)

காடுமலைகளெங்கும் பெருங்கானல் பிறந்ததுபோல்
ஆடியசக்கரமா யகண்டா திசைந்ததனால்
பாடியநூலினைப் பார்த்தலையாமலவ்
வேடிக்கை வீட்டில் விளையாடும் போதினில் (என்னை)

(பொ-ரை) காடுகள், மலைகள் இவ்விடங்களி லெல்லாம் பெரிய கானல் உண்டானதைப் போல ஆடிய சக்கரமாய் அகண்டமாகாமல் பொருந்தினதினால் எல்லோரும் படிப்படி வைத்திருக்கின்ற நூற்களை பார்த்துப் பார்த்தலையாமல் அந்த விநோதத்தை விளைவிக்கின்ற வீட்டில் விளையாடுங் காலத்தில். (எ-று)

கன்னமிடுங்கருவி காணங்களைச் சுட்டேனே
சின்னப்படுஞ்சடத்தைச்சிறைச்சாலையி விட்டேனே
நிண்ணயமான குணங்குடிநாதனை
உன்னியெல்லாம்புற மோட்டியபோதினில் (என்னை)

(பொ-ரை) கன்னஞ் செய்கின்ற கருவிகளை, கரணங்களையும் சுட்டேன், அழிகின்ற சரீரத்தைச் சிறைச்சாலையில் வைத்தேன், என்றும் ஒரேபடித்தான குணங்குடிநாதனை நினைத்து எல்லாவற்றையும் புறத்தே ஓட்டினகாலத்தில். (எ-று)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பெண்களுக்குப் பேயுமன மிரங்கிடுமென்றெவ்வுலமும்
பேசக் கேட்டேன்
பெண்களுக்குப் பேயுமன மிரங்கியொரு பேச்சேனும்
பேசக் கேளேன்
பெண்களுக்கு மண்களிக்கப் பெற்றபிள்ளை யாகியென்மேற்
பிரியம் வைத்த
பெண்களுக்குக் குணங்குடிவாழ் வெய்தும்படிக் குபதேசம்
பேசுவேனே.

(பொ-ரை) பெண்கள் விஷயத்தில் பேயும் மனம் இரங்கும் என்று எல்லோரும் பேசுவதைக் கேள்விப்பட்டேன், ஆனால் அப்பேயானது அவர்களிடத்தில் ஒருபேச்சையும் பேசக் கேட்டேனில்லை. பெண்களுக்கு உலகத்தில் சந்தோஷிக்கப் பெற்றெடுத்த பிள்ளையாய் என்னிடத்தில் இஷ்டம்வைத்த பெண்களுக்குக் குணங்குடியின் வாழ்வு கிடைக்கும்படி உபதேசஞ் செய்வேன். (எ-று)

இராகம்-சௌராஷ்டிரம்-தாளம்-சாப்பு.

பல்லவி.

தாய்மார்களேபுரவி சொல்வதைத்தான்சற்றுந்
தள்ளாமற்கேட்டுக் கொள்வீர்,

(பொ-ரை) எங்களைப்பெற்ற தாய்மார்களே! பாவியான நான் சொல்லும் விஷயங்களைக் கொஞ்சமும் தள்ளிவிடாமல் கேட்டுக்கொள்ளுங்கள். (எ-று)

அநுபல்லவி.

பூமாதேவியாணை யாகநரகத்திற்
போகாமலும்பாது காக்குந்-தீயில்
வேகாமலுங்கையைத் தூக்கும்-பாவி
ஆகாமலுமுகம் பார்க்கும் (தாய்மார்)

(பொ-ரை) பூதேவியும், ஸ்ரீதேவியும், ஆணையாக நரகத்தினிடத்தில் போய்விடாமலும் காப்பாற்றும், தீயினிடத்தில் வேகாமலும் கையைத் தூக்கும், நான் பாவியாய்விடாமல் என்னுடைய முகத்தைப்பார்க்கும்.

சரணங்கள்.

பொன்னாசைகாட்டிப் புருடருமையொரு
புண்யமுஞ்செய்யாமற் கொடுப்பார்-பின்பு
சொன்னத்தைவாரி யிறைப்பார்-கடைசியில்
தோட்டிகையிலுமை விடுப்பார்-உங்கட்
கென்னசொன்னாலும் தெரியவில்லையினி
யுபதேசத்தைப் படிப்பேன்-ஐயோ
தன்னாலேதான்கெட்டா லண்ணாவியென்செய்வான்
தண்ணீரைக்கண்ணினால் வடிப்பன்-அவன்
சொன்னதைக்கேட்கிறகை பிடிப்பன்-உன்னை
முன்னேகுணங்குடி கொடுப்பன் (தாய்மார்)

(பொ-ரை) பொன்னினிடத்தில் ஆசையை உண்டாக்கிப் புருடர்கள் உங்களை ஒரு புண்ணியமும் செய்யாதபடி கொடுப்பார், பிறகு சொர்ணத்தைவாரி இறைப்பார், கடைசியில் உம்மைத் தோட்டியின் கையில் விடுவார், ஆகையால் உங்களுக்கு என்ன சொன்னாலும் தெரியவில்லை, இப்படியிருப்பதாய் இனியென்ன உபதேசஞ் செய்வேன், ஐயோ! தன்னாலே தான் கெட்டுப்போனால் அண்ணாவி என்னசெய்வான், தண்ணீரைக் கண்ணால் வடிப்பான், அவன் சொன்னபடி கேட்டாலோ கையைப்பிடிப்பான், உன்னை முன்னதாகவே குணங்குடிக்குக் கொடுப்பான். (எ-று)

பெண்ணாலேகெட்டோமென் றுங்களைத்திட்டாத
பேரையுலகத்திற் கண்டிலேன்-எந்தன்
கண்ணேயுங்களுக்கொத்தாசை சொல்லிக்
கருத்திலுவப்பாரைக் கண்டிலேன்-நாளு
மண்ணாசைமயக்கங்கொண்டேபாவ
மண்ணைவாயிற் போட்டுக் கொள்கிறீர்-அதை

நண்ணரும்சொர்க்கப் பதத்தையும்விட்டு
நாகக்கனல்மூட்டிக் கொள்கிறீர்-அதை
எண்ணுமற்றுன்விட்டு நீக்கினுல்-உமக்
கண்ணல்குணங்குடி வாய்க்குமே (தாய்மார்)

(பொ-ரை) பெண்ணினுல் கெட்டோமென்று உங்களைத் திட்டாத வர்களை உலகத்தில் கண்டேனில்லை, என்னுடைய கண்ணுனை உங்களுக்கு ஒத்தாசையைச் சொல்லி மனதில் சந்தோஷிக்கின்றவர்களையும் கண்டேனில்லை, தினந்தோறும் மண்ணுன ஆசையாகிய மயக்கத்தைக்கொண்டு அந்தோ! மண்ணை வாயிற்போட்டுக்கொள்ளுகிறீர். இன்னும் நினைப்பதற்கரிய சொர்க்கப் பதவியையும் விட்டுவிட்டு நரகத்தீயை மூட்டிக்கொள்ளுகிறீர், அதை எண்ணுமல்விட்டு நீக்கினுல் உமக்கு பெருமை பொருந்திய குணங்குடியானது கிடைக்கும். (எ-று)

புதுப்பானைதன்னைக் கரிப்பானையாக்குவார்
பொன்னுன மேனியும் போக்குவார்-சோதி
மதிப்போலிவர்முகம்வறவோடுபோலாக
வாலைப்பருவத்தைப் போக்குவார்
முதுகிற்கூனுமாக்கிக்கோலுங்கைகொடுத்துங்கள்
மூர்க்கமெல்லாமறப் போக்குவார்-இவள்
கதிகெட்டகிழநாரி யென்றுபுறந்திண்ணையிற்
கடத்திவைத்துயிரையும் போக்குவார்-அந்தச்
சதிகேடருறவைத்தா ணீக்கினுல்-பர
கதிதருகுணங்குடி வாய்க்குமே (தாய்மார்)

(பொ-ரை) புதியபானையையும் கரிப்பானை யாக்குவார்கள், பொன்போன்ற சரீரத்தையும் போக்குவார்கள், சோதி சந்திரன்போன்ற இவருடைய முகம் வறவோடு போலாக இளம்பருவத்தைப் போக்குவார்கள், இன்னும் கூனுண்டாக்கி கையில் கோலையுங்கொடுத்து உங்களுடைய மூர்க்ககுணங்களை யெல்லாம் முழுமையும் போக்குவார், இவள் திக்கில்லாத கிழநாரியென்று புறந்திண்ணையில் நீட்டிவைத்து உயிரையும் நீக்குவார்கள், அப்படிப்பட்ட கெட்டவர்களுடைய சகவாசத்தை நீக்கினுல் உயர்ந்த மோட்சத்தைக் கொடுக்கின்ற குணங்குடியானது கைகூடும். (எ-று)

தங்காதமையலுந் தருகுவர்பின்பும்மைத்
தளருநரையெருமை யாக்குவார்-தூக்குவார்
தூங்கிவிழுந்தொத்த லாகநரம்பெண்புந்
தோலுந்துருத்தியு மாக்குவார்-முகம்
வீங்கித் தலைநடுங்கிக் கையுங்காலுமுடக்கி
வேடிக்கையாங்கிழவி யாக்குவார்-மூச்சை

வாங்கிக் கொக்குக்கொக்கென் றிருமிக்கொண்டு
வலிக்குங்கிடைபிணமு மாக்குவார் - அந்த
தீங்கர்களுறவைத்தா னீக்கினல் - அருள்
ஓங்குங்குணங்குடி வாய்க்குமே (தாய்மார்)

(பொ-ரை) முன்னே பொறுக்கக்கூடாத மயக்கத்தைக் கொடுப்பர், பிறகு உம்மை தளர்கின்ற நரைத்த எருமைக்கடாவாக்கிவிட்டார், தொங்கித் தொங்கி விழுகின்ற நரம்பு, எலும்பு, தோல், துருத்திகளாகச் செய்வார், முகம்வீக்கித் தலை நடுங்கிக் கையும் காலும் முடங்கி வேடிக்கைக்குரியவளான கிழவியாகச்செய்வார், பெருமூச்சுவிட்டு கொக்கு, கொக்கு. என்று இருமிக்கொண்டு வலிக்கின்ற கிடைப்பிணமாகவுஞ் செய்வார், அப்படிப்பட்ட தீயர்களுடைய சகவாசத்தை நீக்கினல் திருவருள் வளர்கின்ற குணங்குடியானது கைகூடும். (எ-று)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மீசையுள்ளாண் பிள்ளைச்சிங்க மாவர்களோ முகத்தின் மயிர்
விரித்தோரெல்லா
மீசையுள்ளாண் பிள்ளைச்சிங்க மெவனவன்காண் குணங்குடிபால்
விரைந்து கொண்டோன்
மீசையுள்ளாண் பிள்ளைச்சிங்கமாகாதானெவைக்காவன்
விசையோ டென்போல்
மீசையுள்ளாண் பிள்ளைச்சிங்க மென்கூடமூலைவிட்டு
வெளிவாரானே.

(பொ-ரை) முகத்தினிடத்தில் மயிரை வைத்திருக்கின்றவர்களெல்லாரும் மீசையுள்ள ஆண்பிள்ளைச் சிங்கங்களாவார்களோ? குணங்குடியைப் பெற்றவனே மீசையுள்ள ஆண்பிள்ளைச் சிங்கமாவான், மீசையுள்ள ஆண்சிங்கமாகாதவன் எதற்கு முதவான், என்னைப்போல் மீசையுள்ள ஆண்பிள்ளைச் சிங்கமானவனானல் என்னுடன் மூலைவீட்டைவிட்டு வெளியே வரமாட்டானே? (எ-று)

கண்டனம்.

இராகம்-அடாணு-தாளம்-சாப்பு.

பல்லவி.

மீசையுள்ளாண்பிள்ளைச் சிங்கங்களென்கூட
வெளியினில் வாருங்கள் காணும்.

(பொ-ரை) மீசையைப் படைத்திருக்கின்ற ஆண்பிள்ளைச் சிங்கங்கள் என்னுடன்கூட வெளியே வாருங்கள். (எ-று)

அநுபல்லவி.

நாசிநிரம்பவு மயிர்தா-னிரண்டுகால்
நடுவினுமொருகூடை மயிர்தான்

ரோசங்கெடுவோர்களென்கடை மயிர்தான்-குணங்
குடிகொண்டா லென்னுயிர்க் குயிர்தான் (மீசையுள்)

(பொ-ரை) மூக்கில் நிறைந்திருப்பதும் மயிர்தான், இரண்டுகால் நடுவிலும் இருப்பது ஒருகூடை மயிர்தான், ரோஷங் கெட்டவர்களெல்லாரும் என்னுடைய கடைமயிர்தான், குணங்குடியைத் தனதாக கொண்டவனே என்னுடைய உயிருக்கு உயிரானவனுவான். (எ-று)

சரணங்கள்.

படிக்கும்படிநடக்கும் படிகாலோபிகள்மோக்ஷப்
பதமற்றுப்போனாலும் போகட்டும்-அவர்
முடிக்கு முடிதரித்து முடியமுடியவாழ்ந்து
முடிந்துமுடிபோனாலும் போகட்டும்-இன்னும்
குடிக்கக்கஞ்சியுமற்றுக் குண்டிக்குந் துணியற்றுக்
குருடாய்ப்போனாலும் போகட்டும்-என்னை
அடித்தாலு மெலும்பெல்லா மொடித்தாலுமவர்க்கஞ்சேன்
அடித்தாலடித்துக்கொண்டு போகட்டும்-அந்தக்
கெடுவோர்களென்கடை மயிர்தான்-குணங்
குடிகொண்டாலென்னுயிர்க் குயிர்தான் (மீசையுள்)

(பொ-ரை) கற்றுக்கொண்ட விஷயங்களின் அளவிலேயே நிற்கக் கல்லாத லோபிகளெல்லாரும் மோட்சசாம்பிராஜ்ய பதவியைப் பெறாமற்போனாலும் போகிறார்கள், அவருடைய முடிக்குக் கிரீடத்தை யணித்து முழுமையாக வாழ்ந்து முடிவில் கிரீடம்போனாலும் போகட்டும், இன்னும் குடிப்பதற்குக் கஞ்சியும், இடுப்புக்கு வஸ்திரமும் இல்லாமல் குருடாய் போய்விட்டாலும் போகட்டும், என்னை அடித்தாலும் என்னுடைய எலும்பை ஒடித்தாலும் அவர்களுக்கு நான்பயப்படமாட்டேன் அவர்கள் என்னை அப்படி அடித்தாலும் அடித்துக்கொண்டு போகட்டும், அப்படிப்பட்ட தீயோர்கள் என்னுடைய கடைமயிர்தான், குணங்குடியைக் கொண்டால் என்னுடைய உயிர்க்கு உயிர்தான். (எ-று)

மடையரெல்லாங்கூடிக் கூத்தாடிக்கூத்தாடி
வையாளிபோட்டாலும் போடட்டும்-இன்னும்
விடியவிடியவும் பரத்தையர்மடிகளில்
விளையாடினும் விளை யாடட்டும்-கள்ளுக்
குடியரெல்லாங்கள்ளைக் குடித்துக்குடித்தவர்கள்
குடிகெட்டுப்போனாலும் போகட்டும்-ஞானம்
படியாரெல்லா மென்னைப் பழித்துப்பழித்துக்கொண்டு
பகைத்தாற்பகைத்துக்கொண்டு சாகட்டும்-அந்தக்
கெடுவோர்களென்கடை மயிர்தான்-குணங்
குடிகொண்டா லென்னுயிர்க் குயிர்தான் (மீசையுள்)

(பொ-ரை) புத்தியீனர்களெல்லாரும் ஒன்றாகச்சேர்ந்து கூத்தாடி கூத்தாடி வையாளி விளையாடினாலும் ஆடட்டும், இன்னும் விடியற்காலம் வருகின்றவரைக்கும் வேசிகளின் மடிகளின்மேல் விளையாடினாலும் விளையாடட்டும், கட்குடியர்களெல்லாரும் கள்ளைக்குடித்து அவர்களுடைய சமுசாரங்கள் கெட்டுப்போனாலும் போகட்டும், ஞான நூற்களை கற்றுக்கொள்ளாதவர்களெல்லாரும் என்னைப் பழிசெய்து பகைத்தால் பகைத்துக்கொண்டு சாவட்டும், அப்படிப்பட்ட கெடுபவர்களெல்லாரும் என்னுடைய கடைமயிர்தான், குணங்குடிகொண்டால் என்னுடைய உயிர்க்கு உயிர்தான். (எ-று)

நெடுமரம்போலோங்கி வளர்ந்துமறிவற்றவர்
நெருப்புண்ணப்போனாலும் போகட்டும்-அவர்
இடுகுட்டிச்சுவரைப்போ லிருந்தென்னவிறந்தென்ன
எப்படிப்போனாலும் போகட்டும்-இன்னுங்
கொடும்புமிடும்பும்வம்புங் குடிகேடுங்குடிகொண்டு
கூத்தாடினாலுங்கூத் தாடட்டும்-என்னை
மடியிற்கைபோட்டிழுத் தலகினலடிபோட்டு
மல்லாடினாலுமல் லாடட்டும்-அந்தக்
கெடுவார்களென்கடை மயிர்தான்குணங்
குடிகொண்டாலென்னுயிர்க் குயிர்தான் (மீசையுள்)

(பொ-ரை) நீண்டமரத்தைப்போல ஓங்கிவளர்ந்தும் அறிவில்லாதவர்கள் நெருப்பைத் தின்னப்போனாலும் போகட்டும், அவர்கள் இட்ட குட்டிச்சுவரைப்போல இருந்தாலென்ன? இறந்தாலென்ன? எப்படி போனாலும் போகட்டும், இன்னும் கொடும்பும், இடும்பும், வம்பும், குடி கெடுக்கும் பேச்சும், கொண்டு கூத்தாடினாலும் கூத்தாடட்டும், என்னை மடியிற் கையைப்போட்டு இழுத்து துடைப்பைக் கட்டையினால் அடி போட்டு மல்லாடினாலும் மல்லாடட்டும், அப்படிப்பட்ட கெடுபவர்கள் என்னுடைய கடைமயிர்தான், குணங்குடிகொண்டால் என்னுடைய உயிர்க்கு உயிர்தான். (எ-று)

கடிநாய்க்குட்டிகளான படுசுட்டிகண்மாயைக்
கதவிடுக்கினிற்பட்டே சாகட்டும்-புலிக்
கடுவாய்க்குங்கொடிதான படுபோக்கிலிகள்சும்மா
கடுநாகில்விழுந்தே வேகட்டும்-சுற்றக்
கெடுபூண்டாகமுளைத்த கொடுமாடுபிடுங்கிகள்
கெடுபூண்டுகளாய்த்தானே போகட்டும்-இன்னும்
நெடுமரம்போற்கொத்த மடவொப்பாகுடிக்கிகள்
நெடுமரம்போற்றானே யாகட்டும்-அந்தக்
கெடுவார்களென்கடை மயிர்தான்-குணங்
குடிகொண்டானுமென்னுயிர்க் குயிர்தான் (மீசையுள்)

(பொ-ரை) கடிக்குந் தொழிலையே சுபாவமாகவுள்ள நாய்க்குட்டிகளான படுசுட்டிகளுடையமாயை கதவின் இடுக்கிலகப்பட்டு சாவட்டும், புலிவாய்க்கும் கொடுமையையுடையதான படுபோக்கிரிகள் வீணுகக் கொடிய நரகத்தில் விழுந்து வேகட்டும், சுற்றிலும் கெட்ட பூண்டுகளாக முளைத்த கொடும் மாடுபிடுங்கிகள் கெட்ட பூண்டுகளாகவே போகட்டும் இன்னும் நீண்ட மரம்போன்ற மடவொப்பாத குடிக்கிகள் நீண்ட மரம்போலவே யாகட்டும், அப்படிப்பட்ட கெடுபவர்கள் என்னுடைய கடைமயிர்தான், குணங்குடிகொண்டால் என்னுடைய உயிர்க்கு உயிர்தான். (எ-று)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சாகாமற் செத்திருக்குஞ் சற்குருவின் குணங்குடியைச்
 சார்ந்தோமாகிற்
சாகாமற் செத்திருக்குஞ் சாயுச்சிய பதந்தருஞ் சாட்
 சாதியார்க்குஞ்
சாகாமற் செத்திருக்குந் தன்மயதோர்க் குற்றபெருந்
 தகையுங்காட்டுஞ்
சாகாமற் செத்திருக்கு முத்தியுஞ்சித் தித்திடுங்கர்ண்
 டணக்குத்தானே.

(பொ-ரை) சாவாதபடியே செத்திருக்கின்ற ஞானசிரியனுடைய குணங்குடியைச் சேர்ந்தோமானல் சாயுச்சிய பதத்தைத் தருவான், சாட்சாதியாகச் செய்வான், சாவாமற் செத்திருக்கின்ற ஞானமயமுள்ளவர்களுக்குப் பொருந்திய பெருந்தன்மையும் காட்டுவான், நன்முத்தியும் கைகூடும். (எ-று)

இராகம்-பரிசு-தாளம்-ஆதி.

பல்லவி.

போவோங்குணங்குடிக்கெல்லோரும் புறப்படுங்கள்
போவோங்குணங்குடிக்கெல்லோரும்.

(பொ-ரை) உலகர்களே! நீங்களெல்லோரும் புறப்படுங்கள், நாம் எல்லோருங்கூடி குணங்குடிக்குப் போவோம். (எ-று)

அநுபல்லவி.

பாவங்கள் சேர்ந்திடும் காய்ந்திடும்நீந்திடும்
மாய்ந்திடு மோய்ந்திடுந் தீய்ந்திடுமிக்ஷணம் (போ)

(பொ-ரை) நாம் அப்படிபோவோமானல் நம்முடைய பாவங்களெல்லாம் சோர்ந்திடும், காய்ந்திடும், நீந்திடும், மாய்ந்திடும், தீய்ந்திடும். ஆகையால் இக்த க்ஷணத்தில். (எ-று)

சரணங்கள்.

அண்டம்புவனங்கொண்ட நிட்டை-சாதிக்கவறியா
முண்டம்முழுதும்பட்ட கட்டைமணித்தேரோடு
தண்டிகையானைகுதிரை யொட்டை-வைத்தேறிவாழுஞ்
சண்டியுடலொட லொட்டை-மின்னார்களின்பங்
கொண்டுமயங்கிக்காம வெட்டை-நஞ்சுண்டுசாமி
ரண்டுங்கெட்டவனே பேய் மட்டை-அவனுக்கந்தத்
தொண்டாசைகால்ரண்டுந்தான் குட்டை-விழிகுருடர்
நண்டளந்தநாழியவர்நமக்கேன்காணந்தத்தெட்டை (போ)

(பொ-ரை) ஆகாயமும், உலகமும், கொண்டிருக்கின்ற நிஷ்டையைச் சாதிக்க வகையறியாத முண்டம் முழுதும் பட்டகட்டை அழகிய தேர், தண்டிகை, யானை, குதிரை, ஒட்டை இவைகளை வைத்துக் கொண்டு ஏறித் தாழ்கின்ற சண்டியாகி நினைக்கக்கூடிய சரீரமானது லொடலொட்டை, பெண்களின் சிற்றின்பத்தைக்கொண்டு மயங்கிக் காமவெட்டையென்னும் விஷபானஞ் செய்து சாமிரண்டுங் கெட்டிருப்பவனே பேய்மட்டை, அவனுக்கு அந்தத் தொண்டின் ஆசைக்கால் இரண்டுந்தான் குட்டை விழியையுடைய குருடர்கள் நண்டளந்த நாழியைப்போலாவார்கள், அந்தத் தெட்டையெல்லாம் நமக்குஏன்;(எ-று)

கோத்திரளானகாயபொய்க் கூடு-ஒருவருக்குஞ்
சாற்றுக்காகாநாற்றக்கரு வாடு-சொறிமலமு
மூத்திரமுமூற்றிவைத்த வோடு- இடுமடையர்
போற்றுதற்கேற்றசண்டி மாடு-உயிர்விடுக்குங்
கூற்றுவன்கையாயுதத்திற் கீடு-எங்கெந்தத்திக்கிற்
பார்த்தாலும் பிறனுள்ள வீடு-சமைத்தெடுத்த
சோற்றூற்குவித்துவைத்த மேடு-இவையறியார்
ஏற்றபடிகெட்டலைவரேனமக்குமந்தக்கேடு (போ)

(பொ-ரை) உயர்ந்த கூட்டமான சரீரம் பொய்க்கூடு, எவருக்கும் காற்றுக்கும் உதவாத நாற்றத்தையுடைய கருவாடு, சொறி, மலம், மூத்திரம் இவைகளை ஊற்றிவைத்த ஓடு, இட்ட மடையர்களெல்லாரும் துதிப்பதற்குஏற்ற சண்டிமாடு,உயிரை விடுவிக்கின்ற எமனுடைய கையிலுள்ள ஆயுதத்திற்கு ஈடு, எங்கெந்தத்திசைகளில் பார்த்தபோதிலும் துவாரமிருக்கின்ற வீடு, சமைத்தெடுத்த சோற்றினால் குவித்து வைத்த மேடு, இவைகளை உணர்ந்தவர்கள் தகுந்தபடியே கெட்டலைவார்கள், நமக்கு அந்தக்கேடு என்? (எ-று)

செட்டுசெய்யவேண்டிய தில்லை-பரதேசிகள்
செட்டியெடுப்பதுவுந் தொல்லை-பிச்சைகஞ்சிக்குத்
திட்டமுடன்வேணுமோ கல்லை-உறங்குதற்குக்
குட்டிச்சுவர்களிலுண் டெல்லை-ஈடுநமக்குப்

பட்டினத்திலெவரு மில்லை-அறிவுகெட்ட
மட்டியறியானிந்தச் சொல்லை-மனக்குரங்கைக்
கட்டிவைத்தாலுங்காட்டும் பல்லை-அதைப்பிடித்த
துட்டமாமாயைப்பசாசைத் துரத்தித்துரத்திக்கொல்ல' (போ)

(பொ-ரை) செட்டாகச் செய்யவேண்டியதில்லை, பரதேசிகளெல்லாம் சட்டியெடுத்துக் கொள்ளுவதும் தொல்லை, பிச்சைக் கஞ்சிக்குத் திட்டமாக வேண்டியதோகல்லை, தூங்குவதற்குக் குட்டிச்சுவர்களிலே இடமுண்டு, நமக்கு இந்தப் பட்டினத்தில் எவரும் ஒப்பானவர்களில்லை அறிவில்லாத மட்டியானவன் இந்தச்சொல்லை யுணரமாட்டான், மனக் குரங்கைக் கட்டிக் கட்டிவைத்தாலும் அது பல்லேயே காட்டாகிற்கும், அதைப்பிடித்த துஷ்டத்தனமுள்ள மாயையென்னும் பசாசைத் துரத்தித் துரத்திக் கொல்ல. (எ-று)

சோமனுதயம்பாடு சாயும்-எழுஞ்சூரியன்
நாயமில்லாமலறத் தேயும்-பரவெளியில்
நேமமுடன்சுழினை யாயும்-மதியமிர்த
வாமமடைந்திருந்து பாயும்-தத்வாதியோடு
காமக்குரோதங்களைத் தீயும்-தீயாதுயோக
பூமிவிளையுமறு ணயம்-விளைந்தபோகம்
நாமோகைக்கொள்ளும்படி ஞாயம்-கிடைப்பதற்குச்
சாருன்செத்தசற்குருபாதம் சார்ந்திருப்பதுவேயுபாயம் (போ)

(பொ-ரை) சந்திரோதயமானது சாய்ந்துபோகும், சூரியனே பேரில்லாதபடி தேயும், பரவெளியினிடத்தில் வரிசைக்கிரமமாகவே சுழிமுனையை ஆராயும் சந்திராமிர்தமானது வாமம் என்னும் மடையை திறந்துபாயும், தத்வாதிகளுடன் காமக்குரோதாதிகளைத் தீய்க்கும், தீயாமல்போக பூமியில் உண்டாகின்ற திருவருள் நேசத்தில் விளைந்த போகத்தை நாமாகக் கொள்ளுவது நியாயம் அதுகிடைப்பதற்கு சாகு முன் செத்த ஞானசிரியன் சேர்ந்திருப்பதே உபாயம். (எ-று)

நொங்கும் நுரையுமாகப் பொங்கும்-காமக்கடலுள்
முங்கும் பாவியுடலைச் சொங்கும்-சொதியசிரங்கம்
வங்கும்நமநமென்று திங்கும்-நரம்புந்தோலுந்
தொங்குமினுப்புமினுப்பு மங்கும்-இல்லந்துறந்த
சிங்கங்கட்கில்லைகாணும் பங்கம்-மேனியுயர்ந்த
தங்கமயமாய்நின்றி லங்கும்-அவர்கட்கன்றோ
தங்குஞ்சாயுச்யபதந் தங்கு-நமக்குமதிற்
பங்குந்தந்துதவிப் பராபரமருளிரங்கும் (போ)

(பொ-ரை) சொங்கைப்போலவும் நுரையாகவும் பொங்கி வழிகின்ற காமமென்னும் கடலுக்குள்ளே அழுந்துகின்ற பாவியாகிய என்னுடைய சரீரத்தை வருத்துகின்ற சொறியும், சிரங்கும், வங்கும் நம்முடையதென்று தின்கின்ற நரம்பும், தோலும் தொங்குகின்ற மினுமினுப்பும் குறையும், தன்மைவீட்டை உள்ளபடியே விட்டுத்துறந்த சிங்கம்போன்றவர்களுக்கு யாதொரு குறைவுமில்லை, சரீரமானது உயர்வான தங்கமயமாயிருந்து விளங்கும் அன்னோர்கட்கல்லவோ சாயுச்சிய பதம் நிலைபெறும், ஆனால் நமக்கும் அதில் பங்குகொடுத்து பராபரத்தின் திருவருளானது இரங்கும். (எ-று)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

ஐயன்குணங் குடியானை யன்றிவே றுண்டென்று
ளாய்ந்து பார்த்தேன்
ஐயன்குணங் குடியானை யன்றிவே றொன்றுமென்னு
ளாயக் காணேன்
ஐயன்குணங்குடியானே யானேயென் றறிந்தபின்பென்
னறிவாய் நின்ற
ஐயன்குணங்குடியானே யதிமோகத் திருநட
மாடு வானே.

(பொ-ரை) தலைவனான குணங்குடியானை யல்லாமல் வேறு தெய்வம் உண்டென்று என்னுடைய மனத்தினுள்ளே ஆராய்ந்துபார்த்தேன் ஆனால் அன்னவனை யல்லாமல் வேறொன்றையும் என்னுள் ஆராயக் கண்டேனில்லை. ஐயன் குணங்குடியானே நானென்று உணர்ந்த பின்னர் என்னுடைய அறிவாயிருந்த ஐயனான குணங்குடிப்பெருந்தகையே அதிகமான ஆசையையுடைய திருத்தாண்டவம் ஆடுவான். (எ-று)

இராகம்-தோடி-தாளம்-சாப்பு.

பல்லவி.

அதிமோகத்திருநடனம் புரிந்தானெங்கள்
ஐயன்குணங்குடியான்

(பொ-ரை) யாவருக்கும் அதிக ஆசையைக் கொடுக்கின்ற திருத்தாண்டவத்தை எங்களுடைய குணங்குடியானானவன் செய்தருளினான்.

அநுபல்லவி.

அதிமோகத்திருநடனம் புரிந்தானையன்
ஆர்க்குந்தெரியாதென்றன் மூக்குமுனைக்குமேனின்று (அதி)

(பொ-ரை) என்னுடைய தலைவனானவன் அதிக ஆவலைக் கொடுக்கின்ற திருத்தாண்டவத்தை யார்க்குந் தெரியாதபடி என்னுடைய மூக்கு முனையின்மேலிருந்து செய்தருளினான் (எ-று)

சரணங்கள்.

கஞ்சினிகளைப்போலுங் காலிற்சதங்கை தொட்டுக்
காணின் மயில்போனின்று களித்துநடன மிட்டு
வஞ்சியர்க்காளாக்க வருமூவாசையை விட்டு
வஞ்சநமனைக்காலா லுதைத்தொருகால் மட்டு
மடைத்துக்கொண்டெனைக்கையிற்பிடித்துக்கொண்டருண்முறை
படித்துக்கொண்டுளத்தன்பு துடித்துக்கொண்ட (அதி)

(பொ-ரை) கூத்தாடிகளைப் போலவே காலினிடத்தில் சதங்கையைக் கட்டிக் காட்டு மயிலைப் போலிருந்து சந்தோஷித்து நடனஞ்செய்து பெண்களுக்கு அடிமைப்படுத்த வருகின்ற பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசை என்னும் மூன்று ஆசைகளையும் விட்டு கொடுமையையுடைய எமனைக்காலினால் உதைத்து ஒரு காலமாத்திரம் மடித்துக்கொண்டு என்னைக் கையில் பிடித்துக்கொண்டு திருவருள் விலாசத்தின் முறைமையைப் படித்துக்கொண்டு மனத்தில் ஆசையானது துடித்துக்கொண்ட (எ-று)

முத்துக்கெதிர்நின்று முச்சுடரும்பம்பர மாட
மோகமணிமாலைபொன் முலைமேற்பின்னலு மாட
வகுத்தபராஞ்சோதிநின் றருகிற்பாய்ந்துபந் தாட
வாலையம்பிகைகாலை மடித்துநடன மாட
வடித்துக்கொண்டமிர்தத்தைக் குடித்துக்கொண்டானந்தம்
படித்துக்கொண்டடிக்கடி நடித்துக்கொண்ட (அதி)

(பொ-ரை) சுழிமுனைக்கு எதிரேயிருந்து சோம, சூரிய, அக்கினி என்னும் மூன்று சுடர்களும் பம்பரமாடவும், ஆசையை விளைவிக்கின்ற முத்துமாலையானது அழகிய முலையின்மேல் பின்னலாடவும், வேதங்களில் வகுத்துச் சொல்லப்பட்ட பராஞ்சோதியானது நின்று சமீபத்தில் பாய்ந்து பந்தாடவும், வாலாம்பிகையானவள் தன்னுடைய கால்களில் ஒன்றைத் தூக்கி நடனஞ்செய்யவும், அமிர்தத்தை வடித்தெடுத்து குடித்துக்கொண்டு ஆனந்தம் படித்துக்கொண்டு அடிக்கடி நடனஞ்செய்துகொண்ட. (எ-று)

பஞ்சரிக்கும்பல மறைகடாளங்கள் போடப்
பரிபூரணானந்தம் படிந்துமத்தளம் போடக்
கொஞ்சுமனவாசியுங் கொஞ்சிவையாளிகள் போடக்
கோலாகலங்கள்பாடிக் கூத்துமேற்கூத்துகள் போடக்
குதித்துக்கொண்டவன்றன்னை மதித்துக்கொண்டருடன்னைப்
பதித்துக்கொண்டெனைவாழ்த்தித் துதித்துக்கொண்ட (அதி)

(பொ-ரை) முறையிடுகின்ற பலவகைப்பட்ட வேதங்கள் தாளங்கள் போடவும், பரிபூரண ஆனந்தமானது மடிந்திருந்து மத்தளம்போ

டவும், கொஞ்சுகின்ற சரமென்னுங் குதிரையும் கொஞ்சிக் கொஞ்சி வையாளிகள் போடவும், கோலாகலங்கள் பாடிக் கூத்துமேற் கூத்து கள் போடவும், குதித்துக்கொண்டு அவனை நினைத்துக்கொண்டு திருவருளைப் பதிவித்துக்கொண்டு என்னை வாழ்த்தித் துதித்துக்கொண்ட,

கலசநிறையமிர்த கதிருமிழ்மதிப் பாலை
கலகலெனமேவுபூட்டிக் களைதீர்க்கமணி மாலை
மலைபோலெழுந்துவந்து மகிழ்ந்திந்தப்பயன் மேலே
மாறுக்கருணைவைத்து வைத்துத்தலைமேற் காலை
மடித்துக்கொண்டவன் பல்லை கடித்துக்கொண்டெமன்கையை
ஒடித்துக்கொண்டுமெய்த்தவம் முடித்துக்கொண்ட (அதி)

(பொ-ரை) கலசத்தில் நிறைந்திருக்கின்ற அமிர்தமான கிரணங்கள் சிந்துகின்ற மதிப்பாலையும், கலகலவென்று மணிமாலையைப்பூட்டிக் களையைத் தீர்க்க மலையைப்போல் எழுந்தருளிவந்து மகிழ்ச்சிகொண்டு இந்தப் பிரயோசனத்தை மேலே மாறுத கிருபையை வைத்து தலையின்மேல் காலை மடித்துக்கொண்டு பல்லைக் கடித்துக்கொண்டு எமனுடைய கையை ஒடித்துக்கொண்டு உண்மையான தவத்தைச் செய்துகொண்டு. (எ-று)

கீர்த்தனைகள்-முற்றுப்பெற்றது.

---

# ஆனந்தக்களிப்பு.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

எங்கள்குணங்குடியானே யெண்ணரும்பே ரருளாய்நின்
றிலங்கை யாலே
எங்கள்குணங் குடியானே யெண்ணரும்பே ரருளேயென்
றிறைஞ்ச வேண்டும்
எங்கள்குணங் குடியானே யெண்ணரும்பே ரருளேயென்
றிறைஞ்சி நின்றால்
எங்கள் குணங் குடியானே யெண்ணரும்பே ரருளாய் நின்
றிரங்குவானே.

(பொ-ரை) எங்களுடைய குணங்குடியானவன் நினைப்பதற்கருமையான பொருளாயிருந்து விளங்குவதால் அவனையே எண்ணற்கரிய அருளேயென்று வணங்கவேண்டும், எங்கள் குணங்குடியானே என்னுதற்கருமையான பேரருளேயென்று வணங்கியிருந்தால் அவனே எண்ணற்கரிய பேரருளாயிருந்து மனமிரங்குவான். (எ-று)

எங்கள் குணங்குடி யானே-நமக்
கின்னுமருள் புரிவானடி மானே (எங்கள்)

(பொ-ரை) அடிமானே! எங்களுடைய குணங்குடியானவன் நமக்கு இன்னும் திருவருள் செய்வான். (எ-று)

அத்துவிதப்பொருள் காப்பாம்-எனக்
கானந்தமான பராபரங் காப்பாம்
கர்த்தவியத்தருள் காப்பாம்-என்று
காட்டத்தன்காரணங்காப்பருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) இரண்டற்றபொருளும், எனக்கு ஆனந்தத்தை யுண்டாக்குகின்ற பராப்பரப்பொருளும், கர்த்தவியப்பொருளின் திருவருளும் காப்பாம், என்றும் காண்பிப்பதற்கு தன்னுடைய காரணவஸ்துவைக் காப்பாகச்சொல்லி. (எ-று)

முத்தரெல்லாரையும் போற்றாய்-தவ
மோனநிலைக்குருநாதனைப் போற்றாய்
சித்தரெல்லாரையும் போற்றாய்-என்று
சிறக்குந்தன் போற்றுதலையருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) முமுட்சுக்களையெல்லாம் போற்றாய், தவமென்னும் மௌன நிலையையுடைய ஞானாசிரியனைத் துதிசெய்வாய், சித்தர்களையெல்லாம் துதிசெய்வாய் என்றும் சிறக்கின்ற துதிசெய்தலையே அருளிச்செய்து. (எ-று)

ட்டுப்படாவச்சு மட்டம்-காலைக்
கட்டவறியாரைக்காலினும் வெட்டும்
வெட்டியகால்களை வெட்டும்-என்று
வேகத்துடனேவிதித்தருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) கட்டுக்கடங்காத அச்சுமட்டம், அதின்காலைக் கட்டவகையறியாதவர்களை காலினால் வெட்டும், வெட்டிய கால்களையே வெட்டும், என்று வேகத்துடனே சொல்லி. (எ-று)

மூலப்பிராணனை நோக்கும்-நோக்கின்
முத்தியின்வீடுமக்கேவந்து சாய்க்கும்
வாலப்பிராயமும் வாய்க்கும்-என்று
வாசியினேற்றமகிழ்ந்தருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) மூலத்திலுள்ள பிராண வாயுவைப்பார்க்கும், மோட்சவீடானது உமக்கே வந்து கிடைக்கும், இளம்பிராயமு முண்டாகும், வாசியிலேற்றி மகிழ்ச்சிகொண்டு. (எ-று)

பன்னிருகால்வெளி மானே-வெளி
பாயாமதுள்ளே யடங்கிட தானே
சென்னியிலூறுஞ்செந் தேனே-என்று
சித்தைவைத்துக்கட்டித்தந்தருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) பன்னிரண்டு சரங்களும் வெளியே பாயாமல் உள்ளே யடங்க, சென்னியின்கண் சுரக்கின்ற செந்தேனை எனக்குக் கட்டிக்கொடுத்தருளி. (எ-று)

தேகாபிமானத்தை வெல்லும்-யோக
தீக்ஷைபெற்றோர்க்குமனமதிற் செல்லும்
மோகாதிபோகத்தை வெல்லும்-என்று
முற்றச்செய்தே முழுதும்மருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) சரீராபிமானத்தை வெல்லும், யோகதீட்சை பெற்றவர்களுக்கு மனத்திற்செல்லும், மோகம் முதலாகிய போகத்தை ஜெயிக்கும், முற்றும்படி செய்து முழுமையும் அருளி. (எ-று)

ஆயுங்கலையைக் குறைக்கும்-ஆறாம்
அங்கணக்கோபுரவாயிற் றிறக்கும்
பாயும்மதிப்பால் சுரக்கும்-என்று
படிக்குப்படியேறும்படிக்கருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) ஆராய்கின்ற சாஸ்திரத்தைக் குறைக்கும், ஆறாதாரமென்னும் கோபுரவாயிலின் கதவைத்திறக்கும், பாய்கின்ற சந்திரபானமானது சுரக்கும் என்னும் படிப்படியாக ஏறும் என்று அருளிச்செய்து. (எ-று)

மூலக்கனலினை மூட்டும்-ஒளி
மூக்குமுனையிற் றிருநடனங்காட்டும்
பாலைக்கறந்துனக் கூட்டும்-என்று
பட்சம்வைத்தென்னைப்படைத்தருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) மூலாதாரத்திலுள்ள அக்கினியை மூட்டும்; ஒளிபொருந்திய மூக்கின் நுனியின்கண் திருநடனத்தைக் காண்பிக்கும், சந்திராமிர்தத்தைக் கறந்து உனக்கு உண்பிக்கும் என்றும் ஆசைவைத்து என்னைச் சிருஷ்டித்து. (எ-று)

கண்டங்கடத்திவைத் தேற்றும்-இன்னும்
காரணமானகடவுளைப் போற்றும்
மண்டியமிர்தத்தைத் தேற்றும்-என்று
மாசிலுபதேசம் வைத்தருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) கண்டஸ்தானத்தைத் தாண்டுவித்து ஏற்றும், இன்னும் காரண கர்த்தர்களான கடவுளைத் துதிக்கும், மிகுத்து சந்திராமிர்தத்தைத் தேற்றும், என்று குற்றமற்ற உபதேசத்தைச் செய்து. (எ-று)

கற்பமுறைதனிற் காட்டும்-வருங்
காலனைக்காலாலுதைத்து விட்டோட்டும்

அற்பவுடற்கமு — தூட்டும்-என்று
ஆசையூட்டியூட்டி யாண்டருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) கற்பசாதனை செய்யும் முறைமைகளையெல்லாம் கையினால் காட்டும் வருகின்ற எமபடர்களைக் காலினால் உதைத்துத் தூரவிலக ஓட்டும், அற்பமான இந்தச் சரீரத்திற்கு அமிர்தத்தை உண்டாக்கும், என்று ஆசையையுண்டாக்கி யுண்டாக்கி, (எ-று)

ஓங்காரதீக்ஷையுஞ் — சொல்லும்-நாளும்
உன்றனைக்கொல்லுமனந்தனைக் — கொல்லும்
ஆங்காரந்தன்னையும் — வெல்லும்-என்று
ஆதரித்தாதரித் தாண்டருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) பிரணவ தீட்சையை உபதேசிக்கும், தினமும்உன்னை வருத்துகின்ற மனத்தைக் கொல்லும், அகங்காரத்தையும் ஜெயிக்கும் என்று ஆசைவைத்தாசை வைத்தருள்செய்து, (எ-று)

நீங்காதுயோகமும் — வாய்க்கும்-தீப
நெற்றிக்கண்மத்தியில்வைத்தொளியாக்கும்
தூங்காததூக்கமுந் — தூங்கும்-என்று
தூண்டித்தூண்டி முச்சுடராருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) என்னும் தவறாதபடி யோகமும் கைகூடும், சுழிமுனை கண்ணின் மத்தியில் வைத்து பார்வையில் ஒளியையுண்டாக்கும், தூங்காத தூக்கமுண்டாக்கும், தினமும் மிகுதியும் தூண்டி மூன்று சுடர்களையும் அருளிச்செய்து. (எ-று)

பாங்காகஞானம் — படைக்கும்-ஐந்து
பாழ்ம்புலவேடரைப்பல்லை — யுடைக்கும்
தாங்காதமையல் — கிடைக்கும்-என்று
சாதுரியமாய்த்தடுத்தருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) ஒருதன்மையாகவே ஞானமானது உண்டாகும், ஐம்புலன்களாகிய வேடர்களின் பற்களையுடைக்கும், முட்டுப்படாத ஆசை கிடைக்கும், என்று என்னை வன்மையாய் தடுத்தாண்டு. (எ-று)

மேலூருவெட்டியைக் — கூடும்-கூடி
மேலைமுச்சந்தியில்வையாளி — யோடும்
காலாறிக்கொள்ளவு — நாடும்-என்று
காட்டாமற்காட்டிக் கணித்தருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) மேலே ஊர்கின்ற வெட்டியோடுசேரும், அப்படிசேர்ந்துமேல் மாடமுச்சந்தியின்கண் வையாளியோடும், காலை ஆற்றிக்கொள்ளவும் விரும்பும், என்று காட்டாமற் காட்டிக் கணித்தருளி.எ-று

வஞ்சிய ராசையை விள்ளும்-விழி
மாயாமயக்கத்தை வீணென்று தள்ளும்
கொஞ்சிக்குதிரைமேற் கொள்ளும்-என்று
கோபத்தைக் காட்டி குணமருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) பெண்களின் ஆசையை நீக்கும், கண்களால் பார்க்கக் கூடிய மாய்கைகளின் மயக்கத்தை வீணென்று தள்ளிவிடும், விளையாடிக் குதிரையின் மேலேறிக்கொள்ளும், என்று கோபத்தைக் காண்பித்துக் குணத்தையருளிச்செய்து (எ-று)

பாலைப்பு சித்திட வேண்டும்-என்று
பராபரமுன்றன் பார்வைக்குத் தோன்றும்
காலைப்பிடித்திட மீண்டும்-என்று
கள்ளத் தனமாய்க் கதியருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) பாலைக்குடிக்கவேண்டும்என்று பராபரப்பொருளான உன்னுடைய தெரிசனத்திற்கு வெளிப்படும், வாசியைப்பிடிக்க மறுபடியும் எனக்குத் திருட்டுத்தனமாய் மோட்சத்தை யருளிச்செய்து, (எ-று)

தூலத்தை யுங்கெட்டி யாக்கும்-பின்பு
சூக்ஷத்தைக்காண மிகவெளி தாக்கும்
ஞாலத்தையும்விட்டு நீக்கும்-நின்று
ஞாயமொப்பித்து நவின்றருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) இந்தச் சரீரத்தைக் கெட்டிப்படுத்தும் பிறகு சூட்சமத்தைக் காண்பதற்கு மிகவும்லேசாக்கும், உலகப்பற்றைவிட்டு நீக்கும் என்று ஞாயத்தை ஒப்புவித்து சொல்லி. (எ-று)

முண்டங்கென் றும்முப தேசம்-ஓதும்
முன்காலி னுதங் கலீரென்றும் பேசும்
கண்டங்கடக்கவுங் கூசும்-என்று
கண்டங் கடக்குங்கணக்கருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) முண்டங் என்றும் உபதேசம்செய்யும், முன காலினுல் பேசுகின்ற நாதமானது கலீரென்று சத்திக்கும், கண்டத்தைத் தாண்டவும் கூசும் என்று கண்டத்தைக் கடக்குங் கணக்கை அருளிச்செய்து.

தங்குதல் தம்பித்த லாகும்-நின்று
தங்காது கும்பித்தல் ரேசித்த லாகும்
பொங்குதல் பூரித்த லாகும்-என்று
பூசைமுறையும் புகன்றருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) இருப்பது ஸ்தம்பனஞ் செய்வது ஆகும், தங்காமல் கும்பித்தலும், ரேசித்தலும் கைகூடும், பொங்குதலான பூரித்தலுமாகும், பூசையின் முறைமையைச் சொல்லியருளி. (எ-று)

மூப்பாழ்மு டிந்ததும் புத்தி-அந்த
மூன்றுக்குமுந்தி நடந்தது சித்தி
அப்பாழ்வி டிந்தது வெற்றி-என்றே
யாருமறியா வறிவருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) மூப்பாழானது முடிவுபெற்றதே புத்தியாகும், அந்த மூன்றுக்கும் முன்னதாக வந்ததே சித்தியாகும், அந்தப்பாழும் நீங்கினதே வெற்றியாமென்று யாவராலும் அறியப்படாத அறிவை அருளிச் செய்து. (எ-று)

பொற்பிரபை போலொளி பூணும்-அதிற்
பொல்லாத காயமி றந்திடுங் காணும்
செப்புதற் கும்மனம் நாணும்-என்று
செப்பித்திருத்திச் சிரித்தருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) பொன்னாற்செய்த பிரபையைப்போல ஒளியுண்டாகும் அதிற் பொல்லாத சரீரமானது இறந்து படுவதேயாகும், இவ்விஷயங்களை எடுத்துச் சொல்லவும் மனம் வெட்கப்படும், என்று சொல்லி என்னைத் திருத்தி சிரித்து அருள் செய்து, (எ-று)

சோம்பலுந் தூக்கமும் நீக்கும்-போது
சுகமது கொள்ளவும் போகாம லாக்கும்
பாம்பான பெண்ணாசை போக்கும்-என்று
பாவிமு கத்தையும் பார்த்தரு ளித்தான் (எங்கள்)

(பொ-ரை) சோம்பலையும், நித்திரையையும் நீக்கும், ஒருபோதாவது சுகங்கொள்ளாதபடி செய்யும், பாம்பைப்போன்ற பெண்ணாசையை யொழிக்கும்,பாவியாகிய என்னுடைய முகத்தைப்பார்த்து.(எ-று)

ஓங்கார வீடு கிடைக்கும்-அதன்
ஒன்பது வாயிலு மொக்க வடைக்கும்
தேங்காயுங் கல்லை யுடைக்கும்-என்று
தேங்காய் தனைத்தின்னும் பாங்கருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) பிரணவாகாரமான வீடானது அகப்படும்,அதினுடைய நவவாசல்களும் ஒருமிக்கமூடும், தேங்காயும் கல்லையுடைத்துப்போடும், என்று அத்தேங்காயைத் தின்னும் குணத்தை யருளிச்செய்து.

கத்த னருளுங்கை கூடும்-முகக்
கண்ணின்முன் பரவொளி பம்பர மாடும்
வித்தகனைத்தினந் தேடும்-என்று
வேதத்தி னுல்விவ ரித்தரு ளித்தான் (எங்கள்)

(பொ-ரை) இறைவனுடைய திருவருளானது அனுகூலப்படும், முகத்திலுள்ள கண்ணுக்கெதிரே பராபரப்பொருளின் ஒளியானதுபம் பரத்தைப்போலவே யாடும், பரிசுத்தனே அனுதினமும் தேடும் என்று நான்கு வேதங்களாலும் விவரமாக அருளிச்செய்து. (எ-று)

பூட்டை யுடைத்திட வேணும்-மனப்
பூட்டை யுடைக்கவை ராக்கியம் வேணும்
ஓட்டை யுடைத்துக்கொள் காணும்-என்றே
ஒருவர்க்கு மாகா வுரையருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) பூட்டை உடைக்கவேண்டும், மனமென்னும் பூட்டை யுடைப்பதற்கு வைராக்கியம் வேண்டும், ஓட்டையுடைத்துக் கொள்ளவும் தோன்றும், ஒருவருக்குமுதவாத சொல்லை யருளிச்செய்து.எ-று

மூடியமாயை விடியும்-உன்னை
மோசப்படுத்து மூவாசை மடியும்
ஓடியமிர்தம் வடியும்-என்றே
ஓதாமலோதி யுரைத்தருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) ஆன்மாவாகிய உன்னை மூடிக்கொண்டிருக்கின்ற மாய்கையானது உன்னைவிட்டு நீங்கும், உன்னை மோசஞ்செய்கின்ற மூன்றுசைகளும் ஒழியும், சந்திராமிர்தமானது ஆற்றைப்போலோடி கசியும் என்றே சொல்லாமற்சொல்லி உபதேசஞ்செய்து. (எ-று)

எட்டெட்டை யோரெட்டுட் கட்டுந்-தூக்கும்
எண்ணான்கை யுமந்தவெட்டு காட்டும்
முட்டுமீ ரெட்டையுங் கட்டும்-என்று
முன்னான்கைக் கட்டி முடித்தருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) அறுபத்துநான்கு வாசிகளை எட்டுக்குள்ளே கட்டும், தூக்குகின்ற முப்பத்து நான்கு வாசிகளையும் அந்த வெட்டுக்குள்ளாகவே கட்டும், பதினாறு வாசிகளையும் கட்டும் என்று பன்னிரண்டைக் கட்டிமுடித்து அருளிச்செய்து, (எ-று)

அறுபத்துநான்குமுதலியன, ரேசக பூரக, கும்பகங்களின் கணக்குகள் என்றுணர்க.

பொங்குந்திருவருள் வாழி-பரி
பூரண மாண பரம்பொருள் வாழி
தங்குங் குருவருள் வாழி-என்று
தன்னருள் வாழியைத் தானருளித்தான் (எங்கள்)

(பொ-ரை) விளங்குகின்ற திருவருள் வாழக்கடவது, எங்கும் நிறைந்தபெரிய பொருளானது வாழக்கடவது, நிலைபெற்ற ஞானசிரியனுடைய திருவருளானது வாழக்கடவது என்று தன்னுடைய திருவருள் வாழியை அருள்செய்து. (எ-று)

## வாழி விருத்தம்.

வாழிமேல் வாழி வாழி மருள்வாரி வாழி வாழி
வாழிமேல் வாழி வாழி மருணேயம் வாழி வாழி
வாழிமேல் வாழி வாழி வாழுஞ் சிவஞானம் வாழி வாழி
வாழிமேல் வாழி வாழி வாழுங் குணங்குடி வாழி வாழி.

(பொ-ரை) வாழிக்குமேல்வாழி மயக்கமுள்ள கடல்வாழக் கடவது, திருவருள் விலாசம் வாழக்கடவது, சிவஞான வாழ்க்கையானது வாழக்கடவது, குணங்குடியும் மிகவும் வாழக்கடவது.

மஸ்தான்சாகிபு அவர்கள்பாடல்

மூலமும் - பொழிப்புரையும்

முற்றுப்பெற்றது.

பிஸ்மில்லாஹி.

## மஸ்தான் சாஹிபு அவர்கள்

# திருப்பாடலகராதி.


| பாடல். | பக்கம். |
|---|---|
| அகடமுறு | 281 |
| அகத்துவிழி | 341 |
| அகமுதற் | 255 |
| அங்கமுமிழ் | 372 |
| அங்கிங்கென | 308 |
| அங்கென்ற | 425 |
| அங்கைதந்து | 397 |
| அச்சமிலாப் | 378 |
| அச்சமெமக் | 368 |
| அஞ்ஞானம் | 320 |
| அஞ்சாத | 148 |
| அஞ்சுதூணைட் | 298 |
| அடக்கவரிதா | 348 |
| அடங்கா | 238 |
| அடிக்காயிரம் | 391 |
| அடிமை | 370 |
| அடியானை | 398 |
| அடியாரும் | 399 |
| அடியனேனுய்யவு | 280 |
| அடுத்துக் | 383 |
| அடைத்த | 362 |
| அட்டதிக்கு | 326 |
| அஷ்டாங்கயோகமே | 246 |
| அஷ்டாங்க | 379 |
| அணைந்துயிர் | 82 |
| அண்டகோடி | 72 |
| அண்டகோடிகளு | 188 |
| அண்டபகி | 322 |
| அண்டபிண்டமா | 383 |
| அண்டபிண்ட | 382 |
| அண்டபுவனமெ | 345 |
| அண்டபுவனங் | 409 |
| அண்டம்புவனமு | 345 |
| அண்டுமிரு | 335 |
| அதிகப்பிரசங்க | 146 |
| அதிமோகமாகி | 279 |
| அதிமோகத் | 461 |
| அத்தியிலுதித் | 242 |
| அத்துவிதமே | 374 |
| அத்துவிதம்வாழி | 385 |
| அத்துவிதம்பொருள் | 464 |
| அந்தமுதன் | 113 |
| அந்தரத்தி | 307 |
| அந்திபகலற்ற | 320 |
| அந்திபகலற்றவக | 328 |
| அபயமெனைக் | 316 |
| அபயமெனைக்கா | 325 |
| அப்பொருடா | 97 |
| அமையா | 325 |
| அய்யனேமெய் | 312 |
| அய்யனே | 310 |
| அய்யோகூடுவன் | 373 |
| அய்யோவுலகி | 292 |
| அரசனரண் | 305 |
| அரியபெரும் | 347 |
| அருந்தவ | 283 |
| அரும்பே | 367 |
| அருளகண்டா | 93 |
| அருள்கூர்ந்த | 123 |
| அருள்பொழியு | 183 |
| அருவிசொரி | 365 |
| அல்லல்வினை | 349 |
| அல்லாகூ | 408, 437 |
| அல்விமலரே | 398 |
| அல்லும்பகலுமறி | 368 |
| அல்லும்பகலு | 384 |
| அல்லும்பகலுமடி | 362 |
| அலையுமனத்தை | 330 |
| அவனன்றி | 190 |
| அவியாமன | 365 |
| அவிழ்ந்த | 377 |
| அழியாவருள் | 344 |
| அழுக்கைத் | 192 |
| அவற்றுண் | 193 |
| அளஞ்ஞாலு | 342 |
| அளவிடற் | 182 |

| பாடல். | | பக்கம். |
|---|---|---|
| அறிவையறி | | 355 |
| அற்பவுடலாலரு | | 382 |
| அற்பவுடல | | 382 |
| அற்பதே | | 403 |
| அற்புதமே | | 344 |
| அனைத்துயிரு | | 319 |
| அன்புப்பெருக் | | 104 |
| அன்றெழுதி | | 431 |
| அன்னைசுற்ற | | 336 |
| அன்னைபிதாவு | | 339 |
| ஆகமத்துக் | (ஆ) | 327 |
| ஆசரித்தம்பிகை | | 438 |
| ஆசாபசாச | | 128, 422 |
| ஆசானற்காலை | | 374 |
| ஆசைபாச | | 435 |
| ஆசைக்கடலி | | 340 |
| ஆசைவலைப்பாச | | 358 |
| ஆச்சிதனைத்தேடி | | 357 |
| ஆடாதுமாடி | | 394 |
| ஆடியகூத்தினை | | 300 |
| ஆடும்படுபொரு | | 291 |
| ஆட்டுக்கறி | | 391 |
| ஆணிப்பொன் | | 383 |
| ஆணிப்பொன்மதி | | 391 |
| ஆணையிட்டே | | 368 |
| ஆண்டவனென் | | 432 |
| ஆண்டவனனைத் | | 432 |
| ஆண்டினோ | | 264 |
| ஆதாரமாறி | | 416 |
| ஆதாரமாறு | | 381 |
| ஆதிமுன் | | 83 |
| ஆதிமுகம்மது | | 291 |
| ஆதிமுதலே | | 305 |
| ஆதியந்தங் | | 400 |
| ஆதியைத்தேடி | | 413 |
| ஆதியந்தங்கட | | 399 |
| ஆதியாயாண்ட | | 345 |
| ஆதியின்மே | | 372 |
| ஆத்தாளைத்தேடி | | 405 |
| ஆத்தாளையெனை | | 257 |
| ஆனந்தமான | | 156 |
| ஆயபன்னிரு | | 268 |
| ஆயுங்கலையிரண்டு | | 382 |
| ஆயுங்கலையைக் | | 465 |
| ஆரிருந்தென்னவார் | | 141 |
| ஆரிருந்தென்னார் | | 310 |

| பாடல். | | பக்கம். |
|---|---|---|
| ஆருக்குமந்த | | 293 |
| ஆர்ப்புக்குயி | | 336 |
| ஆலமுறுந் | | 336 |
| ஆவிதனைக் | | 365 |
| ஆவியுடல் | | 341 |
| ஆழாழிதானு | | 311 |
| ஆழிக்கரை | | 435 |
| ஆழித்துரும் | | 299 |
| ஆழித்திரளென | | 303 |
| ஆழியெள | | 142 |
| ஆளவருவோ | | 353 |
| ஆளாயோ | | 351 |
| ஆறாலும்பொ | | 350 |
| ஆறாலுமுன் | | 346 |
| ஆறாலுமேழை | | 351 |
| ஆறாலெளியே | | 354 |
| ஆனைகுதிரை | | 304 |
| இகபர | (இ) | 86 |
| இடபிங்கலை | | 416 |
| இடம்பொருளே | | 311 |
| இடைபிங்கலை | | 234 |
| இணங்குமெய்ஞ் | | 70 |
| இதற்குமுன் | | 161 |
| இதமகித | | 158 |
| இதமாகவே | | 271 |
| இதயங்களித்து | | 135 |
| இதனாலெ | | 203 |
| இந்தவிதய | | 311 |
| இந்த்ரசாலப் | | 253 |
| இம்முறை | | 229 |
| இயல்புகெட் | | 205 |
| இரக்கத்துணிந்து | | 297 |
| இருகையு | | 374 |
| இலைசருகு | | 180 |
| இல்லந்து | | 118 |
| இல்லாதமாயை | | 330 |
| இல்லாமை | | 323 |
| இல்லல்லா | | 351 |
| இல்லல்லாகூ | | 408 |
| இல்லல் | | 409 |
| இல்விணிடங் | | 401 |
| இவ்வகை | | 282 |
| இனமுஞ் | | 370 |
| இறந்தொழி | | 172 |
| இறந்தான் | | 306 |
| இன்னமுதே | | 375 |

| பாடல். | | பக்கம். |
|---|---|---|
| இனவாச | | 228 |
| இனிக்கண்டறி | | 395 |
| இனியவமிர்தம் | | 368 |
| இன்றுள்ளோர்நாளை | | 364 |
| இன்றுளோர் | | 278 |
| இன்றைக்கிருப் | | 303 |
| ஈக்களெறும்பு | ஈ | 323 |
| ஈசனேயன்பர் | | 198 |
| ஈடெனக்கா | | 341 |
| ஈடோயா | | 377 |
| ஈறுமுதலுமற்றே | | 359 |
| ஈனத்துக்கேற்ற | | 340 |
| ஈனந்தரும் | | 177 |
| ஈனமின் | | 179 |
| ஈன்றெடுத்த | | 312 |
| உச்சிக்குள் | உ | 432 |
| உச்சிதவச் | | 398 |
| உடலுக்குயிரே | | 346 |
| உடலே | | 374 |
| உடல்பொரு | | 95,425 |
| உடையா | | 363 |
| உணர்ந்து | | 81 |
| உதிக்குமுணர் | | 372 |
| உத்தமிப் | | 394 |
| உத்தமர்கட் | | 308 |
| உந்தியின்கீழ் | | 232,417 |
| உமைநம்பி | | 403 |
| உமையாளு | | 401 |
| உம்பர்க்கு | | 306 |
| உயிருக்குயிரான | | 355 |
| உயிர்க்குளுயிரா | | 321 |
| உயிர்த்துணைவ | | 315 |
| உய்த்ததுணர் | | 319 |
| உலைபோலெரி | | 397 |
| உலையிவிடுமெ | | 365 |
| உலையிவிடு | | 383 |
| உல்லாசமாக | | 353 |
| உழையோ | | 369 |
| உள்ளந்தெளிந் | | 344 |
| உள்ளக்கருத் | | 371 |
| உள்ளதுரியதெ | | 314 |
| உள்ளதுரிய | | 391 |
| உள்ளமண | | 394 |
| உள்ளுயிரி | | 366 |
| உள்ளுள்ளு | | 328 |
| உற்றகிளைத் | | 369 |

| பாடல். | | பக்கம். |
|---|---|---|
| உற்றாரழாம | | 294 |
| உற்றாரைநம்பி | | 357 |
| உற்றாரிருந்தென்னை | | 292 |
| உற்றார்களாலு | | 350 |
| உற்றுர | | 424 |
| உனக்குளெ | | 385 |
| உன்னைமறப் | | 330 |
| உன்மீதிலாசித் | | 393 |
| உன்னையறிவ | | 357 |
| உன்னையன்றிவே | | 322 |
| உன்னையன்றியெ | | 337 |
| உன்னையன்றியா | | 323 |
| உன்னையன்றிஏழை | | 405 |
| உனையாள்வோ | | 379 |
| ஊசிதனைக் | (ஊ) | 344 |
| ஊத்தைப் | | 309 |
| ஊரற்று | | 90 |
| ஊனாகியூனி | | 112 |
| ஊனாகியுள் | | 351 |
| ஊனானகாய | | 278 |
| ஊனெடுத்த | | 361 |
| எக்கலைக்குந் | (எ) | 340 |
| எங்கட்குடிக்கரச | | 124 |
| எங்களாலொன் | | 215 |
| எங்கள்குணங் | | 430,463,464 |
| எங்கள்குணங்குடி | | 449 |
| எங்கள்குணங்குடியா | | 448 |
| எங்குமருள் | | 111 |
| எங்குநிறை | | 420 |
| எட்டிப்பிடி | | 365 |
| எட்டிரண்டு | | 340 |
| எட்டிப்பிடித்தா | | 383 |
| எட்டெட்டு | | 231 |
| எட்டெட்டை | | 469 |
| எட்டுமோ | | 381 |
| எண்டிசையுந் | | 336 |
| எண்படா | | 366 |
| எண்ணரிய | | 369 |
| எண்ணாத | | 382 |
| எண்ணாதவெ | | 363 |
| எண்ணாதவெண்ணெ | | 314 |
| எண்ணாதவெண் | | 366 |
| எண்ணாதவெண் | | 419 |
| எண்சாணுடம்பு | | 147 |
| எண்சாணுயரத் | | 292 |
| எண்சாணு | | 410 |

| பாடல். | பக்கம். |
|---|---|
| எத்தனைதான் | 349 |
| எத்தவங்கள் | 348 |
| எத்தனைஎத்தனை | 299 |
| எத்தனையாட்ட | 414 |
| எத்தனையோ | 315 |
| எத்தனையோகர் | 335 |
| எத்தனையோகெ | 354 |
| எத்திசையு | 347 |
| எந்நாளு | 239 |
| எந்நிலைதன்னை | 299 |
| எந்தமுயிர்க்கே | 324 |
| எந்தலையிலிட்ட | 195 |
| எந்தவறிவை | 319 |
| எந்தவித | 306 |
| எந்தவுயிரும் | 328 |
| எப்பொழுது | 347 |
| எப்பொருளுந் | 320 |
| எமனார்விடு | 318 |
| எமனைப் | 165 |
| எம்மாவிசைந்த | 329 |
| எல்லாப்படைப் | 291 |
| எல்லாருமானிட | 302,287 |
| எல்லார்க்கமு | 360 |
| எல்லாரு | 430 |
| எல்லாம்படி | 336 |
| எல்லைநிலை | 108 |
| எல்லையுமறந்து | 139 |
| எவருடைமை | 361 |
| எவ்வுலகுமேவற் | 326 |
| எவ்வுலகுந் | 382 |
| எழுகடலு | 330 |
| எரியுமகத் | 300 |
| எறும்பூரனூர | 319 |
| எற்றாதமாயை | 89 |
| எனக்கோர் | 324 |
| எனையாட் | 317 |
| எனையாளென் | 301 |
| என்தலையி | 186 |
| என்னசெய் | 171 |
| என்னதான் | 352 |
| என்பத்துனக் | 394 |
| என்னகமிருக்க | 131 |
| என்னவித | 411 |
| என்னைவிட்டால் | 395 |
| என்றடிமை | 197 |
| என்றலையி | 435 |
| என்றுமன்னை | 367 |
| என்றுயிருப் | 313 |
| என்னெஞ்சந் | 335 |
| என்னைமறந்தே | 451 |
| என்னையறிந் | 451 |
| என்னையுன | 325 |
| (ஏ) ஏகப்பெருவெளி | 360 |
| ஏகறப்பில் | 182 |
| ஏங்காம | 361 |
| ஏங்கியழு | 397 |
| ஏச்சுமதி | 367 |
| ஏட்டிலெழு | 378 |
| ஏதமில்லாத | 180 |
| ஏதேது | 436 |
| ஏழைமுகம் | 350 |
| ஏழையடியே | 351 |
| ஏனோவெனை | 405 |
| (ஐ) ஐந்துபுல | 343 |
| ஐயன்குணங் | 461 |
| ஐயையோவென் | 421 |
| ஐயையோநா | 422 |
| ஐயையோவென் | 434 |
| ஐயோவுனதரு | 360 |
| ஐயோவடிமை | 351 |
| ஐயோவெனது | 352 |
| ஐயோவென் | 384 |
| ஐயோவெனைப் | 73 |
| ஐயோவெனக் | 347 |
| ஐவர்க்குமென்னை | 344 |
| (ஒ) ஒப்புரவு | 369 |
| ஒப்பிலரு | 379 |
| ஒழியாப்பி | 331 |
| ஒழியாவருள் | 344 |
| ஒன்றுஞ் | 1 |
| ஒன்றுக்கு | 325 |
| ஒன்றாஞ் | 133 |
| ஒன்றிய | 274 |
| ஒன்றாய்ப் | 324 |
| (ஓ) ஓகோவுனை | 357 |
| ஓங்காரதீக்ஷை | 466 |
| ஓங்காரமதுகொண் | 267 |
| ஓங்காரவீடு | 468 |
| ஓசைமணி | 377 |
| ஓடாமலோடி | 377 |
| ஓடித்திரிந்தலைந்து | 347 |
| ஓடியலைந்து | 290 |

| பாடல். | | பக்கம். |
|---|---|---|
| ஒடியேயுள்ள | | 335 |
| ஒட்டாதே | | 316 |
| ஒயாக்கவலை | | 343 |
| ஒயாக்கவலையி | | 363 |
| ஒயாதோவென்கவலை | | 127 |
| ஒயாதோவென் | | 368 |
| ஒவியத்தை | | 329 |
| கங்கற்ற | (க) | 209 |
| கங்குல்பகலற்ற | | 122 |
| கங்குல்பகலொழி | | 317 |
| கச்சிறுக்கு | | 396 |
| கஞ்சாவபி | | 373 |
| கஞ்சாவின் | | 226 |
| கடலிற்கவிழ்ந்த | | 80 |
| கடலின்மடை | | 320 |
| கடன்மடை | | 178 |
| கட்டழகி | | 169 |
| கட்டாடை | | 389 |
| கட்டிப்பிடி | | 167 |
| கட்டிலினுங் | | 392 |
| கட்டுப்படுங் | | 302 |
| கட்டுப்படாவச்ச | | 461 |
| கண்டங்கடத்தி | | 465 |
| கண்டங்கடங்க | | 433 |
| கண்டதெல்லாங் | | 440 |
| கண்டபகலிரவு | | 327 |
| கண்டப்பா | | 402 |
| கண்டபொரு | | 105 |
| கண்டித்த | | 343 |
| கண்ணான | | 120 |
| கண்ணாறுவிண் | | 277 |
| கண்ணேமனோன் | | 348 |
| கண்ணேமணி | | 306 |
| கண்ணேகருத்தே | | 223 |
| கண்ணேகருத்தே | | 352 |
| கண்ணேயென் | | 388 |
| கத்தனருளுங் | | 468 |
| கத்தனே அத்துவித | | 255 |
| கத்தன்திரு | | 427 |
| கத்திக்கத்தி | | 436,439 |
| கதியானை | | 184 |
| கதைபேசி | | 254 |
| [illegible]பத்தள | | 407 |
| கரும்புசர்க்கரை | | 303 |
| கரும்பே | | 35 |
| கருவிப்பெரு | | 331 |

| பாடல். | | பக்கம். |
|---|---|---|
| கருவிவழிதனி | | 304 |
| கர்த்தனே | | 400 |
| கர்ப்பூரதீபக் | | 350 |
| கர்ப்பூரமேற்றி | | 390 |
| கல்லாதகல்வி | | 337 |
| கல்லாதவம்ப | | 145 |
| கல்விலோ | | 126 |
| கல்லுமுருகு | | 323 |
| கல்லுமொரு | | 76 |
| கலையாமலீராறு | | 260 |
| கவனமணி | | 403 |
| கவிராஜரும் | | 393 |
| களியேகண்டு | | 353 |
| கள்ளக்கருத் | | 355 |
| கம்பமற்று | | 426 |
| கள்ளவிருளை | | 316 |
| கள்ளினங்க | | 294 |
| கற்றகல்வி | | 343 |
| கற்பவழலை | | 403 |
| கற்றபடி | | 314 |
| கற்பட்டுப்பாய் | | 301 |
| கற்பங்களுண் | | 304 |
| கற்பமுறை | | 465 |
| கற்பூரவுண்டை | | 343 |
| கனக்குமிரு | | 332 |
| கனவுங்கண் | | 441 |
| கனமாயை | | 161 |
| கன்மமறுவ | | 397 |
| கன்னமிடுங் | | 354 |
| கன்னலின் | | 202 |
| கன்னலென | | 325 |
| கன்றினுக்கே | | 405 |
| காகமாய்நின்று | (கா) | 201 |
| காசாசைகொண் | | 352 |
| காசைவிரும்பிக் | | 357 |
| காடுங்கரையுஞ் | | 299 |
| காட்டுக்கொலை | | 323 |
| காணாதகாட்சி | | 263 |
| காண்காத | | 356 |
| காதொடுகண் | | 333 |
| காதம்பரி | | 389 |
| காதறுங் | | 312 |
| காந்தமு | | 143 |
| காமக்கடல் | | 372 |
| காமக்கடல்கட | | 310 |
| காமக்குரோதங்க | | 298 |

| பாடல். | பக்கம். | பாடல். | பக்கம். |
|---|---|---|---|
| காமக்குரோதமத | 340 | கூறுங்கருவி | 318 |
| காமக்குரோதமோ | 212 | கெர்ப்பத்திலென்னை (கெ) | 321 |
| காமக்குரோதக்க | 418 | கெட்டமன | 409 |
| காமரூபி | 402 | கேசரத்தை (கே) | 401 |
| காயாபுரிக் | 236 | கேசரியா | 402 |
| காயாமற் | 354 | கேசாதிபாத | 340 |
| காயக்கருவி | 323 | கேடெலாங் | 150 |
| காயி | 435 | கேளாயோ | 349 |
| காராரெனப்பே | 101 | கைக்குள் (கை) | 159 |
| காலாழிபீலி | 390 | கைக்குஞ்சரி | 390 |
| காலனும்போய் | 403 | கைப்பொருளைத் | 321 |
| காலிற்பனி | 389 | கையில் | 484 |
| கால்பிடித்துக் | 397 | கொங்கைதனை (கொ) | 372 |
| காற்பசு | 415 | கொடிகட்டிக் | 297 |
| காற்றூடிபோல | 336 | கொடியமனத் | 367 |
| காற்றுப்பட் | 389 | கொட்டிவைத்த | 374 |
| காற்றுத்துருத்தியை | 338 | கொண்டலைத் | 378 |
| காற்றுத்துருத்திதனை | 349 | கொண்டார்க | 224 |
| காற்றைப்பிடி | 236 | கொத்தோ | 328 |
| கானகவிலங் | 272 | கொப்புவித்தி | 317 |
| கானற்சல | 323 | கொலைசெ | 206 |
| கானலைநேர் | 332 | கொல்லாவிரத | 315 |
| கானுக்கெறித்த | 222 | கொல்லுங் | 337 |
| கிடையாப் (கி) | 393 | கொல்லுதற்கு | 321 |
| குட்டைகிறைந் (கு) | 398 | கொள்ளாது | 235 |
| குட்டிக்கறி | 391 | கோடானு (கோ) | 318 |
| குணங்குடியார் | 193 | கோடிபெரு | 388 |
| குதிகொள்ளு | 214 | கோணற்கருப் | 332 |
| குப்பைவழலை | 403 | கோப்பாக | 386 |
| கும்பிக்கிரை | 356 | கோமேதகமே | 398 |
| கும்பிக்கிரைத்தேடி | 320 | கோலங்கு | 366 |
| கும்பித்திரே | 381 | கோலத்திரு | 349 |
| குரைவிக்குலக் | 160 | கோனுமன் | 132 |
| குரனெரிய | 371 | (ச) | |
| குவலயக்கவலை | 143 | சங்கையும் | 412 |
| குவலயத்தோ | 386 | சகச்சூதை | 225 |
| குறிவிளக்குங் | 355 | சக்கரத்திப்போர் | 217 |
| குற்றம் | 406 | சட்டாசங்கள் | 327 |
| குன்றுக்குணங் | 345 | சட்டாச | 375 |
| கூசிக்குலாவு (கூ) | 228 | சண்டாள | 353,428 |
| கூசிக்குலாவுமட | 418 | சத்திசிவ | 401 |
| கூடுவிட்டுக்கூடு | 274 | சதியாயிரஞ் | 146 |
| கூட்டி | 430 | சந்திதான | 390 |
| கூத்தவிலங் | 388 | சமர்கொடுத்து | 401 |
| கூந்தலுக்கு | 389 | சருவதயா | 317 |
| கூருமவத்தை | 310 | சலனசஞ் | 140 |

| பாடல். | | பக்கம். |
|---|---|---|
| சலக்குமிழி | | 332 |
| சற்று | | 436 |
| சாகாமற்செத்து | (சா) | 357 |
| சாகாமற்செத்திருக்குஞ் | | 458 |
| சாசுவத | | 189 |
| சாட்டியில் | | 248 |
| சாருதனீ | | 336 |
| சாதனையி | | 249 |
| சாதந்தளிகை | | 391 |
| சாதிசனத் | | 356 |
| சாதிபேதத் | | 137 |
| சாத்திரங்க | | 356 |
| சாத்திரங்களோதுஞ் | | 312 |
| சாத்தரவே | | 407, 423 |
| சார்ந்தோரை | | 337 |
| சாதுதனை | | 401 |
| சிட்டனுக | (சி) | 433 |
| சிட்டனென | | 381 |
| சித்தகிரஞ் | | 343 |
| சித்தந்தெளிந்த | | 334 |
| சித்தர்கண | | 386 |
| சித்தானை | | 401 |
| சித்திரும் | | 365 |
| சிந்தைக்கலக்கஞ் | | 327 |
| சிந்தைதனைத் | | 358 |
| சிந்தைசிதையா | | 318 |
| சிந்தையறிவை | | 311 |
| சிந்தையொளி | | 379 |
| சிவராஜ | | 320 |
| சிற்பரமே | | 386 |
| சிற்பரத் | | 431 |
| சுத்தத்திரு | (சு) | 305 |
| சுந்தரச்சோதி | | 364 |
| சூதமுகனீற் | (சூ) | 403 |
| சூதொன்று | | 250 |
| சூத்திரப்பாவை | | 423 |
| செகத்துண் | (செ) | 319 |
| ஜெகத்துமயமா | | 340 |
| செகமுழுதுஞ் | | 355 |
| செங்கமல | | 402 |
| செத்தசவ | | 327 |
| செத்தாலும் | | 270, 419 |
| செத்தபி | | 437 |
| செத்துப்போ | | 433 |
| செப்பஞ்செயுஞ் | | 324 |
| செப்புரு | | 398 |
| செய்ததெல்லாம் | | 358 |
| செல்லுமளவுஞ் | | 333 |
| செல்லுமுறையறிந்து | | 357 |
| செல்வப்பெருக்கே | | 375 |
| ஜென்மக் | | 379 |
| சென்மமெடுத் | | 338 |
| சென்னக்கிசையா | | 338 |
| சேத்துமத் | (சே) | 377 |
| சேயாயுமென் | | 396 |
| சேர்ந்தசுற்றந் | | 365 |
| சேர்க்குந்திர | | 366 |
| சையோகப் | (சை) | 404 |
| சொல்லரிய | (சொ) | 349 |
| சொல்லரியசுக | | 174 |
| சொல்லறுமெய் | | 362 |
| சொல்லாச் | | 376 |
| சொல்லான் | | 77 |
| சொல்லித் | | 417 |
| சொல்லுகிணங் | | 348 |
| சொல்லுட்பதர் | | 360 |
| சொல்லுக்கடங் | | 315 |
| சொல்லும் | | 355 |
| சொற்கடங்காச் | | 297 |
| சொன்னபடிக் | | 342 |
| சொர்னமலை | | 393 |
| சோமப்பானூட்டி | (சோ) | 381 |
| சோம்பலுந் | | 468 |
| சோம்பேறிகள் | | 331 |
| சோற்றாலெடுத்தசுவரா | | 251 |
| சோற்றாலெடுத்தசு | | 380 |
| சோற்றுப் | | 365 |
| சோற்றுப்பொதி | | 348 |
| ஞானகுரு | (ஞா) | 172 |
| ஞானம்விளை | | 400 |
| தங்கக்கொலு | (த) | 390 |
| தங்கநகையு | | 412 |
| தங்குதல்தம்பித்த | | 467 |
| தங்குபே | | 363 |
| தசநாதமா | | 241 |
| தசநாடியும் | | 244 |
| தஞ்சமழிந்து | | 309 |
| தஞ்சமெனு | | 310 |
| தஞ்சமே | | 210 |
| தடித்தனமே | | 395 |
| தடிப்பாவிருந் | | 395 |
| தடையிலுலக | | 385 |

| பாடல். | | பக்கம். |
|---|---|---|
| தத்தியேகங்கறப் | | 103 |
| தத்துமனத் | | 337 |
| தந்தைதாயென்றே | | 368 |
| தந்தைதாய்முதலான | | 162 |
| தம்பனங் | | 376 |
| தலைக்கு | | 389 |
| தற்பரத்தி | | 406 |
| தற்பரமேவாழி | | 386 |
| தற்பரமேசிற் | | 374 |
| தனியேனுக் | | 346 |
| தன்னிலிருந்த | | 329 |
| தன்னையறிந்தாற்றலை | | 316 |
| தன்னையறிந்தாற் | | 321 |
| தன்னையறிந்து | | 371 |
| தன்னையறிந்துணரத் | | 353 |
| தன்றேசம் | | 326 |
| தாயனைய | (தா) | 194 |
| தாயனையவி | | 326 |
| தாயாதிமுத | | 151 |
| தாயாயுமென் | | 196 |
| தாயிருக்கப் | | 315 |
| தாயினுமிக் | | 397 |
| தாய்தாயே | | 405 |
| தாய்மார்களே | | 452 |
| தாயைவிட்டு | | 405 |
| தானுசமுத் | | 393 |
| தாவியணைத் | | 397 |
| தானேதானெவ் | | 342 |
| தான்மெசத்திருந் | | 276 |
| திக்கற்ற | (தி) | 200 |
| திக்குத்திகந் | | 296 |
| திக்குவிஜயஞ் | | 341 |
| தித்தித்தொழு | | 396 |
| திண்டுமுண் | | 240 |
| தின்றுடுத்திப் | | 329 |
| தீதுநலமறியேன் | (தீ) | 312 |
| தீதுநலமுதலாஞ் | | 356 |
| தீம்பொருந்து | | 275 |
| தீர்க்கதெண்ட | | 400 |
| துச்சனேனுயி | | 207 |
| துட்டமாமாயை | | 877 |
| தூக்கவலையற்ற | | 322 |
| துற்குணமே | | 316 |
| துற்குணமேகொண்ட | | 330 |
| துலங்குமணி | | 392 |
| துலங்குமருண் | | 318 |

| பாடல். | | பக்கம். |
|---|---|---|
| துவளுந்துடி | | 388 |
| துள்ளுமனவாசி | | 237 |
| துறவின்றிச் | | 332 |
| துன்பக்கடலைத் | | 375 |
| துன்புறு | | 307 |
| தூங்காமற்றூங்கி | (தூ) | 356 |
| தூங்காமற் | | 364 |
| தூங்கியிருந்து | | 352 |
| தூராதிதூரந் | | 347 |
| தூலத்துளிச்சை | | 333 |
| தூலத்தையுங் | | 467 |
| தெரியாதவின்பத் | (தெ) | 357 |
| தெள்ளியவான் | | 376 |
| தேகத்தி | (தே) | 435 |
| தேகமுடையுமெனத் | | 327 |
| தேகாதியகிலப் | | 156 |
| தேகாபிமானத் | | 334 |
| தேகாபிமான | | 465 |
| தேங்காய்க்கிளநீர் | | 325 |
| தேசிகனுனென்றே | | 305 |
| தேசிகனுனென்னு | | 371 |
| தேசிநடைபோலத் | | 373 |
| தேடக்கிடையாத | | 347 |
| தேடியபொரு | | 304 |
| தேடியேவக் | | 92 |
| தேடுவதுநாடுவது | | 327 |
| தேயாப்பஞ்சா | | 331 |
| தேய்ந்திடவு | | 213 |
| தேவடி | | 437 |
| தேவரீர் | | 204 |
| தேருப்பிரபஞ்ச | | 317 |
| தேனமிர்த | | 356 |
| தேனமுதே | | 311 |
| தேனைப்பழித்த | | 211, 432 |
| தேனுடுபோகாய் | | 343 |
| தையலர்களாசை | (தை) | 149 |
| தொகுத்து | (தொ) | 247 |
| தொடுத்தணைத்து | | 395 |
| தொட்டுப் | | 426 |
| தொண்டுசெய்ய | | 361 |
| தொண்டரிடஞ் | | 380 |
| தொண்டர்பணி | | 329 |
| தொண்டாசை | | 340 |
| தொந்தங்கடிந் | | 309 |
| தொலையாத | | 109 |
| தொலையாப்பவ | | 271 |

| பாடல். | | பக்கம். |
|---|---|---|
| தொல்லுலகி | | 314 |
| தொல்லைப்பெரு | | 334 |
| தோகையின | (தோ) | 404 |
| தோற்றிய | | 265 |
| நஞ்சுண்ணு | (ந) | 295 |
| நடனமிடுவாசி | | 185 |
| நடைபுடன் | | 117 |
| நட்டநடுவீடு | | 384 |
| நம்பினபேர்க் | | 446 |
| நம்பினதற்கு | | 446 |
| நயமேயுறைந்த | | 176 |
| நரம்புதசை | | 303 |
| நரம்பென்பு | | 333 |
| நல்லோர்க்கு | | 401 |
| நவசூத்திரத்தை | | 370 |
| நவகண்டயோக | | 266 |
| நற்பதவியும் | | 386 |
| நற்பவளக்கொம்பே | | 369 |
| நற்பவளக்கொம்பேநவி | | 375 |
| நற்பூச்சந்தந | | 298 |
| நற்றவஞ் | | 415 |
| நாக்கந் | (நா) | 433 |
| நாசச்சரீர | | 154 |
| நாசசரீரம் | | 408 |
| நாசமாமோச | | 186 |
| நாசிநடுவணை | | 273 |
| நாசிநுனியிடை | | 304 |
| நாசிநுனியி | | 295 |
| நாசிநுனிகடந்து | | 373 |
| நாடாத | | 408 |
| நாடுநகருண்டு | | 294 |
| நாடுமோ | | 128 |
| நாட்டமங்கு | | 358 |
| நாட்டமென்றே | | 293 |
| நாட்டமிருவினை | | 308 |
| நாட்டுறவஞ்சா | | 192 |
| நாடிக்குருவடி | | 413 |
| நாணுமடவாரை | | 380 |
| நாதமுங்கீதமும் | | 302 |
| நாதவிந்தால் | | 378 |
| நாதாந்தமூல | | 346 |
| நாமாண்மை | | 370 |
| நாமவத்தையற்ற | | 325 |
| நாய்க்குவிருக் | | 322 |
| நாலுதிக்கினும் | | 334 |
| நாவாற்புகழ | | 345 |
| நாவினுனி | | 134 |
| நாழியுப்புநாழி | | 327 |
| நாவிரண்டரை | | 300 |
| நாளைக்கிருந்திட | | 293 |
| நாற்காலிகட்டி | | 392 |
| நாற்றசடில | | 348 |
| நாற்றந்தொலை | | 383 |
| நானேநெருப்பாறு | | 331 |
| நானேதிருவடியை | | 338 |
| நிசமானதெய்வ | (நி) | 215 |
| நிட்டூரமின் | | 227 |
| நிஷ்டைநிருவி | | 314 |
| நிறியாசையற்று | | 378 |
| நிதியாசை | | 138 |
| நித்தமுனைத் | | 349 |
| நித்தமாய் | | 97 |
| நித்தனேநித்த | | 224 |
| நித்திரைதனிற் | | 79 |
| நிர்க்குணத்தைக் | | 379 |
| நில்லாவுடற்கு | | 381 |
| நிலைநாட்டுங்காய | | 354 |
| நிலையமுட | | 107 |
| நிறைந்தபரி | | 364 |
| நிற்கும்பொழு | | 385 |
| நினைப்புமறப்பு | | 320 |
| நினைப்பும்விளிப் | | 212 |
| நினைவுங்கனவு | | 301 |
| நின்னைச்சரண் | | 311 |
| நின்செயல் | | 319 |
| நின்னதருளன்றி | | 334 |
| நீக்கமற | (நீ) | 85 |
| நீங்காதயோகமும் | | 466 |
| நீச்சாய்ப்பெருகி | | 354 |
| நீட்டிக்குறுக்க | | 343 |
| நீண்டாண் | | 295 |
| நீராட்டமாடி | | 413 |
| நீராழமாக | | 168 |
| நீராற்றிரள்கு | | 324 |
| நீறுங்கரண | | 321 |
| நெக்குருகி | (நெ) | 385 |
| நெஞ்சகத்தில் | | 822 |
| நெற்பதற்கே | | 376 |
| நெறியற்ற | | 144 |
| நேசம்வைத்த | (நே) | 363 |
| நேசம்வழிகாட்டி | | 338 |
| நேத்திரம் | | 428 |

| பாடல். | | பக்கம். |
|---|---|---|
| வையுமுடல் | (வை) | 434 |
| னோக்குநோக் | (நோ) | 88 |
| பங்கப்பழிப் | (ப) | 372 |
| பசுப்பிப்பணம் | | 369 |
| பசுபாசவாச | | 157 |
| பச்சைப்பருப்பு | | 391 |
| பஞ்சரித்துப் | | 221 |
| பஞ்சசுத்திசெய்த | | 328 |
| படர்ந்தமனங் | | 308 |
| படிக்கும்படிக்கு | | 292 |
| படியோர்க்கெல்லா | | 396 |
| படுத்துப்படுத்து | | 196 |
| படையாதெல்லா | | 394 |
| பட்டைக்கரும்பு | | 375 |
| பட்டும்பணி | | 298 |
| பட்டுடையுமொப் | | 366 |
| பட்டிப்பசுப் | | 381 |
| பட்டதுவும் | | 192 |
| பட்டும்படாது | | 286 |
| பட்டுடைய | | 366 |
| பணத்தைப் | | 385 |
| பணமுடியா | | 404 |
| பதித்தமனம் | | 385 |
| பத்துவயதுடைய | | 258 |
| பத்துவயது | | 401 |
| பரமுத்தன் | | 407 |
| பருவமதுசெய்யப் | | 320 |
| பலவிடத்தைச் | | 371 |
| பலவுமா | | 94 |
| பல்லாயிரங்கோடி | | 324 |
| பல்லுயிரும் | | 321 |
| பல்லையிதழ் | | 395 |
| பவக்கடலை | | 375 |
| பழகப்பழகி | | 370 |
| பன்மையாய் | | 110 |
| பருதானிய | | 71 |
| பற்றற்று | | 313 |
| பழிக்கோ | | 434 |
| பன்னிருகால் | | 464 |
| பன்னீரொழுகு | | 397 |
| பாகமுடன் | (பா) | 361 |
| பாதமுடிநடுவும் | | 317 |
| பாகாய்க்கசிந்துருகும் | | 341 |
| பாங்காகஞானம் | | 466 |
| பாசக்கயிற்று | | 164 |
| பாசமறவார் | | 338 |
| பாசமொழித்து | | 342 |
| பாசவினைபோக்கி | | 353 |
| பாசவினையெல்லாம் | | 329 |
| பாடிப்படித் | | 364 |
| பாடையிலே | | 414 |
| பாட்டைபடித் | | 334 |
| பாஷாண்டிக | | 404 |
| பாணிக்க | | 359 |
| பாதம்பூசித்துப் | | 392 |
| பாதமுடிநடு | | 317 |
| பாதமுடியின் | | 342 |
| பாயுமீராறு | | 133 |
| பாராகியெப் | | 115 |
| பாரிரோ | | 123 |
| பாரினிற்பல | | 300 |
| பார்த்ததிக் | | 116 |
| பார்க்குமிட | | 307 |
| பார்க்கப்பல | | 303 |
| பார்க்கப்பலவிதமாய் | | 354 |
| பார்க்கப்பலவித | | 350, 354 |
| பார்ப்பாயோ | | 364 |
| பாலங்கடந்து | | 384 |
| பாலமுந்தாண்டி | | 267 |
| பாலஞகவுங் | | 387 |
| பாலைப்புசித்திட | | 467 |
| பால்பழமுந் | | 391 |
| பாவபுண்ணியத் | | 308 |
| பாவவுடலெடுத் | | 350 |
| மாவை | | 428 |
| பாவிடுக்கும் | | 295 |
| பாழான | | 437 |
| பாற்பசுதனைப் | | 331 |
| பானைச்சோ | | 395 |
| பிடியாசைப் | (பி) | 389 |
| பிணம்பிடுங்கித் | | 404 |
| பித்தம்பிடித் | | 310 |
| பித்தம்பிடித்தபிர | | 340 |
| பித்தர்கள்போலும் | | 376 |
| பிரியாதபேரின்ப | | 155 |
| பிரியாயுனதடி | | 316 |
| பிரியாவரு | | 318 |
| பின்னையொருவர் | | 339 |
| பீச்சாத்திரண்ட | (பீ) | 375 |
| பீற்றற்றுருத்தியிற் | | 252 |
| பீற்றற்றுருத்திதனை | | 364 |
| புகழுவார் | (பு) | 208 |

| பாடல். | | பக்கம். |
|---|---|---|
| புண்ணாய்க்கசிந்து | | 321 |
| புண்ணீரொழுகி | | 376 |
| புதல்வரெளு | | 129 |
| புத்திசற்றே | | 414 |
| புத்தியகங்காரம் | | 338 |
| புந்தியிதமகிதப் | | 331 |
| புத்திதெளியாப் | | 334 |
| புந்திமகி | | 435 |
| புவனத்தரசரெல் | | 392 |
| புவியமெழுவாலும் | | 369 |
| புனிதகுணங் | | 439 |
| பூசைகள் | (பூ) | 410 |
| பூர்க்குமருண் | | 398 |
| பூஞ்சோலை | | 282 |
| பூட்டையுடைத் | | 469 |
| பூத்தமலரெடுத் | | 384 |
| பூமிப்பரப்பை | | 332 |
| பூரணமேயற்புத | | 368 |
| பெட்டிநிறையப் | (பெ) | 339 |
| பெண்களுக்குப் | | 452 |
| பெண்கொண்ட | | 412 |
| பெண்பிள்ளை | | 434 |
| பெண்ணாயுலக | | 404 |
| பெண்ணாசை | | 291 |
| பெண்கணிர்த் | | 387 |
| பெண்ணே | | 388 |
| பெண்டுபிள்ளை | | 359 |
| பெந்தமொடு | | 99 |
| பெற்றெடுத்த | | 324 |
| பேசாவிடமறிந் | (பே) | 317 |
| பேசாதுமவுனந் | | 261 |
| பேச்சற்றுஞ் | | 314 |
| பேய்ச்சுக்கடங் | | 306 |
| பேதவித்தே | | 359 |
| பேயைப்பழித்த | | 214 |
| பேராற்பெரிய | | 346 |
| பையலோ | (பை) | 220 |
| பொங்குகருணைப் | (பொ) | 337 |
| பொங்குந்திரு | | 430 |
| பொந்துதேடி | | 218 |
| பொய்கொலை | | 221 |
| பொய்கோத்த | | 380 |
| பொய்ப்பொருள் | | 375 |
| பொய்யடிமை | | 359 |
| பொய்யுங்கவடு | | 317 |
| பொய்யெடுத்தா | | 363 |

| பாடல். | | பக்கம். |
|---|---|---|
| பொய்யேமிகுத்த | | 373 |
| பொய்வாழ்வை | | 332 |
| பொருளிற்கு | | 152 |
| பொல்லாதகாயமல் | | 203 |
| பொல்லாவென் | | 330 |
| பொறிபுலன் | | 301 |
| பொற்பிரபை | | 468 |
| பொன்மலரே | | 398 |
| பொன்னாசை | | 187 |
| பொன்னான்மயக் | | 351 |
| பொன்னைப்பழித்த | | 219 |
| பொன்னைப் | | 385 |
| போகாக்கவலை | (போ) | 310 |
| போக்கும்வரத்து | | 335 |
| போக்குவரவற்ற | | 393 |
| போதத்ரனம் | | 364, 393 |
| போதகத்தைப் | | 402 |
| போதமயமாக | | 360 |
| போருக்கேவந் | | 330 |
| போவோங்குணங் | | 458 |
| போற்றாமற் | | 376 |
| போனதெல்லா | | 395 |
| மகத்தோனே | (ம) | 400 |
| மகாயித்தை | | 402 |
| மகுலியத் | | 70 |
| மக்கநகராளும் | | 181 |
| மங்காதொளி | | 392 |
| மடக்கிமடக்கி | | 406 |
| மடக்கெடுத்து | | 342 |
| மடம்புகுநாய் | | 362 |
| மடிப்புங்கொலை | | 370 |
| மட்டிகளினுங் | | 153 |
| மட்டுக்கடங் | | 313 |
| மண்பட்ட | | 307 |
| மண்டபமுந் | | 366 |
| மண்டபவுள்ளரை | | 300 |
| மண்டைநடு | | 381 |
| மண்ணாதிமூவாசை | | 378 |
| மண்ணாயழுந்தா | | 392 |
| மண்ணுழுதன் | | 371 |
| மதபேதமோ | | 383,429 |
| மத்திபத்தி | | 315 |
| மருவதகைமறந்து | | 373 |
| மருளாத்தவத் | | 371 |
| மலர்ந்திருக்கும் | | 387 |
| மலர்மாலைகள் | | 388 |

| பாடல். | | பக்கம். |
|---|---|---|
| மலிகாதல்கொண் | | 376 |
| மலைக்குமலை | | 380 |
| மல்லாந்துநான் | | 395 |
| மறைப்பொருளை | | 355 |
| மனவாக்கனு | | 307 |
| மனம்பாசமற்று | | 339 |
| மன்னிக்க | | 318 |
| மன்னிய | | 75 |
| மன்னுங்கலை | | 338 |
| மன்னுங்கருவி | | 367 |
| மன்னுமுயிர்க் | | 314 |
| மாதவந்தன்னை | (மா) | 301 |
| மாசில்பர | | 400 |
| மாச்சரியஞ் | | 353 |
| மாகூடங்கண் | | 371 |
| மாதவர்க்கர | | 74 |
| மாதவசியாகி | | 379 |
| மாதவத்தோரும் | | 386 |
| மாதாபிதாவுமெ | | 362 |
| மாதாபிதாவும் | | 333 |
| மாதாபிதாவும்மய | | 339 |
| மாதுமக்கள | | 434 |
| மாந்திரத்துக் | | 346 |
| மாயப் | | 424 |
| மாயாதவோயாவி | | 163 |
| மாயாவினோத | | 83 |
| மாயும்பசுபாச | | 309 |
| மாயைமண | | 405 |
| மாயைவலைவீசி | | 404 |
| மாயைமுத | | 119 |
| மாராயவெள்ள | | 366 |
| மாளாமயக்கறுத் | | 358 |
| மாளிகைமேல் | | 298 |
| மாருயக கரு | | 346 |
| மான்பிரிந்த | | 405 |
| மின்னனைய | (மி) | 331 |
| மீசையுள்ளாண் | (மீ) | 455 |
| மீசையுள்ளாண் | | 455 |
| மீளாவெளியில் | | 312 |
| முகில்கவியு | (மு) | 190 |
| முக்கண்விழி | | 352 |
| முக்காலமும் | | 390 |
| முடிதூக்குமன்னர் | | 393 |
| முடிமன்னர் | | 392 |
| முடிமீதினு | | 390 |
| முடியடியாய் | | 400 |

| பாடல். | | பக்கம். |
|---|---|---|
| முட்டைப்பொரிப் | | 391 |
| முட்டாளெனும்பட்ட | | 336 |
| முண்டங்கென்று | | 467 |
| முத்தர்பணி | | 204 |
| முத்தர்க்கும்வாழி | | 344 |
| முத்தரெலாம் | | 406 |
| முத்தரெல்லாரை | | 464 |
| முத்திகருமெய்ஞ்ஞான | | 353 |
| முத்திசரும்வித்தை | | 372 |
| முத்திதரும்வேத | | 309 |
| முத்திவி | | 430 |
| முத்துநவரத்தின் | | 199 |
| மும்மலக்காட்டினை | | 438 |
| முத்தைநவ | | 100 |
| முநீஸ்வரர் | | 403 |
| முப்பாழும்பாழாகி | | 352 |
| முப்பாழ்முடிந் | | 468 |
| முத்தனே | | 439 |
| மும்மூலயோக | | 400 |
| முன்னுற்சுருதி | | 322 |
| முன்னிருந்த | | 342 |
| முன்னுளமக் | | 326 |
| முன்னையே | | 248 |
| முன்னோர்செ | | 422 |
| மூக்குநுத்திக் | (மூ) | 390 |
| மூக்குமுனக்கு | | 395 |
| மூடியமாயை | | 469 |
| மூலமுதலாறு | | 259 |
| மூடுமெனதறிவே | | 335 |
| மூடும்விருக்கிடை | | 321 |
| மூலக்கனலினை | | 465 |
| மூலக்கனன் | | 380 |
| மூலப்பிராணனைச் | | 239 |
| மூலப்பிராணனை | | 464 |
| மூலமுகம்மது | | 293 |
| மூலமுதலாறு | | 328 |
| மூலவரைவுண் | | 233 |
| மூலவர்க்கமாக | | 380 |
| மூலவொளி | | 402 |
| மூலாதாரத்துண் | | 382 |
| மெத்தப்படித்த | (மெ) | 316 |
| மெத்தமயலுற்று | | 384 |
| மெத்தத்துணி | | 295 |
| மெய்தழுவவும் | | 387 |
| மெய்தொழவு | | 386 |
| மெய்மஞ்சுட் | | 387 |

| பாடல். | | பக்கம். |
|---|---|---|
| மெய்யானபொய் | | 156 |
| மெய்யெடுத் | | 364,422 |
| மேலாங்குணங் | (மே) | 193 |
| மேலிட்டவாணவத் | | 328 |
| மேலூருவெட்டி | | 466 |
| மைச்சினிச்சி | (மை) | 378 |
| மைந்தர்களை | | 333 |
| மைதீட்டவுங் | | 387 |
| மையலெனு | | 373 |
| மோகந்தவிர்க் | (மோ) | 260 |
| மோனமவுன | | 307 |
| யானேயுனை | (யா) | 427,428 |
| யானைரதமேறு | | 360 |
| ரசயோகசித்து | (ர) | 402 |
| ரத்தினங்கள் | | 392 |
| ராஜாங்கம்வேண்டி | (ரா) | 368 |
| வகுத்தஜோதி | (வ) | 438 |
| வகையொன்று | | 197 |
| வங்குவங்கென்று | | 269 |
| வங்கெனுமோர் | | 424 |
| வங்கெனு | | 425 |
| வஞ்சங்குடி | | 313 |
| வஞ்சப்பிரபஞ்ச | | 335 |
| வஞ்சமரவி | | 415 |
| வஞ்சமழிந்து | | 309 |
| வஞ்சமியின்றியெ | | 325 |
| வஞ்சவேல் | | 297 |
| வஞ்சியராசையைப் | | 297 |
| வஞ்சியராசை | | 467 |
| வஞ்சியர்செய் | | 399 |
| வடியாவரு | | 387 |
| வணங்குவார்க் | | 82 |
| வண்டாய்ப் | | 130 |
| வரமுத்தர் | | 407 |
| வலைவீசு | | 216 |
| வல்லாரைக் | | 355 |
| வளிவசப்பு | | 257 |
| வற்றுச்சமுத் | | 306 |
| வற்றுவருட் | | 398,432 |
| வனவாசமேக | | 383 |
| வன்னச்செழும் | | 396 |
| வன்னத்திரு | | 314 |
| வன்னவுடைக்கு | | 388 |
| வாக்குமனா | (வா) | 434 |
| வாசகத்தின் | | 339 |
| வாசனையைப் | | 339 |
| வாசனையாகிய | | 411 |
| வாசாமகோ | | 421 |
| வாசிதனிலேறி | | 361 |
| வாசிவாவென்று | | 374 |
| வாசியிஞனேறி | | 373 |
| வாதனைமாற்றி | | 431 |
| வாதனையிறக்க | | 243 |
| வாதேயகண்ட | | 313 |
| வாதுக்கடர | | 348 |
| வாமப்பாலைப் | | 387 |
| வாயேபுலம்பி | | 315 |
| வாய்ச்சதெனக் | | 380 |
| வாராக்கருணை | | 309 |
| வாராயோவென் | | 350 |
| வாராயோவையா | | 358 |
| வாழிமேல்வாழி | | 470 |
| வாழுகிரேமென் | | 341 |
| வானேறநூலேணி | | 333 |
| வித்தகனுர் | (வி) | 420 |
| விண்கொண்டு | | 384 |
| விண்ணுதி | | 328 |
| விண்ணுடர் | | 360 |
| விண்ணேடுமண் | | 322 |
| விண்ணுக்குள் | | 302 |
| விண்ணுமுதன் | | 307 |
| விரிந்தசரியை | | 329 |
| வி[illegible]ங்கினங்க | | 382 |
| வில்லங்கமற்று | | 378 |

| பாடல். | பக்கம். |
|---|---|
| விளக்குஞ்சுட | 337 |
| விள்ளரியவேதம் | 367 |
| விற்புருவத்தூடு | 379 |
| வீடுகொடென்று வீ | 377 |
| வீடோவென் | 361 |
| வீண்காதறந்த | 377 |
| வெட்டவெட்ட (வெ) | 284 |
| வெட்டவெளி | 230,429 |
| வெட்டவெறும் | 360 |
| வெம்பிமிக | 384 |
| வெய்யிற்பட் | 389 |
| வெல்லரிய | 245 |
| வெற்றிதரு | 363 |
| வேசியென்றபேர் (வே) | 394 |
| வேசைக்குணத்தை | 394 |
| வேஷந்தனைப் | 365 |

| பாடல். | பக்கம். |
|---|---|
| வேஷந்தனைப்போட் | 358 |
| வேடிக்கை | 173 |
| வேட்டைபெரி | 362 |
| வேதக்கருவை | 367 |
| வேதங்களாலும் | 320 |
| வேதச்சுமை | 333 |
| வேதாந்தசாரமே | 152 |
| வேதவேதாந் | 121 |
| வேதாந்தவேத | 370 |
| வேதமறைப்பொருளை | 345 |
| வேதியர்க்கு | 369 |
| வேரைவேரோ | 370 |
| வேல்விழியார் | 377 |
| வேரற்ற | 136 |
| வேற்றொருவர் | 356 |
| வையம்பொய் (வை) | 362 |


மஸ்தான் சாகிபு அவர்கள்

திருப்பாடலகாரதி

முற்றுப்பெற்றது.